தண்ணீரில் தாகம் பாகம்-2

இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

தண்ணீரில்
தாகம் பாகம்-2
இன்பா அலோசியஸ்
www.pustaka.co.in

http://www.pustaka.co.in

தண்ணீரில் தாகம் பாகம் - 2

Thaneeril Thagam Part - 2

Author:

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

தணிவு - 1

தணிவு - 2

தணிவு - 3

தணிவு - 4

தணிவு - 5

தணிவு - 6

தணிவு - 7

தணிவு - 8

தணிவு - 9

தணிவு - 10

தணிவு - 11

தணிவு - 12

தணிவு - 13

தணிவு - 14

தணிவு - 15

தணிவு - 16

தணிவு - 17

தணிவு - 18

தணிவு - 19

தணிவு - 20

தணிவு - 21

தணிவு - 22

தணிவு - 23

தணிவு - 24

தணிவு - 25

தணிவு - 26

தணிவு - 27

தணிவு - 28

தணிவு - 29

தணிவு - 30

தணிவு - 31

தணிவு - 1

புதிய வாழ்க்கை

புதிய சூழல்

மூழ்குவேனா...?

தத்தளிப்பேனா?

இல்லை, கரை சேர்வேனா...?

குழந்தைகள் இருவரும், புத்தாடைக் கிடைத்த சந்தோசத்தில் இங்கும் அங்கும் குதித்தாட, அவர்களின் உற்சாகத்தில் பாதி கூட இல்லாமல், ஹேமாவின் கரங்களில் களிமண் பொம்மையாக, தன்னைக் கொடுத்துவிட்டு, சிலையென அமர்ந்திருந்தாள் திவ்யா.

விழிகளில் திரண்டிருந்த ஒற்றைத் துளி, விழவா வேண்டாமா என்று அவளிடம் அனுமதி வேண்டிக் கொண்டிருந்தது. தலை அலங்காரத்தை முடித்துவிட்டு, திவ்யாவின் முகத்துக்கு ஓப்பனை செய்ய வந்தவள், அவளது கலங்கிய முகத்தைக் கண்டு, தானும் கலங்கினாள்.

ஆனால் அதை அவளிடமிருந்து மறைத்தவாறே, “திவ்யா, என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி, கண்ணெல்லாம் கலங்கிட்டு...? உன்னோட முழுச் சம்மதமும் கிடைத்த பிறகுதானே, இந்தக் கல்யாணத்துக்கே நாங்க ஏற்பாடு செஞ்சோம்.., பிறகு என்..?”, அவள் கலங்குவது பொறுக்காமல் கேட்டாள்.

“ஹேமா...., எனக்கு ரொம்ப பயம்மா இருக்கு...., ஏற்கனவே ஒரு முறை, ஆயிரம் கனவுகளோட, லட்சம் சந்தோசத்தோட செய்த கல்யாணம் என்ன ஆச்சுன்னு உனக்கே தெரியும். இப்போ....., என்னால் இப்போ கூட, எனக்குக் கல்யாணம்னு ஒத்துக்கவே முடியலை ஹேமா....

“என் புத்திக்கே அது எட்டாத போது, என்னோட மனசை நான் எப்படி சமாதானம் செய்ய...? மறுபடியும் இன்னொரு ஏமாற்றத்தைச் சந்திக்க, என் மனசில் தெம்பில்லை ஹேமா....., அப்படி ஏதாவது ஒண்ணுன்னா நான்....”, மேலே பேசப் போன அவள் வாயைத் தன் கரங்களால் மூடினாள்.

“அப்படியெல்லாம் எதுவும் நடக்காது திவ்யா....., ஜீவா ரொம்ப நல்லவர், அவரால் உன்னைக் காயப் படுத்தவே முடியாது. உன்னையும், கண்ணனையும் அவரால் நேசிக்க மட்டும்தான் முடியும். கண்ணனுக்காக, உன்னோட மிச்ச வாழ்க்கைக்காக, கொஞ்சூண்டு அவர் மேல் நம்பிக்கை வை திவ்யா...”, அவளுக்கு நம்பிக்கையை விதைக்க முயன்றாள்.

“என்னால், அந்த நம்பிக்கையைத்தான் வைக்க முடியலை ஹேமா..., ஏற்கனவே ஒருத்தன், எந்த முகாந்திரமுமமே இல்லாமல் என்னைக் குத்திக் கிழித்தான். இப்போ எல்லாம் தெரிஞ்சு, இவர்....”, அழுகையில் குலுங்கியது அவள் தேகம்.

ஹேமா சட்டென அவளைத் தன் வயிற்றோடு அணைக்க, அவள் இடுப்பைக் கட்டிக் கொண்டு, கதறித் தீர்த்தாள். எதற்கு அழுகிறோம் என்றே தெரியாமல், கண்ணீரிலே கரைந்தாள். அவள் மனம் புரிந்தவளாக, திவ்யாவைக் கொஞ்ச நேரம் அழ விட்டாள் ஹேமா.

சிறிது நேரம் அழுது, அவளாகவே ஓய, “போதும் திவ்யா..., உன் வாழ்நாளிலேயே, நீ அழும் கடைசி அழுகை இதுவாகத்தான் இருக்கணும். இப்போ உனக்கு பயமாத்தான் இருக்கும்...., ஆனா நீ தனியா இல்லை திவ்யா...., உனக்கு நான் இருக்கேன், எங்க அம்மா இருக்காங்க....,

“உனக்குக் கல்யாணம் முடிஞ்ச உடனே, உன்னைத் தனியா விட்டுட்டுப் போய்ட மாட்டோம். தினமும் உன்னை வந்து பார்ப்போம். கல்யாணத்துக்குப் பிறகு, நான் உன்னோடவே இருப்பேன்...., உன்னை அப்படியே விட்டுட மாட்டோம்.

“உனக்கு ஒரு சின்னக் கஷ்டம் என்றால் கூட, அண்ணனோட சட்டையைப் பிடிச்சு, நம்ம அம்மா கேள்வி கேப்பாங்க.... நானும் அவரைச் சும்மா விட மாட்டேன். உன்மேல் ஒரு தூசி விழுந்தாலும், அதை என்னன்னு கேக்க, நாங்க இருக்கோம் திவ்யா”, திவ்யாவின் மனதில் இருந்த பயத்தைக் களைந்து, அவள் மனதில் அவளுக்கென்றுத் தாங்கள் இருப்பதைப் புரிய வைத்தாள்.

“எனக்கு எல்லாம் புரியுது ஹேமா ஆனா.....”, புரியாத கலக்கம் அவளை அலைக்கழித்தது.

“திவ்யா...., உன் மனசு, இந்தக் கல்யாணத்தை ஏத்துக்கணும் என்பதால், ஜீவா முழுசா மூணு மாசம் வெயிட் பண்ணிட்டார். அடுத்த மாசம் கண்ணனும் அஞ்சலியும் ஸ்கூல் போகப் போறாங்க. அதுக்குள்ளே உங்களுக்குள் நல்ல புரிதல் வரணும். இந்த மூணு மாசமா அவரைப் பார்க்கக் கூடச் செய்யாமல், அலைக்கழிக்கிற, அதுதான் போகட்டும்னா இப்போ.....

“எல்லாம் சரியாக நடக்கும்....., நீ தைரியத்தை மட்டும் இழக்காதே”, தன்னால் இயன்றவரை தைரிய மூட்டினாள்.

ஆனாலும் கலங்கித் தவிக்கும் அவள் மனக் குமுறல்களை அடக்க முடியவில்லை. இறுதியில், நடப்பது நடக்கட்டும் என விட்டுவிட்டாள். கண்களை மூடி ஜீவாவின் முகத்தைக் கண்களுக்குள் கொண்டுவர முயல, அங்கே வித்தார்த் தான் வந்து மிரட்டினான்.

பட்டென கண்களைத் திறந்தவள்....., “ஹேமா..., என்னால் கண்ணைக் கூட மூட முடியலை...., என்னமோ, மனசெல்லாம் ரணமா...., புதுசா காயம் பட்ட மாதிரி வலிக்கிது. இந்த வேதனையை உள்ளுக்குள் வச்சுட்டு.....”,அலைப் பாய்ந்தன அவள் விழிகள்.

“அப்போ இந்தக் கல்யாணத்தை நிறுத்திடலாம் திவ்யா...., வேண்டாம்... நீ இந்த அளவு மறுகி, தவித்து, இதைச் செய்ய வேண்டாம். நான் கணேஷ்க்கு போன் பண்ணிச்

சொல்லிடுறேன்...நான் இவ்வளவு சொல்லியும் உன்னால் ஏத்துக்க முடியலன்னா...., இப்படி ஒரு கல்யாணம் உனக்குத் தேவையில்லை திவ்யா..", கோபமாகச் சொல்லிவிட்டு, அலைபேசியை எடுக்கப் போனாள்.

கோபமாகச் சென்ற அவளை வேகமாகத் தடுத்தாள். "ஹேமா..., வேண்டாம் அப்படிச் செய்யாதே...., என்னால, அஞ்சலியை விடவோ, வேற யாருக்கும் கொடுக்கவோ முடியாது..... நான் இந்தக் கல்யாணத்தை, பந்தத்தை ஏத்துக்க முயற்சி பண்ணுறேன்...", கொஞ்சம் திடனாகவே சொல்ல முயன்றாள்.

இதற்குமேல் எதுவும் சொல்வதற்கு இல்லை என்பதுபோல் இருவரும் அமைதியாக இருக்க, "என்ன, இன்னுமா அலங்காரம் முடியலை.....? கார் வந்து ஒருமணி நேரம் ஆகுது. வாங்க ரெண்டுபேரும்...", தங்கம் இருவரையும் மேலே யோசிக்க விடாமல் கிளப்பினார்.

ஹேமா, திவ்யாவின் முகத்துக்கு ஒப்பனை செய்துவிட்டு இருவரும் வெளியேறி, காருக்கு வந்தார்கள். அங்கே, அதற்கு முன்பே குழந்தைகள் காரில் ஏறி இருக்க, கண்ணன் அழகான செர்வானியிலும், அஞ்சலி பிங்க் வண்ண ஃப்ராக்கிலும் குட்டி தேவதையாக இருந்தாள்.

குழந்தைகளைத் தங்கம் பார்த்துக் கொண்டார். திவ்யாவின் 'உம்' என்ற முகத்தைப் பார்த்தோ என்னவோ, குழந்தைகளும் அவளிடம் பேச முயலவில்லை. ஹேமா கவலையாகத் தாயின் முகம் பார்க்க, 'எல்லாம் சரியாகிப் போகும்' என்று கண்களால் அவளுக்கு தைரியம் சொன்னார்.

கோவிலில் வைத்துத் திருமணம் முடித்துவிட்டு, ரிஜிஸ்டர் அலுவலகத்தில் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. கோவிலில், ஜீவா இறுகிய முகமாக இருக்க, கணேஷ்தான் நொடிக்கொருமுறை கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவர்களைக் கண்ட பிறகுதான், அவனால் இயல்பாக மூச்சு கூட விட முடிந்தது. அவ்வளவு இக்கட்டான சூழலிலும், ஹேமாவை அவன் கண்கள் ரசிக்கத் தவறவில்லை. அந்த ரசனையும் ஒரு முறைதான் அவன் கண்களில் மின்னி மறைந்தது.

அதன் பிறகு, ஐயரை அழைத்துவந்து, சன்னிதியில் வைத்து, மந்திரங்கள் ஓத, திருமாங்கல்யத்தை எடுத்து, கைகளில் வைத்துக் கொண்டு, அதை அவள் கழுத்தில் அணிவிக்காமல்..., அவளையே பார்த்தவாறு நின்றான் ஜீவா.

யாரும் எதுவும் சொல்ல முயலவில்லை. ஐயர் கூட, அவன் செய்கையை கவனித்துக் கொண்டு பேசாமல் நின்றார். தலை குனிந்திருந்த திவ்யா, நேரமாவதை உணர்ந்து அவன் கண்களை நிமிர்ந்து பார்க்க, இன்னதென்று புரியாத பார்வை பார்த்தவன், கண்களால் அவள் அனுமதியை வேண்டினான்.

அவன் அனுமதி வேண்டல் புரிந்தவள்போல், தலையை மெதுவாக 'சரி' என்பதுபோல் அசைக்க, அதன் பிறகே தாலியை அவளுக்கு அணிவித்தான். அவன் கரங்களில், அவளது கண்ணீர் பட்டுத் தெறித்தது.

சிலிர்க்கவேண்டிய அவள் தேகமோ, விறைத்து நடுங்கியது, கர்வப்படவேண்டிய அவனோ, இயந்திரமாகத் தாலியைக் கட்டினான்.

"கண்ணா, அஞ்சலி....., உங்களோட அம்மா அப்பாவுக்குக் கல்யாணம் முடிஞ்சுடுச்சு. வாழ்த்துச் சொல்லுங்க", தங்கம் சொல்ல, அஞ்சலி இருவருக்கும் முத்தம் கொடுத்து, தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

ஆனால் கண்ணனோ, தாயையும், ஜீவாவையும், மாலையும் கழுத்துமாக, அருகருகே பார்க்கவே, அவனுக்கு சொல்ல முடியாத தயக்கம் எழவே, 'இல்லை' என்பதுபோல்

தலையை ஆட்டிவிட்டு, தங்கத்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, படுத்துவிட்டான்.

திவ்யா கலங்கிய பார்வை பார்க்க, ஹேமா அவள் கைகளை அழுத்தி, “சீக்கிரம் சரியாயிடுவான் திவ்யா....”, அவள் காதில் முணு முணுத்தாள். திவ்யாவின் பார்வை, மகனை விட்டுப் பிரிய மாட்டேன் என சண்டித்தனம் செய்தது.

பின்னர் இருவரும் மாலை மாற்றிக் கொள்ள, மெட்டி அணிவிக்க, என, அனைத்துச் சடங்குகளும், ஒருவித அமைதியுடனே கழிந்தது. அனைத்தையும் புகைப்படம் எடுக்க, கணேஷ் ஏற்பாடு செய்திருக்கவே, கேமராவுக்குள் அடைக்கலமாகின அந்த அழகானத் தருணங்கள்.

சன்னிதியில் விழுந்து வேண்டிவிட்டு, ரிஜிஸ்டர் ஆபீஸ் செல்ல காருக்கு வந்தார்கள்.

“நாங்க முன்னாடி அந்த வண்டியில் போறோம்..., நீங்க பின்னாடியே வாங்க..”, சொல்லிவிட்டு, வேறு காருக்குத் தங்கம் செல்ல, திவ்யாவோ, ஹேமாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு, பதட்டமாகப் பார்த்தாள்.

ஜீவாவிற்கு அவளது செய்கையைப் பார்த்து, கோபம் வருவதற்குப் பதிலாக, வருத்தம்தான் வந்தது. ‘என்னைப் பார்த்து, உனக்கு ஏன் இவ்வளவு நடுக்கம்....? உன் நிழலைக் கூட காயப்படுத்த நான் நினைக்க மாட்டேன்....’, என்று அவளிடம் சொல்ல வேண்டும், அவளைச் சமாதானப் படுத்தவேண்டும் என்ற ஆவல் அவனுள் எழுந்தாலும், அதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்ற தயக்கம் தடுக்கவே, அமைதியாகவே அவள் அருகில் நின்று கொண்டான்.

அவள் செய்கையில் வருத்தம் எழுந்தாலும், “நீ அவர்களுடன் வா”..., என்று சொல்ல அவனுக்கு முடியவில்லை. அது அவள்மேல் தான் கொண்டுள்ள உரிமை உணர்வால்தான் என்பதை அவன் அறியவில்லை.

திவ்யாவும் “நான் அவர்களோடு போகிறேன்” என்று சொல்லவில்லை.

இந்த ‘உறவு’ பிள்ளைகளுக்காக என்றாலும், ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்க அவர்கள் மனங்கள் தயாராக இல்லை. அதை இருவருமே உணரவில்லை, என்பதுதான் விந்தை. திவ்யா கண்ணனை வாங்கிக் கொள்ள, அவனோ வரமாட்டேன் என்று ஹேமாவிடமே ஒண்டிக் கொண்டான்.

அஞ்சலியோ திவ்யாவின் கைகளில் ஓடிச்சென்று அடைக்கலமானாள். திவ்யாவின் கவலை முகம்...., ஜீவாவுக்கு அதைவிட வருத்தத்தைக் கொடுத்தது. “கண்ணா அப்பாகூட வாறியா....? நீ அம்மா, அஞ்சலி, நான் எல்லோரும் சேர்ந்து ஒரே காரில் போகலாம்”, எப்படியாவது திவ்யாவின் முகத்தில் நிம்மதியை வர வைக்க வேண்டுமென்ற எண்ணம் அவனிடம் வேர்விடத் துவங்கியது.

இதுவரை ஒட்டாத தன்மையுடனும், பார்வையுடனும் இருந்த கண்ணனின் கண்களில், முதல் முறையாக ஒரு ஒளி. அதைக் கண்ட திவ்யா, ஹேமா, கணேஷ், தங்கம் அனைவரின் முகங்களும் மலர்ந்தது. ஹேமா திவ்யாவிடம், அர்த்தமுள்ள பார்வையைச் செலுத்த, திவ்யாவும் கொஞ்சமே கொஞ்சம் மலர்ந்த முகத்துடன் கண்ணனையும், அவளையும் பார்த்தாள்.

அவன் முகம் பிரகாசமாவதைக் கண்ட ஜீவா..., முகம் கொள்ளாப் புன்னகையுடன், ‘வா’ என்பதுபோல் கரங்களை நீட்ட, அவனிடம் இருந்த தயக்கம் கண்ணனை வர விடவில்லை. ஜீவாவிடம் செல்வதற்கு பதிலாக, திவ்யாவிடம் தாவினான். அதைப் பார்த்தவன், “அஞ்சும்மா...., நீ அப்பா கிட்டே வாறியா...? அம்மாவுக்கு, ரெண்டு பேரையும் தூக்கினா கை வலிக்கும்டா.....”, என்றான்.

“மம்மி தூக்குவாங்க போ....., நான் வரல....”, இரு குழந்தைகளும் அவள் கரங்களை விட்டு விலகவில்லை. ஜீவா டிரைவரை அழைத்து, “நீங்க அவங்க காரை ஓட்டிட்டு வாங்க, நான் எங்க காரில் வந்துடுறேன்”, அவர்களை அனுப்பிவிட்டு, காரின் முன்பக்கக் கதவை அவளுக்காகத் திறந்து விட்டான்.

அவன் என்னவோ கார் கதவைத்தான் திறந்தான். ஆனால் திவ்யாவின் இறுக மூடியிருக்கும் மனக்கதவை, தான் தட்டுவதை அவன் உணரவில்லை. அவன் செய்தது சிறு செயல்தான், ஆனால் அது திவ்யாவை நிறையவே அசைத்தது.

அவள் ஏறி அமர்ந்து, குழந்தைகளை வசதியாக மடியில் அமர வைத்தப் பிறகு, கதவை மூடி விட்டுத்தான், அவன், தன் பக்கம் ஏறி அமர்ந்து வண்டியைக் கிளப்பினான். அவன் கவனம் முழுவதும், குழந்தைகள், மற்றும் சாலையிலுமே மாறி மாறி நிலைத்தது.

மறந்தும் கூட, திவ்யாவை ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனால், அவள் காரின் கதவோடு சேர்ந்து ஒட்டி அமர்ந்திருப்பது, அவன் விழித் திரையில் விழுந்தது. முதல் வேலையாக, அவளது தயக்கத்தைப் போக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

அத்தோடு அந்த யோசனையை விட்டுவிட்டு, குழந்தைகளிடம் பேச்சுக் கொடுத்தான். அஞ்சலி, “அப்பா...., இனிமேல் என் மம்மி திவ்யாம்மா தானா...?”, திடீரெனக் கேட்டாள்.

கொஞ்சம் தடுமாறினாலும், “ஆமாடா செல்லம்...., உங்களுக்குத் தெரியாதா?”, கண்ணனிடம் பார்வையை வைத்தவாறு அவளிடம் பேசினான்.

“அப்போ, கண்ணனோட அப்பா நீங்களா....?”, அடுத்தக் கேள்வி அவளிடம்.

இந்தக் கேள்வியில் திவ்யாவின் முகம் வெளிறுவது அவனுக்குத் தெரிந்தது. அதை ஓரக் கண்ணில் கவனித்தவாறே, “உங்களோட அப்பா அம்மா இனிமேல் நாங்கதான். கண்ணன் உன்னோட தம்பி, சரியா?நீதான் அவனைப் பாத்துக்கணும். புது ஸ்கூல் போறீங்கல்ல, அங்கேயும் நீங்க சேர்ந்தே இருக்கணும் என்ன...”, தங்கள் உறவு முறையை அழகாகச் சொல்லிக் கொடுத்தான்.

அதே போல்...., “கண்ணா...., அஞ்சலி உன்னோட அக்கா...., நான் உன்னோட அப்பா. யார் கேட்டாலும் நீ இதையே சொல்லு.... உன்னை இனிமேல் இந்த அப்பா பாத்துப்பேன்..., தைரியமா இருக்கணும். இந்த அப்பா மாதிரி நீ வளர வேண்டாமா?

நீ தைரியமா இருந்தால் தானே, உனக்கு அப்பா, கார் ஓட்ட, பைக் ஓட்ட எல்லாம் சொல்லித் தருவேன். அப்போதானே நீ அம்மாவை உக்கார வச்சு ஓட்டிட்டுப் போகலாம்...”, அவன் மனதையும் கவர முயன்றான்.

பொதுவாக ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும் விளையாடும் விளையாட்டுப் பொருள், ரசனைகள் அனைத்திலும் வேறுபாடு இருக்கும். பெண் குழந்தைகள் பார்பி டால், கிச்சன் விளையாட்டுப்பொருள், என வைத்து விளையாட, ஆண் குழந்தைகள் கார், பைக், இப்படியான விளையாட்டுப் பொருட்களை விரும்புவார்கள்.

அதை உணர்ந்தே ஜீவாவும் அப்படிப் பேச, கண்ணன் அவன் பேச்சுக்கு ஆர்வமாக பதிலளிக்கவில்லை என்றாலும், கண்கள் வியப்பில் விரிய, அவன் ஆச்சரியத்தைக் காட்டினான். ஜீவா தன்னை ஒரு பார்வையாக கூடப் பார்க்காதது ஒரு பக்கம் பெரிய நிம்மதியைக் கொடுத்தாலும், மனதின் மூலையில் திவ்யாவிற்கு வலிக்கவும் செய்தது .

ஆனால், அதை உணரும் நிலையில் அவள் இருக்கவில்லை. அவளது நிம்மதியெல்லாம், அவன்

தன்னை எந்த விதத்திலும் தொல்லை செய்யவில்லையே என்பதிலேயே நிறைவு கொண்டது. ரிஜிஸ்டர் ஆபீஸ் செல்ல ஆன அரைமணி நேரத்தில், கண்ணன் ஜீவாவை, நேரடியாகப் பார்க்கவும், மெல்லிய புன்னகை பூக்கும் அளவுக்கும் முன்னேறி இருந்தான்.

அதே நேரம், மற்றொரு காரில் சென்று கொண்டிருந்த கணேஷோ, ஹேமாவுடன் தனிமை கிடைக்கவில்லையே என்று வருந்திக் கொண்டிருந்தான். டிரைவர் அருகில் அமர்ந்திருந்தவனின் பார்வை, ஹேமாவையே தழுவி மீண்டுக் கொண்டிருந்தது.

அதை உணர்ந்த ஹேமா, கண்டிக்கும் பார்வையை வீச, அவனோ பதிலுக்கு காதல் பார்வையை செலுத்தினான். ஹேமா, ஜாடையாய் தாயைக் காட்டினாள். அவனும் அதையே திரும்பச் செய்ய, ஹேமா தாயைத் திரும்பிப் பார்க்க, அங்கே தங்கமோ கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தார்.

அதைப் பார்த்த கணேஷ் அவளைப் பார்த்து சிரிக்க, ஹேமா வெளிப்படையாகவே தலையில் அடித்துக் கொண்டாள். அதைக் கண்டுகொள்ளாமல், “உன்கிட்டே பேசணும்....”, அவன் உதட்டசைவில் சொல்ல, அவன் கண்களில் வழிந்த ஏக்கம் அவளைத் தாக்கினாலும், இருக்கும் சூழல் அவளை எதுவும் செய்ய முடியாமல் கட்டிப் போட்டது.

அவனைப் பார்க்காமல், வெளியே வேடிக்கைப் பார்க்கும் சாக்கில் அவள் திரும்பிக் கொள்ள, அவளைக் கவர அவன் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக தோல்வியைத் தழுவியது. அவளது பாராமுகம் கணேஷை மிகவும் பாதித்தது. கசங்கிய முகத்துடன் சோர்ந்து அமர்ந்துவிட்டான்.

இதை ஹேமா கவனிக்கவில்லை, ஆனால் தங்கம் கவனித்து, கவலை கொண்டார். இவ்வளவு நாள் கழித்து, மகளுக்குத் திருமணம் நடக்கப் போகும் சந்தோசத்தில்

இருந்தால்....., இவ மாப்பிள்ளையோட மனசைப் புரிஞ்சுக்காமல் இருக்காளே, எனக் கவலை கொண்டது அந்தத் தாயுள்ளம். இறுதியில் அவர்கள் வந்து சேரவேண்டிய இடம் வரவே, உள்ளே சென்று பேசிவிட்டு வந்தான்.

“அவங்க வந்த உடனே முடிச்சுடலாம்னு சொன்னாங்க.....”, அவர்களுக்குத் தகவல் சொல்லிவிட்டு, காரில் சாய்ந்து நின்று கொண்டான்.

டிரைவர் முதலிலேயே டீ குடிக்கச் சென்றுவிட, ஒரு முடிவுடன், “தம்பி நீங்க பேசிட்டு இருங்க...., நான் அப்படிக் காத்தாட சேர்ல உக்காந்துக்கறேன்”, சொல்லிவிட்டு, அவனைப் பார்த்து மெல்லியதாகச் சிரித்துவிட்டுச் சென்றார் தங்கம்.

அவர் செல்லவே, இதற்காகவே காத்துக் கொண்டிருந்தவன்போல், ஹேமாவின் அருகில் சென்று அமர்ந்தான். ஹேமா மனதுக்குள் பொங்கிய சிரிப்பை அவனுக்குக் காட்டாமல் மறைத்தாள்.

“ஹேமா...., உன்னை எப்படியெல்லாம் கூப்பிடுறது..., இப்படிப் பாக்காமலே இருக்க....? என்னால் தாங்கவே முடியலை தெரியுமா?”, உண்மையான வருத்தம் அவன் குரலில்.

“கணேஷ்...., பக்கத்தில் அம்மா, டிரைவர் எல்லாம் இருக்காங்க, அதைப் புரிஞ்சுக்காமல், நீங்க நடந்துகிட்டா நான் பழியா...?”.

அவள் சொல்லுக்கு, அவனிடமிருந்து எந்த பதிலும் இல்லாமல் போகவே, அவன் முகம் வேதனையைச் சுமந்திருப்பதைப் பார்த்தவள் துணுக்குற்றாள்.

“என்ன கணேஷ்.....?”, அவன் தோள் தொட்டுக் கேட்க, அதற்காகவே காத்திருந்தவன்போல் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனது இந்தச் செய்கையை எதிர்பார்க்காத ஹேமா, “ம்ச்...., என்ன கணேஷ் இது....? விடுங்க...”, கொஞ்சம் கோபம் கலந்திருந்தது அவள் குரலில், அவனை உதற முயன்றாள்.

“ப்ளீஸ் ஹேமா...., ஒரு அஞ்சு நிமிஷம்...., ப்ளீஸ்....”, கரகரத்த அவன் குரல், அவளது எதிர்ப்பைச் சட்டென அடக்கியது. அவன் இதயம் பந்தயக் குதிரையாக தடதடப்பதை, அவள் இதயம் உணர்ந்தது. பதட்டமடைந்தாள் அவள்.

“கணேஷ்...., உங்களுக்கு என்ன பண்ணுது....? ஏன் உங்க இதயம் இப்படி அடிச்சுக்குது....? என்னன்னு சொல்லுங்க, எனக்கு பயம்மா இருக்கு....”, அவன் முகத்தைப் பார்க்க அவன் அனுமதிக்கவே இல்லை, எனவே அவள் பதட்டம் அதிகரித்தது.

“காலையில் இருந்து அது துடிக்குதா இல்லையான்னு தெரியாமல் அவ்வளவு பதட்டம். எந்த நேரம் ஜீவா கோவிலை விட்டு வெளியே போய்டுவானோன்னு பயம்....., இந்தக் கல்யாணம் நடக்குமா இல்லையான்னு தவிப்பு, நீங்க வரதுக்குக் கொஞ்சம் லேட் ஆகவே...,

“ஹையோ... அந்த நேரம் நான் எப்படி உணர்தேன்னே சொல்லத் தெரியலை ஹேமா..., உன்னைப் பாக்குற வரைக்கும், என் உயிர் என்கிட்டே இல்லை. அப்போவே உன்னை இப்படி இறுக்கக் கட்டிக்கணும்னு தோணிச்சு..., ஆனால், இருந்த சூழல் அதை அனுமதிக்கலை.

“கார்ல வந்தால்...., நீ என் முகத்தைக் கூடப் பாக்காமல், வெளியே வேடிக்கைப் பாக்குற...., என்னால் தாங்கவே முடியல...., ஏன் அப்படிப் பண்ணுன....? இதெல்லாம் நான் யார்ட்ட தான் சொல்ல....”, பேசப் பேச அவனது அணைப்பு இறுகியது.

“ரிலாக்ஸ்.....”, அடுத்த வார்த்தைப் பேச அவள் இதழ்கள் அவள் வசம் இருக்கவில்லை....., அடுத்த அதிர்ச்சி....,

ஆனால் அவனை விலக்கித் தள்ள முயலவில்லை...., அவனுக்குத் தன் அருகாமையும், ஆறுதலும் இப்பொழுது தேவை என்பது புரிய, அவன் முரட்டு முத்தத்துக்கு தன் இதழ்களைக் கொடுத்துவிட்டு, அமைதியாக இருந்தாள்.

“நீ ஒரு பத்து நிமிஷம் என்னை கவனிக்காமல் இருந்ததையே என்னால் தாங்க முடியலையே...., ப்ரியாவோட நாலு வருஷப் புறக்கணிப்பை ஜீவா எப்படித் தாங்கிக்கிட்டான்...., என்னால் முடியவே முடியாது ஹேமா. உன்னோட சின்னப் புறக்கணிப்பைக் கூடத் தாங்க முடியாது ஹேமா... ஐ லவ் யு....”, முத்தங்களுக்கு இடையில் அவன் பிதற்றிய வார்த்தைகளைக் கோர்த்ததில், அவளுக்குப் புரிந்தது இவைதான்.

அவன் காலையில் பட்ட துன்பம், இடையில் தனது செல்லப் புறக்கணிப்பு செய்த பதட்டம், அதை ஜீவாவின் வாழ்வில் பொருத்திப் பார்த்து அவன் அடைந்த கவலை...., எங்கே அவனை மேலும் கண்டுகொள்ளாமல் இருந்து விடுவேனோ என்ற அவனது தவிப்பு, இப்படி எதை எதையோ நினைத்து அவன் கலங்குவது அவளுக்குப் புரிந்தது.

தனக்கான ஆறுதல், அவள் இதழ்களுக்குள்தான் இருக்கின்றது என்பதுபோல் அவன் தேடலைத் தொடர, ஒரு கட்டத்துக்குமேல், தன் இதழ்களை அவனிடமிருந்து கட்டாயபடுத்திப் பிடுங்கிக் கொண்டாள். “கணேஷ்.....”, அவள் அழுத்தி உச்சரித்தப் பிறகே நிதானத்துக்கு வந்தான்.

அவளை விட்டு நகர்ந்து அமர்ந்தான். “சாரி ஹேமா..., என்னோட பதட்டத்தில்...., என்ன செய்யிறோம்னு தெரியாமல்...., ஐ’ம் சாரி...”, முகத்தை அவளுக்குக் காட்டாமல் திருப்பிக் கொண்டான்.

அவன் முகத்தை, தன்னைப் பார்க்குமாறு திருப்பிப் பார்க்க, பதட்டமும், பயமும், செய்த செயலை எண்ணிக் குற்ற உணர்ச்சியும் போட்டி போட்டது. “ஏன் கணேஷ்...., உங்களை

நான் அவாய்ட் பண்ணுவேன்னு, எப்படி நீங்க நினைக்கலாம்...? இன்னைக்கு காருக்குள் இருந்த சூழல் என்னை அப்படி இருக்க வச்சுது. அதைப்போய் நீங்க இப்படி நினைத்தால்.....,

“அப்போ நான், என்னோட நேசத்தை உங்களுக்குப் புரிய வைக்கத் தவறிட்டேன்னு அர்த்தம். கிட்டத்தட்ட ஒரு வருஷமா நாம பழகுறோம், அப்படி இருந்தும் என் மனசு உங்களுக்குப் புரியலன்னா...?”, வேதனை மண்டிக் கிடந்தது அவள் குரலில்.

“ஹையோ ஹேமா...., நான் என்னோட கவலையில், உன்னை அப்படிப் பேசிட்டேன்....., நான் பேசுனது தப்புதான்....., காதல் இவ்வளவு சுகத்தைக் கொடுக்கும், நிம்மதியைக் கொடுக்கும், ஆதரவைக் கொடுக்கும், அதே அளவு வலியையும் கொடுக்கும்னு எனக்குப் புரிய வச்சது நீ.

“அதனால்தான் ஜீவாவின் மனநிலையை என்னால் ரொம்பச் சரியா புரிஞ்சுக்க முடிஞ்சுது. இப்போ அவங்களுக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்துட்டோம்...., ஆனால் அவங்க காயங்களை மீறி அவங்க ஒண்ணு சேருவாங்களா....? என்ற பயம் என்னை அப்படிப் பேச வச்சுடுச்சுன்னு நினைக்கிறேன்.....

“ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்கோயேன்....”, அவன் விழிகள் அவளிடம் கெஞ்சியது.

அவன் கெஞ்சலைப் பார்த்தவளின் முகம் கனிவை தத்தெடுத்தது. “கணேஷ்....., இன்னொரு முறை இப்படி, என்னை விட்டுப் போய்டுவியோ அப்படி இப்படின்னு, உளறுனீங்க.... அவ்வளவுதான்... சொல்லிட்டேன். சரி ரொம்ப நேரமாயிடுச்சு, அவங்க வாற நேரமாச்சு, நானும் அம்மா கிட்டே போறேன்.

“ஜீவா - திவ்யா வாழ்க்கையை மலர வைக்காமல் விடமாட்டோம் சரியா? இப்போ நிம்மதியா போய்

வேலையைப் பாருங்க”, அவன் முகத்தில் வழிந்த வியர்வையை, தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்தாள்.

அவளை மென்மையாக அணைத்து விடுவித்துவிட்டு கீழே இறங்கிய வேளை, ஜீவாவின் கார் உள்ளே நுழைந்தது. கணேஷ் ஹேமாவிடம் அதைச் சொல்லிவிட்டு, அவர்களை நோக்கி விரைந்தான்.

கணேஷின் செய்கையால், கலைந்திருந்த தன் கூந்தலை சரிசெய்துவிட்டு, ஹேமாவும் வர, பதிவு செய்யும் வேலை பத்து நிமிடங்களில் முடிய, இரண்டு காரும் ஜீவாவின் வீட்டை நோக்கிச் சென்றன.

இந்தப் புதிய வாழ்வும், பயணமும் அவர்கள் வாழ்வில் திருப்பு முனையாக அமையுமா? மனம் முழுக்க அன்பைச் சுமந்திருக்கும் இரு இதயங்களும், தங்கள் அன்பைப் பரிமாறி, தங்கள் தாகத்தை தணித்துக் கொள்வார்களா...?

தணிவு- 2

வெட்டவெளியில் காற்றுக்காகவும்

நீருக்கடியில் தாகமாகவும்

காத்துக் கொண்டிருக்கிறேன் நான்.....

ஜீவாவின் கார் அவன் வீட்டை நெருங்கும் முன்பே, கணேஷ், ஹேமாவின் கார் சென்று சேர்ந்திருக்க, அவர்களுக்காக ஆரத்தி கரைத்து வைத்துக் காத்திருந்தார்கள். கார் ஓடுதளத்தில் ஓடி, வீட்டின் முன்னால் நிற்க, வீட்டின் பிரம்மாண்டம் திவ்யாவைக் கலங்கடித்தது.

இருக்கையில் இருந்து இறங்க மறந்து, திகிலாய் வீட்டைப் பார்க்க, அவள் கண்களில் தெரிந்த பயத்தைக் கண்டுகொண்டவன், ஓட்டுனர் இருக்கையில் இருந்து இறங்கி, அவள் பக்கம் வரும் முன்பே, கணேஷ் கதவைத் திறந்து விட்டான்.

அவள் கரங்களில் இருந்து அஞ்சலியை வாங்கிக் கொண்டவன், திவ்யாவின் அருகில் நிற்க, அவனைவிட்டு நகர்ந்து நின்றாள் திவ்யா. அவளது சின்ன விலகல்கள், ஜீவாவின் மனதில் பெரிய பள்ளங்களை ஏற்படுத்தியது.

என்னதான் குழந்தைகளுக்காக என்று இந்தத் திருமணத்தை எண்ணினாலும், மனதின் ஓரம் எழும் உரிமை உணர்வை அவன் அறியவில்லை. அப்படி அறிந்திருந்தால், அதனால்தான் திவ்யாவின் விலகல் அவனுக்கு வலிக்கிறது என்பது புரிந்திருக்கும்.

ஹேமா அவர்களுக்கு ஆரத்தி சுற்றிப் பொட்டுவைத்துவிட்டு, வீட்டுக்குள் வரவேற்க, தங்கம், திவ்யாவை பூஜை அறையில் விளக்கேற்றச் சொன்னார். ஜீவாவும், திவ்யாவும் கடவுள் நம்பிக்கையை உதறி வருடங்கள் ஆகின்றன.

ஆனாலும் தங்கத்தின் வார்த்தைக்கு மதிப்பளித்து, பூஜை அறைக்கு அவளை அழைத்துச் சென்றான். இயந்திரமாக விளக்கை ஏற்றியவள், விழுந்து வணங்கிவிட்டு நிமிர்கையில், ஒரு கறுப்பு வண்ணப் புகைப்படத்தில் ஒரு இளம் ஜோடி இருக்க, அவர்களுக்கு மாலையிட்டு, சந்தனம் வைக்கப் பட்டிருந்தது.

அவள் அந்தப் புகைப்படத்தையே கூர்ந்து பார்த்தாள்..., அந்தப் பெண்ணின் முகத்தை, எங்கேயோ பார்த்த ஞாபகம்....., ஆனால் சட்டென நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் தடுமாறினாள். அவள் பார்வையை உணர்ந்து, "என்னோட அப்பா அம்மா...., அவங்க கல்யாணம் ஆன புதுசில் எடுத்த ஃபோட்டோ. எங்க அப்பாவுக்கு இந்தப்ஃபோட்டோ ரொம்பப் புடிக்கும். அதான் இதையே பூஜை அறையில் மாட்டிட்டேன்", ஜீவா விளக்கமளிக்க, அவன் முகம் பார்க்காமலே கேட்டுக் கொண்டாள்.

"ரெண்டு பேரும் வந்து பால் பழம் சாப்பிடுங்க...., அதுக்குப் பிறகு ரூமுக்குப் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க", தங்கம் அழைக்கவே, பூஜை அறையிலிருந்து வெளியேறினர் இருவரும்.

குழந்தைகள் இருவரும் விளையாடச் சென்று விட்டார்கள். குழந்தைகளால் மட்டுமே எந்தச் சூழலிலும் தங்களை எளிதில் புகுத்திக் கொள்ள முடியும். கண்ணனின் தயக்கங்களை எல்லாம் அஞ்சலி தகர்த்தெரிந்தாள்.

"நீ வா....", அவன் கையைப் பிடித்து, அவள் இழுத்துச் செல்கையில், கண்ணனின் தயக்கங்கள் அனைத்தும் தூள் தூளானது.

இருவரும் ஸோபாவில் அமர, "இந்தாங்க தம்பி, நீங்க கொஞ்சம் குடிச்சுட்டு, மீதியை திவ்யாவுக்கு கொடுங்க....", பால் டம்ளரை அவன் கையில் திணித்தார்.

"எதுக்கும்மா இந்த சம்ப்ரதாயம் எல்லாம்....., வேண்டாமே.....", 'நீ குடிச்ச, மிச்ச எச்சில் என்பதால், பால்

பழத்தையே வாந்தி எடுத்தவடா...., ஆனா இது சீ.... அசிங்கம்....', ப்ரியாவின் குரல் காதில் ஒலிக்க, அவன் தாடை இறுகி, அந்தப் பாலையே வெறித்தான்.

அவனது பேச்சு திவ்யாவிற்குக் கவலையை அளித்தது. 'இவருக்கு சடங்கு சம்ப்ரதாயம் எதுவும் பிடிக்காதா? இல்லை...., இதெல்லாம் தேவையா என்ற அலட்சியமா? இல்லையென்றால் உனக்கு என்னோடு எந்த உறவும் இல்லை என்பதை இப்படிச் சுட்டிக் காட்டுறாரா?', மனம் வேதனை அடைய, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆனால் அவனோ அவள் முகத்தைப் பார்க்கவே இல்லை. பாலையே வெறித்தவன், "அம்மா...., அவளைக் குடிச்சுட்டுத் தரச் சொல்லுங்க. மிச்சத்தை நான் குடிக்கிறேன்", அவனது பேச்சில்,மனதில் படர்ந்த வேதனைகள் மாயமாய் மறைய, வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

"என்ன தம்பி இதெல்லாம்...., புருஷன் சாப்ட்ட மிச்சத்தைத்தான் பொண்டாட்டி சாப்பிடணும், இது சம்பிரதாயம்....", அவனிடமிருந்து பால் டம்ளரை வாங்கவே இல்லை அவர்.

அவன் எவ்வளவோ போராடியும் தங்கம் மறுத்துவிட்டார். வேறு வழி இல்லாமல், பால் டம்ளரில் உதடு வைக்காமல் அண்ணாக்க குடித்தவன், பழத்தையும் பிய்த்தே சாப்பிட்டான். பாக்கியை, திவ்யாவின் முகம் பார்க்காமல், அவள் கைகளைப் பார்த்தே கொடுத்தான்.

அவள் கண்களை சந்தித்திருந்தால் அவனுக்கு அவளது விருப்பம் புரிந்திருக்குமோ? ஆனால் அவனோ திவ்யாவின் உடல் மொழியிலேயே கவனமாக இருந்தானே....., திவ்யாவின் வெளி மனமோ, ஜீவா செய்த செயல்களில் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது.

ஜீவா, தன்னோடு எந்த விதத்திலும் உறவு வைத்துக் கொள்வதை அவன் விரும்பாததாலேயே, அவ்வாறு நடந்து கொள்கிறான் என்று எண்ணினாள். ஆனால் அவளது உள்

மனக் காயங்களோ, ஒரு ஆண்மகன் தன்னை நெருங்குவதை, சகிக்க முடியாமல், மறுகியது.

அவளை அறியாமலே...., அவள் கால்கள் பின்னடைய, அவளை நோக்கி முன்னேறியவன், அவள் கை நீட்டி வாங்கும் முன்பே, அருகில் இருந்த டீப்பாயில் அதை வைக்க எண்ணினான். ஆனால் தங்கம், ஹேமா, கணேஷ் என அனைவரும் அருகில் இருக்கையில் அதைச் செய்ய இயலாமல், அவள் கைகள் நீண்டு வருவதைப் பார்த்து, அவள் விரல்களுக்குள் டம்ளரைக் கடத்திவிட்டு, கைகளை விலக்கிக் கொண்டான்.

திவ்யா குடித்து முடித்த பிறகு, "தம்பி, நீங்க திவ்யாவை ரூமுக்குக் கூட்டிப் போங்க", தங்கத்தின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அவன் எழுந்து முன்னே நடக்க, அவனைப் பின்தொடர்ந்தாள் திவ்யா. எப்பொழுதும் எல்லாவற்றுக்கும் ஹேமாவை அழைப்பது, அவளுக்கே சின்னபிள்ளைத் தனமாகத் தோன்ற, அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, சென்றாள்.

ஹேமாவும் தங்கமும் ஒரு பெரிய நிம்மதிப் பெருமூச்சை விட்டார்கள். "அம்மா...., என்னம்மா திவ்யா எதுவுமே சொல்லலை..., ஒரு பக்கம் அவளோட அமைதி சந்தோசமா இருந்தாலும், இன்னொரு பக்கம், மனசுக்குள் என்ன நினைச்சு மறுகுறாளோன்னு கவலையா இருக்கும்மா", திவ்யா சென்ற திசையைப் பார்த்தவாறே ஹேமா கலக்கமாகச் சொன்னாள்.

"ஹேமா, இப்போ ஜீவா கீழே வந்துடுவார்...., நீ மேலே போய், திவ்யாவைப் பார்த்தால்...., உன்னோட கவலைக்கெல்லாம் பதில் கிடைக்கும்", மர்மமாகச் சொல்லிப் புன்னகைத்தார்.

"என்னம்மா இப்படி புதிர் போடுறீங்க...?", குழப்பமாகக் கேட்டாள்.

“அதான், கொஞ்சம் பொறுமையா இருந்தால் உனக்கே தெரிஞ்சுடும்னு சொன்னேனே, அமைதியா இரு”, சொல்லிவிட்டு, கிச்சனுக்குச் சென்று பார்வையிடப் போனார்.

அங்கே திவ்யாவை அறைக்கு அழைத்துச் சென்றவன் காட்டிய அறையைப் பார்த்து, திவ்யாவுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. அந்த அறையோ, ஒரு சின்ன ஹாலுக்கு ஒத்திருந்தது.

அவனோ, இவளது அதிர்ச்சியைக் கண்டு கொள்ளாமல், அறையின் அந்தக் கோடிக்குச் சென்று, அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்தான். திவ்யாவின் கண்கள் அந்த அறையை நோட்டமிட்டன.அறையின் ஒரு ஓரமாக, இரட்டைக் கட்டில் இரண்டு, போடப்பட்டு இருந்தது. அதன் அருகில் டிவி, ஸ்டீரியோ, ஸ்டாண்ட் இருந்தது. அதில் முழுவதும் ரைம்ஸ் சிடிக்கள் இறைந்து கிடந்தன.

ஒரு பக்கம் முழுவதும், அலுவலக கோப்புக்கள் அடங்கிய ராக். அதைத் தொடர்ந்து மூடிய வார்ட்ரோப்கள் இருந்தன. அதன் அருகில் பாத்ரூம் இருந்தது.

அனைத்தையும் பார்வையிட்டவள், அவனையும் பார்த்தாள். அவன், இவளைத் திரும்பியும் பாராமல், “எனக்கு உன்கிட்டே ஒண்ணே ஒண்ணுதான் சொல்லணும்....., இதுதான் நம்மளோட ரூம்...., நீ இந்த வீட்டில் எங்கே வேண்டுமென்றாலும் போகலாம். ஆனால் பக்கத்து அறைக்கு மட்டும் போக வேண்டாம்.

அப்படிப் போனால்....., நீ அப்படிச் செய்ய மாட்டன்னு நினைக்கிறேன்....”, கண்டிப்பா, கெஞ்சலா, கோபமா...., இன்னதென்று புரியாத குரலில், கைநீட்டி அந்தப் பக்கம் காட்டியவன், அதன் பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அமைதியாக பழைய நிகழ்வுகளில் மூழ்கினான்.

பிறகு எதையோ யோசித்தவன், “நம்ம கல்யாணத்துக்கு, உங்க அக்காவும், அம்மாவும் ஏன் வரலை? நான்

அவங்ககிட்டே பேசணும்னு நினைச்சேன்...., ஆனா.....நீ வேண்டான்னு சொன்னதால்தான் நான் பேசலை. அவங்க எல்லாம் வருவாங்கன்னு எதிர் பார்த்தேன்", எப்படியாவது, அவளுக்குத் தன்மேல் இருக்கும் பயம் சரியாக வேண்டுமென்று எண்ணினான்.

அவன், தன் வீட்டு ஆட்களைப் பற்றிக் கேட்கவே, திவ்யாவின் முகம் மிருதுவானது. அதிலும், தன் அக்கா கீதாவைப் பற்றி நினைக்கும் போது, சந்தோஷம் குமிழியிட்டது. கிட்டத்தட்ட பதினைந்து வருடங்களுக்குப் பிறகு, தன் அக்கா கருவுற்று இருக்கிறாள் என்றால் சும்மாவா?

திருமண விஷயத்தை, அக்காவிடம் சொன்ன பொழுது, அவள் அடைந்த சந்தோஷம்....., அவள் கருவுற்று மூன்று மாதமே நிறைவு அடைந்திருப்பதால், அவளால் வரமுடியாத நிலை, அதை நினைத்து அவள் கொண்ட கவலை, அனைத்தையும் நினைத்த வண்ணமே நின்றாள்.

அவளது பதிலுக்காக அவன் காத்திருப்பது, அவள் கருத்தில் படவே இல்லை. இங்கே ஜீவாவோ, தன் கேள்விக்குப் ப்ரியா அலட்சியப் படுத்துவதைப் போலவே, திவ்யாவும் அலட்சியப் படுத்துவதாக எண்ணி மறுகினான். தன் வாழ்வில், தனக்குத் திருமண வாழ்க்கை சரியாகவே அமையாதோ என்று வேதனைப் பட்டான்.

அந்த வேதனை எதனால் வந்தது, என்பதை அவன் நினைக்கவில்லை. திவ்யாவைத் தன் மனைவியாக எண்ணத் துவங்கியதால் தான், அவளது மௌனம் தன்னை பாதிக்கிறது என்பதை ஆராய மனமில்லாமல், ஜன்னல் கம்பிகளை அழுந்தப் பற்றி, தன்னைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றான்.

திவ்யாவோ, தன் தந்தையோடான பேச்சை எண்ணியவாறு நின்றாள். திவ்யா, அவள் தாயோடு இப்பொழுது

பேசுவதில்லை. அவள், தாய் வீட்டில் இருந்து வெளியேறிய பிறகு, அனைவரின் தொடர்பையும் முறித்துக் கொண்டாள்.

ஆனால் அவளது தந்தை மணி....., ஒரு நாள் தன்னைப் பார்த்து, அவர் சொத்தின் சரி பாதியை விற்று, சுமார் ஐம்பது லட்சம் பணம் போட்ட பிக்சட் டிப்பொசிட் பாஸ் புக்கை அவளிடம் கொடுத்துவிட்டு, மாதா மாதம் அதிலிருந்து வரும் வட்டி, சேவிங்க்ஸ் அக்கவுண்டுக்கு வருவதுபோல் செய்து, அந்த புக்கையும் அவளிடம் கொடுத்தார்.

அத்தோடு, புதிய சிம் போட்ட செல்போனைக் கொடுத்து, அதில், வழக்கறிஞர் சுந்தரதேவியின் அலைபேசி எண் இருப்பதாகவும், அவளுக்கு எந்த நேரத்தில், எந்த உதவி வேண்டுமென்றாலும் கேட்கச் சொன்னார்.

அவளைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அவர்களிடம் சொல்லியிருப்பதாகவும், எனவே, தயங்காமல் அழைக்குமாறும் சொல்லிவிட்டு, அதில் அவரது அலைபேசி எண்ணும் இருப்பதாகச் சொன்னவர், என்றாவது அவள் வாழ்வில் மகிழ்ச்சி என்ற ஒன்று வந்தால், அன்று அழைக்கச் சொல்லிச் சென்றார்.

அன்று சென்றவர்தான்...., அதன் பிறகு விவாகரத்து வழக்கு, தீர்ப்பு என அனைத்து செய்திகளும், சுந்தரதேவி மூலமாகவே அவருக்குச் சென்றது. முதல் முறையாக அன்று அவருக்கு அழைத்தாள்.

அலைபேசி ஒரே ரிங்கில் எடுக்கப்பட, “சின்னவளே...., எப்படி இருக்க?”, அவரது தழுதழுத்தக் குரலைக் கேட்டு, கலங்கிப் போனாள். இவ்வளவுநாள், அவருக்கு அழைத்துப் பேசாதது தவறோ, என்று எண்ணினாள்.

பின்னர் மெதுவாக, தனது இப்போதைய வாழ்வு, ஹேமா, தங்கம் பற்றி, இறுதியாக அஞ்சலி பற்றி, ஜீவாவைப் பற்றிச் சொல்ல, “நீ நல்லா இருப்பம்மா....., சந்தோசமா இருப்ப. உன் வாழ்க்கை ரொம்ப சந்தோசமா, நிம்மதியா

அமையணும்னு நான் அந்த ஆண்டவனை வேண்டிக்கிறேன்", அவர் அதிகமாக நெகிழ்ந்திருப்பது, அவர் குரலில் இருந்து தெரிந்தது.

"அப்பா..., உங்க யாருக்கும் சொல்லாமல் முடிவெடுத்துட்டேன்னு உங்களுக்குக் கோபமா...?", தயங்கியவாறே கேட்டாள்.

"உன் அம்மாவும், அக்காவும், ஹேமாவும் அவங்க அம்மாவும் தாம்மா...., உன்னைப் பெத்து வளர்த்ததைத் தவிர நாங்க வேற எதுவுமே உனக்கு செஞ்சதில்லம்மா. உன்னோட நிம்மதி மட்டும்தான் எனக்கு முக்கியம்.

இந்த வசுந்தராவோட காத்துப் பட்டால்..., அந்த ஜீவா கூட மாறிடுவான்...., வேண்டாம்...., 'நீ நல்லா இருக்க'ன்னு தெரிந்தால், எனக்கு அது போதும். இப்போகூட இதை இவகிட்டே சொன்னால்...., அதுக்கும் ஏதாவது சாபம் விட்டாலும் விட்டுடுவா....

"நான் என்னைக்காவது ஒருநாள், உன்னை வந்துப் பாக்குறேன். கண்ணன் எப்படி இருக்கான்...., அவன் அவர்ட்ட பழகுறானா?", இப்படியாகத் தொடர்ந்த அவரது பேச்சு, நாட்கள் கடந்து கேட்டதாலோ என்னவோ, மிகுந்த நிம்மதியை அவளுக்குக் கொடுத்தது.

சுமார் பத்து நிமிடம் அவள் பதிலுக்காகக் காத்திருந்தவன், அவள் பதில் சொல்லாமல் போகவே, இதற்குமேலும் அவள் மௌனத்தைத் தாங்க முடியாமல், வேகமாக வெளியேறத் திரும்பி, வாசல் நோக்கி நடந்தான்.

அவனது வருகையை எதிர் பார்க்காமல், தன் யோசனையைக் கலைத்து, தடுமாறி வேகமாகப் பின்னால் நகர்ந்தவள், அங்கே சுவர் இருக்கும் என்று எண்ணி நகர்ந்திருப்பாள் போல, அது இல்லாமல், தடுமாறி விழப் போகவே, அந்த நேரம் அவளைக் காண வந்த ஹேமா, அவளைப் பிடித்து நிறுத்தினாள்.

அவளது இந்தத் தடுமாற்றத்தில் முகம் கசங்க, நின்ற இடத்திலேயே நின்றவன், அங்கே ஹேமாவைப் பார்க்கவே, “நீங்க பேசிட்டு இருங்க, நான் குழந்தைகளைப் பார்க்கிறேன்”, அவசரமாகச் சொல்லிவிட்டு வெளியேறினான்.

திவ்யாவைக் கைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றவள், “என்ன திவ்யா இது...? எதுக்கு இப்படி, ஓடி வந்து விழப் போன? அவரோட முகமே சரியில்லை...., என்னடா இது...?”, கண்டிப்பாகக் கேட்டாள்.

“என்னோட மனசும், உடம்பும், மூளையும் ஒரே பேச்சை கேக்க மாட்டேன்னு, அடம் பிடிக்குது ஹேமா. மனசு,‘அவரை நம்பு’ன்னு சொல்லுது. மூளை,‘அதை நம்பாதே’ன்னு அடிச்சுக்குது, இந்த உடம்பு...., ஆண்களைக் கண்டாலே....நான் என்ன செய்யட்டும் ஹேமா”, பரிதாபமாகக் கேட்டாள்.

இப்படிக் கேட்கும் தன் தோழியைக் கடிந்துகொள்ள முடியாமல் பார்த்தாள். அதிலும், இவ்வளவு நேரத்தில் அவள் மனம்,‘அவனை நம்பு’ என்று சொல்வதாக, அவள் சொன்னது...., பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது.

“நீ ஜீவாவைப் பார்த்து எதுக்கு பயப்படணும்...., அவர் உன்னை எதுவும் சொல்ல மாட்டார். கண்டிப்பா உன்னை நல்லா பாத்துப்பார் திவ்யா. அவரை,‘கணவனா’ வேண்டாம்..., ஒரு ‘நல்ல பிரண்டா’ கூட உன்னால் ஏத்துக்க முடியாதா?”, சலிப்பாகக்கேட்டாள்.

எவ்வளவு முறைதான் ஹேமாவும், கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப் போலச் சொல்லிப் புரிய வைப்பாள்? “நீதான் இப்படிச் சொல்லுற...., அவர் என்னன்னா, என் முகத்தைக் கூடப் பாக்க மாட்டேன்னு சொல்லுறார். இப்போ கூட, பால் பழம் எல்லாம் எப்படிச் சாப்பிட்டார் பாத்தியா? அவருக்கு, நான் வேணும்னு நினைத்தால், இப்படிச் செய்வாரா?

என்னமோ, வேண்டாத பொருள் மாதிரி தள்ளி வைக்கிறார். அவருக்கு, அவரோட பொண்ணைப் பாத்துக்க ஒரு ஆள் வேணும்...., அதுக்கு என்னைக் கட்டிகிட்டார். இதில், அவர் என்னை நல்லா பாத்துப்பாராம்....", மனதில் இருந்தவற்றை, நொடியில் பொரிந்து தள்ளினாள்.

ஆனால், அவள் சொன்னவற்றில் இருந்த உட்பொருளை அவள் அறிந்துதான் சொன்னாளா? என்பதை எண்ணி ஹேமாதான் மண்டைக் காய்ந்துப் போனாள். ஒரு மூன்று மணி நேரத்தில் இவ்வளவு பெரிய மாற்றமா? அவளால் நம்பவே முடியவில்லை.

திவ்யா உணர்ந்துதான் சொல்கிறாளா என்று அவள் முகம் பார்க்க, கவலை மண்டிக் கிடந்தது திவ்யாவின் முகத்தில். தான் உணர்ந்ததைச் சொல்லி அவளைக் குழப்ப முயலாமல் அமைதியாக இருந்தாள். மாறாக, திவ்யாவே உணரும் நாள் வரும், என்று எண்ணினாள்.

குழந்தைகளைத் தேடிச் சென்ற ஜீவாவோ..., திவ்யாவின் மௌனமும், அவளது பயந்த முகமும் மாறி மாறித் தோன்ற, அதை விட்டு வெளியேற, குழந்தைகளோடு இணைந்து விளையாடத் துவங்கினான்.

தணிவு- 3

மஞ்சள் கயிற்றின் மகிமை

நீ என்னவன், நான் உன்னவள்

சிலிர்ப்பாய் உணரவேண்டிய

உணர்வை, பதைப்பாய் உணர்கிறேன்.....

என் உணர்வுகள் உன்னைத் தீண்டுமா...?

திவ்யாவின் பேச்சைக் கேட்ட ஹேமா திகைத்து அமர்ந்துவிட்டாள். இவ்வளவு நாளாக, குழந்தைகளுக்காகத்தான் இந்தத் திருமணம், அஞ்சலியை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது, என இப்படியாகப் பேசிக் கொண்டிருந்தவள், இப்பொழுது திடீரென, ஜீவா அவளை உரிமையாக, உறவாக எண்ணவில்லை என்று சொல்வதைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறினாள்.

தனது குழப்பத்தை அவளிடம் சொல்லி, அவள் மனதையும் கலைக்காமல், எல்லாம் அதுவாக சரியாகட்டும் என்று விட்டுவிட்டாள். அதன் பிறகு இருவருமாக எதை எதையோ பேசினார்கள். நேரம் ஒரு மணியைக் கடக்க, தங்கம் அனைவரையும் சாப்பிட அழைத்தார்.

அஞ்சலியைக் கைகளில் ஏந்தியவாறு, கண்ணனை முன்னால் நடக்கவிட்டு, மாடியிலிருந்து இறங்கி வந்தான் ஜீவா. ஜீவா எவ்வளவு முயன்றாலும், கண்ணன் அவனைத் தொடவோ, தூக்கவோ அனுமதிக்காதது ஜீவாவிற்கு வருத்தத்தை அளித்தது.

ஆனால் திவ்யாவோ, கண்ணன் அவனோடு வருவதை, பெருத்த நிம்மதியாக உணர்ந்தாள். ஜீவாவுடன் கண்ணன் இயல்பாக இருப்பது அவள் மனதுக்கு ஆறுதலாகவும், சந்தோசமாகவும் இருந்தது.

அதை மறைத்தவாறே, ஜீவா அமர்ந்த இருக்கையின் அருகில் மகனை அமர வைத்தாள். திவ்யாவும் பரிமாற

நிற்கவே, இன்று திருமணம் ஆன அவர்களுக்குதான் முன்னுரிமை என்று சொல்லி, தங்கமும் ஹேமாவும் அவளை அமரச் சொன்னார்கள்.

ஆனால் திவ்யா வெகுவாகத் தயங்கவே, இறுதியில் அனைவரும் சேர்ந்து அமர்வது எனவும், தாங்களாவே பரிமாறிக் கொள்ளலாம் என முடிவெடுத்து, கண்ணன் இருந்த இருக்கையில் அவனை தூக்கிவிட்டு, திவ்யாவை அமரச் சொன்னார் தங்கம்.

மிகுந்த தயக்கத்துக்கு இடையில், திவ்யா இருக்கையில் அமர, அஞ்சலியும் வேகமாக வந்து திவ்யாவின் மடியில் அமர்ந்து கொண்டாள். ஜீவா அதைக் கண்டிக்க, “இல்ல இருக்கட்டும்...”, அவன் முகம் பார்க்காமலே சொன்னாள்.

“ரெண்டுபேரையும் வச்சுட்டு எப்படி சாப்பிடுவ...?”, அவன் கேட்ட பிறகுதான், இருவரையும் கையில் வைத்துக் கொண்டு சாப்பிட முடியாதே என்று, பரிதாபமாக ஹேமாவைப் பார்த்தாள். ஆனால், சிறியவர்களுக்கு அந்தக் கவலையே இல்லை.

“அப்பா...., நீங்க எங்களுக்கு ஊட்டிட்டே சாப்பிடுங்க. அஞ்சலி பாப்பாவுக்கு அப்படித்தானே நீங்க செய்வீங்க...”, அவள் சாதாரணமாகத் தீர்வு சொல்ல, திவ்யாதான் நடுங்கிப் போனாள்.

ஜீவா இவர்கள் பக்கமே பார்க்காமல், “அஞ்சும்மா...., கண்ணா அப்பாகிட்டே சாப்பிட மாட்டான்...., அதனால் நீ எப்பவும் போல, அப்பாகிட்டே சாப்பிட்டால் அம்மாவும், கண்ணனும் சாப்பிடுவாங்க இல்ல...”, பொறுமையாக அவளுக்குச் சொல்லி, அவளை அழைத்தான்.

“இல்ல நான் அம்மாகிட்டதான் சாப்பிடுவேன்....”, வழக்கமாக அடம் பிடிக்காமல் அனைத்தையும் கேட்டுக் கொள்பவள், திவ்யாவின் விஷயத்தில் மட்டும் அடமெண்டாக நடந்துகொள்வதை தடுக்க முடியாமல் தடுமாறினான்.

ஜீவாவின் முகம் வாடுவதை உணர்ந்து, “ஹேமா நீ கண்ணனை வாங்கிக்கோ...., கண்ணா ஆன்ட்டி கிட்டே போடா...”, சொல்லி அவனை அவளிடம் கொடுக்க, எந்த உணர்வையும் காட்டாமல், கண்ணன் அவளிடம் சென்று அமர்ந்துகொண்டான்.

அதன் பிறகு சாப்பாட்டைத் தொடர, தன் தட்டில் வைக்கும் பதார்த்தங்களை, ஜீவாவின் தட்டிலும் வைக்கத் தயங்கவில்லை திவ்யா. அவளது இந்த செய்கை, ஜீவாவின் நெஞ்சைத் தொட்டது. தன்மேல் எவ்வளவு பயம், தயக்கம் இருந்தாலும், தன் பசியாற்ற அவள் பரிமாறுவது, மனதுக்கு இதமளித்தது.

அதைவிட, அவன் தட்டில் காலியாகும் பதார்த்தங்களை, சரியாக கவனித்து, அதை மறுபடியும் வைத்த விதம்....., என்னவோ அவனால் அங்கே அமர்ந்து சாப்பிடவே முடியவில்லை. ஏதோ ஒரு உணர்வு தொண்டையை அடைக்க, “எனக்குப் போதும்....”, சொல்லிவிட்டு பாதிச் சாப்பாட்டில் எழுந்து சென்றுவிட்டான்.

அவன் பாதி சாப்பாட்டில் சென்றது, திவ்யாவிற்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. “அப்பா ஏன் சாப்பிடலை....”, அஞ்சலி கேட்க..., அங்கிருந்த அனைவருமே சங்கடமாக உணர்ந்தார்கள்.

‘நான் அவருக்குப் பரிமாறக் கூடாதா? பிடிக்கலையா?’, திவ்யாவின் மனம் கவலை கொண்டது. அஞ்சலி, திவ்யாவின் மடியில் இருந்து இறங்கி..., ஜீவாவின் பின்னால் ஓடினாள். ஏதோ ஒரு வேகத்தில், அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

ஏதோ கலங்கிய மனநிலையில் இருந்தவன், “அஞ்சலிப் பாப்பாவுக்கும் இப்போ அப்பா வேண்டாமா...?”, கேட்டுவிட்டு, அவளை தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

அவன் பேச்சைக் கேட்ட திவ்யா, வந்த சுவடு தெரியாமல், சாப்பாட்டு அறைக்கு விரைந்தாள். ‘நான் அவரோட மகளை,

அவரை விட்டுப் பிரிக்கிறதா நினைக்கிறாரா? அதனால்தான் சரியாகச்சாப்பிடலையா?', மனம், கலங்கிய குட்டையாக, கண்டதையும் எண்ணியது.

ஜீவா திவ்யா இருவராலும், தங்கள் மனதின் அடியாழத்தில் புதைந்து, உறைந்து போயிருக்கும் கவலையால்...., இன்றைய மாற்றத்தோடு ஒத்துப் போக முடியவில்லை. ஒருவர்மீது மற்றவருக்கு எழும் நேசத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், பழைய வாழ்க்கை அவர்களை அழுத்தியது.

கவலைப் படர்ந்த முகத்துடன் வரும் திவ்யாவைப் பார்த்து துணுக்குற்றனர் அனைவரும். கண்ணன் வேகமாக வந்து அவள் கைகளைப் பிடித்து அமரவைத்து, அவள் அழுகிறாளோ என்று, முகத்தைத் திருப்பிப் பார்த்தான்.

அவள் கண்கள் கலங்கியிருக்கவில்லை என்று அறிந்த பிறகும், வாடியிருந்த அவள் முகம், கண்ணனைச் சட்டென சோர்ந்து போகச் செய்தது. திவ்யா வேகமாக அவனை அணைத்துக் கொள்ள, கண்ணன் அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு, தோளில் படுத்துக் கொண்டான்.

ஒரு புள்ளியில் சந்தித்தாலும், ஒருவருக்கொருவர் ஆறுதலைத் தேடாமல், தங்கள் செல்வங்களிடம் தான் தேடின அந்தப் பிய்ந்த இதயங்கள். இருவரும் தங்களுக்குள்ளேயே மூழ்க விரும்பினார்களே தவிர, மற்றவரைப் பற்றி யோசிக்கத் தயங்கினார்கள்.

திவ்யாவின் செய்கையைப் பார்த்த கணேஷ், ஜீவாவைத் தேடிச் செல்ல, அங்கே ஜீவாவும் மகளை அணைத்தவாறு நின்ற தோற்றம் அவன் மனதைப் பிசைந்தது. கொஞ்சம் தைரியத்தை வர வைத்துக் கொண்டு, "சார்....", மெதுவாக அவனை அழைத்தான்.

அவனது அழைப்பில் சட்டெனத் திரும்பியவன், மகளை அங்கே விட்டுவிட்டு, "ஏண்டா நான் உங்களைப் பார்த்தேன்...., அதான் உன் தங்கச்சி என்னை விட்டுப் போயிட்டாளே...., நீயும் போக வேண்டியதுதானே குமார்....,

ஏன் இப்படி, என் கூடவே இருந்து, என் நிம்மதியைக் குலைக்கிற,

“இப்போ உன்னை நான் ‘கல்யாணம் செஞ்சு வை’ன்னு கேட்டேனா...., இப்போ ஒவ்வொரு நிமிஷமும் வலிக்குதுடா...., பழசை மறந்துட்டேன்னு என்னையே நான் ஏமாத்திட்டு இருந்து இருக்கேன்...,

“இல்லடா எனக்கு எதுவுமே மறக்கலை...., இப்போ இவ செய்யிறதையும், பழசையும் போட்டுக் குழப்பிக்க வேண்டி இருக்கு. ஏன் குமார் எனக்கு மட்டும் இப்படியெல்லாம் நடக்குது? நான் நிம்மதியாவே இருக்க மாட்டேனா? என் வாழ்க்கை சரியாகவே ஆகாதா...?”, ஏமாற்றம், வெறுப்பு, தன்னிரக்கம், இப்போதைய வாழ்க்கையை ஏற்க முடியாத தவிப்பு அனைத்துமாக, ஜீவாவை அழுத்தியது.

எனவே தன் கோபத்தைக் காட்ட குமாரிடம் சாடினான். ஜீவாவின் கோபத்தையும், பேச்சையும் கேட்டு, அதிர்ந்து போனான் கணேஷ். அவனது அதிர்ச்சிக்குக் காரணம், இந்த ஒன்றரை வருடங்களில் ஜீவா, கணேஷை,‘குமார்’ என்ற பெயரில் அழைத்தது இல்லை.

ப்ரியா வீட்டை விட்டுப் போன பிறகு, காண வரும் குமாரை, ‘குமார்’ என்ற பெயரைக் கேட்டாலே தனக்கு எரிச்சலாக வருகிறது, அவனைக் கொன்றாலும் கொன்று விடுவேன் என்று சத்தம் போட, அதன் பிறகு அவனைக் காண வரும்பொழுது, குமாரே, தன்னை ‘கணேஷ்’ வந்திருப்பதாகச் சொல்லச் சொல்லி, கூர்க்காவிடம் சொல்லி அனுப்ப, அதன் பிறகு ‘கணேஷ்’ என்று சொல்வதே பழகி விட்டது.

அதிலும் கம்பெனியை அவனே மேற்பார்வை இட்டு, கவனித்து, பொறுப்பாக அனைத்தையும் செய்யவே, அவனை ‘கணேஷ்’ என்றே அழைக்கத் துவங்கினான். அதன் பிறகு, இன்றுதான் தன்னை ‘குமார்’ என்று அழைக்கிறான்.

அவனது ‘குமார்’ என்ற அழைப்பிலேயே, ஜீவா மிகுந்த மன அழுத்தத்தில் இருப்பது புரிய, “சார்...., எல்லாம் சரியாயிடும் சார்...”, திக்கித் திணறி முடித்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

சென்றவன், ஹேமாவைத் தேடிச் செல்லும் தைரியம் இல்லாமல், தனக்கு ஒதுக்கியிருக்கும் அறைக்குள் சென்று முடங்கினான். ‘என்றைக்குதான் ஜீவாவின் முகத்தில் பழைய நிம்மதியையும் சந்தோஷத்தையும் பார்ப்போம்’...., என்று மனம் வெதும்பினான்.

கணேஷை இவ்வளவு நேரம் காணாமல், அவனைத் தேடி வந்தாள் ஹேமா. தன் மனக் கவலைகளை அவளிடம் இறக்கி வைத்தான். அவன் சொல்லச் சொல்ல, ஹேமாவின் மனதிலும் கவலை ஏறியது.

ஆனாலும், எடுத்தவுடனே எதுவும் செய்து குழப்பவேண்டாம், தங்கள் திருமணம் முடிந்த பிறகு, தேவைப்பட்டால் எதையும் செய்யலாம் என்று சொல்லி அவனை ஆறுதல் படுத்தினாள். பின்னர் இருவருமே தங்கள் கவலையைத் தங்கத்திடம் சொல்ல,

“முதல்ல, தங்களுக்குத் திருமணம் முடிஞ்சிடுச்சு, அப்படிங்கிறதை அவங்க உணரட்டும். அதுக்குப் பிறகு, நடக்க வேண்டியது எல்லாம் தன்னால் நடக்கும். அவங்களால, ஒருத்தருக்கு ஒருத்தர் தங்களைக் கண்டிப்பா காயப்படுத்திக்க முடியாது.

“அவங்க தங்களுக்குள்ளே மறுகுவாங்க. பிறகு அவங்க மட்டுமே இருக்கும் போது, ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுக்க, நிறைய டைம் கிடைக்கும்....., நாலு வருஷக் காயம்...., ஒரே நாள்ல ஆறணும்னு நாம நினைக்கிறது முட்டாள்த்தனம்.

“அதனால் இப்போ அவங்களோட கோபம், பேச்சு, வெறுப்பு எதுவாக இருந்தாலும், இப்படியெல்லாம் வெளியே வரக் காரணம், ‘எங்கே இந்த பந்தமும் பொய்யாப் போய்டுமோ’

என்ற அவங்களோட பயம்தான். இது கூட அவங்க செய்யாமல் இருந்தால்.....,

“நீங்க மனசைப் போட்டுக் குழப்பிக்காமல் நிம்மதியா இருங்க. எல்லாம் சரியாயிடும்.....”, தங்கத்தின் பேச்சைக் கேட்ட பிறகு, இளையவர்கள் இருவருக்கும் நிம்மதியாக இருந்தது. ஹேமா, தாயை அணைத்து அவர் கன்னத்தில் முத்தம் கொடுத்து, தன் நிம்மதியை, வெளிப்படுத்தினாள்.

திவ்யா குழந்தைகளைத் தூங்க வைக்க, ஜீவா மொட்டை மாடியில் தஞ்சம் புகுந்தான். திவ்யாவை, எப்படி அவளது பயத்தில் இருந்து தெளிய வைப்பது என்பதே அவனது சிந்தையாக இருந்தது. எப்படியும், அவளை வேறு அறையில் தங்க வைக்க அவனால் முடியாது.

அப்படி ஒரு சூழல் வருவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தன் மனைவி தன்னோடு, தன் அறையில் இருக்க வேண்டும்....., இந்த எண்ணம் மட்டுமே, மாறி மாறி அவன் மனதில் அழுந்தப் பதிந்தது.

தன் குழப்பத்தை, கணேஷிடம் கோபமாக வெளிப்படுத்தியதை இப்பொழுது நினைக்க, சங்கடமாக இருந்தது. ஆனாலும் அவனிடம் மன்னிப்பை வேண்ட, மனம் இடம் கொடுக்கவில்லை. குழப்பமான மனநிலையிலேயே இருந்தான்.

இங்கே, கணேஷும் ஹேமாவும் தோட்டத்தின் நிழலில் அமர்ந்து பேசுவதை மாடியில் இருந்து பார்த்தான்.
“ஹேமா..., உங்க அம்மாகிட்டே பேசிய பிறகு, எனக்கு என்னமோ கொஞ்சம் நிம்மதியா இருக்கு. கொஞ்ச நேரத்தில் எவ்வளவு தவிச்சு போயிட்டேன் தெரியுமா?

“அதிலும் ஜீவா, ‘குமார்’ன்னு சொல்லிக் கூப்பிடவே, எங்கே என்னை வீட்டை விட்டு அனுப்பிடுவரோன்னு பயந்துட்டேன். நல்லவேளை, அவ்வளவு கோபத்திலும் அவர் அதைச் சொல்லலை...”, ஆசுவாசமாக மூச்சு விட்டான்.

“கணேஷ்...., எப்போ பாத்தாலும் அவங்களைப் பத்தி மட்டுமே யோசிக்கிறீங்க.... கொஞ்சம் நம்மளைப் பத்தியும் பேசுங்களேன். கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருங்க. வர வர, முழு நேரமும் நாம அவங்களைப் பத்தி மட்டுமே யோசிக்கிறோம்”, கொஞ்சம் செல்லக் கோபம் கொண்டாள்.

ஹேமா அப்படிப் பேசவே, கணேஷின் பார்வையில் சட்டென ஒரு மாற்றம்...., “நம்மளைப் பத்தி என்னப் பேச...? அதான் ‘உனக்கு நான், எனக்கு நீ’ ன்னு முடிவாயிடுச்சே. உனக்கு ‘ஓகே’ ன்னா....”, கேட்டுவிட்டு, அவன் சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

யாரும் இல்லாமல் போகவே, அவளை நெருங்கி அமர்ந்தான். “இப்போ, பேசச் சொன்னால், எதுக்கு சுத்தி முத்திப் பாத்துட்டு, இப்படி உரசுற மாதிரி வந்து உக்காருறீங்க?”, வார்த்தைகளில் சிறு கோபம் இருந்தாலும், அவள் குரலில் கோபம் துளியும் இல்லை. அதைவிட, அவள் நகர்ந்து அமர எந்த முயற்சியும் செய்யவும் இல்லை.

அதை உணர்ந்தவாறே, “தள்ளி உக்காந்துப் பேசினால்...., உனக்கு சரியா கேக்காமல் போய்ட்டா....”, குறும்பாகக் கேட்டு, அவள் இடக் கரத்தை, தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

“இப்போ எதுக்கு கையைப் பிடிக்கிறீங்க...?”, அவன் கைகளில் இருந்து தன் கையை உருவிக் கொள்ள முயன்றாள்.

அவள் கைகளை அழுந்தப் பற்றியவன், “கையை தானே புடிச்சேன்..., என்னமோ உன் இடுப்பைப் பிடிச்ச மாதிரி இப்படிப் பதறுற...?”, அவளை இன்னும் நெருங்கினான்.

“ஹையோ... கொஞ்சம் தள்ளி உக்காருங்க. ஏற்கனவே இந்தப் பட்டுப் புடவையைக் கட்டிக்கிட்டு கசகசன்னு இருக்கு, இதில் நீங்க வேற... உங்ககிட்டே வாயைக் குடுத்துட்டு மீள முடியுமா?”, அவனைவிட்டு விலக முயன்றாள்.

“என்கிட்டே வாயைக் குடுத்துட்டு மீள முடியாதுன்னு அவ்வளவு சீக்கிரம் தெரிஞ்சிடுச்சா?”, அவன் கண்ணடித்துக் கேட்ட விதத்தில், காலையில் நடந்த முத்தத்தைதான் சொல்கிறான் என்பது புரிய, முகம் வெகுவாகச் சிவந்து போனது அவளுக்கு.

“ச்சீ...., நான் எதைப் பேசினால், நீங்க எதைப் பேசுறீங்க...”, அவளால் அவன் முகம் பார்க்க முடியவில்லை.

“ஹேமா..., காலையில் பதட்டத்துல கொடுத்ததில், சரியாவே ஃபீல் பண்ண முடியலை....., சோ.....”, கண்களில் போதையுடன் அவன் நெருங்க, “கணேஷ்...., என்ன விளையாட்டு இது...? அதுவும் இப்படி வெளியில் உக்காந்துட்டு....”, பதறியவாறு, அவன் நெஞ்சில் கைவைத்துத் தள்ளி விட முயன்றாள்.

ஆனால், உடும்புப் பிடியாக நெருங்கும் அவனை, ஒரு இன்ச் கூட அவளால் விலக்கித் தள்ள முடியவில்லை. “கணேஷ்...., அதான் இன்னைக்குக் கோட்டா முடிஞ்சுதே...., பிறகு என்ன...? ப்ளீஸ் வேண்டாம்...”, அவன் நெருக்கத்தில், குரல் வெளியே வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது.

அவள் கண்களில் தெரிந்த ஆர்வமும் மிரட்சியும், கணேஷுக்கு மிகுந்த சுவாரசியத்தைக் கொடுத்தது. அதிலும், மூச்சுகாற்று உரசும் நெருக்கத்தில், அவள் கண்களை ரசிக்க..., மிகுந்த போதையை அளித்தது.

“என்னமோ, டெய்லி முத்தம் தாற மாதிரி, இன்னைக்குக் கோட்டா முடிஞ்சதுன்னு சொல்லுறியே...., இன்னைக்குக் கொஞ்சம் போனஸா தரக் கூடாதா...?”, அவன் மீசை முடி கன்னத்தில் உரச, தன் மேனி முழுவதும் பரவும் புதுவித உணர்வை, இதற்குமேல் தாள முடியாது என்று தோன்ற,

வேகமாக அவனை உதறிவிட்டு, எழுந்து ஓடினாள். “ஹேய் எங்க ஓடுற...?”, அவளைப் பின்தொடர்ந்து ஓட, ஹேமா வீட்டுக்குள் நுழைந்து, எதிரில் வந்த தங்கத்தின் மீது மோதி நின்றாள்.

“ஹேமா என்ன நின்னுட்ட..., உனக்கு....”, சட்டெனத் திரும்பி ஹேமா அவனைப் பதட்டமாகப் பார்க்க, தங்கத்தைப் பார்த்த அவனும், சட்டெனப் பேச்சை நிறுத்தினான்.

ஹேமாவின் மலர்ந்த முகமும், துள்ளல் ஓட்டமும், கணேஷின் பின்தொடரலும், அவர்களது விளையாட்டை, தங்கத்துக்கு உணர்த்த, “உங்களைக் காபி குடிக்கக் கூப்பிடத்தான் வந்தேன். நீங்களே வந்துட்டீங்க....., வாங்க..., ஜீவாவும் திவ்யாவும் எங்கே..., கொஞ்சம் எங்கன்னு பாத்துக் கூட்டி வாங்க...”, எதுவும் கண்டுகொள்ளாமல் அவர் சொன்னார்.

“ஹேமா..., உங்க அம்மா கூடக் கண்டுக்கலை..., நீதான் ரொம்பப் பண்ணுற..., கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா...?”, படியேறும் அவள் பின்னழகை ரசித்தவாறே, ரசனையாக அவன் சொல்ல, படியிலேயே திரும்பிநின்று அவனை முறைத்தாள்.

“என்ன...?”, ஒன்றும் தெரியாதவன்போல் அவன் கேட்க, “இப்போ பேசாமல் வரல...., வேற நினைப்பே இல்லையா?”, போலி கோபத்தோடு கேட்டாள்.

“நல்லா இருக்கு..., வேற பேசுனா நம்மளைப் பத்தி பேசுங்கன்னு சொல்ல வேண்டியது...., இப்போ நம்மளைப் பத்தி பேசினால் இப்படிச் சொல்லுறது. நான் என்னதான் செய்யட்டும்..”, அவன் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்க, சிரித்துவிட்டாள் ஹேமா.

“ம்ச்..., நல்லா பேசுறீங்க..., முதல்ல ஜீவா எங்கேன்னு பாருங்க. நான் திவ்யாவைக் கூட்டி வாறேன்...”, அதே சிரிப்புடன் சொல்ல, “நல்லா சிரிச்சே மழுப்புற..., நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலையே”, அவன் குரலில் உண்மையான ஏக்கம் இப்பொழுது.

அதை இனம் கண்டவள், அவன் எதிர் பாராத நேரம், அவனை அருகில் இழுத்து, அவன் கன்னத்தில் தன் பட்டு

இதழைப் பதித்தாள். பதித்த வேகத்தில் திரும்பி மாடியேறிச் செல்ல, எதிரில் வந்த ஜீவாவைப் பார்த்தவள் திகைத்தாள்.

ஆனால் அவனோ, எதையும் காட்டாத முகபாவனையில் இருக்க, தங்கள் செய்கையைப் பார்த்திருக்க மாட்டான் என்றே எண்ணினாள். கணேஷோ...., அவள் இதழ் ஒற்றிய கன்னத்தில் கையை வைத்தவாறே, உறைந்து நின்றிருந்தான்.

ஜீவாவோ, மனதுக்குள் ஒருவித நிம்மதியை உணர்ந்தான். கணேஷ், ஹேமா நெருக்கத்தைப் பார்த்து, அவனுக்கு ஏக்கமோ, பொறாமையோ எழவில்லை. மாறாக, அவனுக்காவது நல்ல வாழ்க்கை அமையட்டும், என்ற வேண்டுதலே அதிகம் இருந்தது.

அதை அவனிடம் காட்டாமல், “என்ன கணேஷ்...? என்னைத் தேடித்தான் வந்தியா?வா போகலாம்....”, பழைய கோபமில்லாமல் பேசும் ஜீவாவைப் பார்த்தவாறே, தன் மயக்கத்தைக் கொஞ்சம் ஒற்றி வைத்துவிட்டு அவனோடு சென்றான்.

திவ்யாவைத் தேடிச் சென்ற ஹேமாவோ, கதவைத் தட்டிவிட்டு நுழைய, திவ்யா கட்டிலின் ஓரத்தில் கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்து, எதிரிலே சுவரை வெறித்தவாறு அமர்ந்திருப்பது தெரிந்தது.

மனம் சோர்ந்தாலும், அதை உதறிவிட்டு, “திவ்யா, பசங்களை எழுப்பிடுவோமா? காபி குடிக்கணுமே...”, கேட்டவாறு அவளை நெருங்கினாள்.

“இல்ல ஹேமா...., அவங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் தூங்கினாங்க...., அவங்க தூங்கட்டும். நாம போகலாம்”, சொன்னவள் எழுந்து முகம் கழுவச் சென்றாள்.

“திவ்யா...., புடவையைக் கூட மாத்தாமல் என்ன செஞ்சுட்டு இருந்த...? கிட்டத்தட்ட மூணு மணி நேரம்...., சரி அதெல்லாம் விடு. முதல்ல, ஏதாவது சாதாரணப் புடவையைக் கட்டு”,

சொல்லிவிட்டு, அவளைக் கட்டாயப்படுத்தி, அவர்கள் கொண்டுவந்த பெட்டியில் இருந்து, ஒரு நல்லப் புடவையை எடுத்துக் கட்ட வைத்து, பிறகே அழைத்துச் சென்றாள்.

திவ்யாவின் முகத்தில் ஏற்கனவே இருந்ததை விட, கணிசமான அளவு பதட்டம் அதிகரித்திருந்ததைக் கண்டாள். அவளது அனைத்து செயல்களிலும் ஒரு தடுமாற்றம்..., “என்ன ஆச்சு திவ்யா..?”, அவளை நிறுத்திக் கேட்டாள்.

“சாயங்காலம் ஆயிடுச்சு ஹேமா....”, திவ்யாவின் இதழ்களில் அப்படி ஒரு நடுக்கம். அதை நிறுத்த, கீழுதட்டைப் பற்களால் அழுந்தக் கடித்துக் கொண்டாள். தோழியை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் ஹேமா.

திவ்யாவின் பயம் தெளிய, கடவுளிடம் மன்றாடுவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை ஹேமாவுக்கு. இரவைப் பற்றிய அவளது பயத்தைத் தெளிய வைப்பானா ஜீவா? விடையறியாத வினா....

தணிவு- 4

கோபம் கூட உரிமையின்

வெளிப்பாடுதான் - என் மேல்

கோபம்கொள்ளும் உன்னை

உன் கோபத்தை ரசிக்கிறேன்.....

கீழே இறங்கிவந்து, முத்து போட்டுக் கொடுத்த காபியை, ஒரு மோன நிலையில் இருந்தே குடித்தார்கள் ஜீவாவும் திவ்யாயும். இருவரும், ஒருவர் மற்றவரை, பார்வையால் தீண்டக் கூட பயந்தவர்கள் போல் நடந்து கொண்டார்கள்.

தங்கமும், ஹேமாவிடம் தைரியமாகப் பேசி விட்டாலும், இருவரும் இரு துருவமாக இருப்பதைப் பார்க்க, கலக்கமாகவே இருந்தது அவருக்கு. ஆனால் கணேஷும், ஹேமாவும் அதைப் பற்றிக் கவலைப் படாமல், தாங்கள் இருவரும் இப்போது பிரிய வேண்டுமே என்று கவலைப் பட்டார்கள்.

பார்வையால் தழுவி மீண்டுக் கொண்டிருந்தனர். ஜீவா அதை உணர்ந்தவன்போல், “ஆன்ட்டி..., கணேஷ், ஹேமா கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம்..? ஏற்கனவே ரொம்ப நாள் ஆயிடுச்சே....”.

“அதுக்கென்னப்பா..., அதான் பரிகார பூஜை எல்லாம் முடிச்சாச்சே, அடுத்தது கல்யாணம் தான். எப்போ நீங்க நாள் குறிச்சாலும் எங்களுக்கு ஓகே. பத்திரிகை அடிச்சு, முதல் பத்திரிகை கோவிலுக்கு அனுப்பணும் அவ்வளவுதான்”, தங்கம் தன் முடிவைச் சொன்னார்.

ஜீவா கேள்வியாக கணேஷைப் பார்க்க, அவனது மலர்ந்த முகமே, ‘இப்பொழுது கல்யாணம் வைத்தாலும் எனக்கு ஓகே’, என்பதை அவனுக்கு உணர்த்தியது.

“எனக்கு ஒரு ஒரு மாசம் டைம் கொடுங்க. கணேஷோட வீட்டை வாங்குனவங்க கிட்டே அதைத் திரும்பக்

கேட்டிருக்கேன். அது கைக்கு வந்த உடனே கல்யாணத்தை வச்சுக்கலாம்", பொறுப்பான குடும்பத் தலைவனாகச் சொன்னான்.

"சார்...., எனக்கு அந்த வீடு வேண்டாம்....., அந்த வீடு, எனக்கு அப்படி ஒன்றும் ஸ்பெஷல் இல்லை. அப்படி இருந்திருந்தால் அதை நான் விற்றே இருக்க மாட்டேன். உங்களுக்கு, நான் இந்த வீட்டில் இருப்பது கஷ்டமா இருக்குன்னா சொல்லுங்க, நான் தனியா வீடு பாத்துக்கறேன்.

என்னை, நீங்க இன்னும் அன்னியமாத்தான் நினைக்கிறீங்கன்னு நான் நினைக்கிறேன். ஆனா நான், உங்களை என்னோட சொந்தமாத்தான் நினைக்கிறேன். நான் செஞ்ச இமாலயத் தவறுக்கு, என்னால் முடிஞ்ச சின்னப் பிராயச்சித்தம் தான் இது. அதையும் நீங்க...., சரி, நான் என்னோட வாழ்க்கையைப் பாத்துக்கறேன்...", குரல் கமறியது கணேஷுக்கு.

ஹேமா அவன் தோளைப் பற்றி அழுத்தி அவனை அமைதிப் படுத்த முயன்றாள். அவள் கைகளை விலக்கிவிட்டு, வேதனையாக ஜீவாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு அங்கிருந்து செல்ல முயன்றான்.

"ஒரு நிமிஷம் கணேஷ்....", ஜீவாவின் அழுத்தமான அழைப்பு அவனைத் தேக்கியது.

"நான் உனக்கு அந்த வீட்டை வாங்கித் தர நினைப்பதன் காரணம், அது உன்னோட அம்மா அப்பா வாழ்ந்த வீடு என்பதால் தான். மற்றபடி, நீ இங்கே இருந்து போவதில் எனக்கும் விருப்பம் இல்லை. நானும் என் பொண்ணும் தனியா இருக்கும்போது, நான் எவ்வளவு விரட்டியும்,கோபப்பட்டும், எங்களை விட்டுப் போகாமல் இருந்த உன்னை, எப்படி நான் இந்த வீட்டை விட்டு வெளியே போன்னு சொல்லுவேன். அப்படிச் சொன்னால்,

நான் மனுஷனேகிடையாது . நம்ம மில்லுக்கு, இப்போ நீயும் ஒரு பார்ட்னர்..., அது தெரியுமா உனக்கு?

“நானும் உன்னை, என் சொந்தமா மட்டும் இல்லை...., எனக்குத் தோள் கொடுக்கும் தோழனா, என் துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் சுமை தாங்கியா தான் நினைக்கிறேன். என்ன.... என்னோட கோபம், ஈகோ, இதெல்லாம் , அதை வெளியே சொல்ல விடாமல் தடுத்துடுச்சு.

“அப்படி இல்லாமல்...., உன்மேல் கோபமா மட்டுமே இருந்தேன் என்றால்...., உன்னை இங்கே வர விடாமல் செய்ய, எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்...., என்னோட மனக் காயத்தால் தான், நான் உன்கிட்டே கொஞ்சம் ஒட்டாமல் நடந்துகிட்டேன். எனக்கு உன்கிட்டே, அந்த உரிமை கூடக் கிடையாதா?”, இதைச் சொன்ன பொழுது அவன் குரல் அடைத்தது.

அதைச் சரி செய்தவாறே, “உனக்குன்னு ஒரு வாழ்க்கை, குடும்பம் இதெல்லாம் அமையும்போது, இங்கே இருக்க, அவங்களுக்கும் தயக்கம் இருக்கலாம்..., அதைப் புரிஞ்சுக்காமல்..., நீதான் இப்படிப் பேசுற..”, அவன் வேதனைப் படுவது பொறுக்காமல் சொன்னான்.

ஜீவாவின் பொய் முகமூடி கழண்டு விழ, கணேஷ் தன் தயக்கத்தை உடைத்துக் கொண்டு, “மச்சான்.....”, சந்தோசமா, நெகிழ்ச்சியா, தனக்கென்று தோழன் கிடைத்த உற்சாகமா...? இனிமேல் இந்த முகமூடி தங்களுக்குள் தேவையில்லை என்ற வெறியா? ஏதோ ஒன்று, அவனை அப்படி அழைக்கத் தூண்டியது.

ஒரு நிமிடம் திகைத்தாலும், “என்ன மச்சான்....?”, சின்னக் குரலில் என்றாலும், ஜீவாவும் அவனோடு இணைத்து கொண்டான்.

திவ்யா திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜீவாவை. அதிலும் அவனது பேச்சு, கவலை, நெகிழ்ச்சி, அனைத்தும்,

அவளுக்குள் ஏதோ மாற்றங்களை விதைத்தது. தங்கம், திவ்யாவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

திவ்யாவின் முகத்தில், கலவையாகத் தோன்றி மறையும் உணர்வுகளைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தார். அவளது மாற்றங்கள், தான் செய்து வைத்தத் திருமணம் தோல்வியடையாது என்ற நம்பிக்கையைக் கொடுத்தது.

இந்த சந்தோஷத்தைக் கொண்டாட, தங்கம் முத்துவைப் பாயாசம் வைக்கச் சொல்ல, இரவு உணவும் முடிந்த பிறகு வீட்டுக்குச் செல்லலாம் என முடிவெடுத்து, நேரம் சந்தோஷமாகவே கடந்தது. பிள்ளைகளும் எழுந்து வந்துவிட, அவர்களை கவனித்துக் கொள்ளவே, திவ்யாவிற்கு நேரம் சரியாக இருந்தது.

சாப்பிட்டு முடித்துவிட்டு, அவர்கள் கிளம்பும் முன்னர், கணேஷ், தன் அறையில் , அவசரமாக ஹேமாவை இறுக அணைத்து, தன் வேலையைச் செவ்வனே செய்யவும் மறக்கவில்லை.

தங்கள் டிரைவரை அழைத்து, தங்கள் காரிலேயே அவர்களை வீட்டில் விடச் சொன்னான். ஹேமா, திவ்யாவுக்குக் கண்களாலேயே தைரியம் சொல்லவும் மறக்கவில்லை. அதே நேரம், கணேஷின் காதல் பார்வைக்கு பதில் கொடுக்கவும் மறக்கவில்லை.

ஜீவாவின் தொழில் இப்பொழுது சிறப்பாக மேம்பட்டு விட்டது. எனவே, டிரைவர், தோட்டம் கவனிக்க ஆள் என மேலும் இருவர் வேலைக்கு அமர்த்தப் பட்டிருந்தார்கள். அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்த கணேஷ் ஜீவாவைப் பிடித்துக் கொண்டான்.

“சார்... நம்ம மில்லில் எப்போது நான் பார்ட்னர் ஆனேன்..? எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாதே...?”, கேள்வியாக அவனைப் பார்த்தான்.

ஜீவா, கணேஷின் கண்களை நேரடியாகச் சந்தித்தவன், “எப்போ நீ உன் வீட்டை விற்று, எனக்குப் பணம் தந்தன்னு தெரிஞ்சுதோ, அன்னைக்கே நம்ம வக்கீலைப் பார்த்து பேசி லீகலா எல்லாத்தையும் முடிச்சுட்டேன்.

உன்கிட்டே, அது சம்பந்தமான பேப்பர்களில் எல்லாம் நான்தான் கையெழுத்து வாங்கினேன். நீதான், படித்து கூடப் பார்க்காமல் சைன்(sign) பண்ணின. உன்னோட தப்புக்கு நான் எப்படிப் பொறுப்பாவேன்...?”, சாதாரணமாக முடித்துவிட்டான்.

“சார்... அது உங்க பரம்பரைச் சொத்து, அதில் எப்படி என்னை பார்ட்னரா சேர்க்க முடியும்...?”, அவனால் நம்ப முடியவில்லை.

“கணேஷ்...., இனிமேல் என்னை சார்ன்னு கூப்பிடுவதை முதல்ல நிறுத்து, இன்னும் என்னை ஏன் அப்படியே கூப்பிட்டுத் தள்ளி வைக்கிற...?”.

“இப்போ அதுவா முக்கியம்.....? நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லு...”, தன் கேள்வியின் அவசரத்தில், தான் அவனை ஒருமையில் அழைப்பதைக் கூட அவன் உணரவில்லை.

“அதாவது, கிடைக்கும் லாபத்தில் உனக்கு இருபது சதவீதம் வந்துவிடும்.... முக்கிய முடிவு எடுக்கும்போது, உன்னோட கையெழுத்து எனக்குத் தேவைப்படும், அந்த மாதிரித்தான் மாற்றி இருக்கிறேன். உன்னோட பணத்தை வைத்துதான் அந்தக் கம்பெனி இப்போ நடக்குது, அது தெரியும் இல்ல....

“சோ, இந்தப் பணத்தை நீ வாங்கவோ, உபயோகப் படுத்தவோ எந்தத் தயக்கமும் வேண்டாம். எல்லாம் நல்லபடியா நடக்கும்..., நீ போ...., எனக்குத் தூக்கம் வருது....”, சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர் பார்க்காமல் சென்றுவிட்டான்.

கணேஷ், முதல் முறையாக, பழைய நந்தன் கொஞ்சம் திரும்புவதைப் பார்த்தான். இன்னும் முழுமையான ஜீவானந்தனைப் பார்க்கும் நாளை ஆவலாக எதிர் பார்த்தவாறு, ஹேமாவுக்கு அலைபேசியில் அழைக்கச் சென்றான்.

மாடியேறிய ஜீவா, தன் அறைக்குச் செல்லத் தயங்கியவாறு மொட்டை மாடிக்குச் சென்றான். எங்கே ப்ரியாவைப் போல், திவ்யாவும் தன்னை அலட்சியப் படுத்தி விடுவாளோ, பார்வையாலேயே, ஏன் வந்தாய் எனக் கேட்டு விடுவாளோ என்று பயமாக இருந்தது.

இவ்வளவு நேரமும் எதையும் யோசிக்காமல், தைரியமாக இருப்பதுபோல் காட்டிக் கொண்டாயிற்று, ஆனால், தனிமையில் அவளைச் சந்திக்க முடியாமல் தவித்தான்ஜீவா. எவ்வளவு நேரம்தான் மொட்டை மாடியில் தனிமையில் குழம்ப முடியும்?

கால் வலிக்கத் துவங்கவே மெதுவாக இறங்கி வந்தான். அறைக்குள் திவ்யாவோ, மூச்சு முட்டும் உணர்வில் தவித்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது அவளது பயம் பாதை மாறி இருந்தது.

அது என்னவென்றால் வீடு முழுவதும் ஆண்கள் இருப்பது போன்ற பிரம்மை. டிரைவர், தோட்டக்காரன், முத்து, ஜீவா, கணேஷ்...., அவளது பழைய வாழ்க்கையை எண்ணியவள், பயப்படாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

வித்தார்த், அடுத்த வீட்டில் ஆண்கள் இருந்தாலே, இவளை வார்த்தையால் காயப் படுத்துவான். இங்கே இவ்வளவு ஆண்களுக்கு மத்தியில் தான் இருப்பது...., அத்தகைய பேச்சைக் கிளப்புமோ என்று கலங்கித் தவித்தாள்.

இதைப்பற்றி ஜீவாவிடம் பேசியே ஆகவேண்டும் என்று முடிவெடுத்தாள். குழந்தைகள் இருவரும் ரைம்சில் மூழ்கிவிட,

யோசனையின் இறுதியில், ‘எனக்கு மட்டும் இந்தக் குழப்பங்கள், மனக் கஷ்டங்களில் இருந்து விடிவே இல்லையா ஆண்டவா’, என்று மனம் புலம்புவதையும் தடுக்க முடியவில்லை. அழவேண்டும்போல் இருந்தது. ஆனால், ஜீவா என்ன சொல்வானோ என்ற எண்ணத்திலேயே அதைக் கட்டுப் படுத்தினாள்.

அந்த நேரம் அறைக்குள் நுழைந்தான் ஜீவா. அவன் வருவதை திவ்யா உணரும் முன்பே, குழந்தைகள் உணர்ந்தார்கள். “அப்பா....”, அஞ்சலி ஜீவாவை நோக்கி ஓட, கண்ணனோ ஓடிச் சென்று, திவ்யாவைக் கட்டிக் கொண்டான்.

திவ்யாவின் ஒதுக்கத்தையும், கண்ணனின் பயத்தையும் கவனித்தவாறே வந்தவன், மறந்தும் இருவரையும் பார்க்கவில்லை. அவனது இந்தச் செய்கையும் திவ்யாவைச் சோர்ந்து போகச் செய்தது. தன் முகத்தைப் பார்க்கவே விரும்பாதவனிடம் என்ன சொல்ல? எப்படிச் சொல்ல? தவித்தாள்.

அவளது தவிப்புக்களைத் தவறாகப் புரிந்து கொண்டவன், அதை விடுத்து, அஞ்சலியிடம் மட்டுமே பேச முயன்றான். “எங்க அஞ்சும்மா இவ்வளவு நேரம் என்ன செஞ்சுட்டு இருந்தாங்க...?”, கேட்டவாறு அவளை மேலே தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடினான்.

அஞ்சலி கிளுக்கிச் சிரிக்க, கண்ணன் தாயின் தோள் வளைவில் இருந்து முகத்தைத் திருப்பிப் பார்த்தான். கண்ணன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த ஜீவா, அஞ்சலியின் காதில், “கண்ணனையும் விளையாடக் கூப்பிடுறியா...?”, மெதுவாகக் கேட்க, குஷியானாள் அஞ்சலி.

“ம்...”, வேகமாகத் தலையாட்டிவிட்டு, அவன் கைகளில் இருந்து இறங்கி ஓடினாள். “கண்ணா வாறியா.... அப்பா

உன்னையும் தூக்கிப் போட்டு விளையாடுவாங்க. ரொம்ப நல்லா இருக்கும்....வா....", அவனைப் பிடித்து இழுத்தாள்.

அவனுக்கும் ஆர்வம் இருந்தாலும், புது இடமும், ஜீவாவின் அருகாமையும், தனது பயமும் சேர்ந்துகொண்டு, அவனை வர விடவில்லை. "இல்ல வேணா....., நீ போ....", தலையை ஆட்டி மறுத்தான்.

அவனை எதற்காகவும் கட்டாயபடுத்தக் கூடாது என்று சொல்லி இருந்ததால், "அப்போ நாளைக்கு வருவியா....? இன்னைக்கு நான் விளையாடுறதைப் பாரு.... மம்மி.... நீங்க கண்ணன் கூட விளையாடுங்க சரியா....", சொல்லிவிட்டு ஜீவாவிடம் ஓடினாள்.

தன்னைக் கவனிக்கவில்லை என்றாலும், தன் மகனையாவது கவனிக்கிறானே என்று கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாள் திவ்யா. நேரம் பதினொன்றை நெருங்க, அஞ்சலிக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது.

"அப்பா தூக்கம் வருதுப்பா....", கண்களைக் கசக்கிக் கொண்டு சொல்ல, "அம்மா கிட்டே படுத்துக்கோடா செல்லம்...", அவளை அனுப்ப முயன்றான்.

"அம்மா கிட்டேதான் கண்ணன் இருக்கானே...., நீங்க என்னைத் தூங்க வைங்க...", அவன் தோளிலேயே படுத்துவிட்டாள். திவ்யா ஒரு வார்த்தை கூடப் பேசாமல், மௌனமாக நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அஞ்சலி தூங்கிய பிறகும் ஜீவா அவளை படுக்கையில் விடாமல், தோளிலேயே வைத்துக் கொண்டு, அறையில் உலாவிக் கொண்டிருந்தான். ஒரு ஆண்மகன் இவ்வளவு பொறுப்பாக இருப்பதைப் பார்க்க, திவ்யாவிற்கு வியப்பாகவும் இருந்தது.

கண்ணனோ தூக்கம் வந்தாலும் தூங்கத் தயங்கியவனாக இமைகளை மூடுவதும், திறப்பதுமாக அரை உறக்கத்தில் இருந்தான். ஜீவாவுக்கு இதற்குமேல் அஞ்சலியைக்

கைகளில் வைத்திருக்க முடியாது என்று தோன்றவே, கட்டிலின் அருகில் சென்று அவளைப் படுக்க வைத்தான்.

திவ்யா சுவர் ஓரமாக நகர்ந்து அமர்ந்துகொண்டாள். நான்குபேர் தாராளமாகப் படுக்கும் அந்தப் படுக்கையில் ஒரு ஓரத்தில் அஞ்சலியைப் படுக்க வைத்தற்கே அவள் இவ்வளவு யோசிப்பதும், நகர்ந்து அமர்வதும் ஜீவாவைத் தாக்க, எதுவும் சொல்ல முடியாத மௌனத்தில் நகர்ந்தான்.

‘ஒருத்தி, பார்வையில் நெருப்பைத் தாங்கி தள்ளி வைக்க, மற்றவளோ பார்வை வட்டத்தில் தான் வருவதையே தாங்காதவள்போல் நடந்துகொள்வது, எவ்வளவு முயன்றும் மனதை அழுத்தும் வெறுமையைத் தடுக்க முடியவில்லை அவனால்.

நேரம் நள்ளிரவைக் கடக்க, விளக்கைக் கூட அணைக்காமல், அவன் அறையை அளக்க, திவ்யா, கண்ணனை கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ஒரு கட்டத்துக்குமேல் கண்ணனின் அந்த அரை விழிப்பைத் தாங்க முடியாதவன், “கண்ணா...., அப்பா உன்னை எதுவும் செய்ய மாட்டேண்டா...., தூங்குமா....”, அவன் புரிந்துகொள்வானா என்ற தயக்கத்திலேயே சொன்னான்.

“ம்ம்ம்...., அம்மா...., நீ....”, (நீங்க அம்மாவை ஏதாவது செய்து விடுவீங்களா...?) என்று அவன் கேட்க வருவது திவ்யாவிற்குப் புரிய, “இல்லடா கண்ணா, அப்படில்லாம் எதுவும் இல்லை. நீ தூங்கு”, திவ்யா வேகமாகச் சொன்னாள்.

ஆனாலும் கண்ணன் சமாதானம் ஆகவில்லை. அவன் பார்வை ஜீவாவிடமே கேள்வி கேட்டது. “என்ன சொல்லுறான்...?”, ஜீவாவிற்குப் புரியாமல் திவ்யாவிடமே கேட்டான்.

இதை எப்படி அவனிடம் சொல்ல என்று தெரியாமல் தயங்கியவள், ஜீவாவின் முகம் இறுகுவதைப் பார்த்தவுடன், “அவன் பழைய ஞாபகத்தில்...., நீங்க என் கிட்டே....”,

“என்னது...?”, அவள் சொன்ன வார்த்தைகளில் இருந்த பொருள் புரிய, அதிர்ச்சியாகக் கேட்டான்.

அவன் அதிர்ச்சியை உணர்ந்தவள், தன் முகத்தை அவனுக்குக் காட்டாமல் திரும்பிக் கொண்டாள். ஜீவாவின் உள்ளம் குமுறியது..., ‘ஒரு பிஞ்சுக் குழந்தையின் முன்னால் அவன் தாயிடம் தகாத முறையில் நடந்துகொண்ட வித்தார்த் மட்டும் இப்பொழுது நேரில் கிடைத்தால், அவனைக் கொன்று போட்டுவிடும் ஆத்திரம் வந்தது.

‘ச்சே..., இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா...?’, அவன் உள்மனக் கேள்வியைத் துரத்திவிட்டு, “கண்ணா..., அப்பா இங்கே படுத்துக்கறேன். என் பக்கத்தில் அஞ்சலி, அஞ்சலி கிட்டே நீ, உனக்கு அந்தப் பக்கம் அம்மா படுத்துக்கட்டும். உங்களைத் தாண்டி அப்பாவால் போக முடியாது தானே...., இப்போ தூங்குறியா..?”, மென்மையாக ஜீவா கேட்க, அவனது கனிவு, கண்ணனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

அடுத்த நிமிடத்தில் கண்ணன் உறங்கி விட்டிருந்தான். நேரம் இப்பொழுது இரண்டைக் காட்டியது. அவனை அஞ்சலியின் அருகில் திவ்யா படுக்க வைக்கவே, படுக்கையின் அருகில் இருந்த டேபிள் லேம்ப்பை எரிய விட்டுவிட்டு, குழல் விளக்கை நிறுத்தினான்.

திவ்யா இன்னுமே அமர்ந்த இடத்தில் இருந்து அசையாமல் இருக்கவே, “படுத்துக்கோ....”, சொல்லிவிட்டு, அவளுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டான். இருவரும் படுத்துவிட்டாலும், உறக்கம் அவர்களைத் தழுவவில்லை.

நேரம் மூன்று முப்பதை நெருங்கும் வேளை, “அம்மா...., அம்மா...”, என்ற கதறலில் கண்ணன் விழிக்க, “கண்ணா அப்பா இங்கதாண்டா இருக்கேன், அங்கே வரவே இல்லை. அம்மா உன் கிட்டதான் இருக்காங்க பாரு....”, திவ்யாவிற்கு முன்பே ஜீவா குரல் கொடுக்க, கண்ணன் மட்டுமல்ல, திவ்யாவுமே திகைத்தாள்.

அறை முழுவதுமே விடிவிளக்கின் ஒளி நிறைந்திருக்க, ஜீவா சொல்வது உண்மை என்று புரியவே, “ம்ம்ம்...”, என்ற முனகலுடன் கண்ணன் படுத்துவிட, ‘இவரும் தூங்கலையா....?’, என்ற கேள்வியுடன் ஜீவாவைப் பார்க்க, அவள் பார்வையைச் சந்திக்க அவன் அங்கே தயாராக இருக்கவில்லை. எழுந்து மகனைச் சமாதானம் செய்த வேகத்தில் படுத்து விட்டிருந்தான்.

அவன் முதுகையே வெறித்தவாறு அமர்ந்திருந்தாள் திவ்யா. கண்ணனின் அந்த பயம் காலை ஐந்து மணிக்கும் தொடரவே, ஜீவா தவித்துப் போனான். தன்னால் திவ்யாவின் உறக்கம் பாழாகிறதே என்று கவலை கொண்டான்.

ஐந்து மணிக்கும், ஜீவாதான் கண்ணனைச் சமாதானம் செய்தான். திவ்யா பேச்சே மறந்தவள்போல், நடந்துகொண்டாள். கண்ணன் தூங்கிவிட, “நான் வேண்ணா....., நாளையில் இருந்து வேற ரூம்ல தங்கிக்கவா....?”, அவன் குரல் கழிவிரக்கத்தால் நைந்தே வெளிவந்தது.

கண்ணனின் தவிப்பும், திவ்யாவின் உறக்கமின்மையும், தான் சுயநலமாகச் செயல்படுகிறோமோ என்ற எண்ணம் தோன்றவே, தான் காலையில் உறுதியாக இருந்த முடிவில் இருந்து பின்வாங்க வைத்தது.

ஆனால் இதைக் கேட்டு மகிழ்வாள் என்று அவன் எதிர்பார்க்க, சீற்றமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

அவளது கோபத்தின் காரணம் புரியாமல் குழம்பிப் போனான் ஜீவா. காலையில் தன்னை இந்த அறையில் தன்னோடுதான் இருக்க வேண்டும் என்று அவன் கண்டிப்பாகச் சொன்ன பொழுது, ஒரு மூலையில் நிம்மதியாக உணர்ந்த திவ்யா, அவன் இப்பொழுது மாற்றிச் சொல்லவே, ‘அவன் தன்னை மொத்தமாக ஒதுக்கி

வைக்க முயல்கின்றானோ’ என்று தோன்ற, கோபம் கொண்டாள்.

தன்னை விட்டு, இந்த அறையை விட்டுப் போக விரும்பாமல்தான் கோபமாகப் பார்க்கிறாள் என்று, அவளது பார்வையை ஜீவா சரியான விதத்தில் புரிந்து கொள்வானா? இல்லையென்றால் இவளும் நம்மைக் கோபமாகவே பார்க்கிறாள் என்று சோர்ந்து போவானா?

தன் மேலும், தன் குழந்தை மேலும் இருக்கும் அதிகப்படியான அக்கறையால் தான் ஜீவா இப்படிச் சொல்கிறான் என்று திவ்யாவும் புரிந்து கொள்வாளா? இருவரின் பார்வையும் ஒரு நொடி மோதிப் பிரிந்தன. கீழ்வானம் சிவக்கத் துவங்கியது....., இருவரின் வாழ்விலும் விடியல் வருமா?

தணிவு - 5

கோபமாய் ஒரு பார்வை

தீண்டலாய் ஒரு பேச்சு

மௌனமாய் உன் மொழி

அனைத்தும் வேண்டுமெனக்கு.....

ஐந்து மணிக்குப் பிறகு, படுக்கையில் படுக்கக் கூட முடியவில்லை அவனால். என்னவோ திவ்யாவின் அந்தக் கோப முகமே கண்முன்னால் மின்னி மறைந்தது. மெதுவாகத் திரும்பி திவ்யாவைப் பார்க்க, அவள் கடைவிழியோரம் வழிந்த நீர் அவனுக்குள் இறங்கியது.

“என்னைப் பார்த்தால்...”, வேகமாகக் கேட்கத் துவங்கியவன் அதை விடுத்து, “நான் வாக்கிங் போயிட்டு வாறேன்...., நீ கொஞ்ச நேரம் நிம்மதியா தூங்கு....”, சொல்லிவிட்டு, அவள் முகம் பாராமல் உடை மாற்றிவிட்டு வெளியேறினான்.

செல்லும் முன்னர், அஞ்சலி கீழே விழுந்து விடாமல் இருக்க, தலையணையை வைக்கவும் மறக்கவில்லை. அவன் சென்றவுடன், ‘நான் தூங்கவா...? அந்தத் தூக்கம் என்னை விட்டுப் போய் எத்தனை வருடம் ஆயிற்று...”, எண்ணியவள், தானும் எழுந்து, ஏசியை நிறுத்திவிட்டு, ஜன்னல்களைத் திறந்து வைத்தாள்.

ஜன்னலைத் திறக்கவே, கீழே தோட்டத்தைச் சுற்றி இருந்த நடை பாதையில் ஜீவா ஓடிக் கொண்டிருப்பது அவள் பார்வையில் விழுந்தது. ஏற்கனவே ஜீவா மெலிந்த தேகத்தோடுதான் இருந்தான். இதில் எதைக் குறைக்க அவன் ஓடுகிறான்? மூளை கேள்வி கேட்டாலும்,

‘ஓடுவது உடம்பைக் குறைக்க என்று உனக்கு யார் சொன்னது...?’, மனம் பதில் கேள்வி கேட்க, தன்னை மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பின்னர் நினைவு வந்தவளாக, குளிக்கச் செல்லலாம் என முடிவெடுத்து, மாற்றுடை தேடும் பொழுதுதான்..., ஹேமா தன் துணிகள் அனைத்தையும் அலமாரியில் வைப்பதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

இருந்த மனக் குழப்பத்தில், அவள் எங்கே வைக்கிறாள் என்று கூட கவனிக்காத தன்னை நொந்துகொண்டே, அங்கே வரிசையாக இருந்த அலமாரிகளில் ஒன்றைத் திறந்தாள். திறந்தவள் அதிர்ந்தாள்.

ஆனால் அது ஆனந்த அதிர்ச்சியாகவே இருந்தது. அந்த அலமாரி முழுவதும், வரிசையாக நிறைய புகைப்படங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அதில் ஒன்று சரிந்து விழுந்திருந்ததைத்தான் திவ்யா பார்த்தாள்.

எடுக்காதே வேண்டாம் என்று ஒரு மனம் எச்சரித்தாலும், ஆர்வம் அதிகமாக இருக்கவே, கைகள் தானாகவே அந்தப் புகைப்படத்தைக் கையில் எடுத்தது. அதில் வசீகரமாகச் சிரித்துக் கொண்டிருந்தான் ஜீவா. அவள் அதிர்ச்சிக்குக் காரணம் அதுவல்ல, அதில் இருந்த ஜீவா,‘மீசை’ வைத்திருந்தான்.

அது அவனுக்கு மிகுந்த கம்பீரத்தைக் கொடுத்தது. அதிலும், திவ்யாவிற்கு மீசை ரொம்பப் பிடிக்கும் என்பதாலோ என்னவோ, அந்தப் புகைப்படத்தில் இருந்த ஜீவா, பச்சக்கென அவள் மனதில் பதிந்து போனான். இப்பொழுது இருக்கும் ஜீவாவும் கம்பீரமாகவே இருந்தான், ஆனால் மீசையோடு பார்க்கையில் இன்னும் அதிகரித்தது அவன் அழகு.

மேலும் ஆர்வம் அதிகரிக்க, மற்றப் புகைப்படங்களையும் பார்க்க, ஒரு புகைப்படம் மிகவும் பிடித்தது அவளுக்கு. அது மிகவும் க்ளோஸ்அப்பில் எடுக்கப் பட்டிருந்தது. அவனது பற்கள் தெரியச் சிரித்துக்கொண்டிருந்தான். அவனது மேலுதடு தெரியாத அளவு, அடர்த்தியான மீசை அதை மறைத்திருந்தது.

அவள் கைகள்,அந்தப் புகைப்படத்தில் இருந்த அவனது மீசையை வருட நெருங்கும் வேளை, தான் செய்யப் போகும் செயல் அவளுக்கு உறைக்க, கைகளை வேகமாகப் பின்னுக்கு எடுத்துவிட்டு, புகைப்படங்களை இருந்த இடத்தில் அப்படியே வைத்துவிட்டு, கதவை அடித்து மூடினாள்.

கதவை மூடினாலும், இதயம் வேகமாகத் துடிப்பது அவளுக்கே கேட்டது. என்னவோ தவறு செய்துவிட்ட உணர்வு. ஆனாலும் இந்த உணர்வையும் மீறி...., மனமெல்லாம் சந்தோஷம் நிறைந்து ததும்புவதை உணர்ந்தாள். எதையோ வென்ற உணர்வு, அந்தப் புகைப்படத்தைத் தன்னோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்று எழுந்த ஆவலை, அவளால் அடக்கவே முடியவில்லை.

படியில் யாரோ வரும் அரவம் கேட்கவே அங்கே இருந்து நகர்ந்து, தன் துணிகள் இருக்கும் கப்போர்டைக் கண்டுபிடித்து, ஒரு துணியை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள். குளிக்கும் பொழுதும் நினைவுகள் அனைத்தும், அந்தப் புகைப்படத்தையே சுற்றி வந்தது.

அவள் குளிக்கச் சென்ற உடனேயே ஜீவா அறைக்கு வந்துவிட்டான். உடை மாற்றிவிட்டுக் குளிக்கச் செல்லலாம் என எண்ணும் வேளையில், பாத்ரூமில் திவ்யா குளிக்கும் சத்தம் கேட்கவே, வெளியே செல்லப் போனான். அப்பொழுது கண்ணன் “அம்மா...”, என்று அழைத்தவாறே எழுந்தான்.

“அம்மா இங்கே இருக்கேண்டா கண்ணா...., இதோ வாறேன்...”, “நான் கண்ணனைப் பாத்துக்கறேன்...., நீ.... குளிச்சுட்டு வா...”, ஜீவா சொல்லி முடிக்கும் முன்பே, மார்பிற்குக் குறுக்காக ஏற்றிக் கட்டிய டவலுடன் திவ்யா அறைக்குள் வந்து விட்டிருந்தாள்.

தான் இப்பொழுது பாத்ரூமுக்குள் வேகமாக நுழைந்தால், கண்டிப்பாகக் கண்ணன் ஜீவாவைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடும், என்பது புரிய, ஜீவாவை ஏறிட்டுப் பார்க்க, அவனோ 'அப்படி ஒருத்தி அங்கே இல்லை' என்ற பாவனையுடன், "கண்ணா அப்பாகிட்டே வாறியா...? நாம ப்ரெஷ் பண்ணிட்டு, பால் குடிக்கப் போகலாம்...", கைகளை நீட்டி அழைக்க, கண்ணன் தயக்கமாக என்றாலும், அவன் கைகளை மெதுவாகப் பற்றிக் கொண்டான்.

கண்ணன் திவ்யாவைத் திரும்பிப் பார்க்க, போ..., என்பதுபோல் அவள் செய்கை செய்ய, கண்ணும் ஜீவாவுடன் சென்றான். அவர்கள் அங்கிருந்து விலகவே, தோய்ந்து போய் படுக்கையில் அமர்ந்தாள் திவ்யா. தன் தேகம் வெளிப்படையாக நடுங்குவதை அவளால் மறைக்க முடியவில்லை.

ஏதேதோ எண்ணங்கள் வந்து அவளை அழுத்த, தலையைத் தாங்கியவாறு அமர்ந்துவிட்டாள். ஜீவாவோ எதையும் கண்டுகொள்ளாமல்,

அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு, கண்ணனைக் கைப் பிடித்து அழைத்துக் கொண்டு, பக்கத்து அறைக்குச் சென்றான். அங்கே சென்று இருவருக்கும் ப்ரெஷ் செய்து விட்டு, கீழே அழைத்துச் சென்று, முத்துவிடம் பால் கொடுக்கச் சொல்லி விட்டு வந்தான்.

அறைக் கதவை மெதுவாகத் தட்ட, கதவின் தாழ்ப்பாளை விடுவித்து, கதவைத் திறந்தாள். அவசியமாகவும் சரி, அநாவசியமாகவும் சரி, இருவரும் பேசிக் கொள்ளவில்லை. ஜீவாவின் மனமோ, 'அவளிடம் பேசு பேசு', என்று அடித்துக் கொள்ள, அவன் அறைக்குள் நுழைந்ததும், அம்பாக வெளியேறிய அவள் முதுகைத் தொடர்ந்தது ஜீவாவின் பார்வை.

கீழே சென்று அவள் குழந்தைகளைப் பார்க்க, அவர்கள் இருவருமே ஹார்லிக்ஸ் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

“அம்மா உங்களுக்கு காப்பியா...? டீ யா...?”, முத்து கேட்க, “அவங்க என்னக் குடிப்பாங்க...?”, இந்தக் கேள்வியை எதிர் பார்க்காத முத்து, “ஐயா காலையில் ஓட்ஸ்...., அப்புறம் டிபன், அதோட டீ குடிப்பாங்கம்மா. இன்னைக்கும் ஓடஸ் குடிச்சுட்டாங்க”, உற்சாகமாகச் சொன்னார்.

வந்திருக்கும் புது எஜமானி, ஜீவாவை நன்றாகப் பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை அவருக்குப் பிறந்தது. அதன் பிறகு,‘அஞ்சலி என்ன சாப்பிடுவாள்? அவளுக்கு என்னப் பிடிக்கும்..? ஜீவாவுக்கு என்னப் பிடிக்கும்..? எதை விரும்பிச் சாப்பிடுவான்...?’ எனக் கேட்டு அறிந்து கொண்டாள்.

முத்துவிடம் பேச அவளுக்கு எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. “ஐயா..., நான் சமைக்கிறேன்..., நீங்க எனக்கு காய் மட்டும் வெட்டித் தாங்க...”, சேலையைத் தூக்கி சொருகிக் கொண்டு வேலையில் ஈடுபட்டாள்.

“அம்மாடி...., என்னை எதுக்கு ‘ஐயா’ன்னு சொல்லுற...? ‘முத்து’ன்னு சொல்லுமா.... இங்கே எல்லோரும் என்னை அப்படித்தான் கூப்பிடுவாங்க....”, அவருக்கு அந்த அழைப்பு வித்தியாசமாக இருந்தது. எனவே வேண்டாம் என்று மறுத்தார்.

“ஐயா...., ஐயான்னா...., அப்பான்னும் ஒரு அர்த்தம் இருக்கு. நான் அதை மனசில் வச்சுத்தான், உங்களை ஐயான்னு சொன்னேன். உங்களுக்குப் பிடிக்கலன்னா நான் மாத்திக்கிறேன்...”, கனிவாகச் சொன்னாள்.

“நீ ‘அப்பா’ன்னு கூப்பிடுறது பிடிக்கலன்னு நான் எப்படிம்மா சொல்லுவேன். நீ அப்படியே கூப்பிடு தாயி.... யாரும் இல்லாத இந்த அனாதைப் பயலுக்கு ஒரு மக கிடைச்சா, வேண்டாம்னா சொல்லுவேன்...”, கலங்கும் கண்களை, தன் துண்டில் துடைத்துக் கொண்டார்.

இருவரும் பேசியவாறு சமையலில் மூழ்கி இருக்கும் வேளை, “முத்து....”, ஜீவாவின் குரல் பின்னால் கேட்க, சாம்பாரைக் கலக்கிக் கொண்டிருந்த கை தடுமாற, அதைத் தவறவிட்டு, கலவரமாகத் திரும்பி, ஜீவாவையும், முத்துவையும் கலவரமாகப் பார்த்தாள்.

எங்கே, தான் முத்துவோடு சேர்ந்து சமையல் செய்வதை, தவறாக எடுத்துக் கொள்வானோ என்ற பயம்தான் முதலில் எழுந்தது. அதனாலேயே அவ்வளவு பதட்டமாக அவள் நடந்துகொண்டாள். அது ஜீவாவுக்கும் புரிய, ‘நான் அப்படி இல்லை..., இது உன் வீடு..., ஏன் இப்படி பயந்து சாகுற...?’, என்று அவளைப் பிடித்து உலுக்க எழுந்தக் கோபத்தை அடக்கினான்.

திவ்யா தன் தயக்கத்தையும் மீறி, அவன் முகத்தை ஆர்வமாகப் பார்த்தாள். அவன் புகைப்படத்தைப் பார்த்ததன் தாக்கம், அவளை விட்டு அகலவே இல்லை. ஆனால், அவளது மாற்றம் புரியாமல், அவளைத் தவிர்த்தான் ஜீவா.

இவர்களது எண்ண ஓட்டங்கள் புரியாமலேயே...., “என்ன தம்பி...? ஏதாவது வேணுமா...?”, வேகமாகக் கேட்டார்.

“ஆமாண்ணே...., கணேஷைக் காணோம். அதான் உங்களுக்குத் தெரியுமான்னு கேக்க நினைச்சேன்... சரி, நீங்க வேலையைப் பாருங்க, அவன் வரட்டும். நான் பசங்களைக் குளிக்க வைக்கிறேன்”, சொல்லிவிட்டு, அங்கிருந்து வேகமாக நகர்ந்தான்.

பசங்களைக் குளிக்க வைக்கிறேன் என்று முத்துவிடமே தனக்கும் தகவல் சொல்லிச் செல்லும் அவனை, விளங்காத பார்வை பார்த்தாள் திவ்யா. தான் ஏன் இப்படி வெறுமையாக உணர்கிறோம்? என்பதைப் பற்றி அவள் சிந்திக்கவே இல்லை.

மாறாக...., அவனுக்குத் தான் தேவையே இல்லை என்ற முடிவுக்கு அவள் வந்து விட்டிருந்தாள். அவளுக்குத்

தெரியவில்லை, அவளை மீறி வெளிப்படும் அவளது எதிர்விதமான உடல்மொழி, அவனை, அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூட அனுமதிக்கவில்லை என்பது.

அப்படி அவள் அவனிடம் சகஜமாக இருக்க முயன்றால்..., அவனுமேதன்னிடம் அப்படிப் பழகுவான் என்பதும் அவளுக்குத் தெரியவில்லை. இருவருமே பழைய விஷயங்களையும், சம்பவங்களையும், ஆட்களையும், இந்த வாழ்க்கையிலும் நுழையவிட்டு, 'புது வாழ்க்கையை வாழ மறுக்கிறோம்' என்பதை இவர்கள் எப்பொழுது உணர்வார்கள்.

"மம்மி நான் குளிச்சுட்டேன்...", ஆர்ப்பாட்டமாக ஓடி வந்த அஞ்சலியை வாரி அணைத்துக் கொண்டாள்.

"என் செல்லம்..., குளிச்சுட்டீங்களா...? கண்ணா எங்கே..? சரி சாப்பிடுவோமா? ஸ்கூல் போகணுமே....", அவளைச் சாப்பாட்டு அறைக்கு அழைத்துவர, கண்ணனும் ஜீவாவும் ஏற்கனவே அங்கே இருந்தார்கள். அஞ்சலிக்கு, வழக்கம்போல் குட்டி இட்லியில் சாம்பார் ஊற்றி, ஸ்பூன் போட்டு ஜீவா கொடுக்க, அவள் உண்ணத் துவங்கினாள்.

கண்ணனோ இதுவரை, ஒரு பிடி சாதம் கூட தன் கையால் உண்டு பழகியது இல்லை. பொதுவாக ஆண் வளர்க்கும் குழந்தைகள் தான், எதுவும் தெரியாமல் இருப்பார்கள். ஆனால் இங்கே தலைகீழாக இருந்தது.

அஞ்சலி அவளாகவே சாப்பிட்டாள், குளித்தாள், ஷூ போட்டாள்..., அவள் வேலைகளை,தானே செய்யப் பழகி இருந்தாள். கண்ணனுக்கு, அனைத்திற்கும் தாய் தேவைப் பட்டாள். கண்ணனுக்கு சாப்பாடு ஊட்டியவாறே, "நானும் இன்னைக்கு ஸ்கூல் போகட்டுமா...?", கொஞ்சம் தயங்கியவாறே கேட்டாள். அவனுக்கு சாப்பாடு பரிமாறவும் தயங்கவில்லை.

"மம்மி...., அதான் நீங்க வீட்டுக்கு வந்துட்டீங்களே...., பிறகு நாம ஏன் ஸ்கூல் போகணும்...?", சாப்பாட்டில் கவனமாக

இருந்தவள் கண்களை உருட்டிக் கேட்டாள்.

“ஸ்கூல்க்கு படிக்கத்தான் போவாங்க...., நீ என்னடா இப்படிச் சொல்லுற?”, திவ்யா கேட்டாள்.

“நான் ஸ்கூல்க்கு, உங்களையும் கண்ணனையும் பாக்கத்தான் வந்தேன். அதான் இப்போ நீங்க இங்கே வந்துட்டீங்களே மம்மி..., நானும் கண்ணனும் இங்கேயே விளையாடுறோம்...”, குரலில் அப்படி ஒரு கொஞ்சல்.

“அஞ்சலி.... முதல்ல என்னை ‘மம்மி’ன்னு கூப்பிடுவதை நிறுத்து. இனிமேல் என்னை அப்படிக் கூப்பிடக் கூடாது...”, அவள் குரலில் சின்னக் கண்டிப்புடன் சொல்ல, அஞ்சலி அழத் தயாராக அவளைப் பார்க்க, ஜீவா, சாப்பிட எடுத்த உணவை வாய்க்குக் கொண்டு போனவன், அதை அப்படியே வைத்துக் கொண்டு குனிந்தே அமர்ந்திருந்தான்.

கண்ணனுக்குக் கூட கோபம் வந்துவிட்டது. “ஏன்...? அவ..., ம்ம்ம்...”, ஏன் அவ அப்படிக் கூப்பிடக் கூடாது...? என அவனது மொழியில் அவன் கேட்க, அஞ்சலியோ, “நீங்க என் மம்மி இல்லையா....?”, ஏக்கமாகக் கேட்டாள்.

கிச்சனில் இருந்த முத்து கூட, கவலையாக இதைப் பார்க்க, ஜீவா மட்டும் தலை நிமிரக் கூட இல்லை. அஞ்சலியின் கேள்விக்கு, “இல்லை...”, என்று திவ்யா அழுத்திச் சொல்லிவிட்டு, “நான் உன்னோட ‘அம்மா’...., அம்மாவை நீ ‘மம்மி’ன்னு கூப்பிட்டால்...., அம்மாவுக்குப் பிடிக்கலை, அதான் சொன்னேன்...”, திவ்யா சொல்ல, இறுகி இருந்த ஜீவாவின் தோள்கள் அப்பொழுதுதான் தளர்ந்தன.

“அம்மா....., அம்மா....., லவ் யு அம்மா...., எனக்கும் அம்மா..., கண்ணனுக்கும் அம்மா...., அம்மா....”, திரும்பத் திரும்ப உச்சரித்து சந்தோஷம் கொண்டாள். வெளியே இருந்து அப்பொழுதுதான் வந்த கணேஷ் புரியாமல் பார்த்தான்.

ஒவ்வொரு ‘அம்மா’ என்ற அழைப்பிற்கும், முத்தம் வேறு கொடுத்தாள். “என்ன தங்கச்சி...., உன் பொண்ணு, புதுசா

இன்னைக்குதான் உன்னைப் பாக்குற மாதிரி இப்படி முத்தம் கொடுக்குறா?”, சகஜமாகப் பேசி அவர்களை நெருங்கினான்.

“வாங்...வாங்கண்ணே...., சாப்பிடுங்க....”, அவனது ‘தங்கச்சி’ என்ற அழைப்பு, அவளை அவ்வளவு நெகிழ வைத்தது. எனவே குரலும் தடுமாறியது.

“நான் இன்னும் குளிக்கலை தங்கச்சி...., குளிச்சுட்டு ஓடி வந்துடுறேன்...அஞ்சலி..., அம்மா இங்கேதானே இருப்பாங்க..., பிறகு என்ன...? உக்காந்து சாப்பிடு...., ஸ்கூல் போக நேரமாகுது இல்ல...”, சொல்லிவிட்டு அவனது அறைக்குச் சென்றான்.

ஜீவாவுக்கு உணவு இறங்க மறுத்தது. ‘இவ என்ன, முத்து கிட்டேயும் கொஞ்சம் சகஜமா பேசுறா, இப்போ கணேஷ் கிட்டேயும் தயங்கினாலும் பேசுறா. என்னைப் பார்த்தால் மட்டும்தான் அவளுக்கு பயமும் தயக்கமும் வருதா? இவளை அப்படி நான் என்ன செய்தேன்...?’, மனம் குமுறினான்.

முத்துவை அவள்,‘அப்பா’ ஸ்தானத்தில் பார்த்தாள், கணேஷை‘அண்ணா’ என்று அழைத்து அவளாக முதலில் பேசவில்லை, மாறாக அவன்,‘தங்கச்சி’ என்று அழைத்துப் பேசிய பிறகே பேசினாள். மற்றபடி அவன் அவளை,‘திவ்யா’ என்று அழைத்துப் பேசியிருந்தால், அவனிடமும் ஒரு வார்த்தைக் கூட பேசியிருக்க மாட்டாள்தான்.

இந்த உண்மைகள் புரியாமல்..., தனக்குள் குழம்பிக் கொண்டான். “நானும் இன்னைக்கு ஸ்கூல் போகட்டுமா...?”, மெல்லியதாக அவள் கேட்க, “உனக்கு என்ன இஷ்டமோ அதைச் செய். உன்னை நான் தடுக்க மாட்டேன்...”, சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

திவ்யாவின் மனமோ, தனக்கு இந்த பதில் தேவையில்லை என ஓலமிட்டது. அவன் உரிமையாக எதையாவது சொல்ல

வேண்டும் என அவள் மனம் எதிர் பார்ப்பது, அவளுக்குப் புரியவே இல்லை.

இதுதான் பெண்களின் குணம், தான் ஒன்றை வெறுத்தால் அதை அடியோடு வெறுத்து விடுவர். ஒன்றை விரும்பினால் உயிராக நேசிப்பார். தனக்குரிய பொருள், தனக்கு மட்டுமே வேண்டும் என்று நினைப்பார்.

இதற்கு திவ்யாவும் விதிவிலக்கில்லை. அவளுக்கு ஜீவாவைப் பார்த்து பயம் இல்லை, தயக்கம் மட்டுமே. அதுவும் பழைய வாழ்வை எண்ணியே இருந்தது. ஆனால் அதையும் மீறி, 'ஜீவா தன் கணவன்' என்பதை, அவளது ஆழ்மனது ஏற்றுக் கொண்டு விட்டது.

அவனுக்கு, தான் முக்கியமானவளாக இருக்க வேண்டும், அவன் உரிமையாகப் பேச வேண்டும். பாசம் காட்ட வேண்டும் என்று அவள் மனம் விரும்புவதை, அவள் அறியவே இல்லை. அவளே அறியாத விஷயத்தை, ஜீவா எப்படி அறிவான்?

தணிவு - 6

தனிமையை தவிர்க்க நினைக்கிறேன்

ஆனால்.... துணைவருவேன் எனச்

சொல்கையில்...., தனிமை கூட சுகமே....

அன்றும், அனைவரும் ஒன்றாகக் கிளம்பி வந்துவிட்டார்கள். குழந்தைகள் இருவரும் திவ்யாவின் மடியில் அமர்ந்து கொள்ள போட்டி போட்டார்கள். திவ்யா ஜீவாவைப் பார்க்க, அவன் முகமோ உணர்ச்சிகளைத் துடைத்து, பாறைபோல் இறுகி இருந்தது.

‘இவர் ஏன் இப்படியே இருக்கிறார்? என்னைப் பார்ப்பதும் இல்லை, பேச முயல்வதும் இல்லை. நெருங்குவதும் இல்லை. ஏன் இப்படி..?’, இந்த வினா, இப்பொழுதெல்லாம் திவ்யாவை அதிகமாகவே அழுத்தியது.

திருமணம் முடிந்து பத்து நாட்கள் ஓடிப் போயிருந்தன. என்னமோ இயந்திரத்தனமாக மாறிவிட்டது போன்ற பிரம்மை. நான் மட்டும்தான் இப்படிக் குழம்பித் தவிக்கின்றேனா?

அவருக்கு என் ஞாபகம் கொஞ்சமாவது இருக்கிறதா? அவருக்கு நான் யார்..? அவரும் சந்தோஷமாக இருப்பதுபோல் தெரியவில்லை. ஒரே வீட்டில், தனித்தனித் தீவுகளாக இருக்கவா சேர்ந்தோம்? திருமணத்திற்கு முன்பு, அவர் தன்னைப் பார்க்காமலும், பேசாமலும் இருந்துவிட்டால் போதும் என்று எண்ணிய மனது,

இப்பொழுதெல்லாம் வேறு எதை எதையோ எண்ணி மறுகுகின்றது. ஆனால் இரவு வேளைகளை முன்பு எவ்வளவு வெறுத்தாளோ, இப்பொழுது அந்த இரவுக்காகக் காத்திருந்தாள் திவ்யா. பெரிதாக எதுவும் நடக்கவில்லை தான்....

ஆனாலும் அவன் அருகில் இருக்கிறான் என்ற இதம், மனதில் பரவுவதைத் தவிர்க்க முடியவில்லை. முதல்நாள்

இரவு உறங்காத இரவாக மாறிவிட, அடுத்த நாள் முதல், கண்ணன் வழக்கம்போல் தூங்கத் துவங்கி விட்டான்.

உறக்கம் தொலைத்து விழித்திருந்தது திவ்யா மட்டுமே. ஜீவாவும் உறங்கிவிட, மூன்றாம் நாள் இரவில், இடையில் விழித்தவன், எதேச்சையாக திவ்யாவைத் திரும்பிப் பார்க்க, அவள் விட்டத்தை வெறித்தவாறு படுத்திருப்பதைக் கண்டான்.

‘ஏன் அவ தூங்கவில்லை...? இன்னும் என்மேல் அதே பயத்துடன்தான் இருக்கிறாளா? அப்படியா அவள்மேல் பாய்ந்துவிடுவேன் என்று பயப்படுகிறாள்?’, மனம் துவள, கண்களை மூடி உறங்க முயன்றும், முடியவில்லை .

அவளிடம் பேச முடிவெடுத்தான். “இன்னுமா தூங்கலை நீ...?”, இரவின் நிசப்தத்தில் திடீரென அவன் குரல் ஒலிக்க, திவ்யாவின் உடல் பயத்தில் தூக்கிப் போட்டது.

அவளைப் பெயர் சொல்லி அழைத்திருந்தால் பயந்திருக்க மாட்டாளோ...? “இல்ல தூக்கம் வரலை....”, மெல்லியதாக முணுமுணுத்தாள்.

‘ஏன்.....?’, இந்தக் கேள்வியை வாய்விட்டு கேட்டிருக்கலாம்.

அப்பொழுது அவள் சொல்லியிருப்பாள்...., எனக்குத் தூக்கம் போய் பலவருடம் ஆகி விட்டது என்று. ஜீவா அந்த ‘ஏன்’ என்றக்கேள்வியைக் கேட்கத் தயங்கினான். எங்கே ப்ரியாவைப் போன்று, ‘உன் மொகரையைப் பார்த்தால் தூக்கம் வருமா’ என்று கேட்டு விடுவாளோ என்ற அச்சம் அவனுக்கு.

எனவே அமைதியாகி விட்டான். அவனிடம் அடுத்தக் கேள்வியை எதிர்பார்த்துக் காத்திருந்தவள்..., அது வராமல் போகவே, அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும் கண்விழித்துப் படுத்திருப்பது தெரிந்தது.

“நீங்க தூங்குங்க...., எனக்கு இது பழக்கம்தான்....”, சின்னக் குரலில் சொன்னாள்.

“அப்போ நானும் பழகிக்கறேன்....”, அவன் சொல்ல, அவன் முகத்தை ஆர்வமாகப் பார்த்தாள்.
தனக்குத்துணையிருப்பதாக அவன் சொன்னது, அவள் நெஞ்சைத் தொட்டது. ஜீவா, அவனது சின்னச் சின்னச் செயல்களால், அவனை அறியாமலே அவளை நெருங்கினான்.

தான் நெருங்குவது அவனுக்குப் புரியவே இல்லை. அவனோ தன்மேல் உள்ள பயத்தினாலேயே அவள் உறங்காமல் இருப்பதாக எண்ணிக் கொண்டான். எனவே அவளோடு சேர்ந்து தானும் விழித்திருந்தால் அவளுக்குச் சந்தேகம் வராதல்லவா என்று எண்ணினான்.

இப்படியாகச் சிறு சிறு காயங்களைத் தன்னை அறியாமல் அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தாள் திவ்யா. இது ஜீவாவின் தன்னிரக்கத்தாலும் வந்ததுதான். இருவருமே ஒருவரை மற்றவர் காயப் படுத்திவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்களேத் தவிர,

ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள முயலவே இல்லை. அவர்களது இந்தச் செயல்தான், இருவருக்கிடையில் பள்ளங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இதைப்பற்றித் தங்களுக்குள் பேசக் கூட முன்வரவில்லை. எங்கே அப்படி முன்வந்தால்....,இருவருமே , மற்றவர் தவறாக எண்ணி விடுவார்களோ என்ற பயமும் அவர்களைத் தடுத்தது.

ஜீவாவும், திவ்யாவின் செய்கைகளால் மனம் வெதும்பினாலும், அவளது பழைய வாழ்க்கைத் தெரிந்ததால், தன் நடத்தையால்...., ஏன் பார்வையால் கூட அவள் துன்பம் அனுபவிக்கக் கூடாது என்று கூடுதல் அக்கறையுடனே செயல்பட்டான்.

ஆனால் என்ன அவனது அந்த அக்கறையை அவள் முகம் பார்த்துக் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். தன் வருகையை உணர்ந்தவுடன், அவள் உடலில் வரும் மெல்லிய நடுக்கத்தை,

‘நீ நடுங்குவது எனக்குத் தெரிகிறது...., என்னால் உனக்கு எந்த ஆபத்தும் வராது’, என்று ஆதரவாகப் புன்னகை பூத்து வெளிப்படுத்தியிருக்கலாம். அவனோ அவள் முகம் பாராமல் விலகிச் செல்வதை, அவள் எப்படி சரியான விதத்தில் புரிந்துகொள்ள முடியும்?

இன்று ஜீவா இவ்வளவு முகம் இறுக அமர்ந்திருப்பதற்குக் காரணம், நேற்று மாலை நடந்த ஒரு சம்பவம் தான். வழக்கமாக ஜீவா இரவு நேரம்தான் வீட்டுக்கு வருவான். அன்று சற்று சீக்கிரமாக வந்துவிட்டான்.

ஜீவா வருவது அவனது காரின் ஓசையை வைத்துக் கண்டு பிடித்துவிடும் அவர்கள், அன்று கண்ணாமூச்சி விளையாட்டை திவ்யா சொல்லிக் கொடுத்து, ஆர்வமாக விளையாடிக் கொண்டிருக்கவே அவர்கள்கவனிக்கவில்லை .

ஜீவா ஷூவைக் கழட்டி வைத்துவிட்டு, நிதானமாக மாடியேற, கதவுக்குப் பின்னால் ஒளிந்திருந்த திவ்யா, குழந்தைகள்தான் வருகிறார்கள் என்று எண்ணி, சட்டென அவன்முன் தோன்றி, “பே...”, எனக் கத்தினாள்.

குழந்தைகளை எண்ணிக் கொண்டு கத்தியதால், அவனது முன்பக்கம் குனிந்து, அவன் கால்களைப் பார்த்தவாறு கத்திக் கொண்டிருந்தாள். இந்த நிகழ்வில், பயந்துபோக வேண்டிய அவன் திடனாக இருக்க, பயம் காட்டிய அவள், தன்முன் இப்படி ஒரு நெடிய உருவத்தை அப்பொழுது எதிர் பார்க்காமல், திகைத்தாள்.

திகைத்தவள் பேசாமல் இருந்திருந்தாலாவது பரவாயில்லை..., “அம்மா பேய்....”, எனக் கத்திவிட்டாள்.

அவளது சத்தத்துக்கு ஓடி வந்த குழந்தைகள், அவள் பயத்தில் கத்தவே விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அஞ்சலி ஒரு படி மேலே போய், “என்னம்மா பயந்துட்டீங்களா...? அப்பா பேயா....?”, கேட்டுவிட்டுச் சிரிக்க, திவ்யாவிற்கு, முகத்தை எங்கே கொண்டுபோய் வைத்துக் கொள்ள என்றே தெரியவில்லை.

முதல் முறையாக ஜீவாவின் முன்பு அவளுக்கு வெட்கம் வந்தது. அதைப் பார்க்க வேண்டியவனோ, அஞ்சலியையும் கண்ணனையும் துரத்திக் கொண்டு ஓடினான்.

அவன் கால்கள்தான் அங்கே சென்றதே தவிர, மனமோ திவ்யாவின் அதிர்விலும், ‘பேய்’ என்ற சொல்லிலும், சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது. ‘பத்துநாள் ஆன பிறகுமா, நான் உன் கண்களுக்குப் பேயாகத் தெரிகிறேன்? மனிதனாகக் கூடத் தெரியவில்லையா?’, மனம் சுருண்டு போனது.

அந்த நினைவில்தான் ஜீவா இன்னும் இறுகிய முகத்துடனே இருந்தான். பள்ளியில் அவர்களை இறக்கி விட்டவன், செல்லப் போகையில், தங்கம் வந்து, திருமண விஷயமாகப் பேசவேண்டும் என்று சொல்லவே, இறங்கி வீட்டுக்குச் சென்றான்.

கண்ணனும் அஞ்சலியும் பள்ளிக்குள் சென்றுவிட, திவ்யா ஜீவாவைப் பின் தொடர்ந்தாள். வீட்டுக்குள் சென்று அமரவே, “அம்மா அன்னைக்கே நான் உங்ககிட்டே ஒண்ணு கேக்கணும்னு நினைச்சேன்..... என்னமோ பரிகார பூஜைன்னு எங்கேயோ போயிருந்தீங்களே எங்கே? என்ன அது..?”, அப்பொழுதே கேட்காத குற்ற உணர்ச்சி அவன் குரலில்.

“அட இதைக் கேக்க எதுக்கு தம்பி இவ்வளவு சங்கடப் படுறீங்க? இது தோஷ நிவர்த்தி பூஜைதான். ஹேமாவுக்கு செவ்வாய் தோஷம்..., அதான் அவளைக் கட்டிக்கப்

போறவருக்கு, எந்தத் தீங்கும் நேராமல் இருக்க இந்த பூஜையைச் செய்தோம்.

“அதாவது, திருச்சி மணச்சநல்லூர் பக்கத்தில், திருப்பைஞ்சிலி என்ற ஊர் இருக்கு. அங்கே போய், இந்த மாதிரி பரிகார பூஜை செய்யணும்னு சொன்னோம். உடனே ஒரு ஐயர் வந்து, எல்லாத்துக்கும் வழி காட்டினார்.

“முதல்ல போய் அர்ச்சனா சீட்டு வாங்கினோம். அதிலேயே பூஜைக்குரிய எல்லாம் இருந்தது, தாலி உட்பட. முதல்ல சப்த்த கன்னியர் சிலைகளை வழிபட்டப் பிறகு, கல்வாழை மரத்தில் ஹேமாவை வைத்து அந்தத் தாலியைக் கட்ட வைத்துப் பூஜை செய்துட்டு வந்தோம்.

“இப்போ கல்யாணம் முடிவான உடனே, அவங்களுக்கு முதல் பத்திரிக்கையை அனுப்பி வைக்கணும். கல்யாணம் முடிஞ்ச பிறகு, தம்பதி சகிதமா அங்கே போய், எமனுக்கு சிவபெருமான் உயிர் கொடுத்த ஒரு இடம் இருக்கு.

“அங்கே இருக்கும் சந்நிதிக்குப் போய், மீதி பூஜையைச் செய்யணும். அங்கேயும் நாம பூஜை செய்ய, எதுவும் எடுத்துட்டுப் போக வேண்டாம், அந்த சந்நிதிக்குள் போக, தவழ்ந்துதான் போகணும். அப்போ பரிகார பூஜை முழுமை அடைஞ்சுடும்.

“தம்பதிகளும் நல்லபடியா சேர்ந்து வாழ்வாங்க. இப்போ முதல் ஸ்டெப் பரிகாரத்தைதான் நாங்க முடிச்சுட்டு வந்து இருக்கோம்”, தங்கம் சொல்லவே, ஆர்வமாகக் கேட்டுக் கொண்டான்.

“அம்மா, அடுத்த மாசம் துவக்கத்திலேயே, ஒரு நல்ல நாள் பார்த்துக் கல்யாணத்தை வச்சுக்கலாம். இன்னும் பதினைந்து நாள்தான் இருக்குறதால், நாளைக்கே பத்திரிகை அடிக்கக் கொடுத்துடலாம். நீங்க என்ன சொல்லுறீங்க...?”, ஜீவா கேட்டான்.

“நாங்க, நாளைக்கே கல்யாணம் என்றாலும், ரெடி தான். அப்போ அப்படியே செய்யலாம்....”, தங்கமும் சொல்ல, ஹேமா, கணேஷ் முகங்களில் அப்பொழுதே கல்யாணக்களை வந்தது.

“அப்போ சரி நான் கிளம்புறேன். கணேஷும், ஹேமாவும் போய் பத்திரிகை டிசைன் பாக்கட்டும். அவங்களுக்குப் புடிச்சதை, அவங்க வாங்கிட்டு வந்ததும் அதையே அடிக்கக் கொடுத்துடலாம். அப்படியே... கன்டென்ட்டும் ஜோசியரை வச்சே எழுதிடுங்க.

“கல்யாணச் செலவு மொத்தமும் மாப்பிள்ளை வீட்டோடது. மண்டபம், சாப்பாட்டு ஆர்டர் எல்லாம் நாங்களே பாத்துடுறோம். உங்களுக்கு, என்ன மெனு வேணும்னு மட்டும் சொல்லுங்க. அதையே போட்டு ஜமாய்ச்சுடலாம்....” ஒரு பொறுப்பான குடும்பத் தலைவனாக மாறி, அனைத்தையும் திட்டமிட்டான்.

கணேஷ், பேச்சு வராமல் ஸ்தம்பித்து அமர்ந்திருந்தான். ஜீவா தனக்காக இவ்வளவு செய்வது அவனை, அவன் மனதில் இருந்தக் குற்ற உணர்வை அதிகரிக்கச் செய்தது. கணேஷ் இவ்வாறு நினைக்க, திவ்யாவோ, ‘மத்தவங்க முகத்தைப் பார்த்தே எல்லாம் செய்யத் தெரியுது. பொண்டாட்டி முகத்தை மட்டும் பாக்கப் புடிக்கலையா?’, மனம் வெதும்பினாள்.

“சரிமா, எனக்கு நேரமாகுது நான் கிளம்புறேன்...”, கணேஷைக் கண்ணைசைவில் தன்னோடு வரச் சொன்னவன், “கணேஷ் நீ இன்னைக்கு லீவ் போட்டுக்கோ...., ஆபீஸ் வரணும்னு அவசியம் இல்லை”, சொல்லிவிட்டு நடந்தான்.

திவ்யா அவன் பின்னால் வந்தாள். வண்டியில் ஏறியவன், அவளிடம் சொல்லவா வேண்டாமா என்ற மனக் குழப்பத்துக்கு ஆளானான். இறுதியாக, “நான் இன்னைக்கு

வீட்டுக்கு வர லேட் ஆகும்”, ரோட்டை வெறித்தவாறே அவன் பதில் சொல்ல, திவ்யாவிற்கு எரிச்சலாக வந்தது.

அதை அவனிடம் காட்டும் பொருட்டு, வேகமாக அங்கிருந்து நகர்ந்து வீட்டுக்குள் சென்று மறைந்தாள். அவள் சென்று மறையும் வரைப் பார்த்தவன், இன்று அவளிடம் பேசியே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

வீட்டுக்குச் சென்ற திவ்யாவிற்கு எரிச்சல் அடங்குவேனா? என்று சொன்னது. அதை மற்றவரிடம் காட்டாமல் மறைத்தாள். ஹேமா மிகுந்த சந்தோசத்தில் இருக்கிறாள், அவளது சந்தோஷம் தன்னால் கேட்டுப் போகக் கூடாது என்று எண்ணினாள்.

ஆனால் தங்கள் அந்தரங்க ஊடல்கள், கோபங்கள் அடுத்தவர்க்குத் தெரிய வேண்டாம் என்ற காரணம்தான் உண்மையானது என்பதை, அவள் மனம் தெரிந்து கொள்ளத் தவறியது.

ஜீவா போன பிறகு, தங்கம், கணேஷ், ஹேமாவைக் கடைக்குப் போகச் சொல்லிவிட்டு, திவ்யாவுடன் பள்ளிக்குச் சென்றார். கணேஷ் உற்சாகமாக இல்லாததுபோல் தோன்றியது ஹேமாவிற்கு.

“கணேஷ், நீங்க ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வாறேன்”, அவள் சொல்வது காதில் விழுந்தும், கருத்தில் பதியாமல் அமர்ந்திருந்தான்.

‘என்ன இப்படி இருக்கிறார்...? சரி போயிட்டு வந்து கவனிப்போம்’, தனக்குள் எண்ணியவள் உடை மாற்றி வந்தாள். அவள் வந்தது கூடத் தெரியாமல், அசையாமல் அமர்ந்திருந்தான்.

“கணேஷ், இப்போ எதுக்கு இப்படிப் புடிச்சு வச்சப் புள்ளையார் மாதிரி உக்காந்து இருக்கீங்க...? இந்தக் கல்யாணத்தில் உங்களுக்கு இஷ்டம் இல்லையா...?”, அவனைப் பிடித்து உலுக்கினாள்.

“ஹாங்...., என்னக் கேட்ட..?”, கனவில் இருந்து கலைந்தான் கணேஷ்.

“கணேஷ்....., உங்க மனசுக்குள் என்னதான் ஓடுது...? எதையாவது வாயைத் திறத்து சொன்னால்தானே எனக்குத் தெரியும். அதை விட்டுட்டு, அடிக்கடி இப்படிச் சிலையாட்டம் உக்காந்தால் எனக்கு என்னத் தெரியும்?”, அலுத்துக் கொண்டாள்.

“அது ஒண்ணும் இல்ல ஹேமா.... நான் கூட நம்மக் கல்யாணத்தை எப்படியெல்லாம் செய்யணும்னு, எந்தக் கனவுமே வளத்துக்கலை. ஆனால் ஜீவா, எல்லாத்தையும் எப்படி திட்டம் போட்டு சரியாச் செய்யிறார் பாத்தியா?

“அவருக்குப் போய் என் தங்கை துரோகம் பண்ணிட்டுப் போயிட்டாளே? அவளுக்கு எப்படி மனசு வந்துது? அவளை அவருக்கு கட்டி வச்சு நான் பெரிய தப்பைப் பண்ணிட்டேன். அந்தத் தப்பை இப்போ திருத்தினாலும், அதனால் அவர் பட்ட வேதனை, அவமானம், வலி இதெல்லாம் எப்படி மறையும்?

“இப்போகூட பாரு...., அவங்க ரெண்டு பேரும் ரெண்டு துருவமா தான் இருக்காங்க...., அது சரியாகுமா? சரியாகாதா? சரியாக, நான் என்ன செய்யணும்? எதுவுமே புரியலை.

“அவரோட வாழ்க்கை ஒரு முடிவுக்கு வராமலேயே நாம அவசரப் படுறமோன்னு எனக்குக் குற்ற உணர்ச்சியா இருக்கு”, தன் மனதை மறையாமல் அவளிடம் சொன்னான்.

“கணேஷ்..., அவரோட வாழ்க்கையை, நீங்க நாசம் பண்ணலை. அதைச் செய்தது உங்க தங்கை தான். கல்யாணத்துக்குப் பிறகு உங்க கிட்டே அவ்வளவு பேசுறவ, ஏன் கல்யாணத்துக்கு முன்னாடி பேசலை?

“அப்படிப் பேசியும், நீங்க கட்டாயப் படுத்தி அவளைக் கல்யாணம் செஞ்சுக் கொடுத்திருந்தால் தப்பு, அதை

விட்டு..., அவளோட காதலைச் சொல்ல தைரியம் இல்லாமல், திருமணம் செய்து, ஜீவாவின் வாழ்க்கையைக் கெடுக்கும் அதிகாரத்தையும், உரிமையையும் அவளுக்கு யார் கொடுத்தது?

“கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம், இன்னமும் ஜீவா கூடவே இருந்து, அவர் வாழ்க்கையை நரகமாக்காமல் போனாளே, அதுக்கே நீங்க சந்தோசப் படணும்....”, கணேஷை குற்ற உணர்வில் இருந்து மாற்ற முயன்றாள்.

“போனவ, அவரோட வாழ்க்கையில் நெருப்பள்ளிக் கொட்டிட்டுப் போயிட்டாளே..., ‘அவர் ஆம்பளையே இல்லை, அவரால் ஒரு பொண்ணைத் திருப்தி படுத்த முடியாது’...., ச்சே...., ஜீவா அதனால்தான் வீட்டை விட்டு வெளியே வரவே முடியாமல் போய்ட்டார்.

“அவ்வளவு ஏன், அவர் மீசையை எடுத்ததுக்கு, முதலில் ஒரு காரணம் சொன்னவங்க, அதுக்கு இப்போ சொல்லும் காரணமே வேற, ஒவ்வொரு நாளும் இதெல்லாம் நானும் அவரோட சேர்ந்து இருந்துக் கேட்கும் போது.....

“என்னால் வெளிவரவே முடியலை ஹேமா. ஒரு தப்பான காதலால் அவரோட வாழ்க்கையில் இவ்வளவு துன்பம் வந்திருக்க வேண்டாம்...”, கணேஷால் அதைத் தாங்கவே முடியவில்லை.

“எல்லாம் சரியாயிடும் கணேஷ்...., அதான் இப்போ, திவ்யா அவரோட வாழ்க்கையில் வந்து இருக்காளே...., கண்டிப்பா அவ அவரை மாற்றுவா. இவ்வளவு நாள் பொறுத்தீங்க..., இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோங்க.

“உங்க பழைய ஜீவாவை நீங்க பாக்க முடியும்...., சரி இப்போ நாம வெளியே போறோமா இல்லையா? இல்லன்னா நான் இப்படியே ஸ்கூல்க்குப் போறேன்...”, ஆதரவாக அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, அவனுக்கு தைரியம் சொன்னாள்.

“ஹேய் என்ன நீ....? வெளியே போகணும்னு, நானே லீவ் போட்டு உக்காந்து இருக்கேன். நீ என்னன்னா ஸ்கூல்க்குப் போகவான்னு கேக்குற? அதே மாதிரி முதல்ல என்ன கேட்ட..., இந்தக் கல்யாணம் நடப்பதில் இஷ்டம் இல்லையான்னா...?

“உனக்கு ஏன் இப்படி ஒரு சந்தேகம் வந்துது...., தப்பாச்சே... இரு அந்த சந்தேகத்தைத் தீத்த பிறகு நாம வெளியே போகலாம் சரியா”, எழுந்து செல்லப் போன அவளை விடாமல், இடையில் கைகொடுத்து அழுத்திப் பிடித்து, தன் மடியிலேயே அமர வைத்தான்.

“என்ன கணேஷ் இது...? இப்போல்லாம், நீங்க அடிக்கடி மூட்ஆப் ஆகுறதும், நான் சமாதானப் படுத்துறதும், அது முடிஞ்சதும் உங்க வேலையைக் காட்டுறதும்...., இதெல்லாம் நல்லாவே இல்லை சொல்லிட்டேன்.

“வரவர, வேணும்னே இப்படில்லாம் பண்ணுறீங்களோன்னு சந்தேகமா இருக்கு. விடுங்க நான் போறேன்....”, அவன் மடியில் அமர்ந்தவாறே...., செல்லக் கோபமும், சின்னச் சிணுங்கலாகவும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளது சிணுங்கல்களைத் தலை சரித்து, குறும்புப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் கணேஷ். அவன் எதுவும் சொல்லாமல் போகவே, அவனைத் திரும்பிப் பார்க்க, கணேஷ் கைகளைக் கட்டிக் கொண்டு இருப்பதும் அவளுக்குத் தெரிந்தது.

“என்ன...?”, ஒற்றைப் புருவம் தூக்கி அவன் கேட்க, “போடா உதவாக்கரை....”, சொல்லிவிட்டு ஓடியே போனாள்.

“ஹேய் என்ன சொன்ன...? இரு, உன்னைக் கல்யாணத்துக்குப் பிறகு வச்சுக்கறேன்...”, பொய்யான மிரட்டலுடன் அவளைத் தொடர்ந்து சென்றான். கால் டாக்ஸி வர வைத்து டி நகர் சென்றார்கள். அந்த நாள் இனிமையாகக் கழிந்தது அவர்களுக்கு.

அவர்கள் எப்படி வெளியே போகிறார்கள் என்பதைக் கேட்க வந்த திவ்யா, கணேஷின் பேச்சைக் கேட்டுக் கண்கள் கலங்கச் சென்றதை அவர்கள் கவனிக்கவே இல்லை. எப்படியாவது ஜீவாவிடம் பேச வேண்டும் என்று அவளும் எண்ணினாள். இருவரும் ஒரே அலைவரிசையில் சிந்திக்க, மாலை என்ன செய்யக் காத்திருக்கிறதோ?

தணிவு - 7

தாயும் தந்தையும் நீயாக

ஊனும் உயிரும் நீயாக

எனக்குநீ மாறுவதெப்போது.....

மாலையின் வரவுக்காக, திவ்யாவும், ஜீவாவும் பதட்டமாகவே காத்திருந்தார்கள். அதிலும் ஜீவா மிகவும் ரெஸ்ட்லெஸ்சாக பீல் செய்தான். தன் வரவைக் கேட்டாலே உறையும், திவ்யாவின் முகம் பார்த்து எப்படிப் பேச? இந்த யோசனைதான் அவனைச் சுற்றி வந்தது.

மில்லில் தினமும், உற்பத்தியை ஒரு பத்துமுறையாவது பார்வையிட வரும் முதலாளி, இன்று ஒரு முறை கூட வராமல் போகவே, தொழிலாளர்கள் தங்களுக்குள், “என்ன, முதலாளிக்கு உடம்பு சரியில்லையா...?”, என பேசத் துவங்கினார்கள்.

மதியம் திவ்யா கட்டிக் கொடுத்த சாப்பாட்டை சாப்பிடும் மன நிலையில் கூட அவன் இருக்கவில்லை. கடிகாரம் ஓடுகிறதா என்பதற்காக விழிகளை மட்டும் திருப்பி, சுவர் கடிகாரத்தை நாள் முழுவதும் வெறித்தது மட்டுமே அவன் செய்த வேலை.

மனம் அதன் போக்கில் சிந்தித்தாலும், திவ்யாவிடம் பேச எந்த வழியும் அவனுக்குக் கிடைக்கவில்லை. கணேஷ் இருந்திருந்தால் ஜீவாவின் குழப்பத்தை இனம் கண்டிருப்பான். ஆனால் அவனது மில்லில் அவனை நெருங்கும் அளவு தைரியம் யாருக்கும் இருக்கவில்லை.

முன்பு குளிர் நிலவென இருந்தவன், இப்பொழுது சுடும் நெருப்பாக மாறி விட்டிருந்தான். தொழிலாளர்களின் நலனுக்காக என்று இங்கே வந்துவிட்டாலும், அவர்கள் அனைவரும் தன் முதுகுக்குப் பின்னால் பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் அவனால் மறக்க முடியவில்லை.

எனவே தொழிலாளர்களுக்குத் தேவையான அனைத்தும், யூனியன் வழியாக வழங்குவதோடு சரி. அவர்கள் தன்னை அணுக யூனியன் தலைவன் வழியாகவே அணுக முடிந்தது. அவனது தனிப்பட்ட விஷயங்களில் யாராலும் தலையிட முடியவில்லை.

ஒரு வழியாக ஐந்து முப்பது வரை காலம் கடத்தியவன், மதியம் சாப்பிடாதது, மூன்று மணிக்கு காபி குடிக்காதது எல்லாம் சேர்த்து, அவனை சோர்ந்து போக மட்டுமல்லாமல், தலைவலியையும் வர வைத்திருந்தது.

மண்டையைப் பிளக்கும் தலை வலியுடன் வீட்டுக்கு வந்தவனை வரவேற்றது மயான அமைதியே. மடிக்கணினிப் பையை ஹாலிலேயே வைத்தவன், லன்ச் பேகை கிச்சனில் கொண்டு வைத்தான்.

ஜீவாவின் கார் ஓசையை வைத்து அவன் வருகிறான் என்பதை அறிந்தவள், அவன் கிச்சனுக்கு நேரடியாக வருவான் என்பதை அறியாததால், அவனது வருகை, காபி போட்டுக் கொண்டிருந்த அவளை, வேகமாகத் துள்ளி விலக வைத்தது.

அதோடு சேர்த்து கத்தவும் போனவள், ஜீவாவைப் பார்த்து அமைதியானாள். அவளது அதிர்விலிருந்து அவள் வெளிவந்தாலும், ஜீவா அதை தாங்கிக் கொள்ள கொஞ்ச நேரம் தேவைப் பட்டது.

‘குழந்தைகளை எங்கே...?’, எனக் கேட்க நினைத்தாலும், எதுவும் கேட்காமல் விலகினான்.

ஹாலில் சென்று டீபாவில் கால் நீட்டி, சோர்வாக அமர்ந்தவன், தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டான். கிச்சனில் இருந்து அவனது இந்த செய்கையைப் பார்த்தவள், அவனுக்காக டீ தயாரிக்கத் துவங்கினாள்.

அவன் லன்ச் பாக்சைக் கழுவ எடுக்கும் வேளை, அது கனமாகவே இருப்பதைப் பார்த்தவள் குழம்பிப் போனாள்.

‘அவர் சாப்பிடவே இல்லையா...? ஏன்...? மதியமே தலை வலியா அப்போ..?’, முதலில் அவனை கவனிப்பது முக்கியம் எனத் தோன்ற, அவனுக்கு டீ எடுத்துக் கொண்டு, வெளியேறியவள், அவனைக் காணாமல் மாடியேறினாள்.

இதுவரை அவனை நெருங்கும் எண்ணத்தோடு மாடி ஏறியது இல்லை ஆகையால், மனதில் அப்படி ஒரு தயக்கம். ஆனாலும் அதையும் மீறி, அவன் தன் கணவன் என்ற எண்ணம் உந்த, மனம் அவளை நடத்திச் சென்றது.

மெதுவாக அறைக்குள் காலடி வைக்க, உடையைக் கூட மாற்றாமல், ஷூ காலோடு அவன் படுக்கையில் படுத்திருப்பதைப் பார்த்தாள். அடிமேல் அடியெடுத்து வைக்க, “அஞ்சும்மா...., அப்பாக்கு தலை வலிக்கிடா...., தைலம் தேச்சு விடுறியா?”, கண்களைத் திறக்காமலே கேட்டான்.

அவன் இப்படிக் கேட்பான் என்று எதிர் பார்க்காத திவ்யா, அவன் கேட்பதைச் செய்வோம் என்ற முடிவுடன், டீயை அங்கே வைத்துவிட்டு, தைலம் இருந்த பாட்டிலை எடுத்துக் கொண்டு அவனை நெருங்கினாள். பாட்டிலைத் திறக்கவே முடியாமல் கைகள் நடுங்கியது.

கை நடுக்கத்தில் பாட்டில் தவறி அவன் மேலேயே விழ, “பாத்துடாச் செல்லம்....”, சொன்னவாறு கண் விழித்தவன், தன்முன் வியர்வை வழியும் முகத்துடன், கைகள் நடுங்க நின்ற திவ்யாவைத்தான் அங்கே கண்டான்.

“ச...ச...ச..சாரி.., க்..க்...க்..கை....”, அவளால் சொல்லவே முடியவில்லை.

வேகமாகத் திரும்பி வெளியே செல்லப் போனவளின் கையைப் பிடித்து தடுத்தான். திவ்யா இன்னும் அதிர்ந்து திரும்ப, அவனோ அவள் கைகளைப் பார்த்தவாறே, “நான் ஒரு ரெண்டே நிமிஷம் உன்னோட பேசணும்.....”, சொல்லிவிட்டு அமைதியாக இருந்தான்.

அவன் கையைப் பிடித்திருக்கும் விதத்தை ஆராய்ந்து கொண்டிருந்தாள் திவ்யா. அவன் திவ்யாவின் கரங்களை அழுத்திப் பிடிக்கவில்லை. மாறாக..., தன் விரல்களை வட்டமாக சேர்த்து வைத்து, அந்த வட்டத்துக்குள் அவள் கை சிக்கியிருந்தது அவ்வளவே.

அவள் அமைதியாக இருக்கவே, "நான் மனுஷன்தான்...., மிருகம் இல்லை...., என்னைப் பாத்து ஏன் இப்படி பயப்படுற...? நானும் உனக்குப் பிடிக்காத மாதிரி நடந்துக்கக் கூடாதுன்னு எவ்வளவோ ட்ரை பண்ணுறேன்.....

ஆனால், அதனால் உன்னோட நடத்தையில் எந்த மாற்றமுமே இல்லையே ஏன்...? உனக்கும் கண்ணனுக்கும் பாட்டா(bata) ஷூ சத்தம் பிடிக்கலன்னு, அதைக் கூடப் போடாமல், ஸ்போர்ட்ஸ் ஷூ போடுறேன்.

"என் பார்வை உங்களுக்கு ஏதாவது சங்கடத்தைக் கொடுக்குமோன்னு...., பார்க்கக் கூட இல்லை. ராத்திரி நீங்க நிம்மதியா தூங்கணும்னு, நைட் என் வேலை எல்லாம் முடிச்சுட்டு வந்தாலும்...., நீ தூங்காமலே முழிச்சு இருக்கியே ஏன்...?

"அன்னைக்கு மட்டும் இல்லை, இன்னைக்கும் சொல்லுறேன்..., உன் அனுமதி இல்லாமல் என் மூச்சுக் காற்று கூட உங்க மேல படாது. என் நிழல் விழும் நெருக்கத்துக்கு நான் உங்க கிட்டே வர மாட்டேன்...

"இதுக்கு மேல நான் என்ன செஞ்சால் உன்னோட இந்த பயம் போகும்...? ஒருத்தி என்னைப் பார்த்தாலே அருவருத்து, தேளாய் கொட்டி, என்னை ஒரு மனுஷனா கூட மதிக்காமல், ஒரு புழுவைப் பாக்குற மாதிரி பாத்து..... ஒதுக்கி வச்சா.

"நீ.... நீ..... நான் வாசலுக்கு வருவேன்..., நீ கிச்சன்ல நிப்ப...., ஆனா உன்னோட உடல்மொழி எனக்குச் சொல்லும்...., அடேய் மடையா அவளுக்கு நீ வாறதே பிடிக்கலடான்னு....,

நானும் என்னோட நடை, பேச்சு, பார்வை, எதுவுமே உன்னைத் தீண்டாத அளவில் நடந்துக்கறேன்.

“அப்படி இருந்தும்...., உன்னோட இந்த பயம்...., முத்தண்ணா கிட்டே பேசுற, கணேஷ் கிட்டே பேசுற...., ஆனால் நான் வந்த உடனே...., விறைச்சுப் போயடுறியே ஏன்...? அவங்க கிட்டே பேசினால் நான் ஏதாவது சொல்லுவேன்னு பயப்படுறியா?

“கட்டுன பொண்டாட்டியை சந்தேகப் படும் அளவுக்கு நான் பேடி இல்லை. நான், என்னை எவ்வளவு நம்புறேனோ அதே அளவு உன்னையும் நம்புறேன். உன்னோட நம்பிக்கையை சம்பாதிக்க நான் என்ன செய்யணும்னு சொல்லு?...

“இதுவரை உன்னைப் பேர் சொல்லிக் கூட கூப்பிட பயம்..., எங்கே அந்த அழைப்பே உன்னைக் காயப் படுத்திடுமோ, எதையாவது ஞாபகப் படுத்திடுமோன்னு பயப்படுறேன்.... இதுக்கும் மேல நான் என்னதான் செய்யட்டும்?

“எனக்கு நிஜமாத் தெரியலை...., எனக்கு மட்டும் கல்யாண வாழ்க்கை சரியாவே அமையாதா..? இல்ல, எனக்கும், எனக்கு மனைவியா வரும் உறவுக்கும் ஒத்தே வராதா? உயிரா நினைக்கும் ஒரு உறவு பொய்யா போகும் வலி இருக்கே.....

“என்னால் தாங்க முடியலை...., உன்னோட இந்த பயம்....., எனக்கு ரொம்ப வலிக்குதுடா...., ப்ளீஸ் நான் வேண்ணா எங்கேயாவது வெளிநாடு போயிடவா..., ஒரு ரெண்டு வருஷம் கழிச்சு வாறேன்... அப்போ நீ இயல்பா இருப்பியா.... யோசிச்சு சொல்லு...”, தன் மனதில் இருக்கும் அனைத்தையும் கொட்டிக் கவிழ்த்தான்.

அவளது பயம் போக்க தான் வெளிநாடு ஓடிப் போனால் சரியாக வருமா? என்பதைப் பற்றி அவன் யோசிக்கவே இல்லை. அவனுக்கு திவ்யாவின் பயம் விலக்குவது மட்டுமே முக்கியமாக இருந்தது. அவளை யோசிக்கச் சொல்லிவிட்டு, அறையிலிருந்து வெளியேறினான்.

அவன் பேசப் பேச திவ்யாவின் கண்கள் கலங்கி, கண்ணீர் வெளியேறியதை அவன் கவனிக்கவே இல்லை. அப்படி அவளைப் பார்த்திருந்தால் அவன் தெளிந்திருப்பானோ?

திவ்யாவின் மனமோ அவனது பார்வை தன்னை காயப்படுத்தக் கூடாது என்பதால் தான் அவன் தன்னைப் பார்க்கவே இல்லையா...? அவன் தன்னைப் பெயர் சொல்லி அழைத்தால்...., பழைய நினைவு வந்து அவளை அலைக்கழிக்கும் என்று, தன் பெயரை உச்சரிக்கக் கூடத் தயங்குகிறானா?

‘இது எப்படிப் பட்ட அன்பு...., அவன் கோட் சூட்டுடன், ஸ்போர்ட்ஸ் ஷூ போட்டுச் செல்லும் மர்மம் இதுதானா? எனக்காகவா..? ‘கல்யாண வாழ்க்கை தனக்கு மட்டும் சரியாகவே அமையாதா? தனக்கும் தன் மனைவிக்கும் ஒத்தே போகாதா..? உயிரா நினைக்கும் ஒரு உறவு பொய்யா போகும் வலி இருக்கே’..... இதைச் சொன்ன பொழுது அவனது குரலில் தெரிந்த வலி.....

அப்போ நானும், அவருக்கு ஒத்துப் போகாத மனைவின்னு முடிவே பண்ணிட்டாரா? அவர் அப்படி நினைக்கும்படியாகவா நான் நடந்து கொள்கிறேன்?’, அவளால் அதை நம்பவே முடியவில்லை. தனது தயக்கமும், பயமும், தன்னை மீறி வெளிப்படும் பதட்டமும் தான் அவனை இவ்வளவு விலக்கி வைத்திருக்கிறது என்பதை அறிந்து கவலை கொண்டாள்.

இறுதியாக அவன் சொன்ன, ‘வெளிநாடு போய் விடுகிறேன்’ என்ற சொல்...., அவரை விட்டுவிட்டு நான் தனியாகவா....? அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. ஆனாலும் அவனிடம் நெருங்கிச் செல்லத் தடுக்கும் இந்த பயத்தை, அவ்வளவு சுலபமாக விட்டுவிட முடியும் என்பதும் அவளுக்கு சந்தேகம் தான்.

தான் உறங்காததற்கு அவன்மேல் இருக்கும் பயம்தான் காரணம் என்று அவன் நினைப்பதை அவளால் தாங்கவும்

முடியவில்லை. அதன் பிறகுதான், அவன் தலை வலியுடன் இருந்தது உறைக்க, அவனைத் தேடிச் சென்றாள்.

அவள் கீழே இறங்கி வரும் வேளை, அவன் குழந்தைகளோடு விளையாடுவது தெரிந்தது. “செல்லங்களா...., வந்துட்டீங்களா? தாத்தா எங்கே...? தாத்தாவைப் படுத்தாமல் இருந்தீங்களா?”, கேட்டவாறு இறங்கி வரும் திவ்யாவைப் பாராமல் பார்த்தான் ஜீவா.

ஜீவாவின் பாராமுகம் தன்னை வருத்தினாலும், பேச இது சரியான நேரமில்லை என்பது புரிய அமைதியாக இருந்தாள். “அம்மா நான் ஐஸ்கிரீம் கேக்கவே இல்லை....., கண்ணா தான் தாத்தாட்ட கேட்டான்...”, அஞ்சலி வேகமாகச் சொல்ல, கண்ணன் திருதிருத்தான்.

“அம்மா...., கண்ணா இல்ல...., அஞ்சலிதா.....”, அவன் அஞ்சலியை கைக் காட்டினான்.

இருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் குற்றம் சொல்ல, ஜீவா தலையை இன்னும் அழுந்தப் பற்றிக் கொண்டான்.

“கண்ணா...., அஞ்சுமா....., அப்பாவுக்கு ரொம்ப தலை வலிக்குது...., அதனால் நீங்க உங்க ரூமுக்குப் போய் விளையாடுங்க சரியா?”, சொன்னவாறு குழந்தைகளை அனுப்பினாள்.

“அப்பாவுக்குத் தலை வலிக்குதா....? நான் தைலம் எடுத்துட்டு வாறேன்.., அப்பாவுக்குத் தலைவலி வந்தால் நான்தான் தைலம் தேச்சு விடுவேன். தலைவலி ஓடியே போய்டும்..”, அறைக்குத் தைலம் எடுக்க ஓடியவாறே சொல்லிச் சென்றாள் அஞ்சலி.

கண்ணன் அவளோடு போகவா வேண்டாமா என்று யோசிக்க, “கண்ணா நீ போய் விளையாடும்மா....”, திவ்யா அவனை விளையாடப் போகச் சொன்னாள்.

ஆனால் கண்ணனோ விளையாடப் போகாமல், திவ்யாவின் கால்களை கட்டிக் கொண்டான். அவன் செய்கையைப் பார்த்த ஜீவா, “கண்ணா அப்பாகிட்டே வாடா....”, அழைக்க, “நீ.. நீ.. அடிப்ப..., நான் மாட்டேன்...”, திவ்யாவின் கால்களுக்கு மத்தியில் முகத்தைப் புதைத்துக் கண்டான்.

“அப்பா என்னைக்காவது உன்னை அடிச்சு இருக்கேனா..? ஏம்மா இப்படிச் சொல்லுற...?”, ஸோபாவில் இருந்து இறங்கி, கண்ணன் அருகில் மண்டியிட்டு, மெல்லிய சோகம் இழையோடக் கேட்டான். கண்ணன் அவனைத் திரும்பிப் பார்த்தவன், “நா(ன்) விளையாடப் போறேன்”, சொல்லிவிட்டு ஓடிவிட்டான்.

கண்ணன் ஓடிவிடவே, மண்டியிட்டவாறே, தலை குனிந்து அமர்ந்திருந்தான். தன் காலுக்கு அருகில் அவன் மண்டியிட்டு அமர்ந்திருப்பது புரிய, “எழுந்து மேலே உக்காருங்க... அவன் சின்னப் பையன், ஏதோ பழைய ஞாபகத்தில் அப்படிச் சொல்லிட்டான்...., சீக்கிரமே உங்களைப் புரிஞ்சுப்பான்..”, ஜீவா வருந்துவது பிடிக்காமல் சொன்னாள்.

“பெரியவங்களுக்கே புரியாதப்போ...., சின்னப் பையனைச் சொல்லி என்ன செய்ய....? ஆனாலும்...., அவன் என்னைக்குதான் என்னை ‘அப்பா’ன்னு கூப்பிடுவான்னு ரொம்ப ஏக்கமா இருக்கு. இதுவரை அவன் என்னை ‘அப்பா’ன்னு ஒருமுறைக் கூடக் கூப்பிடலை...”, மெல்லிய ஏக்கம் இழையோடியது அவன் குரலில். சொல்லிவிட்டு எழுந்து ஸோபாவில் அமர்ந்துகொண்டான்.

இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதியாக இருந்தாள். அந்த நேர அமைதியைக் கலைத்தது அஞ்சலியின் வருகை. “அப்பா...., வந்துட்டேன்....”, சொன்னவாறு, ஸோபாவில் அவன் அருகில் ஏறி நின்றுகொண்டாள்.

தன் தளிர் விரல்களால் தைலத்தை எடுத்து விட்டு, ஜீவாவின் தலையை சோபாவில் சாய்த்தாள். அவன் நெற்றியில் தைலத்தை தேய்க்க, “அஞ்சும்மா...., அம்மா, அப்பாவுக்குத் தைலம் தேய்க்கிறேன்..., நீ போய் கண்ணன் எங்கேன்னு பாத்துட்டு வாறியா..?”, மெதுவாகக் கேட்டாள்.

“நீங்க தேய்ப்பீங்களா...? உங்களுக்குத் தேய்க்கத் தெரியுமா...? இப்படி எடுத்து இப்படித் தேய்க்கணும்....”, பெரிய மனுஷியாக அவளுக்கு செய்து காட்டினாள்.

“சரிங்க பாட்டியம்மா...., நீங்க சொன்ன மாதிரியே செய்யிறேன்...”, சொல்லிவிட்டு அவள் கரங்களில் இருந்து தைல பாட்டிலை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பினாள்.

அஞ்சலியிடமிருந்து ஒரு வேகத்தில் வாங்கி விட்டாலும், அவனை நெருங்க, தொட, மிகுந்த தயக்கமாக இருந்தது. ஜீவாவோ தனக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்பதுபோல் அமைதியாக இருந்தான்.

ஒரு பெண்ணின் மௌனம் வேண்டுமென்றால் சம்மதத்தின் அறிகுறியாக இருக்கலாம். ஆனால் ஒரு ஆணின் மௌனம் அழுகை, வெறுப்பு, அவமானம், தோல்வி இப்படி ஏதாவது ஒன்றின் வெளிப்பாடே..., எங்கேயோ படித்தது நினைவில் வந்து இம்சித்தது.

‘இல்லை.... ஜீவாவின் திருமண வாழ்க்கை எப்பொழுதும் தோல்வியை மட்டுமே கொடுக்கும் என்பதை, அவன் மனதில் இருந்து மாற்ற வேண்டும். அதற்குத் தன் தயக்கம் தடையாக இருக்குமென்றால் அதை உடைப்பதென முடிவெடுத்தாள்.

முடிவெடுத்த பிறகு அவனை நெருங்குவது சுலபமாக இருந்தது. சோபாவின் பின்னால் சென்று, அவன் அருகில் நெருங்கினாள். ஏற்கனவே அஞ்சலி தேய்த்திருந்த தைலம் திட்டு திட்டாக அவன் நெற்றியில் இருக்க, மென்மையாக அதை ஜீவாவின் நெற்றிப் பரப்பில் தேய்த்தாள்.

அவள் விரல்களில் இருந்த நடுக்கம் ஜீவாவுக்குத் தெரிந்தாலும் அமைதியாகவே அமர்ந்திருந்தான். அவன் நெற்றியை, அவனது கலைந்த முடி மறைக்க, இடக்கையால் அதை மெதுவாக விலக்கிவிட்டு, வலக்கையால் கொஞ்சம் இன்னும் அழுத்தம் கொடுத்துத் தேய்த்தாள்.

எவ்வளவுதான் தடுத்தாலும் சில உணர்வுகள் மேலெழுவதைத் தடுக்க முடிவதில்லை...., அப்படித்தான் அன்று வித்தார்த்துக்குத் தலை வலி என்று கத்தியவாறு வீட்டையே இரண்டு படுத்தியதும், கண்ணனை இழுத்துப் போட்டு அடித்ததும், காபி தா, மாத்திரை தா, இப்படியாத் தேய்ப்பாங்க....

இப்படியாகத் துவங்கிய அவனது பேச்சு சென்று நின்ற இடம்...., அவனும் ஆண் மகன்தான், இவனும் ஆண் மகன்தான். இருவருக்கும் எவ்வளவு வித்தியாசம். திவ்யாவின் கண்கள் வெளியேற்றத் துடித்த வென்னீரை, இமைகளைச் சிமிட்டி அடக்கினாள்.

ஆனால் படுத்திருந்த ஜீவாவின் கடைவிழியோரம் வழிந்த நீர்...., அவள் கைகளின் செயல்பாட்டைத் தேக்கியது. 'என்னங்க..., ரொம்ப எரியுதா...? ரொம்பத் தலை வலிக்குதா..? தாங்க முடியலையா...?', சாதாரணமான தம்பதிகளாக இருந்தால், இப்படியான கேள்விகள் சகஜமாக வந்திருக்கும்.

இருவருக்குமே தெரியும் அந்தக் கண்ணீரின் உண்மையான அர்த்தம். திவ்யாவிற்கு அவன் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் சொல்ல, ஒரு பெண்ணாக, மனைவியாக செய்ய ஆசைதான்..., ஆனால் அடி மனதில் இருக்கும் 'தர்ஷிணி'யால் அது முடியவே முடியாது.

ஆழ்ந்து மூச்சு விட்டவள், "சூடா டீ எடுத்துட்டு வாறேன். அதுக்கு முன்னாடி டேப்லட் எடுத்துக்கறீங்களா...?", மெல்லியக் குரலில் கேட்டாள்.

சோபாவின் சாய்வில் இருந்து தலையை நிமிர்த்தியவன், “இல்ல நான் ஒரு ஒன்ஹவர் படுத்துக்கறேன். சாப்பிட எழுப்பு....”, சிவந்திருந்த தன் விழிகளை அவளுக்குக் காட்டாமல் பதில் சொன்னான்.

அவன் அறைக்குச் செல்லலும் வேளையில் அங்கே வந்த கண்ணனும் அஞ்சலியும் அவன் முகத்தைப் பார்த்து ஒவ்வொரு விதமாக நினைத்தார்கள். “அப்பா ரொம்பத் தலை வலிக்குதா...? மருந்து கண்ணில் பட்டுடுச்சா...? கண்ணெல்லாம் சிவப்பா இருக்கு..”, அஞ்சலி அவனிடம் கேள்வி கேட்க, கண்ணனோ தன் தாயைப் பார்த்தான்.

திவ்யா கண்ணனின் பார்வையைப் புரிந்துகொண்டு சோபையாகச் சிரித்தாள். அவள் சிரிப்பில் ஜீவனே இல்லாததைக் கண்டவன், ஜீவாவும் அழுதிருக்கிறான் என்பதுவும் சேர, எதுவோ சரியில்லையோ என எண்ணத் தோன்றியது.

அதை என்னவென்று கேட்கத் தெரியாமல், ஜீவாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு மாடியேறினான். கண்ணனாக அவனைத் தொடுவானே தவிர, ஜீவாவைத் தொட அனுமதிக்க மாட்டான். இப்பொழுதும் அதுவே நடக்க, படுக்கையில் விழுந்தவன், “அப்பா தூங்கப் போறேண்டா செல்லங்களா...., நீங்க அம்மா கூட இருக்கீங்களா...?”, ஜீவா கேட்க இருவரும் திவ்யாவிடம் வந்தார்கள்.

குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு கிச்சனுக்குள் சென்றாள். “என்னம்மா எப்போ பாத்தாலும் ரெண்டு பேரையும் சேர்த்தே தூக்கி வச்சுக்கற, கை வலிக்கப் போகுது. அஞ்சலியை என்கிட்டே கொடும்மா”, அவர் அஞ்சலியை வாங்க முயல,

“நான் அம்மாகிட்டதான் இருப்பேன்...., வரமாட்டேன் போங்க”, உடனே திவ்யாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

“சரி சரி..., நீ யார்ட்டையும் போக வேண்டாம். இப்படி மேடையில் உக்காந்து அம்மா செய்யிறதைப் பாரு, ஓகே”, சொல்லிவிட்டு இருவரையும் கிச்சன் மேடையில் விட்டாள்.

“நல்லப் புள்ளைங்கம்மா.....”, கேலி போல் சொன்னாலும், திவ்யா இரு குழந்தைகளையும் வித்தியாசம் பாராமல் நடத்துவது, அவருக்கு மிகுந்த நிம்மதியையே கொடுத்தது எனலாம். கூர்ந்து பார்த்தால், கண்ணனை விட, அஞ்சலியை அதிக வாஞ்சையாக நடத்துவதும் புரியும்.

இரவு உணவுக்கு சப்பாத்தியும், குருமாவும், கொண்டைக்கடலை மசாலாவும் செய்துவிட்டு, டேபிளில் எடுத்து வைத்தார்கள். “அஞ்சலி... போய் அப்பாவைக் கூட்டிட்டு வாறியா?”, கேட்கும் முன்னர் ஓடிவிட்டாள் அஞ்சலி.

திவ்யா கிச்சனில் சென்று தண்ணீர் எடுத்துவரச் செல்ல, அப்பொழுதுதான் ஜீவா தலைவலியில் உறங்குவதும், அஞ்சலி வழக்கமாக அவனை எழுப்பும் விதத்தில் எழுப்பினால், அவனது தலைவலி அதிகரிக்குமே என்ற சிந்தை வர, வேகமாக மாடியேறினாள்.

அங்கே அவள் கண்ட காட்சி, ஜீவா தன் மகளை எவ்வளவு பொறுப்பாக வளர்த்திருக்கிறான் என்பதை அவளுக்குப் பறை சாற்றியது.

தணிவு - 8

கண்களும் மனமும்

உன்னைத் தொடர்வதை

நிறுத்த முடியவில்லை என்னால்.....

இதை நீ உணரும் காலம் எப்பொழுது.....

விடுமுறை தினங்களிலோ, சில நேரம், மாலையில் அலுவலகம் விட்டு வரும் ஜீவா ஓய்வாக கண்களை மூடி, உறக்கமா, விழிப்பா என்று அறியாத நிலையில் இருக்கும்போது, அஞ்சலி அவனை எழுப்ப, ஓடிப் போய், ஜீவாவின் மேல் விழுந்து விடுவாள்.

திடீரென ஏற்படும் அதிர்ச்சியில் ஸ்தம்பித்து விழித்தாலும், விழுவது தன் மகள்தான் என்று தெரிவதால், அவனும் அவளோடு சேர்ந்து விளையாடவே செய்வான். அதேபோல் இன்றும் செய்துவிடக் கூடாதே என்ற பயத்தில் வேகமாக மாடியேறினாள் திவ்யா.

திவ்யா அறைக்குள் நுழைந்து பார்க்கும்போது, அஞ்சலி கட்டிலில் பூனை போல் ஏறி, ஜீவாவைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அதன் பிறகு மெதுவாக...., “அப்பா....”, அவன் கையைப் பிடித்து அசைக்க, ஜீவாவோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

கவலையாக அவனைப் பார்க்க, “அஞ்சும்மா..., என்ன அப்பா எழுந்துக்கலையா....? கொஞ்சம் சத்தமா கூப்பிடு...”, திவ்யா அவளை ஊக்கினாள்.

“அப்பாக்குத்தான் தலை வலிக்கின்னு சொன்னாங்களே..., இப்போ எழுப்பினால் அவங்களுக்கு இன்னும் வலிக்கும்....”, பத்து வயதுப் பிள்ளையின் பக்குவம் அவளிடம்.

திவ்யாவிற்கும் அவள் சொல்வது புரியாமல் இல்லை. அவன் மத்தியான சாப்பாட்டையும் சாப்பிடவில்லை,

மாலையில் டீ கூட குடிக்கவில்லை...., இரவும் சாப்பிடவில்லை என்றால் அவன் உடல்நிலை என்னத்துக்கு ஆகும்..? கொண்டவளின் தவிப்பு அவளிடம்.

“இல்லம்மா அப்பாவுக்கு பசிக்கும் இல்ல..., அப்பா சாப்பிட்டு படுத்துக்கட்டும், எழுப்புடா செல்லம்...”, திவ்யாவின் கெஞ்சல் அஞ்சலியைக் கொஞ்சம் இளக்கியது. “ம்ம்..., சரி...., “அப்பா...., அப்பா...”, கொஞ்சம் உலுக்கவே, மெதுவாகக் கண் விழித்தான்.

“சாப்பிட வாங்க...., சாரி, நீங்க மதியமும் எதுவும் சாப்பிடலை..., அதான் எழுப்ப வேண்டியதாப் போச்சு...”, ஒதுங்கி நின்று அவனிடம் சொன்னாள்.

“நான் கொஞ்சம் பிரெஷ்ஷப் பண்ணிட்டு வரேன்..., நீங்க ரெண்டுபேரும் போங்க...”, சொல்லிவிட்டு, டவலை எடுத்துக் கொண்டு பாத்ரூம் சென்றான்.

திவ்யா அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு கீழே வர, கண்ணன் சாப்பாட்டு மேசை அருகே, கால்களைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருப்பதும், முத்து கையைப் பிசைந்தவாறே நிற்பதும் தெரிந்தது.

இதயம் ஒருமுறை நின்று துடிக்க, படிகளில் ஓடினாள் திவ்யா. “கண்ணா....”, ஒற்றை அழைப்பில் அவன் அருகில் சென்று, அவனை வாரி அணைத்துக் கொண்டாள். “ஏண்டா கண்ணா...? என்னமா ஆச்சு...? ஏன் இப்படி உக்காந்து இருக்க...? ஐயா என்ன ஆச்சு...?”, கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு, இன்றுதான் கண்ணன் இப்படி அமர்ந்திருப்பதைப் பார்க்கிறாள்.

இங்கே ஏதாவது அவனுக்குப் பிடிக்காதது, மனம் வருந்துமாறு நடந்துவிட்டதோ என துடித்துப் போனாள். “என்னன்னு தெரியலம்மா, நீங்க ரெண்டுபேரும் மாடியேறிப் போனதும், அப்படியே உக்காந்துட்டான்..., நானும் எவ்வளவோ கேட்டுப் பாத்துட்டேன் அசையவே இல்லை...”, முத்து கலக்கமாகச் சொன்னார்.

“கண்ணா..., அம்மாகிட்டே சொல்ல மாட்டியாடா...? என்னம்மா ஆச்சு....? ஏன் இப்படி உக்காந்து இருந்த..? அம்மாவுக்குத் தாங்க முடியலடா கண்ணா...”, திவ்யாவின் குரல் தழுதழுக்கவே, “நீ அஞ்சுவ மட்டும் அனுப்புன...., அப்போ நா(ன்)....”, முதல் முறையாக கோபம் என்ற உணர்வை வெளிப்படுத்தினான் கண்ணன்.

அதிலும் ஜீவாவை எழுப்ப, அஞ்சலியை மட்டும் அனுப்பியதற்கு கோபித்துக் கொண்டு, அமர்ந்து இருக்கிறான். அப்படியென்றால் கண்ணன் ஜீவாவை மனதளவில் முழுமையாக ஏற்றுக் கொண்டு விட்டான் என்பதுதானே இதன் பொருள்.....

“என் செல்லக் கண்ணா...., அப்பாவை எழுப்ப அஞ்சுவை மட்டும் அனுப்பினேன்னு கோபமா...? அப்படியாடா கண்ணா...?”, கண்களில் நீர் நிறைய, உடலெல்லாம் சிலிர்ப்பு ஓட, எதிர்பார்ப்பாகக் கேட்டாள்.

“ஆமா....”, அதையும் கோபமாகவே ஒத்துக் கொண்டான். “என் செல்லக் கண்ணா....”, சொன்னவாறு அவனை அணைத்து முத்தமழை பொழிந்தாள். அஞ்சலியும் கை வளைவிலேயே இருக்கவே, அவளையும் முத்தமிட்டாள்.

இருவரையும் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, “இனிமேல் அம்மா ரெண்டுபேரையும் சேர்த்து அனுப்புறேன் சரியா..., சாரிடா கண்ணா...”, அவள் குழந்தைகளுக்கு சரியாக கீழே அமர்ந்துகொண்டு, அவர்களை அணைத்துக் கொண்டு அமர்ந்திருந்த கோலம், அங்கே வந்த ஜீவாவின் கண்களில் விழுந்தது.

திவ்யாவோ, இப்படி ஒரு நிம்மதியை வாழ்நாளிலேயே உணர்ந்ததில்லை என்பதுபோல் சந்தோஷத்தின் உச்சியில் இருந்தாள். அதிலும், தன் மகன் கண்ணன்..., ஜீவாவுக்காக கோபம் கொண்டது....., அவனது உரிமையான செய்கை...., அவளை, அந்த நிமிடத்தை ரசிக்க வைத்தது.

முத்து, நடந்த விஷயத்தை ஜீவாவிடம் சொல்ல, ஜீவாவும் சந்தோஷமாக உணர்ந்தான். “கண்ணா, இனிமேல் நீயே அப்பாவை எழுப்புவியாம் சரியா...? வாடா செல்லம்....”, அதே சந்தோசத்தோடு அவனை அழைத்தான்.

ஆனால் கண்ணனோ, ‘வர மாட்டேன்’ என்று வேகமாக தலையசைத்தான். கண்ணன் தன்னிடம் வரவில்லை என்றாலும், மனதளவில் அவன் தன்னை நெருங்கியதே போதும், என்பதுபோல் அமைதியாக விலகினான் ஜீவா.

சாப்பாட்டு மேசையில் ஜீவாவின் இரண்டு பக்கமும் குழந்தைகள் அமர்ந்திருக்க, திவ்யா சப்பாத்தியை பரிமாறினாள். “நீயும் உக்காரு...”, அவளை நிமிர்ந்தும் பார்க்காமல் அவன் சொல்ல, ‘இன்னும் ஏன் இப்படி இருக்கிறார்?’, என்ற யோசனையோடு அமர்ந்து சாப்பிட்டாள்.

படுக்கை அறைக்குச் சென்ற திவ்யாவை வரவேற்றது குழந்தைகளின் ரைம்ஸ் சத்தமே....., டிவியில் டைம்ஸ் ஓடிக் கொண்டிருக்க, அதோடு சேர்த்து அவர்களும் பாடிக் கொண்டிருந்தார்கள். நேரம் பத்து மணியை நெருங்கியிருக்க, குழந்தைகளை அதட்டிப் படுக்க வைத்தாள்.

குழந்தைகள் உறங்கிவிட்டார்கள். ஆனால் அவளுக்குத்தான் வழக்கம்போல் உறக்கம் வரவில்லை. ஜீவா, மணி பன்னிரண்டை நெருங்கும் வேளையில், அவள் உறங்கியிருப்பாள் என்ற எண்ணத்தில் அறைக்கு வர, இரவு விளக்கின் ஒளியில் அவள் உறங்காமல் இருப்பது அவனுக்குத் தெரிந்தது.

‘இவ்வளவு சொல்லியும் தூங்காமல் இருக்காளே....’, கோபம் வர, திரும்பிச் செல்ல முயன்றான். அவன் வருகைக்காகவே காத்திருந்தவள், அவன் வந்த வேகத்தில் திரும்பிச் செல்வதைப் பார்த்தவள்,

“ப்ளீஸ்....”, அவளது ஒற்றைச் சொல் அவனை நிறுத்தியது. அவள் எழுந்து அமர்ந்தாள்.

அவன் உள்ளே வந்து அமர்வான் எனக் காத்திருந்தவள், அது நடக்காமல் போகவே, “நீங்க நினைக்கிற மாதிரி, நான் உங்களுக்கு பயந்து முழிச்சுட்டு இருக்கலை....., எனக்குத் தூக்கம் வரலை...., வராது...., எப்பவுமே அப்படித்தான்.. ப்ளீஸ் நீங்க வந்து தூங்குங்க”, அவள் சொல்லவே, சரேலென திரும்பி அவளைப் பார்த்தான்.

திவ்யாவின் முகமோ வேதனையைச் சுமந்துகொண்டிருந்தது. ஜீவா நிதான நடையுடன் வந்து, அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்தான். நேரம் நிமிடங்களாகக் கடக்க, இருவருமே படுக்காமல் அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

ஜீவாவிற்கு அவளது நிலையைப் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனாலும் தொடர்ந்து பேச, ஏதோ ஒரு தயக்கம் அவனை அழுத்தியது. அதைத் தவிர்த்துவிட்டு, “ஏன் அப்படி...?”, லேசாக அவள் பக்கம் முகத்தைத் திருப்பிக் கேட்டான்.

என்னவென்று சொல்வாள்...., கண்களை மூடினால் இருட்டாக இருக்கு, அந்த இருட்டு எனக்கு பயத்தை கொடுக்கிறது என்று...., அமைதியாகவே இருந்தாள்..., அவளிடம் பதில் இல்லாமல் போக..., “சரி படுத்துக்கோ...., வேண்ணா டிவி பாரு...., புக்ஸ் படிப்பியா, நாளைக்கு வாங்கிட்டு வாறேன்..., நேரம் போகாதே...”, இரவில் ஒற்றையாக விழித்திருப்பது எவ்வளவு கொடுமையென்று அவனுக்குத் தெரியாதா என்ன?

இருவரும் படுத்துவிட்டார்கள்....., ஜீவா படுத்த வேகத்தில் மூன்று மணிவரை நன்றாக உறங்கிவிட்டான். மூன்று மணிக்கு விழிப்பு வர, அவன் தலையைத் தூக்கிப் பார்க்க, ஒருக்களித்துப் படுத்து, கண்ணனின் முகத்தையே அவள் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதன் பிறகு ஜீவாவால் தூங்க முடியவில்லை. திவ்யா விழித்திருக்க, தான் உறங்குவது சரியாகப் படவில்லை. ஜீவா விழித்தது, தன்னைப் பார்த்துவிட்டு படுத்தது, என அனைத்தையும் உணர்ந்தும் அமைதியாகவே இருந்தாள் திவ்யா.

எதேச்சையாக பார்க்கும்போது, ஜீவாவும் உறங்காமல் இருப்பதைப் பார்த்தவள், “எனக்கு முழிச்சிருக்குறது பழக்கம்தான்...., நீங்க தூங்குங்க...., நாளைக்கு ஆபீஸ் வேற போகணுமே...”, தனக்காக அவனும் விழிப்பது அவளுக்கு என்னவோபோல் இருந்தது.

“உனக்குப் பழக்கம்ன்னா இனிமேல் நானும் பழகிக்கறேன்...”, நிதானமாகச் சொன்னான்.

இதற்கு என்ன சொல்வாள்? ஒரு பக்கம் வருத்தமாக இருந்தாலும், தனக்காக ஒருத்தன் இப்படி இருப்பது பெரிய ஆறுதலை அளித்தது. பாலைவன மணலில் கொதிக்கும் வெயில் சூட்டில், சின்ன நிழல் கிடைத்தால் எப்படி இருக்கும்.....

அப்படி இருந்தது திவ்யாவிற்கு. நேரம் ஐந்து மணி ஆகியது. என்றைக்குமே இருவரும் ஐந்து மணிக்கே எழுந்து விடுவார்கள். அவன் தோட்டத்தில் ஓட, அவள் குளிக்க, இல்லையென்றால் அவன் ஓடுவதை வேடிக்கைப் பார்க்க, அவன் ராக்கில் இருக்கும் அவனது பழைய புகைப்படங்களைப் பார்க்க என அவளது காலைகள், அவளுக்கான சில சுவாரசியங்களை சுமந்திருக்கும்.

உறங்கும் போது ஜீவா அருகிருக்க வேண்டும், காலையில் அவன் ஓடுவதை ஜன்னலைத் திறந்து வைத்துப் பார்க்க வேண்டும், அவனது பழையப் புகைப்படம்...., அவளுக்குப் பிடித்த அந்த ஒற்றைப் புகைப்படம், அவளது அலமாரிக்கு இடம் மாறி இருந்தது இப்பொழுது.

அவனை நினைக்கும்பொழுதெல்லாம்...., அந்த வசீகர மீசையும் சேர்ந்தே அவள் நினைவுக்கு வரும். அதிலும்,

அவளுக்குக் குழந்தையில் இருந்தே மீசை பிடிக்கும் என்பதாலோ என்னவோ..., அந்தப் புகைப்படத்தை விடவே மனமில்லை.

அந்தப் புகைப்படத்தில் கூட அவனது மீசையை தொட்டுப் பார்க்க அவளால் இன்றுவரை முடியவில்லை. என்னவோ,மனதுக்குள் குறுகுறுப்பாக ஒரு உணர்வு அவளை அழுத்தும். அது அவள் கைகளைக் கட்டிப் போட்டது. அந்தப் புகைப்படத்தையே முழுங்கும் அளவு பார்ப்பது..... அதற்கு இணை எதுவும் இல்லை.

இந்தச் செயல்கள் அனைத்துமே, அவள் ஜீவாவை, அவன் உறவை ஏற்பதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் அவள் அதை உணரவே இல்லை....., மனதளவில் கூட இருவரும் இன்றும் விலகித்தான் இருந்தார்கள்.

திவ்யாவிற்கு ஒன்று மட்டும் புரிந்தது...., இனிமேல் ஜீவா இல்லாமல் தன்னால் இருக்க முடியாது. ஆனால் அவனை நெருங்கவும் முடியாது என்பதுவும் சேர்ந்தே தோன்றுவதுதான் விந்தை. அவள் மனதில் இடம் பிடித்த, அவள் மனதைத் தொட்ட முதல் ஆண்மகன்....

இவையெல்லாம் ஜீவாவுக்குத் தெரியவே இல்லை. அவனைப் பொறுத்தவரை திவ்யாவை நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். முன்பு அவள் பட்ட துன்பங்கள் ஒரு சதவீதம் கூட, அவனால் அவள் படக் கூடாது.

மனதளவில் கூட தான் அவளை துன்பப்படுத்திவிடக் கூடாது என்பது மட்டுமே அவன் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். ஆனாலும் அவளது அமைதி, அனுசரணை, தனக்கு சாப்பாடு பரிமாறுவது, அக்கறையாக சாப்பாடு கட்டிக் கொடுப்பது, தனது துணிகளை துவைத்து, மடித்து பராமரிப்பது அனைத்தும் பிடிக்கும்.

வீட்டிற்கு வந்தவுடன் கண்பார்வையில் அவள் உருவம் விழவேண்டும், அப்படி இல்லை என்றால், அவள் விழித்திரையில் விழும்வரை, அவன் கண்கள் அலைபாயும்.

அவளைக் கண்டுவிட்டால் போதும்,
அமைதியடைந்துவிடும்.

தன்னிடம் பேசவில்லை என்றாலும் குழந்தைகளோடு சரிக்குச் சரியாக விளையாடுவது, வாயடிப்பது, பாவனையாக ரைம்ஸ் சொல்லிக் கொடுப்பது என அனைத்தும் பிடிக்கும்.

இந்த வீட்டில் அவள் இருக்க வேண்டும், அது மட்டும் போதும் அவனுக்கு. இந்தக் கட்டத்தைத் தவிர, அதற்குமேல் அவன் சிந்திக்கவே இல்லை. தனக்கு அவள் தோழியா? மனைவியா? தோழமையா? தாயா? இவை அனைத்துமா? ஒரு நொடியும் அவன் சிந்தித்தது இல்லை.

அவர்களது வாழ்க்கை இப்படியே இருப்பது ஒன்றும் அவனுக்கு வருத்தமாகவே இல்லை. அவள் நிம்மதியாக இருக்க வேண்டும்..., அவன் இப்படி நினைப்பதே அவள்மேல் இருக்கும் நேசத்தால்தான் என்பதை அவன் சிந்திப்பானா?

அன்று காலையில் எழுந்து மில்லுக்குக் கிளம்பும் பொழுதே ஜீவா கொஞ்சம் நிலையான மனநிலையில் இல்லாததாகத் தோன்றியது திவ்யாவிற்கு. அவன் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தாள். அவளது பார்வைகள் தன்னைத் தொடர்வதைக் கூட உணராமல், இயந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

சாப்பாட்டு மேசையில் இரண்டு இட்லிகளை விழுங்கியவன், மூன்றாம் இட்லியை சாப்பிட முடியாமல் எழுந்துவிட்டான். அவன் மனதை, எந்த விஷயம் அரிக்கிறது என்று தெரிய திவ்யாவின் மனம் தவித்தது.

இதுவரை அவன், தனியாகத் தவித்ததும், தடுமாறியதும் போதும். நான் இருக்கையில், அவர் ஏன் தனியாக பாரம் சுமக்க வேண்டும்? என்னிடம் சொன்னால் அவருக்குக் கொஞ்சம் ஆறுதலாகவாவது இருக்குமே.

கேள் கேள் என்று அவள் மனம் அவளை விரட்ட, இதழ்களோ இறுக மூடிக் கொண்டு சண்டித்தனம் செய்தது. அவளது இப்போதைய தயக்கத்துக்குக் காரணம், அவள் கொஞ்சம் இயல்பாக அவனை நெருங்க முயல, அவனோ அதைக் கண்டுகொள்ளவே இல்லை.

அவளிடம் பேசும் வார்த்தைகள் அளந்தே இருக்கும். அப்படியே இருந்தாலும், சுவற்றைப் பார்த்தோ, அவள் கரங்களைப் பார்த்தோ, இல்லையா, அவன் கையில் இருக்கும் பைலில் தலையை நுழைத்துக் கொண்டோ சொல்வான்.

அவனது இந்தப் பழக்கத்தை எப்படி மாற்றவென்று அவளுக்குத் தெரியவில்லை. அதைச் செயல்படுத்த, முதலில் அவனிடம் பேசவேண்டும். அப்படியே பேசினாலும், தான் சொன்னால், எதற்கு என்ற கேள்வி வந்தால் என்ன சொல்வாள்.

அந்த வித்தார்த் செய்து வைத்த வேலையால்....., நல்லதோ கெட்டதோ, இயல்போ, இயல்புக்கு மாறோ...., கொண்டவனிடம் எதைப் பேசலாம், எதைப் பேசக் கூடாது எதுவுமே தெரியவில்லை. பேச பயமாகவும் இருந்தது.

இவ்வளவு குழப்பத்திலும், தானும் கிளம்பி, குழந்தைகளையும் கிளப்பி, ஜீவாவுக்குத் தேவையான அனைத்தையும் எடுத்து வைத்துவிட்டு, பள்ளிக்குச் செல்ல, காரிலும் ஏறியாகி விட்டது. கணேஷ், அவர்களோடு செல்வதைக் குறைத்துக் கொண்டான்.

காலையில் சீக்கிரம் கிளம்பிச் சென்று, ஹேமா கையால் காபி குடிப்பது முதல், ப்ரேக்பாஸ்ட் சாப்பிட்டு முடித்துவிட்டு வந்து கிளம்பி, அவனது பைக்கில் அலுவலகம் சென்றுவிடுவான். காரில் குழந்தைகளின் பேச்சு மட்டுமே இருந்தது.

அவளைப் பள்ளியில் இறக்கி விட்டான். இறங்கியவளோ கொஞ்சம் தயங்க, காரைத் திருப்பப் போனவன், அதை

நிறுத்திவிட்டு, ஸ்டியரிங்கிலேயே பார்வையைப் பதித்தவாறு அசையாமல் இருந்தான்.

அவன் என்னவென்று கேட்டாலாவது, அவள் 'என்னப் பிரச்சனை' என்று கேட்டிருப்பாள். ஆனால் அவனோ, அவள் எதையோ கேட்க வந்து தயங்குவதுபோல் இருக்க, தன் சம்மதத்தை வழங்கவே பேசாமல் நின்றிருந்தான்.

இருவரும் பேச்சற்று இருக்க, "என்ன தம்பி, ஏதாவது சொல்லணுமா? காரை நிறுத்தி இருக்கவே என்னன்னு கேக்கலாம்னு வந்தேன்...", தங்கம் திருமண விஷயமாக ஏதாவது பேச வந்திருகின்றானோ என்று நினைத்து கேட்டார்.

"இல்லம்மா, பத்திரிகை எல்லாம் எல்லோருக்கும் கொடுத்தாச்சு, மண்டபம் சாப்பாடு எல்லாம் அரேஞ் பண்ணிட்டேன். உங்களுக்கு ஏதாவது வழக்கம் இருக்கான்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்..., ஏதாவது இருக்கா...? சொல்லணுமா..?", அவர் வந்துவிடவே அந்த நேரம் தோன்றிய ஒரு காரணத்தைச் சொன்னான்.

பேசியவாறே காரில் இருந்து இறங்கி விட்டிருந்தான். இவர்கள் பேசத் துவங்கவே, திவ்யா எதுவும் சொல்லாமல் திரும்பி நடந்துவிட்டாள். எதுவாக இருந்தாலும் வீட்டில் அவனிடம் கேட்டுக் கொள்ளலாம் என விட்டுவிட்டாள்.

ஜீவாவும், அவனது மில்லில் இருக்கும் பிரச்சனை பற்றியே உழன்றுக் கொண்டிருந்ததால், திவ்யா என்ன கேட்க வந்திருப்பாள் என்ற சிந்தை அத்தோடு அறுந்து போனது. தங்கத்திடம் பேசிவிட்டு, அலுவலகம் சென்றுவிட்டான்.

இன்னும் ஒரு வாரத்தில் ஹேமா கணேஷ் திருமணம். அதற்கான வேலைகள் மிகவும் பரபரப்பாக நடந்துகொண்டிருந்தது. நகைகள் ஏற்கனவே ஹேமாவுக்கு நிறைய இருந்ததால், பட்டுப்புடவை, கணேஷுக்கு சூட் எடுப்பது, என கடைசி கட்ட வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

அன்று காலையில் வாக்கிங் போய்விட்டு வந்து செய்தித்தாளில் அவன் மூழ்கி இருக்க, அஞ்சலி வேகமாக ஓடி வந்து, “அப்பா அம்மாவுக்கு என்னமோ ஆயிடுச்சு.., ரொம்ப அழறாங்க சீக்கிரம் வாங்க...”, படிகளில் தடதடவென ஓடி வந்து, வீடே அதிரும் குரலில் அவள் சொல்ல, கையில் வைத்திருந்த செய்தித் தாளைத் தூக்கிப் போட்டுவிட்டு அவளைக் காண ஓடினான் ஜீவா.

அங்கே.....

தணிவு - 9

எனக்குள் சில அதிர்வலைகள்

அதிர்வுகளில் துடிக்கின்றேன் நான்

அதற்குக் காரணம் - நீ

உணர்வாயா அதை.....

அன்றும் வழக்கமான காலைப் பொழுதாகத்தான் விடிந்தது ஜீவாவுக்கு. ஆனால் அஞ்சலி ஓடி வந்து சொன்ன விஷயத்தைக் கேட்டவன், கையில் வைத்திருந்த செய்தித்தாளை மடித்து வைக்கக் கூடப் பொறுமை இல்லாமல் தூக்கிப் போட்டுவிட்டு, அவள் வந்ததை விட வேகமாக மாடியேறினான்.

திவ்யா படுக்கையில் படுத்து, முகம் வேதனையைப் பிரதிபலிக்க, கைகள் தலையணையை இறுகப் பற்றியிருக்க, இதழ்களை மடித்துக் கடித்தவாறு கண்களை இறுக மூடிப் படுத்திருந்தாள். கண்ணன் அவள் அருகில் அமர்ந்து, அவள் முகத்தை வருடிக் கொண்டிருந்தான்.

திவ்யா தலைக்குக் குளித்திருப்பது, அவளது விரித்துவிட்ட கூந்தலில் இருந்து தெரிந்தது. ‘குளித்துவிட்டு, தலையைக் காய வைக்காமல் இப்படிப் படுத்தால் சளி பிடிக்குமே...., என்ன இது...?’, நொடியில் அவளைத் தலைமுதல் கால்வரை அளவெடுத்தான்.

“என்ன ஆச்சு கண்ணா...?”, ஜீவாவின் குரல் கேட்கவே, சட்டென எழுந்து அமர்ந்தாள். “அம்மா...., அம்மா....”, எனச் சொன்னவன், கீழுதட்டைத் துறுத்தி, இரு கைகளையும் விரித்து,‘தெரியவில்லை’ எனச் சொன்னான்.

“அம்மா உங்களுக்கு என்னம்மா ஆச்சு...? ஏன் அழுதீங்க...?”, அஞ்சலி அவளிடம் விடாமல் கேட்டாள்.

“எனக்கு ஒண்ணும் இல்லடா செல்லங்களா...., அம்மா நல்லா தான் இருக்கேன்...., அம்மாக்கு கொஞ்சம் தலைவலி

அதான்...., நீங்க பால் குடிச்சீங்களா? வாங்க போய் பால் குடிக்கலாம். ஸ்கூல்க்கு டைம் ஆகுது இல்ல...", கொஞ்சம் சங்கடத்துடன் நகர்ந்து கட்டிலில் இருந்து கீழே இறங்கினாள்.

இப்பொழுது ஜீவா அவளையேப் பார்க்க, அவளோ அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். "தலை வலின்னா பிறகு ஏன் தலைக்குக் குளிச்ச...?", தன்னைத் தாண்டிச் செல்லும் அவளிடம் வேகமாகக் கேட்டான்.

"சும்மாதான்....", தரையைப் பார்த்து பதில் சொன்னவள், அவன், மேலே எந்தக் கேள்வியும் கேட்கும் முன்னர் அங்கிருந்து நகர்ந்தாள்.

கிச்சன் சென்றவள், முத்துவிடம் சொல்லி குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் தயாரிக்கச் சொன்னவள், குழந்தைகளை ப்ரெஷ் செய்துவிட்டு வரச் சொன்னாள். அவர்கள் நொடியில் வந்துவிடவே, அதை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, ஜீவாவிற்கு ஓட்ஸ் கொடுத்தாள்.

எப்பொழுதும் சாதாரணமாக, ஈடுபாட்டோடு செய்யும் அவள் செயல்களில் எல்லாம்...., இன்று ஒரு இயந்திரத் தன்மையைப் பார்த்தான். புருவம் நெரிய அவளையே கவனிக்க, அவள் நடை தள்ளாடுவதும், சில நேரம் நின்று, வலியைத் தாங்குபவள் போல் செயல்படுவதையும் பார்த்தான்.

குழந்தைகள் முன்பு அவளிடம் எதையும் அதட்டிக் கேட்க முடியவில்லை அவனால். எனவே அடுத்த அரைமணி நேரத்தில் குழந்தைகளைக் குளிக்க வைத்தவன், இருவருக்கும் உடை மாற்றிவிட்டு, "நான் இவங்களை ஹேமாகிட்டே விட்டுட்டு வாறேன்", சொல்லிவிட்டு அவர்களை அழைத்துச் சென்றான்.

அவன் பின்னாலேயே ஓடி வந்து, "அவங்க இன்னும் சாப்பிடலை...", அவள் சொல்ல, "அதெல்லாம் அவ பாத்துப்பா...", கோபமாகச் சொல்லிவிட்டுச் சென்றான்.

“நானும் இன்னும் கிளம்பலை...., எதுக்கு இவ்வளவு அவசரமா...”, “உன்னை நான் வந்து கூட்டிப் போறேன்”, அவள் பேச்சைத் தடுத்தது அவனது பதில்.

பள்ளிக்குச் சென்றவன் ஹேமாவிடம் சொல்லிக் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு, நொடியில் திரும்பினான். வீட்டிற்கு வந்தவன் திவ்யாவைத் தேட, அவள் கீழே எங்கேயும் இல்லை.

“முத்து..., அவ எங்கே...?”, வேகமாகக் கேட்டான்.

“நீங்க போன உடனே ரூமுக்குப் போய்ட்டாங்க தம்பி...., இன்னைக்கு காபி கூடக் குடிக்கலை...”, கவலையாகச் சொன்னார்.

“நீங்க ஒரு டம்பளர் டீ தாங்க...”, அவர் போட்டவுடன் அதை வாங்கிக்கொண்டு மாடியேறினான்.

படுக்கையறைக்குள் நுழைய, திவ்யா முகத்தை தலையணையில் புதைத்தவாறு, சுருண்டு படுத்திருப்பது தெரிந்தது.

“உனக்கு என்ன பண்ணுது...?”, அவன் குரல் அருகில் கேட்க, தலையணையில் இருந்து முகத்தைத் திருப்பி அவனைப் பார்த்தாள். காலையில் கண்ட அதே வலி, அவள் முகத்தில் மிச்சமிருந்தது.

“இருங்க நான் உங்களுக்கு டிபன் எடுத்து வைக்கிறேன்..., நானும் நொடியில் கிளம்பிடுறேன்...”, அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல் கீழே போக முயன்றாள்.

“அப்போ சொல்ல மாட்ட....”, அவன் குரல் முதுகின் பின்னால் கேட்க, “சொல்லுற மாதிரி எதுவும் இல்லை...”, சங்கடமாகச் சொன்னாள். சொல்லிவிட்டு அங்கிருந்து நகராமல் அப்படியே நின்றாள்.

“இந்த டீயாவது குடிப்பியா இல்லை...”, அவன் கேட்கவே, தனக்காக அவன் கொண்டுவந்த டீயை வேண்டாம் என்று சொல்ல அவள் என்ன முட்டாளா? அதிலும் தனக்காக தன் கணவன் கொண்டு வந்தது, அவன் கையில் இருந்து பிடுங்கி ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

மனமெல்லாம் தித்தித்தது....., இப்படி ஒரு நிகழ்வு தன் வாழ்நாளில் நடக்குமென்று அவள் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. அப்படி இருக்கையில் இப்படி ஒரு நிகழ்வு நடக்கும் பொழுது...., அந்த டீ கப்பையே பார்த்தவாறு நின்றாள்.

ஜீவாவுக்கோ அவள் காரணம் சொல்லாததில் வருத்தம் இருந்தாலும், தான் கொண்டுவந்த டீயை ஒரே மூச்சில் குடித்தது பெரிய ஆறுதலைக் கொடுத்தது. அதே நேரம், அந்தப் ப்ரியா தான் கொடுத்த ஜூசை சுவற்றில் விசிறி அடித்ததும் நினைவிலாடியது. அவன், மேலே எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் கோபம் புரிந்தாலும், தனக்கு வயிறு வலிக்கிறது, மாதாந்திரப் பிரச்சனைதான் என்று அவனிடம் சொல்ல, நாணம் தடுத்தது. சாதாரணமாக அவனிடம் பேசவே அவ்வளவு தயக்கம் இருக்கும் போது, இதை எப்படி அவனிடம் சொல்வாள்.

ஜீவா அலுவலகத்துக்குச் செல்லக் கிளம்பப் போகவே, திவ்யா அவனுக்கு டிபன் எடுத்து வைக்கச் சென்றாள். அவன் கிளம்பி கீழே வந்தவன், சாப்பிட அமராமல், ஷூ போடச் சென்றான்.

‘என்ன இது , சாப்பிடாமல் ஷூ போட மாட்டாரே..., அப்போ சாப்பிடாமலே வெளியே போகப் போறாரா...?’, வேகமாக அவனை நெருங்கினாள்.

“என்ன அதுக்குள்ளே ஷூ போட்டுட்டீங்க..., சாப்பிடல...?”, கேள்வியாகக் கேட்டாள்.

“எனக்கு வேண்டாம்...”, கத்தரிப்பதுபோல் பேசினான். அவன் அவ்வாறு பேசவே, முதல் முறையாக அவன் அவளிடம் இப்படி கோபப் படுவதால், சட்டென அவள் கண்கள் நிறைந்தன. அதைப் பார்த்தவன் துடித்துப் போனான்.

“ப்ளீஸ்...., அழாதே...., நீமட்டும் என்மேல் இவ்வளவு அக்கறையா இருக்க. நான் உன்மேல் கொஞ்சம் அக்கறை காட்டக் கூடாதா. நான் கேட்பதுக்கு பதிலே சொல்ல மாட்டேன்னு சொன்னால் நான் என்னதான் செய்யட்டும்”, சோர்ந்தவன்போல் கேட்டான்.

அந்த நேரம் கணேஷ் அங்கே வரவே, “நாம ரூம்ல போய் இதைப் பற்றி பேசலாம்..”, கணேஷ் நெருங்கும் முன் வேகமாகச் சொன்னாள்.

ஜீவா பனிச் சாரலில் நனைந்தவன்போல் திளைத்தான். அவனது மனைவி, தங்களுக்குள் நடக்கும் சிறு பேச்சு கூட, மூன்றாம் மனிதர் அறியக் கூடாது என்று நினைக்கின்றாளே..., இதை எண்ணும்போதே சிலிர்த்தது.

“வாங்கண்ணே சாப்பிடுங்க....”, திவ்யா அழைக்க, “இல்ல தங்கச்சி..., இப்போதான் ஹேமா கையால் சாப்பிட்டு வாறேன். எனக்கு இன்னைக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கு, அதான் நான் சீக்கிரம் போகணும். ஜீவா, அந்த டீலரை இன்னைக்குப் பாக்கணும், முக்கியமான விஷயம் மறந்துடாதே”, இருவரிடமும் பேசிவிட்டு, இங்கிதம் அறிந்து அங்கிருந்து நகர்ந்தான்.

ஜீவாவும் கணேஷும் இப்பொழுது ஒருமையில் பேசிப் பழகினார்கள். கணேஷ் சென்றவுடன், “முதல்ல சாப்பிடுங்க மத்ததெல்லாம் பிறகு...”, சின்னக் கண்டிப்புடன் சொல்ல, சந்தோஷ மனநிலையிலேயே அவள் பின்னால் சென்றான்.

அவனிடம் ஒரு வேகத்தில் சொல்லிவிட்டாலும், எப்படிச் சொல்வது என்று தெரியாமல், வார்த்தைகளுக்குத் திண்டாடினாள் திவ்யா. அவளது பதட்டம், சாப்பாடு

பரிமாறுவதிலும் தெரிந்தது. ஜீவாவோ அதைக் கண்டுகொள்ளாமல், அவளிடம் விஷயத்தைத் தெரிந்துகொண்டே ஆகவேண்டும் என்று இருந்தான்.

ஜீவா, திவ்யாவையும் கட்டாயப் படுத்தி சாப்பிட வைத்தான். பின்னர் இருவருமே ஒன்றாக அறைக்குச் சென்றார்கள். திவ்யா கைகளைப் பின்னிக் கொண்டு, கட்டிலில் அமர்ந்திருந்தாள். அவளைவிட்டு கொஞ்சம் தள்ளி நின்றிருந்தான் ஜீவா.

திவ்யா மனதுக்குள் வார்த்தைகளைக் கோர்த்துக் கொண்டிருக்க, ஒரு பக்கம் வயிற்று வலிவேறு உயிர் போனது. அவளுக்கு இப்பொழுது சில மாதங்களாகத்தான் இந்த வயிற்றுவலி வருகிறது. இந்த மாதம்தான் தாங்க முடியாத அளவு இருந்தது.

“உடம்புக்கு என்ன செய்யிதுன்னு சொல்லதுக்கு எதுக்கு இவ்வளவு தயக்கம்...? நான் வேண்ணா திரும்பிக்கவா, அப்போவாவது சொல்லுவாயா?”, அவன் குரலில் கொஞ்சம் சூடு ஏறத் துவங்கியது.

‘ஹையோ...., உங்ககிட்டே விஷயத்தை எப்படி சொல்லங்குறதுதான் என் பிரச்சனை, நீங்க இல்லை’, மனம் தவித்தது.

“ம்ச்....”, அவன் சலித்துப் போனான்.

“இல்ல...., இது...., வழக்கமா இருக்குறதுதான்...”, முனகினாள்.

“எது...?”, புருவம் தூக்கிக் கேட்டான்.

‘ஆண்டவா....’, மனதுக்குள் நொந்து போனாள். ஆனாலும் அவனிடம் சொல்வதற்குள் என்ன ஆவோமோ என்றும் எண்ணினாள்.

“இப்படிக் கேட்டால் நான் என்ன சொல்லட்டும்...”, தலை குனிந்துகொண்டாள்.

“நீ தெளிவா சொல்லாததற்கு நான் பழியா...?”, வார்த்தையாடுவது அவனுக்குப் பிடித்திருந்தது. ஏதோ ஒரு சுவாரசியம்.....

“இல்ல...., அது....”, காற்றுதான் வந்தது.

“இதேதான் கொஞ்ச நேரமா சொல்லுற. விஷயத்தைச் சொல்லு”.

“இப்போ உங்களுக்குத் தெரியணும் அதானே...., எனக்கு மாதாந்திரப் பிரச்சனை...., அதனால் வயிறு வலிக்குது போதுமா...”, படபடவென பொரிந்துவிட்டாள்.

சத்தியமாக, அவளிடமிருந்து இப்படி ஒரு பிரச்சனையையும், பதிலையும் எதிர் பார்க்காதவன் “ஞே” என விழித்தான். திவ்யாவோ அவனிடமிருந்து எந்தச் சத்தமும் இல்லாமல் போகவே, மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்க்க, அவன் முழியையும், முக பாவனையையும் பார்த்து சிரிப்பு வந்தது.

அதை அடக்காமல் மெல்லியதாகச் சிரித்தும் வைத்தாள். அவள் சிரிக்கவே, ‘இப்படி ஒரு காரணம் இருக்கும்னு நான் நினைக்கவே இல்லையே. சொல்லிட்டு சிரிக்கவேற செய்யிறா’, இப்பொழுது அவன் நொந்து போனான்.

அவனுக்கு இப்படி ஒரு விஷயம் உண்டு என்று தெரியும். ஆனால், ப்ரியா வந்த உடனேயே கருவுற்று விட்டதால்..., இதைப் பற்றி அவனுக்குத் தெளிவாகத் தெரியாது. இல்லையென்றாலும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு எதுவும் தெரிந்திருக்கவும் வாய்ப்பு இல்லைதான்.

வீடு முழுக்க வேலைக்காரப் பிள்ளைகள், தாய் இருந்திருந்தாலும், காலையில் வேலைக்குச் சென்று

இரவில் வீடு திரும்பும் அவனுக்கு, இதைப்பற்றி எப்படித் தெரியும்?

தன்னை நிதானப்படுத்திக் கொண்டவன், “இப்போ நான் ஏதாவது செய்யணுமா..?”, சங்கடமான பார்வை பார்த்தவாறே கேட்டான்.

‘இதில் இவர் என்ன செய்ய முடியும்...?’, அவளுக்குள் யோசனை ஓடினாலும், அவனது இந்த அனுசரணை பிடித்திருந்தது.

“அது மூணு நாளில் சரியாப் போய்டும்..., நீங்க ஆபீஸ் கிளம்புங்க. என்னையும் அப்படியே ஸ்கூல்ல விட்டுடுங்க”, சொன்னவாறு படுக்கையில் இருந்து எழுந்தாள்.

“என்னது ஸ்கூல் போகப் போறியா...? அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்...., மூணு நாளும் வீட்டிலேயே இரு..., நான் அவங்ககிட்டே உனக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லிடுறேன்”, சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் செல்லத் திரும்பும் வேளை, “அம்மா...”, என்ற திவ்யாவின் குரல் வேதனையாகக் கேட்கவே, “நீ என்னமோ எப்பவும் இருக்குறதுன்னு சொன்ன, இப்போ என்னன்னா இப்படி வலியில் துடிக்கிற, எப்பவும் இப்படித்தான் வலிக்குமா?”, கடிந்தவாறே, அக்கறை கலந்து கேட்டான்.

“அப்படியில்லை இப்போதான் கொஞ்ச மாசமா....”, “கொஞ்ச மாசமாவா...? ஹாஸ்பிடல் போனியா இல்லையா?”.

“ம்ச்... இதுக்கெல்லாமா ஹாஸ்பிடல் போவாங்க..., நான் போகலை...”, சாதாரணமாகப் பேச்சு வந்தது இருவருக்கும்.

“அதெல்லாம் முடியாது...., இப்போ உடனே என்னோட ஹாஸ்பிட்டல் வாற, அவங்க எதுவும் பிரச்சனை இல்லன்னு சொல்லட்டும் நான் ஒத்துக்கறேன். முதல்ல நீ வா...”, அவளைக் கட்டாயபடுத்தி அழைத்தான்.

திவ்யா எவ்வளவோ மறுத்தும், அவளது மறுப்புக்கள் பரிசீலிக்கப் படாமலேயே போனது. உடனடியாக மருத்துவரைத் தொடர்புகொண்டு, அப்பாயின்ட்மென்ட் வாங்கினான். ஒருவன் என்னவென்றால்..., வீட்டு விலக்காகும் அந்த மூன்று நாளும், தன்னை நாயைவிடக் கேவலமாக நடத்தினான்.

அவன் அருகில் கூடச் செல்லவோ, அவனுடன் அறையில் இருக்கவோ அனுமதிக்க மாட்டான். இங்கே மற்றொருவன் என்னடாவென்றால், நான் ஏதாவது செய்ய வேண்டுமா என்று உருகுகிறான்.....

இப்படி உருகும் இவனது அன்பை முதலில் பெற்ற ப்ரியாவின் மேல், முதல் முறையாகப் பொறாமை தோன்றியது. இவன் அவளைத்தான் முழு மனதோடு நேசித்தான், அவள் காதலுக்காகத் தவமிருந்தான், அவமானங்களைச் சகித்தான்,

இப்படி ஒருவனின் காதலை உதறிவிட்டுச் செல்ல அவளுக்கு எப்படி மனம் வந்தது? காரில் அவன் அருகில் இருக்கையில், இவனது இந்த அன்பைப் பெறுவதற்காகவாவது, இப்படிப் பல வலிகளை நான் தாங்கத் தயார் என அவளது மனம் சொன்னது.

எனவே அவ்வளவு வலியிலும், அவள் முகம் இப்பொழுது வேதனையில் சுருங்கவில்லை, மாறாக, அந்த நொடியை, அவன் அக்கறையை, அருகாமையை இனிமையை ரசித்தாள்.

ஹாஸ்ப்பிட்டல் வந்து கார் நின்ற பிறகும், விழி மூடி அமர்ந்திருக்கும் அவளை, ஒரு நொடி சலனமே இல்லாமல் பார்த்தான். இப்படி மோன நிலையில் இருக்கும் அவளது உருவம் அவன் நெஞ்சில் பதிந்து போனது.

இதுவரை அவளை இவ்வளவு நெருக்கத்தில் அவன் பார்த்ததே இல்லை. அவ்வளவு ஏன்...? அவள் முகத்தை அவன் ஏறிட்டே பார்க்காத பொழுது, எப்படி அவளை

நெருக்கத்தில் பார்ப்பது? இப்படியே இருந்துவிடவே அவனுக்கும் தோன்றியது.

அவளையேப் பார்த்துக் கொண்டிருக்க, மூடியிருந்த அவள் விழிகள் சுருங்குவதைப் பார்த்த பிறகுதான், அவள் வயிற்று வலியில் இருக்கிறாள், அவளுக்காகத் தான் இங்கே வந்திருக்கிறோம் என்ற நினைவே வந்தது அவனுக்கு.

“ஹாஸ்பிட்டல் வந்துடுச்சு....”, அவன் சொல்லவே, காரில் இருந்து இறங்கினாள்.

ஹாஸ்பிட்டலைப் பார்த்தவள் திகைத்தாள். “இது....?”, கேள்வியாக அவனைப் பார்த்தாள்.

“இதுதான் எங்க பேமிலி டாக்டரோட ஹாஸ்பிட்டல்...., அவ கிட்டே பேசிட்டேன் நீ வா....”, அவளை அழைத்துக் கொண்டு உடன் நடந்தான்.

‘இது இவரோட பேமிலி டாக்டர் ஹாஸ்பிடலா..? அப்போ.... அப்படின்னா...?’, அவள் இதயம் தனது துடிப்பை அவளுக்கு உணர்த்தியது.

அவனிடம் எதையும் காட்டாமல், அவனுடன் நடந்தாள். “Dr. புனிதா..”, பெயர்பலகையின் முன்னால் அவன் நிற்க, நொடியில் அவளுக்கு எதுவோ புரிவதுபோல் இருந்தது.

ஜீவா அனுமதிவாங்கி உள்ளே நுழைய, புனிதாவைப் பார்த்த திவ்யாவின் இதயம் ஒருநொடி நின்று பிறகு துடித்தது.

தணிவு - 10

உன் மனதை நானறிந்த நிமிடம்

என் வாழ்வில் பொன்னான தருணம்

இனி நம் வாழ்வில் வசந்தம் வருமா?

இல்லை இழுபறி நீடிக்குமா.....

விடையறியா வினா?

ஜீவா, இது தங்களது குடும்ப ஹாஸ்பிடல் என்று சொன்னபொழுதே அதிர்ந்தவள், அவன் Dr. புனிதா என்ற பெயர்ப் பலகையின் முன்னால் நின்றபொழுது திகைத்தாள். ஆனாலும் ஒரு ஹாஸ்பிடலில் ஒரு புனிதாதான் இருக்க வேண்டுமா என்ன? என்று சிந்தித்தவள்,

ஜீவா அழைத்துச் சென்ற அறைக்குள் அமர்ந்திருந்த புனிதாவைப் பார்த்தவள் திகைத்தாள்.
திகைத்ததென்னவோ திவ்யா மட்டுமே. டாக்டர் புனிதாவோ சாந்தம் தவழும் முகத்துடன் மெல்லிய சிரிப்புடனும் மாற்றமே இல்லாமல் அவளைப் பார்த்தாள்.

“வா நந்தா..., சாரி வா ஜீவா...., எப்படி இருக்க? கல்யாணத்துக்குக் கூட ஒரு வார்த்தைக் கூப்பிடவே இல்லை. ஃபோன்ல விஷயம் சொன்னதோட சரி. வீட்டுக்கு ஒருநாள் விருந்துக்கு வான்னு சொன்னால் கேட்டியா நீ.

“இப்போ பார்..., கடவுளா பாத்து உன் பொண்டாட்டியை என் கண்ணில் காட்டிட்டார் பாத்தியா? இதுதான் பெரியவங்க சொன்னால் கேக்கணும்...”, தான் அவனுக்கு மருத்துவர் மட்டுமல்ல, குடும்ப நண்பர் என்பதையும் உணர்த்தினாள்.

இவர்கள் இப்படி வழக்கடிக்க, புனிதாவுக்குத் தன்னைத் தெரிகிறதா? என்ற யோசனையுடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவளோ இவளைப் பார்க்கவே

இல்லை. திவ்யாவின் மனதின் ஓரம் சின்னக் குறுகுறுப்பு. அதை ஒதுக்கிவிட்டு, அவர்கள் பேச்சில் கவனமானாள்.

“அப்போ உன்னோட சதியால்தான் என் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லாமல் போச்சா...? இரு இரு கோர்ட்ல கேஸ் போடுறேன்”, அவனும் சளைத்தவன் இல்லை என்று காட்டினான்.

“ரொம்ப சந்தோசமா இருக்குடா...., உன்னை இப்படிப் பாக்கதுக்கு..., வா வா...., வாங்க வந்து உக்காருங்க..., அதைக் கூடச் செய்யாமல், இவனைப் பார்த்த சந்தோசத்தில் வம்பளந்துட்டு இருக்கேன்”, மன்னிப்பை வேண்டியவாறு அவர்களை அமரச் சொன்னாள்.

“இப்போவாவது தோணிச்சே...., வா உக்காரு...”, இருக்கையை திவ்யாவிற்குத் தள்ளிப் போட்டுவிட்டு, அவனும் ஒரு இருக்கையில் அமர்ந்தான்.

அவன் செய்கையைப் பார்த்த புனிதா, “நந்தா..., ஓ..., சாரி சாரி..., ஜீவா...., நீ மாறவே இல்லடா...”, குரலில் ஒரு நெகிழ்வு.

“உனக்கு ஜீவான்னு சொல்ல வரலன்னா நந்தன்னே சொல்லு, எதுக்கு ரெண்டையும் போட்டு குழப்புற? சரி என்ன சொல்லுற...? எனக்குப் புரியலை”, ஜீவா புரியாமல் கேட்டான்.

“அதெல்லாம் உனக்குப் புரிய வேண்டாம்...., சரி உங்க பேர்..., ம்ம், திவ்யா...., சொல்லுங்க திவ்யா உங்களுக்கு என்ன செய்யிது சொல்லுங்க?”, தயக்கமாக ஜீவாவைப் பார்க்கப் போனவள், அதை விடுத்து, தன் உடல்நிலையைப் பற்றி சொன்னாள்.

“அப்போ ஒரு ஏழெட்டு மாசமா, உங்களுக்கு ப்ளீடிங்கும் அதிகமா இருக்கு, அதே நேரம் வயிற்று வலியும் அதிகமா இருக்கு இல்ல... சரி உள்ளே வாங்க செக் பண்ணுறேன்”, சொல்லிவிட்டு, பக்கத்து அறைக்குக் கூட்டிச் சென்றாள்.

பரிசோதனை முடித்து வெளியே வந்தவளின் புருவம் யோசனையாக சுருங்கி இருந்தது. “நான் ஒரு ஸ்கேன்க்கு எழுதித் தாறேன். அதை எடுத்துட்டு வந்துடுங்க, மீதியைப் பிறகு பேசலாம்”, அவள் சொல்லவே இருவரும் வெளியே வந்தார்கள்.

ஸ்கேன் எடுக்கக் காத்திருக்கும் வேளை, “என்னங்க..., உங்களுக்கு ஏதோ மீட்டிங் இருக்குன்னு அண்ணா சொன்னாரே..., நீங்க போங்க, இதை நான் முடிச்சுட்டு வந்துடுறேன்”, அவள் சொல்ல, அவளை சூடாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, திரும்பிக் கொண்டான்.

அவன் பதில் சொல்லாமல் போகவே, “என்னங்க....”, அவள் மெதுவாக அழைக்க,

“நான் உன்கூட இருக்குறதில் உனக்கென்ன கஷ்டம்..., உனக்குப் பிடிக்கலன்னா சொல்லு நான் எழுந்துப் போய்டுறேன்”, கோபம் கொப்பளித்தது அவன் குரலில்.

பத்து மாதம், தனி ஆளாக வயிற்றுப் பிள்ளையோடு அலைந்தது நினைவிலாடி இம்சித்தது. அவன் தோள் சாயவேண்டும்போல் இருந்தது. அவள் தோள் சாய்ந்தால் அவன் தடுக்கபோவது இல்லைதான், ஆனால் தயக்கம் அவளை விடவில்லை.

பழைய நிகழ்வுகளை நினைத்து அவள் கண் கலங்க, “உன்னைத் தனியா விட்டுட்டுப் போக மனசு வரலை...., நான் இருக்குறது உனக்குப் பிடிக்கலையா...”, அவன் மனமும் சேர்ந்து கலங்கியது.

“உங்க வேலை....”, அவள் தயக்கமாக இழுக்க, “அதை நான் இன்னொரு நாள் கவனிச்சுக்கறேன். உடம்புக்கு வந்ததை எப்படி இன்னொரு நாள் தள்ளி வைக்க முடியும்?”, அவன் கேட்க அமைதியாகிவிட்டாள்.

ஸ்கேன் எடுக்க அவளை அழைக்கவே, உள்ளே சென்றாள். புடவையைத் தளர்த்திவிட்டு படுக்கச் சொல்லவே, திவ்யா

தயங்கினாள். அவள் தயக்கம் உணர்ந்து, அங்கிருந்த செவிலி வந்து, “சொல்லுறதைச் செய்ங்க, நேரமாகுது...”, அவள் கட்டாயப் படுத்த வேறு வழியில்லாமல், புடவையைத் தளர்த்திவிட்டுப் படுத்தாள்.

அவள் அடிவயிற்றைப் பார்த்த மருத்துவரும், செவிலியும் திகைத்தார்கள். ஆனாலும் அவர்களது அதிர்ந்த முகத்தை நொடியில் கண்ட திவ்யா, இமைகளை மூடிப் பேசாமல் இருந்தாள். ஸ்கேன் எடுத்து முடிந்ததும் வெளியே வந்தாள்.

ஜீவாவின் அருகில் சென்று அமர, “என்ன ஆளு சார் நீங்க....? இப்படியா நடந்துப்பாங்க....”, சொல்லிவிட்டு, வெறுப்பாக முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றுவிட்டாள்.

ஜீவா திகைத்தான், திவ்யா மறுத்து சொல்லும் முன்பே...., அவள் அங்கிருந்து சென்றுவிட்டிருந்தாள். “சாரி...., அவங்க ஏதோ தப்பா நினைச்சுட்டு....”, “சரி விடு....”, அவனும் அதை அத்தோடு விட்டுவிட்டுச் சென்றுவிட்டான்.

திவ்யாவிற்கு அதன் பிறகுதான் உடலில் இருக்கும் காயத் தழும்புகள் பூதாகரமாகத் தெரியத் துவங்கியது. சோர்ந்துபோய் அமர்ந்துவிட்டாள். இவ்வளவு நேரம் சாதாரணமாக இருந்தவள் இப்பொழுது சோர்ந்து போனதன் காரணம் தெரியாமல் குழம்பினான்.

அதன் பிறகு புனிதாவைச் சென்று பார்க்க, “இந்த ஸ்கேன் ரிப்போர்ட் வச்சு என்னால் உறுதியா எதையும் சொல்ல முடியலை. எதுக்கும் உங்க பீரியட்ஸ் முடிஞ்சதும், மறக்காமல் என்னை வந்து பாருங்க. இப்போ பெயின் குறையவும், ப்ளீடிங் கட்டுக்குள் வரவும் மாத்திரை தாறேன்”, சொல்லிவிட்டு மருந்தெழுதிக் கொடுத்துவிட்டு, அவர்களை அனுப்பினாள்.

திவ்யா வரும்போது இருந்த மனநிலைக்கு எதிரான நிலையில் இருந்தாள். அந்த நர்ஸ் சொன்ன பிறகுதான் இவ சரியில்லை, அப்போ அதில்தான் ஏதோ விஷயம்

இருக்கு. திவ்யாவின் மனநிலையைச் சரியாகக் கணித்தான் ஜீவா. ஆனால் என்னக் காரணம் என்றுதான் தெரியவில்லை.

வீட்டுக்கு வந்த திவ்யா பாத்ரூம் சென்று ஒருமூச்சு அழுது தீர்த்தாள். தண்ணீர் திறந்து விட்டிருந்ததால் அந்தச் சத்தத்தில் அவளது அழுகைச் சத்தம் முதலில் அவனுக்குக் கேட்கவில்லை. ஆனால் நேரம் செல்லச் செல்ல அவளது அழுகை அவனுக்குக் கேட்டது.

நம் உடலில் படும் சிலக் காயங்களின் தழும்புகள் அவ்வளவு சீக்கிரம் மறையாது. உதாரணமாக, பல்த்தடம், நகக் கீறல்...., அதிலும் பட்ட காயங்களுக்கு மேலேயே மீண்டும் படும்பொழுது, அது விகாரமாகவும், ஆழமாகவும் பதிந்துவிடும்.

திவ்யாவோ வித்தார்த்தின் கரங்களில், மூன்றரை வருடம் சித்திரவதை அனுபவித்தாள். அப்படியென்றால் அந்தக் காயங்கள் அவ்வளவு சீக்கிரம் மறைந்துவிடுமா என்ன? இத்தனை நாள் அதையெல்லாம் பார்க்கும் பொழுது ஒருவித விரக்தியே இதுவரை வந்திருக்கிறது.

ஆனால் முதல் முறையாக, தான் திருமணம் செய்தது தவறோ என்று நினைக்கும் அளவுக்குச் செல்லவே அவளால் தாங்க முடியவில்லை. இனிமேல் ஜீவாவை அவளால் பிரியவும் முடியாது. அப்படியென்றால்....

இதை நினைக்கவே கண்ணீர் ஆறாகப் பெருகியது. ஜீவாவைத் தன்னால் விலகவும் முடியாது. இந்தக் காயங்களைப் பார்த்த மற்றவர்களே இப்படியென்றால்...., இதை ஜீவா பார்த்தால்..... அவளால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

அதைவிட, அவன் எப்படிப் பார்ப்பான் என்பதை அவள் சிந்தித்திருந்தால்..., அவன் அவள் மனதில் இருப்பதைக் கண்டு,தெளிந்திருப்பாளோ என்னவோ, சில வேளை, இந்த நேரத்தில் அவன்மேல் இருந்த நேசம் அறியவந்தால்

இன்னும் துவண்டிருப்பாளோ, எனவே அது நினைவுக்கு வரவில்லை.

இல்லை இல்லை...., நான் திருமணம் செய்ததே தவறு..., செய்திருக்கக் கூடாது....., எப்படி என் உடல் நிலையை நான் யோசிக்காமல் போனேன்...., ஹையோ...., வாய்விட்டே கதறித் துடித்தாள்.

அந்த நேரம், ஜீவா படபடவென கதவைத் தட்டினான். “நீ என்ன பண்ணுற...? ஏன் அழற...? முதல்ல வெளியே வா...”, தவிப்பாய் வெளிவந்தது அவன் குரல்.

இருக்கும் மனநிலையில் அவன் குரலும் சேர்ந்து கேட்கவே, “நான் வெளியே வர மாட்டேன்... நீங்க முதல்ல போங்க, என்னால் உங்க முகத்தைப் பாக்க முடியாது”, அழுகையிலேயே வெளிவந்தது அவள் குரல்.

“நீ முதல்ல வெளியே வா...., எதுக்கு அழறன்னு சொல்லு... நான் தெரிஞ்சுட்டுப் போய்டுறேன்”.

இவை அனைத்திலும் அவன் தன்னை பெயர் சொல்லி அழைக்காதது பெரிய குறையாக இருந்தது அவளுக்கு. “உங்க முகத்தை என்னால் பாக்க முடியாது..., போய்டுங்க நீங்க...”, நேசம் சுமந்த இரு இதயங்களும் தவித்தது.

அவள் சொல்ல வருவதைத் தவறாகப் புரிந்துகொண்ட ஜீவாவோ, “அப்போ...., உனக்கும் என்னைப் பிடிக்கலை..., என்னைப் பாக்கப் பிடிக்கலை..., என்கூட பேசப் பிடிக்கலை அப்படித்தானே. சரி நான் போறேன், ஒரேடியா போறேன்...

“நீ வெளியே வந்து என் பொணத்தைப் பாரு. இந்த உலகத்தில் யாருக்குமே என்னைப் பிடிக்காதபோது நான் ஏன் உயிரோட இருக்கணும்..., நான் போய்டுறேன். என்னை நீ பாக்கத் தேவையே இருக்காது”, கதவை ஓங்கி கையால் அடித்து தன் கோபத்தைக் காட்டியவன், அங்கிருந்து விலகினான்.

அவன் சொன்னதைக் கேட்ட திவ்யா திகைத்தாள். ‘யாருக்குமே அவரைப் பிடிக்கலை...., பொணம்...’, “என்னங்க...”, கதவைப் படாரெனத் திறந்துகொண்டு வெளியே ஓடினாள்.

அங்கே ஜீவாவோ, துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டிருந்தான். “ஐயோ...., என்னங்க, என்ன பண்ணுறீங்க நீங்க..., முதல்ல அதைக் கீழே போடுங்க...”, ஓடிவந்து அவன் கைகளில் இருந்து அதைப் பிடுங்கப் போனாள்.

“போய்டு..., என் கிட்டே வராதே...., உனக்குத்தான் என்னைப் பாக்கவும் பிடிக்கலையே பின்ன என்ன, உனக்குத் தொந்தரவு இல்லாமல் போய்டுறேன்”, கத்தியவாறே பிஸ்டலில் தோட்டாக்களை நிரப்பினான்.

“என்னங்க நான் சொல்லுறதைக் கேளுங்க...., நான், உங்களுக்குச் சரியானவ இல்லை என்ற நினைப்பில்தான் அப்படிச் சொல்லிட்டேன்”.

“அதென்ன, இவ்வளவு நாள் தோணாமல் இப்போ மட்டும் புதுசா...., இந்தச் சப்பைகட்டெல்லாம் கட்டாதே. இன்னொரு ஏமாற்றத்தை என்னால் தாங்கவே முடியாது”, அவள் கைகளை விலக்கியவாறே சொன்னான்.

“நிஜமாவே நான் உண்மையைத் தாங்க சொல்லுறேன். என்னை நம்புங்க”, கெஞ்சினாள்.

அவன் அவளை நம்பிக்கையில்லாமல் பார்த்தான். அவன் கண்களில் ஆயிரம் மடங்கு சோகத்தை நிரப்பிக்கொண்டு, ‘இப்படியும் நான் வாழ வேண்டுமா?’ என்ற கேள்வியோடு, வலியோடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் கண்களில் தெரிந்த வலி, தன் வார்த்தைகளால் அவன் கொண்ட மனக் காயத்தால் ஏற்பட்டது என்பதை உணர்ந்த திவ்யாவிற்கு எப்படியாவது, அவனை அவன்

துன்பத்தில் இருந்து மீட்க வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

அதை செயல்படுத்தும் நோக்குடன், “சத்தியமாச் சொல்லுறேங்க...., அந்த நர்ஸ் சொன்ன பிறகுதான், எனக்கே என்னோட நிலை புரிஞ்சுது. அது தாங்க முடியாமல்தான் அழுதேன்...”.

“அதுக்கும் என்னைப் பாக்கவே பிடிக்கலன்னு நீ சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்”, அவன் தோள் இறுக, தாடைகள் இறுக, கண்கள் சிவந்து தடிக்க, தன் நிலையை அவனே வெறுப்பது போன்ற நிலையில் அவன் நிற்கவே, துப்பாக்கியை அவன் நெற்றியில் வைத்துக் கொண்டான்.

இதற்குமேல் செய்ய ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது...., என்ன ஆனாலும், ஜீவாவை இப்படியே விட முடியாது என்ற வேகம் பிறக்க, “ஒரே ஒரு நிமிஷம் இருங்க...., ப்ளீஸ்...”, அவனைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்க, அவன் பிஸ்டலை இறக்கினான்.

ஆனாலும் அவன் நின்ற நிலையில் மாற்றம் இருக்கவில்லை. திவ்யா வேகமாகச் சென்று அறைக்கதவை தாழிட்டவள், குழல் விளக்கை எரியவிட்டாள். அவளது செய்கைகளை சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவா.

திவ்யாவிற்கோ அவனது இந்த முடிவில் இருந்து பின்வாங்க வைக்கவேண்டும் என்பது மட்டுமே பிரதானமாக இருந்தது. அவன் முன்பு வந்து நின்றவள், வேகமாகப் புடவையை அவிழ்த்துக் கட்டிலில் வீசினாள். அதிர்ச்சியாக ஜீவா தடுக்கும் முன்பே, ஜாக்கெட்டின் முதல் இரண்டு கொக்கிகளை விடுவித்தவள், அதை லேசாக ஒரு பக்கம் ஒதுக்க, அங்கே இருந்த வடுக்களைப் பார்த்தவன் திகைத்தான்.

மேலும் பாவாடையையும் கொஞ்சம் நெகிழ்த்திக் காண்பிக்க, அதைப் பார்த்தவன், உடைந்து

நொறுங்கினான். “இ....இது.... எப்படி....?”, அவனுக்கு குரல் எழும்பவே இல்லை.

“ஆமா ஒரு மனுஷ மிருகம் விட்டுச் சென்ற அடையாளம் இதெல்லாம். இதைப் பாத்துட்டுதான் அந்த நர்ஸ் பொண்ணு, உங்களை அப்படி திட்டிட்டு போனாள். மூணாம் மனுஷி அவளுக்கே இவ்வளவு அதிர்ச்சின்னா...., உங்களுக்கு.....

“அதான் சொன்னேன்...., உங்களுக்கு நான் பொருத்தமே இல்லை, உங்களுக்கு நான் வேண்டாம் அப்படின்னு. இந்த உடம்போட எப்படி இனிமேல் உங்க முன்னாடி வருவேன், என்ற குற்ற உணர்ச்சியில்தான் அப்படியெல்லாம் பேசினேன்.

“நீங்க நினைக்கிற மாதிரி உங்களைப் பிடிக்காமல் இல்லங்க. இப்போவாச்சும் அந்த துப்பாக்கியைக் கீழே போடுங்களேன்”, திவ்யாவின் பார்வை அவன் கையில் இருந்த துப்பாக்கியிலேயே நிலைத்து இருந்தது.

ஜீவாவின் இடக் கரம் எழுந்ததோ, அவள் லேசாக ஒதுக்கியிருந்த ஜாக்கெட்டில், விலகியிருந்த இடத்தில் தெரிந்த வடுக்களை வருடியதையோ இருவருமே உணரவில்லை.

அவன் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. துப்பாக்கியை படுக்கையில் வீசிவிட்டு, அவளிடமிருந்து விலகித் திரும்பி நின்றான். அவன் விலகவே, வேகமாகத் தன் ஆடைகளை சரி செய்தாள்.

“நீயே சொன்னியே...., அவ மூணாம் மனுஷின்னு...., அப்படி இருக்கும்போது, நானும் அதே மூணாம் மனுஷன் மாதிரி சிந்திப்பேன்னு நீ எப்படி நினைச்ச? நானும் அவளும் ஒண்ணா? நீ என்னோட சரி பாதி...., நான் கல்யாணம் பண்ணிக் கூட வச்சுருக்க என்னோட மனைவி.

“என்னோட ரெண்டு பிள்ளைங்களுக்கு அம்மா...., இந்த வீட்டோட மகாராணி, நமக்கு நடுவில் இவ்வளவு பந்தம் இருக்கு. இதில் எதுவுமாவே நான் உனக்குத் தோணவே இல்லையா?”, வேதனையும், வலியும் மண்டிக் கிடந்தது அவன் குரலில்.

“நீங்க சொல்லுவதில் ஒன்றாகவாவது, என்னை நீங்க நினைச்சு இருக்கீங்களா...?”, வெடுக்கென கேட்டாள்.

“என்ன...?”, அதிர்ந்து போய் திரும்பினான் ஜீவா.

“என்ன, என்ன...? இதுவரைக்கும் என் கண்ணைப் பாத்து பேசி இருக்கீங்களா? பேசணும்னு நினைச்சு இருக்கீங்களா? அப்படியே பேசினாலும் அந்த சுவத்தைப் பாத்தும், இந்தக் கையைப் பாத்தும் பேசுறீங்க.

“இவ்வளவு ஏன்...? என் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு இருக்கீங்களா?”, ஆத்திரத்தில் மனதில் இருந்த அனைத்தையும் கொட்டினாள்.

“திவி....”, திகைத்துப்போய் அழைத்தான்.

“ஆமா இப்போ சொல்லுங்க திவி ன்னு....., ஏன் இவ்வளவு நாள் அது தெரியலையா..? நேத்து வரைக்கும் கூட என்னோட பேர் அதேதான்... இப்போ சொல்லுறார் திவியாம். யாருக்கு வேணும் உங்க செல்லப் பேர்... நீங்களே வச்சுக்கோங்க...”, மூக்கை உறிஞ்சியவாறே சொன்ன அவளை, இறுக்கம் தளர்ந்து, உற்சாக ஊற்றெடுக்க, மனம் கும்மாளமிட அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“திவி, என்னைப் பார்...., என்னைப் பார்ன்னு சொல்லுறேன் இல்ல...”, அவள் முரண்டு பிடித்து நிற்கவே இறுக்கமாக அழைத்தான்.

அவள் அவன் குரலின் இறுக்கத்தில் சட்டென நிமிர்ந்து பார்க்க, “சாரிதிவி..., இனிமேல் நான் எதைச் சொன்னாலும் உன் கண்ணைப் பாத்தே பேசுறேன் என்ன”, கண்களில்

குறும்புடன் சொன்ன அவனையே இமைக்காமல் பார்த்தாள் அவள்.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, ஜீவாவின் முகம் கோபத்தில் சிவந்தது. அதையே திகைப்பாய் பார்க்க, “திவி..., உன்னை இப்படி செஞ்சவன் மட்டும் என் கையில் கிடைச்சான்..., இந்த உலகத்தில் அதுதான் அவனுக்குக் கடைசி நாளா இருக்கும்”, எரிமலையை அடக்கிய குரலில் அவன் சொல்ல, உள்ளுக்குள் தித்தித்தது திவ்யாவிற்கு.

இருவரின் மனக் குமுறல்கள் வெளிவந்துவிட்டன. இனிமேலாவது அவர்கள் சகஜமான வாழ்வுக்குத் திரும்புவார்களா? அது நடக்குமா? விடை அவர்களிடமே.

தணிவு - 11

முதல் முறையாக

உலகை வென்ற உணர்வு

எனக்கென்று துடிக்கும்

ஒரு இதயம் இருப்பதாலா...?

ஜீவா கிளம்பி மில்லுக்கு வந்துவிட்டான். அவனுக்காகக் காத்திருந்த கணேஷோடு இணைந்து, மில்லுக்குத் தேவையான கொள்முதல், புதிய ஆர்டர் பற்றிய விஷயங்கள் என அனைத்தையும் பற்றிப் பேசினான்.

பேச்சு அவனிடம் இருந்தாலும், சிந்தை முழுவதும் திவ்யாவே நிறைந்திருந்தாள். அதிலும் அவளது கோபம், அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதற்குக் காரணம், ப்ரியா ஒருமுறை, "உன்மேல் கோபப்படக் கூட உரிமை இருக்கணும், உன்மேல் எனக்கு இருப்பது வெறுப்பு மட்டும்தான்', என்று சொல்லியிருந்தாள்.

அப்படியென்றால் திவி என் மேல் கோபப்படுவது உரிமையால் தானே...., "என்ன ஜீவா...? என்னமோ கேட்டியே..., எனக்குப் புரியலை..", கணேஷ் கேட்ட பிறகுதான், தான் மனதுக்குள் நினைப்பதாக எண்ணிக் கொண்டு, வெளியே உளறியது புரிந்தது.

"அது ஒண்ணும் இல்லை கணேஷ்...., திவிக்கு உடம்புசரியில்லை, அதான் அந்த மீட்டிங் இன்னைக்கு வைக்க முடியலன்னு சொல்லிட்டு இருந்தேன்", தன் அசட்டுத்தனம் அவனுக்குத் தெரியாமல் மறைத்தான்.

கணேஷ் அவனையே குறுகுறுவென பார்க்க, "என்னடா..., நான் என்னமோ பொய் சொல்லுற மாதிரி பாக்குறே, எழுந்து போடா", விரட்டினான்.

இதையும் கணேஷ் அதே பார்வையோடே பார்த்தான். 'என்னஇது...? ஜீவா என்னவோ, உரிமை கோபம்ன்னு

எதையோ சொன்ன மாதிரி இருந்துது. நான் கேட்டா இல்லன்னு மழுப்புறான். இதில் என்னை விரட்டுற தோரணை கூட சரியில்லையே...., என்னமோ ஆயிடுச்சு...', மனதுக்குள் நினைத்தவன் தலையை ஆட்டியவாறே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கணேஷ், நான் என்ன ஹேமாவா...? இப்படி வச்ச கண்ணு வாங்காமல் பாக்குற...? அதுக்கெல்லாம் எங்களுக்கு வீட்டில் ஆள் இருக்கு, முதல்ல நீ போய் வேலையைப் பாருடா", ஜீவாவின் இந்தப் பேச்சில் இன்னுமே திகைத்தான் கணேஷ்.

"ஜீவா..., இன்னைக்கு யார் முகத்துல முழிச்ச, பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லன்னா, கட்டுனவனுக்கு மறை கழண்டுடுமா என்ன..? ஒரு மார்கமாவே பாக்குற, பேசுற...., என்ன விஷயம்...?", சந்தோஷ மிகுதியில் தலையை ஆட்டிக் கேட்டான்.

"டேய், அப்போ என்னைப் பாத்தால் உனக்கு லூசு மாதிரி இருக்கா? ஒழுங்கு மரியாதையாப் போய்டு...., போடா....", அவன் தன்னைக் கேலி செய்வது பொறுக்காமல், ஒரு பைலைத் தூக்கி அவன்மேல் எறிந்து விரட்டினான்.

கணேஷும் சிரித்தவாறே அந்த பைலை எடுத்துவிட்டு, கலங்கிய தன் கண்களை அவனுக்குக் காட்டாமல், திரும்பித் துடைத்தவாறே வெளியேறினான்.

அவனுக்கு இந்த சந்தோஷத்தை உடனடியாக ஹேமாவிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும்போல் இருந்தது. தன் பைக்கை எடுத்துக் கொண்டு அவளைப் பார்க்கச் சென்றான்.

கணேஷ் அறையிலிருந்து வெளியேறியதும், ஜீவா தன் இடக்கரத்தைத் தூக்கி முகத்துக்கு நேராக பிடித்துக் கொண்டு, இமைக்காமல் பார்த்தான். "ஏன் அப்படி செஞ்ச....? திவி அப்போ பதட்டத்தில் இருந்தா, அதனால் கவனிக்கலை.....,அப்படி கவனிச்சிருந்தால் என்ன நினச்சுருப்பா?

“பெரிய இவனாட்டம் என்னோட நிழல் கூட உன்மேல் படாது, என் மூச்சுக் காத்துக் கூட உன்னைத் தீண்டாதுன்னு பெருசா ஜம்பம் விட்டியே, நீயும் சராசரி ஆம்பளை தான்னு சொல்லி, உன் மூஞ்சியிலேயே காறித் துப்பியிருப்பா.

“இந்த மொகரையைக் கொண்டுபோய் எங்க வச்சிருப்ப?”, என்னவோ அவனது கை, அவன் சம்மதம் இல்லாமல் சென்று, அவளைத் தீண்டியதாக நினைத்து, அதைக் குறை சொன்னான்.

அவனது மனமோ, கடந்துசென்ற மணித்துளிகளை அசை போட்டது. அந்த நேரத்தில், அவள் உடம்பில் இப்படிப்பட்டக் காயத்தை எதிர்பார்க்காத அதிர்ச்சியில் அவன் கரம் எழுந்து, அவளது வடுக்களை வருடியது.

வருடிய பிறகுதான் தான் என்ன செய்தோம் என்பது உறைக்க, சட்டென திவ்யாவின் முகத்தைப் பார்க்க, அவளோ, அவன் வலக் கரத்தில் இருந்த துப்பாக்கியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கவனம் துப்பாக்கியில் இருக்கவே, வேகமாகக் கைகளை விலக்கியவன், துப்பாக்கியைத் தூக்கிக் கட்டிலில் போட்டுவிட்டு திரும்பி நின்று தன்னை நிலைக்கு கொண்டுவந்தான்.

அதன் பிறகு அவள் முகம் பார்க்கத் தயங்கி அவன் நிற்க, அவள் சொன்ன வார்த்தைகளில் தெறித்தக் கோபமே, அவனைத் திரும்பி, அவள் முகம் பார்க்க வைத்தது. அவள் அவனது செய்கைக்காகக்கோபப்படாமல், அவளது உரிமைக்காகப் போராடியது அவனுக்குப் பிடித்தது.

மேலும் அங்கிருக்க முடியாமல், பேசிவிட்டு அலுவலகம் வந்துவிட்டான். அவன் செய்த செய்கையால்... எழுந்த தாக்கம் மட்டும் அவனை விடமாட்டேன் என்று அடம் பிடித்தது. இது, அவளைத் தீண்டியதால் வந்த தாக்கம் இல்லை. மாறாக, தன் வாக்கை மீறிவிட்டோமே என்ற வருத்தம் தான்.

அதையெல்லாம் கொஞ்சம் ஒதுக்கிவிட்டு வேலையைத் தொடர்ந்தான். அதே நேரம், திவ்யாவும் படுக்கையில் படுத்தவாறு, ஜீவாவின் செய்கையைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தாள். திவ்யா, ஜீவா வருத்தப்படுவதைப் பார்க்க முடியாத வேகத்தில்தான் அனைத்தையும் செய்தாள்.

ஆனால், ஜீவா அவளை விட்டு நகர்ந்து திரும்பிய பிறகுதான், அவன் கை, தன் காயம்பட்ட வடுக்களை வருடியதை உணர்ந்தாள். வேகமாக ஆடைகளைச் சரிசெய்துவிட்டு, அவனிடம் எப்படி மேலே பேச என்று தயங்கிய பொழுதுதான் ஜீவா அவளிடம் பேசினான்.

முந்தானைச் சேலை விலகினாலே....., நாள் முழுவதும் தன்னைப் படுக்கையில் புணரும் வெறிபிடித்த அரக்கனை மட்டுமே உணர்ந்திருந்தவள், தன் அரை நிர்வாணக் கோலத்திலும், அதற்கும் மேலான அவனது தொடு உணர்ச்சியைக் கூட உணராமல்,

அவளது உடலை ரசிக்காமல், அதில் இருந்த காயத்தை மட்டுமே பார்த்த ஜீவாவின் கட்டுப்பாடு அவளை மெய் சிலிர்க்க வைத்தது. ஒரு பெண்ணின் மேனியைத் தான் பார்க்கிறோம் என்பதை, பார்வையில் கூட சிறு சலனமில்லாமல் இருந்த அவனது கண்ணியமான நடத்தை திவ்யாவை அவன் நினைப்பில் மூழ்க வைத்தது.

இப்படியும் ஒரு ஆண்மகனால் இருக்க முடியுமா? மனம் கேள்வி எழுப்ப, அதான் என் ஜீவா இருக்கின்றாரே...., இதழ்கள் தாமாக பதிலை உச்சரித்தன.

இருவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் நினைத்தவாறு, அந்த நாளை முதல் முறையாக அனுபவித்து நகர்த்தினார்கள். இந்தச் சம்பவத்தால், ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த கோபம் கூட மறைந்தது.

ஹேமாவை இப்பொழுதே பார்க்கவேண்டும் என்று கணேஷ் ஆயாவிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

ஆயாவோ..., ஹேமா பிஸியாக இருப்பதால் சாயங்காலம் அவனை வந்து பார்க்கச் சொன்னதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கணேஷோ...., நான் அவளைப் பார்க்காமல் இம்மி கூட நகர மாட்டேன் என்று படியிலேயே அமர்ந்துகொண்டான். வேறு வழியில்லாமல், "தம்பி ஹேமா வீட்டுக்குப் போய்ட்டா...., இப்போதான் கண்ணனுக்கும், அஞ்சலிக்கும் சாப்பாடு ஊட்டச் சொல்லி அம்மா சொன்னாங்க. நீங்க வீட்டுக்கே போய்ப் பாருங்க", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

'வீட்டுல இருந்துட்டே என்னைப் பாக்க முடியாதுன்னு சொன்னியா? இரு உன்னை வச்சுக்கறேன்', மனதுக்குள் சொன்னவாறே அவளைத் தேடி வந்தான்.

அங்கே ஹாலில் இவனுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தாள் ஹேமா. அவள் தனியாக இருப்பதைப் பார்த்தவன், ஓடிபோய், "ஹேமா...", என்றவாறு அவளைக் கட்டிக் கொண்டான்.

"ஹையோ என்ன இது...?", அவள் பதறி அவனைத் தள்ளிவிடும் முன்பே, அவளைவிட்டு விலகி நின்றான்.

"பேட் பாய்....", அஞ்சலியின் குரல் அவனை இன்னும் சங்கடத்துக்குள்ளாக்கியது. ஹேமாவோ, அவனை என்ன செய்தால் தகும் என்பதுபோல் பல்லைக் கடித்தவாறு முறைத்துக் கொண்டிருந்தாள்.

அதில் அஞ்சலியின் வார்த்தை அவளை இன்னும் கோபப்படுத்தியது. பிள்ளைகளின் முன் எதுவும் சொல்ல முடியாமல் அமைதியாகவே இருந்தாள்.

"இல்ல அஞ்சு...., ஆன்ட்டி தனியா இருந்ததைப் பாத்தேனா...., சும்மா பயம் காட்டினேன்... ஹி...ஹி...", அசடு வழிந்தான். அதே நேரம் கண்ணன், கையில் தண்ணீர் டம்ளருடன் அங்கே வந்தான்.

அவர்கள் அனைவரையும் புரியாத பார்வை பார்த்தான். “என்ன அஞ்சு...”, தன் தோழியிடம் கேட்டான்.

“மாமா பேட் பாய்...., ஆன்ட்டியைக் கட்டிப் புடிச்சுட்டாங்க...., ஆன்ட்டி பயந்துட்டாங்க....”, கண்ணனுக்கு விளக்கம் அளித்தாள்.

“உங்களைத்தான் நான் சாயங்காலம் வந்து பாக்கச் சொன்னேனே...., அதை விட்டுட்டு இப்படி வந்து...., முதல்ல இங்கே இருந்து போங்க...”, கண்களை உருட்டி ஹேமா சொல்ல,

“நான்வேண்ணா பசங்களுக்குச் சொல்லிப் புரிய வைக்கவா?”, அவன் அப்பாவியாகக் கேட்டான்.

“நீங்க ஆணியே....”, அவள் மேலே சொல்லாமல், தன் கையால் அவள் வாயை மூடினான். கண்ணனோ அவன் செய்வதைப் பார்த்தவன், கையில் இருந்த தண்ணீரை கணேஷின் பேண்டில் ஊற்றினான். கண்ணனின் முகத்தில் கோபத்தின் சாயல்...., அவன் கண்களோ, ஹேமாவின் முகத்தையே ஆராய்ந்து கொண்டிருந்தது.

அவன் கோபத்தின் காரணத்தைச் சட்டெனப் புரிந்த ஹேமா, “கண்ணா..., மாமா என்கூட சும்மா விளையாடத்தான் செய்யிறாங்கடா, மாமா ரொம்ப நல்லவங்கதான். வேண்ணா அஞ்சலியைக் கேளேன்...”, ஹேமாவின் பார்வை அஞ்சலியைக் கெஞ்சியது.

“கண்ணா, நம்ம அப்பா அம்மா மாதிரி இவங்களும் கல்யாணம் பண்ணிக்கப் போறாங்களாம். அம்மா அப்பா அன்னைக்குச் சொன்னாங்க இல்ல. அதான் மாமா ஆன்ட்டி வீட்டில் இருக்காங்க. கல்யாணம்னா ஒரே வீட்டில் தானே இருப்பாங்க. நீ எதுக்கு மாமா மேல தண்ணி ஊத்துன, மாமாட்ட சாரி சொல்லு”, என்னவோ பெரிய மனுஷியாக அவளுக்குத் தெரிந்த விதத்தில் கண்ணனுக்குச் சொல்லிப் புரிய வைத்தாள்.

“ஆமாடா கண்ணா...., ஹேமா ஆன்டிக்கும் என்னைப் பிடிக்கும் இப்போ பாரேன்”, சொன்னவாறு, அவளை இடையோடு சேர்த்து மெதுவாக அணைத்தான் கணேஷ். ஹேமா வேறு வழியில்லாமல் சிரித்து வைத்தாள்.

“முதல்ல கையை எடுங்க..., இல்ல..., கண்ணன்ட்ட சொல்லி தண்டனைத் தந்துடுவேன்”, வெளியே சிரித்தவாறே அவனிடம் சின்னக் குரலில் மிரட்டினாள்.

கண்ணனோ இன்னும் சந்தேகம் தெளியாமல் கணேஷைப் பார்க்க, “ஹையோ, வில்லனைப் பாக்குற மாதிரி பாக்குறானே...., கால்ல விழுந்துட வேண்டியதுதான்”, ஹேமாவிடம் சொன்னவன், அவளை விட்டுவிட்டு கண்ணன் அருகில் சென்றான். ஹேமாவோ வாய்விட்டுச் சிரித்தாள்.

‘என் கஷ்டம் உனக்கு சிரிப்பா இருக்கா? வீட்டுக்குள்ளேயே ஒரு ரவுடிய கிரியேட் பண்ணி வச்சு இருக்காங்களே....’, நொந்தவாறு அவனிடம் பேசினான்.

“சாரி டா கண்ணா...., இனிமேல் மாமா இப்படி விளையாட மாட்டேன் சரியா? வேண்ணா ஹேமா ஆன்ட்டி கிட்டேயும் சாரி சொல்லவா?”, அவன் அருகில் அமர்ந்தவாறு கேட்டான்.

கண்ணனுக்கு கொஞ்சம் நம்பிக்கை வந்தது. ‘வேண்டாம்’ என்பதுபோல் தலையை ஆட்டினான். ஹேமா மீண்டும் அவர்கள் இருவருக்கும் உணவூட்டிவிட்டு, கணேஷ் இரு குழந்தைகளிடம் சிறிது நேரம் விளையாடவே, அவர்கள் தூங்கிவிட்டார்கள்.

அவர்களைப் படுக்கையில் விட்டுவிட்டு, வேகமாக அவனை நெருங்கியவள், அவன் தலையில் நறுக்கென குட்டினாள். “அம்மா..., இப்போ எதுக்குக் கொட்டுன...?”, தலையைத் தேய்த்தவாறே கேட்டான்.

“பின்ன நீங்க செஞ்சுவச்ச வேலைக்கு உங்களைக் கொஞ்சுவாங்களா?”, ஆத்திரம் குறையாமல் கேட்டாள்.

“ஹேய் எனக்கு எப்படித் தெரியும்..., ரெண்டுபேரும் இங்கேதான் இருக்காங்கன்னு...? நான் பாக்கும்போது..., உன் பேக் (back) தான் தெரிஞ்சுது, அஞ்சலி உன் முன்னாடி சின்னச் சேரில் இருந்தது தெரியவே இல்லை.

“அது மட்டும் இல்லை, கண்ணன் இருந்த அந்த காலி சேர் கூட தெரியவே இல்லை. நல்லாத் திருமலை நாயக்கர் தூண் மாதிரி, அவங்க ரெண்டுபேரையும் மறச்சுட்டு உக்காந்து இருந்தது என் தப்பா?”, அவன் பேச்சு சுவாரசியத்தில் சொல்லிக் கொண்டே போக, மூச்சுவாங்க நின்றிருந்தாள் ஹேமா.

“ஏன் ஹேமா இப்படி மூச்சு வாங்குது....?”, பச்சைப் பிள்ளைபோல் முகத்தை வைத்துகொண்டு கணேஷ் கேட்க, அவள் கோபம் கரையைக் கடந்தது.

“ஏண்டா...., சந்தடி சாக்குல என்னைப் பெரிய சைஸ்ன்னு சொல்லுற, தூணுன்னு சொல்லுற...., இதெல்லாம், உன் கையை வச்சுகிட்டு சும்மா இல்லாமல்..., என் இடுப்பைப் பிடிச்சுத் தடவிகிட்டே..., ‘நீ கொடி இடையாளா இருக்க’ன்னு உருகும் போது தெரியலையா?”, இன்னும் ரெண்டு கொட்டு அவன் தலையில் வைத்தாள்.

“காதலுக்குப் பொய் அழகுன்னு கவிஞர்கள் சொல்லி இருக்காங்க ஹேமா, உனக்குத் தெரியாதா?”, வாய்க்கொழுப்பு அடங்கவில்லை அவனுக்கு.

“அது...., கவிதைக்குப் பொய் அழகு....”, பல்லைக் கடித்தாள்.

“ஓஹோ.... இப்போ அப்படி மாத்திட்டாங்களா...?”, இவ்வளவு வாங்கியும் அவனுக்கு புத்தி வரவில்லை.

“ஏண்டா...., உனக்கு என் இடுப்பைப் பார்த்தால் தூண் மாதிரியா இருக்கு...?”, சேலை முந்தானையை விலக்கி அவள் இடுப்பைக் குனிந்து பார்த்தாள்.

அவள் செய்கையில், இமைக்க மறந்து அவள் வெற்றிடையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் கணேஷ். அவன் சோபாவிலும், அவனுக்கு நேராக அவள் நின்றுகொண்டும் இருந்ததால் அவள் இடை அவனது பார்வைக்குத் தப்பாமல் பளீரெனத் தெரிந்தது.

“ஹேமா கொஞ்சம் கிட்டே வா, நல்லாப் பாத்துச் சொல்லுறேன்...”, அவன் குரல் மாறுபட்டு ஒலித்தது அவனுக்கே புரிந்தது.

ஹேமாவும் அதை உணர்ந்து அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க, அவன் பார்வையில் தெரிந்த வியப்பும், பிரமிப்பும், அவன் பார்வை தன் இடையில் பதிந்திருந்த விதமும் புரிய, சேலையைச் சரிசெய்ய முயன்றாள்.

அவள் முயற்சியை, ஒற்றைக் கையில் தடுத்தவன். ஒரு கையால் அவள் இடையைத் தன்பக்கம் இழுத்து, நொடியில் அவள் வெற்றிடையில் இதழ் பதித்தான். பொதுவாக, வெற்றிடையில் அவன் கரம் படிந்தாலே சிலிர்க்கும் அவள்,

அவன் இதழ்கள் பதியவே, ஹேமாவின் தேகம் சிலிர்ந்து அடங்கியது. கொத்தாக அவன் முடியைப் பிடித்து, அவன் தலையைத் தள்ளிவிட்டாள். ஆனாலும் சூடாகப் புதைந்த அவன் இதழ்களின் வெம்மையும், மீசையின் குறுகுறுப்பும், அவள் நாடி நரம்புகளை மீட்டிச் சென்றது.

வேகமாகத் தன் முந்தானையைச் சரி செய்தவள், “கணேஷ்...., இட்ஸ் டூ மச்...., என்ன நினைச்சுட்டு இருக்கீங்க உங்க மனசில். எப்போ பாத்தாலும் இதே நினைப்புதானா? வர வர உங்க எல்லையை நீங்க மீறுறீங்க....

“இப்போ எதுக்கு இங்கே வந்தீங்க...., ஒரு பொண்ணோட சேலை விலகினாலே, உடனே அவளைத் தொடணும்னு ஆசை வந்துடுமா? ச்சே..., உங்ககிட்டே இருந்து இதை நான் எதிர் பாக்கலை...., அப்படியென்ன வெறி....”, “அம்மா...”, அடுத்த வார்த்தை பேசும் முன், கணேஷின் கரம் இடியென அவள் கன்னத்தில் இறங்கியது.

“இன்னும் ஒரு வார்த்தை....., ஒரு வார்த்தை பேசின...., நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. எப்போ பாத்தாலும் இதே நினைப்பு தானான்னா.....? கட்டிக்கபோறப் பொண்ணு இவ்வளவு நெருக்கத்தில் இருந்தால், எவனுக்கும் புத்தி அப்படித்தான் போகும்.

“ஒத்துக்கறேன் நான் செஞ்சது தப்புதான்....., அதுக்குன்னு...., எந்த பொண்ணோட சேலை விலகி இருந்தாலும்....., ச்சே..... நீ ஒண்ணும் எவளோ கிடையாது. இன்னும் அஞ்சு நாளில் கட்டிக்கப்போற என் பொண்டாட்டி.

“அந்த உரிமையில், கொஞ்சம் நிதானம் தவறிட்டேன்....., நீ என்னை ஓங்கி ரெண்டு அறை விட்டிருந்தால் கூட சந்தோஷப் பட்டிருப்பேன். ஆனா நீ...., என்னமோ நான் செக்ஸ்க்கு அலையிற மாதிரி...., அந்த வார்த்தைகள் என்னை ரொம்பக் காயப்படுத்திடுச்சு ஹேமா.....

“ஐ’ம் சாரி....., நான் செஞ்சது உனக்குப் பிடிக்கலை, உன்னைக் காயப் படுத்தி இருந்தால் என்னை மன்னிச்சுடு. இனிமேல் அப்படி நடக்காது....., எப்பவும்”, அவன் தாடைகள் இறுகி இருந்தன.

“ஜீவா மதியம் தான் ஆபீஸ் வந்தான். வந்தவன் என்னமோ ரொம்ப சந்தோசமா இருந்த மாதிரி இருந்துது...., அதைவிட ‘திவி’ன்னு வேற சொல்லி என்ன என்னவோ புலம்பிட்டு இருந்தான். அந்த சந்தோஷத்தை உன்கிட்டே உடனே பகிர்ந்துக்கணும்னு தோணிச்சு, அதான் வந்தேன்.

“மற்றபடி நீ சொன்ன மாதிரி இல்லை...., நான் கிளம்புறேன். மணமேடையில் சந்திப்போம்”, சொல்லிவிட்டு அவளைத் திரும்பியும் பாராமல் சென்றுவிட்டான்.

“கணேஷ்.....”, ஹேமாவின் அழுகுரல் அவனை நிறுத்தவே இல்லை. ஹேமா தவித்துப் போனாள். ‘ச்சே..., திவ்யாவின் கதையைக் கேட்டதில் இருந்தே மனதின் ஓரத்தில் இருந்த நெருடல், இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் வெளிவருமென்று அவள் நினைக்கவே இல்லை.

அவனிடம் எப்படி மன்னிப்பை வேண்டவென்று தெரியாமல் மறுகினாள். கணேஷோ கோபத்தில் இருந்தான். 'என்னைப் பாத்து என்ன வார்த்தை சொல்லிட்டா...., எவளோட சேலை விலகினாலும் இப்படித்தான் நடந்துப்பேன்னு...., இவ என்னோட பொண்டாட்டி, அது ஏன் அவளுக்குத் தெரியலை.

இருக்கும் மனநிலையில் மில்லுக்குச் சென்று ஜீவாவைப் பார்க்க முடியும் என்று தோன்றவில்லை. எனவே நேராக பீச்சுக்குச் சென்றான். பைக்கை நிறுத்திவிட்டு, மூன்றுமணி வெயிலைக் கூடப் பொருட்படுத்தாமல், அலையில் சென்று கால் நனைய நின்றான். மனதின் சூடு கொஞ்சம் குறைவதுபோல் இருந்தது.

இரு இதயங்கள் ஒன்றோடு ஒன்று நெருங்க, மற்ற இரு இதயங்கள் விரிசலில் தவித்தது.

தணிவு - 12

ஊடலும் கூடலும்

அன்பும் பகிர்வும் - தான்

காதலென்றால் - நான்

காதலிக்கிறேன்.....

அ/தற்குள் ஐந்து நாள் ஓடியதே தெரியவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் கணேஷ், ஹேமாவின் கழுத்தில் தாலி கட்டி, அவளைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்கப் போகிறான். சென்னையிலேயே பெரிய ஆடிட்டோரியங்களில் ஒன்றாகிய, பெரியார் திடல், MR ஆடிட்டோரியத்தில் திருமண ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஜீவாவே முன்னின்று அனைத்துப் பொறுப்புகளையும் மேற்பார்வை இட்டான். அவ்வளவு ஏன், கணேஷுக்கு வேஷ்டி கட்டி விட்டதே அவன்தான். அந்த அளவு, எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்தான். கண்ணனும்ஜீவாவோடே சுற்றிக் கொண்டிருந்தான். கண்ணனிடம் இந்த நான்கு நாட்களில் அப்படி ஒரு மாற்றம்.

கண்ணனின் இந்தப் பெரிய மாற்றத்துக்கு, அஞ்சலிதான் காரணம். “கண்ணா நீ பாய்...., அப்பா கூடத்தான் இருக்கணும். நான் கேர்ள் நான்தான் அம்மா கூட இருப்பேன்”, இப்படிச் சொல்லியே அவனைக் கொஞ்சம் மாற்றிவிட்டாள்.

ஆனால் அதைவிட, ஜீவாவைப் பிடிக்க கண்ணனுக்கு பெரிய காரணம் கிடைத்திருந்தது, எனவேதான் அவனுடனே இருக்க ஆசைப்பட்டான். அதுவும் இந்த நான்கு நாளில் தான் நடந்தது.

ஜீவாவுக்கு கண்ணன் அவனுடனே சுற்றுவது அவ்வளவு சந்தோஷமாக இருந்தது. ஆனாலும் சின்ன மனக்குறை. அவனை அப்பா என்று அழைக்கவோ, அவனைத் தூக்கிக் கொள்ளவோ அனுமதிக்கவில்லை.

ஆனால் ஜீவாவின் கைகளைப் பிடித்துக் கொண்டே சுற்றினான். கணேஷ், ஜீவா, இருவரும் கேலியாகப் பேசிக் கொள்வதும், வேஷ்டி கட்ட, பயங்கரமாகக் கஷ்டப் படுவதும், இதையெல்லாம் பார்க்க , அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

மணமகன் அறையோ கேலி கலாட்டா எனக் களை கட்ட, மணமகள் அறையோ அதற்கு மாறாக இறுக்கமாக இருந்தது. அதிலும் ஹேமாவின் மனமும், கண்களும் அலைபாய்ந்துக்கொண்டே இருந்தன.

அன்று கணேஷ் அவளிடம் கோபப்பட்டுச் சென்ற பிறகு, கொஞ்ச நேரம் அழுதவள், பிறகு கணேஷின் அலைபேசிக்கு அழைத்தாள். அவள் அழைக்கும் பொழுதும் கணேஷ் பீச் மணலிலேதான் நின்று கொண்டிருந்தான்.

அலைபேசி அழைக்கவே, அதை உயிர்ப்பித்து காதில் வைத்தான். “ஹல்லோ....”, அவன் குரல் சோர்ந்துபோய் ஒலித்தது.

“கணேஷ்....”, தன் மன்னிப்பு வேண்டலை எல்லாம்.... ஹேமா அவள் குரலில் கொண்டுவந்து அழைக்க, அவளைவிட கணேஷ்தான் தவித்துப் போனான்.

அவனுக்கும் தொண்டையை அடைக்க, அவளுக்கு பதில் சொல்லக் கூட குரல் எழும்பவில்லை அவனுக்கு.

“பேச மாட்டீங்களா கணேஷ்..., ரியல்லி ஐ’ம் சாரி...., நான் ஏதோ நினைப்பில் அப்படிச் சொல்லிட்டேன். என் கணேஷ் பத்தி எனக்குத் தெரியாதா....? ப்ளீஸ் என்கிட்டே பேசுங்க..., ஐ லவ் யூ கணேஷ்..., கணேஷ்....”, வார்த்தைகளைத் தேடித் தேடி அவள் பேசுவது தெரிந்தது.

அவள் பேசப் பேச, கணேஷ் இங்கே உருகிக் கொண்டிருந்தான். ஆனாலும் அவள் பேசியதன் தாக்கம்மும் அவனை உலுக்கியது. கணேஷ் அமைதியாக

இருக்கவே, ஹேமா அவனை அழைத்துக்கொண்டே இருப்பது தெரிந்தது.

தொண்டையை லேசாகச் செருமிக் கொண்டு, “ப்ளீஸ் ஹேமா...., நாம இதைப்பற்றி இனிமேல் பேச வேண்டாம். இன்னும் ஐந்து நாள்தானே, பிறகு பேசிக்கலாம்...”, எவ்வளவு முயன்றும் அவன் குரலில் இருந்த இறுக்கத்தை அவனால் குறைக்க முடியவில்லை.

அதன்பிறகு ஹேமா எவ்வளவோ முயன்றும் அவளிடம் ஒரு வார்த்தை பேசக் கூட மறுத்துவிட்டான். தினமும் காலை, மாலை அவளைச் சென்று சந்தித்து வந்தவன், அவள் வீட்டுப் பக்கமே செல்லவில்லை.

“என்னண்ணா....., நீங்க ஹேமாவைப் பார்க்க போகவே இல்லையா? அவ என்னமோ டல்லா இருக்கா. கொஞ்சம் அவளைப் போய் பாருங்களேன்”, பள்ளிக்கு விடுமுறை விட்டுவிடவே, ஹேமாவின் கவலை முகத்தை அருகில் இருந்து பார்ப்பதால், திவ்யாவே கணேஷிடம் சொன்னாள்.

“தங்கச்சி..., கல்யாணத்துக்குப் பிறகு எப்படியும் ஒரு வாரம் லீவ் போடணும், அதுக்கு முன்னாடி செய்ய வேண்டிய வேலை எல்லாம் முடிக்கணுமே...., இப்போ நம்ம மில்லோட நிலைமைப் பற்றி உனக்கே தெரியும்.

“இப்போ என்ன, அவ இங்கேதானே வரப் போறா... இந்தச் சின்னப் பிரிவும் எங்களுக்குள் உறவை நல்லாவே பலப்படுத்தும், கவலையை என்கிட்டே விடு, நான் பாத்துக்கறேம்மா...”, ரொம்ப சுலபமாக...., முகத்தில் எதையும் காட்டாமல்..., கவனமாகச் சொல்லிவிட, திவ்யாவிற்கு எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

இருவருமே சின்னப் பிள்ளைகள் கிடையாது. அவர்களது வாழ்க்கை பற்றிய முடிவை அவர்கள்தான் எடுக்க வேண்டும். ஒரு கட்டத்துக்கு மேல் யாரும் தலையிட முடியாது. எனவே திவ்யாவும் அதைத் துருவாமல் ஒதுங்கிப் போய் விட்டாள்.

ஹேமாவால் வீட்டை விட்டு வெளியே வரவே முடியவில்லை. கல்யாணப் பொண்ணு எங்கேயும் வெளியே போக வேண்டாம் என்று சொல்லி, தங்கம் முடித்துவிட்டார். எனவே ஹேமாவால் கணேஷை சந்திக்க முடியவில்லை.

கணேஷை, அவள் பேசிய பேச்சு அதிகம்தான் என்பது அவளுக்குப் புரிந்தது. அதற்காக அவனிடம் மன்னிப்பும் வேண்டியாயிற்று, அவனது மௌனம்தான் அவளை, அவள் மனதை வாள்கொண்டு அறுத்தது.

யாரிடமும் மனம்விட்டு சொல்லவும் முடியவில்லை. தாய் ஏற்கனவே, திவ்யாவின் திருமணத்தின் பொழுதே, கணேஷின் மனம் கோணாமல் நடந்துக்கோ..., அம்மா அப்பா இல்லாத பிள்ளை, இனிமேல் அவனுக்கு எல்லாமே நீதான், பாத்து நடந்துக்கோ என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லியிருந்தார்.

அன்று நடந்ததில், தன் தவறுதான் அதிகம் என்பது அவளுக்குப் புரிந்தது. ஏற்கனவே கணேஷ் அதிகமாக இழைவார்...., இதில் அவர் முன்னாடியே வெற்றிடையைக் காட்டினால் அவரும் என்னதான் செய்வார்...., அன்றைய நினைவில், இன்று தலையிலேயே தட்டிக் கொண்டாள்.

“ஹேமா...., என்ன ஆச்சு...? ஏன் தலையிலேயே அடிச்சுக்கற..? அப்படி என்ன யோசனை...? நாலு நாளா நீ சரியாவே இல்லை. என்னன்னு கேட்டாலும் பதிலே சொல்ல மாட்டிக்க...”, திவ்யா அவளிடம் கேட்டாள்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை திவ்யா...., சும்மாதான்...”, கண்ணாடியில் தெரிந்த திவ்யாவின் உருவத்தையே பார்ப்பதைத் தவிர்த்தாள். திவ்யா, அஞ்சலியைக் கண்ணனோடு சென்று விளையாடச் சொல்லி அனுப்பினாள்.

“ஹேமா..., ஏதோ உங்களுக்குள் சரியில்லைன்னு தோணுது..., ஆனால் என்னன்னு என்னால் புரிஞ்சுக்க

முடியலை. கணேஷ் உன்மேல் உயிரையே வச்சு இருக்காருன்னு எனக்குத் தெரியும். அவருக்கு எல்லாமே நீதான். இந்த உலகத்திலேயே அவருக்குன்னு இருக்க சொந்தம், பந்தம் எல்லாம் நீ மட்டும் தான்.

“ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்த உடனே..., உன்னைப் பாக்க வருவார். நைட் தூங்குற நேரத்துக்குதான் வீட்டுக்கே வருவார். அங்கே நான், அவர், குழந்தைங்க எல்லோரும் இருந்தாலும், நீதான் அவருக்கு மனசளவில் நெருக்கமா இருப்பதா அவர் நினைச்சார்.

“இப்போ நாலு நாளா, உன்னை அவர் பாக்கவே வரலை. அந்த வருத்தம் அவருக்கு எவ்வளவு இருந்தாலும், அதையெல்லாம் காட்டாமல், மொபைல்ல உன்னோட போட்டோவையே வச்சுட்டுப் பாத்துட்டே இருந்தார்.

“அண்ணா, ஹேமாவைப் போய் பாக்க வேண்டியதுதானேன்னு சொன்னால், ‘அதான் இனிமேல் என்னோடவே தானே இருப்பா..., இந்தப் பிரிவு எங்களை இன்னும் நெருக்கமாக்கும்’னு சொல்லிட்டு அமைதியா போய்டுவார்.

“அவர் சொன்னதை வச்சுப் பாத்தால்...., நீதான் ஏதோ தப்பா புரிஞ்சுகிட்டன்னு தோணுது, அதான் உன்கிட்டே இவ்வளவு பேசிட்டு இருக்கேன்...., நாம எல்லாம் மனுஷங்க, யாராலையும் நூறு சதவீதம் பெர்பெக்ட்டா இருக்க முடியாது.

“அப்படியே கணேஷ்அண்ணா ஏதாவது தப்பு செஞ்சால் கொஞ்சம் பொறுத்துப் போடா. மனசு விட்டுப் பேசுங்க. எல்லாம் சரியாயிடும். அவருக்கு நீ மட்டும்தான் இருக்கங்குறதை எப்பவுமே ஞாபகம் வச்சுக்கோ”, திவ்யா, தன் தோழி, குழப்பத்தில் இருப்பது சகிக்க முடியாமல், அவளையும் துருவாமல், நாசூக்காகச் சொல்லிப் புரிய வைக்க முயன்றாள்.

திவ்யா பேசி முடிக்கவும், ஹேமா அழுதே விட்டாள். இதுவரை மனதை அழுத்திய விஷயங்களை அவளிடம் கொட்டிக் கவிழ்த்தாள். அவள் சொன்னதைக் கேட்ட திவ்யாவிற்கு ஹேமா, தன் உணர்வுகளை மறைக்க, அவனை அதிகமாகக் குற்றம் சாட்டிவிட்டது புரிந்தது.

“ஹேமா...., இதுக்கா அழுதுட்டு இருக்க. இங்கே பார்..., கண்டிப்பா கணேஷ் புரிஞ்சுப்பார். அவரோட கோபமெல்லாம், நீ விலகி இருக்குற வரைக்கும்தான் இருக்கும். உரிமையாப் பேசிப் பழகினால் எல்லாம் சரியாயிடும்...., இதுக்குப் போய் கண்ணைக் கசக்கிட்டு, நேரமாகுது, கண்ணில் இருக்க மை எல்லாம் கலைஞ்சுடுச்சுப் பாரு. இரு நான் சரி பண்ணுறேன்”, சொல்லிவிட்டு, அவளது அலங்காரத்தை சரி செய்தாள்.

ஆனாலும் ஹேமாவின் முகம் தெளியவில்லை. திவ்யாவிற்கு, தான் தனது கடந்தகாலத்தை இவளிடம் சொல்லியிருக்கக் கூடாதோ என்று முதல் முறையாகக் கவலை கொண்டாள். இருவேறு துருவமான ஆண்களைக் கண்டிருந்ததால், எங்கே இதை வைத்து, கணேஷ், ஹேமாவை ஏதாவது சொல்லி விடுவானோ என்ற பயம் திவ்யாவிற்கு அதிகமாக இருந்தது.

அந்த பயத்தை ஹேமாவிடம் வெளிப்படுத்தாமல் மறைப்பது, அவளுக்கு ரொம்பக் கடினமாக இருந்தது. தன் முக மாற்றம், ஹேமாவை இன்னும் கவலைக்குள்ளாக்கும் என்று தோன்றவே, அதை மறைத்தாள்.

ஆனாலும் கணேஷ் அப்படி எதுவும் செய்துவிடக் கூடாது...., என்ற பதட்டம் அவளைப் பாடாய் படுத்தியது. ஏதோ படபடப்பாக வரும்போல் இருந்தது. அதையெல்லாம் அடக்கியவாறே, ஹேமாவை அலங்காரம் செய்தாள்.

பொண்ணை அழைச்சுட்டு வாங்க...., ஐயர் குரல் கொடுக்கவே, பல குரல்கள் கடந்துவந்து இவர்களை அடைய, திவ்யா, ஹேமாவை அழைத்துக் கொண்டு

சென்றாள். அடர் அரக்கு வண்ணப் பட்டுப் புடவையில், அம்மன் சிலையாகவே இருந்தாள் ஹேமா.

அவளுடன் வந்த திவ்யாவோ, சாணிப் பச்சை நிறத்தில், அழகான கொடிகளின் வேலைப்பாடு அமைந்தப் பட்டுப்புடவையில் ஒரு பூந்தோட்டமாகவே ஜொலித்தாள். மணமேடையில் அமர்திருந்த கணேஷின் பார்வை ஹேமாவையே இமைக்க மறந்து வெறித்தது.

முழுதாக ஐந்து நாட்கள் கழித்து ஹேமாவின் முகத்தைப் பார்க்கிறான்...., அவன் சிந்தையில் எந்தக் கோபமும் இப்பொழுது இல்லை. அவளது மதிமுகம் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது.

திவ்யாவும் அந்த நேரம் ஹேமாவிடம், “ஹேய் கொஞ்சம் அண்ணாவைப் பாரு...., உன்னைத்தான் பாத்துட்டு இருக்கார்”, ஹேமாவின் காதில் சொல்ல, இருவரின் பார்வையும் பின்னிக் கொண்டது.

கணேஷின் ஆர்வமான பார்வையைப் பார்த்த பிறகுதான், திவ்யாவிற்கு நிம்மதியாக இருந்தது. ஹேமாவும் கொஞ்சம் ஆசுவாசமாக உணர்ந்தாள். இவர்களின் உலகத்தில் குறுக்கிட்டான் ஜீவா.

“டேய்..., கொஞ்சம் கண்ணைத் தட்டி முழிடா...., கண்ணு வலிக்கப் போகுது”, ஜீவாவின் கேலிக்குப் பிறகுதான் பார்வையைத் திருப்பினான். கணேஷ் மந்திரத்தில் கவனம் செலுத்த, ஜீவாவின் பார்வை, திவ்யாவை ரசித்தது.

திவ்யாவும் அவனைத்தான் பார்த்தாள்...., பட்டுவேட்டி சட்டையில் அவனது கம்பீரம் திவ்யாவிற்குப் பிடித்தது. ஹேமாவை கணேஷின் அருகில் அமர வைத்துவிட்டு, ஜீவாவின் அருகில் சென்று நின்றுகொண்டாள்.

அஞ்சலியும் கண்ணனும், ஹேமா கணேஷ் இருவரின் அருகில் அமர்ந்து கொண்டார்கள். ஹேமா

ஓரப்பார்வையாக கணேஷைப் பார்க்க, அவனோ ஐயர் சொல்லும் மந்திரங்களிலேயே கவனமாக இருந்தான்.

அவன் தன்னைப் பார்த்தால் நிம்மதியாக இருக்கும் என்று தோன்றியது. அது புரிந்தோ என்னவோ, அவளை அவன் திரும்பியும் பார்க்கவில்லை. மனதுக்குள் சிணுங்கினாள். 'கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி முழுங்குற மாதிரிப் பாத்துட்டு இருந்துட்டு, இப்போ எப்படி இருக்கான் பாரு. உன்னை வச்சுக்கறேன்டா....', மனதுக்குள் கறுவினாள்.

கெட்டிமேளம் முழங்கவே, ஹேமாவின் கழுத்தில் மங்கலநாண் பூட்டினான். அந்த தருணத்தின் இனிமையைக் கலைக்க விரும்பாமல், அவள் கண்களுக்குள் ஆழ்ந்து பார்த்து, மென்மையாகச் சிரித்தான். அவன் பார்வையின் வீச்சுத் தாங்காமல், நாணித் தலைக் கவிழ்ந்தாள்.

முதல் இரண்டு முடிச்சை அவன் போட, மூன்றாம் முடிச்சைப் போட்டாள் திவ்யா. அதேபோல், ஹேமாவின் அண்ணன் செய்ய வேண்டிய சடங்குகள், மரியாதையை, ஜீவா செய்தான். இவர்களின் இந்தச் செய்கை, கணேஷ், ஹேமா, தங்கம் அனைவருக்கும் ஒரு சொந்தத்தைக் கொடுத்தது.

தங்கத்தின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்க, "நிறைஞ்ச செல்வத்தோட நீங்க நூறு வருஷம் நல்லா இருக்கணும்", வாழ்த்தியவர், "தம்பி..., உங்களுக்கு நான் எதுவும் சொல்ல வேண்டாம்...,

"ஆனாலும்...., என் பொண்ணு எவ்வளவு பொறுப்பானவளோ, அதே அளவு, கொஞ்சம் படபடன்னு பேசிடுவா. நீங்க கொஞ்சம் பெரியமனசு பண்ணி அவளைப் பொறுத்துக்கணும்", கடந்த நான்கு நாட்களின் தாக்கம் அவரை இப்படிப் பேச வைத்தது.

கலங்கிய தன் கண்களை, சேலைத் தலைப்பில் துடைத்துக் கொண்டார். "அத்த...., உங்கப் பொண்ணை விட, என் பொண்டாட்டியை, நான் ரொம்ப நல்லாப் பாத்துப்பேன்.

இனிமேல் அவளைப் பற்றி நீங்க கவலையேப் பட வேண்டாம்.

“ஹேமாவைப் பற்றி எனக்குத் தெரியாதா..? அவ என்னோட உயிர்...., அவதான் எனக்கு எல்லாமே...., நீங்க அவகிட்டே, என்னைக் கண்கலங்காம பாத்துக்கச் சொல்லுங்க”, அவருக்கு உறுதியளித்தவன், அங்கிருக்கும் இறுக்கத்தைக் குறைக்கும் பொருட்டு, கேலியும் பேசினான்.

ஜீவாவும், திவ்யாவும் மணமக்களை அணைத்து, தங்கள் வாழ்த்துக்களைச் சொன்னார்கள். அஞ்சலியும் கண்ணனும் அவர்களுக்கு முத்தம் கொடுத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். கண்ணன், கணேஷை முத்தமிட மறுத்துவிட்டான்.

கண்ணனின் மறுப்பு அங்கே சிறு சங்கடத்தை அளித்தது. “கண்ணா..., மாமாக்கு முத்தம் கொடுடா....”, திவ்யா கொஞ்சம் கட்டாயப் படுத்த, கண்ணனோ முரண்டினான்.

“தங்கச்சி அவன் கொடுக்கலன்னா என்ன...? நான் அவனுக்குக் கொடுக்குறேன்..., கண்ணா, மாமா உனக்கு முத்தம் தரவா...?”, கொஞ்சம் பயந்தவாறுதான் கேட்டான். ஏனென்றால் கத்திக் கூச்சல் போட்டுவிட்டால் இன்னும் சங்கடமாகி விடுமே.

கண்ணன் அமைதியாக இருக்கவே, அவனை நெருங்கி, அவன் கையைப் பிடித்து முத்தமிட்டான். முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு பேசாமல் இருந்தான். ஜீவாவுக்கு, அவனை என்ன செய்து மாற்ற, என்பது புரியவே இல்லை.

கண்ணனாக அவனை நெருங்குகிறானே தவிர, ஜீவாவை நெருங்க விடுவதில்லை. அதே நேரம், அஞ்சலியோடு விளையாடும் பொழுது அவனைத் தவிர்த்தால் கலங்கி விடுவான். இதுவரை அவனை எதற்காகவும் ஜீவா கட்டாயப் படுத்தியதில்லை.

இனிமேலும் அப்படியே இருக்கக் கூடாது என முடிவெடுத்தான். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு, கடையில் வைத்து தன்னிடம் வந்தானே...., என்று நினைக்கும் போது, குழப்பமாகவும் இருந்தது. அதை யோசிக்கும் நேரம் இதுவல்ல என்பது புரிய வேலைகளைக் கவனிக்கச் சென்றான்.

போகும் முன்னர், கணேஷ், ஹேமா இருவரையும் மேடைக்குக் கூட்டிச் சென்றான். அவர்களை விட்டுவிட்டு, “திவி நீ ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடு, நான் பந்தியைப் பாத்துட்டு வந்துடுறேன்”, அவளிடம் சொல்லவே,

“என்னங்க..., டிரஸ் வேண்ணா மாத்திடுறீங்களா....? இது அங்கே போனால் பாழாகிடும்”, அவள் சொல்லவே, அவள் வார்த்தையை மீற மனமில்லாமல், அவளோடு சென்றான்.

தங்கள் சூட்கேசில் இருந்து, அவனுக்கு ஜீன்ஸும், டிஷர்ட்டும் எடுத்துக் கொடுக்க, அவன் அதை எடுத்துக் கொண்டு பாத்ரூம் செல்லப் போனான். “என்னங்க..., அங்கே தரை ஈரமா இருக்கு, இப்படியே ஓரமா மாத்துங்க”, அவள் சாதாரணமாகச் சொல்ல, அவனுக்குத்தான் தயக்கமாக இருந்தது.

திவ்யா அவனுக்கு முதுகு காட்டி நிற்கவே, அறையின் ஓரத்துக்குச் சென்று, உடை மாற்றிவிட்டு வந்து, வேஷ்டி சட்டையை அவளிடம் கொடுத்தான். அவள் அதைத் தோளில் போட்டுக் கொள்ள, அதில் இருந்து வந்த அவனது வியர்வை மணத்தோடு சேர்ந்த சென்ட் மணம், ஒருவித போதையை அளித்தது அவளுக்கு.

சட்டென அவனது ஆடையைத் தன் தோளில் இருந்து எடுத்து, கட்டிலில் வைத்தாள். அவளது தடுமாற்றம் எதையும் கண்டுகொள்ளாமல், “அஞ்சும்மா, அப்பா கீழே சாப்பாட்டு ரூமுக்குப் போறேன், நீ வாறியா?”, அவளிடம் கேட்க, அவளோ ஹேமாவிடம் தான் செல்வேன் என்று அடம் பிடித்தாள்.

“சரி, நீ வேண்டாம், கண்ணா வாறியா அப்பா கூட, அப்பா ஐஸ்கிரீம் எடுத்துத் தாறேன்”, ஆசை காட்டவே, வேகமாகத் தாயிடம் இருந்து இறங்கி, அவன் கைகளைப் பற்றிக் கொண்டான். திவ்யாவிடம் சொல்லிவிட்டு அவனையும் அழைத்துக் கொண்டு, அஞ்சுவையும் கூட்டிக் கொண்டு, வெளியேறினான்.

ஜீவா செல்லும் பொழுதே கதவைச் சாத்திவிட்டிருக்க, கட்டிலில் அமர்ந்த திவ்யாவிற்கு, ஜீவாவின் உடையை, வியர்வை வாசம் போக, அங்கிருந்த கொடியில் போடுவதற்காக, அதைத் தொடக் கூட இப்பொழுது தயக்கமாக இருந்தது.

மனதின் ஓரத்தில் எழுந்த ஆனந்தக் குறுகுறுப்பை விட, இரண்டு நாட்களுக்கு முன்பு, வித்தார்த்தைக் கடையில் வைத்துப் பார்த்த நினைவு எழுந்து, அவளது மொத்த உடலையும், அதிர்ச்சியில் விறைக்க வைத்தது.

‘அவன் இங்கே எப்படி வந்தான்...? என்னைப் பார்த்தானா...? பார்த்தால் என்ன செய்வான்...? என் ஜீவா..., கண்ணா...., ஐயோ ஆண்டவா....., ஏன் இப்படி என்னை சோதிக்கிற....?’, இதுவரை இருந்த மனநிலை மாறி, பயம், பயம், பயம் மட்டுமே மிச்சம் இருந்தது அவளிடம்.

திவ்யாவின் இந்த பயத்தை ஜீவா உணர்வானா? திவ்யாவிற்கு ஜீவாவின் மேல் எழும் மெல்லிய உரிமை உணர்வை, இந்த பயம் பொசுக்கி விடுமா...? வித்தார்த் அவளைப் பார்த்தானா..? பார்க்கலாம்.

தணிவு - 13

குளிர்ச்சோலையின் அருகே

பாலைவனத்தை படைத்தவன் யார்?

குளிரும் வெம்மையும்

என்னை மாறி மாறி தாக்குகின்றதே

என்று தீரும் என் தாகம்.....?

கண்ணனை, சாப்பாட்டு அறைக்கு அழைத்துச் சென்றவன், முதல் வேலையாக அவனுக்கு ஐஸ்கிரீம் எடுத்துக் கொடுத்தான். கண்ணன் சாப்பிடத் துவங்கவே, அவனைக் கைகளில் ஏந்திக் கொண்டான். சாப்பிடும் சுவாரசியத்தில் கண்ணன் அதை கவனிக்கவில்லை.

முன்பென்றால் அதிக கவனமோடு இருப்பான். எனவே ஜீவாவின் செய்கை எதுவாக இருந்தாலும், அதிகமாக கவனிப்பான். ஆனால் இப்பொழுது ஜீவாவிடம் அவனுக்கு பயமில்லை. அதை ஜீவாவும் அறிந்தே இருந்தான்.

அவனைத் தூக்க அனுமதி வேண்டுவதால் தான் அவனுக்குத் தயக்கம் வருகிறது. இனிமேல் அவனிடம் அனுமதி கேட்கக் கூடாது என்ற முடிவிற்கு அவன் வந்து விட்டிருந்தான். எனவேதான், கண்ணனை அவன் அனுமதி இல்லாமலேயே கைகளில் ஏந்தினான்.

“நல்லா இருக்கா கண்ணா...?”, அவனிடம் கேட்க, “ம்ம்ம்...”, என்று சொல்லிவிட்டு ஐஸ்கிரீம் சாப்பிடுவதைத் தொடர்ந்தான்.

“சார்...., பையன் யாரு....?”, மில்லில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி கேட்க, “என் பையன்..., பேர் கண்ணன்...”, அவனை அணைத்தவாறு சொல்ல, அப்பொழுதுதான் தான் ஜீவாவின் கரங்களில் இருப்பதை உணர்ந்தான் கண்ணன்.

“நான் கீழே....”, அவன் முரண்டு பிடிக்கவே, ஐஸ் கிரீம் ஜீவாவின் முகத்தில் அப்பிக் கொண்டது. மிரண்டு போனான் கண்ணன்.

ஆனால் ஜீவா அவனது பயத்தைக் கண்டு கொள்ளாமல், “கீழே எல்லாம் சாப்பாடா இருக்குடா. அதெல்லாம் உன் புது ஷூல ஒட்டிக்கும். சோ, அப்பா கையிலேயே இருந்துக்கோ என்ன”, மகனைச் சமாதானம் செய்தான்.

ஜீவாவின் சமாதானத்தைக் கேட்டவன், “ம்...”, என்று விரலை நீட்டி, அவன் கன்னத்தில் இருந்த ஐஸ்கிரீமைக் காட்டினான்.

“அப்பா தொடச்சுக்கறேன் சரியா...., அதெல்லாம் ஒண்ணும் ஆகாது”, பளீர் புன்னகையில் சொல்ல, ஜீவாவின் புன்னகை, கண்ணனையும் தொற்றிக் கொண்டது.

இரண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டவனுக்கு, வெந்நீர் வாங்கிக் கொடுத்துக் குடிக்க வைத்தான். கேள்வியாகப் பார்த்த அவனிடம், “ஐஸ்கிரீம் சாப்பிட்டால்...., சுடு தண்ணி குடிக்கணும். இல்லன்னா சளி பிடிக்கும்”, என்று சொல்லவே மறு பேச்சின்றி வாங்கிக் குடித்தான்.

கண்ணனைக் கீழே விடாமலே மேற்பார்வை செய்தான். சிறிது நேரத்தில், “அம்மா வாவா..., வாவா....”, கண்ணைக் கசக்கியவாறே சொல்ல, அவனுக்குத் தூக்கம் வருவதை உணர்ந்து, “அப்பா தோள்லயே படுத்துக்கோ கண்ணா”, அவன் தலையைத் தன் தோளில் பதித்தான்.

தயங்கியவாறே படுத்தவன், விடி காலையில் எழுந்ததாலும், விளையாடிய அலைச்சலாலும், சீக்கிரம் தூங்கி விட்டான். அவன் தூங்கி விடவே, மகனைத் தூக்கிக் கொண்டு, திவ்யாவைத் தேடி வந்தான்.

அறையைத் திறந்தவன் திகைத்தான். தான் விட்டுப் போன நினையிலேயே அவள் இருக்க, அவள் அருகில் அஞ்சலி தூங்கிக் கொண்டிருந்தாள். இவன் வந்தது கூடத்

தெரியாமல் சுவரையே வெறித்திருக்க, ஜீவா குழம்பிப் போனான்.

அவர்களுக்குத் திருமணம் முடிந்த இந்த ஒரு மாத காலத்தில், முதல் இரண்டு மூன்று நாள் மட்டுமே, திவ்யா இப்படி அமர்ந்து அவன் பார்த்திருக்கிறான். அதன் பிறகு, அவள் இப்படி இருந்ததே இல்லை.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, கடைக்குப் போகும்வரை நன்றாகத்தான் இருந்தாள். அதன் பிறகு, கண்ணன் மற்றும் அவள் நடத்தையில் பெரிய மாற்றம். எதையோ கண்டு பயப்படுபவள் போல் அவள் நடந்துகொள்வது ஏனென்று அவனுக்குத் தெரியவில்லை.

“திவி....”, அவன் அவளை மெதுவாக அழைக்க, திடுக்கிட்டுத் தடுமாறி, கட்டிலில் இருந்து இறங்கினாள்.

“ஹேய் பாத்து....”, ஓடி வந்து அவளைத் தங்கினான்.

“என்னம்மா...?”, அவன் குரலில் இருந்த கனிவு அவளை பலவீனமாக்கியது. ஏற்கனவே குழப்பத்தில் இருந்தவள், அவன் குரலில் உடைந்து அழுதாள்.

கண்ணனை அஞ்சலியின் அருகில் படுக்க வைத்தவன், தன் கைக்குட்டையை அவளுக்குக் கொடுத்தான். அதை வாங்கி முகத்தைத் துடைத்தவள், தன் அழுகையைக் கட்டுப் படுத்தினாள்.

“என்னடா, வயிறு வலிக்குதா....?”, இரண்டு நாட்களுக்கு முன்பே சரியாகிவிட்டது என்று தெரிந்த பிறகும், சந்தேகத்தில் கேட்டான்.

‘இல்லை’ என்பதுபோல் தலையை ஆட்டியவள், “சாப்பிடப் போகலாமா? ஹேமா கணேஷ் சாப்ட்டாங்களா?”, பேச்சை மாற்றினாள்.

அவள் பேச்சை மாற்றுவது புரிந்து, அவனுக்குக் கோபம் வந்தது. அன்றைய இருவரது பேச்சுக்குப் பிறகு, இந்த நான்கு இரவுகளில் இருவரின் மன நெருக்கம் அதிகரித்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

அன்று மருத்துவமனை சென்றுவிட்டு அவளை வீட்டில் விட்டுவிட்டு, இரவில் வீட்டுக்கு வந்து, அவளிடம் வயிற்று வலி எப்படி இருக்கிறது என்பதைக் கேட்கும் வரை, ஜீவாவுக்கு இருப்பே கொள்ளவில்லை.

‘இப்பொழுது பரவாயில்லை’ என்று அவள் சொன்ன பிறகுதான் நிம்மதியாக உணர்ந்தான். இரவில் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்க, அறைக்கு வந்தவனின் கரங்களில் ஒரு டம்பளர் தண்ணீர்.

நேராகச் சென்று டாக்டர் சீட்டைப் பார்த்து, மாத்திரைகளை எடுத்தவன், திவ்யாவின் அருகில் வந்து கையை நீட்டினான். அவளும் கேள்வியாகப் பார்த்தவாறே கைகளை நீட்ட, அவள் உள்ளங்கையில் அவள் சாப்பிட வேண்டிய மாத்திரைகளை வைத்தான்.

கையில் இருந்த நீரையும் கொடுக்க, “நானே சாப்ட்டு இருப்பேனே..”, சின்னக் குரலில் சொன்னாள்.

“ஏன் நான் கொடுத்தால் சாப்பிட மாட்டியா...?”, அவன் இப்படிக் கேட்கவே, மறு பேச்சில்லாமல் மாத்திரையை வாயில் போட்டு, அவன் கையில் இருந்து டம்ப்ளரைப் பிடுங்காத குறையாக வாங்கி, கடகடவென்று ஒரே மூச்சில் குடித்தாள். அவள் குடித்து முடிக்கவே, அவள் கையில் இருந்து டம்ப்ளரை வாங்கி, அங்கிருந்த மேசையில் வைத்தான்.

“நான் பெட்ஷீட் போட்டுக் கீழே படுத்துக்கறேன்...”, அவன் முகத்தைப் பார்க்காமல் சொல்ல, “அப்படியா, அப்போ எல்லோரும் இன்னைக்கு கீழே படுத்துக்கலாம்”, ஒற்றை வார்த்தையில் முடித்துவிட்டான்.

“என்ன இது இப்படிப் புரிஞ்சுக்காமல் பேசுறீங்க....?”, சலித்துப் போனாள்.

“எல்லாம் புரிஞ்சுட்டுதான் பேசுறேன்...., இப்போ, நான் மேலே படுக்க வேண்டான்னா சொல்லு, கீழே படுத்துக்கறேன்”, அவன் சொல்லி முடிக்கவும், ஒரு தலையணை வந்து அவனைத் தாக்கவும் சரியாக இருந்தது.

அதைக் குனிந்து எடுத்து, அவள் கையிலேயே திரும்பக் கொடுத்துவிட்டு, கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டு அசையாமல் நின்றான்.

திவ்யா, கோபமாக அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, ஜீவாவோ மெல்லியப் புன்னகையுடன் அவள் கோபத்தை ரசித்தான். அதைக் கண்ணனும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். தாயின் முகத்தில் தெரியும் கோபமும், ஜீவாவின் சிரிப்பும், அவனுக்கு சுவாரசியத்தைக் கொடுத்தது.

இதுவரை தாயின் வெறுமை, அழுகை, பயம், தவிப்பு இப்படியான உணர்வுகளை மட்டுமே கண்டிருந்தவன், தாயின் முகத்தில் தெரியும் சின்னக் கோபத்தை, என்ன என்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான். அதே நேரம் ஜீவாவைப் பார்க்க, திவ்யாவைப் பார்த்தவாறே, அவனது மோகனமான சிரிப்பை சிந்திக் கொண்டிருந்தான்.

வித்தார்த்தின் கோபம், எரிச்சல், ஆங்காரம், அலட்ச்சியம், கொடூரம் இப்படியான உணர்வுகளையே கண்டு பழகி இருந்தவன், ஜீவாவின் புன்னகை சிந்தும் முகமும், அன்பைச் சுமந்த விழிகளும், தாயைப் பார்க்கும் பார்வையில் தெரிந்த கனிவும், கண்ணனுக்கு ஜீவாவின்மேல் இருந்த பயத்தை அடியோடு விரட்டியது.

கண்ணன் இருவரையும் மாற்றி மாற்றி பார்க்க, அவர்களின் சின்னச் சின்ன பாசம்மிகு பார்வைகள், கண்ணனின் பார்வைக்குத் தப்பவில்லை. அதே நேரம்,

ஜீவா நிறையப் புத்தகங்களை தாய்க்குக் கொடுப்பதும், நன்றி சொல்லி அதை திவ்யா பெற்றுக் கொள்வதையும் பார்த்து, நிம்மதி அடைந்தது அந்தப் பிஞ்சு இதயம்.

திவ்யாவை கவனிப்பதன் மூலம், கண்ணனைத் தான் கவர்வதை அறியவே இல்லை ஜீவா. அவன் இயல்பாகவே இருந்தான். அடுத்த இரண்டு நாட்களும் கூட ஜீவாதான், காலையும், மாலையும் அவளுக்கு மாத்திரைக் கொடுத்தான்.

முதல்நாள் அவனது பேச்சுக்குப் பிறகு, அவன் செய்கையை ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொண்டாள். அதைவிட, அவனது கவனிப்பு பிடித்திருந்தது என்பதுதான் சரியாக இருக்கும். தன் கணவன் உடல்நிலை சரியில்லாத நேரத்தில் தன்னை கவனிப்பது, எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்காது?

அதன் பிறகு திருமணத்துக்கு இரண்டு நாள் முன்பு, ஹேமா, கணேஷுக்குத் திருமணப் பரிசு வாங்கப் போகலாம் என அவளை அழைத்தான். கொஞ்சம் தயங்கினாலும், குழந்தைகளின் உற்சாகம் பார்த்து சம்மதித்தாள் திவ்யா.

இந்தப் பயணம் திவ்யாவைத் தன்னிடமிருந்து தள்ளிவைக்கும் என்று தெரிந்திருந்தால் அழைத்துச் சென்றிருக்க மாட்டானோ? ஒரு பிரபலமான நகைக் கடையின் முன்னர் வண்டி நின்றது. அங்கே குழந்தைகளுக்கென்று தனியான விளையாடும் இடம் இருக்கவே, குழந்தைகளை அங்கே விட்டுவிட்டு, ஹேமாவுக்கும், கணேஷுக்கும் நகை வாங்கச் சென்றார்கள்.

நகை வாங்கி முடிக்கும் வரை திவ்யா சாதாரணமாகத்தான் இருந்தாள். எதேச்சையாக மேலே அண்ணாந்து பார்க்கும் பொழுது, வித்தார்த் படிகளில் இறங்கி வருவதைப் பார்த்துவிட்டாள். அது அவன்தானா...? இல்லை இருக்காது அவன் இல்லை...', தன்னையே சமாதானம் செய்ய

முயன்றாலும், அவள் கண்கள் பொய் சொல்லவில்லை என்பதை உணர்ந்து, தவித்துப் போனாள்.

‘ஹையோ கண்ணன் எங்கே.....’, கண்கள் வித்தார்த்திடமே நிலைக்க, கால்களை ஒரு அடிக் கூட நகர்த்த முடியவில்லை. அருகில் இருந்த ஜீவாவைப் பார்க்க, அவனோ, செய்கூலி, சேதாரம் என எதையோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னங்க நான் பசங்களை கூட்டி வாறேன்....”, அவன் பதிலை எதிர் பார்க்காமல், குழந்தைகள் இருந்த பக்கம் ஓடினாள்.

“அம்மா....”, என்று வந்தக் குழந்தைகளை வாரி அணைத்தவள், அப்படியே ஒரு நிமிடம் அமர்ந்துவிட்டாள். கண்ணன் வேகமாகத் தாயின் முகத்தைப் பார்க்க, அவன் பார்ப்பதை உணர்ந்து, தன்னை சாதாரணமாகக் காட்டிக்கொள்ள முயன்றாள்.

ஆனாலும் அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. ‘அவன் போயிட்டானா....?’, கலவரமாகத் திரும்பிப் பார்க்க, அப்பொழுதுதான் வித்தார்த் இவர்களைத் தாண்டினான். சட்டெனக் கண்ணனின் முகத்தை, தன் மடியில் புதைத்துக் கொண்டாள்.

அவன் அங்கிருந்து வெளியே சென்றுவிட்டான் என்பதை உணர்ந்த பிறகுதான் கொஞ்சமாவது மூச்சுவிடவே முடிந்தது திவ்யாவால். கையிலிருந்த கைக்குட்டையால் வியர்வை வழியும் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

வித்தார்த் இருக்கும் இடத்தில் தான் இருக்கும் வரை, தனக்கு நிம்மதி என்ற ஒன்று கிடையவே கிடையாது என்பது அவளுக்குப் புரிந்தது. ஓ..., என்று கதற வேண்டும் என்ற உணர்வை அடக்கப் போராடினாள்.

அவள் எவ்வளவு அடக்க முயன்றாளோ அவ்வளவு, அவளது உடலும், மனமும் மரத்துப் போனது. கண்ணனும் தாயின்

மனக் கஷ்டம் புரிந்தவன்போல், தாயை விட்டு நகர மறுத்தான்.

அதன் பிறகு, ஜீவாவின் கேள்விப் பார்வையிலும், கண்ணனின் மிரண்ட பார்வையிலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அவர்களோடு இருக்கையில் தலைகாட்ட மறுக்கும் பயம், தனிமையில் அவளைப் பாடாய்ப் படுத்தியது.

தொடர்ந்த நாட்களில் அவளுக்கு, கவலைப்படவோ, பயப்படவோ நேரம் இருக்கவில்லை. மாறாக, ஹேமாவின் திருமண வேலைகளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். அந்த நினைவுகளில் நின்றவளை, கைபிடித்து உலுக்கவே, பதறி விலகினாள்.

அவளது பயம், ஜீவாவிற்கு முகத்திலடித்ததுபோல் இருக்க, அவளை விட்டுவிட்டு விலகிச் சென்றான். செல்லும் அவனைச் சமாதானம் செய்யக் கூடத் தோன்றாமல், திகைத்து நின்றுவிட்டாள். அது ஒரு நிமிடம் தான், பிறகு முத்துவை வரச் சொல்லி, குழந்தைகளைப் பார்க்கச் சொன்னவள், ஜீவாவைத் தேடிச் சென்றாள்.

ஜீவாவுக்கோ, திவ்யா தனது பழையக் கூட்டுக்குள்,முடங்க நினைப்பது வருத்தத்தை அளித்தது. திவ்யா சாப்பாட்டு அறைக்கு அவனைத் தேடி வரவே, அவளிடம் முகம் கோணாமலே நடந்துகொண்டான்.

அவனது இந்தச் செய்கையும் திவ்யாவிற்கு வருத்தத்தையே அளித்தது.

****

மேடையில் நின்றிருந்த ஹேமா கணேஷிடம் பேச முயல, அவனோ வருபவர்களோடு உரையாடவே அதிக ஆர்வம் காட்டினான். மெதுவாக அவன் கரங்களைப் பற்ற, வெடுக்கென உதறிக் கொண்டான்.

ஹேமாவுக்கு கண் கலங்கிவிட்டது. அதை மறைத்தவாறே, “கணேஷ் ப்ளீஸ்....”, குரல் கமறியது.

“ம்ச்..., இப்போ எதுக்குக் கண்ணைக் கசக்குற, இப்போதான் உங்க அம்மா, என் பொண்ணைக் கண் கலங்காமல் பாத்துக்கோங்கன்னு சொல்லிட்டுப் போறாங்க. நீ என்னன்னா....”, அவளைக் கடிந்து கொண்டான்.

அதன் பிறகு, திவ்யா ஜீவா வந்து, சாப்பிட அழைத்து, சாப்பிடும் இடத்திலும், சிறு ஒதுக்கம் காட்டினாலும், போட்டோ கிராபர் சொன்னவாறு எல்லாம் போஸ் கொடுக்கத் தயங்கவில்லை.

அவளிடமும், “எதுக்கு இப்போ இஞ்சி தின்னக் கொரங்காட்டம் மூஞ்சிய வச்சுட்டு இருக்க, கொஞ்சம் சிரி. பிறகு எல்லா போட்டோலையும் உன்னைப் பாக்க சகிக்க முடியாது”, அவள் காதின் அருகில் கிசு கிசுத்தான்.

அவனை அடிபட்டப் பார்வைப் பார்த்தாள் ஹேமா. ‘என்னை மன்னிக்கவே மாட்டியா?’, அவள் கண்கள் அவனிடம் இறைஞ்சியது.

“முதல்ல சாப்பிடு, எல்லாம் பிறகு பாத்துக்கலாம்”, அவன் இறங்கி வரவே மாட்டேன் என்று அடம் பிடித்தான்.

நேரம் மூன்றை நெருங்கவே, குழந்தைகள் எழுந்தவுடன் அவர்களுக்குச் சாப்பாடை ஊட்டிவிட்டு, ஹேமாவின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள் அனைவரும். வீட்டிலும் பால் பழம் கொடுத்துவிட்டு, ஹேமாவை அவள் அறைக்குப் போகச் சொன்னார் தங்கம்.

ஹேமாவால் அறைக்குள் ஓய்வெடுக்கவே முடியவில்லை. திருமண வரவேற்பு வைக்க கணேஷ் விரும்பவில்லை. எனவே இன்று மதியமே வரவேண்டியவர்கள் அனைவரும் வந்துவிட்டார்கள். இரவில், ஹேமா வீட்டிலேயே முதலிரவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஹேமாவுக்கு, கணேஷிடம் பேசியே ஆகவேண்டும், எனவே திவ்யாவிடம் சொல்லி, அவனை வரச் சொன்னாள். கணேஷ் வந்த வேகத்தில், “எதுவா இருந்தாலும் ராத்திரி பேசிக்கலாம்”, சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

கணேஷ் செல்லவும் ஹேமாவைப் பார்க்க வந்த திவ்யா அவள் அழுவதைப் பார்த்துவிட்டு, கணேஷைத் தேடிச் சென்றாள். “என்னண்ணே...., உங்ககிட்டே இருந்து, இப்படி ஒரு செய்கையை எதிர் பாக்கலை. ஒரு பொண்ணே உங்ககிட்டே வலியப் பேசணும்னு சொன்னால்.., நீங்க இப்படித்தான் மூஞ்சியில் அடிச்ச மாதிரி நடந்துப்பீங்களா?

“அங்கே அவ அழுதுட்டு இருக்கா. உங்களுக்கு சந்தோஷம் தானே.... அவளைப் புரிஞ்சுக்காமல் இப்படி நடந்துக்கறீங்களே. இன்னொரு முறை அவ கண்ணில் இருந்து தண்ணியைப் பாத்தேன்..., நான் உங்களைச் சும்மா விட மாட்டேன்...

“உங்கமேல அன்பு வைக்கிறவங்களை ஏன் தான் இப்படிக் காயப் படுத்துறீங்களோ...? உங்களுக்கு அதில் என்னதான் கிடைக்கிறது...? போங்கண்ணா....”, என்று சலிப்பாய் சொல்லிவிட்டு, கண்களைத் துடைத்தவாறே, வெளியேறிய அவளை எதிர் கொண்டான் ஜீவா.

திவ்யா ஸ்தம்பித்து நிற்க, அவளை நெருங்கியவன், ‘மத்தவங்களுக்கு மட்டும்தான் நீ சொல்லுறது எல்லாம் பொருந்துமா?’, என்பதுபோல் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டான்.

அவன் பார்வையைப் புரிந்துகொண்டவள், ‘நீங்க என்கிட்டே நேரடியாவே அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம்....’, கண்கள் உடைப்பெடுத்தது.

வேகமாக மாடியேறி அவளது அறைக்குச் சென்றவள், “ஹையோ...., எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது. ஜீவாவைக் கஷ்டப் படுத்தவே கூடாதுன்னு

நினைத்தாலும் முடியலை. என்னால் இந்த பயத்தையும் ஒதுக்க முடியலையே...", புலம்பியவாறு அழுதாள்.

ஜீவாவோ, கணேஷைப் பிடி பிடியென்று பிடித்துக் கொண்டிருந்தான். "டேய்..., ஹேமா இனிமேல், உன்னால் அழுதான்னு எனக்குத் தெரிஞ்சுது...., உன்னை, திவ்யா என்ன செய்வான்னு தெரியாது. ஆனால் நான் உன்னைக் கொன்னுடுவேன்", கை நீட்டி எச்சரித்தான்.

"ஹேமா...., உன்னால் எல்லார் வாயிலும், நான் விழ வேண்டி இருக்கு, பாரேன்...., இன்னைக்கு நைட் இருக்குடி உனக்குக் கச்சேரி", கை முஷ்டியை இறுக்கி, காற்றில் குத்தினான் கணேஷ்.

தணிவு - 14

தாய்க்கோழியின் சிறகில்

பாதுகாப்பை உணரும் குஞ்சுபோல்

உன் அருகில் நான் உணர்வதால்....

நீயும் என் தாய்ப்பறவையே.....!

கண்ணன் விளையாடிக் கொண்டிருந்தவன், ஜீவாவின் அருகில் வந்து, “அம்மா எங்க....?”, தாயைக் கொஞ்ச நேரம் காணாததால் தாயைத் தேடினான்.

ஜீவாவுக்குமே அதே சந்தேகம்தான், இவ்வளவு நேரம் இங்கே இருந்தவள், தான் கணேஷிடம் பேசிவிட்டு வருவதற்குள், ஆள் மாயமாகி விட்டாளே. நான் அவளைப் பார்க்கும் பொழுதே கண்ணெல்லாம் கலங்கியிருந்தது.

இதில் எங்கே சென்று அழுதுகொண்டிருக்கிறாளோ? சிந்தை அவளையே சுற்றிவர, “அம்மா தூங்கிட்டு இருக்காங்கடா கண்ணா. நீ தங்கம் பாட்டிகிட்டே இரு. அப்பா, அம்மாவைக் கூட்டிட்டு வாறேன்.

கண்ணனை அனுப்பிவிட்டு, திவ்யாவை, யாரும் அறியாதவண்ணம் தேடினான். திவ்யாவிற்கு மாடியில் அறை உண்டு என்பது அவனுக்குத் தெரியுமாகையால், கால்கள் தாமாக அவனை அங்கே கொண்டு சென்றன.

அறைக்கதவு பூட்டியிருப்பதைக் கண்டவன், விரல் மடக்கி மெதுவாக கதவைத் தட்டினான். அழதுகொண்டிருந்த திவ்யா, மடிந்திருந்த இடத்தில் இருந்து வேகமாக எழுந்து, அழுதிருந்த தன் கண்களைக் கைக்குட்டையில் துடைத்துக் கொண்டாள்.

முகத்தை சிரித்தவாறு வைத்துக் கொண்டு கதவைத் திறக்க, அங்கே ஜீவாவை எதிர் பார்க்காதவள், திகைத்து, வழிவிட்டாள். அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டியவன், அதன்மேலேயே சாய்ந்து நின்றுகொண்டான்.

எதுவுமே கேட்காமல், அவள் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். “இப்போ இந்த அழுகை எதுக்கு திவி...? எதை நினைச்சு நீ குழம்பிட்டு இருக்கன்னு எனக்குத் தெரியலை? சில நேரம், உன்னோட குழப்பமும் அழுகையும் நம்மை நினச்சுன்னா அது வேண்டாம்.

“நான் செய்யிற ஏதாவது செயல் உன்னை ஏதோ ஒரு விதத்தில் தாக்கி, உன் மனசுக்குக் குழப்பம் தருதுன்னா..., அதை இத்தோட மறந்துடு. நம்மோட வாழ்க்கையைப் பற்றிய எந்த விதமான முடிவுக்கும் நாம வரவே வேண்டாம்.

“என்னோட வாழ்நாள் முடியிற வரைக்கும் இப்படியே இருக்க நான் தயார். ஆனால் நீ ஒண்ணே ஒண்ண நல்லாப் புரிஞ்சுக்கணும். நீ இப்போ தனி மனுஷி இல்லை. உனக்குத் தோள் கொடுக்க நான் இருக்கேன்.

“உன்னோட எந்தக் குழப்பத்திலும், பயத்திலும், தயக்கத்திலும் உன்னோடு கூட இருக்க, நான் தயாரா இருக்கேன். நீ என்னவள் என்பதில் எந்த மாற்றமும், எந்தச் சூழ்நிலையிலும் வராது, நான் வர விட மாட்டேன்.

“நான் ஜீவா...., ஜீவானந்தன்..., இதை மட்டும் உன்கிட்டே அழுத்தமா பதிய வைக்க நான் முயற்சி செஞ்சுட்டு இருக்கேன். ஆனா நீ இன்னுமே உன்னை தனி மனுஷியாவே நிலை நிறுத்திக்க நினைக்கிறியே ஏன்...?

“என்னைப் பார்த்தால் அவ்வளவு பயமா, வெறுப்பாவா இருக்கு. என்கிட்டே இயல்பா இரேன், பேசேன். உனக்கு, பக்கபலமா நான் இருக்கேன்னு கொஞ்சம் நினைச்சுக்கோயேன், உன்னோட கூட்டுக்குள்ளேயே நீ முடங்குறதைப் பாக்க எனக்குக் கஷ்டமா இருக்கு.

“இவ்வளவு நாள் ஆனபிறகும்...., உன்னோட கண்ணீரை நிறுத்த, என்னால் எதுவும் செய்ய முடியலன்னு நினைக்கும் போது..., எனக்கே என்னை நினைச்சு வெறுப்பா இருக்கு. இன்னுமே உன் மனசில் இருக்குறதை என்கிட்டே சொல்ல முடியலன்னா, வேண்டாம்...

“நீ இப்படியே உக்காந்து அழுதுட்டு இரு, நான் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை மட்டும் பாக்குறேன். ரெண்டு நாளா நீ எதையோ மனசுக்குள் போட்டுப் புழுங்குறன்னு தெரியுது. ஆனால் என்னன்னு என்னால் கண்டுபிடிக்க முடியலை.

“நீயும், இன்னைக்குச் சொல்லுவ, நாளைக்குச் சொல்லுவன்னு நானும் ரெண்டு நாளா காத்துட்டு இருக்கேன் திவி. ஆனா நீ....”, இயலாமையில் தவித்தவாறு, திவ்யா தன்னிடம் எதையும் சொல்லாமல், வருந்துவதைக் காண முடியாமல், அவளுக்குப் புரிய வைக்க முயன்றான்.

ஜீவாவின் வருத்தத்தைக் காண முடியாமல் வாய் திறந்தாள் திவ்யா. “என்னங்க...., நா...ன்... அ...வனப் பா...பாத்தேன்.....”, இதைச் சொல்லும் முன்பே, உடல் மொத்தமும் நடுங்கியது.

“யா..ர....?”, ஒரு நொடி தயங்கியவன், “வித்தார்த்தையா...?”, கண்கள் கூர்மையாக அவளையே துளைத்தது.

“ம்....”, ஒரு முனகல் மட்டுமே அவனுக்கு பதிலாகக் கிடைத்தது. அந்த நேரத்திலும் ஜீவா, வித்தார்த் என்று சொன்னானே தவிர, அவளது முன்னாள் கணவன் என்றோ, கண்ணனின் அப்பா என்றோ சொல்லாததை எண்ணிப் பூரித்தது அவள் மனம்.

“எங்கே வச்சு...? நகைக் கடையிலா? கண்ணனும் பாத்தானா என்ன?”, வேகமாகக் கேட்டான்.

“இல்ல இல்ல.... நான் மட்டும்தான்....”, அவசரமாகச் சொன்னாள்.

திவ்யாவின் நடுக்கமும், பயமும், வித்தார்த்தின்மேல் கட்டுக்கடங்காத கோபம் எழச் செய்தது ஜீவாவிற்கு. ஒரு மனிதனைப் பார்த்து ஒருத்தி இப்படி நடுங்க வேண்டுமென்றால்..., அவன் எவ்வளவு பெரிய அயோக்கியனாக இருந்திருக்க வேண்டும்.

எண்ணமிட்டவன், “சோ வாட்...? இப்போ அவனுக்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. நான் இருக்கும் வரை உன் நிழலைக்கூட அவனை நெருங்க விட மாட்டேன், பிறகு என்ன?”, அவள் பயத்தைத் தெளியவைத்தே ஆகவேண்டும் என்று நினைத்தான்.

அவன் தன்னைக் கடைசி நாள் பார்த்த பொழுது, அவளை நிம்மதியாக வாழ விடமாட்டேன் என்று சொன்னதும், கண்ணனைக் கொன்றுப் புதைத்துவிடுவேன் என்று சொன்னதையும், மிகுந்த தயக்கத்துக்கு இடையில் அவனிடம் விளக்கினாள்.

அவனால் ஜீவாவுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று தான் பயப்படுவதாக, தன் அச்சத்தையும் சொன்னாள். அவள் இதைச் சொல்லவே, ஜீவாவின் இறுகிய முகம் மிருதுவானது.

“நான் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை திவி. நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லி இருக்கேன்...., என்னைக்கு அவன் என்னோட பார்வையில் விழுறானோ அன்னைக்குதான் அவன் இந்த உலகத்தில் இருக்கும் கடைசி நாள்ன்னு.

“அதையும் மீறி, அவன் என் மனைவி, மகனோட நிம்மதியைக் குலைக்க வந்தால், பாத்துட்டு இருக்க நான் ஒண்ணும் கையாலாகாதவன் கிடையாது. இனிமேல் அவன் உன்கிட்டே நெருங்க வந்தால்..., தைரியமா அவனைச் செருப்பால் அடி.

“அதுக்கு மேல என்ன நடக்குதுன்னு நான் பாத்துக்கறேன். இனிமேல் அவன் வாழப்போற ஒவ்வொரு நாளும், ‘ஏண்டா இப்படி வாழணும்’னு நொந்துப் போவான் பாரு”, ஜீவாவின் கண்களில் தெரிந்த ரவுத்திரம் கண்டு, திவ்யாவிற்கு பயம் வரவில்லை, மாறாக யானை பலம் வந்ததுபோல் இருந்தது.

அந்த நேரம் அவன் தோள் சாயவேண்டும்போல் இருந்தது திவ்யாவிற்கு. ஜீவாவிற்குமே அவளைத் தோளோடு

அணைத்து,‘உனக்கு நான் இருக்கிறேன்’ என்பதை இன்னும் தெளிவாக்க விரும்பினான்.

இருவரையுமே தயக்கம் தடுக்க, ஜீவாவோ அவ்வளவு தயக்கத்திலும், கதவில் சாய்ந்து நின்றவாறே, விழிகளை மூடிக் கொண்டவன், “திவி....”, என அழைத்து, தன் வலக்கரத்தை அவள் பக்கம் நீட்டினான்.

அவனது தயக்கம், அவளிடம் கொஞ்சம் கூட இருக்கவில்லை. அவன் கைகளுக்குள், அடிமேல் அடி வைத்து, புகுந்துகொண்டாள். தோளோடு தோள் உரச, மெதுவாகத் தலையை அவன் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

ஜீவா அதன் பிறகுதான் விழிகளையே திறந்தான். வலக்கரத்தால், அவள் இடையை வளைக்காமல், அவள் தோளோடு..., பட்டும் படாமல் அணைத்தான். அவன் தோள் அணைக்கவே, தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. அவன் கண்கள் அவளுக்கு தைரியம் சொல்ல, அவள் கண்களோ மருண்டு விழித்தது. அவள் கண்களில் இப்பொழுதும் பயம் அப்பட்டமாகத் தெரிந்தது.

இருவரின் இமைகளும் இமைக்க மறந்து வெறிக்க, அவன் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் அவள் இமைகள் தாமாக மூடிக் கொண்டன. அவள் இமை மூடவே, ஜீவாவின் இதழ்கள் அவள் நெற்றியில் லேசாக, மிகவும் லேசாக உரசி விலகியது.

ஆயிரம் வார்த்தைகள் அவளுக்குக் கொடுக்காத ஆறுதலையும், தைரியத்தையும், அவனது தோளும், விழிகளும், மயிலிறகான இதழ் தீண்டலும் அவளுக்குக் கொடுத்தது. அங்கே இருவரும் தங்கள் காதலைப் பரிமாறவில்லை, நேசத்தைப் பகிரவில்லை.

ஆனால், ஆதரவாக மாறிக் கொண்டார்கள். உனக்காக நான் இருக்கிறேன் என்ற தைரியத்தை அளித்தான். வாக்குறுதி கொடுத்தான். ஒருவர், மற்றவரின், உணர்வுகளையோ, உணர்ச்சிகளையோ, உடல்களையோ தீண்டாமல், மனதைத் தீண்டிக் கொண்டார்கள்.

ஒரு ஆண்மகனால், இவ்வளவு நெருக்கத்திலும் அணைப்பிலும், கட்டுப்பாட்டோடு இருக்க முடியுமா? திவ்யாவின் மனம் கேள்வி கேட்க, தொய்ந்து விழுந்திருந்த அவள் கரம் உயர்ந்து, அவன் தோள் பட்டையில் பதித்து, அதில் தன் கன்னத்தை அழுந்தப் பதித்துக் கொண்டாள்.

ஜீவாவிற்கோ, திவ்யா அவளது அவ்வளவு பயங்களையும் உதறிவிட்டு, தன் தோள் சாய்ந்திருப்பதே, பெரிய நிம்மதியைக் கொடுத்தது. அதற்குமேல் அவன் எதுவுமே சிந்திக்கவில்லை. அவள் விலகும்வரை அப்படியே நின்றுகொண்டிருந்தான்.

அவளது இந்த பலமெல்லாம், அந்த வித்தார்த்தை நேருக்குநேர் காணும்வரை மட்டுமே என்பதை, இருவருமே அறியவில்லை. சிறிது நேரம் கழித்து அவனிடமிருந்து விலகியவள், “நேரமாச்சு..., நான் போய் பசங்களைப் பாக்குறேன்”, அவன் கண்களைப் பார்த்து சொன்னாள்.

“திவி, கொஞ்சம் பேஸ் வாஷ் பண்ணிட்டுப் போ...”, புன்னகை முகமாக அவனும் சொன்னான். நடந்து முடிந்தவற்றை இருவரும் மறந்து விட்டிருந்தார்கள்.

திவ்யா கீழே வரும்பொழுது, தங்கமே குழந்தைகளுக்கு வேறு உடை மாற்றி விட்டிருந்தார். அவர்கள் மாலைச் சிற்றுண்டியும் முடித்திருந்தார்கள்.

“சாரிம்மா...., பசங்களைக் கூட கவனிக்காமல் இருந்துட்டேன்”, திவ்யா தலைக் கவிழ்ந்து, சங்கடமாகச் சொன்னாள்.

“திவ்யா...., அவங்க என் பேரப் பசங்க. அவங்களுக்குச் செய்யிறதில் எனக்கு சந்தோஷம் தான். நீ மாப்பிள்ளைக்கு காபி கொண்டுபோய் கொடு. ஹேமா தூங்கி எழுந்துட்டாளான்னு தெரியலை...”, சொன்னவாறு அவளிடம் காப்பியைக் கொடுத்தார்.

“அம்மா, மாமாவுக்கும் காபி வேணுமாம், அப்பா சொன்னாங்க...”, சொல்லிவிட்டு அஞ்சலி ஓடிவிட்டாள்.

“அம்மா, பேசாமல் ஒரு ட்ரேல எல்லாம் வச்சுடுங்க. எல்லோருக்கும் சேர்த்து எடுத்துட்டுப் போறேன். நானே ஹேமாவைக் கூப்பிட்டுக்கறேன்...., நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. எல்லாம் இனிமேல் நான் பாத்துக்கறேன்”, அவரைச் சொல்லி அனுப்பிவிட்டு, ட்ரேயுடன் ஹாலுக்குச் சென்றாள்.

அங்கே ஸோபாவில், ஜீவா, கணேஷ் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கல்யாண வீட்டிற்குரிய எந்தப் பரபரப்பும் அங்கே இருக்கவில்லை. ஹேமா, கணேஷ் இருவரின் சொந்த, பந்தங்கள் ஏற்கனவே விட்டுப் போய்விட்டதால், திருமணத்திற்குத் தலைக் காட்ட வந்தவர்கள், மண்டபத்தோடு கிளம்பி விட்டார்கள்.

வாசலில் கட்டிய வாழை மரமும், வீட்டின் உள் அலங்காரம் மட்டுமே திருமணம் நடந்ததற்கு சாட்சியாக இருந்தன. வேலைகாரர்களைக் கூட, தங்கம் விடுமுறைக் கொடுத்து அனுப்பிவிட்டார். வீட்டில் இப்பொழுது அவர்கள் மட்டுமே இருந்தார்கள். திவ்யா, காப்பியை இருவருக்கும் கொடுத்துவிட்டு, ஹேமாவைத் தேடிச் சென்றாள்.

ஹேமா உடை மாற்றியிருந்தாள். ஒரு சாதாரணப் புடவை அணிந்திருந்தாள். திவ்யா வரவே, அவளைப் பார்த்து சோம்பலாகப் புன்னகைத்தாள்.

“என்ன ஹேமா, தூங்கவே இல்லையா...? உன்னைத் தூங்குன்னு சொல்லிட்டு தானே போனேன்”, மென்மையாகக் கடிந்துகொண்டாள்.

“எனக்கு எப்படி திவ்யா தூக்கம் வரும்...? கணேஷ் என்மேல் கோபமா இருக்காரே”, பேசும் பொழுதே, கண்களில் நீர் வழிந்தது.

“அதெல்லாம், அண்ணா கோபமா எல்லாம் இல்லை. முதல்ல நீ இப்படிக் கண்ணுல தண்ணி விடுறதை நிறுத்து. இன்னைக்கு நீ ரொம்ப சந்தோஷமா இருக்க வேண்டிய நாள். அப்படியே அண்ணா கோபமா இருந்தால், கன்னத்தில் ரெண்டு விட்டு, மலையிறக்கு”, குறும்பாகச் சொல்லிக் கண்களைச் சிமிட்டினாள்.

“திவ்யா, நீ இவ்வளவு பேசுவியா...? உங்க அண்ணனை நான் அடிச்சால், பிறகு என்கிட்டே நீ சண்டைக்கு வந்துட்டா? ஆத்தாடியோ நான் மாட்டேம்ப்பா...”, பொய்யாக மறுத்துச் சிரித்தாள்.

“இப்படி சிரிச்சால் எவ்வளவு நல்லா இருக்கு..., சரி வா அங்கே எல்லோரும் காத்துட்டு இருக்காங்க, காபி குடிக்கப் போகலாம்”, அவ்வளவு நேரம் சிரித்த ஹேமாவின் முகம், சட்டென சுருங்கியது.

“ஹேமா இப்போதானே சொன்னேன்..., தைரியமா வா. நாளைக்கும் உங்கப் பிரச்சனை சரி ஆகலன்னா..., நான் அண்ணாவை ஒரு வழிப் பண்ணிடுறேன், போதுமா. நீ இப்படி ரொம்ப பயந்தா..., அதுவே அவருக்கு இடம் குடுக்குற மாதிரி ஆயிடும், நீ வா...”, கிட்டத்தட்ட அவளைப் பிடித்து இழுத்துச் சென்றாள்.

ஹேமா அங்கே அமர்ந்திருந்த கணேஷைப் பார்த்தவாறே நடந்துவர, அவனோ ஜீவாவிடம், கடல் நீரைக் குடிநீராக எப்படி மாத்தலாம் என்பதைப் பற்றி தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

‘ம்கும்..., கட்டுனப் பொண்டாட்டியைக் கொஞ்சறத்துக்கு ஐடியா கண்டுபிடிக்க முடியலை..., இதில், கடல் தண்ணியை குடி தண்ணியா மாத்தப் போறாராம். டேய் கணேஷா....., நீ

ரொம்பப் பண்ணுறடா..., உனக்கு இருக்கு', மனதுக்குள் நொடித்துக் கொண்டாள்.

திடீரென மனதுக்குள் குறும்பு தலை தூக்க, மற்றவர் கவனத்தைக் கவராத வகையில், பொத்தென, கிட்டத்தட்ட அவன் மடியில் அமர்வதைப் போன்று, அவனை ஒட்டி அமர்ந்தாள். கணேஷ் திடுக்கிட்டான், 'என்ன இவ இப்படிப் பண்ணுறா..?', அடிப்பார்வையாக அவளை முறைத்தான்.

அவளோ, கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல், கண்ணடித்துவிட்டு அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு காப்பியை சுவைத்தாள். அவளது செய்கையில் அவனுக்குத்தான் புரையேறியது.

"பாத்து பாத்து...", சொன்னவாறே, அவன் தலையில் ஓங்கி இரண்டு தட்டு தட்டினாள். அவளது தட்டலில், மண்டைக்குள் இருக்கும் மூளையே கலங்கித் தொண்டை வழியாக வந்துவிடும்போல் இருந்தது அவனுக்கு.

அதிர்ச்சி விலகாமல் அவளைப் பார்க்க, "இன்னும் சரியாகலையா...? இன்னும் ரெண்டு தட்டு தட்டவா...?", கண்களைப் படபடவெனக் கொட்டி அவள் கேட்க, உண்மையாகவே அவனுக்கு இன்னும் புரையேறும் போல் இருந்தது.

"ஏய்.... கொஞ்சம் நகர்ந்து உக்காரு...?", அடிக்குரலில் மிரட்டினான் கணேஷ்.

"இதுக்கும் மேலன்னா..., உங்க மடியில்தான் உக்காரணும்..., உக்காரவா..? நான் ரெடி", சொன்னவாறு அவள் எழும்பப் போக, எங்கே செய்து விடுவாளோ என்று அவன்தான் கதி கலங்கிப் போனான்.

இவர்கள் இருவரின் செல்லச் சண்டையைப் பாராமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள் திவ்யாவும், ஜீவாவும். கணேஷின் கோபமும் அவர்களுக்குப் பெரிதாக எடுக்கத்

தோன்றவில்லை. காரணம், கணேஷின் கண்கள் காதலைச் சிந்திக் கொண்டிருந்தன.

ஹேமாவும், அந்த தைரியத்தில்தான் அவனோடு இன்னும் விளையாடிக் கொண்டிருந்தாள். கூடவே ஜீவா, திவ்யா இருக்கும் பொழுது, அத்துமீறி எதையும் சொல்லவோ, செய்யவோ மாட்டான் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ஒரு வழியாகக் காபி குடித்து முடிக்கும் முன்பே, கணேஷ் கொஞ்சம் வியர்த்துவிட்டான். அந்த அளவு அவனைப் பாடாய்ப் படுத்தினாள். பின்னர் நால்வரும், பிள்ளைகளும், மொட்டை மாடியில் பாய் விரித்து அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர்.

கணேஷ், ஜீவா இருவரும் கொஞ்சம் முன்னால் அமர்ந்திருக்க, அவர்களுக்குக் கொஞ்சம் பின்னால் ஹேமாவும், திவ்யாவும் அமர்ந்திருந்தார்கள். அஞ்சலி, ஓடிவந்து ஜீவா மடியில் ஏறுவதும், இறங்கி ஓடுவதுமாக இருக்க, கண்ணன் அவளை விரட்டிக் கொண்டிருந்தான்.

கணேஷ், ஜீவா இருவருக்கும், தரையில் கால்களை மடக்கிப் போட்டு அமர்ந்து பழக்கம் இல்லை என்பதால், கால்களை நீட்டிக் கொண்டு, கைகளைப் பின்னால் ஊன்றி இருந்தார்கள். பேச்சு சுவாரசியமாகப் போய்க்கொண்டு இருந்தது.

திடீரென கணேஷின் கைகள் ஸ்லிப்பாகி, ஹேமாவின் மடியில் விழுந்தான். நல்ல வேளையாக, ஹேமா மடியில் அவன் தலை விழுந்ததால், அவனுக்கு அடியெதுவும் படவில்லை. சுற்றி இருந்த அனைவரும் பதற, “எனக்கு ஒண்ணும் இல்லை...”, அவர்களை சமாதானப் படுத்தியவன், ஹேமாவை முறைத்தான்.

ஹேமா, அதைக் கண்டுகொள்ளவே இல்லை. இரவு சாப்பிடும் இடத்திலும், அவள் வேலையைத் தொடர, “இப்போ நீ சும்மா இருக்கல.., பிறகு ரொம்ப ஃபீல்

பண்ணுவ”, கடித்தப் பற்களுக்கிடையில் வார்த்தைகளைத் துப்பினான் கணேஷ்.

அவனது கோபத்தில், மனம் சுணங்கினாலும், அவனைச் சீண்டுவதை விடவில்லை ஹேமா. சாப்பிட்டு முடித்தவுடன் பிள்ளைகள் உறங்கிவிட, அவர்களை, மாடியில் இருந்த அறையில் உறங்க வைத்தார்கள்.

திவ்யா கீழே வந்து, ஹேமாவை அலங்காரம் செய்து, பாலைக் கையில் கொடுத்துவிட்டு, ஹேமாவின் அறையில் அவளை விட்டுச் சென்றாள். ஹேமாவுக்கு, இதுவரை இருந்த தைரியம் அனைத்தும் வடிந்து போனது.

நடை தளர அறைக்குள் நுழைய, கணேஷ் லேப்டாப்பில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தான். ஹேமாவுக்கு, சுறுசுறு என்று கோபம் ஏறியது. பால் சொம்பை அவன் அருகில் இருந்த டீபாவில் பொத்தென வைத்துவிட்டு, கட்டிலில் ஏறி அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டாள்.

படுத்ததுதான் தெரியும், என்னவோ ரீவைண்ட் செய்ததுபோல் சுழன்று எழும்பி, கணேஷின் முன்னால் நின்றாள். ஒரு நிமிடம் என்ன நடந்தது என்றே அவளுக்குத் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு கணேஷைப் பார்க்க, அவன் கோபமாக இவளை முறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

தணிவு - 15

நான் உனது சுமை தாங்கியாக

நான் உனது காவலனாக

நான் உனது அரணாக.....

ஆனால் நான் உனக்கு யாராக...?

முதலிரவு அறைக்குள் நுழைந்த ஹேமா, லேப்டாப்பில் வேலை செய்துகொண்டிருந்த கணேஷைப் பார்த்துக் கோபம் கொண்டு, அவனுக்கு முதுகுகாட்டிப் படுக்க, என்னவோ ரீவைண்ட் செய்ததுபோல் சுழன்று எழும்பி, கணேஷின் முன்னால் நின்றாள்.

ஒரு நிமிடம் என்ன நடந்தது என்றே அவளுக்குத் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு கணேஷைப் பார்க்க, அவன் கோபமாக இவளை முறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

“ஏய் என்ன விளையாடுறியா...? நீ பாட்டுக்கு வந்த, பாலை வச்ச, படுத்துகிட்ட. இங்கே ஒருத்தன் உக்காந்து இருக்கேனே..., அப்போ எனக்கு என்னதான் மரியாதை”, கோபம் குறையாமலே கேட்டான்.

“உங்களுக்குத்தான் லேப்டாப்பில் ஏதோ ரொம்ப வேலை இருக்குபோல, அதான் நான் ஏன் தொந்தரவு செய்யணும்னு படுத்துக்கிட்டேன். அதென்ன அவ்வளவு பெரிய தப்பா..?”, அவளும் கோபமாகவே சொன்னாள்.

“அப்போ உனக்கு, நீ செஞ்ச தப்பு என்னன்னு தெரியவே இல்லை...?”, இரு பொருள்படக் கேட்டான்.

எப்போழுது இருந்தாலும் இப்படி ஒரு கேள்வி வரும் என்பதை உணர்ந்திருந்தவள் போல், “எனக்குத் தப்புன்னு தெரியப் போய்தான் அன்னைக்கே சாரி கேட்டேன். எவ்வளவு போன், எவ்வளவு மெச்செஜ், எதுவுமே உங்களைத்தான் அசைக்கவே இல்லை.

“அதான் அதுக்கு தண்டனை கொடுத்தே ஆகணும்னு, நீங்கதான் அதுக்குப் பிறகு இங்கே வரவே இல்லையே...., நான்தான் தவிச்சுப் போயிட்டேன். இப்போ என்ன...? உங்க கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்கணுமா...? அதுக்கும் நான் தயார்தான்”, சொன்னவள் அதை செயல்படுத்த முனைகையில், அவளை இழுத்துத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

“அது உனக்கு மட்டும்தான் தண்டனையா...? எனக்கு இல்லையா...? அது, எனக்கு நானே கொடுத்துகிட்ட தண்டனைதான்”, அவளை இன்னும் தன்னோடு இறுக்கிக் கொண்டே சொன்னான்.

“என்ன சொல்லுறீங்க....?”, திகைப்பாய் கேட்டாள்.

“ம்..., கதை சொல்லுறாங்க...., அதென்னமோ, நீ கிட்டே இருந்தாலே, புத்தி மழுங்கிடுது. இவ உனக்குத்தாண்டா, உன் பொண்டாட்டிடான்னு, காதுக்குள் மந்திரம் ஓதுன மாதிரி சத்தம் கேட்டுட்டே இருக்கும்.

“இதில், அன்னைக்கு அவ்வளவு நெருக்கத்தில் அப்படி நின்னா...., மனுஷனுக்கு புத்தி எப்படி நேரா இருக்கும்..? கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன். அதுக்கு, நீ என்ன சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. என்னமோ அலை....”, வேகமாக அவன் இதழ்களை தன் இதழ்களால் மூடினாள்.

மிச்ச வார்த்தைகள் அவள் இதழ்களுக்குள் ஒலித்து அடங்கியது. இந்த நான்குநாள் பிரிவின் தாக்கம் யாருக்கு அதிகம் இருந்தது என்பதை, மற்றவருக்குத் தெரிவிப்பதைபோல், அவர்களின் இதழ்கள் சண்டையிட்டுக் கொண்டன.

மூச்சுவாங்க இருவரும் பிரிந்த பொழுது..., நிற்க முடியாமல் படுக்கையில் விழுந்தார்கள். “சாரிங்க...., நான் சொன்ன அந்த வார்த்தை ரொம்பவே தப்புதான். நான் என்ன செய்தால், உங்களுக்கு அந்தக் காயம் ஆறும்னு சொல்லுங்க, நான் செய்யிறேன். அதுக்காக இப்படியா

என்னைப் பிரிஞ்சு.....", அழுகை வந்தது அவளுக்கு. அத்தோடு உண்மையான மன்னிப்பு வேண்டல் அவளிடம்.

"பிரிஞ்சுன்னு இன்னொரு முறை சொன்ன..., உன்னை என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. அடுத்த நிமிஷமே என் கோபம் எல்லாம் போய்டுச்சு. அதுலயும் உன்னை அடிச்சேனே....", என்னவோ இப்பொழுது அடித்தவன்போல், அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

அவன் முத்தத்தில் மயங்கியவள், "மேலே சொல்லுங்க....", ஹஸ்க்கி வாய்சில் சொன்னாள்.

"உன்னை அடிச்சதுமே எனக்கு என்னையே தண்டிச்சுக்கணும்னு தான் தோணிச்சு. அதைவிட, மறுநாளில் இருந்து இங்கே வந்தால்.., என்னால் உன்னைத் தொடாமல் இருக்க முடியாது ஹேமா. அதனால்தான் ஓடி ஒளிஞ்சுகிட்டேனே தவிர, உன்மேல் இருந்த கோபத்தில் இல்லை. இதைச் சொல்ல எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை", சொன்னவனின் இதழ்கள் அவள் கழுத்தில் ஊர்வலம் போனது.

அவனுக்கு வாகாகக் கழுத்தை வளைத்தவள், "பிறகு ஏன் இன்னைக்குக் காலையில் இருந்து கோபமா இருந்தீங்க. என்கையை வெடுக்குன்னு தள்ளி வேற விட்டீங்க", அவன் தலைமுடியைப் பிடித்து, அவன் முகத்தை நிமிர்த்தி, நம்பிக்கையில்லாமல் கேட்டாள்.

"ஏய்..., நானே ஏற்கனவே, நாலு நாள் கழிச்சு உன்னைப் பாத்ததில் தவிச்சுப் போய், எங்கே மேடையிலேயே, உன்னை ஏதாவது செஞ்சுடுவனோ என்னவோன்னு, பயத்தில் கட்டுப்பாடா நின்னா..., நீவேற என்னைத் தொட்டு உசுப்பி விட்டால் மனுஷன் என்னதான் செய்வான்...

"அதான் உன் கையைத் தட்டி விட்டேன். இப்போ என் கையைப் பிடியேன்.., நான் தள்ளி விடவே மாட்டேன்...", விட்ட இடத்தில் இருந்து அவன் தேடலைத் தொடர்ந்தான்.

அவன் இதழ்களின் பயணத்தில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தாள் அவள். அவள் மேனியின் மென்மைகளில் பித்தாகிப் போனான் அவன். இருவரின் தேகங்களிலும் நெருப்பு பற்றிக் கொண்ட உணர்வு.

திடீரென நினைவு வந்தவளாக, அவனைத் தன் மேல் இருந்து உருட்டித் தள்ளியவள், எழுந்து அமர்ந்துகொண்டு, “அப்போ அதை மதியம், நான் உங்ககிட்டே பேசணும்னு சொன்னப்போ சொல்ல வேண்டியது தானே, அதைச் சொல்லாமல் முறுக்கிட்டுப் போனீங்க”, பிடிவாதமாகக் கேட்டாள்.

இனிய பயணம் பாதியில் முடிந்த எரிச்சலில் எழுந்து அமர்ந்தவன், “எல்லாத்தையும் முழுசாக் கேட்டுடு...., எல்லாத்துக்கும் சேர்த்து பதில் சொல்லிட்டு, நாம ஆரம்பிக்கலாம்”, எரிச்சலாகச் சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

இவ்வளவு சொல்லியும் தன்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்ற கோபம் அவனுக்கு. அவளுக்கோ, நான்கு நாட்களாகத் தன் அழுகைக்கும், காலையில் முதல் தான் தவித்த தவிப்புக்கும் அவன் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று இருந்தது.

கலைந்திருந்த தன் ஆடையைக் கொஞ்சம் சரி செய்தவள், அவன் முதுகில் ஒண்டிக் கொண்டாள். அவள் கைகள் அவன் நெஞ்சில் இருந்த முடியோடு விளையாடியது. அவளது இந்தச் செய்கையில் அவனது எரிச்சல் மறைந்தது.

“ஹேமா..., உனக்கு நிஜமாவே நான் முதல்ல சொன்னது புரிஞ்சுதா இல்லையா...? காலையில், மேடையில் நீ கையைப் பிடிச்சதுக்கே தாங்க முடியாமல் இருந்தவன், தனியா உன் ரூமுக்குக் கூப்பிட்டால் நானும் என்னதாண்டி செய்வேன்..”, அழும் குரலில் கேட்டான்.

“அதுக்கும் நான் கேட்டதுக்கும் என்ன சம்பந்தம்...”, அவளுக்கு இப்பொழுதும் புரியவில்லை.

“என்ன சம்பந்தமா..., மதியம் உன்னை விட்டுட்டுப் போனது ரொம்பத் தப்பு. அப்போவே கதவை மூடிட்டு உன்மேல் பாஞ்சிருந்தேன்னா...., சாயங்காலம் உன்னோட விளையாட்டு எல்லாமே இல்லாமல் இருந்திருக்கும்.

“மடியில் உக்காருற, கண்ணடிக்கிற...., இது எல்லாத்துக்கும் மேல, மாடியில் என் கையைத் தள்ளி விட்டு உன் மடியில் விழ வச்சியே..., தலை ஏதோ கல்லில் அடிபட்டுச் சிதறப் போகுதுன்னு பாத்தா...”, நொடியில் திரும்பி, அவளைப் படுக்கையில் தள்ளி, அவள் மார்பில் புதைய, அவன் சொல்ல வருவது புரிந்து தவித்துப் போனாள் ஹேமா.

அவனைப் பேசவிடாமல் தடுக்க அவன் வாயை மூட முயல, “அத்தோட முடிஞ்சுதுன்னு பார்த்தால்..., சாப்பாட்டு அறையில் கையை நீட்டி, சாம்பாரைப் போடுறேன், பொரியல் போடுறேன்னு..., மனுஷன் கண்ணை அலைபாய வைக்கிற.

“இதுக்கெல்லாம் சேர்த்து ராத்திரி அனுபவிப்பன்னு சொன்னேன்ல...., உன்னை என்ன செய்யிறேன் பாரு”, சொல்லிவிட்டு, அவள் வயிற்றில் முகம் புதைக்க, புரியாத உணர்வில் சிக்கிக் கொண்டாள் ஹேமா.

“ஹையோ கணேஷ் என்ன செய்யிறீங்க....”, அவன் கைகளின் வேகத்தில் தடுமாறினாள் ஹேமா.

ஒரு பெண்ணை முழுதாக அறிந்துகொள்ளும் வேட்கை கணேஷிடம். அவன் இதழ்களும், கைகளும் அவள் மேனியில் கணவனுக்குரிய உரிமையில் பதிய, அவனை அடக்க முடியாமல் சோர்ந்தாள்.

“கணேஷ், முதல்ல லைட்ட ஆப் பண்ணுங்க..., பெட்ஷீட்டைத் தாங்க..”, ஹேமாவின் செல்லச் சிணுங்கல்களும், பொய்க் கோபங்களும், புரியாத முனகல்களும், கணேஷின் இதழ்களின் செயல்பாட்டில் அமைதியடைந்தன.

“கணேஷ் முடியலை....., ஏன் இவ்வளவு அவசரம்...?”, பொய்யாக அவனைக் கண்டிக்க,

“சீண்டாதேன்னு சொன்னால் கேட்டியா...? இப்போ அனுபவி...”, தன்னைக் கொஞ்சம் முரட்டுத்தனமாக அணுகும், அவனது வேகமும் தேவையும் புரிந்து, தன்னை அவனுக்கு ஈடுகொடுத்தாள்.

எங்கே அவளை இப்படி அணுகி விடுவோமோ என்ற பயம்தானே, அவனைத் தன்னிடம் இருந்து ஓடி ஒளியச் செய்தது. அந்த அவனது தேவையை மனமுவந்து கொடுத்தாள். இருவரும் ஒரே உடலென, உயிர்சேரக் கலந்து, களைத்து விலகியபோழுது, அவளை அள்ளித் தன்மேல் போட்டுக் கொண்டான்.

அவன் நெற்றியில் இதழொற்றி, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். அவன் நெஞ்சில் புதைந்து தன் திருப்தியை அவனுக்குத் தெரியப் படுத்தினாள். அவள் கொண்டுவந்த பாலை அவளுக்குக் கொடுக்க, இருவரும் சேர்ந்தே பருகினார்கள்.

காமன் அம்பு அவர்களை மீண்டும் தாக்க, கட்டில் யுத்தம் காலைவரைத் தொடரும்....., இனி இருவரும், இருவரல்ல ஒருவரே.

காலையில் தாமதமாக எழுந்து வந்த தோழியை அணைத்துக் கொண்டாள் திவ்யா. ஹேமா வெட்கப்பட்டுத் தலை குனிய, அவளது வெட்கமே, திவ்யாவிற்கு விஷயத்தைப் புரிய வைக்க, அவளுக்கு திருஷ்டி கழித்தாள்.

ஹேமாவின் மகிழ்ச்சி கண்டு அதிகமாக சந்தோசப் பட்டது திவ்யாதான். இரவு முழுவதும் அவளால் நிம்மதியாக படுத்திருக்கக் கூட முடியவில்லை. எப்பொழுதும், இரவில் அவள்மேல் ஒரு விழி வைத்திருக்கும் ஜீவா, அன்று திவ்யா அதிகமாக அமைதியின்றி இருப்பதைப் பார்த்து, மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

“திவி..., என்னடா...? எதுக்கு இவ்வளவு டென்சனா இருக்க? கணேஷ் ரொம்ப நல்லவன். ஹேமாவை வார்த்தையால் கஷ்டப்படுத்தக் கூட அவனால் முடியாது. நீ அமைதியா இரு. அப்படியே ஏதாவது பிரச்சனை என்றால், நான் பாத்துட்டு சும்மா இருக்க மாட்டேன்”, விதம் விதமாகச் சமாதானம் சொல்லியும் திவ்யா தெளியவே இல்லை.

“என் புத்திக்கும் அது தெரியுதுங்க. ஆனா ஒரு ஆம்பளையை, எந்தச் சூழலிலும் என்னால் நம்பவே முடியலை”, தன் மனதை மறைக்காமல் அவனிடம் உரைத்தாள்.

ஜீவாதான் இன்னும் துடித்துப் போனான். “என்னைக் கூடவா...?”, எதிர்பார்ப்பில் தோய்ந்திருந்தது அவன் குரல்.

“தெரியலங்க.....”, தன் குழப்பத்தை வார்த்தையாக வடித்துவிட்டு கண்கலங்க எழுந்து அமர்ந்துகொண்டாள்.

காலையில் நடந்ததைப் போல, அவளை மென்மையாக அணைத்து ஆறுதல் சொல்ல அவனுக்கும் ஆசைதான். ஆனால் ஏற்கனவே குழப்பத்தில் இருக்கும் அவளது தனிமையை தான் பயன்படுத்துவதாக எண்ணிக் கொள்வாளோ என்று பயந்தான்.

ஜீவா அவனது தயக்கத்தை உதறிவிட்டு அவளுக்கு ஆறுதல் அளித்திருந்தால் தெளிந்திருப்பளோ? இப்பொழுது அவனது விலகல் திவ்யாவை அதிகமாகக் காயப்படுத்தியது. காலையில் நெருங்கியவர், இப்போ ஏன் விலகி இருக்கிறார்?’, அவள் மனம் துடித்தது.

இது உடலுக்கான தேவை இல்லை. ஒருவரை ஒருவர் அன்பாக, அரவணைப்பாக, ஆறுதலாக, தோழமையாக இருப்பதற்கான அவளது தேடல். ஆனால் அவனோ, எங்கே நெருங்கினால், தன்னைத் தவறாக எண்ணிக் கொள்வாளோ? என்றே விலகி நின்றான்.

ஜீவாவின் மனதிலும் இந்த ஏக்கங்கள் அனைத்தும் இருந்ததுதான். ஆனால் எதிர்பார்க்கக் கூட அச்சப்பட்டு, மனதுக்குள் முடங்கியிருந்தான் அவன். அவனது முடக்கத்தை திவ்யா உணரவே இல்லை.

அப்படி உணர்ந்திருந்தால், உன் ஆதரவை, ஆறுதலை, தோழமையை நான் விரும்புகிறேன், ஏற்கிறேன் என்று சொல்லியிருப்பாளோ? இல்லையென்றால் தெரிவிக்கவாவது முயன்றிருப்பாளோ? அந்த இரவு ஜீவாவுக்கும் உறக்கமில்லாத இரவாகக் கடந்தது.

இருவருக்கும் இடையில் மெல்லிய படலம்தான் குறுக்கே நின்றது. ஒருவருக்கொருவர் பேசினாலே அது உடைந்து தூள் தூளாகிவிடும். அவர்களது முந்தைய வாழ்க்கை இருவரின் வாயையும் கட்டிப் போட்டது.

ஜீவா தன்னிடம் உரிமையாய் பழகவில்லை, அவனுக்குத் தான் அஞ்சலியை பார்க்க மட்டும் போதும் என்றும், அதைவிட, தானாகப் போய் பேசினால், அந்த வித்தார்த்தைப் போல..., தன்னைக் கேவலமாகப் பேசிவிடுவானோ என்று அஞ்சினாள். எனவே எதுவாக இருந்தாலும் ஜீவா முதல் அடி வைக்கட்டும் என்று அவள் எண்ணினாள்.

ஜீவாவோ..., திவ்யாவிடம் நெருங்கினால்...., எதுவும் தவறாக எண்ணிக் கொள்வாளோ, அந்த ப்ரியா போல தன்னை அவமானப் படுத்திவிடுவாளோ? வெறுத்து விடுவாளோ? விலகி விடுவாளோ? அவளைக் காயப்படுத்தி விடுவோமோ? என்பதாலேயே..., அவள் மனம் மாறி தன்னிடம் வரட்டும் என்று எண்ணினான்.

இருவருமே பழைய வாழ்க்கையின் தாக்கத்தை விட்டு வெளியே வரத் தயாராக இல்லை.

பழைய கடல்நீராக, உப்பு நீராக, கானல் நீராக அனைத்தும் மாறிவிடுமோ என்று முடங்கிப் போனார்கள். அவர்கள் வெளிவரும் நாள் வருமா?

பள்ளிக்கு இன்னும் ஒரு வாரம் விடுமுறை விட்டிருக்கவே, தோஷ நிவர்த்தி பூஜையை முடிக்க, அவர்கள் கோவிலுக்கு இன்னும் இரண்டு மூன்று நாளில் கிளம்ப வேண்டும் என்று தங்கம் சொன்னார். கணேஷும் அதை ஒத்துக் கொண்டான்.

திவ்யாவும் ஜீவாவும் அவர்கள் வீட்டுக்குக் கிளம்பி விட்டார்கள். தங்கமோ, கோவிலுக்குப் போய் வந்த பிறகு, அவர்களை ஜீவாவின் வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லவே, "அம்மா...., நீங்க மட்டும் தனியா ஏன் இருக்கணும்? நீங்களும் எங்களோட வந்துடுங்களேன்", ஜீவாதான் கேட்டான்.

அவனது இத்தகைய கேள்வியை எதிர் பார்க்காத அனைவருமே திகைத்தார்கள். "நீ கேக்குறதே எனக்குப் போதும் ஜீவா. நீ ஹேமாவோட அண்ணன் ஸ்தானத்தில் இருந்து எல்லா சடங்கும் செஞ்சியே, அப்போலேர்ந்தே நான் உன்னை என் மகனாத்தான் நினைக்கிறேன்.

"எனக்கும் வேற யாரும் இல்லையே. கண்டிப்பா வாறேன்..., ஆனால் இப்போ இல்லை. கொஞ்ச நாள் போகட்டும். உங்க எல்லோர் கூடவும் வந்து இருக்கேன்", சொன்னவர் திவ்யாவை வாஞ்சையாகப் பார்த்து சிரித்தார்.

ஜீவா வெளியே செல்லவே, திவ்யாவை நிறுத்தினார். "அம்மா நான் போயிட்டு வாறேன்..", திவ்யா கண்கலங்கச் சொன்னாள்.

"நல்லபடியா போயிட்டு வாம்மா. உனக்கு எந்த நேரத்தில் உதவி செய்யவும், இங்கே இந்த அம்மா இருக்கேன், என்பதை மட்டும் நீ மறந்துடாதே. இந்த வீட்டுக் கதவு உனக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.

"உன்னால் புது வாழ்க்கையை ஏத்துக்க, கண்டிப்பா நாள் ஆகும். ஆனால் ஏத்துக்கிட்டுதான் ஆகணும். உனக்காகச்

சொல்லலை..., ஜீவாக்காகச் சொல்லுறேன். ஜீவா மனசளவில் ரொம்ப இறுகி இருக்கான்.

“அதை உன்கிட்ட சொல்லக்கூட அவனால் முடியாது. ரெண்டுபேரும் ரெண்டு துருவங்களில் இருந்து வந்து, இப்போ ஒரே புள்ளியில் சந்திச்சு இருக்கீங்க. பழைய நினைவுகள், சம்பவங்கள், எதுவும் சீக்கிரம் மறந்து, மறஞ்சு போகாது.

“உன்னோட கஷ்டத்தை, அவன்கிட்டே மனம் திறந்து இறக்கி வைக்க முடியாதுன்னு நீ நினைக்கும்போது, உனக்காக இந்த அம்மா இருக்கேன்னு, உனக்கு ஞாபகம் இருக்கணும். ஆனா ஜீவாக்கு நீ மட்டும்தான் இருக்க.

“அவனால் வேற யார் கிட்டேயும் மனம் திறந்து பேசவே முடியாது. உன்னோட துன்பத்தை நீ அழுது தீத்துக்குவ, ஒரு ஆணா இருப்பதால், அதைக் கூட செய்ய அவனால் முடியாது. அவனைப் பற்றிக் கூட அவன் இப்போ நினைக்க மாட்டான். அவன் நினைப்பெல்லாம் உன்னைப் பற்றி மட்டும்தான் இருக்கும்.

“அதை நீ புரிஞ்சுக்கோ திவ்யா. அவனோட காயத்துக்கெல்லாம் மருந்து நீதான். உன்னால் மட்டும்தான் அவனைப் பழைய ஜீவாவா மாத்த முடியும். ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முயற்சி பண்ணுங்க.

“ஆதரவா ஆறுதலா இருங்க. அதுதான் இந்த அம்மாவுக்கு வேணும் சரியா”, ஆதரவாக அவள் தலையை வருடி, எதார்த்தத்தைப் புரிய வைக்க முயன்றார்.

“நீங்க சொல்லுறது எனக்குப் புரியுதுமா. கண்டிப்பா பாத்து நடந்துக்கறேன்”, உறுதி கூறிவிட்டு, வெளியேறினாள்.

காரில் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தான் ஜீவா. அவனோடு போய் சேர்ந்துகொண்டாள். ஜீவாவைப் பார்த்தாள். “வீட்டுக்குப் போலாமா...?”, அவளிடம் கேட்டான். அமைதியாக தலை அசைத்தாள்.

‘என் மனதையே என்னால் சமாதானம் செய்ய முடியாத பொழுது, உங்களை எப்படி நான் மாற்றப் போகிறேன்? என்னால் முடியுமா? முதலில் நான் மாறுவேனா? நாம ஏன் முதலிலேயே நல்ல விதமாகச் சந்திக்கவில்லை?

விதி நம் இருவருக்கும், ஏன் இவ்வளவு பெரியக் கொடுமையான கடந்த காலத்தை வைத்தது?’, மனம் அவனைப் பற்றியே சிந்திப்பதைக் கூட அவள் உணரவில்லை. அவள் உணர்ந்து ஜீவாவின் மனதை திறக்க வைப்பாளா?

தணிவு - 16

நீயே என் உயிரானவன்.....

உணரும் மனதுக்குப் புரிவதில்லை

நீ எனக்கு வலிகளை மட்டுமே

தருவாய் என்று.....

அதன் பிறகு வந்த இரண்டு நாட்கள் ரெக்கை கட்டிக்கொண்டுப் பறந்தன. மூன்றாம் நாள் மாலையில் ஹேமா, கணேஷ் மற்றும் தங்கம் மூவரும் கோவிலுக்குக் கிளம்புவதாக இருந்தது. அன்று காலையில் அலுவலகம் சென்ற ஜீவா,பதினோரு மணிக்கே வீட்டுக்கு வந்தான்.

“திவி, கொஞ்சம் என்னோட கார் ஷோரூம் வரைக்கும் வாறியா?”, அவள் மறுத்துவிடுவாளோ என்று மிகுந்த தயக்கத்துடன் கேட்டான்.

அவன் கண்களில் தெரிந்த தவிப்பே அவன் மனநிலையை உணர்த்த, “நீங்கமுன்னாடியே சொல்லியிருந்தால், நானும் பசங்களும் கிளம்பி இருந்திருப்போமே”, தன் சம்மதத்தை சொன்னாள்.

“இல்ல..., அதென்னமோ ஆர்டர் போடுற மாதிரி...., இல்ல அது என்னன்னா... நீ பசங்களை தனியா கிளப்ப ரொம்பக் கஷ்டப் படுவியே அதான்.., டேய் வாங்கடா, அப்பா உங்களை வெளியே கூட்டிப் போறேன். நாம ஹோட்டல்ல சாப்பிடப் போகலாம்”, சாதாரணமாகக் கேட்கும் ஒரு விஷயம் கூடவா அவனுக்கு இவ்வளவு தயக்கத்தைக் கொடுக்கிறது?

அந்தப் ப்ரியாவின்மேல் கட்டுக்கடங்காத கோபம் வந்தது திவ்யாவிற்கு..., ஒரு ஆண்மகனை, இந்த அளவு குன்ற வைக்க முடியுமா ஒரு பெண்ணால்..., ச்சே...., எண்ணத்தை அத்தோடு உதறியவள், கிளம்பச் சென்றாள்.

திவ்யா கிளம்பி வரும் முன்னர், குழந்தைகளை அவன் கிளப்பிவிட்டான். திவ்யாவைப் பார்த்த ஜீவாவுக்கு அவள் உடுத்தியிருந்த பச்சை வண்ணப் புடவை பிடிக்கவில்லை. அதென்னவோ மிகவும் சாதாரணமாக இருந்தது. அவளது நிறத்துக்கும் எடுப்பாக இருக்கவில்லை.

அதை அவளிடம் சொல்லத் தயக்கம் தடுக்க, அஞ்சலியோ..., “அம்மா இந்தப் புடவை நல்லாவே இல்லை...., அந்த ப்ளூ கலர் போடுங்க”, திவ்யாவோ, அஞ்சலி அப்படிச் சொல்லவே, ஜீவாவின் முகத்தைப் பார்த்தாள்.

அவன் முகமும் அதையே சொல்ல, “பிடிக்கலன்னா சொல்ல வேண்டியது தானே....”, அவனுக்குக் கேட்குமாறு முணுமுணுத்தாள்.

“அதான் சொல்லிட்டனே அம்மா.....”, அஞ்சலி சிணுங்கினாள். திவ்யா இப்படிச் சொல்லவே, ஜீவாவிற்கு ஒரு நிமிடம் அவள் தன்னிடம்தான் இப்படிச் சொன்னாளா? என்றே நம்ப முடியவில்லை. ஆனாலும் அடி மனதில் சின்னத் தித்திப்பு.

திவ்யா புடவை மாற்றி வந்தவள், “அஞ்சும்மா நல்லா இருக்கா...?”, கேள்வி அவளிடமும், பார்வை அவனிடமும் கேட்டது.

அவனது மலர்ந்த முகத்தில் இருந்தே, அவனுக்குப் பிடித்திருக்கிறது என்பது புரிந்து போனது. அஞ்சலியோ, “சூப்பரா இருக்கீங்கம்மா...”, சொன்னவாறு அவள் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

ஜீவா அதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள, திவ்யாவிற்குத்தான் ஏனோ வெட்கமாக இருந்தது. அதை உணராமலேயே, “போலாமா...”, கேட்டவன், கண்ணனைத் தூக்கிக் கொண்டான்.

அஞ்சலியை திவ்யா தூக்கிக் கொள்ள, முத்துவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள். இப்பொழுது கண்ணன்,

ஜீவா தூக்கினாலும் எதுவும் சொல்வதில்லை. ஆனால் அவனாக ஜீவாவைத் தூக்கச் சொல்ல மாட்டான். அதென்னவோ கண்ணனால் இன்னுமே ஜீவாவிடம் இயல்பாகப் பழக முடியாமல்தான் இருந்தது.

அனைவரும் கிளம்பி சந்தோஷ மனநிலையோடே ஷோரூம் சென்றார்கள். காரிலிருந்து இறங்கியவுடன், “திவி..., நான் ஹேமாவுக்கு ஒரு கார் ப்ரெசென்ட் பண்ணணும்னு நினைச்சேன். அப்போ தோணவே இல்லை.

“அவங்க திருச்சிக்கு ட்ரைன்ல போறேன்னு சொன்ன பிறகுதான் தோணிச்சு. எனக்குப் பிடிச்ச ரெண்டு கலர் செலக்ட் பண்ணி வச்சு இருக்கேன். நீ ரெண்டையும் பாரு, உனக்கு எது புடிச்சிருக்கோ அதை வாங்கிடலாம்”, கடைக்குள் நுழையும் முன்னர் அவளிடம் சொல்லிவிட்டான்.

கார்களைப் பார்த்தவுடன் கண்ணனும், அஞ்சலியும் விளையாடத் துவங்கினார்கள். சேல்ஸ் மேன் வரவே, ஜீவா விவரம் சொல்லி, அந்த இரு கார்களையும் திவ்யாவிற்கு காட்டச் சொன்னான். அவனும் திவ்யாவை அழைத்துச் செல்ல முயன்றான்.

திவ்யா வேகமாக ஜீவாவின் கையைப் பிடித்து தடுத்தாள். “என்னம்மா....”, கனிவாகக் கேட்க, “நீங்களும் வாங்க...”, மெதுவாகச் சொன்னாள்.

“நானும் வாறேம்மா...., கேஷ் டூடெய்ல்ஸ் கேக்கணும். நீ போ, நான் ரெண்டே நிமிஷத்தில் வந்துடுவேன். நான் உன் பக்கத்துலதான் இருக்கேன் சரியா”, அவள் கையை அழுத்தி, தைரியம் சொல்லி அனுப்பினான்.

அவளும் அரை மனதாகக் கிளம்பினாள். அவள் அந்தப் பக்கம் செல்லவே, மேனேஜர் ரூம் செல்லும் வழியில், அவனது டீலர் ஒருவரைப் பார்த்துவிட, மரியாதை நிமித்தமாகத் தொடர்ந்த பேச்சு, தொழிலின் புது முயற்சியில் வந்து முடிய, பேச்சு தொடர்ந்தது.

அந்த நேரம் சேல்ஸ்மேன், காரின் செயல்பாடு, வண்ணம், புதுத் தொழில்நுட்பம் என அனைத்தையும் திவ்யாவிடம் விளக்கிவிட்டு, “நீங்க ரெண்டு காரையும் பாருங்க மேடம், நான் சாரைப் பாத்துட்டு வாறேன்”, சொல்லிவிட்டு அவனும் விலகினான்.

அஞ்சலியும் கண்ணனும் ஒரு காருக்குள் ஏறி விளையாடிக் கொண்டிருக்க, அந்த லேட்டஸ்ட் மாடல் ஸ்விப்ட் காரை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் குனிந்து கண்ணாடி வழியாக உள்ளே பார்த்துக் கொண்டிருக்க, திடீரென்று அவள் பின்புறத்தில் எதுவோ உராயும் உணர்வு.

முதலில் அதை அசட்டை செய்தவள், ஏதோ வித்தியாசம் புரிய, அந்த சேல்ஸ்மேன் தன்னிடம் தவறாக நடக்கிறானோ என்று விருட்டென திரும்பி முறைத்தவள், கதி கலங்கிப் போனாள். அவளுக்குத் தான் காண்பது கனவா நனவா என்று தெரியவில்லை.

ஆனால் கோணல் சிரிப்புடனும், வக்கிரமான பார்வையுடனும் தன் கண்முன்னால் நிற்கும் உருவம், பொய்யாக இருக்க முடியாதே. அவள் எண்ணம் சரியே என்பதுபோல், “என்னடி...., சும்மா தள தளன்னு இருக்க. இதுமட்டும் என் வீடா இருந்திருந்தால்...”, அவன் பார்வை அவள் மேனியில் படிந்த விதத்திலேயே, அவன் சொல்ல வருவது இன்னதென்று அவளுக்குப் புரிந்து போனது.

உடலெல்லாம் அருவருப்பாக, ஏதோ கம்பளிப் பூச்சி ஊரும் உணர்வில் அருவருத்துப் போனாள். பேசக் கூட நா எழவில்லை. ‘இவன் எப்படி இங்கே....?’, இதுவே அவள் மூளையில் ஓட, செயல்பட முடியாமல் மூளை வேலை நிறுத்தம் செய்தது.

‘ஐயோ நான் என்ன செய்வேன்..., இங்கே இருந்து ஓடு ஓடு என்று மூளை கூச்சலிட, அதை செயல்படுத்த முடியாமல் கால்கள் செயலிழந்துப் போனது. அதைவிட, இப்பொழுது

இங்கே ஜீவா வந்தால் என்ன ஆகும்? என்ற பயம் வேறு அவளை ஆட்டிப் படைத்த அதே நேரம்,

அவன் வந்துவிட மாட்டானா என்று ஒரு மனம் ஏங்கியது.

அவளது அதிர்ச்சியைப் பார்த்தவன் வாய்விட்டுச் சிரித்தான். அவனது சிரிப்பு சத்தம் கேட்ட கண்ணன், “அம்மா....”, என்ற அலறலோடு அங்கே வந்து சேர்ந்தான்.

“அட...., இந்தச் சனியனும் இங்கேதான் இருக்கா...? செத்து ஒழிஞ்சிருப்பீங்கன்னு பாத்தால் இன்னும் உயிரோடதான் இருக்கீங்களா?”, அவன் எகத்தாளமாகக் கேட்டான்.

அவனது பேச்சு அவளைக் கொஞ்சம் சீண்டிவிட, “உன்னை மாதிரி ஜந்துக்கள் எல்லாம் உயிரோட இருக்கும்போது நான் ஏண்டா சாகணும்”, எப்படியோ கேட்டுவிட்டாள்.

“என்னடி பேச்செல்லாம் புதுசா இருக்கு...., இது சரியில்லையே, அடக்கணுமே....”, அதே பழைய நிதான நடையுடன் அவளை நெருங்க, பின்னால் கார் இருந்ததால் அவளால் நகரக் கூட முடிவவில்லை.

இவர்கள் இரண்டு காருக்கு நடுவில் நின்றதால், அவன் வம்பு செய்வது யாருக்கும் தெரியவில்லை. அவளை நெருங்கும் வேளை, அங்கே வந்த அஞ்சலி, “ஹல்லோ, நீங்க யாரு...., உங்களுக்கு என்ன வேணும்..? கண்ணா என்னடா...? அம்மா என்ன ஆச்சு..?”, பயந்து நடுங்கி, மழையில் நனைந்த கோழிக் குஞ்சாக இருந்த இருவரையும் பார்த்து அஞ்சலி கேட்டாள்.

“என்னது,‘அம்மா’வா....? என்னடி, உடம்பு ரொம்ப தெனவெடுத்துச்சு போல..., அதுக்குள்ளே வேற ஒருத்தனைப் புடிச்சுட்டியா...? எப்படி அவன், என்னை மாதிரியா, இல்ல....?”, கண்ணடித்துக் கேட்க, இப்படிப் பட்டவனிடம் மேலும் எதைத்தான் எதிர் பார்த்திருக்க முடியும்.

அஞ்சலிக்கு, அவன் ஏதோ தப்பாகப் பேசுகிறான் என்பது புரிந்து போனது. “நான் அப்பாவைக் கூட்டி வாறேன்....”, சொல்லிவிட்டு ஜீவாவை அழைக்கப் போனாள்.

“அம்மா போலாம்....., இங்கே வேணா.....”, கண்ணன் அவளைப் பிடித்து உலுக்கினான்.

“நம்ம வீட்டுக்குப் போலாமாடா கண்ணா....., வா...வா...., இல்லன்னா வேண்டாம்....., கொஞ்ச நேரம் நீ தள்ளிப் போய் விளையாடு...., நான் அம்மாகிட்டே தனியா பேசிட்டு வாறேன்..., போ..போ.....”, வில்லத்தனமாகச் சொன்னவாறு, கண்ணனை விலக்கப் போனான்.

அந்த நேரம்....., “கண்ணா....”, என்ற ஜீவாவின் குரல் கேட்க, “அப்பா...”, என்ற கதறலுடன் ஜீவாவை நோக்கி ஓடினான்.

கண்ணன் ஜீவாவை, முதல் முறையாக ‘அப்பா’ என்று அழைக்கிறான். ஜீவா கண்ணனை, இறுக அணைத்து தூக்கிக் கொண்டான். உருவாக்கியவன் முன்பு, உறவான தன்னை ‘அப்பா’ என்று அழைத்தக் கண்ணனின் அழைப்பில் நெஞ்சை நிமிர்த்திப் பெருமைக் கொண்டான் ஜீவா.

“ஒண்ணும் இல்லடா கண்ணா..., அதான் அப்பா வந்துட்டனே. இங்கே பார்”, கண்ணனைச் சமாதானம் செய்தான்.

“எவண்டா உனக்கு அப்பன்...., நாந்தாண்டா உனக்கு அப்பன்...., கண்டவனையும் அப்பான்னு சொல்லி, என்னைக் கேவலப்படுத்துற. ஏண்டி..., அவனுக்கு நான்தானே அப்பன்..., இல்ல....”, அவளை நெருங்கிச் சென்று கேட்க, வெலவெலத்துப் போனாள் திவ்யா.

“திவி....”, ஜீவாவின் அழுத்தமான அழைப்பு, அவளை ஜீவாவை நோக்கி நகர்த்தியது. கண்ணனை ஒரு கரத்தில் ஏந்தியவன், திவ்யாவை அடுத்தக் கைக்குள் கொண்டுவந்தான்.

“ஒரு தாய்தான், தன் மகனுக்கு அவனோட அப்பாவை அடையாளம் காட்டுவா. அப்படிப் பார்த்தால், திவி கண்ணனுக்கு என்னைத்தான் அப்பாவா அடையாளம் காட்டி இருக்கா. பிள்ளை கொடுக்குறவன் எல்லாம் அப்பன் ஆயிட முடியாது. அதுக்கான நடத்தையும், அவன்கிட்டே இருக்கணும்”, சூடாக பதில் கொடுத்தான் ஜீவா.

ஜீவாவின் அணைப்புக்குள் இருந்த திவ்யாவின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ‘தைரியமாக அவனை எதிர்க்காமல், தன்னிடம் வந்து பயந்து ஒண்டிக் கொண்டிருக்கும் அவளை, என்ன செய்ய என்பதுபோல் பார்த்தான் ஜீவா.

அவளோ, “இங்கே இருந்து போய்டலாங்க....”, பரிதாபமாகக் கெஞ்சினாள்.

“என்னடி அவன்கிட்ட கொஞ்சுற...., கட்டுன புருஷன் எதிரிலேயே, கண்டவனோட கட்டிப் புடிச்சுட்டு நிக்கிறியே, உனக்கே வெக்கமா இல்ல...”, பாம்பு அதன் விஷத்தைக் கக்கத் துவங்கியது.

அங்கே இருந்த சேல்ஸ் மேன்கள், மேனேஜர் அனைவரும் கூடி விட்டார்கள். அத்தோடு, பிள்ளைகளின் முன்னால் அவன் இவ்வளவு கேவலமாகப் பேசுவதை, ஜீவாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“என்னது, நீ..... கட்டிகிட்டப் புருஷனா....”, ஆத்திரமாக ஜீவா கேட்க, “ஆமாடா நான்தான் அவளோட புருஷன்....., அவ உடம்பில், எங்கே எங்க என்ன மச்சம் இருக்குன்னு சொல்லவா....? அப்போ தெரியும், யார் புருஷன்னு...”, வக்கிரமாகப் பேசினான்.

தன் பெண்மையை இவ்வளவுபேர் மத்தியில் அவன் கேவலப்படுத்துவதில் துவண்டு போனாள். திவ்யாவின் உயிர் துடித்தது. அதைவிட அதிகமாக ஜீவா வெகுண்டான்.

“நாக்கை அடக்கிப் பேசுடா....., இல்ல நான் அடக்க வேண்டி இருக்கும்”, அடிக்குரலில் கர்ஜித்தான் ஜீவா.

“என்னடா, போட்டியில் தோத்துடுவோம்னு பயமா? நான் வேண்ணா உனக்கு சில டிப்ஸ் தாறேன்...”, கேவலமானச் சிரிப்புடன் சொல்ல, திவ்யாவின் பயம், கண்ணனின் பரிதவிப்பு, அஞ்சலியின் குழப்பமான மனநிலை,

“என்னங்க...., என்னால் முடியலங்க....”, திவ்யாவின் கதறல் அனைத்தும் சேர்ந்து, ஜீவாவை கோபத்தின் உச்சியில் ஏற்ற, தன் கால்களுக்கு எட்டும் தூரத்தில் நின்ற அவனை, ஓங்கி அடி வயிற்றில் மிதித்தான்.

இந்தத் தாக்குதலை எதிர் பார்க்காத வித்தார்த், ஷோரூம் கதவின் அருகில் சென்று சுருண்டு விழுந்தான். அத்தோடு அவனை விட மனமில்லாமல், திவ்யாவை விலக்கிவிட்டு, கண்ணனோடு விரைந்து சென்று இன்னும் இரண்டு மிதி மிதித்தான்.

கட்டுமஸ்தான ஜீவாவின் முன்னால், வித்தார்த்தால் நிற்க முடியவில்லை. அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு சுருண்டுவிட்டான். “என்மேலையாடா கையை வச்ச, நான் கவர்மென்ட் எம்ப்ளாயிடா, உன்னை என்ன செய்யிறேன் பாரு..?”, அடிபட்ட நாகமாகச் சீறினான்.

“ஓ.... அப்படியா....? அப்போ இதையும் சேர்த்துப் பாரு”, ஓங்கி அவன் வாயிலேயே ஒரு மிதி மிதித்தான். வித்தார்த்தின் உதடு கிழித்து ரத்தம் வடிந்தது. இன்னும் மிதிக்கப் போன அவனை, கடை ஊழியர்கள் வந்து இழுத்துப் பிடித்தார்கள்.

“டேய், என்னையே அடிச்சுட்ட இல்ல...., உன்னை என்ன செய்யிறேன் பாரு....”, எழுந்து வயிற்றைப் பிடித்தவாறே சென்றுவிட்டான்.

கண்ணனோ, “அப்பா சூப்பர்.....”, என்று சொன்னவாறு, ஜீவாவின் கன்னத்தில் முத்தமிட்டான்.

“கண்ணா...., அப்போ, உன்கிட்டே அப்பா முத்தம் வாங்கணும்னா, தினமும் யாரையாவது போட்டு மிதிக்கணுமா...?”, அவனைத் தூக்கிப் போட்டவாறு கேட்டான்.

“இல்ல...., அவன மிதிக்கணும்...”, சீரியசாக பதில் சொன்னான் கண்ணன்.

“அப்பா...., அப்பா.... லவ் யு அப்பா....”, ஜீவா வித்தார்த்தை அடித்து வீழ்த்தியதில், கண்ணனுக்கு அவ்வளவு சந்தோஷம். கண்ணனின் மனதில் நிரந்தர இடத்தை, ஜீவா அந்த நொடி பிடித்துக் கொண்டான்.

‘இந்தப் பிஞ்சு மனதில் கூட வன்மம் வளர வச்சுட்டானே’, எண்ணியவன், “அப்பா அவனைப் பாத்துக்கறேன். இனிமேல் அவனைப் பத்தி நினைக்கவே கூடாது. அவன் இனிமேல் உன்னை, அம்மாவை எதுவுமே சொல்ல, அப்பா விடவே மாட்டேன் சரியா”, அங்கே அவமானத்தில் கூனிக் குறுகி நின்றிருந்த திவ்யாவின் அருகில் சென்றான்.

“நீ எதுக்கு இப்படி நிக்கிற..., நக்குற நாய்க்கு, செக்கு எது, சிவலிங்கம் எதுன்னு தெரியுமா என்ன? அவன் பொண்டாட்டிக்கும், அடுத்தவன் பொண்டாட்டிக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிட்டுப் போறான்..., அதை எதுக்கு நீ பெருசா எடுத்துக்கற.

“அவன், கிட்டே வந்த உடனேயே நல்லாப் பழுக்க ரெண்டு அடி கொடுக்குறதுக்கு என்ன..? இனிமேல், அவன் உன்கிட்டே வாலாட்ட வந்தால், நல்லா நாலு அறை விடு, தன்னால் அடங்கிடுவான். நீ வா...”, திவ்யாவைத் தோளோடு அணைத்தவாறு வெளியே வந்தான்.

காருக்குள் அவளை அமர வைத்தவன், தானும் அமர்ந்து கொண்டான். குழந்தைகளைப் பின்னால் விட்டவன், “என்ன திவி...?”, அவன் கேட்க, அவளோ மடியில் முகம் புதைத்து அழுதாள்.

“இப்போ எதுக்கு அழற....? அதான் நான் இருக்கேனே..., இன்னும் என்ன...? சாரிடா, நீ தனியா விட்டுட்டுப் போகாதீங்கன்னு சொல்லியும் நான் போயிட்டேனே. நான் அங்கே இருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது இல்ல..”, பழியைத் தன்மேலேயே போட்டுக் கொண்டான்.

தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், “என்னால் உங்களுக்கு எவ்வளவு அவமானம், தலைக் குனிவு...., நான் இப்படியே எங்கேயாவது போய்டுறேன்...., என்னால் முடியலை. அவனைப் பாத்தாலே பயம்தான் வருது.

“அவனை விட்டுப் பிரிந்து வந்த பிறகும்..., என்னால் அந்த பயத்தில் இருந்து வெளிவரவே முடியலை. நான் என்ன செய்யட்டும்...? என்னை மன்னிச்சுடுங்க....”, கதறித் தீர்த்தாள், அவளது நடுக்கமும் குறையவில்லை.

குழந்தைகளையும் வைத்துக் கொண்டு, எதுவும் சொல்ல முடியாமல், வேகமாகக் காரை கிளப்பிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவர்களை முத்துவிடம் விட்டு, வெளியே அழைத்து செல்லச் சொல்லிவிட்டு,

அவளை அழைத்துக் கொண்டு மாடியேறியவன், அவளைத் தன்னோடு சேர்த்து மென்மையாக அணைத்துக் கொண்டான். “அப்படியென்ன பயம் உனக்கு...? உன்னை ஏதாவது செஞ்சுடுவான்னா?”, அவளிடம் கேட்டான்.

“இல்லங்க..., காட்டில் சிங்கம் புலி எல்லாம் பாத்து ஏன் நமக்கு பயம் வருது...? அது நம்மை ஏதாவது செஞ்சிடுமோன்னு பயந்துதானே. இது அந்த மாதிரி பயம்...., என்னை அவன் கொன்னாலும் பரவாயில்லை,

“ஆனா...., நீங்க..., அஞ்சலி..., கண்ணன்...., உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா..., என்னால் தாங்கவே முடியாதுங்க. அவன் மனுஷனே இல்லை, மிருகம்...., இல்லை அதைவிடக் கீழானவன்..., இப்போ அவன் அடிபட்ட பாம்பு...., என்ன செய்வானோன்னு ரொம்ப பயம்மா இருக்குங்க...”, என்னவோ,ஜீவாவை அந்தத் துன்பத்தில்

இருந்து காப்பவள் போல்..., அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

“திவி...., இதுவரை அவன் உனக்கு செஞ்சத் துன்பம் எல்லாம் தெரிந்தும், நான் சும்மா இருந்தக் காரணம், நாமாக எதையும் தேடிப் போக வேண்டாமே என்றுதான். ஆனால், இனிமேல் அவனோட ஒவ்வொரு விஷப் பல்லா பிடுங்கி, அவனை ஓட விடலை...., இல்ல, அதை நான் செஞ்சுக் காட்டுவேன்”, ஜீவாவின் கண்களில் தெறித்தக் கனலில், குளிர் காய்ந்தது திவ்யாவின் மனம்.

ஆனாலும் அந்தக் கொடியவனை நினைத்து அச்சம் கொள்ளவே செய்தது. அவளது அச்சத்துக்கு முதல் படியாக விடிவு வந்தது அடுத்த இரண்டு நாட்களில்.

தணிவு - 17

கண்ணாடியில் தெரியும்

உனது பிம்பம்

மற்றவர் பிம்பமாக.....

என் பார்வையில் கோளாறா

இல்லை.....

பார்ப்பதில் கோளாறா.....

திவ்யாவிற்கு தைரியம் சொன்ன ஜீவா, அதன் பிறகு வந்த இரண்டு நாட்களும் ஒரு பொட்டுத் தூக்கம் கூட இல்லாமல், வேலை செய்தான். முதல்நாள், அவளை வீட்டில் விட்டுவிட்டு சமாதானம் செய்தவன், உடனடியாக அந்த ஷோரூமுக்குப்ஃபோன் செய்தான்.

அதன் பிறகு கணேஷுக்குப்ஃபோன் செய்தவன், மாலையில் அந்த ஷோரூமுக்குச் சென்று, காரை எடுத்துக் கொண்டு, திருச்சிக்குப் போகுமாறு சொன்னான். அவன் மறுத்து எதையோ சொல்ல வந்ததைக் கூட கவனிக்காமல் அலைப்பேசியை வைத்துவிட்டான்.

திவ்யா நிம்மதியாக இருக்க வேண்டுமென்றால், வித்தார்த் பற்றிய பயத்தைப் போக்கியே ஆகவேண்டும் என்று எண்ணினான். திவ்யாவிடம் சொல்லிவிட்டு வெளியே கிளம்பியவன், நேராக அந்த ஷோ ரூம் சென்றான்.

அவர்களிடம் எதையோ தீவிரமாகப் பேசியவன், அன்று வித்தார்த் அங்கே அந்த ஷோரூமுக்கு வந்திருந்த போது பதிவு செய்யப்பட்ட டேப்பை வாங்கிக் கொண்டான். தங்கள் கம்பெனி வக்கீலைச் சந்தித்தான். அதன் பிறகு காரியங்கள் கனக் கச்சிதமாக நடந்தேறியது.

அன்றைய செய்தித்தாள் வரும்வரை, அவன் ஒரு நிலையிலேயே இல்லை. “திவி, நியூஸ் பேப்பர்

வந்துடுச்சா...?", ஐந்தாம் முறையாக அவளிடம் கேட்ட அவனை, இடுப்பில் கைவைத்துக்கொண்டு முறைத்தாள்.

"வரலன்னா வரலன்னு சொல்ல வேண்டியது தானே..., எதுக்கு இப்படி முறைக்கிற....?", மெதுவாக முனகிவிட்டுச் சென்றுவிட்டான்.

'எதற்கு இவ்வளவு அவசரப்படுகிறார்...?', யோசனை மண்டையைக் குடைந்தாலும், அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

செய்தித்தாள் வந்தவுடன், முதல் வேலையாக அதைப் பிரித்தவள், இரண்டாம் பக்கத்தில், "லஞ்சம் வாங்கியதால் அதிகாரி கைது", என்று பெரிய எழுத்தில் இருந்த வாசகமும், முகத்தைப் பாதி மறைத்த வாறு இருந்த வித்தார்த்தின் புகைப்படமும், அவள் பார்வையில் விழுந்தது.

"என்னங்க.....", அவளது குரலில், அடித்துப் பிடித்து ஓடி வந்தான் ஜீவா.

"என்னடா....? எதுக்கு இப்படிக் கத்துன...?", பதட்டமாகக் கேட்டான்.

"நீ...., நீங்க...., உங்க வேலை தானா இது...?", ஆச்சரியமும், அதிர்ச்சியும், சந்தோசமும், நம்பிக்கையின்மையும் போட்டிப் போட்டது அவள் குரலில்.

அவனது அதே அசத்தல் புன்னகையுடன், "இல்ல, அவன் அரசாங்க அதிகாரியாம்...., அந்தப் பட்டம் எனக்குப் பிடிக்கலை, அதான் அவனோட விஷப் பல்லில் ஒண்ணைப் புடிங்கிட்டேன். இன்னும் இருக்கு...., மாட்டுவான்..... உனக்கு சந்தோசமா....", ஆர்வமாக அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான்.

ஒருவரின் தோல்வியில் சந்தோசப்படுவது அரக்கத்தனம்தான். ஆனால் மனிதனே இல்லாத ஒரு

மிருகத்திடம் கருணைக் காட்டுவது கூடத் தவறுதான். எனவே, திவ்யா மிகுந்த உற்சாகமாக உணர்ந்தாள். அதை ஜீவாவிடம் எப்படி வெளிப்படுத்தவென்று தெரியாமல் தடுமாறினாள்.

துள்ளல் நடையுடன் மாடியேறும் அவளை, “என்ன இவ, ஒரு வார்த்தைக் கூடச் சொல்லாமல் இப்படிப் போறா...?”, புலம்பியவாறே அவளைப் பின் தொடர்ந்தான்.

உற்சாக மிகுதியில் எங்கேயாவது அமர்ந்து அழுவாளோ..? என்ற பதைப்புடன் மாடியேற, “என்னங்க..., எனக்காகவா இதை செஞ்சீங்க..., எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்குத் தெரியுமா? அப்படியே உங்கத் தோளில் சாஞ்சுகிட்டு அழணும் போல இருக்கு.

“அங்கேயே இருந்தால், அதுதான் நடந்திருக்கும். அதான் இங்கே தப்பிச்சு வந்துட்டேன். சும்மா அதிரடியா வேலைப் பாத்துருக்கீங்க. எப்படிங்க..., இப்போகூட, அவன் ஜெயில்ல இருக்காங்குறதை என்னால் நம்பவே முடியலை.

“என் மீசைக்காரா...., நான் சொல்லுறது கேக்குதா...? உங்களுக்கு இந்த மீசைதான் அழகே...., சும்மா ஜம்முன்னு இருக்கு. ரொம்ப தேங்க்ஸ்ங்க”, தன் மனதில் இருந்த அனைத்தையும், அவனது நிழலிடம் கொட்டினாள்.

ஜீவா அவளது அனைத்துப் பேச்சுக்களையும் கேட்டு, மனதுக்குள் சிலிர்த்தவன், அவளது இறுதி வாக்கியங்களில் திகைத்தான். அவள் பேசியது தன்னிடம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் மீசை.....,

மனம் குழம்ப, “திவி...”, என்று குரல் கொடுத்தவாறு அறைக்குள் வந்தான். அவன் குரல் கேட்கவே, அவனது புகைப்படத்தை அவளது கப்போர்டுக்குள் வைத்துவிட்டு, பட்டென அதை அடைத்தாள். என்னவோ தவறு செய்துவிட்டவள் போல் தடுமாறினாள்.

அவள் எதைப் பார்த்து, அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தாள் என்று கேட்கலாம் என வந்தவன் ஏமாந்தான். “என்...என்னங்க...., ஏதாவது வேணுமா?”, அவள் குரலிலும் தடுமாற்றம்.

“ம்..., ஒரு கப் காபி கிடைக்குமா?”, வழக்கமில்லாத வழக்கமாக அவன் காபி கேட்க,

“காபியா வேணும்....?”, தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

“ஆ...மா...., இல்ல டீ போட்டுக் கொண்டு வா. எனக்குக் கொஞ்சம் தலை வலிக்குது, அதான்.....”, அவள் கேட்காததற்கும் சேர்த்தே விளக்கம் சொன்னான்.

“சரி நீங்க படுத்துக்கோங்க....”, அவனுக்கு டீ எடுத்துவர கீழே சென்றாள்.

அவள் செல்வதற்காகவே காத்திருந்தவன், பாய்ந்து சென்று அவள் கப்போர்டைத் திறந்தான். அதில் கவிழ்ந்துக் கிடந்தப் புகைப்படத்தை, கொஞ்சம் பதைப்புடனே எடுத்தான். அவன் மனம் ஏனோ வேகமாகத் துடித்துக் கொண்டது. அதில் இன்னொருவனின் முகம் காணும் தைரியம் அவனுக்கு இல்லை.

தான் மட்டுமே அவளது கொஞ்சலுக்குப் பாத்திரமானவனாக இருக்கவேண்டும் என்று மனம் அடித்துக் கொண்டது. தொண்டைக்குழி ஏறி இறங்க, மெதுவாகத் திருப்பிப் பார்த்தான். பார்த்தவன் திகைத்தான்.

‘இது, நான் பார்க்கவே பிடிக்காமல், போட்டு வைத்திருந்த புகைப்படம் ஆச்சே.... இது எப்படி அவகிட்டே. அதிலும் மீசை வேற பிடிச்சு இருக்குன்னு சொல்லிட்டு இருந்தா....., அப்போ திவி..., உனக்கு மீசை இருந்தால் பிடிக்குமா?

‘இதை ஏன் இவ்வளவு நாளா என்கிட்டே சொல்லவே இல்லை. உனக்குப் பிடிச்சவனா இருக்கத்தான் நான்

விரும்புறேன்’, அவள் வரும் அரவம் கேட்கவே, புகைப்படத்தை இருந்த இடத்தில் வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.

அவளுக்குப் பிடித்தவனாக தான் ஏன் மாற ஆசைப் படுகிறோம் என்று அவன் சிந்தித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமோ? திவ்யா அவனை நெருங்கியவள், “என்னங்க....”, தனக்கே கேட்காத குரலில் அழைத்தாள்.

அவன் வேண்டுமென்றே, கண்களை இறுக மூடிப்படுத்துக் கொண்டான். “என்னங்க....”, மீண்டும் ஒருமுறை அழைத்தவள், அவன் அசையாமல் படுத்திருக்கவே, அஞ்சலியின் பொம்மையை எடுத்து அவனைத் தட்டி எழுப்பினாள்.

இதற்குமேல் படுத்திருக்க வேண்டாம், என்பதுபோல் கண் விழித்தான். அவன் கையில் டீயைக் கொடுக்க, நொடியில் அதைக் குடித்தவன், “திவி.., உனக்காக நான் ஒண்ணு வாங்கிட்டு வந்தேன்..”, மீதியைச் சொல்லாமல் இழுத்தான்.

அவள் கேள்வியாக அவனைப் பார்க்க, தன் லேப்டாப் பேகைத் திறந்து, லேட்டஸ்ட் மாடல் அலைபேசி இருந்த டப்பாவை, அவள் பார்வையில் படுமாறு வைத்தான். அதை அவள் கையில் கொடுக்கும் தைரியம் வரவில்லை.

அவன் ப்ரியாவின் நினைவில் அவ்வாறு செய்ய, திவ்யாவின் முகமோ கோபத்தில் சிவந்தது. ‘அதை என் கையில் தர மாட்டீங்களோ...?’, அவள் மனம் கேள்வி கேட்டது. அவளது கோபத்தைப் பார்த்தவன், அதைத் தவறாகப் புரிந்து கொண்டான்.

“இல்ல திவி..., உனக்குப் பிடிக்கலன்னா வேண்டாம். ஆனால் ஏதாவது அவசரத்துக்கு..., நான் உன்னைத் தொடர்புகொள்ள, உன்கிட்டே ஃபோன் இருந்தால் தானே முடியும் அதான். அது மட்டும் இல்லை, இது போஸ்ட்பெய்ட் சிம் தான்....

“நீயும் யாருக்கு வேண்ணா எப்போ வேண்ணா ஃபோன்ல பேசலாம். இப்போகூட நீ ஹேமாகிட்டே பேசணும்னா, லேன்ட்லைன் ஃபோன் தானே யூஸ் பண்ணுற. இது இருந்தால் வசதியா இருக்குமேன்னு பார்த்தேன்.

“உன்னை நான் கட்டாயப் படுத்தவே இல்லை. உனக்கு எப்போ எடுத்துக்கணும்னு தோணுதோ அப்போ எடுத்துகிட்டாப் போதும். இல்ல, உனக்குப் பிடிக்கலன்னா பரவாயில்லை. இது இங்கேயே இருக்கட்டும்”, உனக்காக மட்டுமே, எனக்காக இல்லை. உன் இஷ்டமே என்று விதம் விதமாக அவனே சமாதானம் செய்தான்.

ஆனாலும், திவ்யாவின் முகத்தில் இருந்த கோபம் கூடியதே தவிர குறையவில்லை. அவன் செய்த முதல் தவறு, ஃபோனை அவள் கையில் கொடுக்காதது, இரண்டாவது, இது போஸ்ட்பெய்ட் சிம் எனச் சொன்னது.

மூன்றாவது, உனக்கு வேணும்னா நீ எடுத்துக்கோ என்றது. அவளுக்குள் கோபம் சுறுசுறுவென்று ஏறியது. அதிலும், அந்த போஸ்ட்பெய்ட் என்ற வார்த்தையையே அவள் வெறுத்தாள். அவள் வெறுத்தாள் என்பது அவனுக்கு எப்படித் தெரியும் என்பதை அவள் சிந்திக்கவே இல்லை.

கண்ணன் “அம்மா...”, என்று குரல் கொடுக்கவே, அவனிடம் வெடுக்கென முகம் திருப்பிக்கொண்டு சென்றுவிட்டாள்.

ஜீவாவோ, அவளுக்குத் தான் ஃபோன் வாங்கிக் கொடுத்தது பிடிக்கவில்லை என்று எண்ணிக் கொண்டான். முதல் நாளில் இருந்தே அவன் தன்னிடம் உரிமையாகப் பழகவேண்டும் என்று அவள் நினைக்க, அவனோ, அவளுக்குப் பிடிக்காததைச் செய்யக் கூடாது என்று மட்டுமே நினைத்தான்.

அதை விடுத்து, இருவருக்குள்ளும் ஒரு சுமுக உறவை ஏற்படுத்த வேண்டும் என்று அவன் முயலவில்லை, ஏன் நினைக்கவே இல்லை. அப்படியிருக்கும்பொழுது அவன் எப்படி அவளை நெருங்குவான்.

மனம்முழுக்க அவள்மேல் நேசத்தைச் சுமந்துகொண்டு, அதை வெளியிட மறுத்தான் ஜீவா. திவ்யாவின் மனமோ குமுறிக் கொண்டிருந்தது. “ஆசையா செல்ஃபோன் வாங்கிட்டு வந்தார் சரி. ஏன், அதை என் கையில் கொடுக்க மாட்டாராமா? இவளுக்கெல்லாம் என்ன மரியாதைன்னு நினைச்சிருப்பார்.

“இந்த ஆம்பளைங்களே இப்படித்தா...., இதில் போஸ்ட்பெய்ட் சிம் வேறையாம். ஏன், எனக்குக் காசுபோட்டுப் பேச வக்கில்லைன்னு நினைச்சுட்டாரோ? இருக்கும், அப்படித்தான் இருக்கும். இல்லன்னா அவனை மாதிரி...”, நினைத்தவளுக்கு, ஜீவாவை வித்தார்த்துடன் இணைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அன்று வித்தார்த் செய்த செயல், இன்று நடந்ததுபோல் மனம் வேதனையில் தவித்தது. அன்று அவளுடைய ஃபோனின் பில் வந்த நாள். அந்த பில்லை எடுத்து வந்தவன், ஒவ்வொரு நம்பராகச் சொல்லி இது யாருடையது? அது யாருடையது என வறுத்தெடுத்தான்.

அத்தோடு விட்டிருந்தாலும் பரவாயில்லை, இவ்வளவு நேரம் உன் அக்காவிடம் பேசி இருக்கிறாயே என்ன பேசினாய்..? அதை அப்படியே சொல் என்று சொல்லி, செய்த சித்திரவதை நினைவில் வந்து, அவள் கை, அவளது அடி வயிற்றைப் பற்றிக் கொண்டது.

அதில் திவ்யாவிற்கே சொல்லத் தெரியாத இரு எண்களைக் கண்டவன், “தெரியாதவன் கூடவே பத்து நிமிஷம் பேசி இருக்குறியா?”, எனக் கேட்டு துன்புறுத்தியது, இப்பொழுது கூட அவள் கண்களில் நீரை வர வைத்தது.

அதேபோல், ஜீவாவும் பில்லை வைத்து ஏதாவது திட்டம் தீட்டத்தான் இப்படிச் செய்கிறானா? இந்த நினைவே அவளைத் துவண்டு போகச் செய்தது.

ஜீவா வந்தது கூடத் தெரியாமல் அவள் யோசனையில் மூழ்கி இருக்க, அவளது கவலை முகம் ஜீவாவையும் வாட்டியது.

“திவி...”, மெதுவாகக் குரல் கொடுக்க,

“வாங்க..., நான் டிபன் வைக்கிறேன்”, சொல்லிவிட்டு கிச்சனுக்குள் சென்று மறைந்தாள்.

தன் கண்ணீரை அவன் காணவேண்டாம் என்று அவள் முகத்தை மறைத்துக் கொண்டு அவள் செல்ல, தன் செய்கை அவளுக்குப் பிடிக்காமல், தன்னைப் பார்க்கவே அவள் விரும்பவில்லை என்று, ஜீவா தப்பர்த்தம் செய்தான்.

குழந்தைகளும் வந்துவிடவே, அவர்களுக்கும் சேர்த்து டிபன் வைத்தாள். கண்ணனும் அஞ்சலி, ஜீவாவோடு சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டான். இது ஜீவாவால் ஏற்பட்ட மாற்றமே.

முத்து சாப்பாட்டு அறையில் நிலவிய மௌனம் கண்டு கவலை கொண்டார். அஞ்சலியும் கண்ணனும் சாப்பிட்டு முடித்துச் சென்ற பிறகும் ஜீவா இரண்டு இட்லிகளை கூட முடிக்கவில்லை.

திவ்யாவுக்கே ஒரு மாதிரியாகிப் போனது. சாப்பிடுங்க..., என்று சொல்ல அவள் வாயைத் திறந்த வேளையில், “சாரி திவி..., என் செய்கை, உன்னை இவ்வளவு காயப்படுத்தும்னு நான் நினைக்கலை”, கலங்கிய குரலில் சொல்லிவிட்டு, திவ்யாவின் பதிலைக் கேட்கக் கூட அங்கே இருக்காமல் எழுந்து சென்றுவிட்டான்.

‘ஐயோ, இதென்ன இவர் இப்படிச் சொல்லிட்டுப் போறார்...’, சோர்ந்து போனாள் திவ்யா.

பழைய வாழ்க்கைக்கும், புதிய வாழ்க்கைக்கும் இடையில் ஊசலாடியது அவள் மனம்.

எப்படியாவது இன்று மாலை, ஜீவா வந்தவுடன் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அவனோ, அவசர வேலையாக வெளியூர் செல்லவிருப்பதால், வீட்டுக்கு வரவில்லை, என்று தகவல் சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

அவனில்லாமல் அவள் கழிக்கும் முதல் இரவு....., இங்கு வந்த நாள்முதல், அவனிடம் ஒட்ட முடியாமல், பயந்து நடுங்கி, விறைத்து, அவன் முகம் பார்க்க முடியாமல் கலங்கி, தவித்த நாட்களில் கூட, இந்த அறையில் அவன் இல்லாமல் அவள் இருந்ததில்லை.

அவன் வைத்துவிட்டுச் சென்ற அலைபேசி, கவர் கூட பிரிக்கப்படாமல் அப்படியே இருந்தது. அவன் தனக்காக வாங்கி வந்த முதல் பரிசு என்பதில் பூரித்த மனம், அதை அவன், தன் கையில் தராததை எண்ணியபொழுது சுருங்கியது.

குழந்தைகளை உறங்க வைத்தப் பிறகும், படுக்கையில் படுக்க மனம் வரவில்லை. எழுந்து சென்று கிப்ட் பேக் செய்யப்பட்ட அந்தப் பெட்டியையே பார்த்தவாறு நின்றாள். கைகள் உயர்ந்து மெதுவாக அதை வருட முயன்றது.

‘உனக்குக் கொஞ்சம் கூட வெக்கம், மானம், ரோசமே இல்லையா’, மனசாட்சி குரல் கொடுக்க, வெடுக்கென கையைப் பின்னால் இழுத்துக் கொண்டாள்.

அதன் பிறகுதான்..., அவன் அவளுக்காக வாங்கிவந்த கதைப் புத்தகங்களைக் கூட, அவள் கையில் கொடுக்காமல் படுக்கையில் வைத்தது நினைவுக்கு வந்தது.

‘அப்படியென்றால், இவரும் என்னை ஒரு மனுஷியாகவே மதிக்கலையா? அதானே..., இவரும் ஆம்பளை தானே. ஆம்பளை புத்தி இப்படிப் போகாமல் வேறு எப்படிப் போகும்?

‘இவ நாய் மாதிரி, எதைத் தூக்கிப் போட்டாலும் அதைக் கவ்விட்டுப் பேசாமல் இருப்பாள் என்று எண்ணினாரோ?’,

வித்தார்திடம் காட்டவேண்டிய கோபம் அனைத்தும் ஜீவாவிடம் திரும்பியது. ஜீவா வரட்டும். இதற்கு ஒரு முடிவு தெரியாமல் விட மாட்டேன், என்று மனதில் எண்ணிக் கொண்டாள்.

இந்த நடு இரவிலும் அலுவலக அறையில், ஸோபாவில் படுத்திருந்த ஜீவாவிற்கும், பொட்டுத் தூக்கம் இல்லை. அந்த அறை முழுவதும் ஏசியின் ரீங்காரம் மட்டுமே கேட்டது.

கண்களை மூடினாலே, திவ்யாவின் கோப முகமும், அவள் வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டு போனதுமே கண்முன் விரிந்தது.

வீட்டிற்குச் செல்லவே தயக்கமாக இருந்தது. திவ்யா அந்த அலைபேசியை எடுக்காமல் வைத்திருப்பதை, உடனடியாகக் காணும் தைரியம் இல்லாமல்தான், சாக்குச் சொல்லிவிட்டு அலுவலகத்திலேயே தங்கிக் கொண்டான்.

‘நாம அவளுக்கு செல்ஃபோனே வாங்கிக் கொடுத்திருக்கக் கூடாதோ. திவ்யா என்னிடம் சகஜமாகப் பழகுகிறாள் என்று நான் எண்ணியது பொய்யா? ஆனால் அவள் கோபத்தில் ஏதோ நியாயம் இருப்பதாகத் தோன்றியதே உண்மையா?’, அவன் மனம் அவனையே கேள்வி கேட்டது.

‘உனக்குப் பொண்டாட்டியா வாரவ மேல எல்லாம் பித்தாப் போவியாடா பித்துக்குளிப் பயலே...’, அவன் மனசாட்சி அவனைச் சாட, அது கேட்டக் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

நான் யார்மேல் அன்பு செலுத்தினாலும், பதிலுக்கு அவர்கள் எனக்குக் காயங்களை மட்டுமே பரிசாகத் தருவதேன்...., மனம் ஊமையாக அழுதது.

ப்ரியாவை நினைத்துக் கொண்டு, திவ்யாவையும் அப்படியே நடத்துவது அவனுக்குப் புரியவே இல்லை. இருவரும் மாறுவதெப்போது?

தணிவு - 18

மன்னிப்பை யாசிக்கும் நீ

என் மனதை யாசித்தால்

தந்திருப்பேன்.....

இரண்டையுமே.....

மறுநாளும் ஜீவா வீட்டுக்கு வரவில்லை. திவ்யா துடித்துப் போனாள். வெளியூரில் வேலை முடியாததால் வர முடியவில்லை என்று, தகவல் மட்டும் சரியான நேரத்துக்கு வந்துவிட்டது. குழந்தைகளிடம் மணிக்கணக்காக உரையாடுகிறான்.

இரவில் கூட, அவர்கள் உறங்கும் முன்னர், அறைக்குள் இருந்த லேன்ட்லைனுக்கு ஃபோன் செய்து பேசினான். ஸ்பீக்கர் வழியாகக் கசிந்த அவன் குரலில் வழிந்த, பாசம் கலந்த ஏக்கம், திவ்யாவை உருக்கியது.

“அம்மா எப்படி இருக்காங்கடா...? சாப்டாங்களா...? அம்மாவைப் பாத்துக்கோ....”, மகளிடம் சொன்னபொழுது, தன்னை மீறி அவனிடம் பேசவேண்டும் என்ற வேகம் எழுந்தது திவ்யாவிற்கு.

‘என்கிட்டே சொல்ல வேண்டியதையும், கேட்க வேண்டியதையும், ஏங்க மககிட்டே சொல்லுறீங்க?’, உரிமையாக அவனிடம் சண்டை போட வேண்டுமென்று தோன்றியது.

‘எப்போ வாறீங்க...?’, ஏக்கமாகக் கேட்கத் தோன்றியது. இவை அனைத்தையும் மீறி, இவனுக்கும் குழந்தைகள் மீது மட்டும்தான் பாசம் என்று குதர்க்கமாக எண்ணத் தோன்றியது.

அறையிலிருந்து வெளியே போய்விடுவோம் என்று எண்ணும் வேளையில், “அஞ்சும்மா..., அப்பா, அம்மாகிட்டே சாரி சொன்னேன்னு சொல்லுறியாடா...?”, அவளைத்

தீண்டிய குரலில், ஆணியடித்தவள்போல், அப்படியே நின்றாள்.

‘ஹையோ.., இப்படி சாரி கேட்டு உருகுபவனிடம் எப்படி சண்டை போட, அவனுக்கு என்னதான் வேணும்..? ஏன் இப்படி நடந்துக்கறார்..?’, அவன் தோள் சாய்ந்து, கேட்டுக் கதற வேண்டும்போல் இருந்தது.

அதற்குக் காரணம், அந்த வித்தார்த் எவ்வளவு கொடுமைகள் செய்தாலும் ‘சாரி’ என்ற ஒரு சொல்லை அவன் உதிர்த்ததே இல்லை. ஆனால் ஜீவாவோ, இந்தச் சொல்லை நூறு முறையாவது அவள் செவிகளில் விழுமாறு சொல்லிவிட்டான்.

ஜீவாவின் நடத்தைக்கு என்ன காரணம் என்று அவனிடமே கேட்டுவிடவேண்டும் என்று முடிவு செய்தாள். அதற்கு, அவன் வீட்டுக்கு வர வேண்டுமே, ஜீவா பேசுவதைப் பார்த்தால்..., அவர் வெளியூரும் போன மாதிரித் தெரிய வில்லையே.

திவ்யா, கோபம் அனைத்தையும் மனதுக்குள் அடக்கிக் குமுறிக் கொண்டிருந்தாள். அது, என்று வெடித்துச் சிதறும் என்பதுதான் தெரியவில்லை. அன்றைய இரவையும் எப்படியோ நெட்டித் தள்ள, விடிந்தால் ஹேமாவும், கணேஷும் வருகிறார்கள்.

அவர்கள் வருவது ஜீவாவுக்கும் தெரியுமாகையால், அதிகாலையிலேயே வந்துவிட்டான். ஜீவாவைப் பார்த்த திவ்யாவின் இதயம், ஒரு நொடி அதன் வேலையை நிறுத்தி, பின் துடித்தது. அதற்குக் காரணம் ஜீவாவின் தோற்றமே.

தலையெல்லாம் கலைந்து, கண்களின் கீழே இருந்த கருவளையம், அவன் உறங்காததை திவ்யாவிற்குச் சுட்டிக் காட்டியது. இரண்டுநாள் தாடி வேறு...., உடல் பாதியாக இளைத்து...., பார்க்கவே பரிதாபமாக இருந்தான்.

வாசலில் நின்றவனுக்கு விலகி வழிவிட வேண்டும் என்பதுகூட மறந்து போனது. “திவி.., ரொம்பத் தூக்கம் வருது”, அவள் முகத்தையே பார்க்கத் தயங்கி அவன் சொன்னபொழுது, ஜீவாவிடம் சண்டை போடவேண்டும் என்று நினைத்தது அனைத்தும் மறந்து போனது.

ஒரு வார்த்தைக் கூடப் பேச முடியாமல் அவள் விலகி வழிவிட, வேகமாக மாடியேறினான். அவன் பின்னாலேயே சென்றவள், “என்னங்க, முதல்ல குளிச்சுட்டுப் படுங்க. அதுக்குள்ளே நான் ஓட்ஸ் எடுத்துட்டு வாறேன்”, அவள் குரல் கண்டிப்புடன் ஒலித்தது.

அதற்குக் காரணம், இரண்டுநாள் முன்பு அவன் போட்டிருந்த அதே உடையுடனே வந்து நின்றதுதான். ‘என்னை மட்டும்,‘மனசு தொறந்து பேசு, பிரன்ட்லியா இரு’ன்னு சொல்ல மட்டும் தெரியும். அவருக்கு அப்படியெல்லாம் நடந்துக்கத் தெரியாது’, கை அவனுக்காக ஓத்ஸ் தயாரித்தாலும், மனம் வசைபாடிக் கொண்டிருந்தது.

ஒட்சைப் பதமான சூட்டுக்கு ஆற்றி எடுத்து வந்தாள். அவள் வரவும், அவன் குளித்து முடித்து வெளியே வரவும் சரியாக இருந்தது. இடுப்பில் கட்டிய டவலோடு, வெற்று உடம்புடன் அவன் வர, அதை உணரும் நிலையில் கூட அவள் இருக்கவில்லை.

பொதுவாக இருவரில் யார் குளிக்கச் சென்றாலும், அவர் கீழே வரும்வரை மற்றவர் மேலே அறைக்குச் செல்வதில்லை. எனவே, இந்த மாதிரி தர்மசங்கடங்கள் நேராது. ஆனால் இன்று, அவனுக்கு ஓட்ஸ் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருந்ததால்...., கவனமில்லாமல் வந்துவிட்டாள்.

ஜீவாவுக்குத்தான் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. வேகமாக அவள் முகத்தைப் பார்க்க, அவளோ ஓட்ஸ்சை ஆற்றுவதிலேயே முனைப்பாக இருப்பது தெரிந்தது.

அவளது இயல்பான நடத்தை, ஜீவாவின் கலங்கிய மனதை, கொஞ்சம் வருடியது.

அவள் கவனத்தைக் கவராத வகையில் நழுவிச் சென்று, பெர்முடாசும், டிஷர்ட்டும் போட்டுக் கொண்டான். கட்டிலில் வந்து அமர, அவன் தலையில் இருந்த ஈரத்தைப் பார்த்தவள், “ஹேர்ட்ரையர் போடலையா..? மொபைலை சுவிட்ச்ஆப் பண்ணுங்க. இதைக் குடிச்சுட்டு பேசாமல் படுத்துத் தூங்குங்க”, ஒவ்வொன்றாக வேகமாகச் சொன்னாள்.

ஜீவாவும் அவள் சொல்லச் சொல்ல, அனைத்தையும் பள்ளி மாணவன் போல செயல்படுத்தினான். என்னவோ, அவளது கண்டிப்பு அவனுக்கு அவ்வளவு பிடித்தது. ஜீவா ஓட்சைக் குடித்து முடிக்கவே, “இப்போ படுத்துக்கோங்க..”, அவள் சொல்ல, படுத்துக் கண்களை மூடிக் கொண்டான்.

ஜீவாவின் வரவை உணர்ந்த பிள்ளைகள், “அப்பா....”, என்ற கூச்சலுடன் அவன்மேல் விழுந்துப் புரண்டு கட்டிக்கொள்ள, “என் அம்முக் குட்டிங்களா..., செல்லங்களா...., பட்டுக் குட்டிகளா....”, அவனும் குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிட்டான்.

“சரி சரி...., போதும்..., அப்பா இப்போதான் வந்தாங்க, அப்பா தூங்கட்டும், நீங்க ரெண்டுபேரும் கீழே வாங்க...”, திவ்யா சொல்ல, அஞ்சலி உடனே இறங்கிவிட்டாள். ஆனால் கண்ணனோ, புதிதாக அப்பாவிடம் விளையாடுவதால், அவன் நெஞ்சின் மீதே படுத்துக் கொண்டான்.

கண்ணனின் டிக்கியிலேயே ஒரு அடி வைத்தவள், “டேய் சொல்லுறது காதுல விழல, உனக்கு வேற தனியா சொல்லணுமாடா?”, திவ்யா கோபமாகச் சொல்ல, “திவி..., கண்ணனை அடிக்காதே”, ஜீவா சப்போர்ட்டுக்கு வர,

“உங்க பையன் எங்கேயும் போக மாட்டான். தூங்கி முழிச்சு நிதானமா கொஞ்சுங்க”, கண்ணனிடம் காட்டிய கோபக்

குரல் குறையாமல் கேட்க, கப்பென வாயை மூடிக் கொண்டான் ஜீவா.

அவளது அதட்டலும், கண்டிப்பும், கோபமும் ஜீவாவின் வாடியிருந்த மனதுக்கு நீரூற்றாக இருந்தது. அந்த நிம்மதியுடனே கண்களை மூடிக் கொண்டான். நிம்மதியான உறக்கம். அவன் உறக்கத்தை உணர்ந்தவள்போல் பிள்ளைகளைக் கூட மாடிக்கு விடாமல் பார்த்துக் கொண்டாள்.

காலை உணவிற்கும் அவனை எழுப்பவில்லை. அவ்வளவு ஏன்...? கணேஷ் ஹேமா வீட்டிற்கு வந்துவிட்டதாகச் சொல்லியும் கூட, அவர்களைச் சென்றுப் பார்க்கவேண்டும் என்று சொல்லாமல், அமைதியாக தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்ணனும் அஞ்சலியும் எல்கேஜி செல்லாமல், நேரடியாக யுகேஜி போகிறார்கள். எனவே அவர்களுக்குப் பள்ளிக்கு, என்ன என்ன வேண்டும் என்பதற்கான லிஸ்ட் போட்டாள். தங்கள் சோகங்களில் மூழ்கி, குழந்தைகளுக்கு வயது போனதைக் கூட அறியாமல் இருந்த முட்டாள்த்தனத்தை வெறுத்தாள்.

திவ்யாவிற்கு, கண்ணனை நேரடியாக யுகேஜி சேர்க்க மனமில்லை. அதற்குக் காரணம், அவன் இன்னுமே எதையும் தனியாகச் சிந்தித்துப் பேசி, விளையாடி, எதுவும் செய்யவில்லை. ஆனால் ஜீவாதான் அவனை எல்கேஜி சேர்க்க சம்மதிக்கவில்லை.

“ரெண்டுபேரும் சேர்ந்து இருந்தால் தான் கண்ணனின் மாற்றம் சீக்கிரம் இருக்கும் என்று சொல்லிவிடவே, அமைதியாகி விட்டாள்.

கண்ணன் ஓரல்(oral)லை சொல்லத் தயங்கினான். ஆனால் எழுதுவதற்குத் தயங்கவில்லை. அஞ்சலியோ ஓரல்லை வெளுத்து வாங்கினாள். அவளை ஒரு வார்த்தை எழுத வைக்கும் முன்னர், திவ்யா சோர்ந்து போவாள். அவ்வளவு

சண்டித்தனம் செய்தாள். எனவே இந்த எதிர் குணங்களும் திவ்யாவை சம்மதிக்க வைத்தது.

நேரம் பன்னிரண்டை நெருங்கும் வேளையில் கீழே இறங்கி வந்தான் ஜீவா. அங்கே ஹாலிலோ..., திவ்யாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அஞ்சலி ஏ பி சி டி சொல்லிக் கொண்டிருக்க, கண்ணன் திவியின் மடியில் அமர்ந்து புத்தகத்தில் விரல் வைத்து எழுத்துக்களைக் காட்டிக் கொண்டிருந்தான்.

“கண்ணா..., அஞ்சலி சொல்லுறா பாத்தியா நீயும் சொல்லு....”, கண்ணனைக் கட்டாயப் படுத்திக் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில் அவளுக்கே சலித்துப்போக, “கண்ணா அம்மாகிட்டே அடி வாங்கப் போற...”, அவள் கையை ஓங்கவே, ஜீவா அவள் கரத்தைத் தடுத்தான்.

“இப்போ அவன் பாடம் படிப்பது ரொம்ப முக்கியமா? கண்ணா, நீ வாடா நாம விளையாடலாம்”, கண்ணனை அவள் மடியில் இருந்து தூக்கி, தோளில் அமர வைத்துக் கொண்டான்.

“அப்பா....”, என்று அவனும் ஜீவாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

“அப்பா..., நான்...., உயரம்....”, ஜீவாவை விட வளர்ந்துவிட்டேன் என்று ஒரே கொண்டாட்டம் அவனுக்கு.

“அவனுக்கு ரொம்ப செல்லம் கொடுக்குறீங்க...., டேய் இறங்குடா...”, திவ்யா கோபமாகச் சொன்னாள்.

“இப்போ,‘அவனை டேய் இறங்கு’ன்னு சொல்லுறியா? இல்லை,‘என்னை டேய் இற’க்’கு’ன்னு சொல்லுறியா?”, அந்த ‘க்’கில் அழுத்தம் கொடுத்து, கேலியாகக் கேட்டான்.

அவனது கேள்வியில் அதிர்ந்து, விதிர்த்து அப்படியே நின்றவள், கலவரமாக அவன் முகத்தைப் பார்க்க, அதில் குறும்பு கூத்தாட அவன் நின்றதைப் பார்த்த பிறகுதான் அவளால் மூச்சு விடவே முடிந்தது.

இருவருக்கும், மனதுக்குள் ஒருவர் மீது ஒருவருக்கு கோபமும், வருத்தமும் இருந்த பொழுதும், அவர்களால் மற்றவரைக் காயப்படுத்தும் துணிவு மட்டும் வரவே இல்லை. ஏனென்றால் இருவரும் மனதுக்குள் ஒருவரை நேசித்தார்கள், அன்பு செலுத்தினார்கள், மதித்தார்கள்.

அதை இருவரும் வாய்விட்டுச் சொல்லி, பகிர்ந்துகொள்ளவில்லை அவ்வளவே. இவர்கள் மனம் விட்டுப் பேசினால், உலகிலேயே ஒற்றுமையான தம்பதிகளில் ஒருவராக இருப்பார்கள். அந்த நாள் என்று என்பதுதான் தெரியவில்லை.

ஜீவா அவள் முகத்தையே ஆவலாகப் பார்க்க, அவனுக்கு பதில் சொல்லாமல், “வாங்க சாப்பிடப் போகலாம். காலையிலேயும் சாப்பிடலை”, சொல்லிவிட்டு, அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றாள்.

முத்து சாப்பாட்டை எடுத்து மேசைமேல் அடுக்க, ஜீவா வியப்பாக அவளைப் பார்த்தான். அவன் பார்வையை உணர்ந்து, “இல்ல, காலையிலே நீங்களும் சாப்பிடலை, அதான் கொஞ்சம் சீக்கிரமா எல்லாம் செய்யச் சொன்னேன்”, அவனுக்குத் தட்டை வைத்து பரிமாறியவாறு சொன்னாள்.

“பசங்க.....”, அவன் நிறுத்த, மணி பன்னிரண்டு கூட ஆகலை. இப்போதான் ரெண்டுபேரும் மாதுளம் பழம் சாப்பிட்டாங்க. இன்னும் கொஞ்ச நேரம் போகட்டும். நீங்க சாப்பிடுங்க”, சொல்லிவிட்டு அவனுக்குச் சாப்பாட்டை வைத்தாள்.

அவள் அவ்வாறு சொல்லவே, அவளது அக்கறையில் உள்ளம் நெகிழ்ந்தது அவனுக்கு. “தம்பி..., திவ்யாம்மாவைக் கேட்டீங்களா..? நீங்க சாப்பிடலன்னு, திவ்யாம்மா கூட சாப்பிடலை. அவங்களையும் சாப்பிடச் சொல்லுங்க”, முத்து வேகமாக வந்து சொன்னார்.

“ஐயா என்ன இது...?”, சங்கடமாகக் கேட்டாள்.

ஜீவாவிற்கு, எடுத்த சாப்பாடு ஒரு கவளம் கூட உள்ளே இறங்கவில்லை. எதுவோ தொண்டையை அடைக்கும் உணர்வு. அவனுக்காக அவள் பரிமாறுவதே சுகம் என்று எண்ணிக் கொண்டிருந்தவன், தனக்காக அவள் சாப்பிடவில்லை என்று சொன்னதும் தான் எப்படி உணர்கிறோம் என்றே அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவனது தாயை நினைவுப்படுத்தினாள் திவ்யா. அவள் மடியில் தலை சாய்க்க வேண்டும், அவள் மடியில் புதைந்து தேம்ப வேண்டும் போல் இருந்தது. “தேங்க்ஸ்....”, அவளை நிமிர்ந்து பார்த்து சொன்ன அவனது கண்களில் மெல்லிய நீர்ப் படலம்.

அவனது இந்த பலவீனம், அவளுக்குத் தெரிந்துவிடக் கூடாது, என்று எழுந்து செல்லப் போகையில், அவன் கையின்மேல் தன் கையை அழுத்தமாகப் பதித்து தடுத்தாள். “சாப்பிடுங்க....”, ஆதரவாகச் சொல்ல, குளம் கட்டிய கண்ணீர் ஒருதுளி அவனையும் மீறி கன்னத்தில் உருண்டது.

முத்து நாசூக்காக, பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து செல்லவே, ஜீவாவின் முதுகு அழுகையில் குலுங்கியது. தன் தயக்கங்களைத் தகர்த்து, அவனுக்கு ஆதரவாக அவனை நெருங்கி நின்றாள்.

ஏற்கனவே வளர்ந்த கண்ணனாக அவள் கண்களுக்குத் தெரியும் அவன், இப்பொழுதும் அவ்வாறே தெரிய, எப்படித்

தேற்றவென்று தெரியாமல் விழி பிதுங்கி நின்றாள். தனது ஒரு சின்ன செய்கை ஜீவாவை இவ்வளவு பாதிக்கிறதா?

கேள்வியே அவளது மீதி தயக்கத்தையும் உடைக்க, மென்மையாக அவன் தோள் தொட்டாள். “இது ஒரு சின்ன விஷயங்க..., அதுக்கு ஏன்...?”, அவனை ஆறுதல் சொல்லித் தேற்ற முயல, அதில் முழுவதும் உடைந்தான் ஜீவா.

அவள் இடையோடு கட்டிக் கொண்டு...., அவள் வயிற்றில் முகம் புதைத்துக் கொண்டான். அவள் உடல் சட்டென விறைத்தாலும் அதை மறைத்தவாறு, அவன் பின்னந்தலையில் தன் கரத்தை ஆதரவாக வைத்து, தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டாள்.

அவன் கண்களின் ஈரம், அவள் புடவையையும் தாண்டி, அவள் வயிற்றில் ஈரமாவதை உணர்ந்தாள். திவ்யாவின் கண்களிலும் கண்ணீர்....., ‘என்னங்க இது....? ஏன் இந்த அழுகை...? உங்களுக்கு நான் இருக்கேங்க...?’, இப்படியெல்லாம் அவள் சொல்லவில்லைதான்.

வார்த்தைகளில் வடிக்க முடியாத ஆதரவை, அவள் கரங்கள் அவனுக்குக் கொடுத்தது. சிறிது நேரம் அப்படியே இருந்தவள், “என்னங்க..., போதும்..., எதுக்கு இப்போ இந்த அழுகை? முதல்ல இப்படி அழுவதை நிறுத்துங்க.

“இது ஒரு சாதாரண விஷயம். இந்த உலகத்தில் பாதி பொண்ணுங்க இப்படித்தான் இருக்காங்க. என்னமோ நான்தான் புதுசா செய்யிற மாதிரி..., முதல்ல எழுந்து சாப்பிடுங்க”, அவனை நிமிர்த்தி அமர வைத்தவள், அருகில் இருந்த டவலை எடுத்துக் கொடுத்தாள்.

“உலகத்தில் எந்தப் பொண்ணும் எப்படி வேண்ணா இருக்கட்டும். ஆனால் எனக்காகச் சாப்பிடாமல் இருந்தது நீதானே. இது உனக்கு சாதாரணமாத் தெரியுது, ஆனா எனக்கு...., உன்கிட்டே சொல்லிப் புரிய வைக்க முடியலை.

“சாரி அண்ட் தேங்க்ஸ்.....”, என்றைக்கும் விட அன்று அதிகமாகவே சாப்பிட்டான். அவளையும் உடன் அமர வைத்து சாப்பிட வைத்தான். இருவரின் மனமும் நிறைந்திருந்தது.

ஜீவா ஏதோ அவசரமாகப்ஃபோன் பேசிக் கொண்டிருக்க, மாடியேறிய திவ்யா, அவனது புகைப்படத்தை எடுத்து வைத்துக் கொண்டு பேசினாள். “வர வர உங்களுக்கு ரொம்ப எகத்தாளம் தான். அதென்ன “டேய் இறங்குன்னு சொல்லுறியா? இல்லை என்னை டேய் இற’க்’குன்னு சொல்லுறியா?”, ன்னு ஒரு கேள்வி, ரெண்டும்தான்னு சொல்லியிருந்தால் என்ன செஞ்சிருப்பீங்களாம்?

“எப்பவும் ஒரு சாரி தேங்க்ஸ் வேற. உங்களை என்ன செய்யிறேன் பாருங்க”, ஃபோன் பேசி முடித்து வந்தவன், அனைத்தையும் கேட்டுவிட்டான்.

‘இதை என்கிட்டே நேர்ல சொன்னால் இன்னும் சந்தோசப் படுவேன்’, தனக்குள் முனகியவன், திவி என குரல் கொடுத்தவாறு அறைக்குள் வந்தான். வந்தவன் வேகமாக உடை மாற்றினான். பின்னர் அவளிடம், அலுவலகம் செல்வதாகச் சொல்லவே, “இப்படியேவா”, தன்னை மீறிக் கேட்டுவிட்டாள் திவ்யா.

“ஆமா ஏன்....? இந்தக் கோட் நல்லா இல்லையா..?”, தன்னைக் குனிந்துப் பார்த்தவாறு கேட்டான்.

ஏற்கனவே அவன் தலைமுடியும் கொஞ்சம் ஒழுங்காக வெட்டாமல் வளர்ந்து, மூன்றுநாள் தாடியுடன், பார்க்கவே கொஞ்சம் ஒரு மாதிரியாக இருந்தான்.

அவனிடம் எப்படி ஷேவ் செய்யச் சொல்வது என்று தெரியாமல், “முதல்ல ஹேர்கட் பண்ணுங்க”, ஒரு வழியாகச் சொல்லிவிட்டாள்.

“அதுக்கு இப்போ நேரமில்லை. இன்னும் ஒரு நாலஞ்சு நாள் போகட்டும். சரி, சாயங்காலம் நான் லேட்டா

வருவேன்...", அவளிடம் விடைபெற்றுச் சென்றான். செல்லும் அவன் முகத்தில் ஒரு மர்மப் புன்னகை.

அவன், லேட்டாக வருவேன் என்று சொல்லவே, "ஹேமா கணேஷைப் பார்க்கப் போகணுமே. கொஞ்சம் சீக்கிரம் வந்துடுங்க", வேகமாக அவன் பின்னால் சென்றவாறு சொன்னாள்.

முதல் முறையாக அவனை சீக்கிரம் வரச் சொல்லி திவ்யா கேட்கிறாள். மறுத்துவிடுவானா என்ன? "சரி நீ அஞ்சு மணிக்குக் கிளம்பி ரெடியா இரு நான் வந்தவுடனே போகலாம்", சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான்.

தூங்கிவிட்ட குழந்தைகளின் அருகில் சென்று அமர்ந்தாள். இரண்டு நாட்களாகத் தான் பட்ட துன்பமும், இன்று காலையில் தான் எடுத்த முடிவும், காற்றில் போயிருக்க, ஜீவாவோடு நடந்த உரையாடலும், அவன் கண்ணீரும்...., சேலையைக் கையில் பிடித்துப் பார்த்தாள்.

ஜீவாவின் கண்ணீர் திட்டாகப் படிந்திருந்தது. 'தனக்காக, தன் செய்கைக்காக ஒரு ஆண்மகன் சிந்திய கண்ணீர்...., என்னவோ கனவுபோல் இருந்தது. அது கனவல்ல நிஜம் என்பதை அந்தக் கறை உறுதி செய்தது.

ஜீவாவும் அதையேதான் நினைத்துக் கொண்டிருந்தான். இருவரின் மனங்களும் ஒரே திசையில் பயணிக்க, அவர்களின் மனங்கள் சங்கமிப்பது எப்பொழுது?

மாலையில் அவள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவளை, ஹேமாவைக் காணக் கூட்டிச் செல்லவும் மறக்கவில்லை. தொடர்ந்து வந்த நாட்கள், நல்ல நாளாக இல்லாததால், ஹேமா இங்கே வரும் நாளும் தள்ளிப் போனது.

தணிவு - 19

உன் ஒற்றை வார்த்தைகாக

என் காத்திருப்பு

சொல்லிவிடேன்.....

தந்துவிடுகிறேன் என்னை.

மறுநாள் காலையில், கிச்சனில் பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா.

அதற்குக் காரணம், இன்று ஹேமாவும், கணேஷும் அவர்கள் வீட்டுக்கு வருகிறார்கள். அவர்களுக்கு விருந்து தயாரிக்கவே இந்தப் பரபரப்பு.

முத்து காய் வெட்டிக் கொடுக்க, தேங்காய்த் துருவ, அரைக்க, பாயாசத்துக்குத் தேங்காய்ப் பால் எடுக்க, என அவளுக்கு உதவிக் கொண்டிருந்தார்.

“என்னத்தாயி...., நான் இதெல்லாம் செய்ய மாட்டேன்னா? எதுக்கு நீ வந்து இப்படிக் கஷ்டப் படணும்? அப்படிச் சேரை எடுத்துப் போட்டு உக்காந்து, வேலை வாங்குவதை விட்டுட்டு, என்னத்தாயி இது”, சலித்துக் கொண்டார்.

“ஐயா..., என் அண்ணா அண்ணிக்கு, என் கையால் சாப்பாடு பரிமாறணும்னு நினைக்கிறது தப்பா? அதான் முக்கால்வாசி வேலை நீங்கதான் செய்யிறீங்க. நான்,சும்மா வச்சு இறக்குறேன். இதை ஏன் இவ்வளவு பெருசு படுத்துறீங்க. அந்த முதல் பாலை, பாயாசத்தில் ஊத்திட்டு அடுப்பை நிறுத்திடுங்க.

“நான், பசங்க என்ன செய்யிறாங்கன்னு பாக்குறேன். அவங்களையும் இன்னும் காணோம்...”, மீதி வேலைகளை அவரிடம் கொடுத்துவிட்டு மாடியேறினாள்.

வேகமாக மாடியேறியவள், அறைக்குள் நுழையவே, அடி வயிற்றில் சுளீர் என ஒரு வலி கிளம்பவே, “அம்மா...”, என முனகி வயிற்றைப் பிடித்தாள்.

“திவி என்ன ஆச்சு.?...”, கண்ணனைப் படுக்கையில் விட்டுவிட்டு அவள் அருகில் ஓடி வந்தான். கண்ணனுக்கு இப்பொழுதெல்லாம் இவர்களின் அக்கறையும், நெருக்கமும் பிடித்திருந்தது, பழகிவிட்டது.

ஜீவாவின் தவிப்பைப் பார்த்து, தனக்குள் சிலிர்த்தாள். “எனக்கு ஒண்ணும் இல்லை. ரொம்ப நேரமா கிச்சனில் நின்னேன் இல்ல, அதான். சரி இவங்க குளிச்சுட்டாங்களா? நானும் குளிச்சுட்டு வந்துடுறேன்”, சாதாரணமாகக் கேட்டுவிட்டுச் சென்ற அவளைத் தடுத்தான்.

“கிச்சன்ல நின்னால் கால் வலிக்கும், வயிறு எப்படி வலிக்கும். அப்போ மறுபடியும், வயிற்றுவலியா?”, சந்தேகமாகக் கேட்டான்.

இப்படிக் கேட்ட அவனைச் சங்கடமாகப் பார்த்தாள். “மாசா மாசம் இருக்கும், அதுக்குன்னு மாசத்துக்கு ரெண்டு தடவை இருக்காது”, தலையிலடிக்காத குறையாகச் சொல்லிச் சென்றாள்.

“சரி அதெல்லாம் இருக்கட்டும், புனிதா உன்னைத் திரும்ப வரச் சொன்னா இல்ல. நீ கிளம்பு. நாம ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடலாம்”, அவளை அவசரப் படுத்தினான்.

“என்ன விளையாடுறீங்களா? ஹேமாவும், அண்ணாவும் வரப்போறாங்க..., இந்நேரம் ஹாஸ்பிட்டல் போலாம்னு சொல்லிட்டு, தள்ளுங்க நீங்க”, புரிந்துகொள்ளாமல் பேசுகிறானே என்று இருந்தது அவளுக்கு.

“அவங்க என்ன சின்னப் பசங்களா? அதெல்லாம் அவங்க வந்து இருந்துப்பாங்க, நீ கிளம்பு”, பிடிவாதமாக நின்றான்.

அவன் பிடிவாதத்தை தளர்த்த முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. எனவே, “சரி நாம வேண்ணா ஒண்ணு செய்யலாம்..., முதல்ல நீங்க அப்பாயின்மென்ட் வாங்குங்க, சாயங்காலம் வாறோம்னு சொல்லிடுங்க.

“அப்போ நாம, எதையும் மிஸ் பண்ண வேண்டி இருக்காது ஓகேயா?”, எப்படியோ அவள் ஹாஸ்பிடல் வர ஒத்துக் கொண்டதே பெரிய விசயமாக இருந்தது அவனுக்கு. எனவே சரியென்று ஒத்துக் கொண்டான்.

“சரியான விடாக்கண்டன்..., ஆனால், அவர் முடியை வெட்டிக்க மட்டும் நேரம் இருக்காது”, அவனுக்கு கேட்குமாறே இப்பொழுது முணுமுணுத்தாள்.

வாய்விட்டுச் சிரித்தான் ஜீவா. “சிரிப்பைப் பாரு.... வில்லன் மாதிரி, ஹிஹிஹி...”, அவனுக்கு அழகு காட்டினாள். இருவருக்குமே இது ரொம்பப் பிடித்திருந்தது.

பழைய குறும்பான திவ்யா வெளியே வந்துகொண்டிருந்தாள். அவன்மேல் இருந்த பயம் அனைத்தும் விலகியிருந்தது. ஜீவாவும் அவளுடன் சாதாரணமாக உரையாடினான், மனதளவில் இருவரும் ரொம்பவே நெருங்கி இருந்தார்கள்.

உடல் தேவைகளைப் பற்றிய நினைப்பு கூட இருவருக்கும் இல்லை. இப்படியே இருப்பதே போதுமென்று இருந்தது. இருவரும் நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டார்கள், வழக்கடித்தார்கள், உரிமையாகப் பேசிக் கொண்டார்கள்.

ஆனாலும் இருவருக்கு நடுவிலும் தீர்க்கப்படாதக் கோபமும், வருத்தமும் அப்படியேதான் இருந்தது. அதை இருவருமே பேசித் தீர்க்க முயலவில்லை. அப்படிப் பேசித் தீர்த்திருந்தால் வரப்போகும் பெரிய விபரீதங்களைத் தடுத்திருக்கலாமோ?????

அதன் பிறகு ஹேமாவும் கணேஷும் வந்துவிட, நேரம் ரெக்கை கட்டிப் பறந்தது. அவர்களுமே ஜீவாவின் தோற்றத்தை விநோதமாகப் பார்த்தார்கள்.

“என்னண்ணா...., கோவிலுக்கு ஏதாவது நேர்ந்துட்டு இருக்கீங்களா? தாடியும், மீசையும், முடியும்....., பாக்கவே ஒரு ஆண்டி லுக் வருதே. அப்படியே ஒரு காவி கட்டிக்கோங்க....,

பொருத்தமா இருக்கும்”, ஹேமா கேலி செய்ய, திவ்யா ஜீவாவை முறைத்துப் பார்த்தாள்.

‘இதுக்குதான் நான் முதல்லேயே சொன்னேன்.....’, அவள் பார்வை அவனிடம் குற்றம் சுமத்தியது.

“விடும்மா தங்கச்சி, எனக்கு விதம் விதமா என் கெட்டப்பை மாத்த ரொம்பப் புடிக்கும். முந்தி மீசை மட்டும் வச்சிருந்தேன். பிறகு அதுவும் போச்சு. இப்போ ரெண்டும் சேர்த்து வச்சிருக்கேன் அதில் என்ன இருக்கு”, என்னமோ சாதாரணமாகச் சொன்னான்.

“அண்ணா, நாங்க வரதுக்கு ஜஸ்ட் பத்தே நாள்தான் ஆச்சு அதுக்குள்ளே இப்படியா? இந்தப் புதருக்குள்ளே உங்க முகத்தை தேட வேண்டி இருக்கே”, ஹேமா விடுவதாக இல்லை.

“ஹும்...., உனக்குத் தோணுது....”, அதை அத்தோடு முடித்துவிட்டு, வேறு பேசத் துவங்கிவிட்டான்.

ஹேமா இதை கவனிக்கவில்லை. ஆனால் அவன் முகத்திலேயே கவனமாக இருந்த திவ்யா, மனதில் குறுகுறுப்பாக எதையோ உணர்ந்தாள்.

‘இவர் எதுக்கு, ‘உனக்குத் தோணுது’ன்னு சொல்லிட்டு என்னைப் பார்த்தார்...., அப்போ எனக்குத் தோணலைன்னு சொல்லுறாரா? இதைத்தானே நானும் இத்தனை நாளா சொல்லிட்டு இருந்தேன்’, அவள் மனம் கேள்வி கேட்டது.

‘நீ முடியைத் தானேடி வெட்டச் சொன்ன..?’, மனசாட்சி ஜெர்க்கானது.

‘அப்போ மூஞ்சியில் இருக்குறது முடி இல்லாமல் வேறென்ன...?’, மனம் பதிலுக்கு எகிற, ‘அடிப்பாவி...., என்னமா ஜகா வாங்குறா. நீ என்னண்ணும் போ’, மனசாட்சி இவளுடன் போராட முடியாது என்பதை உணர்ந்து ஒளிந்து கொண்டது.

அதன் பிறகு, கேலியும் கிண்டலுமாக அந்த நாள் சென்றது. தங்கமும், திவ்யா, ஜீவாவின் மாற்றத்தை கவனித்துப் பூரித்தார். இருவருக்குள் இந்தப் புரிதல் தொடர்ந்தாலே, அவர்கள் ஒன்று சேரும் நாள் அதிக தொலைவில் இல்லை என்றுணர்ந்தார்.

தங்கம் திவ்யாவிடம் பேசியிருந்தால், அவள் மனதில், ஜீவாவின் மேல் இருக்கும் கோபத்தைக் களைந்திருப்பாரோ? விதி வலியது என்பது இதுதானா?

மதியம் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்தவர்கள், மாலையில், ஹேமாவும், கணேஷும் பீச்சுக்குச் செல்வதாகச் சொல்லவே, அஞ்சலியும் கண்ணனும், அவர்களோடு செல்கிறோம் என்று அடம் பிடித்தார்கள்.

“இல்லடா வேண்டாம்...., நாமளும் ஹாஸ்பிடல் போகலாம். அப்படியே ஹோட்டல் போகலாம்...”, திவ்யா அவர்களைத் தடுக்க எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவின.

“திவ்யா, எதுக்கு இப்போ பசங்களை எங்களோட வர விடாமல் தடுக்குற? அதெல்லாம் நான் பத்திரமாப் பாத்துக்கறேன். ஒரு பத்துநாள் உங்களோட இல்லன்னு சொன்னதும், ரொம்பப் பண்ணுற நீ”, ஹேமா திவ்யாவைக் கடிந்து கொண்டாள்.

திவ்யா பல்லைக் கடித்துக் கொண்டு, “ஹேமா..., சொன்னால் புரிஞ்சுக்கவே மாட்டியா? அஞ்சலி இருக்காளே...., அன்னைக்கு என்கிட்டே, ‘எங்க கணேஷ் மாமா, ஹேமா அத்தை வாயில தூசி எடுத்தாரு’ன்னு சொல்லிட்டு அலைஞ்சா.

“அத்தோட விட்டாளா? அன்னைக்கு உங்க வீட்டுக்கு வந்தாளே..., என்ன பாத்தாளோ அதையும் இங்கே வந்து சொல்லி, உன் மானத்தை ஏலம் போட்டுட்டு இருந்தா. கண்ணனாவது பாத்துட்டு அமைதியா இருந்துடுவான்,

“அஞ்சலி ஊருக்கே டமாரம் போட்டுச் சொல்லுவா. கல்யாணம் முடிஞ்சு இன்னைக்குதான் பீச்சுக்குப் போறீங்க...., வேண்டாம்....வம்பு, சொல்லிட்டேன்”, சின்னக் குரலில் அவள் காதில் சொல்ல, ஹேமாவின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததுபோல் ஆனது.

கொஞ்சம்கூடத் தயக்கமே இல்லாமல், தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு, கணேஷை முறைத்தாள் ஹேமா. “திவ்யா, அதெல்லாம் இன்னைக்கு நான் பாத்துக்கறேன். நீ பசங்களைக் கிளப்பி விடு போ...”, ஹேமா சொன்ன தொனியே, கணேஷ் என்ன நிலைமைக்கு உள்ளாவான் என்பதை, திவ்யாவிற்கு உணர்த்தியது.

“ஹேமா, வேண்டாண்டி..., அண்ணா பாவம்...”.

“உன்னப் போன்னு சொன்னேன்...”, ஹம்...., என அலுத்துக் கொண்டு, கணேஷைப் பாவமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, திவ்யா குழந்தைகளை அழைத்துக் கொண்டு மாடியேறினாள்.

திவ்யா அங்கிருந்து நகரவே, “தங்கச்சி எதுக்கு ஹேமா என்னைப் பாவமாப் பாத்துட்டுப் போறா?”, அப்பிராணியாக அவன் கேட்க, திவ்யாவின் பார்வைக்கு, நொடியில் அவனுக்கு அர்த்தம் புரிந்தது.

“ஸ்...ஆ....”, என்ற அலறலோடு அவளைப் பார்க்க, விரல்களை மடித்து இறுகிப் பிடித்தவாறு, அவனுக்கு இன்னும் குட்டு வைக்கத் தயாராக இருந்தாள் ஹேமா.

கணேஷின் அலறலில் திவ்யா மாடிப் படியின் முடிவில் இருந்து திரும்பிப் பார்க்க, கணேஷ் தலையில் கை வைத்துப் பரபரவென்று தேய்ப்பதும், ஹேமா நின்ற நிலையும், அங்கே நடந்ததை அவளுக்குத் துல்லியமாகத் தெரிவித்தது.

‘ஹையோ அண்ணா பாவம்’, மனம் பரிதாபப் பட்டாலும், அடக்கமுடியாமல் சிரித்துவிட்டாள் திவ்யா.

“ஹேய் லூசே..., ஏண்டி இப்படிக் குட்டுன..., ஸ்ஆ...., எப்படி வலிக்கிது தெரியுமா?”, வாய் பேசினாலும், கைகள் தலையைத் தேய்ப்பதை நிறுத்தவில்லை.

“வலிக்கிறதா..., நல்லா வலிக்கட்டும். உங்களால் என் மானமே போச்சு..., இனிமேல் என் கிட்டே வாங்க..., உங்களை என்ன செய்வேன்னே தெரியாது. ச்சே..., சின்னப் பொண்ணு முன்னாடி..., உங்கள....”, இரு கைகளையும் விரித்து அவன் கழுத்தை நெரிப்பதுபோல் வர,

உண்மையாகவே அலறிவிட்டான் கணேஷ். தங்கம் வரவே, ஹேமா வேகமாகத் தங்களது அறைக்குள் சென்று புகுந்துகொண்டாள். அவள் பின்னால் சென்றவன் உள்ளே நுழையும் முன்னர், அவன் மூக்கின் நுனி நசுங்குமாறு கதவை இறுக்கி சாத்தினாள்.

“ராச்சசி...., என் மூக்குப் போச்சு”, வெளியே இருந்து அவன் கத்தினான்.

“இங்கே என் மானமே போச்சு...., இவர் மூக்குப் போனதைப் பத்தி பேசுறார்”, அன்று மீதமிருந்த நாள் முழுவதும் அவனைச் சுத்தலில் விட்டாள்.

அறைக்கு வந்த திவ்யா, ஜீவாவை முறைத்துக் கொண்டே, பிள்ளைகளுக்கு உடை மாற்றி கீழே அனுப்பினாள். அவர்கள் சென்றவுடன் அவனிடம் பொரிந்தான்.

“எத்தனை நாளா சொல்லிட்டு இருக்கேன் இந்த முடியை வெட்டுங்கன்னு. கேக்காமல் இருந்துட்டு...., என்ன சாமியாரா போகப் போறீங்களா? ஹேமாவே இவ்வளவு ஓட்டுறா, இதில் டாக்டர் வேற என்ன சொல்லுவாங்களோ?

“நான் இன்னைக்கு ஹாஸ்பிடல் வரலை, இந்த முடியெல்லாம் வெட்டிட்டு வாங்க..., நாம இன்னொரு நாள் போகலாம்”, கடுப்பாகவே சொன்னாள்.

அவள் பேச்சை எல்லாம் புன்னகை மாறா முகத்துடன் வாங்கிக் கொண்டான். “அப்போ மத்தவங்களுக்காகத்தான் சொல்லுறியா? உனக்கு ஓகே தானே. அப்போ இருக்கட்டும்”, சிரிப்பை வாய்க்குள் புதைத்தவாறே சொன்னான்.

“நீங்க வெட்டிட்டு வரல...., நைட் தூங்கும்போது தீக்குச்சிய கொளுத்திப் பொசுக்கிடுவேன் ஆமா”, அவள் சொல்லவே, “ஹையோ...”, என்று அலறியவாறு, தலையில் கை வைத்துக் கொண்டான்.

“இன்னைக்கு முடியாது, நாளைக்குக் காலையில் உன் முன்னாடி பழைய ஜீவாவா நிப்பேன் போதுமா. இன்னைக்கு ஹாஸ்பிடல் போயிட்டு வந்துடலாம் ப்ளீஸ்....”, அவன் கெஞ்சத் தெரியாமல் கெஞ்சும் அழகில் மயங்கி, அவனோடு கிளம்பினாள்.

மருத்துவமனைக்குச் செல்லும் முன்பே, அவளது பழைய ரிபோர்ட், புதிதாக ஸ்கேன் எடுக்க புனிதா எழுத்தித் தந்த சீட்டு என அனைத்தையும் கவனமாக எடுத்து வைக்கும் ஜீவாவை, சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“கிளம்பலாமா....?”, கேட்டுவிட்டு, அவளோடு சேர்ந்து வீட்டிலிருந்து வெளியேறினான்.

இவர்களுக்கு முன்பே, ஹேமா, கணேஷ் அனைவரும் சென்றிருந்தார்கள். மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் எடுத்து முடித்துவிட்டு, ரிப்போட்டை வாங்கிய பிறகே புனிதாவைப் பார்க்கச் சென்றார்கள்.

ஜீவாவைப் பார்த்த புனிதா, திவ்யாவிடம் திரும்பி, “திவ்யா, நந்தன் எங்கே? இது யாரு..?”, புருவத்தைச் சுருக்கிக் கேட்டாள்.

“புனிதா ரொம்ப ஓட்டாதே...., நான்தான்...., இது சும்மா ஃபாஷன்”, அவன் தலையைச் சிலுப்பிச் சொல்ல, திவ்யா

தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“நந்தா..., சாரி ஜீவா..., என்னடா ஆண்டி மடத்தில் இருந்து தப்பிச்சு வந்தவன் மாதிரி இருக்க? திவ்யா அந்த அளவுக்கா, முடி வெட்டக் கூட விடாமலா உன்னைய வேலை வாங்குறா?”, அதிர்ச்சியாகக் கேட்டாள்.

“புனிதா..., அன்னைக்கே சொல்லிட்டேன்...., என்னை நந்தன்னே கூப்பிடுன்னு. நான் எல்கெஜி போறதில் இருந்து இப்படித்தான் கூப்பிடுற, அதை அவ்வளவு சுலபமா மாத்த முடியாது. விட்டுடு..... அதே மாதிரி, எனக்கு ஆபீஸ்ல தான் வேலை...

“வீட்டு நிர்வாகம் முழுக்க திவிதான் பாத்துக்கறா. அதெல்லாம் விடு, மறுபடியும் திவிக்கு வயித்துவலி, அதான் உன்னைப் பாக்க வந்தோம். நீ முதல்ல திவியைப் பாரு”, தன் மனைவிக்கு என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது மட்டுமே அவன் எண்ணமாக இருந்தது.

“ஓகே ஓகே...., நீ உக்காரு. ஸ்கேன் எடுத்துட்டு வந்தீங்களா?”, ஸ்கேன் ரிபோர்ட்டை வாங்கிப் பார்த்தாள். அதைப் பார்த்தவளின் முகம் மாறியது. அதைச் சமாளித்தவாறே, “உள்ளே வாங்க...”, திவ்யாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

திவ்யாவைப் படுக்க வைத்து, அவள் அடிவயிற்றில் அழுத்தம் கொடுக்க, திவ்யா வலியில் முகம் சுழித்தாள். “சரி எழுந்துக்கோங்க...”, புனிதா வெளியே செல்ல முயன்றாள்.

“என்ன ஆச்சு....? ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க...?”, திவ்யா அவளிடம் கேட்டாள்.

“ஏன் திவ்யா இப்படி...? முதலிலேயே ஹாஸ்பிட்டல் போய் இருக்கலாமே. இப்போ...., இப்போகூட ஒண்ணும் இல்லை வாங்க”, அவள் கையை ஆதரவாக அழுத்திவிட்டு வெளியேறினாள்.

புனிதாவின் மௌனம், ஜீவாவை கலங்க வைத்தது. “ஏய் எதுக்கு இப்படி உக்காந்து இருக்க? என்னன்னு சொல்லப் போறியா இல்லையா?”, அவளிடம் கத்தினான்.

“ஒரு நிமிஷம் பொறேன்...., திவ்யாவும் வந்துடட்டும்”, அந்த நேரம் திவ்யாவும் வந்து சேர்ந்தாள்.

தயக்கமாக வந்து அமர்ந்தாள் திவ்யா. பேனாவைத் தட்டியவாறு கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தாள் புனிதா. ஒரு மருத்துவராக மூன்றாம் மனிதரிடம் பேசுவதுபோல், தன் நண்பனிடம் பேச முடியவில்லை.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க...”, திவ்யாதான் அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

“இதை நான் சொல்லித்தான் ஆகணும், வேற வழி இல்லை. சாரி டு சே திஸ்...., உங்க கர்ப்பப் பையில் ஒரு கட்டி வளந்துட்டு இருக்கு. அதை உடனடியா நாம எடுத்தே ஆகணும். கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம், அது கேன்சர் கட்டி இல்லை....”, சொல்லி நிறுத்தினாள்.

“கட்டியை எடுக்கணும் அவ்வளவுதானே...., அதை எடுத்துடலாம். அதுக்கு ஏன் மூஞ்சியை இப்படி வச்சுட்டு இருக்க”, ஆசுவாசமாக மூச்சு விட்டவாறு சொன்னான்.

“கொஞ்சம் பொறுமையா நான் சொல்லுறதைக் கேளேன்...., அந்தக் கட்டி, கொஞ்சம் கர்ப்பப் பையோட இணைஞ்சு இருக்கு. அதை எடுக்கணும்னா...., கர்ப்பப்பையும் டேமேஜ் ஆகும். அப்படி டேமேஜ் ஆனால் அதையும் வைத்திருக்க முடியாது.

“நான் என்ன சொல்ல வாறேன்னா....., திவ்யாவோட கர்ப்பப்பையோட சேர்த்துதான் அந்தக் கட்டியை எடுக்கணும்”, ஒரு வழியாகத் தான் சொல்ல வந்ததை சொல்லி முடித்தாள்.

திவ்யா உறைந்து போனாள். ‘கர்ப்பப்பையை எடுக்குறதா? என் ஜீவாவை, என் வயிற்றில் சுமக்காமல் அதை இழப்பதா?’, முதலில் அவளுக்கு வந்த எண்ணம் இதுதான்.

இந்த எண்ணத்திலேயே அதிர்ந்தவள், ஜீவா அடுத்து சொன்ன வார்த்தையைக் கேட்டு சுக்குநூறாக உடைந்தாள்.

தணிவு - 20

எனக்கான என் தேடலை

நான் உன்னில் உணர

என் தேவையை

நீ அறிவதெப்போது?

புனிதா, திவ்யாவின் கர்ப்பப் பையை எடுக்கவேண்டும் என்று சொன்னவுடனே, திவ்யாவிற்குள் அந்தச் செய்தி இடியென இறங்கியது. 'கர்ப்பப்பையை எடுக்குறதா..? அதுவும் என் ஜீவாவை, நான் வயிற்றில் சுமக்கும் முன்னர் எடுப்பதா..?', இந்த எண்ணம்தான் திவ்யாவை இன்னும் புரட்டிப் போட்டது.

'நான் இப்போ என்ன நினைத்தேன்...? என் ஜீவாவை...., வயிற்றில்..., அப்படியென்றால் நான் ஜீவாவை ஏற்றுக்கொண்டு விட்டேனா? அதுவும், அவர் பிள்ளையை வயிற்றில் சுமக்கும் அளவு. அவர் பிள்ளையை வயிற்றில் சுமப்பதென்றால்....,

'என்னையே அவருக்கு கொடுக்கும் அளவு நேசிக்கின்றேனா. இது எப்பொழுது நிகழ்ந்தது...? இது எப்படி நிகழ்ந்தது..? அந்த வித்தார்த்தை அடித்தாரே அப்பொழுதா..? இல்லை..., இல்லை... இது அதற்கு முன்பே நிகழ்ந்தது.

'அவர் பரிசுப் பொருளைக் கையில் தரவேண்டும் என்று எண்ணினேனே அப்பொழுதா...? இல்லை, அவர் அழுவதைத் தாங்காமல் தோள் தொட்டேனே அப்பொழுதா? இல்லை, முதல் நாள் திருமணம் முடிந்து அவர் உரிமையாய் பழகவில்லை என்று எண்ணினேனே அப்பொழுதா..?

யோசிக்கையில், அந்த நொடியிலும் இல்லை, அதற்கு முன்பே ஜீவா தன் மனதில் குடியேறியதை, அதிர்வாய் உணர்ந்தாள். 'அப்போகூட இல்லன்னா, பிறகு எப்போதான்...? அன்னைக்கு ஸ்கூல்ல அந்த பெஞ்சில்

படுத்திருக்கும்போது, அவர் முகம் கண்ணனின் முகமாக மாறியதே அப்பொழுதா?

‘அதுவும் இல்லையென்றால் முதல்நாள் ஜீவாவின் கதையைக் கேட்ட பொழுது, அந்தப் ப்ரியாவிற்குக் கிடைத்த நேசம், எனக்குக் கிடைத்திருந்தால்...., என்று எண்ணினேனே, அப்பொழுதே இவர் என் மனதில் வந்துவிட்டாரா? என் சூழ்நிலைதான் அவரிடம் நெருங்கவிடாமல் தடுத்ததா?

என் சூடுகண்ட பூனையின் நிலை அவரை நெருங்கவிடாமல் செய்ததா? இல்லையென்றால், ஒரு ஆணை நம்ப முடியாது என்று என்னை நானே ஏமாற்றிக் கொண்டேனா? இப்பொழுது ஜீவாவை நான் நேசிக்கிறேன்.

‘என்னால் என் கர்ப்பப்பையை இழக்க முடியாது. அவர் அன்புக்குப் பாத்திரமாகவும், என் நேசத்துக்கு சாட்சியாகவும் ஒரு வாரிசைக் கொடுக்காமல் என்னால் அதை இழக்க முடியாது, இழக்கவே முடியாது’, மனம் உறுதியாக முடிவெடுக்க,

ஜீவாவின் பதிலோ மின்னலென அவளைத் தாக்கி, அவள் மனதைக் கருக வைத்தது.

“கர்ப்பப்பையையும் எடுக்கணும்னா எடுத்துடு”, சுலபமாகச் சொல்லிவிட்டான். ஒற்றை வாக்கியத்தில் அனைத்தையும் முடித்துவிட்டான்.

ஜீவா அழுத்திச் சொல்ல, ‘இவருக்கு நான் வேண்டாமா? இவருக்கு அப்படி ஒரு ஆசையே இல்லையா? இது எவ்வளவு பெரிய விஷயம், அதை இவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாரே’, திவியின் மனம் தரையில் விழுந்த மீனாகத் துடித்தது.

ஜீவாவோ, திவ்யாவிற்கு இருக்கும் வயிற்றுவலி போக வேண்டும், அது மட்டுமே அவன் எண்ணத்தில் இருந்தது. வேறு எதையும் அவன் யோசிக்கவே இல்லை.

“நந்து, என்ன விளையாடுறியா ரொம்ப ஈசியா சொல்லிட்ட”, புனிதா கோபப்பட்டாள். அவளுக்குமே தன் நண்பனின் வாழ்வில் வசந்தம் வீசவேண்டும், மலரவேண்டும் என்ற எண்ணம் இருக்காதா என்ன?

“புனிதா என்ன பேசுற...? திவிக்கு உடம்புக்கு நல்லதுன்னா அதைச் செய்துதான் ஆகணும். நீ என்னவோ, என்னை விளையாடுறியான்னு கேக்குற. இப்போ நீதான் விளையாடுற”.

“நீ யோசிச்சுதான் சொல்லுறியா..?”.

“இதில் யோசிக்க என்ன இருக்கு...?”,

“என்ன இருக்கா...? திவ்யா கிட்டே கேக்கணும்னு உனக்குத் தோணலையா?”, புரியாமல் பேசுகிறானே என்று ஆத்திரமாக வந்தது.புனிதா அவனிடம் இவ்வளவு விவாதிக்கக் காரணமே, திவ்யாவின் திகைப்பும், குழப்பமும், அமைதியும் தான்.

திவ்யா அவள் நிலையைக் கேட்டவுடன், அச்சப் பட்டிருந்தாலோ, தன் உயிரைப் பற்றி பயந்திருந்தாலோ, இப்போ என்ன செய்யலாம் என அதிர்ந்திருந்தாலோ, புனிதா இவ்வளவு விவாதித்திருக்க மாட்டாள்.

ஆனால் திவ்யாவின் முகத்தில் அவள் கண்டது, அப்பட்டமான அதிர்ச்சியும், குழப்பமும் மட்டுமே. அதைவிட, அவள் பார்வை ஜீவாவையே ஏக்கமாகத் தழுவி மீண்டது. எனவேதான் தைரியமாகப் பேசினாள் புனிதா.

“திவ்யாக்கு என்ன...? அதெல்லாம் அவளும் அப்படித்தான் யோசிப்பா”, அடித்துச் சொன்னான்.

திவ்யாவை வைத்துக் கொண்டே இருவரும் வழக்கடிக்க, “நீங்க ரெண்டுபேரும் என்னைப் பத்தி பேசுறீங்க..., எனக்கு ஏதாவது கருத்து இருக்கும்னு தோணவே இல்லையா?”, ஜீவாவின் மேல் இருந்த ஆத்திரத்தில் வெடித்தாள்.

“நீ சொல்லு திவி..., நான் சொன்னதில் உனக்கு சம்மதம் தானே?”, வேகமாகக் கேட்டான்.

“இல்ல..., எனக்கு சம்மதம் இல்லை...”, அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள். பார்வையோ அவனைக் குற்றம் சுமத்தியது.

“என்னது.... விருப்பம் இல்லையா? அப்போ என்னதான் முடிவு எடுத்திருக்க,,?”, அவனுக்கும் ஆத்திரம்.

“நீங்க ரெண்டுபேரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வாங்க. நான் வெளியே போயிட்டு வாறேன்”, புனிதா அவர்களுக்குத் தனிமை கொடுத்து வெளியேறினாள்.

அவளை நன்றியுடன் தொடர்ந்தன திவ்யாவின் விழிகள். “இப்போ சொல்லு, ஏன் வேண்டாம்?”, புரிந்து கொள்ளாமல் நடக்கிறாளே என்று ஆத்திரம் அவனுக்கு.

“வேண்டாம்ன்னா வேண்டாம்..., எனக்கு இதில் இஷ்டம் இல்லை”, சொல்லிவிட்டு அழுத்தமாக அவனைப் பார்த்தாள்.

“சரி, வேண்டாம்னு சொல்லிட்ட..., அதை என்ன செய்யலாம்னும் அப்படியே சொல்லிடு”, கடுப்புக் குறையவில்லை அவன் குரலில்.

“நான் மாத்திரை சாப்பிட்டுக்கறேன்....”.

“என்னது மாத்திரையா...? அதென்ன, காய்ச்சல், தலைவலின்னு நினைச்சியா..? மாத்திரை சாப்பிட”.

“எதா வேண்ணா இருக்கட்டும், நான் இதுக்கு ஒத்துக்க மாட்டேன்”.

“திவி..., இதை அப்படியே விட்டால் ஏதாவது விபரீதமா போய்டும்”.

“என்ன செத்துடுவேனா...? பரவாயில்லை, நான் செத்தாலும் பரவாயில்லை...?”, இன்னும் அதிகமாகக் கத்தினாள்.

“என்ன சொன்ன...?”, அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான். அவள் வலியில் துடித்ததை விட, அதிகமாக அவன் துடித்தான். “சாரி, சாரி...., சாரி டா....., ஏதோ ஆத்திரத்தில் கை நீட்டிட்டேன்”, மெதுவாக அவள் கன்னம் வருடினான்.

திவ்யாவோ அவன் அடித்ததைப் பற்றிக் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை. அதேபோல் அவனது சமாதானத்தையும் சலனமே இல்லாமல் ஏற்றாள்.

“அப்போ, என்னை விட்டுப் போக வேணும்னாலும் செய்வ, ஆனால் கர்ப்பப்பையை எடுக்க மாட்ட அப்படித்தானே”, வேதனையிலும், தவிப்பிலும், துடித்து வந்து விழுந்தன வார்த்தைகள்.

“ஆமா ஆனா.....”, அவள் மேலே சொல்ல வந்ததை, கை நீட்டித் தடுத்தான். வேதனை, வருத்தம், ஆத்திரம், இயலாமை அனைத்தையும் அப்படியே முழுங்கினான்.

அவன் முகம் உணர்ச்சிகளைத் துடைத்து வெறுமையானது. “சரி நீ முடிவெடுத்துட்ட, நான் இனிமேல் என்ன சொன்னாலும் உன் மனசில் அது பதியாது”, சொல்லிவிட்டு, பேசாமல் அமர்ந்துகொண்டான்.

திவ்யாவிற்கு, தன் மன ஓட்டத்தை எப்படி அவனிடம் சொல்ல என்பது தெரியவில்லை. அதுவும், கொஞ்சம் கூட தன்மேல் விருப்பமே இல்லாமல் இருக்கும் ஒருவனிடம், தன் நேசத்தைச் சொல்வது தன் பெண்மைக்கு அவமானம் என்று அவள் கருதினாள்.

ஜீவாவின் வாழ்க்கையில் ஒரு பெரிய அடிவாங்கி, மரத்துபோய் அவன் இருக்கிறான் என்பதை அவள் சிந்திக்கவே இல்லை. அவனது மௌனமும் அவளை

வதைத்தது. சேரின் கைப்பிடியில் இருந்த அவன் கரங்களை அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்.

அவளது இந்தச் செய்கை, கொந்தளிக்கும் அவன் மனதைக் குளிர்விக்கவில்லை, மாறாக, அடியாழத்தில் அவனது வெறுமையைப் புதைத்தது. தாடை இறுக, சுவரையே வெறித்தான்.

அப்பொழுது புனிதாவும் வரவே, இருவரிடமும் பேசினாள். "என்ன முடிவு எடுத்துருக்கீங்க?", அவள் குரலில் எதிர்பார்ப்பு.

"இதுக்கு வேற தீர்வே இல்லையா? அதாவது மருந்து மாத்திரை...", தயக்கமாகக் கேட்டாள்.

"கண்டிப்பா இருக்கு திவ்யா. ஆனால், அதனால், கட்டியின் வளர்ச்சியை நாம கட்டுப்படுத்த முடியும். சில நேரம், அது கரைய வாய்ப்பு இருக்கு, அதுவும் பத்து சதவீதம் தான். அதை அப்படியே விட்டு வைக்கவும் முடியாது.

"வேண்ணா, ஒரு, ஒருவருஷம் பாத்துட்டு முடிவு பண்ணிக்கலாம்", பெண்கள் இருவரின் பார்வையும் ரகசியம் பேசியது.

திவ்யா புரிந்ததற்கு அறிகுறியாக, சம்மதமாகத் தலையை ஆட்டினாள்.

"ஒரு வருஷம் கழிச்சு செய்யிறதுக்கும், இப்போவே செய்யிறதுக்கும் என்னதான் வித்தியாசம்.....", தாங்க முடியாமல் சுள்ளென விழுந்தான் ஜீவா.

"என்ன இப்படி சொல்லிட்ட நந்து..., முன்னூற்றி அறுபத்தைந்து நாள்.. என்ன வேண்ணா நடக்கலாம். அது நல்ல விதமாகவும் இருக்கலாம்", பூடகமாகப் பேசினாள் புனிதா.

திவ்யாவிற்குப் புனிதாவின் பேச்சைக் கேட்டு கொஞ்சம் வெட்கம் வந்தது. நாணத்துடன் புனிதாவைப் பார்த்து சிரித்தாள். ஜீவா இவர்களைப் பார்க்கவே தயாராக இல்லை. எனவே புனிதாவின் ஆதரவும், திவ்யாவின் நாணமும் அவன் கண்களில் படவில்லை.

“இதில், என்ன நல்ல விதத்தைக் கண்ட நீ..”, எரிச்சலாக மொழிந்தான்.

“அது.....”, துவங்கியவள், திவ்யாவின் தயக்கமான முகத்தைப் பார்த்து, அதைச் சொல்லாமல் விடுத்தாள்.

“சரி, நான் கொஞ்சம் டேப்ளட் எழுதித் தாறேன், அதைத் தொடர்ந்து சாப்பிடுங்க. ஆனால் இதையும் ரொம்ப நாள் சாப்பிடக் கூடாது, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நிறுத்திடணும்”, திவ்யாவைப் பார்த்தவாறே சொன்னாள்.

“என்னவோ பண்ணிட்டுப் போங்க...., நீ சீட்டைத் தா, நான் மருந்து வாங்கிட்டு நிக்கிறேன்”, அங்கே இருக்க முடியாமல் எழுந்து சென்றுவிட்டான்.

“தேங்க்ஸ் திவ்யா..., நான் செய்யிறது சரியா தப்பான்னு தெரியலை. ஆனால் நீங்க ரெண்டுபேரும் ஒண்ணாகணும்னு நான் விரும்புறேன். உனக்கு அதிக நாள் இல்லை. அதிகமா போனால் ஆறு மாசம். அதுக்குள்ளே ஒரு நல்ல முடிவுக்கு நீ வந்திருக்கணும்.

“உனக்கும் இதில் விருப்பம் என்று தெரிந்ததால் தான், நந்தனோட தவிப்பைப் பார்த்தும் கூட நான் பேசாமல் இருந்துட்டேன். முடிவு நல்லவிதமா இருக்கணும்னு நான் விரும்புறேன்”, உடைத்துச் சொல்லாமல் சுற்றி வளைத்தாள் புனிதா.

“என்னால் உறுதியா சொல்ல முடியலை டாக்டர். ஆனா என் மனசுக்குள்ளே ஜீவா இருக்கார். மீதியை அவர்தான் முடிவு செய்யணும்”, திவ்யா தன் நிலையை விளக்கினாள்.

புனிதாவிற்குக் கவலை பிறந்தது. நந்தனாக, திவ்யாவை நெருங்குவான் என்ற நம்பிக்கை அவளுக்குச் சுத்தமாக இல்லை. ஏனென்றால், நந்தன் ஒரு பெண்ணால் பட்ட துன்பங்கள், அவமானங்கள், அசிங்கங்கள் என்னவென்று அவளுக்குத் தெரியும். திவ்யாவின் மனமும் புரிய, முடிவைக் கடவுளிடம் விட்டுவிட்டாள்.

வீட்டிற்கு வந்த ஜீவாவும் திவ்யாவும், இருவேறு மனநிலையிலேயே இருந்தார்கள். திவ்யா மானசீகமாக அவனை நெருங்க, ஜீவாவோ அதைக் கொஞ்சம் கூட உணராமல், அவள் உடல்நிலையைப் பற்றியக் கவலையிலேயே ஆழ்ந்தான்.

இங்கே, பீச்சுக்குச் சென்ற ஹேமாவும் கணேஷும் குழந்தைகளோடு கொஞ்ச நேரம் அலையில் விளையாடினார்கள். அங்கிருக்கும் சுண்டல், மாங்காய், கடலை என வாங்கிச் சாப்பிட்டார்கள். ஆனால் ஹேமா, கணேஷை அருகில் கூட நெருங்கவே விடவில்லை.

கணேஷ் அவளை நெருங்க எவ்வளவோ போராடியும், ஒற்றைப் பார்வையில் அவனை விலக்கி நிறுத்திவிட்டாள்.

“ஏன் ஹேமா...”, ஏக்கமாகக் கேட்டு, அவள் இடையில் அவன் கைகள் தவழ, நறுக்கென அவன் கையைக் கிள்ளிவிட்டு, தள்ளிவிட்டாள்.

அவள் காரணத்தைச் சொல்லியிருந்தால் அவன் சும்மா இருந்திருப்பானோ என்னவோ, புதுமாப்பிள்ளையின் மோகம், அவள்மேல் இருந்த காதல், ஆசை அவளையே சுற்றிவரச் செய்தது.

“கணேஷ், கையைக் காலை வச்சுட்டு பேசாமல் வாங்க. பசங்க இருக்காங்க”, அவனது விளையாட்டுக்கள் அவளுக்கும் மயக்கத்தைக் கொடுக்க, மென்மையாகவே அவனிடம் சொன்னாள்.

“அவங்க சின்னப் பசங்க..., அதுவும் மணல்லதானே விளையாடுறாங்க. ஒரே ஒரு முத்தம் மட்டும் தாயேன்.., நான் பேசாமல் உக்காந்துக்கறேன்”, கெஞ்சலாகக் கேட்கும் அவனது தவிப்பு அவளுக்கும் புரியாமல் இல்லை.

ஆனால் அஞ்சலியை அருகில் வைத்துக் கொண்டு அவனை நெருங்கவும் தயக்கம் தடுத்தது.

“நல்லப் பிள்ளை இல்ல...., வீட்டுக்கு வாங்க..., மொத்தமா தாறேன்”, அவனைச் சமாதானம் செய்ய முயன்றாள்.

“என்னை ரொம்பக் கெஞ்ச வைக்கிற நீ...”, அதன் பிறகு அவன் முறுக்கிக் கொண்டான். ஹேமாவும், வீட்டுக்குப் போய் சமாதானம் செய்யலாம் என்று விட்டுவிட்டாள்.

வீட்டிற்கு வந்தவுடன், குழந்தைகள் தங்கள் பெற்றவர்களைத் தேடிச் செல்ல, ஹேமா, கணேஷை அறைக்கு இழுத்துச் சென்றாள். அறைக்குச் சென்றுத் தாழிட்டவள், அவன் எதிர்பார்க்கும் முன்பே, அவனை நெருங்கி அவன் முகத்தை அருகில் இழுத்து, தன் இதழ்களோடு, அவன் இதழ்களைப் புதைத்துக் கொண்டாள்.

முத்தம் மட்டுமே, கொடுப்பவர்க்கும், பெறுபவர்க்கும் இன்பத்தை அளிக்கக் கூடியது. துவக்கம் மட்டுமே ஹேமாவின் கைகளில் இருந்தது. அதன் பிறகு நடந்தவை, கணேஷின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

“என்னங்க சாப்பிட்டு வந்துடலாம்..., திவ்யாவும் அண்ணாவும் என்ன நினைப்பாங்க....?”, அவளது எந்த சாக்குபோக்குக்கும் அங்கே இடமில்லாமல் போனது. அவன் தேவை முடியும்வரை அவளை அங்கிருந்து விடவில்லை.

அவனது தேவைகளும் தேடல்களும், ஹேமாவையும் தொற்றிக் கொள்ள, காதலர்களுக்கே உரிய தனி உலகில் சகாப்தம் படைக்கத் துவங்கினர் இருவரும்.

காலையில் சாப்பாட்டு மேசையில், ஹேமா, கணேஷுக்காக எடுத்து வைத்திருந்த இரவுச் சாப்பாடு அப்படியே இருக்க, திவ்யா கேள்வியாகப் புருவம் சுருக்கினாலும், அவள் இதழ்களில் மெல்லிய சிரிப்பும் எட்டிப் பார்த்தது. பிறகு முத்துவை வைத்து அவற்றை ஒதுக்கச் சொன்னாள்.

அந்த நேரம் ஹேமா அங்கே வரவே, திவ்யாவின் சிரிப்பும், முத்து பாத்திரங்களை ஒதுக்குவதைப் பார்த்தும், சங்கடமாக உணர்ந்தாள். அவள் சங்கடம் உணர்ந்து, தோழியை ஆதரவாக அணைத்துக் கொண்டாள்.

ஆனாலும் திவ்யாவின் சிரிப்பு அதிகரித்ததே தவிர குறையவில்லை. “போ திவ்யா..., நானே எப்படிச் சொல்லன்னு தவிச்சுட்டு இருக்கேன். நீ இப்படிச் சிரிக்கிறியே...”, சிணுங்கினாள்.

“ஹையோ ஹேமா..., நான், நீ நினைக்கிற மாதிரி, அதை நினைச்சு சிரிக்கலை. நான் அவ்வளவு சொல்லியும், என் பொண்ணை உங்களோட பீச்சுக்கு கூட்டிப் போனியே...., அதோட பின்விளைவை நினைச்சு சிரிக்கிறேன்”, சொல்லிவிட்டு, அடக்கமாட்டாமல் சிரித்தாள்.

“ஹேய் என்ன சொல்லுற..? அதான் அவரைக் கிட்டக் கூட விடலையே நான்...”, புருவம் சுருக்கி சந்தேகமாகக் கேட்டாள்.

“அதைத்தான் என் பொண்ணும் சொன்னாள்..”, வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

“என்னன்னு....? முதல்ல சொல்லிட்டு சிரி திவ்யா..., என்னமோ திகீர்ன்னு இருக்கு”.

“என் பொண்ணு சொன்னதை, அப்படியே சொல்லவா, இல்ல என் பாணியில் சொல்லவா?”, திவ்யா கேட்க, கடுப்பானாள் ஹேமா.

“உன் பொண்ணு சொன்னதையே சொல்லு...”, பல்லைக் கடித்தாள்.

“அம்மா அம்மா...., ஹேமா அத்தை ரொம்ப மோசம். கணேஷ் மாமா ஒரே ஒரு முத்தம் கேட்டாங்க, அத்தை கொடுக்கவே இல்லை. மாமா பாவம் தானேம்மா....”, அஞ்சலியின் குரலில் திவ்யா சொல்ல, தலையில் கை வைத்தாள் ஹேமா.

“எனக்கு வில்லியும் மாமியாரும் வெளியே இல்லை. ரெண்டுமே உன் பொண்ணுதான். வரட்டும் அவ..., அப்போ நான், நேத்துப் பட்டக் கஷ்டம் எல்லாம் வேஸ்ட்டா? இதுக்கு நான், கணேஷ் கேட்டதைக் கொடுத்தாவது இருக்கலாம்”, போலியாக அலுத்த ஹேமாவின் செய்கையில், சலங்கை ஒலியென நாதமாய் சிரித்தாள் திவ்யா.

அவளது மலர்ந்த புன்னகையைக் கண்டு, பூரித்தாள் ஹேமா. அந்த நேரம் வந்த ஜீவாவின் கண்களும் திவ்யாவின் சிரிப்பைக் கண்டு, அவள் முகத்திலேயே நிலைத்தது.

திவ்யாவின் மலர்ந்த முகத்தையும், சிரிப்பையும் முதல் முறையாகக் கேட்ட கணேஷ், முத்து கூட, அவள் முகத்தில் அந்தச் சிரிப்பு நிலைக்க வேண்டும் என்று எண்ணினார்கள்.

தணிவு - 21

வெயிலின் அருமை நிழலில் தெரியும்

வாழ்க்கையின் அருமையை

உன்னருகில் உணர்கிறேன்.

எனக்கான உன் மாற்றம்....

தேனில் ஊறிய பலாச்சுளையாய்....

கணேஷ், காலையிலேயே ஒருவரைப் பார்க்கச் செல்லவேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட, ஹேமா தாயைப் பார்க்கச் செல்வதாகச் சொல்லவே, திவ்யாவின் ஆக்டிவாவை அவள் எடுத்துச் சென்றாள்.

குழந்தைகளைப் பள்ளிக்குச் செல்லக் கிளப்பிக் கொண்டிருந்தாள் திவ்யா. ஜீவா காலையிலேயே வாக்கிங் சென்றவன் இன்னும் வீடு வந்து சேர்ந்திருக்கவில்லை.

திவ்யா மனதுக்குள் புலம்பியவாறே அவர்களுக்கு ஷூ, பேக், லஞ்ச் பாக்ஸ் என அனைத்தையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். காலை உணவையும் அவசரமாக இருவருக்கும் சேர்த்தே ஊட்டி விட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் ஜீவா மாடியேறிச் செல்வது அவளுக்குத் தெரிந்தது. அவனிடம் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தாள், ஆனால் அது என்னவென்று ஆராய நேரமில்லாமல், இருவரோடு போராடவே அவளுக்கு நேரம் சரியாக இருந்தது.

அவர்களை டிரைவரோடு காரில் அனுப்பிவிட்டு, மாடியேறப் போகையில், செக்யூரிட்டி வேகமாக வந்தார். “அம்மா யாரோ காவியாவாம், உங்களைத் தெரியும்னு சொல்லுறாங்க. கேட் கிட்டே நிறுத்தி வச்சு இருக்கேன்.

“உங்களுக்குத் தெரியுமா? வரச் சொல்லவா?”, அவன் பவ்யமாகக் கேட்டான்.

“என்னது, வெளியவே நிறுத்தி வச்சுட்டீங்களா? உடனே அனுப்புங்க”, உடல் முழுவதும் ஒரு பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

காவியா வாசலில் வரும்பொழுதே ஓடிச் சென்று அவளை வரவேற்றாள். “வாங்கண்ணி...., உள்ளே வாங்க. எங்கே, அண்ணா, பையன் எல்லாம் காணோம்? நீங்க தனியாவா வந்தீங்க? எப்படி இருக்கீங்க? அண்ணா, பையன் எல்லாம் எப்படி இருக்காங்க?

“உங்களுக்கு எப்படி இந்த அட்ரஸ் தெரியும்? அக்கா சொன்னாளா? என்ன திடீர்ன்னு வந்து இருக்கீங்க. ஏதாவது விசேஷமா?”, மூச்சு கூட விடாமல், நலம் விசாரித்தாள் திவ்யா.

திவ்யாவின் உற்சாகத்தையும், சந்தோஷத்தையும், மலர்ந்த முகத்தையும், பூரிப்பையும் ஆசையாகப் பார்த்தாள் காவியா.

அவள் கண்கள் நிறைந்தது. தன் அண்ணியை, முன்பு பார்த்த சந்தர்ப்பங்களில் எல்லாம், இப்படி மலர்ந்த முகத்துடன் பார்த்த நினைவே இல்லை. பெண் பார்க்கப் போன பொழுது இப்படிப் பார்த்தது.

அவளது சந்தோஷம் கண்டு மனம் நிறைந்தது காவியாவிற்கு. திவ்யாவின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல், “நீங்க எப்படி அண்ணி இருக்கீங்க?”, கைகளைப் பற்றியவாறு நிதானமாகக் கேட்டாள்.

“நான் ரொம்ப நல்லா இருக்கேன் அண்ணி. சாரி, என்னோட கல்யாணத்துக்கு உங்களுக்குத் தகவல் சொல்லாமல் விட்டுட்டேன்”, குற்ற உணர்வாகச் சொன்னாள்.

“நீங்க தகவல் சொல்லாததில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை அண்ணி. என்னோட கவலை எல்லாம், ஒரு மிருகத்தோட பேச்சை நம்பி, உங்களைப் பாக்கக் கூட வராமல் இருந்துட்டேனே ஒரு காலத்தில்,

“அதுவும் உங்க நிலை, நீங்க முதல்நாள் வீட்டுக்கு வந்தபோதே தெரிஞ்ச பிறகு கூட....., அம்மாவும் நானும் எப்படி அவனோட பேச்சை அவ்வளவு நம்பினோம்னு இப்போ கூட எனக்குப் புரியலை”, தலை கவிழ்ந்தாள்.

“அப்படி சொல்லாதீங்க அண்ணி. எனக்காகப் போராடிய ஒரே ஆள் நீங்கதான், அந்த நன்றியை நான் எப்போதும் மறக்க மாட்டேன். நடந்ததெல்லாம் என்னோட விதி, அதை விடுங்க”, காவியாவின் வருத்தம் பிடிக்காமல், ஆதரவாகச் சொன்னாள்.

“உங்களுக்கு கல்யாணம் முடிஞ்சிடுச்சுன்னு எனக்கு ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் தெரியும். கீதா அண்ணி சொன்னாங்க. அவங்களை ஹாஸ்பிட்டல்ல வச்சுப் பாத்தேன்”.

“அக்கா எப்படி இருக்கா..? அக்காவுக்கு இப்போ அஞ்சாவது மாசம் இல்ல. அவளையும் போய் பாக்கவே இல்லை. எங்கே..... ஊர் பக்கம் வந்தால், வேண்டாதவங்க பார்வையில் விழுந்துடுவோமோன்னு பயந்தே வரலை”, ஒரு பெருமூச்சுக் கிளம்பியது அவளிடம்.

“எனக்கும் தெரியும் அண்ணி, அதனால்தான் உங்க கல்யாணத்துக்கு எனக்குத் தகவலும் கொடுக்கலன்னு. நானும் ஊருக்கே முழுக்குப் போட்டுட்டேன். அவர் வீடுதான் தஞ்சம். அந்த வேண்டாதவன் மூஞ்சியில் கூட முழிக்கிறது இல்லை.

“அவனெல்லாம் நல்லாவே இருக்க மாட்டான்...., உங்களுக்கு செஞ்ச கொடுமைக்கு தான், இப்போ ஜெயில்ல களி திங்கிறான். அதான் நானும் தைரியமா கிளம்பி வந்தேன். அதை விடுங்க, பசங்க எங்கே? அண்ணா எங்க?”, பார்வையைச் சுழலவிட்டவாறே ஆர்வமாகக் கேட்டாள்.

“பசங்க ஸ்கூல் போயிருக்காங்க. அவர் மாடியில் குளிக்கிறார். இருங்க, நான் உங்களுக்குக் குடிக்க ஏதாவது

எடுத்துட்டு வாறேன்”, எழப் போனாள்.

“நானும் உங்களோடவே வாறேன் அண்ணி. இங்கே தனியா உக்காந்து என்ன செய்யப் போறேன்”.

“நீங்க குளிக்கிறீங்களா அண்ணி..., அண்ணா, பையன் எல்லாம் எங்கேன்னு கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லவே இல்லையே”.

“நாங்க காலையிலேயே வந்து, இங்கே ஹோட்டல்ல ரூம் போட்டுத் தங்கி இருக்கோம். அங்கேயே டிபன் கூட முடிச்சுட்டேன். அவரைக் கூப்பிட்டதுக்கு, என்னால் அவ முகத்தில் முழிக்க முடியாது, நானெல்லாம் இருந்தும் கூட இப்படி ஆயிடுச்சேன்னு, அவருக்கு ரொம்ப வருத்தம்.

“நானும் ரொம்பக் கட்டாயப் படுத்தலை, அதுவும் தவிர ...., நாங்க வந்து, எங்களால் உங்களுக்குப் பிரச்சனை வந்துடக் கூடாதுன்னுதான், செக்யூரிட்டி கிட்டே சொல்லி அனுப்பிட்டு வெளியவே இருந்தேன்”, வேதனை அவள் குரலை அடைத்தது.

“இல்ல அண்ணி, இவர் ரொம்ப நல்லவர். என்னையும் கண்ணனையும் உயிரா பாத்துக்கறார். எனக்கு இங்கே எந்தக் குறையும் இல்லை. நீங்க எப்போ வேண்ணா இங்கே வரலாம்”, சொல்லிவிட்டு, முத்துவிடம் காபி கொண்டுவரச் சொன்னாள்.

மறுபடியும் ஹாலில் வந்து அமர, “அண்ணி, அண்ணா இன்னுமா குளிக்கிறாங்க?”, ஜீவாவைப் பார்க்கும் ஆவல் அவள் கண்களில்.

“இதோ இப்போ கூப்பிடுறேன் அண்ணி”, சொன்னவள், கீழே இருந்தே குரல் கொடுத்தாள். மனதுக்குள் பெரிய உறுத்தல், ‘ச்சே..., இவங்க முதல் முறை பாக்கும் பொழுது, அவர் ஆண்டி வேஷத்தில், அந்தக் கடா தாடியோட இருந்தால் நல்லாவே இருக்காதே’.

அவள் யோசனையைக் கலைத்தது ஜீவாவின் வருகை. அதைவிட, அவனது தோற்றம்..., அழகாக முடி வெட்டி, ஷேவ் செய்து...., அதிலும் ட்ரிம் செய்த அழகான மீசையுடன், பார்க்கவே கம்பீரமானத் தோற்றத்தில் இருந்தான்.

நிதானமாகப் படியிறங்கி வந்தவனை, இமைக்க மறந்து, பார்த்துக் கொண்டே இருந்தாள் திவ்யா. ஜீவாவும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் கண்களில் தெரிந்த வியப்பு, ஆச்சரியம், அவள் இமைக்க மறந்து அவனைப் பார்த்த விதம்....., மெல்லிய கர்வம் கொண்டான் ஜீவா.

திவ்யாவிற்குப் பிடித்த மாதிரி இருக்கிறோம், அவளுக்குத் தனது தோற்றம் பிடித்திருக்கிறது என்பதே அவனை நிமிர்ந்து நிற்கச் செய்தது. காவியாவும், ஜீவாவின் தோற்றத்தில் திருப்தியாக உணர்ந்தாள்.

அதைவிட, இருவரின் அசையாத பார்வையில் இருந்த நேசத்தைக் கண்ட மனம் நிம்மதியை உணர்ந்தது. அவர்கள் இருவரும் தங்கள் உலகில் சஞ்சரிக்க, அமைதியாகவே இருந்துகொண்டாள் காவியா.

முதலில் கலைந்தது ஜீவாதான். “எதுக்கு கூப்பிட்ட திவி..?”, அவன் கேட்ட பிறகுதான், காவியாவின் நினைவே வந்தது அவளுக்கு.

“என்னங்க, காவியா வந்து இருக்காங்க..., அதான்...”, தடுமாற்றாகச் சொன்னாள்.

அவனது உருவம் அவளை தடுமாறச் செய்தது. “காவியா...?”, அவன் கேள்வியாகத் திரும்பிப் பார்க்க, காவியா எழுந்து நின்று கரம் கூப்பினாள்.

“வணக்கண்ணே...., எனக்கு ரொம்ப சந்தோஷம்...”, சந்தோசத்தில், அவளாலும் பேச முடியவில்லை.

திவ்யா மெல்லியக் குரலில், அவள் யார் என்பதைச் சொல்ல, திவ்யாவின் வாழ்க்கையில் காவியாவின் பங்கு அவனுக்குத் தெரியுமாதலால், தயக்கமின்றி அவளை வரவேற்றுப் பேசினான்.

“ரெண்டுநாள் தங்கிட்டுதான் போகணும், மச்சானையும் வரச் சொல்லும்மா...”, என்று சொல்லி, அவளைக் கட்டாயப்படுத்தி சாப்பிட வைத்த பிறகுதான் விடவே செய்தான். ஆனால் காவியா கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிட்டாள். அடிக்கடி வந்து பார்ப்பதாகச் சொல்லிச் சென்றாள்.

அவள் செல்லவே, திவ்யா வேகமாக மாடியேறினாள். அவள் எங்கு செல்கிறாள் என்பது அவனுக்குத் தெரியுமாதலால், இரண்டு நிமிட இடைவெளியில் அவனும் சென்றான்.

“ஹையோ...., அப்படியே இருக்கீங்க....., அதுவும் இந்த மீசையோட..., எனக்கு மீசைன்னா ரொம்பப் பிடிக்கும் தெரியுமா? ஆனால் இதைச் சொல்லி நான் பட்ட துன்பம்...”, மெல்லிய விசும்பல் கேட்டது. அவள் பழைய விஷயங்களை நினைவுபடுத்திக் கொண்டாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

“ஆனா நீங்க அப்படி இல்லன்னு எனக்குத் தெரியும். சூடுகண்ட பூனை மாதிரி என் நிலைமை. ஜீவா..., என் ஜீவா...”, அவள் உணர்ச்சிவசப்பட்டு அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள்.

“கூப்ட்டியா திவி....”, மறைவிலிருந்து உள்ளே வந்தான். மாட்டிக் கொண்டதில் விழித்தாள் திவ்யா.

“இல்ல..., நான்..., சும்மா..., தெரியாமல்...., பேர்...”, நாக்குச் சட்டென உலர்ந்து போனது.

அவள் பயத்தைப் பார்த்தவன், தயங்காமல் சொன்னான், “எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு..., நீ ஜீவான்னு

சொன்னது...", அவள் கண்களுக்குள் ஊடுருவியது அவன் பார்வை.

"நிஜம் நான் இருக்கேன். நீ நிழலோட பேசிட்டு இருக்குறியே. உனக்குப் புடிச்சிருக்கா?", அவன் இடக்கர விரல்கள் மீசையை நீவியவாறே கேட்க, மூச்சடைத்தது திவ்யாவிற்கு.

ஜீவா பேச்சிலேயே, தான் பேசியதை, அவன் கேட்டுவிட்டான் என்பதைப் புரிந்தவள், மௌனமாகத் தலை குனிந்தாள்.

"ஏன் பிடிக்கலையா....?", அவள் பதில் சொல்லாமல் தலை குனியவே, ஏமாற்றமாகக் கேட்டான்.

சட்டென நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவள், "பிடிச்சிருக்கு...., ரொம்ப...", சொல்லிவிட்டு ஓடியே போனாள்.

ஜீவாவின் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது. கிச்சனுக்குள் வந்து நின்ற திவ்யாவிற்கு, தன் மூச்சும், இதயத் துடிப்பும், சீராகவே கொஞ்ச நேரமானது. அவனது மீசை நீவியத் தோற்றமே கண்முன் விரிந்து, அவளை இனிய பரவசத்துக்குள்ளாக்கியது.

திவ்யாவுக்குத் தெரியாமலேயே அவள் தனது பழையக் குறும்புஇயல்பை மீட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் ஜீவாவோ அவளுக்காகத் தன் வெளித்தோற்றத்தை மாற்றத் துணிந்தவன், தன் மனதை இறுக்கியே வைத்திருந்தான்.

திவ்யாவும், ஜீவாவின் மனதைத் திறக்கவைக்கும் எண்ணம் சிறிதும் இல்லாமல் இயல்பாக நடமாடிக் கொண்டிருந்தாள். கணேஷும், ஹேமாவும் தங்கள் நெருக்கத்தை, அவர்கள் அறியும் வண்ணம் உணர்த்தியும் கூட, ஜீவாவோ, திவ்யாவோ மனதளவில் கூட சஞ்சலப் படாமலே நடந்துகொண்டார்கள்.

இவர்களை எப்படி மாற்றவென்று அவர்கள் விழி பிதுங்கி நிற்க, இவர்களுக்குள் அழகான மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள் குழந்தைகள். அஞ்சலி கண்ணன் இருவருமே ஹேமா, கணேஷ் நெருக்கத்தை, புரியாமல் பார்த்தார்கள்.

தங்களது அம்மாவும் அப்பாவும் இப்படி இல்லையே என்று தோன்றியது இருவருக்கும். அன்று டிவியில் ஹேமா ஒரு திரைப்படம் பார்க்க, அதில் இருந்த கணவன் மனைவியும் நெருக்கமாக இருக்க, அஞ்சலிக்குப் பெருத்த சந்தேகம்.

“அத்த..., அம்மா அப்பான்னா இப்படிதான் இருப்பாங்களா..?”, படத்தை சுட்டிக் காட்டி அவள் கேட்க, திரைப்படத்தை அசுவாரசியமாக பார்த்துக் கொண்டிருந்த ஹேமா ஊன்றிப் பார்த்தாள்.

அங்கே காட்சியில் கணவன் மனைவிக்கு சாப்பாடு ஊட்டுவதும், சீண்டுவதும், சேர்ந்து வெளியே செல்வதும், குழந்தைகளை சேர்ந்தே சீராட்டுவதும்..., இப்படியாகக் காட்சி விரிய, அஞ்சலியும் கண்ணனும் அந்தக் காட்சியில் ஒன்றிவிட்டதும் தெரிந்தது.

ஹேமா தன்னையே நொந்துகொண்டாலும், இதுவும் நல்லதற்கே என எண்ணிக் கொண்டாள். “ஆமா அஞ்சும்மா..., ஏன் கேக்குற?”, ஒன்றுமே தெரியாதவளாகக் கேட்டாள்.

“எங்க அப்பா அம்மா இப்படி இல்லையே ஏன்..?”, அடுத்தக் கேள்வி வேகமாக வந்து விழுந்தது.

ஹேமா என்னவென்று சொல்லி அவர்களுக்குப் புரிய வைப்பாள்...., அவளால் மௌனத்தை மட்டுமே பதிலாக்க முடிந்தது.

“சொல்லுங்க அத்த....”, அஞ்சலி அவளை உலுக்கினாள்.

“உனக்குச் சொன்னால் புரியாதுடா? வளந்தால் நீயே புரிஞ்சுப்ப”, சொல்லிவிட்டு அஞ்சலியையும்

கண்ணனையும் அணைத்துக் கொண்டாள்.

அன்று மாலை, ஜீவா வீட்டுக்கு வந்து விளையாடிய பொழுதும், குழந்தைகளிடம் அவ்வளவு உற்சாகம் இருக்கவில்லை. அதிலும், அஞ்சலி மிகுந்த அமைதியாக இருந்தாள். கண்ணன்தான் ஜீவாவின் மீசையைப் பார்த்து ஆச்சரியப் பட்டான்.

“அப்பா எனக்கு....”, கண்ணன் கேட்க, அவனுக்கு கறுப்பு மையில் மீசை வரைந்து விட்டான்.

கண்ணன் உடனடியாக அதை திவ்யாவிடம் சென்று காட்ட, “அட என் குட்டிக் கண்ணனுக்கு மீசை ரொம்ப அழகா இருக்கே, யார் வரஞ்சாங்க”, அவனைத் தூக்கிச் செல்லம் கொஞ்சினாள்.

“அப்பா...., அப்பாக்கும் மீசை, எனக்கும் மீசை.....”, சொல்லிக் குதிக்கும் அவனை, தலைக் கோதித் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

சாப்பாட்டு மேசையில் அனைவரும் அமர்ந்து சாப்பிட, அஞ்சலி அமைதியே உருவாக அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹேமாவும், கணேஷும் ஒருவருக்கு ஒருவர் பரிமாறிச் சாப்பிட, இங்கே திவ்யா, ஜீவாவுக்குப் பரிமாறிவிட்டு அமர்ந்து கொண்டதைப் பார்த்தாள்.

“அஞ்சும்மாக்கு என்ன செய்யிது? உடம்பு சரியில்லையா? சாயங்காலம் ஸ்கூல்ல இருந்து வந்தப்போ நல்லாதானே இருந்தாங்க. என்னடா செல்லம்”, அஞ்சலியைத் தூக்கிக் கொண்டு சாப்பாடு ஊட்டியவாறு கேட்டாள் திவ்யா.

அஞ்சலியின் பார்வையோ ஹேமாவிடம் சென்றது. அந்த நேரம் ஹேமாவும் அஞ்சலியைப் பார்க்க, மனம் கனத்தது அவளுக்கு. அஞ்சலி மனதுக்குள், சாயங்காலம் பார்த்தப் படமே ஓடுவதைப் புரிந்து கொண்டாள்.

“திவ்யா, அவளுக்குப் பால் மட்டும் கொடுத்துத் தூங்க வை”, ஹேமா சொல்லவே, அவ்வாறே செய்தாள்.

அறைக்குள் வந்த அஞ்சலியும் கண்ணனும் விளையாடினார்கள், ரைம்ஸ் பார்த்தார்கள். ஜீவா, அவனது அலுவலக பைல் பார்த்துக் கொண்டிருந்தான். திவ்யா அறைக்குள் வந்து, விளக்கை அணைத்தவள், விடிவிளக்கை ஏற்றிவிட்டு, டிவியையும் நிறுத்தினாள். ஜீவா அவனது பைலை மூடி வைத்தான்.

“டைம் ஆச்சு, படுங்க...”, அதட்டல் போடவே, பேசாமல் சென்று படுத்தார்கள்.

ஆனால், வழக்கமாக திவ்யா படுக்கும் இடத்தில் அஞ்சலியும், அஞ்சலி படுக்கும் இடத்தில் கண்ணனும் படுத்துக் கொண்டார்கள். “அஞ்சலி, கண்ணா தள்ளிப் படுங்க”, திவ்யா சொல்ல, அஞ்சலி அசைவதாகவே இல்லை.

“அப்பா, நீங்க ஏன் அம்மாவுக்கு சாப்பாடே ஊட்ட மாட்டிக்கீங்க?”, அவள் திடீரெனக் கேட்க, இருவரும் விழித்தார்கள்.

“என்னடா செல்லம்...?”, திவ்யா அவளைச் சமாதானம் செய்ய முயன்றாள்.

“அப்பா, நீங்க அம்மாவுக்கு முத்தா குடுங்க மாட்டிக்கீங்க? கணேஷ் மாமா ஹேமா அத்தைக்கு டெய்லி குடுக்குறாங்க, நான் பாத்தேன்”, பிள்ளையின் பிடிவாதம் அவளிடம்.

இந்தப் பேச்சில் இன்னும் திகைத்தார்கள். “அதெல்லாம் ஒண்ணும் இல்லடா...., சும்மா படு”, திவ்யா அவளை அடக்க முயன்றாள்.

“அப்பா, இப்போவே நீங்க அம்மாவுக்கு முத்தா குடுங்க, நான் பாக்கணும்”, அடம் பிடித்தாள்.

“அஞ்சு....”, ஜீவா கோபமாகக் குரல் கொடுக்க, ஜீவாவை முறைத்த திவ்யா, “அஞ்சும்மா...., திடீர்ன்னு சொன்னால் எப்படி..., அப்பா, அம்மாவுக்கு நாளைக்கு முத்தா கொடுப்பாங்க, இப்போ நீ தூங்கு”, மென்மையாகவே சொன்னாள்.

“இல்ல..., நீங்க அம்மா அப்பா இல்லை...., அம்மா அப்பான்னா சேர்ந்தே இருப்பாங்க, ஒண்ணா படுத்துப்பாங்க, முத்தா குடுப்பாங்க, கட்டிப் புடிப்பாங்க.....”, அழுகையில் உதடு துடிக்கச் சொன்னாள்.

அவள் துடித்ததை விட அதிகமாக, திவ்யா துடித்துப் போனாள். “உனக்கு யாருடா அப்படிச் சொன்னது...?”, கலக்கத்தை மறைத்து, சாதாரணமாகவே கேட்டாள்.

“எனக்குத் தெரியும்...., டிவியில் பாத்தேன்..., கணேஷ் மாமா, ஹேமா அத்தை எல்லாம் அப்படித்தான் இருக்காங்க..., நீங்க அம்மா அப்பா இல்லை...”, கத்தினாள்.

அஞ்சுவை வேகமாக இழுத்து அணைத்துக் கொண்டாள். கண்ணனைத் திரும்பிப் பார்க்க, அவன் கண்களிலும் அதே சஞ்சலம்...., ‘இதை இப்படியே விடக் கூடாது. இது என்னோட குடும்பம்...., இதைச் சிதைய விட மாட்டேன்’, மனதுக்குள் முடிவெடுத்த திவ்யா, அதை செயல்படுத்த முயன்றாள்.

“அஞ்சும்மா இப்போ என்ன..., நாங்க சேர்ந்து படுத்துகிட்டா நீ ஒத்துக்குவ தானே. அப்போ இன்னைக்கு, அம்மா, அப்பா பக்கத்தில் படுத்துக்கறேன் சரியா. இனிமேல் நீ இப்படிப் பேசவே கூடாது. நான் உன் அம்மா இல்லையாடா..., நீ இப்படிப் பேசினால் அம்மாவுக்குக் கஷ்டமா இருக்குடா.

“நான்தான் உன்னோட அம்மா, கண்ணா உன் தம்பி. இன்னொரு முறை இப்படிப் பேசின..., அப்புறம் நான் உன்கிட்டே பேசவே மாட்டேன்”, திவ்யா அழும் குரலில் சொல்ல, அஞ்சலி அழுதே விட்டாள்.

“இல்லமா... இனிமேல் அஞ்சலி அப்படிப் பேசவே மாட்டா. நீங்க என்கிட்டே பேசாமல் இருக்காதீங்க...., பிறகு அஞ்சு பாப்பா அழுவா”, திவ்யாவைக் கட்டிக் கொண்டாள்.

கண்ணனும் அவர்களோடு இணைய, இருவரையும் ஒரு ஓரமாகப் படுக்கவைத்தார்கள். “அம்மா, நீங்க அப்பா கிட்டேயே படுங்க”, அஞ்சலி விடவே இல்லை.

திவ்யா ஜீவாவைப் பார்க்க, அவன் அசைவதாகவே இல்லை. அவன் எழுந்து சென்று சேரில் அமர்ந்து கொண்டான்.

திவ்யா இதற்கு மேலும் மறுத்துப்பேச முயலாமல் கண்ணனின் அருகில் படுத்துவிட்டாள். குழந்தைகள் உறங்கிவிட்டார்கள். திவ்யாவும் ஜீவாவும் உறங்கவில்லை. ஜீவா அமர்ந்திருந்த சேரில் இருந்து எழவும் இல்லை.

நேரம் கடந்துகொண்டே இருக்க, திவ்யாவிற்குத்தான் கஷ்டமாக இருந்தது. ஜீவாவுக்கு முதுகு காட்டிப் படுத்திந்திருந்தவள், எழுந்து அமர்ந்தாள். ஜீவாவின்மேல் கோபம் கிளர்ந்தது. “இப்போ நான் இவங்களை நகர்த்திட்டு அங்கே போய் படுத்தால்தான், நீங்க இங்கே வந்து படுப்பீங்களா?”, அதே கோபத்தோடு கேட்டாள்.

“நான் அங்கே வந்து படுத்தால்...., நீ எழுந்து போய்டுவியோ என்ற பயத்தில்தான் இங்கே உக்காந்துட்டே இருக்கேன்...”, மனதை மறையாமல், உள்ளத்தில் இருந்ததை, அப்படியே கொட்டினான்.

அவன் அப்படிச் சொல்லவே, கண்களில் வலியுடன் அவனை நிமிர்ந்து பார்க்க, அவனோ தலை குனிந்து அமர்ந்திருந்தான். ‘நீ எப்படிடா என்னை அப்படி நினைக்கலாம்....?’, அவனிடம் சண்டை போடத் துடித்த நாவை அடக்கினாள்.

அவள் சண்டை போட்டிருந்தால் ஜீவா நிம்மதியாக உணர்ந்திருப்பானோ? “வந்து படுங்க....”, சொல்லிவிட்டு,

அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொண்டாள்.

இதயத்தின் ஓசை அவளுக்கே கேட்டது. ஏன் இப்படி உணர்கிறோம் என்று அவள் உணரவில்லை. ஜீவா படுப்பது அவன் பக்கம் இருந்த பெட் அமுங்குவதில் தெரிய, நிம்மதியும், கிளர்ச்சியும், தேக முடி சிலிர்ப்பதும், அனைத்தையும் ஒருங்கே உணர்ந்தாள் திவ்யா.

கட்டிலின் நுனியில், அவளுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டான் ஜீவா. அன்றையத் தூக்கமும் பறி போனது இருவருக்கும்.

தணிவு - 22

பாலைவனத்தில் நடந்த நான்

பாலைவனச் சோலைக்குள்

அனுபவிக்கவா? அனுப்பி வைக்கவா?

விடமுடியாத தவிப்பில்.....

அடுத்தநாள் காலையில், அஞ்சலி கீழே ஓடி வந்து, ஹேமாவின் அறைக்கதவைத் தட்டினாள். எழுந்த ஹேமா, “யார் இந்நேரம்...? மணி ஆறு கூட ஆகலையே...”, யோசனையோடு எழுந்தவளின் இடையில் கை போட்டு இழுத்தான் கணேஷ்.

“கணேஷ்...., விடுங்க, யாரோ கதவைத் தட்டுறாங்க. நான் யாருன்னு பாத்துட்டு வாறேன்”, கொஞ்சலாக அவன் காதில் சொன்னாள்.

கணேஷோ அதைக் கண்டுகொள்ளாமல், அவள் மேனியில் தன் கைகளைப் படரவிட்டான். அவன் செய்கையில் தன்வசம் இழக்கத் துவங்கியவளை, கதவு பலமாக இடிக்கப்படவே, அவனை ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டு எழுந்து ஓடினாள்.

ஹேமா கதவைத் திறக்க, அஞ்சலி, புயலென அவள் கால்களைக் கட்டிக் கொண்டாள். “என்ன அஞ்சும்மா....? காலையிலேயே அத்தையைத் தேடி வந்து இருக்கீங்க....”, ஆச்சரியமாகக் கேட்டு அவளைத் தூக்கிக் கொண்டாள்.

“அத்த...., எங்க அப்பாவும் அம்மாவும் சேர்ந்து தூங்கினாங்களே...”, உற்சாகத் துள்ளலாகச் சொன்னாள்.

அவள் சொன்னதைக் கேட்ட ஹேமாவும், கணேஷும் வியந்தார்கள். “என்ன சொல்லுற...?”, அதிர்ச்சி விலகாமல் கேட்க, அஞ்சலி சொன்ன விளக்கத்தைக் கேட்ட பிறகு, ‘இவர்கள் என்று சேர்வது’ என்ற அலுப்பு எழுவதை, அவர்களால் தடுக்க முடியவில்லை.

ஆகமொத்தம் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர மற்ற அனைவரும், அவர்கள் உறவை எப்படி சரிசெய்யலாம் என்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

திவ்யாவும் ஜீவாவும், தங்கள் மனதுக்குள் இருந்த கோபம், மன வருத்தத்தை அப்படியே, அடி மனதில் புதைத்து வைத்திருந்தார்கள். அது கிளர்ந்து வெளியேவரும் நேரமும் வந்தது.

அன்று வீட்டுக்கு வந்த ஜீவா மிகுந்த மன அழுத்தத்தில் இருந்தான். வீட்டிற்கு வந்தவன் நேராகத் தங்கள் அறைக்குள் சென்று புகுந்துகொண்டான்.

காபி கூடக் குடிக்காமல் சென்ற அவனைத் தேடி, அறைக்கு வந்தாள் திவ்யா. அறையில் அவள் வேகமாக நுழையவே, “அஞ்சும்மா அப்பாவுக்குத் தலை வலிக்கிடா...., கொஞ்சம் தைலம் தேச்சு விடேன்”, கண்களை மூடியவாறே குரல் கொடுத்தான்.

அவன் அவ்வாறு கேட்கவே, “என்னங்க, நான் வேண்ணா டீ போட்டு எடுத்துட்டு வரவா?”, மெதுவாகக் குரல் கொடுத்தாள்.

ஜீவாவிற்கு இருந்த டென்சனில், அவளது ‘என்னங்க’ என்ற அழைப்பு, இன்னும் கொஞ்சம் பிபியை(bp) ஏற்றியது. அன்று போட்டோவைப் பார்த்து மட்டுமே, தன்னை ‘ஜீவா’ என்று அழைத்தவளிடம், தனக்கு அப்படி அழைப்பது பிடித்திருக்கிறது என்று சொன்ன பிறகும், அவள் அழைக்காமல் இருப்பது எரிச்சலை வர வழைத்தது.

“அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம் போ...”, முகம் திருப்பியவாறு சொன்னான்.

அவனது முகம் திருப்பல் திவ்யாவிற்கு அவன்மேல் இருந்த கோபத்தை அதிகரித்தது. இருவருமே ஒருவர்மீது ஒருவர் பயங்கர கோபத்தில் இருந்தார்கள்.

இருவரின் இந்தக் கோபத்துக்கும் முகம் திருப்பலுக்கும் காரணம் இதுதான்.....

கடந்த சில நாட்களாக இருவரும் இரவில் அருகருகே படுப்பதால், ஜீவா மிகுந்த உற்சாகமாக இருந்தான். அதே உற்சாகத்தோடு, கணேஷ், ஹேமாவிற்குப் பூ வாங்கி வருவதைப் போல, திவ்யாவிற்கும் ஜீவா பூ வாங்கித் வந்தான்.

அவன் வாங்கி வரும்பொழுதே ஆயிரம் தயக்கங்களோடுதான் வந்தான். பூவைக் கொண்டு வந்தவன், அவள் கையில் கொடுக்காமல், “திவி..., பூ....”, என்று சொல்லி, அதை டிவியின் அருகில் வைத்துவிட்டுத் திரும்பியும் பார்க்காமல் சென்றுவிட்டான்.

அவன் முதுகையே வெறித்தாள் திவ்யா. ‘அவன் முதல்நாள் செய்யும் பொழுதே தடுக்காமல் விட்டது என் தப்புதான். எனக்கு இது தேவைதான்’, அந்தப் பூவை வெறுப்பாகப் பார்த்தவாறு, தொடக்கூட செய்யாமல் சென்றுவிட்டாள்.

ஜீவா, அந்தப் பூ எடுக்கப்படாமலே இருப்பதைப் பார்த்தவனுக்கு, கோபம் உச்சியில் நின்று ஆட்டியது. ஆனாலும் திவ்யாவைக் காயப்படுத்தும் தைரியம் வராமல் தனக்குள் அடக்கினான்.

அப்பொழுதே அவளிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. அதன் பிறகு அடுத்த நாளும் பூ அங்கேயே எடுக்கப்படாமல் இருந்து வாடியது. அதைப் பார்த்த ஹேமா, “ஏன் திவ்யா இப்படிப் பண்ணுற..? அண்ணா எவ்வளவு ஆசையா வாங்கிட்டு வந்து கொடுத்தாங்க, அதைத் தொட்டுக்கூடப் பாக்காமல் இருக்கியே.

“அண்ணாவோட முகத்தைப் பாக்கவே முடியலை..., எடுத்து தலையில் வச்சு இருக்கலாமே”, ஆற்றாமையாகக் கேட்டாள்.

திவ்யா அவளிடம் பதில் சொல்லாமல் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தவள், “என் அண்ணா உனக்கு ஏதாவது வாங்கிட்டு வந்தால் இப்படித்தான் வச்சுட்டுப் போவாரா ஹேமா”, நிதானமாகக் கேட்டாள்.

“திவ்யா....”, அதிர்ச்சியாக அழைத்தாள். “ஆமா அதே திவ்யாதான். இதுக்கு முன்னாடியும் ஒருத்தன் இப்படித்தான்..., தூக்கி விட்டெறிவான். அந்தப் பூவை நான் தலையில் வைக்கலன்னா அதுக்கு ஒரு பாடு.

“அப்படியே அந்தப் பூவை நான் தலையில் வைத்தால்..., அது நாராகும் வரைக்கும் என்னால் அந்தப் படுக்கையில் இருந்து எழ முடியாது. இப்போ இவர்...., எவளுக்கோ வாங்கிட்டு வந்த மாதிரி வச்சுட்டுப் போறார்..... முடியல ஹேமா...., மனசு வலிக்கிது”, அழுதாள்.

தோழியின் அழுகையை சகிக்க முடியாமல், தோளோடு அணைத்துக் கொண்டாள். பழைய வாழ்க்கையின் நிழல், இருவரையும் விடாமல் துரத்துவதை, ஹேமாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால், என்ன செய்யவென்றுதான் தெரியவில்லை. தானாகவே அழுது ஓய்ந்தவள், “விடு ஹேமா, நாய்க்கு முழுத்தேங்காய் ஒட்டுமா? அப்படித்தான், எனக்கும். சில உறவுகள் ஒட்டாது போல”, சொல்லிவிட்டு அமைதியாக எழுந்து செல்லும் அவளை, இயலாமையுடன் தொடர்ந்தன ஹேமாவின் பார்வை.

இதைப் பற்றித் தன்னாலும் ஜீவாவிடம் பேசமுடியாது, இது இருவருமாகப் பேசி முடிவேண்டுக்க வேண்டிய விஷயம் என எண்ணியவள் அமைதியானாள்.

ஜீவாவும் பூ வாங்கி வருவதை நிறுத்தவில்லை, திவ்யா அதைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் இருப்பதைப் பார்த்து வேதனையை அதிகரித்துக் கொள்வதையும் நிறுத்தவில்லை. இன்றும் பூ வாங்கி வைத்துவிட்டுத்தான் வந்திருக்கிறான்.

திவ்யாவின் தலையில் பூ இல்லாததைப் பார்த்தவன், முகத்தை சுழித்தான். அவன் முகத்தை சுழிக்கவே, “அதான் தலை வலிக்கின்னு சொன்னவருக்கு ஏன் டீ வேண்டாம்?”, சண்டை போடும் முடிவிற்கு அவள் வந்துவிட்டாள்.

“தலைவலி போய்டுச்சுஅதான்”, அவளுக்கு முதுகு காட்டிப் படுத்தான்.

“அதெப்படிப் போகும்?”.

“தலைவலி வாறதுக்கு வேண்ணா காரணம் சொல்லலாம். போறதுக்கு எல்லாம் காரணம் சொல்ல முடியாது”, படுத்தவாறே பதில் சொன்னான்.

“ஓஹோ.., ஐயாவுக்கு முகத்தைப் பாத்துக் கூடப் பேச பிடிக்கலையோ?”.

“ஆமா, என் முகத்தைப் பாக்கப் பிடிக்காதவங்களுக்கு, எதுக்காகக் காட்டணும்?”.

“ரொம்பப் பேசுறீங்க....”.

“அப்படித்தான் பேசுவேன், என்ன செய்வ..? நீ உன் இஷ்டத்துக்கு இருக்க, நான் என் இஷ்டத்துக்கு இருக்கக் கூடாதா?”.

“என்னங்க...., என்ன ஆச்சு உங்களுக்கு...?”.

“என்னங்க, வெண்ணங்க..., ஏன் எனக்குப் பேர் இல்லையா...?”, ஒரு வழியாகக் கேட்டுவிட்டான்.

“பேர்..., இப்போ இங்கே ஆயிரத்தெட்டுப் பிரச்சனை இருக்க, பேர் சொல்லாதது மட்டும் பெரிய பிரச்சனையா?”.

“உனக்கு எதுவுமே பெரிய பிரச்சனையே கிடையாது. என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடாதது, நான் வாங்கித் தந்த மொபைலை எடுத்துக்காதது, நான் வாங்கித் தந்தப்

பூவை வச்சுக்காதது, ஹாஸ்பிட்டல்ல நான் சொல்லியும் கேட்காமல், இப்போ தினமும் மாத்திரை சாப்பிடுவது எதுவுமே....

“ஆனா, அனுபவிக்கிற எனக்குத்தானே தெரியும் அதோட வலி. அங்கே பார்..., அந்த கிஃப்ட்டைப் பாக்கும் போதெல்லாம்...., அடேய் மடையா, நீ எவளுக்குமே கிஃப்ட் வாங்கிக் கொடுக்க லாயக்கில்லாதவன்னு என்னைச் சொல்லாமல் சொல்லுது.

“டிவிகிட்டே இருக்கும் பூவைப் பாக்கும்போதெல்லாம்..., ஒரு பொண்ணுக்குப் புருஷனா இருக்கவே தகுதி இல்லாதவன்னு, என் கன்னத்தில் பளார்ன்னு அறையிற மாதிரி அது சொல்லுது.

“இதெல்லாம் பாத்துட்டு, உனக்குக் கொஞ்சம் கூட மான ரோசமே இல்லையான்னு, என்னை நானே கேட்டுக்கணும்னு, கண்ணாடி பாக்குற ஒவ்வொரு நிமிஷமும் தோணுது.

“இதெல்லாம் பாக்கும்போது, நானெல்லாம் ஆம்பளையான்னு எனக்கே சந்தேகமா இருக்கு. ஒருத்தி, என்னை ஒதுக்கி வச்சே கொன்னான்னா..., நீ, என்னை நெருங்கவும் விடாமல், விலகவும் விடாமல்....,

“அப்படியே மனசுக்குள்ளேயே புழுங்கி, புழுங்கி...., எங்கேயாவது ஓடிப் போய்டுவோமான்னு இருக்கு. அது ஏன், நான் நேசிக்கும் உறவுக்கெல்லாம் என்னைப் பிடிக்கவே மாட்டிக்கு.

“தயவுசெய்து சொல்லேன்...., நானும் தெரிஞ்சுக்கறேன். இந்த முகத்தில் மீசை வச்சதுக்கு ஏதாவது அர்த்தம் இருக்கா? இல்ல நான் ஏதாவது புடவைக் கட்டிக்கவா?

“அதோ அந்தப் பக்கத்து ரூமில் வச்சு, ஒருத்தி ஒவ்வொரு ராத்திரியும் கேட்டா...., ஏண்டா..., நீ ஆம்பளையா இல்ல...

பொட்.....”, அவனை மேலே பேச விடாமல், அவன் வாயைக் கைகளால் மூடினாள்.

“ஏன் இப்படில்லாம் பேசுறீங்க....? உங்க மனசு இவ்வளவு வேதனைப் படுற மாதிரித்தான் நானும் நடந்துகிட்டனா? அந்த கிஃப்ட், பூ எல்லாத்தையும், நீங்க என் கையில் தந்து, நான் வாங்காமல் இருந்தேனா? சொல்லுங்க...”, நிதானமாகக் கேட்டு, அவனை உலுக்கினாள்.

“அந்தப் ப்ரியா....”.

“நான் ப்ரியா இல்ல....., நான் திவ்யா, உங்க திவி..., அது தெரியலையா உங்களுக்கு. நீங்க மட்டும் சொன்னீங்களே..., நான் மனுஷன் தான், என்கிட்டே ஃபிரண்ட்லியா இருன்னு.

“அது எனக்கு மட்டும் தானா? உங்களுக்கு இல்லையா? நீங்க மட்டும், இங்கே வந்த நாள்ல இருந்து என்னைத் தள்ளித்தானே வச்சு இருக்கீங்க. முதல் நாள் பால், பழம் குடிச்ச அழகே போதுமே...”, அவனிடம் கேள்வி கேட்டு மூக்கை உறிஞ்சினாள்.

“அதான் அந்தப் ப்ரியா...”.

“ஜீவா...., நான் ஏற்கனவே சொல்லிட்டேன், நான் ப்ரியா இல்லை..., அப்போ இவ்வளவு நாள் அவளா நினைச்சுத்தான் என்னை....”, கத்தினாள்.

“ஏய் என்ன பேசுற நீ....?அறஞ்சேன்னா பல்லெல்லாம் கொட்டிடும். என்னைப் பார்த்தல் அப்படியா தெரியுது? நான் உன்னை என் உயிரா நேசிக்கிறேன் திவி. இதைச் சொல்ல தைரியம் இல்லாமல்தான்...., எங்கே நீயும்.... அந்த....”, ஆத்திரமாகக் கேட்டு, காதலாக உருகி, பாதியில் நிறுத்தினான்.

“எங்க சொல்லுங்களேன் கேட்போம்...”.

“எதை....”.

“எதையா, நானா சொன்னேன்..., நீங்கதானே சொன்னீங்க..., அந்தப் ப்ரியா..., அந்தப் ப்ரியான்னு...., இனிமேல், அவ பேர் உங்க வாயில் இருந்து வந்துது...., கொன்னுடுவேன்...., நான் ஒரு பக்கம் ஒண்ணை நினைச்சுத் தயங்கினா,

“நீங்க மறுபக்கம், வேற ஒரு ரீசனை வச்சுட்டு மறுகிட்டு இருந்து இருக்கீங்க. நான் நினைச்சேன், உங்களுக்கு நான் எந்த விதத்திலும் வேண்டாம்னு நீங்க முடிவு பண்ணி இருக்கீங்கன்னு. அதான் என்னால் அதைத் தாங்கிக்க முடியாமல்தான் தவிச்சுட்டு இருந்தேன்”, ஒரு வழியாகத் தன் மனதில் இருந்ததை அவளும் கொட்டினாள்.

“திவி..., எங்கே நான் உன்னை நெருங்கினால் உன்னைக் காயப்படுத்திடுவனோன்னு முதலில் நானும் பயந்துதான் ஒதுங்கினேன். அதுக்குக் காரணமும் உன்மேல் இருந்த பாசம் தான். பிறகு உன்மேல் கோபம் இருந்தாலும், உன்னைக் காயப்படுத்த முடியாமல் விலகினேன்.

“அதன் பிறகு, உன்னோட இந்த செய்கைகள் என்னை ரொம்பவே காயப்படுத்துச்சு. அதை எப்படி உன்கிட்டே தெரியப்படுத்தன்னு தெரியாமல்தான் தவிச்சுட்டு இருந்தேன். இப்போ நான் ஏற்கனவே டென்சனில் இருக்கவே,

“ஏதோ பேசப்போய் எங்கேயோ வந்து நிக்கிது”, திவ்யா இன்னும் அவனை நெருங்கி நின்றாள்.

அவனைக் கட்டிலில் அமர வைத்தாள். “உங்களுக்கு இப்போ கூட அந்தப் பக்கத்து அறையைப் பார்த்தால், பழசெல்லாம் ஞாபகம் வருதா?”, அவள் கேட்கவே, பழைய வேதனையும் அவமானமும் அவன் முகத்தில் தோன்றியது.

“இந்த ஜென்மத்தில் மறக்க முடியும்னு தெரியலை...”, கசப்பாகச் சொன்னான்.

அவன் வேதனையைத் தாங்க முடியாமல், அவனைத் தன் மார்போடு மென்மையாக அணைத்தாள். அவள் செய்கையில் திகைத்தவன், அவள் கைகளுக்குக் கட்டுப் பட்டான். அவள் இடையில் கை கோர்த்து அமைதியாக இருந்தான்.

அவனைத் தன் மார்போடு சேர்த்துப் புதைத்துக் கொண்டவள், “ஒரு பொண்ணால் உருவான காயம், இன்னொரு பொண்ணாலதான் மறைய வைக்க முடியும்...., எனக்குத் தெரியும் ஜீவா. என்னால் எதை வேண்ணலும் செய்ய முடியும். இப்போதைக்கு, ஐ கேன் ஹக் யு, ஐ கேன் கிஸ் யு, ஆனால் என்னால் உங்களோட...”, மேலே சொல்ல முடியாமல் தயங்கினாள்.

அவள் சொல்ல வருவது புரிய, அவள் மார்பிலிருந்து முகத்தை நிமிர்த்தியவன், “திவி..., நீ என்கூடவே இருந்தால் எனக்கு அது போதும். அதுக்கு மேல நான் எதையுமே யோசிக்கவே இல்லை. இந்தப் பிறவியில் எனக்கு, செக்ஸ் என்ற ஒன்று இல்லை என்றால் கூடப் பரவாயில்லை.

“ஆனால், நீ என்னைவிட்டுப் போகாமல் இருந்தால் போதும். அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல வச்சு சொன்னியே, என்னை விட்டுப் போனால் கூடப் பரவாயில்லை, ஆனால் ஆபரேஷன் பண்ணிக்க மாட்டேன்னு.

“ஏன் திவி அப்படிச் சொன்ன...., அப்போ சொன்னது உண்மையா? இல்ல இப்போ சொன்னது உண்மையா? இப்போ சொன்னதுதான் உண்மைன்னா.... அன்னைக்கு ஏன் அப்படிச் சொன்ன?”, அவன் கண்களில் தவிப்பு மிச்சமிருந்தது.

அவனை மீண்டும் தன்னோடு இறுக்கியவள், “ஜீவா, இப்போ என்னால் அந்த ஒரே ஒரு விஷயத்துக்கு மட்டும் விளக்கம் சொல்ல முடியாது. ஆனா, உங்களுக்கே ஒருநாள் அது புரியவரும். இப்போதைக்கு, நான் உங்கமேல

உயிரையே வச்சு இருக்கேன், அதை மட்டும் முழுசா நம்புங்க.

“என் மனசுக்குள் புகுந்த முதல் ஆண்மகன் நீங்கதான். இந்த உடம்பை வேண்ணா அவன்....”, அவள் கண்ணீர்த் துளிகள் அவன் தலையில் பட்டுத் தெறிக்க,

“வேண்டாம் திவி...., அதையெல்லாம் நினைக்காதே...., உன் மனசுக்குள் வந்த முதல் ஆண்மகன் என்ற எண்ணமே எனக்குப் போதும். இதைவிட, ஒரு ஆம்பளையா எனக்கு என்ன வேணும்?

“ஆனால் என்னால் அப்படிச் சொல்ல முடியாது...., ஆனா நான், இந்த நிமிஷம்...., இந்த உலகத்தில் இருக்கும் எல்லாத்தையும் விட, உன்னை நான் நேசிக்கிறேன். அதை தைரியமா என்னால் சொல்ல முடியும்”, சொல்லிவிட்டு அவள் மார்பில் புதைந்துகொண்டான்.

“திவி, நான் ரொம்ப பாதுகாப்பாவும், நிம்மதியாவும் உணர்கிறேன் இங்கே”, உண்மையான நிம்மதி தெரிந்தது அவன் குரலில்.

அவனைத் தாங்கி, அவன் தலையில் தன் கன்னத்தை அழுத்திக் கொண்டாள். அவன் சொன்னதில், அவள் மனம் கொஞ்சம் காயப்பட்டதுதான்...., அவன் மனதில் முதலில் நுழைந்த பெண் தான் இல்லை என்ற ஏக்கம் அவளை வாட்டியது.

ஆனால் இந்த நிமிடம் அவன் உயர்வாக நினைப்பது, நேசிப்பது தன்னை, என்பதில் அவள் மனம் நிம்மதி கொண்டது. அந்த மோன நிலையில் காமம் கலந்திருக்கவில்லை. ஒருவரோடு ஒருவர் கொண்ட அன்பும், நேசமும் பகிரப் பட்டது.

அங்கே , காமம் இல்லாத காதலும் , புரிதலும் துளிர் விட ஆரம்பித்தது.

தணிவு - 23

நிழலெனத் துரத்தும் துன்பங்கள்

துடைத்தெறிய நீயிருந்தும்

துடைக்கத் தயங்குவதேன்.....

அவர்கள் இருந்த நிலையைக் கலைக்க இருவருக்குமே மனமில்லை. யார் முதலில் விலகுவது என்ற நினைப்பில், இருவருமே கட்டுண்டு கிடந்தார்கள். இவள் எனக்கானவள், என் உயிர், என்னைப் புரிந்து கொண்டவள், என்று ஜீவாவின் மனம் பேருவகைக் கொண்டது.

பின்னர், சட்டென நினைவு வந்தவனாக அவளை வேகமாக விலக்கியவன், “இங்கேயே இரு இப்போ வந்துடுறேன்”, படிகளில் அவன் தடதடவென இறங்கிய வேகத்தில், எங்கே விழுந்துவிடுவானோ என்று பயந்தாள் திவ்யா.

சென்று நொடியில் திரும்பியவனின் கரங்களில் இருந்தது மல்லிகைப்பூ. டிரெஸ்சிங் டேபிளில் இருந்து பின் எடுத்து வந்தவன், பூவை, அவள் தலையில் அவனே வைத்தான். தன் மகளுக்கு ஏற்கனவே பூ வைத்துப் பழக்கம் என்பதால், சரியாக வைத்து நிமிர்ந்தான்.

அவளைத் தன் பக்கம் திருப்ப, அவள் கண்களில் மெல்லிய நீர்ப்படலம். “எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை அமையும்னு நான் நினைச்சே பார்த்ததில்லங்க”, நன்றிப் பெருக்குடன் உரைத்தாள்.

“உன்னை விட நான்தான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணி இருக்கேன் திவி. நீ மட்டும் என் வாழ்க்கையில் வரலன்னா, இந்த ஜீவா என்னைக்கோ இல்லாமல் போயிருப்பான்”, அவன் குரலும் நெகிழ்ந்தே வந்தது.

“என் ஜீவா.....”, “என் திவி...”, மென்மையாக ஒருவரை ஒருவர், ஆதரவாக அணைத்துக் கொண்டார்கள்.

அவளைத் தோள் வளைவில் நடத்திச் சென்று, பிரிக்கப்படாமல் இருந்த பரிசுப் பொதியை எடுத்து அவள் கரங்களில் கொடுத்தான். “உனக்குத்தான் திவி, பிடிச்சிருக்கா பாரு, பிடிக்கலன்னா வேற வாங்கிக்கலாம்”, ஆர்வமாகச் சொன்னான்.

“எனக்கு நிச்சயம் பிடிக்கும். நீங்க வாங்கித் தந்ததாச்சே. உங்களோடமுதல் பரிசு, பிடிக்காமல் போகுமா?”, கேட்டுவிட்டு அவன் கண் முன்பே அதைப் பிரித்தாள். ஃபோனை ஆன் செய்தவள், எண்களை அழுத்த, ஜீவாவின் அலைபேசி ஒலித்தது.

“திவி..., என் ஃபோன் நம்பர் உனக்குத் தெரியுமா...?”, குரலில் அப்படி ஒரு கொண்டாட்டம்.

“என் ஜீவா நம்பர் எனக்குத் தெரியாமல் போகுமா? ஸ்கூல்ல இருக்கும்போதே தெரியும்”, தலை குனிந்தவாறே சொன்னாள்.

“ஹேய் நிஜம்மா.....”, அவனால் இன்னுமே நம்ப முடியவில்லை.

“என்ன ஜீவா.....”, சிணுங்கினாள்.

“திவி...., என...க்கு..., இது... எவ்வளவு பெரிய சந்தோஷத்தையும், நிம்மதியையும் தருதுன்னு, என்னால் வார்த்தையால் சொல்ல முடியலை. அதுவும் முதல் கால், எனக்கு நீ செஞ்சது, அதுவும் என் ஃபோன் நம்பரைக் கேக்காமலே... திவி..., திவி..., உன் அளவுக்கு, நான் உன்னைப் பாத்துக்கறேனா?

“எனக்கு என்னமோ, இப்போ நான் உனக்காக எதையுமே செய்யாத மாதிரி, கவனிக்காத மாதிரி தோணுது”, திவ்யாவின் சிறு செய்கைகள் கூட ஜீவாவை அசைத்துப் பார்த்தது.

“என்ன ஜீவா இப்படிக் கேக்குறீங்க. ஒவ்வொரு நாளும் எனக்காக நீங்க பாத்துப் பாத்து செஞ்சது, உங்க அக்கறை, இந்தப் பரிசு, என்னால் உங்களுக்கு ஏற்பட்ட தலைக் குனிவைக் கூட நீங்க பெருசா எடுக்காதது,

“எனக்காக ரிஸ்க் எடுத்து அவனை ஜெயிலுக்குத் தள்ளியது. மாத்திரையை நான் சாப்பிட மறந்தால் கூட, நீங்க மறக்காமல் எடுத்து தருவது..., என்னை, எங்க அம்மா கூட இப்படிப் பாத்தது இல்லை ஜீவா”, கட்டிலில் அமர்ந்து அவன் தோள் சாய்ந்து கொண்டாள்.

என்னவோ சொந்த இடத்துக்கு வந்து சேர்ந்த நிம்மதி. மொத்தப் பாசத்தையும் ஒரே நாளில் கொட்டித் தீர்ப்பவர்கள்போல் இருந்தது அவர்களது செய்கை. அவன் தோளில் இருந்து லேசாக நிமிர்ந்து அவனைப் பார்க்க,

ஜீவாவும் அந்த நேரம் அவளைத்தான் பார்த்தான். அவனிடமிருந்து எதையோ எதிர்பார்த்து, அவள் விழிகள் மூடிக் கொண்டது. அவள் கருவிழிகள் அலை பாய்ந்தன. ஜீவாவும் மந்திரத்துக்கு கட்டுப்பட்டவன் போல, அவன் இதழ்களை, அவள் நெற்றியில் கொஞ்சம் அழுந்தப் பதித்தான்.

அவனது செய்கையில் கட்டுண்டு அமர்ந்திருந்தாள். அவன் இதழ்களின் சிறிய வெப்பம், முத்தத்தின் ஈரம், மீசையின் குறுகுறுப்பு, என அனைத்தையும் ஆழ்ந்து அனுபவித்தாள். அவன் விலகிய பிறகு, தன் முகத்தை அவனுக்குக் காட்டாமல் அவன் தோள்களில் புதைத்துக் கொண்டாள்.

இதயம் எகிறி குதிப்பதுபோன்ற பிரம்மை, அதை எப்படிக் கட்டுப்படுத்தவென்றும் தெரியவில்லை. அதைவிட, தன்னைப் பற்றித் தவறாக எண்ணிவிடுவானோ என்ற பயம் எழுவதையும் தடுக்க முடியவில்லை.

“திவி தேங்க்ஸ்டா....., முதல் முறையா மனசு நிர்மலமா இருக்க மாதிரி இருக்கு. இன்னைக்கு மதியத்தில் இருந்து இருந்த மனநிலையில் தூங்க முடியுமோ முடியாதோன்னு

அவ்வளவு டென்சனா இருந்தேன். ஆனா இப்போ.... உன்னால்தான் இது சாத்தியம் ஆச்சு", தோளோடு அவளை சேர்த்தவாறு நிம்மதி பெருமூச்சு விட்டான்.

அவனது பேச்சில், அவள் மனதில் எழுந்த பயம் காற்றில் கரைந்த கற்பூரமாக, அவன் முகத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள். அதன் பிறகுதான் அவன் சொன்ன விஷயத்தின் தாக்கம் புரிய, புருவம் நெரிய அவனைப் பார்த்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன், அவள் ஏதோ யோசனைக்குப் போகவே, "என்ன ஆச்சு திவி...? திடீர்ன்னு எதையோ யோசிக்கிற மாதிரி இருக்கு".

"மதியத்துல இருந்து ஏதோ டென்சன்னு சொன்னீங்களே என்ன அது?", மெல்லியக் கவலை அவளிடம்.

"அதெல்லாம் நான் பாத்துக்கறேம்மா...., நீ நிம்மதியா இரு", அவளிடம் சொல்வதை தவிர்த்தான்.

"இப்போ சொல்லப்போறீங்களா இல்லையா..? ஏன் என்னக் கவலைன்னு என்கிட்டே சொல்லுங்களேன். சந்தோஷம் மட்டும் இல்லை, துன்பத்தையும் பகிந்துக்கத்தான் நான் இருக்கேன். இனிமேல் இப்படி செஞ்சீங்கன்னா எனக்குக் கெட்ட கோபம் வரும். என்னன்னு சொல்லுங்க", அவன் கைவிரல்களைக் கோர்த்துக் கொண்டாள்.

"உனக்கு இந்தப் பிரச்சனை எல்லாம் எதுக்குடா..?"

"அப்போ சொல்ல மாட்டீங்க....", அவன் கையை உதறிவிட்டு எழுந்தாள்.

"திவி, திவி...., எப்படி அதை உன்கிட்டே சொல்ல? இப்போதான் கொஞ்சம் சந்தோசமா பேசினோம். அதுக்குள்ளே...", திவ்யாவின் கண்களில் உண்மையாகவே கோபத்தைப் பார்க்கவே, "நான் ஒரு சின்ன பணப்

பிரச்சனையில் சிக்கிட்டு இருக்கேன்", கவலையாகச் சொன்னான்.

"பணப் பிரச்சனையா...? என்ன ஆச்சு...? இப்போவும் மில்லில் ஏதாவது பிரச்சனையா என்ன?", பதைப்பாகக் கேட்டாள்.

"ஹையோ திவி..., நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. நான் ஒரு டீலர்க்கு ஐம்பது லட்சம் ரூபாய்க்கு செக் கொடுத்தேன். ஆனால் அதை ரெண்டுநாள் கழிச்சுதான் பேங்கில் போடச் சொன்னேன். அவரும் ஒத்துக்கிட்டார்.

அதனால் அதில் டேட் எதுவும் போடாமல், வெறுமனே கொடுத்துட்டேன் போல, அதை நான் கவனிக்கவே இல்லை. அவர் என்னன்னா...., இன்னைக்கே அந்த செக்கைப் போட்டுட்டார். ரெண்டு நாளில், நமக்கு ஒரு ரெண்டுகோடி ரூபாய் வரவேண்டி இருப்பது வந்துடும்.

"அதை நம்பி நான் செய்ய, இவர் செய்த சதியால் இப்போ இருபத்திநாலு மணிநேரம் வேண்ணா செக்கை ஹோல்ட் பண்ணுறேன்னு பேங்க் மேனேஜர் சொன்னார், அதுவும் நட்பு அடிப்படையில் மட்டுமே", அவன் கோபம், வார்த்தையில் கொஞ்சம் வெளிப்பட்டது.

"அது சரி, அவர் ஏன் இன்னைக்கே அதைப் போட்டார்?", அவனைத் துருவினாள்.

"அதான் எனக்கும் தெரியவே இல்லை....", யோசனையாகச் சொன்னவன், "சோ, எனக்கு அவசரமா ஐம்பது லட்சம் வேணும். இல்லன்னா நான்... இல்ல, நான் வெளியே முயற்சி பண்ணிட்டுதான் இருக்கேன். எப்படியும் கிடைச்சுடும். பிசினசில் இதுவும் ஒரு படிப்பினைன்னு நினைச்சுக்க வேண்டியதுதான்", அவன் செய்த துரோகம், ஜீவாவின் நெஞ்சறுக்கவே, அமைதியானான்.

அவனிடம் எதுவும் சொல்லாமல் எழுந்து சென்றவள், தன் கப்போர்டில் இருந்து பாஸ்புக்கை எடுத்துவந்து அவனிடம்

கொடுத்தாள். அவன் கேள்வியாகப் பார்க்க, “இதில், நீங்க கேட்டப் பணத்தைவிட அதிகமாகவே இருக்கு. இதில் இருந்து எடுத்துக் கொடுங்க”, அவன் தயங்கவே, அவன் கைகளில் கட்டாயப்படுத்திக் கொடுத்தாள்.

“இல்ல திவி..., இது உன் பணம். இதை நான் எடுக்க முடியாது. இது உனக்குச் சொந்தம்...”, தயக்கம் அவன் குரலில் வெளிப்பட்டது.

“அப்ப நான்...?”.

“நீ கேக்குறது புரியலை திவி”.

“இல்ல.... இது என்னோட பணம் சரி, அப்போ நான் யாருக்குச் சொந்தம்னு கேட்டேன்”.

“நீ என்னோட உயிர் திவி. இப்போதானே சொன்னேன்”.

“நான் உங்க உயிர்ன்னா...., என்னோடது எல்லாம் உங்களோடதும் தான். இந்தப் பணம் நம்மளோடது. பிரிச்சுப் பாக்காதீங்க. இல்லன்னா, என்கிட்டே பணம் வாங்குறதை அவமானமா நினைக்கிறீங்களா?”, அவன் தயங்கவே வேதனையாகக் கேட்டாள்.

“இங்கே தா...., இப்போ உனக்கு சந்தோஷம் தானே”, வேகமாக அவள் கைகளில் இருந்து பிடுங்கிக் கொண்டான்.

“ரொம்ப சந்தோஷம்...., சரி வாங்க, பசங்க என்ன செய்யிறாங்களோ தெரியலை. அனேகமா ஹேமாவைப் படுத்திட்டு இருப்பாங்க”, அவள் குரலில் அப்படி ஒரு பூரிப்பு.

இந்த பணப் பிரச்சனையே இவர்களுக்குள் பிளவை மூட்டிவிட வழியாக அமையப் போவது அப்பொழுது அவர்களுக்குத் தெரியவில்லை.

அன்று இரவு உணவு சாப்பிடும் வேளையில் ஜீவா, திவ்யா இருவரின் மலர்ந்த முகத்தைப் பார்த்த அனைவரின்

கண்களும் ரகசிய பாஷை பேசியது. அது சந்தோஷ பாஷையாகவே அமைந்தது. அன்றைய உணவும் மிகுந்த சுவையாக இருந்ததுபோல் இருந்தது.

இரவு குழந்தைகளை உறங்க வைத்துவிட்டு, ஜீவாவின் அருகில் படுத்த திவ்யாவிற்கு அதிக சந்தோஷத்தில் அன்று உறக்கம் வரவில்லை.

“திவி..., இன்னைக்கு கூடத் தூக்கம் வரலையா...?”, ஜீவா கவலையாகக் கேட்டான்.

“அது வரலன்னா போகுது..., ஆனா இன்னைக்கு சந்தோசத்தில் தான் தூக்கம் வரலை. அதனால் அது பரவாயில்லை”, அவன் முதுகின் பின்னால் அவள் குரல் உற்சாகமாக ஒலித்தது.

ஜீவாவுக்குத்தான் துக்கமாக இருந்தது. இந்த மூன்று மாதங்களில் அவளுக்குத் தன்னால் தூக்கம் வர வைக்க முடியவில்லையே என்று வருந்தினான். அவனாலும் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

பாதி இரவிற்கு மேல் தூங்கியவன் தூக்கத்திலேயே திவ்யாவின் பக்கம் திரும்பிப் படுத்தான். சிறிது நேரத்தில், தன் இடையில் ஒரு வலிய கரம் விழவே, திடுக்கிட்டுத் துள்ளினாள் திவ்யா. அவள் துள்ளவே, ஜீவாவின் தூக்கமும் பறந்து போனது.

படாரென எழுந்து அமர்ந்துவிட்டான். “ச...ச... சாரி திவி..., தூக்கத்தில் தெரியாமல்...”, அவனுக்கு வியர்த்தே விட்டது.

திவியும் முதலில் திடுக்கிட்டாலும், ஜீவாவின் பேச்சு அவளுக்கு கோபத்தைத்தான் கொடுத்தது. “நான் என்ன தீண்டத்தகாதவளா? எதுக்கு இப்போ இவ்வளவு பதட்டம். படுங்க பேசாமல்....., இனிமேல் தூக்கத்தில் தெரியாமல் எல்லாம் போட வேண்டாம். தெரிஞ்சே கையைப் போட்டுட்டே படுத்துக்கோங்க”, சுலபமாகச் சொல்லிவிட்டு, அவன்

கையைத் தன் இடை மீது போட்டுக் கொண்டு படுத்துவிட்டாள்.

ஜீவாவிற்கு அதன் பிறகு தூக்கம் வரவில்லை. முதல் முறையாக ஒரு பெண்ணை அணைத்துத் தூங்குவது, என்னவோ தேகத்தில் புது ரத்தம் ஓட வைத்தது.

சிறிது நேரம் பொறுத்தவன், “திவி நான் கையை எடுத்துக்கவா..?”, எச்சில் கூட்டி விழுங்கியவாறே கேட்டான்.

“போடும்போது என்கிட்டே கேட்டுட்டுதான் போட்டீங்களா?”, குறும்பாகக் கேட்டாள் திவி.

“நான் எங்கே போட்டேன்..., நீதானே எடுத்து....”, திவ்யா எழுந்து அமர்ந்து அவனை முறைக்கவே, பேச்சு பாதியில் நின்றது.

“இப்போ என்னங்குறீங்க....?”, அவள் கேட்ட தோரணையில், விழித்தான் ஜீவா.

அவனுக்கு, இந்த உரிமை, கிண்டல், அன்னியோன்னியம், தவிப்பு, நெருக்கம் அனைத்தும் பிடித்திருந்தது.

“எனக்குத் தோணும்போது நான் போட்டுக்கறேன்”, சொல்லிவிட்டு வேகமாகப் படுத்துக் கொண்டான். இருவரின் இதழ்களும் புன்னகையில் விரிந்திருந்தது.

அந்த இரவு இனிய இரவாகக் கடந்தது. மறுநாள் அவர்களுக்கு வைத்திருப்பதை அறியாமலே நிம்மதியாகப் பொழுது புலரக் காத்திருந்தார்கள்.

மறுநாள் முதல் வேலையாக, அவனது செக் விஷயத்தை பைசல் செய்தான். வாழ்க்கை இப்படியே சென்றால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. இது இப்படியே இருக்கவேண்டும் என்ற வேண்டுதலும் தொடர்ந்தது. ஆனால் அனைத்தும் நேராகவே நடந்தால் கடவுள் என்ற ஒருவன் இருப்பதை நாம் எப்படி உணர்வோம்?

ஒரு பரவச நிலையிலேயே வேலை செய்துகொண்டிருக்க, அவனது அலைபேசி ஒலிக்கவே, அதில் ஒளிர்ந்த எண்ணைப் பார்த்தவன், அவசரமாக அதை ஆன் செய்து காதில் வைத்தான். அந்தப்பக்கம் சொன்ன செய்தியைக் கேட்டவன், ஒரே ஓட்டமாக ஓடிக் காரை எடுத்துக்கொண்டு, வீடுநோக்கிச் சென்றான்.

வீட்டிலோ...., நடு ஹாலில் கால்மேல் கால் போட்டவாறு, புலியின் சீற்றத்தோடு அமர்ந்திருந்தான் வித்தார்த். அவன் பார்வையோ, மானை வேட்டையாடும் சிங்கத்தின் பார்வையென, திவ்யாவையே வெறித்தது.

“என்னடி...., நல்ல வசதியாத்தான் இருக்க போல... தப்பாச்சே..., என்கூட....”, அதன் பிறகு அவன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் வார்த்தையில் வடிக்க முடியாததாக இருந்தது.

திவ்யா, அவன் பேச்சில் கூனிக் குறுகிப் போனாள். வீட்டில், முத்து, டிரைவர் யாரும் இருக்கவில்லை. அவர் குழந்தைகளை அழைத்துவர பள்ளிக்குச் சென்றிருந்தார். செக்யூரிட்டி மட்டுமே இருந்தார்.

அவரையுமே திவ்யா வெளியே இருக்குமாறு அனுப்பிவிட்டதால், இருவரும் தனியாக இருந்தார்கள். திவ்யாவிற்குமே, இன்னும் எவ்வளவு காலம் அவனிடமிருந்து ஓடி ஒளிய முடியும், எதுவாக இருந்தாலும், சிந்திப்போம் என்ற மனநிலைக்கு வந்திருந்தாள்.

“பத்துநாளா ஜெயில்ல இருந்து ரொம்ப காஞ்சுப் போய் வந்திருக்கேன்..., கொஞ்சம் தணிச்சுக்கலாமா? அதென்னமோ தெரியலை, எவகிட்டே போனாலும்..., உன்னை அனுபவிச்ச அந்த சுகம் கிடைக்கவே இல்லடி.

“இப்போ உன்னைப் பாக்கும்போதே...., அப்படியே....”, நாக்கைச் சுழற்றியவாறு அவன் சொல்ல, அப்படியே தேகம் முழுவதும் பற்றிக் கொண்டு எரிந்தது திவ்யாவிற்கு.

“சீ...., வாய மூடு..... இப்போ நான் ஜீவாவோட மனைவி.... அடுத்தவன் பொண்டாட்டியைப் பத்திப் பேச உனக்கு வெக்கமா இல்ல...”, வெடித்தாள்.

“ஹா...ஹா...ஹா...., ஹேய், நீ முதல்ல எனக்குத்தாண்டி பொண்டாட்டி. அதுக்குப் பிறகுதான், நீ ஜீவாவுக்குப் பொண்டாட்டி. அப்படி என்கிட்டே இல்லாத எதுடி அவன்கிட்டே இருக்கு? சொல்லு நானும் தெரிஞ்சுக்கறேன்”, கையை விரித்து அவன் கேட்க, அந்தக் கையை உடைக்கும் ஆத்திரம் வந்தது.

“நல்ல மனசு இருக்கு. பொண்டாட்டியை சக மனுஷியா நடத்துற மனிதத் தன்மை இருக்கு. அவளை உயிரா நேசிக்கிற நல்ல மனசு இருக்கு. அவ குழந்தையை தன் குழந்தையா பாத்துக்கற பெருந்தன்மை இருக்கு.

“அவ்வளவு ஏன், அவ கண்ணசைவில் கூட என்ன நினைக்கிறான்னு தெரிஞ்சு நடந்துக்கற புரிதல் இருக்கு. இதெல்லாம், உன்னைமாதிரி மிருகங்களுக்குச் சொன்னால் புரியாது”, அவள் குரலில் அப்படியொரு பெருமிதம், கர்வம்.

அதை எரிச்சலாய்ப் பார்த்தான் வித்தார்த். “ஓ..., அப்போ இதெல்லாம் காட்டித்தான் உன்கிட்டே இருந்த ஐம்பது லட்ச ரூபாயை ஆட்டையைப் போட்டானா? அப்போ, இதெல்லாம் காட்டினால் அவனுக்குப் பணமும் கொடுத்து, அவன்கூட படுக்கவும் செய்வியா? இது தெரியாமல், நான் இவ்வளவு நாள் உன்கூட ஓசியில் இருந்திருக்கேன் பாரேன்”, நாராசமாகக் கேட்டான்.

காதைப் பொத்திக் கொண்டாள் திவ்யா. “ச்சீ..., உன்னையெல்லாம் இவ்வளவு நேரம் இங்கே இருக்க விட்டதே தப்பு. முதல்ல எழுந்து வெளியே போ...”, கத்தினாள்.

“ச்...ச்..., சத்தம்போட்டுப் பேசக் கூடாது. எனக்கு ஒரு சின்னக் கணக்கு இருக்கு. அதை முடிச்சுட்டு நான் போய்டுறேன்.

என்னை ஜெயிலுக்கு அனுப்பியவனை, நான் ஜெயிலுக்கு அனுப்பலாம்னு பார்த்தால், அவனை நீ காப்பாத்துறியா?

“தப்பு..., ரொம்பத் தப்பு...., உன்னையும் அடக்கணும், அவனையும் பழி வாங்கணும்...., அதுக்கு ஒரே வழிதான் இருக்கு.....”, கோணலாக இளித்து, கண்களை அவள் மேனியில் மேயவிட்டான்.

அதிலும், ஜீவாவை அவன்தான் அந்த செக் விஷயத்தில் ஜெயிலுக்கு அனுப்ப முயன்றான் என்பதை அறிந்த பிறகு, அவளால் மேலே பேசவே முடியவில்லை.

இதுவரை அவனோடு கொஞ்சம் தைரியமாக வாதாடியவள், அவனது பார்வை மாற்றம் அவளது தைரியம் அனைத்தையும் வேரோடு உறிஞ்சியதைப் போல் உணர்ந்தாள். வேகமாகப் பின்வாங்க, யார்மீதோ மோதிக் கொண்டாள்.

அங்கே ஜீவாவைப் பார்த்த பிறகே, நிம்மதியாக மூச்சு விட்டாள். அவன் தோளில் புதைந்துகொண்டாள். அவள் உடல் நடுங்குவது ஜீவாவுக்குத் தெரிந்தது. ஆதரவாகத் தன்னோடு அவளை இறுக்கிக் கொண்டான்.

“டேய்..., நான் ஏற்கனவே சொல்லி இருக்கேன்..., என் கண்முன்னாடி நீ வர வர..., உன்னோட ஒவ்வொரு பல்லா நான் பிடுங்குவேன்னு. இப்போ என் வீட்டுக்கே தேடி வந்துட்ட..., உன்னை சும்மா விட்டால் நான் ஆம்பளையே கிடையாது”, திவ்யாவை விலக்கிவிட்டு, கொத்தாக அவன் சட்டையைப் பிடித்தான்.

“டேய்..., அதுக்கு நீ ஆம்பளையே கிடையாதேடா. உன்னைப்பத்தி வெளியே விசாரிச்சேன்..., நீ ஆம்பளையே இல்லாததால்தான் உன் பொண்டாட்டி உன்னை விட்டுட்டுப் போய்ட்டாளாம்.... அப்படியா? அப்போ உன் பொண்ணுன்னு சொல்லிட்டு இருக்கியே..., அது எப்படி?

“ஓ..., எனக்குப் புரிஞ்சுடுச்சு..., நீ அப்பன் ஆக முடியாதுன்னு..., ஊரான் வீட்டு விதைக்கெல்லாம் உன் இனிஷியலைக் கொடுக்குறியா? இதில் ஆம்பளையே இல்லன்னு ஜம்பம் வேற. இப்போகூட உங்களுக்குக் கல்யாணமாகி, ரெண்டு மூணு மாசம் ஆகுது போல...

“ஒண்ணும் வேலைக்காகலன்னு நினைக்கிறேன்..., நான் வேண்ணா உனக்கு பதிலா விதைக்கவா....”, கேவலமாகப் பேச, ஜீவாவை மீறி திவ்யாவின் கரம் வித்தார்த்தின் கன்னங்களில் மாறி மாறி பதிந்தது.

ஜீவா இப்படி ஒரு பேச்சை நீண்ட நாட்களுக்குப் பிறகு கேட்கவே, அவனால் மேலே என்ன செய்யவென்று தெரியாமல் சிலையானான்.

“த்தூ..., நாயே...., அவரை ஆம்பளையான்னு கேக்க உனக்கு என்னடா தகுதி இருக்கு? நீ மனுஷனே கிடையாது. உனக்கெல்லாம் இவரைப் பற்றிப் பேசக்கூடத் தகுதியே கிடையாது...”, காறி அவன் முகத்தில் உமிழ்ந்தாள்.

“ஹேய் என்னடி..., புருஷனும் பொண்டாட்டியும் என்ன நினைச்சுட்டு இருக்கீங்க. அவன் என்னமோ பெரியத் தியாகம் செஞ்சுட்டான்னு நீ சொல்லுற, அவன் பொட்டடி..... அதான்..., அவன் குறையை மறைக்க வேண்டி உன்கிட்டே நடிச்சு,

“இப்போ உன் பணத்தையும் புடுங்கிட்டான்னு, உனக்கு உண்மையைச் சொல்ல வந்தால்..., என்னையவே அடிக்கிறியா? உன்னைச் சும்மா விட மாட்டேண்டி...”, கொத்தாக அவள் முடியைப் பற்ற, ஜீவா என்ற சிலைக்கு அதன் பிறகுதான் உயிர் வந்தது.

திவ்யாவின் முடியைப் பிடித்த அவன் கையை முறுக்கி, ஒற்றை அடி அடிக்க, ஜீவா அடித்த அடியில் அவன் கையின் எலும்புகள் இரண்டு நொறுங்கியது. அத்தோடு நிறுத்தாமல், “இந்த விரல் தானே, என் பொண்டாட்டியோட

முடியைப் பிடிச்சு இழுத்துது..”, அவன் மூன்று விரல்களைப் பிடித்து பின்னால் வளைக்க, அவையும் முறிந்தது.

அத்தோடு விடாமல் அவன் கழுத்தையும் நெரிக்க, அவ்வளவு வலியிலும் அவனால் கத்தக்கூட முடியவில்லை. ஜீவாவின் கரங்களை விலக்கவும் முடியவில்லை. அவன் நுரையீரல், காற்றுக்குத் தவிக்க, ஜீவாவின் பிடி இன்னும் இரும்பாக இறுகியது.

அந்த நேரம் அங்கே வந்த போலீஸ், ஜீவாவின் பிடியில் இருந்து வித்தார்த்தை விலக்கியது. “சார்..., என்..னை வீட்..டுக்கு வர வச்சு..., கொ..கொல்லப் பாக்குறான் சார்..”, வித்தார்த் மூச்சு திணறத் திணறப் பேச, ஜீவாவும் திவ்யாவும் சிலையென நின்றார்கள்.

தணிவு - 24

என்னைக் கொடுத்து

உன்னை எடுக்க.....

நான் நீயாகி நாளாகிறதே

எப்படிக் கொடுப்பேன்

என்னவனே உன்னை.....

போலீசைப் பார்த்தவுடன் வித்தார்த் நடந்ததை மாற்றிப் பேச, வந்த இன்ஸ்பெக்டரோ அவனைக் கண்டுகொள்ளாமல், ஜீவாவின் பக்கம் திரும்பினார்.

“ஜீவா, நீதானே போன் செஞ்ச. உன் வீட்டுக்குள் ஒருத்தன் அத்துமீறி நுழைந்து வம்பு செய்கிறான்னு?”, கேள்வியாக நிறுத்தினார்.

“ஆமா பாலா, நான்தான் போன் செய்தேன். அதுக்கு ஆதாரம், எங்க செக்யூரிட்டி வீடியோவில் பதிவாகியிருக்கும் வீடியோவை நீங்க பாத்துக்கலாம். இப்போ வீட்டுக்குள் நுழைந்து என் மனைவியிடம் அத்துமீறி நடக்க முயன்றான். அதுக்கும் சேர்த்து நான் கம்ப்ளைன்ட் தாறேன்”, விறுவிறென, பேப்பரில் எழுதி, கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான்.

“ஏண்டா..., ஏற்கனவே ஒரு கேஸ்(case) போட்டு என்னை உள்ளே தள்ளின. இப்போ அடுத்ததா? வெளியே வந்து உங்க குடும்பத்தை நாசமாக்காமல் விட மாட்டேண்டா. என் கையை வேற உடைச்சுட்ட, இதுக்கும் நீ பதில் சொல்லியே ஆகணும்”, போலீசின் பிடியில் இருந்து திமிறினான் வித்தார்த்.

“அதுக்கு நீ இனிமேல் வெளியிலே வரணுமே. நீ வெளியே வர வர.., ஒவ்வொரு கேசா உன்மேல் பாயும். உன்னோட கடைசி நிமிஷத்தைக் கூட நீ அங்கேதான் கழிக்க வேண்டி

இருக்கும் ஜாக்கரதை", அதைவிட அதிகமாக கர்ஜித்தான் ஜீவா.

"அப்படியா...? அப்படியே இருந்தாலும் உங்களை நிம்மதியா இருக்க விட மாட்டேண்டா. இவளையும், இவ பெத்துருக்காளே ஒரு சனியன், அதையும் கோர்ட்டுக்கு இழுத்து நாறடிக்கல.., என் பேர் வித்தார்த் இல்லடா", வஞ்சகம் ஒளிர்ந்தது அவன் கண்களில்.

"உன்னால் ஒண்ணும் புடுங்க முடியாதுடா...", திவ்யா நடுங்கவே, அவளை ஆதரவாக அணைத்தவாறே கத்தினான்.

"முடியும் டா...., என் புள்ளையை நான் பாக்கணும்னு சொல்லுவேன்.., எனக்கும் சட்டம் தெரியும்..., இவளையும் உன்னையும், அந்த சனியனையும் கோர்ட்டுக்கும், ஜெயிலுக்கும், வீட்டுக்கும் அலையவச்சு, ஒரு நாள் கூட நிம்மதியா இருக்க விடாமல் செய்யிறேண்டா.

"இவ உன்னைத்தான் புருசன்குறா, அந்த சனியன் உன்னைத்தான் அப்பன்குது. ரெண்டுபேருக்கும் காட்டுறேன்...., என்னோட பவர் என்ன? நான் யாருன்னு...., என் கேஸ்சை வச்சு, நீங்க இதை தவிர்க்கதுக்கே உங்களுக்கு நாலு இல்லை, நாப்பது வருஷம் ஆகும்.

"அவ்வளவு சீக்கிரம் விட்டுடுவனா? இவ செத்து ஒழிஞ்சிருந்தா கூட நிம்மதியா இருந்திருப்பேன். என்கூட, என் காலு கீழக் கிடந்த பொட்டச்சி..., உன்னைக் கட்டிகிட்டு நிம்மதியா இருக்குறதை, நான் பாத்துட்டு சும்மா விடுவனா?ஹா..ஹா...ஹா...

"அவளைக் கட்டிகிட்டதுக்கு நீயும் அனுபவிக்கணும்டா... பாருங்கடா. நீங்களும் பாருங்க, நானும் பாக்குறேன்....", வஞ்சகத்தின் மொத்த உருவமாக நின்று கெக்கலித்தான்.

"டேய்..., நீ நல்லாவே இருக்க மாட்டடா..., என்னோட இவ்வளவு கஷ்டத்திலும், ஒரு நாள் கூட, நீ நாசமா

போகணும்னு நான் சபிச்சதே கிடையாது. இப்போ சொல்லுறேண்டா..., உனக்கெல்லாம் நல்ல சாவே வராதுடா.

“அந்தக் கடவுள் இருக்குறது உண்மைன்னா, உன்னோட ஆட்டத்தை அடக்காமல் விட மாட்டாருடா”, இதற்கு மேலும் பொறுக்க முடியாது என்பதால் பொங்கி எழுந்தாள் திவ்யா.

“பெரிய பத்தினி..... சாபம் விடுறா..., போடி..”.

“பத்தினிதாண்டா..., உன் சாவு என் கண்ணு முன்னாடியே நடக்கும்டா. அதை நான் பாப்பேன், அப்போ தெரியும் நான் பத்தினியா இல்லையான்னு”.

“என்னடி.... சினிமா டயலாக் எல்லாம் விடுற..., ஹையோ, எனக்கு பயம்மா இருக்கே...”, எக்காளமாகச் சொல்லி இளித்தான். அங்கிருந்த அனைவருக்கும் பற்றிக்கொண்டு வந்தது.

“நீ அமைதியா இரு திவி, என்ன நடக்குதுன்னு பாத்துடலாம். எதுவா இருந்தாலும் உனக்கு நான் இருக்கேன்”, அவளை அமைதிப் படுத்தினான்.

“ஆமா, ஆமா அவன் பாத்துப்பான். ஏன்னா அவன்தானே உன்னை கூட்டிட்டு அலையணும்”, வித்தார்த் எகத்தாளமாகச் சொல்லிச் சிரித்தான்.

“பாலா, இவனைப் பேச விட்டு வேடிக்கைப் பாக்குறீங்களே, இழுத்துட்டுப் போங்க. இவனை உள்ளே வச்சு நல்லா மிதிங்க. இவனோட உயிர் மட்டும்தான் மிச்சம் இருக்கணும். முடிஞ்சா, வேற எந்த கேஸ் இருந்தாலும், அதையும் இவன் மேல போடுங்க”, ஜீவா ஆத்திரத்தில் கொதித்தான்.

“அதை நீ சொல்லணுமா ஜீவா..., உனக்காக எந்த ரிஸ்க்கையும் எடுக்க நான் தயாராத்தான் இருக்கேன். முடிஞ்சா, இவனை என்கவுண்டர்லையே போட்டுடுறேன்”, பாலா சொல்ல, முதல் முறையாக பயந்தான் வித்தார்த்.

அதிலும் ஜீவாவும், இன்ஸ்பெக்டரும் பேசியதைக் கேட்ட பிறகு, அவர்களது நெருக்கத்தை உணர்ந்தான். எப்படியும் போலீஸ் கையில் இருந்தால், தன் முடிவு இன்னதென்று அவனுக்குத் தெரிந்து போனது. எனவே போலீசைத் தள்ளி விட்டு, வெளியே ஓடினான்.

இதை எதிர்பார்க்காத அனைவருமே அவன் பின்னால் ஓடினார்கள். செக்யூரிட்டி பெரிய கேட்டில் அமர்ந்திருந்ததால், வித்தார்த் சிறிய கேட்டைத் திறக்கும் பொறுமை கூட இல்லாமல் ஒரே தாவலில் எகிறிக் குதிக்க,

அந்தநேரம் அங்கே வந்த கழிவுநீர் ஊர்தி, அவனை இடித்துத் தள்ளியது. இடித்ததில், அவன் லாரியின் முன்பே விழ, முன்பக்கச் சக்கரம், அவன் இடையோடு ஏறி இறங்கியது. அவன் பின்னாலேயே வந்த போலீஸ், ஜீவா, திவ்யா, இவர்கள் கண் முன்பே இந்தக் கொடூரம் அரங்கேறியது.

வித்தார்த்தின் இடையோடு சக்கரம் ஏறி இறங்கவே, உடல் நசுங்கி, உதிரம் பீறிட்டு வெளியேற, அவனது மரண ஓலம் அந்த இடத்தையே நடுங்க வைத்தது. திவ்யா, அந்தக் கொடூரத்தைக் கண்டு கூட, விழிகளைத் திருப்பவில்லை.

நம்பமுடியாத ஆச்சரியமும், அதிர்ச்சியும் நிம்மதியும், சந்தோசமும் ஒருங்கே போட்டிப் போட, புன்னகை முகமாகவே வித்தார்த்தை வெறித்தாள். அந்த நேரம், வித்தார்த்தின் பார்வையும் அவள் முகத்திலே நிலைக்க,

“நான் பத்தினி தாண்டா.....”, அவள் இதழ்கள் முணுமுணுத்ததை வித்தார்த்தின் கண்கள் சரியாகப் படம் பிடிக்க, அவன் உயிர் அப்படியே பிரிந்தது. ஜீவா, திவ்யாவை உள்ளே அழைத்துச் செல்ல முயல, “எனக்குப் பாக்கணுங்க...., அவன் சாகுறதைப் பாக்கணும்”, இமைக்கக் கூட மறுத்து, வித்தார்த்தையே வெறித்தது அவள் பார்வை.

வித்தார்த்தின் சரித்திரம், ஒரு கேவலமான முடிவைத் தேடிக் கொண்டது. தான் செய்தது தவறு என்பதை, அவன் உணரவும் இல்லை, அதற்காக வருந்தவும் இல்லை. ஒரு சிறந்த அண்ணனாக, மகனாக இருக்க முடிந்த அவனால், ஒரு சிறந்த மனிதனாகவோ, கணவனாகவோ நடக்க முடியவில்லை.

ஆண் என்ற மிதப்பும், ஆணவமும், தவறைத் திருத்தவேண்டும் என்ற நினைப்புக் கூட இல்லாமல், தான் செய்தது தவறு என்ற சிந்தைக் கூட இல்லாமல், வாழ்ந்த அவன், கழிவுநீர் ஊர்தியில் அடிபட்டு, இறந்தான். இறக்கும் வேளையில் கூட, செய்த தவறுக்காக அவன் வருந்தவில்லை.

சொர்க்கம் என்ற ஒன்றும், நரகம் என்ற ஒன்றும் இருக்கும் என்றால், வித்தார்த்திற்கு நரகத்தில் ஒரு நிரந்தர இடம் காத்துக்கொண்டிருக்கும் என்பது மட்டும் உண்மை. அங்கே, சுற்றி நின்ற யாருமே அவனது மரணத்துக்காக, மனதளவில் கூட வருந்தவில்லை.

“ஜீவா நீ எப்படி சரியான நேரத்துக்கு இங்கே வந்த..? எனக்கும் எப்படித் தகவல் சொன்ன?”, பாலா விசாரித்தான்.

“இந்த நாய், என்னைக்கா இருந்தாலும் எங்களைத் தேடி வரும்னு தெரியும். அதான் இவனோட போட்டோவை, என்னோட செக்யூரிட்டி கிட்டே காட்டி, இவன் வந்தால் உள்ளே அனுப்பிட்டு, எனக்குத் தகவல் கொடுக்கச் சொல்லி இருந்தேன், அதான் என்னால் சரியான நேரத்துக்கு வர முடிஞ்சுது”, விளக்கம் கொடுத்தான்.

“ஓ அப்படியா..? நல்ல விஷயம். சரி..... ஜீவா அவங்களை உள்ளே கூட்டிப் போ....”, இன்ஸ்பெக்டர் சொல்ல, ஜீவா, அவளைக் கட்டாயப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றான்.

செல்லும்போழுதே டிரைவர்க்கு ஃபோன் செய்து, குழந்தைகளை ஹேமாவிடம் அழைத்துச் செல்லச்

சொன்னான். ஹேமாவிற்கும் விஷயத்தை தெரிவித்துவிட்டு, வைத்துவிட்டான்.

ஹேமா, இங்கே திவ்யாவிற்குத் துணைக்கு வரவா என்ற கேள்விக்கு,'வேண்டாம்' என்று முடித்துவிட்டான். திவ்யா, அறைக்கு வந்தவள், நேராக பாத்ரூம் சென்று அப்படியே ஷவரில் நனைந்தாள். அரைமணிநேரம் கழித்தே வெளியே வந்தாள்.

என்னவோ ஒரு அசாத்திய அமைதி அவளிடம். "திவிம்மா என்னடா? சாரி, நான் இப்படி ஆகும்னு நினைக்கலை...", கவலையாகச் சொன்னான்.

"ஜீவா, நீங்க எதுக்கு சாரி சொல்லுறீங்க....? நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன். ஒருத்தரோட சாவில் நமக்கு சந்தோஷம் வருதுன்னா., அவன் எவ்வளவு பெரிய அயோக்கியனா இருந்து இருப்பான். என்னோட சந்தோஷத்தை எப்படித் தெரியப்படுத்தன்னு தெரியாமத் தான் இப்படி இருக்கேன்.

"அவன் எவ்வளவோ கொடுமையெல்லாம் செய்த பிறகும் நான் பொறுமையாதான் இருந்து இருக்கேன். அவ்வளவு ஏன், கொஞ்சமாவது மாறிட மாட்டானான்னு ஏங்கி இருக்கேன். இந்த உறவைக் காப்பாத்தணும்னு போராடி இருக்கேன்.

"இதெல்லாம் சுத்தப் பயித்தியக்காரத்தனம்னு எனக்குத் தெரியும். ஆனாலும் செஞ்சேன்...., கொஞ்சம் கொஞ்சமா என் மனசும் உடம்பும் மரத்துப் போகும் வரைக்கும்கூடப் பொறுமையா இருந்தேன். என் மகனுக்காக, எல்லாத்தையும் தாங்கிகிட்டேன்.

"ஒரு கட்டத்தில், கண்ணனோட உயிருக்கே ஆபத்து வந்த பிறகுதான், அவனோட எனக்கு இருந்த உறவு எல்லாம் போதும்னு முடிச்சுட்டு வெளியே வந்தேன். அப்பவும் உயிர் வாழ ஆசையே இல்லாமல், ஒரு மூலையில் வீடெடுத்து,

ரெண்டு நாள் வெளியே வராமல்...., மனசு முழுக்க பயம் மட்டுமே இருந்துது.

“எங்கே வீட்டை விட்டு வெளியே வந்தால் அவன் கண்ணில் விழுந்துடுவோமோன்னு பயம். பக்கத்தில் இருந்த அந்தப் பாட்டிதான் என்னைப் பாத்து, தேத்தி...., ஹப்பா...., அதெல்லாம்...., சொல்லவே முடியலங்க...

“ஹேமா, அவங்க அம்மா வந்த பிறகு, ஒரு சொந்தத்தை உணர்ந்தேன். நீங்க என் வாழ்க்கையில் வந்த பிறகுதான், நான் கொஞ்சமாவது நிம்மதியையும், பாதுகாப்பையும் உணர்ந்தேன். உங்க மேல துளிர்த்த நேசத்தை சொல்லக் கூட முடியாமல், அந்த பாவியோட வருகை என்னை அலைக்கழிச்சுது.

“ஆனா இன்னைக்கு....., எல்லாத்துக்கும் ஒரு முடிவு வந்துடுச்சுங்க. இந்த நாள்...., இன்னைக்கு என்ன தேதி...., பதினைந்தா? இந்த நாள், போன நாலு வருஷமா ஒரு கறுப்பு தினமாதான் இருந்து இருக்கு. ஆனா இன்னைக்கு..... இதை நாம கொண்டாடியே ஆகணும்.

“கிளம்புங்க வெளியே போகலாம்..., எல்லோரையும் கூப்பிட்டு, ஹோட்டல் போய், என்னோட சந்தோஷத்தை எல்லாரோடவும் பகிர்ந்துக்கணும்னு எனக்கு ஆசையா இருக்குங்க”, கண்களில் நீருடனும், உற்சாக மனநிலையுடனும் சொன்ன அவளை விசித்திரமாகப் பார்த்தான்.

அவளது உற்சாகம் அவனைத் தொற்றிக் கொள்ளவில்லை. அவனது அமைதியைப் பார்த்தவள், அவன் முகத்தைக் கைகளில் ஏந்தியவள், “உங்களுக்குப் பிடிக்கலையா...? ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க?”, கலக்கமாகக் கேட்டாள்.

“அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இந்த நாள் தான், என்னோட வாழ்க்கையின் போக்கே மாறிப் போச்சு”, வேதனையாகச் சொன்னான்.

“என்ன சொல்லுறீங்க?”, புரியாமல் கேட்டாள்.

“அந்தப் பேயோட எனக்குக் கல்யாணம் ஆன நாள்”, கசப்பாகச் சொன்னான்.

“உங்களுக்குமா....?”, “உங்களுக்குமான்னா..... அப்போ உனக்கும்...”, இருவரும் ஒருவரை ஒருவர் அர்த்தமுடன் பார்த்துக் கொண்டனர்.

இருவரின் மனமும் புரியாத மௌனத்தில் சிக்கிக் கொண்டது. ஜீவா, அந்த நாளுக்கே சென்றுவிட்டவன்போல் தலை குனிந்து அமர்ந்திருந்தான். இன்றும், அவனுக்கு அந்த வித்தார்த் சொல்லி இருந்த விஷயத்தால் , மனம் காயம் பட்டிருந்ததுதான்.

அனைத்தையும் அசை போட்டவன், “திவி..., அஞ்சு எ...ன் பொண்ணு தானே....”, அப்படி இல்லாமல் போனால்...., என்ற எண்ணத்தில் அவன் தேகம் இறுகியது.

“ஜீவா, என்ன இது...?”, அவனைத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள். “அஞ்சு உங்கப் பொண்ணுதான்..., அப்படியே உங்க செராக்ஸ். உங்களுக்கே அது தெரியுமே..., பிறகு எதுக்குத் தேவையில்லாமல், கண்டதையும் நினைச்சுக் குழம்பிக்கறீங்க. எதையும் நினைக்காதீங்க. உங்களுக்கு நான் இருக்கேன். உங்க திவி இருக்கேன்”, அவன் காதுக்குள் உரைத்துக் கொண்டே இருந்தாள்.

அவன் கொஞ்சம் தேறினாலும், அவனால் முழுதாக அதில் இருந்து விடுபட முடியவில்லை. வெளியே போலீசின் வண்டி ஓசை, ஆம்புலன்ஸ் ஓசை, விசாரணை, என எதுவுமே இருவரையும் பாதிக்கவில்லை.

முத்துவும், டிரைவரும் வந்துவிடவே, இரவு உணவை மாடிக்கே வரவைத்து, ஜீவாவை உண்ணச் சொன்னாள். “நான்..., எனக்கு..., வேண்டாம் திவி. நீ சாப்பிடு”, சொல்லிவிட்டு, கட்டிலில் படுத்துக் கொண்டான்.

அவன் மனநிலை புரிந்தவள், சாப்பாட்டைப் பிசைந்து எடுத்துக் கொண்டு அவனை நெருங்கினாள். “ஜீவா எந்திரிங்க...”, அவனை எழுப்பினாள்.

“ப்ளீஸ் திவி, எனக்கு வேண்டாம்...”, அவன் குரலில் வெறுப்பு.

அவனைக் கழுத்தின் அடியில் கை கொடுத்து எழுப்பி அமர வைக்க முயன்றாள். அவனது எடைக்கு, அவளால் அவனை ஒற்றைக் கையில் தூக்க முடியவில்லை. “ப்ளீஸ் ஜீவா..., ரெண்டே வாய் சாப்பிடுங்க”, அவன் அசையவே இல்லை.

“அப்போ அவளை நினைச்.....”, அவளை முழுதாகப் பேச விடாமலே எழுந்து அமர்ந்துவிட்டான்.

சாப்பாட்டுத் தட்டுக்காக கைகளை நீட்ட, சாப்பாட்டைப் பிசைந்து, அவன் வாய்க்கருகே கொண்டு சென்றாள். கொஞ்சம்கூட தயங்காமல் அவன் வாய் திறந்துகொண்டது. சாப்பாடு முழுவதையும் ஊட்டி விட்டப் பிறகே அவனை விட்டாள்.

அவனுக்கு வாய் துடைத்துவிட்டு, தண்ணீர் கொடுத்துக் குடிக்க வைத்து, ஜீவாவைப் படுக்கையில் இருந்து இறங்காதவண்ணம், குழந்தையென நடத்தினாள்.

அவளது கனிவில் மனம் கனிந்தான் ஜீவா. குழந்தைகளை ஹேமா வீட்டிலேயே தூங்கச் சொல்லிவிட்டதால், இருவர் மட்டுமே அன்று தனித்திருந்தார்கள்.

திவ்யா வழக்கம்போல் அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துக் கொள்ள, அவன் உறங்காதது, அவன் புரண்டு படுப்பதிலேயே தெரிந்தது. அவன் பக்கம் திரும்பி, தனக்கு முதுகுகாட்டிப் படுத்திருந்தவனை, தன்பக்கம் திருப்பினாள்.

“இன்னும் அதையேதான் நினைச்சுட்டு இருக்கீங்களா?”, அவன் கண்களுக்குள் ஊடுருவியவாறு கேட்டாள்.

அவன் மௌனமே அவளுக்குத் தேவையான பதிலைச் சொல்ல, “நான் ஏதாவது ஹெல்ப் பண்ணவா?”, அவள் பார்வையில் இன்னும் எந்த மாற்றமும் வந்திருக்கவில்லை.

ஜீவா அவளைப் புரியாத பார்வை பார்த்தான். திவ்யா அவனை நெருங்கினாள். தேகங்கள் இரண்டும் முதல் முறையாக, மெதுவாக உரசிக்கொள்ளும் நெருக்கத்தில். அவள் கண்கள் அவனுக்குள் ஊடுருவ, இதழ்கள் அவன் இதழ்களைத் தீண்டும் நெருக்கத்தில்...., அதற்குமேல் முடியாமல், இமைகளை மூடிக் கொண்டாள்.

ஜீவாவின் கரங்கள் அவள் இடையில் கைகோர்த்து, தன்னோடு இன்னும் இறுக்கின. அவள் இதழ்கள் அவனுக்கு அழைப்புவிடுக்க, தன் முரட்டு இதழ்களை மென்மையாக, மிகவும் மென்மையாக அவள் இதழ்களோடு பொருத்தினான்.

அவனது மென்மையான இணைப்பை அவள் அழுத்தமாக மாற்ற, ஜீவா அவள் செய்கையில் தைரியம் கொண்டு, அவள் இதழ்களை மென்மையாகக் கவ்விச் சுவைத்தான். அவன் செய்கையில் அவள் உடல் விறைத்தாலும், அவனிடமிருந்து விலக முயலவில்லை.

ஆனால் அவளது மாற்றம் உணர்ந்து அவளை விடுவித்தான். “ஐ’ம் சாரி..., ஜீவா..., என்னால்...., இப்போ....., இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கோங்க, என்னையே முழுசா உங்களுக்குத் தாறேன்”, அவன் நெஞ்சுக்குள் புதைந்து கொண்டாள். அவள் கண்களின் கண்ணீர் அவன் நெஞ்சில் சுட்டது.

“ப்ளீஸ் திவி...., எனக்கு எந்த ஏமாற்றமும் இல்லை. ஏன்னா, நான் இதுக்குமேல எதையும் யோசிக்கவே இல்லை. நீ அழுதால் என்னால் தாங்க முடியாதுடா”, அவள் முகத்தை நிமிர்த்தி, கண்ணீரைத் துடைத்தான்.

“நிஜம்மாவா...?”, அழுகையினூடே கேட்டாள்.

“நிஜமாதான் சொல்லுறேன். வேண்ணா சத்தியம் செய்யவா?”, அவன் கேட்க, மெல்லியப் புன்னகை அவள் இதழ்களில்.

ஏனோ அதற்குமேல் அவனை நெருங்கிப் படுத்திருக்க முடியாமல், விலகி, அவனுக்கு மறுபக்கம் பார்த்தவாறு படுத்துக் கொண்டாள். ஜீவாவின் மனம் நிம்மதியைச் சுமந்திருந்தது. செக்ஸ் என்ற ஒன்றை அவன் திவ்யாவிடம் இருந்து எதிர்பார்க்கவே இல்லை.

அப்படியிருக்கும்பொழுதும், திவ்யாவின் இதழமுதம் பெருத்த ஆறுதலை அளித்ததே தவிர, அவனது தாபத்தை தூண்டவில்லை. மயிலிறகால் வருடிய உணர்வு, உடம்பில் மெல்லியதாய் ஒரு சிலிர்ப்பு, நீண்ட காலங்களுக்குப் பிறகு, உணரும் இந்த உணர்வை ஆழ்ந்து அனுபவித்தான்.

அவனுக்கு இது பிடித்திருந்தது. ஆனால் திவ்யாதான் தவித்துப் போனாள். சும்மா இருந்த அவனை நெருங்கி, அவன் தாபத்தை தூண்டிவிட்டோமோ என்று துடித்துப் போனாள்.

அவளது தவிப்பு புரிந்தவன்போல், அவள் முதுகு பக்கம் நெருங்கிப் படுத்தவன், அவள் இடையில் கை போட்டு மென்மையாக அணைத்துக் கொண்டான். அவனது செய்கையில் மனம் அமைதியடைய, நீண்ட காலங்களுக்குப் பிறகு, திவ்யாவின் இமைகள் இரவில் மூடின.

தணிவு - 25

கடல் நீருக்குள் மூழ்கிய நான்

நீரோடைக்குள் இப்பொழுது

தணிந்தது என் தாகம் மட்டுமல்ல

என் சாபமும் தான்.....

அன்று ஜீவாவின் தாய் வசந்தாவிற்கு நினைவுநாள். இதுவரை ஜீவா, தாய்க்குத் திதி கொடுத்ததில்லை. அதற்குக் காரணம், தன் வாழ்க்கை நேராகாமால், அவர் ஆத்மா சாந்தியடையாது என்பது அவனுக்குத் தெரியும்.

பின்னர் எதற்குத் தேவையில்லாமல் சடங்கை நிறைவேற்றவேண்டும் என்று தவிர்த்துவிட்டான். அவனது மாமா, சித்தப்பா என அனைவர் சொல்லியும் அவன் கேட்கவே இல்லை. இந்த வருடம், கணேஷ் அதை எப்படியாவது நிறைவேற்றியே ஆகவேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டான்.

எல்லா வருடமும் இந்த நாளில் ஜீவா பித்துப் பிடித்தவன்போல் இருப்பான். சாப்பிடாமல், பேசாமல், தன்னையே தண்டித்துக் கொள்வான். கணேஷ் இவை அனைத்தையும் திவ்யாவிடம் ஏற்கனவே சொல்லிவிட்டான்.

திவ்யாவும் காலையில் எழுந்தது முதல், ஜீவாவைச் சுற்றியே வந்தாள். குழந்தைகளை ஹேமாவிடம் விட்டுவிட்டாள். ஜீவாவோ கணேஷின் எந்த ஏற்பாட்டையும் தடுக்கவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை. ஏதோ ஒரு இறுக்கம் அவனிடம்.

திவ்யா பேசினால் அதற்கு பதில் கொடுத்தானே தவிர, அவனாக ஆர்வமாக எதையும் பேசவில்லை. “என்ன ஜீவா...? இப்படியே எவ்வளவு நேரம் இருப்பீங்க...?”, அவன் தலைக் கோதிக் கேட்க, வெறுமையாக அவளை ஒரு பார்வை பார்த்தான்.

அவனது அந்தப் பார்வையும் அவளை வருத்தியது. “திவி..., நான் அந்தப் ப்ரியாவை பார்க்காமல் இருந்திருந்தால் என்னோட அம்மா உயிரோட இருந்திருப்பாங்க இல்ல. அவங்களோட சாவுக்கு நான்தான் காரணம்.

“அப்படியிருக்கும்போது, நானே இந்தத் திதியையும் அவங்களுக்குக் கொடுத்தால், அவங்க ஆத்மா எப்படி சாந்தி அடையும்? இத்தனை வருஷம் இதை யோசித்தே நான் திதி கொடுத்ததில்லை. இப்போ...”, மேலே பேச முடியாமல் தொண்டை அடைக்க அப்படியே நிறுத்தினான்.

“இதை நீங்கதான் செய்யணும் ஜீவா. உங்க அம்மாவோட ஆத்மா அமைதியே இல்லாமல் இந்த உலகத்தில் சுத்திட்டு இருக்கும். அவங்க ஆத்மாவுக்கு சாந்தி கொடுப்பது உங்க கையில்தான் இருக்கு. அதுக்கு இப்போகூட சாந்தி கொடுக்கலன்னா அதுவே பெரிய பாவம்.

“உங்களுக்காகவே வாழ்ந்தவங்க அவங்க. உங்க கூடவே இருந்து, நீங்க பட்ட துன்பம் எல்லாம் பார்த்தவங்க. அப்படியிருக்கும்போது, அவங்க எப்படி உங்களைத் தப்பா நினைப்பாங்க. ஒவ்வொருத்தருக்கும் இப்படித்தான் வாழ்வு அமையும்னு கடவுள் முடிவு செய்ததை நம்மளால் மாற்றவே முடியாது.

“உங்க பழைய வாழ்க்கையை நினைத்தே, இப்போ இருக்க வாழ்க்கையையும் பாழாக்கணும்னு நீங்க நினைக்கிறீங்களா? இப்போ உங்களோட நான் இருக்கேன்...., நீங்க நிம்மதியா இல்லையா? அப்படி நிம்மதியா இருந்தீங்கன்னா..., எனக்காக இந்தச் சடங்கை நீங்க செஞ்சுதான் ஆகணும்.

“நம்மளோட வாழ்க்கையைப் பார்த்து உங்க அம்மாவோட ஆத்மா, கண்டிப்பா சந்தோசப்படும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. உங்களுக்கும் அந்த நம்பிக்கை இருந்தால், பழசை எல்லாம் மறந்துட்டு வெளியிலே வாங்க”, ஜீவாவைத் தேற்றினாள்.

அதே நேரம், தங்கமும் அங்கே வந்தார். அவர்கள் இருவரிடமும் பேசியவர், இருவரையுமே ஆழமாக ஒரு பார்வை பார்த்தார். ஏற்கனவே ஹேமா மூலமாகவும் அவருக்கு பூ, கிஃப்ட் பற்றிய விஷயங்கள் தெரியுமாகையால், ஒரு முடிவுடனே இன்று பேச வந்திருந்தார்.

“நீங்க ரெண்டுபேரும் இவ்வளவு முட்டாள்த்தனமா நடந்துப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. நீங்க ரெண்டுபேரும் வாழ்க்கையில் இணைஞ்சப்போ, ரெண்டுபேரும் சேர்ந்து ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிப்பீங்கன்னு நான் நினைச்சேன்.

“ஆனா, நான் நினைத்த மாதிரி நடக்காமல்...., உங்க வாழ்க்கையை, விட்ட இடத்தில் இருந்து ஆரம்பிச்சு இருக்கீங்க. அதுதான் நீங்க ரெண்டுபேரும் செய்த மிகப்பெரிய தப்பு. அதெப்படி ஜீவா..., நீ உன் மனைவிக்காக ஆசையா ஒரு பொருள் முதல்நாள் வாங்கிட்டு வந்து, அதை அவளோட கையில் கொடுக்காமல், கீழே வைக்கலாம்.

“அந்த இடத்தில் நீ உன் புது வாழ்க்கையில் தோத்துப் போய்ட்ட. அதே மாதிரி திவ்யா...., அவன் அப்படி செஞ்ச உடனே, அதை எடுத்து அவன் முகத்திலேயே விட்டெறிந்து நீ கோபப்பட்டிருந்தால், உங்க புது வாழ்க்கையை நீங்க சிக்கலே இல்லாமல் துவங்கி இருக்கலாம். நானும் இவ்வளவு நாள் நீங்களே புரிஞ்சுப்பீங்கன்னு நினைச்சுட்டு தள்ளியே இருந்தேன்.

“நீங்க ரெண்டுபேரும், வாழ்க்கையைப் புதுசா ஆரம்பிக்கணும் என்ற எண்ணமே இல்லாமல்..., விட்ட இடத்தில் இருந்து சரி செய்யணும்னு நினைக்கிறீங்க. இப்போகூட ஜீவா..., நீ ப்ரியா பேரைச் சொல்லுவது..., திவ்யாவுக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுக்கும் தெரியுமா?”, தங்கம் கண்டிப்புடன் கேட்க, ஜீவா வேகமாக திவ்யாவைப் பார்த்தான்.

அவளோ தன் கண்ணீரை மறைக்க, முகத்தை அந்தப்பக்கம் திருப்பிக் கொண்டாள். ஜீவாவுக்குத் தான் செய்த தவறு புரிந்தது. அமைதியாகத் தலைக் கவிழ்ந்தான்.

தங்கம் தொடர்ந்தார், “ஆனால் அதை யோசிக்காமல் உன்னோட கவலைதான் உனக்குப் பெருசா இருக்கு. திவ்யா உனக்காக முழுசா மாறி இருக்கா. ஆனா நீ இன்னுமே அந்தப் பழையக் கூட்டைவிட்டு வெளியவே வர மாட்டேன்னு அடம் பண்ணுறியே இது எந்த விதத்தில் நியாயம்.

“அப்போ திவ்யாவோட, பாசத்துக்கும், நேசத்துக்கும், அன்புக்கும், அரவணைப்புக்கும் நீ என்னக் கைம்மாறு செய்யப்போற? இப்போ சொல்லுறேன்..., ரெண்டுபேருக்கும் இன்னைக்குதான் புதுசா கல்யாணம் ஆகி இருக்குன்னு நினைச்சுட்டு, இந்த நிமிஷத்தில் இருந்து வாழப் பாருங்க.

“பழைய வாழ்க்கையின் நிழல் இனிமேல் உங்க மனதில் கூட பதியக் கூடாது. மனசு விட்டுப் பேசுங்க, சண்டை போடுங்க, பிடிக்கலையா, பிடிக்கலன்னு சொல்லுங்க. பிடிச்சிருக்கா இது பிடிச்சிருக்கு, உன்மேல் நான் உயிரையே வச்சிருக்கேன், காதலிக்கிறேன்..., இப்படி அன்னியோன்னியமா இருங்க.

“இப்படிப் பேசினால் என்ன நினைப்பா, நினைப்பான் என்பதை மறந்துடுங்க. இவன் உன் ஜீவா, இவ உன் திவ்யா, நீங்க ரெண்டுபேரும்தான் இனிமேல். புதுசா காதலிங்க, புதுசா புரிஞ்சுக்கோங்க, புதுசா சண்டை போடுங்க.

“எல்லாம் புதுசா இருக்கட்டும்....., இனிமேல் இப்படி, பழசை நினைச்சு நான் கலங்குறேன், முடியலை, இப்படி ஏதாவது நான் கேள்விப்பட்டேன்..., உதைச்சு சொல்லிக் கொடுப்பேன். ஜீவா போய் குளிச்சுட்டு வா.

“திவி நீயும் போய் வேலையைப் பாரு. நீ ஜீவாவை ஓவரா தாங்குற, அதான் அவன் கண்ணனை மாதிரி

பிஹேவ்(behave) பண்ணுறான். அவன் கண்ணன் கிடையாது, உன் புருஷன்...., அவன்கிட்டே எப்படி நடந்துக்கணுமோ அப்படி நடந்துக்கோ.

“ஜீவா இது உனக்கும்தான். அவ அஞ்சலி கிடையாது, உன் மனைவி..., நான் சொல்ல வருவது ரெண்டுபேருக்கும் புரியும்னு நினைக்கிறேன்.....”, இருவரையும் அர்த்தமுள்ள பார்வை பார்க்க, ஜீவாவின் பார்வையும், திவ்யாவின் பார்வையும் ஒரு நொடி தழுவிப் பிரிந்தது.

ஏற்கனவே ஒரு தெளிவுடன் இருந்தவர்களை, தங்கத்தின் பேச்சு இன்னும் தெளிவாக்கியது. அவர்களுக்குள் இருந்த மன நெருக்கம் இன்னும் அதிகரித்தது. தங்கள் வாழ்க்கையைக் குறித்து சிந்திக்கத் துவங்கினர்.

அதன் பிறகு, வேலை மின்னல் வேகத்தில் நடந்தேறியது. ஐயர் வந்து சடங்கை நிறைவேற்றத் துவங்க. “திதி கொடுக்க வேண்டியவங்களோட போட்டோ கொண்டு வாங்கோ”, ஐயர் சொல்ல, கணேஷ், புதிதாக லேமினேட் செய்த புகைப்படத்தை, பிரித்தவாறே கொண்டுவந்து, ஹோமத்தின் முன்னால் வைத்தான்.

அந்தப் புகைப்படத்தில் சாந்தமாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தார் வசந்தா. அது அவரது வயதான தோற்றத்தில் இருந்தப் புகைப்படம். அதைப் பார்த்தவுடன் திவ்யாவிற்கு, ஒரு நொடி தன் கண்ணையே நம்ப முடியவில்லை.

இமைகளை வேகமாக மூடித் திறத்து, கண்களை கசக்கிக் கொண்டுப் பார்க்க, அவள் கண்கள் அவளை ஏமாற்றவில்லை. ‘இது..., இவங்க..., அன்னைக்கு...., அப்படின்னா அஞ்சலி...’, உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்பு ஓடி மறைந்தது.

அவள் விழிகள், வேகமாக அஞ்சலியைத் தேடிச் சுழன்றது. அவள் பார்வையில் விழுந்தாலும், அவளிடம் செல்ல

முடியாமல், இங்கே வேலைகள் இருக்க, தன்னை முடிந்த அளவு கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தாள்.

திவ்யா கொஞ்சம் எமொஷனலாக இருப்பது அங்கிருந்த அனைவருக்குமே புரிந்தது. எடுக்கும் பொருட்களைத் தவறவிட்டாள். கவனம் சிதறியது...., ஹேமா வந்து அவள் தோள் தொட்டு, என்னவென்று கேட்க, திவ்யாவால் சொல்லக் கூட முடியவில்லை.

ஒருவழியாக, ஐயர் சடங்குகளை முடித்துவிட்டு , தட்சணை வாங்கிவிட்டு வெளியேறவும், "அஞ்சுமா....", திவ்யா போட்ட சத்தத்தில், மாடியில் அறைக்குள் விளையாடிக் கொண்டிருந்த அஞ்சலி, அடித்துப்பிடித்து ஓடி வந்தாள்.

"என்னமா...? என்ன...?", திவ்யாவின் கூச்சல், அஞ்சலியை கலவரமாக்கி இருந்தது.

அஞ்சலியை வாரி அணைத்து, இறுக்கி, முத்தமழை பொழிந்தாள் திவ்யா. "அஞ்சும்மா..., அஞ்சு செல்லம்..., அம்மாடா...", என்னவோ இன்றுதான் புதிதாக அவளுக்கு அறிமுகப்படுத்துவதுபோல் சொன்னாள். திவ்யாவின் நடத்தையை அனைவருமே புரியாமல் பார்த்தார்கள்.

"அம்மாதாம்மா...., ஏம்மா...? என்ன ஆச்சு...?", அஞ்சலிக்கு, எதுவோ சரியில்லை என்ற உணர்வு. திவ்யாவின் அழுகையும் அதற்கு வலு சேர்க்க, அஞ்சலியுமே இன்னும் அவளைக் கட்டிக் கொண்டாள்.

அஞ்சலி அழவே துவங்கிவிட்டாள். அஞ்சலி அழத் துவங்கவே, ஜீவா வேகமாக அவர்கள் அருகில் வந்தான். "திவி..., என்ன இது...? அவ உன் பொண்ணுதான். இப்போ யார் என்ன சொன்னாங்க? எதுக்கு இப்படி உணர்ச்சிவசப் படுற?

"பாரு.... அஞ்சலியும் என்னவோ ஏதோன்னு அழறா?", மென்மையாகக் கடிந்துகொண்டான்.

“ஜீ... ஜீ... ஜீவா..., நா.... நான் தான்...., அஞ்சு...”, அவளால் பதட்டத்திலும், மகிழ்ச்சியிலும் சொல்லக் கூட முடியவில்லை. வார்த்தைகள் தந்தியடிக்க, மூச்சு விடவும் சிரமமாக உணர்ந்தாள் திவி.

“ஹேமா, அவளுக்குத் தண்ணி கொண்டுவந்து கொடு. ஜீவா, நீ முதல்ல அஞ்சலியைச் சமாதானப் படுத்து. திவி, எதுவா இருந்தாலும் தண்ணியைக் குடிச்சுட்டு நிதானமாச் சொல்லு. கண்ணா ஒண்ணும் இல்லடா..., இங்கே வா, பாட்டி உனக்குப் பாயாசம் தாறேன்”, திவ்யாவின் நிலை புரிந்து தங்கம் அடுக்கடுக்காகப் பேசி நிலைமையை சமாளித்தார்.

ஜீவா திவ்யாவிடம் இருந்து அஞ்சலியை வாங்க முயல, இருவருமே பிரியமாட்டோம் என்று கட்டிக் கொண்டு இருந்தார்கள். இருவரையும் நடத்திச் சென்று ஸோபாவில் அமர வைத்தான். ஹேமா கொடுத்த தண்ணீரை, நொடியில் காலி செய்தாள்.

இரண்டு நிமிடம் அமைதியாக இருந்தவள், “ஜீவா, அஞ்சலி புனிதா ஹாஸ்பிட்டல்ல, மார்ச் பத்தாம்தேதி தானே பிறந்தாள். அவளுக்கு, அவளோட அம்மா தாய்ப்பால் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டாதானே.

“அஞ்சலிக்கு வேற ஒரு தாய், தாய்ப்பால் கொடுத்தாங்க, உங்களுக்கு ஞாபகம் இருக்கா”, ஆர்வம் கொப்பளித்தது அவள் குரலில்.

“அதை எப்படி மறக்க முடியும்....?”, ஜீவாவின் முகம் வேதனையில் கசங்கிச் சரியானது.

அதைப் பார்த்த தங்கம், “திவ்யா, இப்போ பழைய கதையெல்லாம் எதுக்கு?”, அவளைக் கடிந்துகொண்டார்.

“அம்மா..., நீங்க நம்ப மாட்டீங்க, ஆனால் நான் சொல்லப்போறது உண்மை..., அந்தத் தாய் வேற யாரும்

இல்லை...., நா...நா...நான்தான்”, அஞ்சலியைத் தழுவி முத்தமிட்டாள்.

அங்கிருந்த அனைவருமே, ஒரு நிமிடம் எப்படி உணர்ந்தார்கள் என்றே சொல்ல முடியவில்லை. கண்ணனும் அஞ்சலியும், கொஞ்சம் கூடப் பொறாமையோ, போட்டியோ இல்லாமல் பழகியது, அவர்கள் தங்களது தாய்ப்பாலையும் பகிர்ந்து கொண்டதாலா?

அஞ்சலி திவ்யாவைப் பார்த்த நாள்முதல் அவளோடு ஒட்டிக் கொண்டது, அவள் கொடுத்த உயிர்ப்பால், தாய்ப்பால் அவள் உடம்பில் கலந்திருந்ததாலா? ஜீவாவும், திவ்யாவும் இணையவேண்டும் என்று, கடவுள் அன்றே எழுதிவிட்டானா?

“திவி...”, “தங்கச்சி....”, ஜீவாவும் கணேஷும் ஒரே நேரம் அழைத்தார்கள்.

“தங்கச்சி..., நீயா...? நீயேதானா..? எங்க அஞ்சுவுக்கு உயிர்ப்பால் கொடுத்த அந்த தெய்வம் நீதானா? ஹையோ உன்னை நாங்க தேடாத இடம் கிடையாது. ஹாஸ்பிட்டலில் கூட, பொய்யான விலாசம்தான் இருந்துது. மிஸ்ஸஸ் வித்தார்த் என்ற பேர்தான் அங்கே இருந்தது.

“அத்தை அந்த டிரைவரை, உன்னை வீட்டில் விடலை என்ற கோபத்தில், வேலையை விட்டே அனுப்பிட்டாங்க தெரியுமா? நான், உன்னைக் கண்டுபுடிச்சு..., உன் காலில் விழுந்து நன்றி சொல்லணும்னு நினைச்சேம்மா....

“இப்போ நீயே எங்க அஞ்சுக்கு அம்மாவா வந்து இருக்க. அன்னைக்குச் செய்ய முடியாததை இப்போ செய்யிறேம்மா..”, சொன்னவாறு அவள் காலில் விழப் போனான்.

“அண்ணா...., என் பொண்ணுக்கு, நான் தாய்ப்பால் கொடுத்ததுக்கு, நீங்க எதுக்குண்ணா என் காலில் விழணும்? வேண்டாண்ணா..., இவ்வளவு பெரியப்

பாவத்தை என்னை சுமக்க வச்சுடாதீங்க... நான் இப்போதான் அத்தை போட்டோ பாத்து, கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுட்டேன்.

“இல்ல.... இதைப் பெருசாக்காதீங்க..., வாங்க எல்லோரும் சாப்பிடலாம்..., நான் செய்த வேலையில் அஞ்சு கூட பயந்துட்டா. ஒண்ணும் இல்லடா செல்லம்..., அம்மா, என் அஞ்சு செல்லத்தை, பொறந்த அன்னைக்கே தூக்கி இருக்கேன்.

“அப்படியே குட்டி ரோஜாக் குவியலா இருந்த தெரியுமா? ஒரே அழுகை. அம்மாட்ட முதல்ல பாலே குடிக்க மாட்டன்னு சொல்லிட்ட, பிறகு அம்மா, உன்னைக் கொஞ்சி, கெஞ்சி, பிறகு சமாதானம் ஆன பிறகுதான் பாலே குடிச்சீங்க.

“என்னை விட்டுப் போகவே மாட்டீங்க. கண்ணா இந்த பக்கம், நீ இந்தப்பக்கம்..., அங்கே இருந்த நர்ஸ் கூட ..., ‘இப்போ உங்களை யார் பாத்தாலும், உங்களுக்கு ரெட்டைப் பசங்கன்னு சொல்லுவாங்க’ன்னு, சொல்லி என்னை கேலி செய்வாங்க.

“அம்மா கைக்குள்ளே இருந்தாதான் தூங்குவீங்க தெரியுமா? என் பட்டு...., கண்ணனுக்குப் பால் கொடுக்கும்போதெல்லாம் உன்னை நினைக்காத நாளே கிடையாதுடா”, நீண்டநாள் காணாமல் போன தன் குழந்தையைக் கண்டெடுத்த தாயாக பேசிக் கொண்டே இருந்தாள் திவி.

அஞ்சலியும் அவளுக்குச் சளைக்காமல், அவள் கை எப்படி இருந்தது, கால் எப்படி இருந்தது, எப்படி அழுதாள், பால் குடித்தாள்..., அவ்வளவு ஏன், எங்கே பால் குடித்தாள் என்பது வரை கேட்டு கலவரப்படுத்தினாள்.

ஜீவா மௌனமாக மாடியேறிவிட்டான். அதை கவனிக்கும் நிலையில் கூட திவ்யா இருக்கவில்லை. தங்கம்தான் அதை கவனித்து, “திவி போதும், பொண்ணைக் கொஞ்சியதில் உலகமே மறந்துடுமா?”, சலித்தார் தங்கம்.

“இல்லம்மா....”, மேலே எதையோ சொல்லப் போனவள், அனைவரும் சந்தோசமாகவும் துக்கமாகவும் அவளைப் பார்ப்பதை உணர்ந்து ஜீவாவைப் பார்க்க, அவன் இருந்த இடம் வெறுமையாக இருந்ததைப் பார்த்து துணுக்குற்றாள்.

தங்கம் மாடியைப் பார்க்க, சங்கடமாகப் புன்னகைத்துவிட்டு, “அஞ்சும்மா அம்மா இன்னும் நிறைய சொல்லுறேன்..., நீங்க இப்போ, பாட்டி, அத்தையோட இருந்து சாப்பிடுங்க. அம்மா, அப்பாவைக் கூட்டி வாறேன்”, அஞ்சலியும் புரிந்துகொண்டு அவர்களோடு இருந்தாள்.

மாடியேறிய திவ்யாவுக்கு, எப்படி ஜீவாவை எதிர்கொள்ளப் போகிறோம் என்ற தயக்கம் எட்டிப் பார்த்தது. ஆனாலும் அதையெல்லாம் உதறிவிட்டு, அறைக்குச் சென்றாள். அங்கே அறை வெறுமையாக இருக்க, பால்க்கனிக் கதவு திறந்திருந்தது.

பொதுவாக ஜீவா, அந்த பால்க்கனி கதவைத் திறக்க அனுமதிக்க மாட்டான். அதற்கு ஒரே காரணம்தான். அந்த பால்க்கனி, அவர்கள் அறைக்கும் பக்கத்து அறைக்கும் பொதுவாக, நல்ல விஸ்த்தாரமாக இருக்கும்.

அங்கே சென்றால், அந்தப் பக்கத்து அறையின் கதவைப் பார்க்கவேண்டி இருக்குமே என்ற எண்ணத்தில், அதைத் திறக்கவும் மாட்டான், அவன் செல்லவும் மாட்டான். இன்று அவன் அங்கே இருக்கவே, வேகமாக அவன் அருகில் சென்று, தோளைத் தொட்டாள்.

அமைதியாக உள்ளே வந்து அமர்ந்துகொண்டான். அவன் மனதில் என்ன நினைக்கிறான் என்று தெரியாமல் கலங்கினாள் திவி. ஆனாலும் தங்கம் இன்று பேசியது இருவரின் மனதிலும் பெரிய தாக்கத்தையே ஏற்படுத்தி இருந்ததால், யார் முதலில் பேசுவது எனத் தயங்கினர்.

“திவி..., உனக்கு நான் மனதார நன்றி சொல்லாத நாளே கிடையாது. உன்னைத் தேடினாலும், உன் முகத்தில் எப்படி

முழிப்பேன் என்றத் தயக்கம் எனக்கு ரொம்ப இருந்துது. ஆனால் இப்போ அந்தத் தயக்கம் கொஞ்சம் கூட இல்ல.

“ஏன்னா..., எது நடக்கணுமோ அதுதான் நடந்திருக்கு. அஞ்சலியைச் சுமந்தது வேண்ணா எவளோ இருக்கலாம். அவளுக்குத் தாய்ப்பால் கொடுத்தது நீ, இப்போ அவளோட அம்மா நீ. அவளோட அப்பா நான்...

“நான் உனக்கு நன்றி சொல்லியே ஆகணும்..., ஆனா....”, சொன்னவன், எழுந்து திவியின் அருகில் வந்து, அவள் கண்களுக்குள் ஊடுருவினான்.

திவியின் இமைகள் படபடவென அடித்துக் கொண்டது. இதயம் அதைவிட அதிகமாகத் துடித்தது. அடிவயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்கும் உணர்வு. இவை அனைத்தையும் புதிதாய் உணர்ந்தாள்.

“திவி..., எனக்கு உன்னை இறுக்க கட்டிக்கணும் போல இருக்கு...”, அவளுக்குத் தகவல் சொன்னவன், அவளை நெருங்கி அணைத்துக் கொண்டான். மென்மையாக துவங்கிய அவன் இறுக்கம், நேரமாகையில் அவள் எலும்புகள் உடையும் அளவு இறுகியது.

தானும் அவனைத் தழுவிக் கொண்டாள். அவளுக்கு இது மட்டும் போதாது..., இன்னும் அவனிடமிருந்து எதுவோ வேண்டுமென்று மனம் ஏங்கியது. அவளை இறுக அணைத்து அவன் விலகும் வேளை, அவள் முகத்தில் தெரிந்த பரிதவிப்பு, அவனைத் தேக்கியது.

அவனுக்கு எதுவோ புரிவதுபோல் இருக்க, அவள் கண்களில், பூவால் ஒத்தடம் இடுவதுபோல் இதழ்களை ஒற்றி எடுத்தான். அவளிடம் எதிர்ப்பு இல்லாமல் போகவே, அவன் தேடல் நெற்றி, கன்னம் எனத் தொடர்ந்தது.

ஆரஞ்சுச் சுளையாக அவ்வளவு நெருக்கத்தில் அவள் இதழ்களைப் பார்த்தவன், அதைச் சுவைக்கும் வேகம் எழ,

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் இதழ்க்களில் தன் இதழ்களைப் பொருத்தினான்.

திவ்யாவின் விழிகள் தானாக மூடிக் கொண்டன. ஒரு முழுமையான முத்தம் ஒருவருக்கொருவர் பரிமாறப் பட்டது. இவள் உன் மனைவி, இவன் உன் கணவன்..., தங்கத்தின் குரல் இருவர் காதிலும் ஒலிக்க, காதலாகப் பரிமாறப்பட்டது இந்த இதழ் தீண்டல். இருவரின் இதழ்கள் பிரிந்தபொழுது, இதயம் இடம்மாறியிருந்தது.

தணிவு - 26

இனியென்ன தடை, என்னிடம்

இருந்து உன்னைப் பிரிக்க

நான் நீயாகிய பிறகு.

அடுத்து வந்த நாட்கள் மிகவும் இனிமையாகக் கடந்தன. திருமண வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். ஒரு ஆணும் பெண்ணும் உடலால் இணைவது மட்டுமல்ல, மனத்தால் ஒன்றிணைந்து வாழ்வதுதான் வாழ்க்கை என்பதை நிரூபித்தார்கள் ஜீவாவும் திவ்யாவும்.

சமையல் வேலையை முழுதாக முத்து கவனித்துக் கொள்ள, திவ்யாவிற்கு மூன்று குழந்தைகளைக் காலையில் பள்ளிக்கும், அலுவலகத்துக்கும் அனுப்புவதுதான் வேலை. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் வேளை, அவர்களுக்கு முத்தம் கொடுத்து அனுப்புவாள் திவ்யா.

அதை தினமும் அமைதியாகப் பார்ப்பவன், “அதென்ன அவங்களுக்கு மட்டும் கொடுக்குறது...”, ஒரு நாள் கேட்டுவிட்டான்.

கொஞ்சம் திகைத்தாலும், “நான் தான் கொடுக்கணும்னு சட்டம் ஏதாவது இருக்கா என்ன?”, வேகமாகக் கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் திவ்யா.

“ஓ..., அப்படி ஒண்ணு இருக்கோ?”, அவன் பார்வையின் மாற்றம் உணர்ந்து, அங்கிருந்து விலகப் போனவளை, சட்டென இழுத்து, கன்னத்தில் இதழ் பதித்து விடுவித்தான்.

இதைப் பார்த்த கண்ணனும் அஞ்சலியும் கைகொட்டிச் சிரித்தார்கள். “உத வாங்கப் போறீங்க ரெண்டு பேரும். உங்களுக்கு, எங்கே எதைச் செய்யணும்னு விவஸ்தையே கிடையாதா?”, குழந்தைகளையும், அவனையும்

கடிந்துகொண்டாலும், முகம் சிவப்பதைத் தடுக்க முடியவில்லை.

அதேபோல் இரவிலும், அவனுக்கு முதுகு காட்டிப் படுத்திருக்கும் திவ்யா இப்பொழுது, அவன் பக்கம் திரும்பிப் படுத்துக் கொள்வாள். இருவரின் பார்வையும் தழுவிக் கொள்ளும். திவ்யா அவனுடனான வாழ்க்கைக்குத் தயார்தான்.

ஆனால் ஜீவாதான் விலகியே இருந்தான். அவனுக்கு, அவள் மாற்றம் புரியவில்லை என்பதுதான் சரியாக இருக்கும். அவளால், தன்னோடான நெருக்கத்தை ஏற்க முடியாது என அவன் நினைத்தான்.

நான்கு மாதம் தானே ஆகியிருக்கிறது, இன்னும் மாதங்கள் கடக்கட்டும் என அவன் காத்திருந்தான். ஆனால் திவ்யாவிற்கு அந்தத் தயக்கங்கள் எதுவும் இல்லையாகையால், மெதுவாக அவனோடு இணைய முயன்றாள்.

திவ்யா, இரவுகளில் அவனை மெதுவாக உரசிக் கொண்டு, அவனைக் கட்டிக்கொண்டு, தன் நெருக்கத்தை அவனுக்கு உணர்த்தியவாறே உறங்கினாள். ஜீவாவிற்கு, அவளது இந்த செய்கைகள் முதலில் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

அதன் பிறகு அவன் நாடி நரம்புகளில் புது விதமான உணர்வுகளை ஊட்டியது. அவையும் கட்டுக்குள்ளே இருந்ததால் அதையும் ரசித்தான். அதற்குமேல் அவன் ஆண்மையைச் சோதிக்கும் விஷயங்களை அவன் யோசிக்கக் கூடத் தயாராக இல்லை.

ஆனால் திவ்யா குழம்பிப் போனாள். தன் நெருக்கத்தில் அவன் தடுமாறவில்லை, என்பதை அவள் நன்கு உணர்ந்தே இருந்தாள். அவனைக் கவரும் விதத்தில் தான் இல்லையோ என மனதுக்குள் இப்பொழுதெல்லாம் மறுகினாள்.

அந்தப் ப்ரியா மிகவும் அழகாக இருப்பாள் என்று முத்து சொன்னது வேறு அவளை அதிகமாகக் கலங்கடித்தது. அவளைப்போல் தான் அழகாக இல்லை, எனவே அவன் மனதைத் தான் கவரவில்லை என மனம் வாடினாள்.

அவனது நடவடிக்கைகளில் நாளுக்கு நாள் அன்பும், பாசமும், அக்கறையும் கூடியதே தவிர குறையவில்லை. எனவே அவளால் ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவித்தாள்.

மாதாமாதம் அவளை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று, அவள் உடல்நிலையில் காட்டும் நலனில் கூட மாற்றம் இருக்கவில்லை. தனது எந்த நெருக்கமும் அவனை 'அந்த' விதத்தில் கவரவில்லை என்பதை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

சந்தோஷ மிகுதியில், அவன் இதழ்கள் அவளைத் தீண்டும்போழுது கூட, அவன் கைகள் அவள் இடையை விட்டு நகராததைக் கண்டு துவண்டாள். அவனுக்குத் தன்மேல் கொஞ்சம் கூட காமம் எழவில்லையா? ஏன்...? இந்தக் கேள்வி அவளை வண்டாகக் குடைந்தது.

எவ்வளவுதான் அவனோடு சகஜமாகப் பழகினாலும், படுக்கை பற்றிய பேச்சை அவளால் அவனோடு பேச முடியவில்லை. அதை அவன்தான் பேசவேண்டும் என்று விரும்பினாள். சிலநேரம் பெண்மைக்கே உரிய நாணம் அவளைத் தடுத்தது.

திவ்யா வீட்டைப் பூந்தோட்டமாக மாற்ற, ஜீவாவின் வாழ்க்கை வண்ண மலர்களால் பூத்துக் குலுங்கியது. பழைய ஜீவா திரும்பியிருக்க, தொழிலின் வளர்ச்சி ஏறுமுகமாகவே இருந்தது. கணேஷுக்கு, அவன் வீட்டின் அருகில் விலைக்கு வந்த பங்களாவை வாங்கிக் கொடுத்துவிட்டான்.

ஆனாலும், ஹேமா, கணேஷ் இருவருமே உறங்க மட்டுமே அவர்களது வீட்டிற்குச் சென்றார்கள். தங்கம் நடத்திய பள்ளியை வேறு ஒரு பெரிய பள்ளியுடன் இணைத்து

விட்டதால், அதுவும் அவர்கள் கட்டுப்பாட்டில் சிறப்பாகவே போய்க்கொண்டு இருந்தது.

ஹேமா கணேஷ் இருவரின் திருமணம் முடிந்து நான்கு மாதங்கள் வெற்றிகரமாக ஓடிவிட்டது. திவ்யா, ஜீவாவிற்கு ஐந்து மாதங்களை எட்டியது. இரு ஜோடிகளுமே ஒருவருக்கொருவர் அன்பிலும், பாசத்திலும், அரவணைப்பிலும் போட்டி போட்டார்கள்.

தங்கத்திற்கு, பேரன் பேத்தி வேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் அதிகரித்தது. ஹேமாவிடம் கேட்டாலோ பிடிகொடுத்துப் பேசவில்லை.

திவ்யா, ஜீவா இருவரும் வாழ்க்கையையே துவங்கவில்லை என்பது அவருக்குத் தெரியும். இந்த நிலையில் அவர்களிடம் எப்படி, பேரன் பேத்தியை அவர் எதிர் பார்க்க.

அன்று ஹேமாவிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார். அதற்கு ஹேமாவோ, “நாலு மாசம் தானேம்மா ஆச்சு. எங்களுக்கு முன்னாடியே திவ்யாவுக்குக் கல்யாணம் ஆச்சு இல்ல, அவங்ககிட்டே முதல்ல கேளுங்க. அதுக்கு பிறகு நாங்க பெத்துத் தாறோம்”, சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

தங்கத்திற்கு, அவர்கள் ஒரு முடிவோடு இருப்பது தெரிந்துவிட்டது. “ஹேமா..., உனக்கு வயசு ஏறிட்டே போகுது. ரொம்பநாள் என்னால் காத்துட்டுருக்க முடியாது”, அவர் குரல் அவளைத் தொடர்ந்தது.

அதைக் கேட்ட அஞ்சலி, “எதுக்கு பாட்டி...?”, எனக் கேக்க, அவரும் சும்மா இருக்காமல், “உனக்கு, தம்பி இல்லன்னா தங்கச்சி வேண்டாமா? அதுக்குதான் ஹேமா அத்தைட்ட கேட்டுட்டு இருக்கேன்”, விளையாட்டாகச் சொன்னார்.

அஞ்சலி அதையே பிடித்துக் கொண்டாள். அதன் பிறகு, ஹேமாவிடம் விளையாடும் பொழுதெல்லாம், எனக்குத்

தம்பி வேணும், தங்கச்சி வேணும் எனத் தொல்லை செய்தாள். ஹேமாவோ, தன் தாயை முறைத்துப் பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாமல் அமைதியானாள்.

ஹேமாவிற்குப் பயம், எங்கே உன் அம்மாவிடம் கேள் என்று அவள் சொல்லிவிட்டால், அதையே திவ்யாவிடம் ஒப்புவித்தால், ஜீவா, திவ்யா இருவரின் இயல்பான நெருக்கம் தொலைந்து போகுமோ என அஞ்சியவாறு பேசாமல் இருந்துவிட்டாள்.

திவ்யாவும், ஜீவாவும் எவ்வளவு பெரிய போராட்டமான வாழ்க்கைக்குப் பிறகு, தங்கள் புது வாழ்வுக்குள் இணைந்திருக்கிறார்கள்.

அப்படியிருக்கையில் திருமணம் முடிந்த சில மாதங்களிலேயே அவர்களிடம் குழந்தையைப் பற்றி பேசினால், அதுவே அவர்களுக்குப் புது விதமான மன உளைச்சலைக் கொடுத்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமுடன் இருந்தார்கள் ஹேமாவும், கணேஷும்.

ஹேமா, திவ்யாவுடனான நட்பின் அடிப்படையில் நினைக்க, கணேஷோ..., தன் தவறுக்கான பிராயச்சித்தம் என்ற முறையில் நினைத்தான். எது எப்படி இருந்தாலும், ஹேமாவும், கணேஷும், அவர்கள் வாழ்க்கைத் துவங்கிய பிறகுதான், தங்களுக்கான வாரிசைப் பெற்றுக் கொள்வது என்று முடிவு செய்திருந்தார்கள்.

அதை வெளிப்படையாகத் தாய்க்குத் தெரியப்படுத்தக் கூட ஹேமா விரும்பவில்லை. நியாயவாதியான தங்கம், ஒவ்வொருவரின் வாழ்வும் தனித்தனி என்று விவாதிக்கவே செய்வார். எனவேதான், தங்களது தியாகத்தைக் கூட வெளிப்படுத்திக் கொள்ளாமல், மறைத்தே வைத்திருந்தார்கள்.

அன்று ஜீவா அலுவலகத்தில் இருந்து வந்தபொழுது, ஹேமா குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்

கொண்டிருந்தாள். ஜீவா திவ்யாவைத் தேடியவாறு மாடியேற, அங்கே பக்கத்து அறையில் அவள் இருப்பது தெரிந்தது.

கோபம் தலைக்கேற அங்கே சென்றவன், அந்த அறையின் உள்ளமைப்பே மாறியிருக்க, திகைத்து நின்றுவிட்டான். அத்தோடு இல்லாமல், இரு அறைகளையும் இணைக்கும் வண்ணம், ஒரு ஓரத்தில் வழி அமைக்கப்பட்டு, சிறிய கதவும் பொருத்தப் பட்டிருப்பதைக் கண்டான்.

அந்த அறைக்குள்ளே செல்லத் தயங்கும் அவனது கால்கள், அன்று தயக்கமே இல்லாமல் நுழைந்தது. அறையின் உள்ளலங்காரம், மிக்கி மௌஸ், டாம் அண்ட் ஜெர்ரி, டோரா, போஹ்(pooh), இப்படியான கார்ட்டூனால் நிறைந்திருந்தது.

அங்கே இருந்த ஷெல்பின் கதவுகள் கூட, சின்ட்ரெல்லா, பார்பி டால், ஸ்பைடர் மேன், ஐஸ் மேன், இப்படியான உருவங்கள் பதித்த கதவுகளாக மாறி இருந்தன. இரண்டு கட்டில்கள் பக்கத்துக்கு ஒன்றாகப் போடப்பட்டு, சிறிய மேசை, சேர் கூடப் பொருத்தப் பட்டிருந்தது.

தரை முழுவதும் கூட, டைல்ஸ் மாற்றப் பட்டிருந்தது. ரூஃபில், ரேடியத்தினால் ஆன, சூரியக் குடும்பம்(solar systam) பற்றிய ஸ்டிக்கர் ஓட்டப் பட்டிருந்தது.

இது, ஒரே நாளில் முடிந்திருக்கக் கூடிய வேலையாக அவனுக்குத் தோன்றவில்லை. அவர்கள் ரூமுக்குச் செல்ல இருந்த கதவு மட்டுமே இன்று செய்த கடைசி வேலையாக இருந்தது அவனுக்குப் புரிந்தது.

அறை முழுக்கச் சுழன்ற அவன் விழிகள், இறுதியாகவே திவ்யாவைக் கண்டு கொண்டன. அந்த அறையின் பாத்ரூமுக்குள் அவள் இருப்பது தெரிய, அங்கே எட்டிப் பார்த்தான்.

பாத்ரூமைக் கழுவத் தூக்கிச் சொருகிய சேலை, கலைந்த தலை, முந்தானை ஒரு பக்கமாக விலகியிருக்க, முதல்

முறையாக அவனது பார்வையில் மெல்லிய சலனம். இன்றுவரை அவளது முகத்தை மீறி, அவன் பார்வையை அவன் தாழ்த்தியது கிடையாது.

ஆனால் இன்று...., வீட்டுவேலை, சமையல் வேலை, தோட்ட வேலை, டிரைவர் என அனைத்திற்கும் ஆட்கள் இருந்தாலும், தங்கள் பிள்ளைகளின் அறையை, அவளே பார்த்துப் பார்த்து செய்திருக்கும் அலங்காரம்,

அதைவிட, வீட்டுக்கு உரிமையாளராய், எஜமானியாய், சொந்தக்காரியாய், வரிந்துகட்டிக் கொண்டு, வேலை செய்த விதம், அப்படியே பச்சக் என்று பசை போட்டதுபோல் மனதுக்குள் ஒட்டிக் கொண்டாள்.

அவள் இவன் வந்ததை கவனிக்காததால், தண்ணீர் ஊற்றி, சுவற்றிலும், தரையிலும் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள். அதில் அவள் உடலில் தெறித்த ஈரமும், உடையோடு ஒட்டிய ஆடையும், கண்ணில் படவும், அவனது ஆண்மை முதல் முறையாக விழித்துக் கொண்டது.

அவள் மேனியில் இருந்து பார்வையை விலக்க முடியாமல் அவளை அங்குலம் அங்குலமாக ரசித்தான். திவ்யாவிற்கு ஏதோ உள்ளுணர்வு உந்த, குனிந்திருந்தவள், சட்டென நிமிர்ந்து பார்க்க, இதை எதிர் பார்க்காத ஜீவா, சட்டெனக் கோபத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.

“இந்த ரூமுக்குள்ளே உனக்கென்ன வேலை? அதைவிட, இதையெல்லாம் நீ ஏன் செய்யிற? அதான் அந்த ஸ்கூல் ஆயா இப்போ இங்கேதானே இருக்காங்க. அவங்களைக் கூப்பிட்டுச் செய்யிறதை விட்டு, என்ன இதெல்லாம்...?”, முயன்று, தன்னைக் கோபமாகக் காட்டினான்.

அவள்மேல் மேயத் துடித்தப் பார்வையை, அவள்பக்கம் செல்லாமல் காப்பதே, அவனுக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. அவனது வருகையே திவ்யாவிருக்கு எதிர் பார்க்காத அதிர்ச்சி என்றால், அவனது கோபம் இன்னும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

பின்னர்தான், அவன், தான் வேலை செய்வதைத்தான் குறிப்பிடுகிறான் என்பது புரிய, “நான் இங்கே எந்த வேலையும் செய்யலை. ஆயாதான் ஆசிட் போட்டு இங்கே இருந்த கறையெல்லாம் போக வச்சாங்க.

“பசங்க யூஸ் பண்ணப் போறது, அதான் நான் சும்மா தண்ணி விட்டுக் கொஞ்சம் அலசினேன் அவ்வளவுதான். இப்போ இந்த ரூமுக்கு என்னக் குறைச்சல்? உள்ளே வந்தாலே, என்னவோ டிஸ்னிலாண்ட் குள்ளே வந்த மாதிரி இருக்கு.

“ஏன் உங்களுக்கு இப்பவும் பிடிக்கலையா...? உங்களுக்கு சர்ப்ரைசா இருக்கணும்னுதான் இவ்வளவு நாள் சொல்லவே இல்லை. பசங்களுக்கு கூடச் சொல்லலை. நான் செஞ்சது உங்களுக்குப் பிடிக்கலன்னா பழையபடி பூட்டியே வைங்க”, இடுப்பில் சொருகியிருந்த சேலையை உருவி இறக்கி விட்டுவிட்டு, சொருகியிருந்த முந்தானையை உதறிவிட்டு, கோபமாக அங்கிருந்து வெளியேறினாள்.

அவளது செய்கைகளை எச்சில் கூட்டி விழுங்கியவாறே பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவா. ‘ஜீவா உன் பார்வை சரியே இல்லை’, தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அவள் பின்னாலேயே தங்கள் அறைக்குச் சென்றவன், “நான் இப்போ பிடிக்கலன்னு சொன்னேனா? எனக்கு ரொம்பப் புடிச்சு இருக்கு. அப்படியே அந்த முன்னாடிக் கதவையும் மாத்திட்டா பெர்பெக்ட்டா இருக்கும்.

அவன் சொல்லி முடிக்கவே, “திவ்யா, நீ கேட்ட டோர் வந்து இருக்குப் பாரு”, ஹேமாவின் குரல் கீழே இருந்து கேட்கவும் சரியாக இருந்தது.

ஜீவாவின் பார்வை திவ்யாவிடம் கேள்வி கேட்க, “எதையும் அரை குறையா செய்யக் கூடாதே. நீங்க லேட்டா வருவீங்கன்னு நினைச்சேன். என்னோட சஸ்பென்ஸ் எல்லாம் போச்சு”, சிணுங்கினாள்.

‘ஹையோ கொல்றாளே....’, அவன் நெஞ்சம் அடித்துக் கொண்டது.

அதன் பிறகு நொடியில் வேலை முடிய, குழந்தைகள் இருவருக்கும் ஒரே கொண்டாட்டம். கண்ணன் கூட, தன் உற்சாகத்தை வெளிப்படுத்தினான். “அப்பா சூப்பர்ப்பா..., லவ் யூப்பா....”, அஞ்சலியை மாதிரிச் சொல்லி, அவன் கன்னத்தில் முத்தமிட்டான்.

அதற்குக் காரணம், ஜீவாதான் இந்த ஏற்பாடு அனைத்தையும் செய்ததாக, திவ்யா அவர்களிடம் சொன்னாள். ‘ஏன்..?’, என்ற பார்வையுடன் ஏறிட்ட ஜீவாவைப் பார்த்து, கண்களைச் சிமிட்டி, மோகனமாகப் புன்னகைத்தாள்.

அவளது செய்கையில் இன்னும் தலைக் குப்பற விழுந்தான் ஜீவா. அதன் பிறகு, ஜீவாவின் பார்வைகள் திருட்டுத் தனமாக திவ்யாவைத் தொடர்ந்தன.

இரவில் படுக்கப் போக, குழந்தைகளை அவர்களது அறைக்குச் சென்று படுக்கச் சொன்னாள். என்ன தேவை என்றாலும், இந்தக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வருமாறு அவர்களுக்குச் சொல்லவே, அவர்களும் புரிந்து கொண்டார்கள்.

முதல் நாள் ஆகையால், அவர்கள் உறங்கும் வரை திவ்யாவும் ஜீவாவும் அவர்களுடன் இருந்தார்கள். அவர்கள் உறங்கியவுடன், தங்கள் அறைக்கு வந்தார்கள். திவ்யாவின் பார்வைகள் ஜீவா அறியாதவாறு அவனைத் தொடர்ந்தது.

அதற்குக் காரணம், சாப்பாட்டு மேசையில் சாப்பிடும் பொழுது, ஜீவா தன்னை வித்தியாசமாகப் பார்ப்பதை அவள் உணர்ந்ததுதான் காரணம். அறைக்குள்ளும், பைல் பார்ப்பதாக அவன் அமர்ந்து இருந்தாலும், அவன் பார்வை தன்னைத் தொடர்வதை உணர்ந்தாள்.

அவளால் இயல்பாகவே இருக்க முடியவில்லை. சின்னப் படபடப்பு மனதுக்குள். அதை மறைத்தவாறே, பாத்ரூம் சென்று இரவு உடைக்கு மாறி வந்தாள்.

கட்டிலில் அவன் அருகில் சென்று அமரும் வேளையில் அவன் பார்வை, தன்மேல் தடுமாறிப் பாய்வதைக் கண்டு, திவ்யாவின் தேகம் சிலிர்த்தது. எதுவும் சொல்லாமல் படுத்துக் கொண்டாள். ஜீவாவால்தான் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

தொடர்ந்த நாட்களிலும், ஜீவா அவன் வேலையைச் சரியாகச் செய்ய, அஞ்சலியிடம் சிக்கிக் கொண்டான். அன்று ஹாலில் அமர்ந்தவாறே கிச்சனில் நின்ற திவ்யாவை ரசிக்க, “என்னப்பா..., அம்மாவையே பாத்துட்டு இருக்கீங்க?”, அஞ்சலியின் கேள்விக்கு, “அப்படில்லாம் இல்லடா..”, சொல்லிவிட்டு அங்கிருந்து வேகமாக நகர்ந்துவிட்டான்.

அஞ்சலியோ நேராகக் கிச்சனுக்குச் சென்றவள், “அம்மா, அம்மா..., அப்பா உங்களையே பாத்துட்டு இருந்தாங்கம்மா. நான் என்னன்னு கேட்டால், இல்லன்னு சொல்லிட்டுப் போய்ட்டாங்க. நீங்க என்னன்னு கேளுங்க வாங்க...”, வந்து அவள் கையைப் பிடித்து இழுக்க,

அங்கே அவளுடன் இருந்த ஹேமா, “யாம் பெற்ற இன்பம், பெறுக இவ் வையகம்”, சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரிக்க, திவ்யாவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

“அஞ்சும்மா நீ போய் விளையாடு..., அம்மா அப்பாகிட்டே நைட் கேக்குறேன்”, அவளைச் சொல்லி அனுப்பிவிட்டு,

“ஹேமா, எதுக்கு இப்போ இப்படிச் சிரிக்கிற. என் ஆளாவது, தூரமா உக்காந்து பாக்க மட்டும்தான் செய்யிறார். உன் ஆளை மாதிரியா..., ஓடி வந்து, இடுப்பைப் பிடிச்சுக் கிள்ளி, இன்னும்....”, ஹேமா பாய்ந்து வந்து திவ்யாவின் வாயை அடைத்தாள்.

“திவ்யா, நான் எதுவுமே கேக்கலை போதுமா? அம்மாவும் பொண்ணுமா சேர்ந்து என் மானத்தை வாங்குங்க. இந்த கணேஷ் செய்யிறது கொஞ்சம் கூட சரியே இல்லை. என்னை மாட்டி விட்டுட்டு அவர் கூலா அலையிறார்”, பொய்யாகச் சலித்துக் கொண்டாள்.

“வேண்ணா ஒண்ணு செய்யலாம், இனிமேல் அஞ்சலியை, கணேஷ் கிட்டே எல்லாம் சொல்லச் சொல்லலாம். விஷயம் முடிஞ்சுடும்,என்ன சொல்லுற?”, திவ்யா கேட்க, ஹேமா அவளைக் கையெடுத்து கும்பிட்டாள்.

“உங்க உதவிக்கு ரொம்ப நன்றி. ஆனால் இதை நானே பாத்துக்கறேன். திவ்யா..., இருந்தாலும் எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. சீக்கிரமே நல்ல செய்தி எதிர்பாக்குறேன் உன்கிட்டே இருந்து”, பூடகமாகச் சொல்ல, அழகாக நாணினாள் திவ்யா.

அதன் பிறகு, முழுதாக இரண்டு வாரங்கள்..., ஜீவா, திவ்யாவின் மனதில் தோன்றியிருந்த தாழ்வு மனப்பான்மையைக் கிள்ளி எறிந்தான். திவ்யாவோ இரவுகளில் அவனோடு ஒண்டிக் கொண்டாள்.

‘நீ எனக்கு வேண்டும்’ என்பதைச் சொல்லாமல் சொன்னாள். ஆனால் ஜீவாவின் நிலைதான் மோசமாகிக் கொண்டே இருந்தது. அவளது மென்மையான தொடுகையையே தாங்க முடியாமல் ஆனவன், அவளது தேகம் உரச உறங்கும் விதத்தை, சாதாரணமாக எடுக்க முடியாமல் தவித்தான்.

முன்பு வீணையின் நாதமாக மீட்டிய உணர்வு, இப்பொழுதெல்லாம் நெருப்பிலிட்ட வீணையாக தகித்தது. அவனது ஆண்மை விழித்துக்கொண்டுப் போராடியது. அதை உணராமல் இருக்கும் அளவு, எதுவும் தெரியாதவள் இல்லையே திவ்யா.

“ஜீவா என்ன....?”, மெதுவாகக் கேட்க, “ஒண்ணுமில்லை, தூங்கு”, அவன் பதில் சட்டென வந்து விழும்.

இரண்டு வாரம் தாக்குப்பிடித்தவன், அடுத்த நாள், திவ்யா தன்னை நெருங்கினாலே தன் தவிப்பைக் கண்டுகொள்வாள் என்பது புரிய, அவளைப் பார்க்காமல் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அவன் தனக்காகத் தவிப்பதை, இரண்டுவாரமாக திவ்யாவும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாள். ஆனால் அவளால் தன் அடைக்கலத்தை அவனுக்கு உணரவைக்க முடியவில்லை. அவள் முயன்றாலும், ஜீவா தன்னைக் கட்டுப்படுத்துவதிலேயே கவனமாக இருக்க, திவ்யாவின் முயற்சிகள் தோல்வியைத் தழுவின.

ஜீவாவோ, எங்கே அவளைத் தொட்டால், அது இப்பொழுது இருக்கும் தங்கள் உறவில் விரிசலைத் தந்துவிடுமோ என்றே அஞ்சினான். அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவேதான் தன்னைக் கட்டுபடுத்தப் போராடினான்.

அன்று என்னவோ, திவ்யா தனக்கு வேண்டும், அதுவும் முழுதாக வேண்டும் என்று உணர்வுகள் பேயாட்டம் போட்டன. ப்ரியாவின் அருகில் கூட, தான் இப்படி, ஒரு நாள் கூட உணர்ந்ததில்லை என்பதை அதிர்வாக உணர்ந்தான்.

அவன் போராட்டம் தாங்க முடியாமல், வேகமாக எழுந்து அமர்ந்தவள், அவன் தோள் தொட்டு தன் பக்கம் திருப்பினாள்.

“என்னன்னு சொல்லுங்க ஜீவா..., சொல்லாமல் இருந்தால் எனக்கு எப்படித் தெரியும். எதையோ மனசுக்குள் போட்டுத் தவிக்கிறீங்களே, என்ன அது...?”, அவன் முகத்தோடு முகம் நோக்கிக் கேட்டாள்.

ஜீவாவின் பார்வை அவளை முழுதாக ஒரு நிமிடம் பார்த்துவிட்டு, “நீ எனக்கு வேணும்னு, நான் உன்கிட்டே எப்படிச் சொல்லன்னு தெரியாமல்தான் தவிக்கிறேன் திவி...”, சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

ஜீவா சொல்லிச் சென்ற வார்த்தைகள் அவள் காதில் ஒலிக்க, பிரம்மைப் பிடித்து அமர்ந்திருந்தாள் திவ்யா.

தணிவு - 27

நெஞ்சோடு கலந்த உன் நேசம்

உணர்வோடு கலந்த உந்தன் பார்வை

உயிரோடு கலந்த உந்தன் உறவு

நீயாகினேன் நான்.....

“நீ எனக்கு வேணும்னு, நான் உன்கிட்டே எப்படிச் சொல்லன்னு தெரியாமல்தான் தவிக்கிறேன்”, இந்த வார்த்தைகளைத் தன் கண்களைப் பார்த்துச் சொல்லிவிட்டுச் சென்ற ஜீவாவின் கண்களும், பார்வையும், வார்த்தைகளும் திவ்யாவை திகைக்க வைத்தன.

அது ஒரு நிமிடம் தான். அவன் வார்த்தைகளை கிரகித்த பிறகு, என்னவோ ஒரு ஆனந்தக் குறு குறுப்பு மனதுக்குள். ஜீவா எங்கே, என விழிகள் தேட, பால்க்கனிக் கதவு திறந்திருப்பது பார்வையில் விழ, எழுந்து அவனைத் தேடிச் சென்றாள்.

வெளியே ஸ்ட்ரீட் லைட்டைப் பார்த்தவாறு, தனக்கு முதுகு காட்டி அவன் நின்றிருப்பது தெரிந்தது. திவ்யாவின் வரவை உணர்ந்தாலும், அவளைத் திரும்பியும் பாராமல் நின்றிருந்தான்.

அவனை நெருங்கிச் சென்று, சற்று இடைவெளி விட்டு, அவன் முதுகின் பின்னல் நின்று, “ம்கும்....”, தொண்டையைச் செருமினாள்.

அவள் தொண்டையைச் செருமவே, அப்பொழுதுதான் அவளைப் பார்ப்பவன்போல் நிதானமாகத் திரும்பிப் பார்த்தவன், பால்க்கனிக் கதவில் சாய்ந்தவாறு அவள் நிற்பதைப் பார்த்தான்.

“என்னமோ கேட்டீங்க....”, அவள் கண்கள் அவனை சந்திக்கத் தயங்கி, பார்வையைச் சுழற்றியவாறு,

மெதுவாகக் கேட்டாள்.

இதைக் கேட்கும் முன்பே, உடல் முழுவதும் மெல்லிய ஆனந்தப் பரபரப்பும், சிலிர்ப்பும் ஓடி மறைவதை இருவரும் உணர்ந்தார்கள்.

“திவி....”, அவனால், உணர்ச்சி வேகத்தில் தயங்காமல் கேட்க முடிந்ததை, கொஞ்சம் நிதானத்துக்கு வந்த பிறகு கேட்க முடியவில்லை.

அவள் பார்வையை அவன் முகத்திலேயே நிலைக்கவிட, “இல்ல திவி...., அப்போ ஏதோ மனநிலையில்....., இப்போ அப்படித் தோணலை...”, கொஞ்சம் குற்ற உணர்ச்சியும், ஏமாற்றமும் அவன் குரலில்.

“அப்போ என்னத் தோணுச்சு, இப்போ என்னத் தோணலை.....”, திவ்யாவின் குரலில் கொஞ்சம் கோபம்.

“அப்போ, உடனே நீ வேணும்னு தோணிச்சு....., இப்போ, நான் என்னைக் கட்டுப் படுத்திக்கிட்டேன்...., எனக்கு இது பழக்கம்தான்.....”, இப்பொழுது வேதனை அவன் குரலில்.

“அப்போ, இனிமேல் நானும் பழகிக்கிறேன்.....”, அவன் முன்பு சொன்ன அதே வார்த்தைகளை, அவள் திரும்பப் படிக்க, சரேலென நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

“நீ என்ன சொல்லவாற? எனக்குப் புரியலை....”.

“இனிமேல் என்னோட உணர்வுகளையும், ஆசையையும், நானும் கட்டுப் படுத்திக்கிறேன்னு சொல்ல வந்தேன்...”, அவளுடைய பேச்சில் எந்தவிதத் தயக்கமும் இருக்கவில்லை.

“திவி...., நீ...., நீ....”, அவளை உடனே இறுக அணைக்கவேண்டும் என்று எழுந்த ஆவலை, அந்த நேரத்திலும் கட்டுப் படுத்தினான்.

தான் இவ்வளவு சொல்லியும், தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளும் அவனை, என்ன செய்ய என்பதுபோல் பார்க்க, அவனோ.... “வேண்டாம் திவி...., எனக்கு உன்னோட கஷ்டம் தெரியும். இன்னொரு உறவை ஏத்துக்க உனக்கு நாள் ஆகும்....., அதுவும்.... வேண்டாம்...., உன்னை எந்த விதத்திலும் கஷ்டப் படுத்த நான் தயாரா இல்லை.

“என்னோட இந்த நேரத் தேவைக்காக உன்னோட மனசைக் கட்டாயப்படுத்த என்னால் முடியாது. அப்படி செஞ்சால் என்னோட மனசே என்னை மன்னிக்காது திவி”.

“அப்போ, என்னோட தேவைக்காக நான் உங்களை அணுகுவது மட்டும் எப்படி சரியா இருக்கும் ஜீவா....”.

“திவி.... நீ என்ன சொல்லுற....?”, அவள் எப்பொழுது, தனது விருப்பத்துக்காக தன்னிடம் அணுகினாள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. எனவே அதிர்ச்சியாகக் கேட்டான்.

“என்ன நம்ப முடியலையா....? நீங்க, நான் வேணும்னு வாய் விட்டுக் கேட்டீங்க. ஆனால் நான், எனக்கு உங்களோட அணைப்பு, முத்தம் ஆறுதல், எல்லாம் தேவையா இருந்தபோது, அதையெல்லாம் சொல்லாமல் நிறைவேற்றிக்கிட்டேன் அவ்வளவுதான்”.

“என்னைச் சமாதானம் செய்ய, என்ன என்னவோ சொல்லுற திவி....”, அவனால் நம்ப முடியாமல் சொன்னான்.

“ம்ச்..., உண்மைதான் ஜீவா...., முதல் நாள் உங்க பக்கம் வந்து படுத்தேனே... அது வேண்ணா பசங்களோட கட்டாயத்துக்காக இருக்கலாம். ஆனால் அடுத்த நாளில் இருந்து, உங்க கிட்டேதான் படுக்குறேனே...., அது ஏன்...? என்னைக்காவது நீங்க யோசிச்சு பாத்து இருக்கீங்களா? அப்படி யோசித்து இருந்தால் அப்போவே தெரிஞ்சிருக்கும்.

“ஆனால் நான் யோசித்தேன்....., அடுத்து, படிப் படியா என்னோட மாற்றம்..., உங்க பக்கம் திரும்பிப் படுத்தது, உங்க கைகளுக்குள் அடங்கிக்கிட்டது, இது எல்லாம் விட...., உண்மையைச் சொல்லணும்னா..., உங்க நெஞ்சு முடியோட குறு குறுப்பும், உங்க ஆண்மையின் வாசனையும் இல்லாமல், இப்போல்லாம் என்னால் தூங்கவே முடியலையே...,

“முக்கியமா, நான் தூங்குறேனே, அது எப்படி? உங்க கையணைப்புக்குள் இருக்கிறேன் என்ற நம்பிக்கை தான். இது செக்ஸ் இல்லாமல் வேற என்ன..?

“நீங்க எனக்குத் தந்த முதல் முத்தம்....., நீங்களாவா தந்தீங்க....? நான் கேட்டேன்..., என்ன.... வாயால் கேக்கலை, என்னோட செய்கையால் கேட்டேன்....,
நிறைவேற்றுனீங்க.... அடுத்து, நாம முதல் முறையா ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக்கிட்ட முத்தம்.....

“அதுவும், என்னோட தணிக்க முடியாத தாபத்தால் நடந்ததுதான்..., என்ன, எனக்குச் சின்னச் சின்னதா ஆசையும் தாபமும் இருந்துது. எல்லாத்தையும் உங்ககிட்டே இருந்து மறைமுகமா வாங்கி, திருப்தி பட்டுக்கிட்டேன்.

“இப்போ, உங்களுக்குக் கொஞ்சம் பெருசா வந்திருக்கு...., இல்ல...., இல்ல...., அதுவும் நியாயமான ஆசைதான்....., பிறகு ஏன்....?”, தன்னால் முடிந்த அளவு மறைமுகமாகவே, தன் சம்மதத்தைச் சொன்னாள்.

“நீ என்னதான் சொன்னாலும்....., எங்கே உன்னைக் கஷ்டப் படுத்திடுவனோன்னு எனக்கு பயம்மா இருக்கு திவி....”, அவனது மறுப்பு இப்பொழுது அழுத்தமாக இல்லை.

‘டேய், இப்படி நீ தள்ளி இருக்குறதுதான் இப்போ எனக்குக் கஷ்டமா இருக்கு. உன்னை நான் முழுமையா உணரணும்னு என் மனசும், தேகமும் தவிப்பதை, உனக்கு

நான் எப்படிச் சொல்லிப் புரிய வைக்க', மனதுக்குள் அரற்றினாள்.

"அப்போ, என்னை எடுத்துக்கப் பிடிக்கலையா....?", நேரடியானத் தாக்குதல்.

"திவி...., உன்னை எடுத்துக்க....., ஏற்கனவே ஒருத்தியோட மனசைப் புரிஞ்சுக்காமலே..., நானே எடுத்துகிட்டதுதான் பெரிய பிரச்சனை ஆச்சு...., இப்பவும் எடுத்துக்க..., நீயே உன்னை....., நீயே....", கேட்பது சரிதானா என்பது புரியாமல், அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, அவள் தோளில் முகம் புதைத்து, தன்னை நிலைப் படுத்த முயன்றான்.

சிறிது நேரம் இருவரும் எதுவும் பேசவில்லை. அவன் சொல்ல வந்தது திவ்யாவிற்கும் புரிய, அவனை ஆதரவாக அணைத்தவாறு நின்றிருந்தாள். "என்னால், என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க முடியும் திவி..., வா நாம தூங்கப் போகலாம்...", அவளை அழைத்துக் கொண்டு அறைக்குச் செல்ல முயன்றான்.

அவனை நகர விடாமல் தடுத்தவள், "நான் உங்களோட கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும் போது, உங்களை விரகத்தில் தவிக்க விட்டு வேடிக்கைப் பாக்க, நான் ஒண்ணும்.....", வேகமாக அவள் வாயை மூடியவன்,

"ப்ளீஸ்.... உன் வாயால், அவளோட பேரைக் கூடச் சொல்லாதே...., அந்தத் தகுதி அவளுக்கு இல்லை....", அவன் குரல் கெஞ்சியது.

"சரி சொல்லலை....., என்னால்..., நீங்க எனக்காகத் தவிக்கிறதை, ஒரு நிமிஷம் கூடப் பாத்துட்டு இருக்க முடியாது ஜீவா...., அதுவும், என்னால் தீர்க்க முடிகிற ஒரு விஷயத்துக்காக....", அழுத்தம் திருத்தமாக உரைத்தாள்.

"இல்ல திவி.....", அவனிடம் இப்பொழுதும் தயக்கம்.

“என்ன இல்ல திவி....? என் கண்ணைப் பாத்துச் சொல்லுங்க. இப்போ நாம தூங்கப் போனால்...., என்னோட தேவை இல்லாமல் நிம்மதியாத் தூங்கிடுவேன்னு சொல்லுங்க, நாம போகலாம்.....”, அவன் முகத்தைக் கைகளில் ஏந்தி, கண்களைப் பார்த்துக் கேட்டாள்.

அவனால் பதில் சொல்ல முடியவில்லை....., உடலின் ஒவ்வொரு அணுவும், அவள் இப்பொழுதே வேண்டும் என்று அடம் பிடித்துத் திணறுகையில், எப்படி அவனால் அப்படி ஒரு பொய்யை, அதுவும் திவ்யாவின் நிம்மதிக்காக என்றாலும், சொல்ல முடியும்?

அவன் அமைதியே அவளுக்கு, அவனது தேவையை உணர்த்த, “பொய்யாக் கூட உங்களால் அப்படிச் சொல்ல முடியாத போது, ஏன் உங்களையே இப்படி ஏமாத்திக்கறீங்க....?

“என் மனசைத் தொட்டு உண்மையைச் சொல்லணும்னா..., என்னால் நீங்க கேட்ட மாதிரி...., நானே என்னை, உங்ககிட்டே கொடுக்க முடியுமான்னு தெரியலை....”, இதைச் சொல்லவும், அவன் முகம் இறுகுவதைப் பார்த்தவள்,

“ஆனா ஒரு உண்மையை உங்ககிட்டே மறைக்காமல் என்னால் சொல்ல முடியும்.... இப்போ, இந்த மனசுக்குள்ளே நீங்க முழுசா நிறைஞ்சு இருக்கீங்க...., கண்ணனை விட அதிகமா, நான் உங்களை நேசிக்கிறேன்....., ஒரு பொண்ணோட மனசைத் தொடுவதும், தீண்டுவதும்தான் ரொம்பக் கஷ்டம்.

“அப்படி ஒரு ஆண், ஒரு பொண்ணோட மனசைத் தீண்டிட்டான்னா..., அவன் அந்தப் பொண்ணோட உடம்பைத் தொடுவது ரொம்பச் சுலபம். அதனால்தான், நிறையக் காதலர்கள், தங்களோட பலவீனமான தருணங்களில் தப்பு பண்ணிடுறாங்க.

“நீங்க என்னோட மனசைத் தீண்டி ரொம்ப நாள் ஆச்சு....., என்னால் உங்களோட ‘அந்த நெருக்கத்தையும்’ ஏத்துக்க முடியும். ஒரு சதவீதம் கூட வெறுப்பு இல்லாமல்...., ஆனால், உங்களுக்கு ஒத்துழைப்பேனா என்பது தெரியலை.....”, கொஞ்சம் தயங்கினாள்.

பின்னர் அவன் காதின் அருகில் நெருங்கி, “என்னை ஒத்துழைக்க வைக்க, உங்களால் முடியாதா என்ன...? அது உங்களோட சாமர்த்தியம்....”, அவள் இதழ்கள் அவன் காதில் உரச, அவள் சொன்ன செய்தி, ஜீவாவை, சிலிர்க்கவும், அதே நேரம்..., என் திவியை எனக்கு ஏற்றவாறு மாற்ற என்னால் முடியாதா? என்ற கேள்வியையும், தான் அவள் மனதைத் தீண்டிய முதல் ஆண்மகன் என்ற கர்வத்தையும் சேர்த்தே கொடுத்தது.

திவ்யா இவ்வளவு சொன்ன பிறகும் அமைதியாக இருக்க, அவன் என்ன ஆண்மை இல்லாதவனா..? தன்னை நெருங்கி நின்றிருந்த அவளை, இடையில் தன் இரண்டு கைகளையும் கோர்த்து, தன் இடையோடு இறுக்கிக் கொண்டான்.

அவன் அணைத்ததில், ஆர்வமும், அதிர்ச்சியும் போட்டிப் போட, அவன் முகத்தைப் பார்க்க, ஒரு கையை அவள் தலையைப் பிடித்தவாறே, அவள் இதழ்களுக்கு, தன் இதழ்களை வண்டாக்கினான். முதலில் தயங்கினாலும், அவன் கழுத்தில் கை கோர்த்து, அவனோடு இழைந்தாள்.

நேரம் செல்கையில், அவளிடம் இருந்து எழும்பிய மெல்லிய முனகல்..., அவனை இன்னும் செயல்பட வைத்தது, அவன் கைகள் முதல் முறையாக, வேகமாகச் சுதந்திரம் பெற்று அவள் மேனியின் மென்மைகளில் பதிய, அவனது இந்தச் செய்கையில், வேகமாக அவனிடமிருந்து விலகினாள்.

ஆர்வமாக விளையாடும் பொழுது, தன் கைகளில் இருந்த விளையாட்டு பொம்மையை யாரோ பிடுங்கியது போல விழித்தான் ஜீவா. அவனது ஏமாற்ற முகத்தைத் தாங்க

முடியாமல், “இது பால்க்கனி...., நம்ம ரூம் இல்லை.., முதல்ல ரூமுக்குப் போகலாம்....”, அவன் நெஞ்சில் புதைந்தவாறே தவிப்பாய்ச் சொன்னாள்.

அவள் சொன்னப் பிறகுதான் தாங்கள் இருக்கும் இடம் புரிய...., அறையின் கதவைத் திறந்தவாறு, அவளையும் தூக்கிக் கொண்டு நுழைந்தான். இதுவரை அறையில் நுழையும் பொழுது தயக்கமாக இருப்பவன், இன்று எந்த நினைவும் இல்லாமல், திவி மட்டுமே அவன் கண்களுக்குத் தெரிந்தாள்.

அவளைப் படுக்கையில் விட்டுவிட்டு, விடிவிளக்கை எரியவிட, அதன் ஒளியில், அவனது முகத்தை நேருக்கு நேர் காண முடியாமல் கைகளால் முகத்தை மூடிக் கொண்டாள்.

அவள் கைகளை விலக்கி, அவள் உள்ளங் கையில் இதழ் பதித்தவாறே முன்னேறினான். அவள் கழுத்து வளைவில் இளைப்பாறியவன், “திவி..., நீ வேணும்..., எடுத்துக்கவா....?”, அவளது “ம்..” என்ற முனகல் வரும்வரை முன்னேறவில்லை ஜீவா.

அவனது இந்தச் செய்கையே திவ்யாவை, தன் கொஞ்ச நஞ்சத் தயக்கத்தையும் விலக வைத்தது. நெற்றி, கண், மூக்கு, கன்னம், காது...., என அவனது இதழ்கள் ஊர்வலம் போக, அவன் மீசையின் குறுகுறுப்பும், மெல்லிய தாடியின் எரிச்சலும், சுகமாய் இருந்தது.

அவள் இதழ்களில் புதைந்த அவன் இதழ்கள், பிரியவே மாட்டேன் என்பதுபோல் சண்டித்தனம் செய்தது. அவன் தலை முடிக்குள் கையைக் கோர்த்து, அவனை விலக்க அவள் முயல, வேகமாக விலகியவனின் கண்களில் தெரிந்த சின்ன வலியைக் கூட திவ்யாவால் தாங்க முடியாமல்..., அவன் இதழ்களுக்குத் தன் இதழ்களை தானமாய் வழங்கினாள்.

அவன் கைகள் அவன் வேலையைச் சுலபமாகச் செய்ய, தயங்கித் தடுத்த அவள் கரங்களை, மிகவும் அந்தரங்கமாக

அவன் சொன்ன ஒற்றை வாக்கியம், அவள் தயக்கங்களைத் தகர்த்து, தன் பெண்மையை அவனுக்குக் கொடுக்க வைத்தது . அவன் பார்வையில் தெரிந்த வேட்கையில் கட்டுண்டாள் திவ்யா.

தன் தேவையை நிறைவேற்ற முயலாமல், அவளை மலரச் செய்ய அவன் எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்வரை அவன் விடவில்லை. மீட்டத் தெரிந்த வீணையை, மீட்டும் லாவகம் அவன் கரங்களுக்கும், இதழ்களுக்கும் இருந்தது.

தன் பெண்மையை, தாம்பத்தியத்தை முதல் முறையாக, சிலிர்ப்பாய், பரவசமாய் உணர வைத்த ஜீவாவுக்கு, தன் அணைப்பால், பார்வையால், அவன் வெற்று முதுகில் பிடிப்பில்லாமல் அலையும் தன் கரங்களால், அழுத்தங்களால் தன் சம்மதத்தையும், சந்தோஷத்தையும் அவனுக்கு உணர்த்தினாள்.

இதுவரை அவள் அறிந்த உறவு, இருட்டு அறையில், மிருகத்தனமாக கற்பழிக்கப்படும் வேதனையை மட்டுமே. ஆனால் முதல் முறையாக, தாம்பத்திய உறவில் இருக்கும் மென்மை, பகிர்வு, காதல், முத்தம், சிலிர்ப்பு, உச்சம்....., என அனைத்தையும் உணர்ந்தாள். தாள முடியாத தாபத்தில் தவித்த போதும், நிதானமாகச் செயல்படும், மென்மையாகக் கையாளும் அவன் கரங்களில், தன்னையே முழுதாக அவனுக்குக் கொடுத்தாள்.

பெண்மையின் புரிதலையும், நேசத்தையும், ஒரு ஆணை அங்கீகரிப்பதில் கிடைக்கும் கர்வத்தையும் முழுதாய் உணர்ந்தான் ஜீவா. படுக்கையில், பகிர்தலையும், புரிதலையும் கொடுக்க, ஒரு ஆணால் முடியும் என்பதையும், முரட்டுத் தனத்திலும் மென்மையை உணரவைக்க முடியும் என்பதையும், திவ்யா உணர்ந்தாள்.

மேனி முழுவதும் பதியும் அவன் ஈர முத்தங்கள் சொன்னது, அவனுக்கு அவள் எவ்வளவு மேலானவள் என்று. சோர்ந்து, களைத்துப் பிரிந்த பிறகும், தன் கைகளுக்குள்

அடைகாக்கும் அவன் அன்புக்குத் தன்னைத் தவிர, தன் நேசத்தைத் தவிர வேறு என்ன கொடுக்க முடியும் அவளால்.....

தங்கள் கூடல் முடிந்த பிறகு, காதலாய் அவள் அளித்த இதழ் முத்தத்துக்கு ஈடாக, இந்த உலகில் எதுவும் இல்லை என்று தோன்றியது அவனுக்கு. விடியும்வரை, அவனும் அவளை விலகவில்லை, அவள் அதற்கு அனுமதிக்கவும் இல்லை. இரவின் கூடலின் இனிய நினைவுகளைச் சுமந்தவாறு, விடியும்வரை திளைத்திருந்தனர் இருவரும்.

சூரியன் கிழக்கில் உதித்ததும், இணைபிரியாமல் இருந்த இருவரையும் கலைத்தது, கண்ணனின் “அப்பா....”, என்ற அழைப்பே.

கண்ணன் இப்பொழுது ஜீவாவோடு எவ்வளவு பழகிவிட்டான் என்பதற்கு அவன் அழைப்பே சான்றாகியது.

திவ்யா குரல் கொடுக்கும் முன்பே, “அப்பா இதோ வாரேண்டா கண்ணா....”, தன் ஆடையைத் தேடி அணிந்துகொண்டு, “நீ குளிச்சுட்டு மெதுவா வா..., நான் குழந்தைகளைப் பாத்துக்கறேன்....”, சொல்லிவிட்டு, நெற்றியில் இதழ் ஒற்றிப் பிரியும் அவனை, தானும் அணைத்து விடுவித்தாள்.

நாணத்தால் சிவந்த அவள் முகத்தை ஒரு நிமிடம் ரசித்தவன், கண்ணனின் அடுத்த அழைப்பிற்கு முன்னால் அவனிடம் சென்றான். திவ்யா எழுந்து குளிக்கச் சென்றாள்.

காலையில் குழந்தைகள் பள்ளிக்குச் சென்ற பிறகு கீழே இறங்கிவந்த தன் தோழியை, அவள் முகத்தில் கண்ட மகிழ்ச்சியை, சந்தோஷத்தை உணர்ந்த ஹேமா விழிகளாலேயே வினவ, திவ்யாவின் வெட்க முகம் சொன்ன செய்தி அறிந்து, சந்தோஷம் கொண்டது அந்தத் தோழியின் மனம்.

அன்று இரவு திவியைத் தன் கையணைப்புக்குள் வைத்திருந்தவன், “திவி, நாம எங்கேயாவது ஒரு வாரம் போய்ட்டு வரலாமா...? நம்ம பசங்களோட.... உடனே பசங்களோட வெளிநாடெல்லாம் போக முடியாது, பட்...., இங்கேயே எங்கேயாவது..., ப்ளீஸ்....”, கண்களில் ஆசையுடன் கேட்க, வேண்டாம் என்றா சொல்வாள் திவி.

ஒரு வாரம்...., சிம்லா டூர் போனார்கள். ஹனிமூன் கொண்டாட்டம் அவர்கள் வாழ்வில் குறைவில்லாத கொண்டாட்டமாகவே இருந்தது. வெற்றிகரமாக ஒருவாரம் முடித்து, அன்றாட வாழ்வில் புகுந்த பொழுதும், அவர்கள் காதலின் கனம் குறையவே இல்லை.

தொடர்ந்த நாட்கள்....., காதலின் ஆழத்தையும், தாம்பத்யத்தின் தாத்பரியத்தையும் இருவரும் புரிந்துகொண்டார்கள். ஜீவாவின் ஆழமான பார்வையில், “என்ன ஜீவா...?”, குங்குமமாய்ச் சிவக்கும் தன் முகத்தை, அவன் நெஞ்சிலே மறைத்துக் கொள்வாள் திவ்யா.

முன்பு ஒருவனின் காமப் பார்வையில், இந்த பூமிக்குள் புதைந்துவிட மாட்டோமா என்று ஏங்கியவள், இன்று ஜீவாவின் பார்வையில் உயிர்த்தாள் என்பதுதான் சரியாக இருக்கும். ஜீவாவும் அதே மனநிலையிலேயே இருந்தான்.

அந்தப் ப்ரியாவோ அவனைப் பார்வையாலேயே வதம் செய்ய, தன் ஒற்றைப் பார்வைக்கு, தன்னைத் தொலைக்கும் திவ்யாவின் அன்பில் மூழ்கினான். ‘இவளே என்னவள்’ என்பதில் கர்வம் கொண்டான். முன்பு அன்புக்காகத் தவித்தவர்கள், தாகித்தவர்கள், இன்றோ அந்த அன்புக்குள் மூழ்கி முத்தெடுத்தார்கள்.

வாழ்க்கை இதே அழகோடு அவர்களுக்குத் தொடருமா.....?

தணிவு - 28

அன்பிற்கான என் தேடல்

நிறைவுற்றது உன்னிடம்.....

அலுவலகத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஜீவாவின் அலைபேசிக்கு ஹேமா அழைத்து, அவனை அவசரமாக வீட்டுக்கு வரச் சொல்லி, அதிலும் திவ்யாவை புனிதாவிடம் அழைத்துச் செல்லவேண்டும் என்றும் சொல்லவே அடித்துப் பிடித்து ஓடி வந்தான்.

ஹாலில் தங்கம் அமர்ந்திருக்க, “அம்...மா திவி....”, அவன் பார்வை பரபரப்பாக அந்த வீட்டை அலசியது.

அவன் தவிப்பைப் பார்த்தவர் சிரித்தவாறே, “திவ்யா உங்க ரூமில் தான் இருக்கா. கூடவே ஹேமாவும் இருக்கா, போய் பாருப்பா..., அதோட....”, அவளுக்கு ஒன்றும் இல்லை என்ற அடுத்த சொல்லைக் கேட்க அவன் அங்கே இருக்கவில்லை.

‘திவ்யா இந்த வேளையில் ரூமில் இருக்கா, அவளுக்குத் துணைக்கு ஹேமா இருக்கிறாள் என்றால், திவிக்கு ரொம்ப உடம்பு சரியில்லையா? வயிறு வலி ஜாஸ்த்தி ஆயிடுச்சா? இதுக்குதான் சொன்னேன்..., ஆப்பரேஷன் உடனே செஞ்சுக்கலாம்னு.

‘இந்தப் புனிதாவும், திவியும், என் பேச்சைக் கேக்கவே இல்லை. இப்போ யார் அவஸ்த்தைப் படுறது. இனிமேல் ஒரு நிமிஷம் கூட அவளை விட மாட்டேன்’, கீழே இருந்து, தங்கள் அறைக்குள் வர எடுத்த பத்து செகண்டில் என்னென்னவோ யோசித்துவிட்டான் ஜீவா.

மூச்சுவாங்க அறைக்குள் நுழைந்தவன், திவ்யா கட்டிலில் சாய்வாக அமர்ந்திருப்பதையும், ஹேமா அவளுடன் பேசிக் கொண்டிருப்பதையும் கண்டான். மூச்சுவாங்க நின்றவன், “திவி..., என்ன ஆச்சு...? மறுபடியும் ஸ்டொமக் பெயினா?

“இதுக்குமேல நீ எந்தச் சாக்கும் சொல்லவே வேண்டாம், உடனே கிளம்புற, நான் இப்போவே புனிதா கிட்டே அப்பாயின்மென்ட் வாங்குறேன்”, ஹேமா அவனது படபடப்பைப் பார்த்து, திவ்யாவிடம் கண்ணைச் சிமிட்டி சிரித்துவிட்டு அங்கிருந்து நழுவினாள்.

திவ்யாவோ ஜீவாவின் பதட்டத்தையும், செல்லக் கோபத்தையும், அவசரமாக புனிதாவிற்கு போன் பேசும் விதத்தையும் பார்த்தவாறு நின்றாள். அவளுக்கான, அவனது தவிப்பு..., அவன் புனிதாவிற்குப் பேச, அவன் முதுகோடு ஒண்டிக் கொண்டு, கைகளை அவன் நெஞ்சுக்கு குறுக்காகப் போட்டு இறுக்கக் கட்டிக் கொண்டாள்.

அதைக் கூட உணராமல், புனிதாவிடம் பேசுவதிலே கவனமாக இருந்தான். ஒரு கட்டத்தில் ஜீவா அதிகமாகக் கோபப்பட்டுப் பேசவே, அவனிடமிருந்து அலைபேசியைப் பிடுங்கியவள், “புனிதா..., நான் நேர்ல வந்துஎல்லாம்சொல்லுறேன். இவங்க பயப்படுற மாதிரி எதுவும் இல்லை. எல்லாம் நல்ல விஷயம்தான்..”, ஜீவாவை ஓரக் கண்ணால் பார்த்தவாறு சொன்னாள்.

“நீ விளையாடுறியா...?”, ஜீவாவின் கோபத்தைக் கண்டுகொள்ளாமல், புனிதாவின் கேள்விக்கு, வெட்கப்பட்டவாறே ‘ம்..’ கொட்டிக் கொண்டிருந்தாள் திவ்யா.

அலைபேசியை வைத்தவள், அதை அவன் கையில் கொடுத்தாள். “இப்போ கூட நான் சொல்லுறதைக் கேக்கவே மாட்டியா திவி...”, கவலையாகக் கேட்டான்.

“இப்போ நான் சொல்லுறதை, நீங்க கேக்கப் போறீங்களா இல்லையா?”, அவன் கழுத்தில் கைகளை மாலையாக்கி, அவனை நெருங்கி நின்று மூக்கோடு மூக்குரசினாள்.

“இப்படி இருந்துட்டே சொன்னால் நான் என்ன வேண்ணா கேட்பேன். ஆனால்..., இந்த ஒரு விஷயத்தைத் தவிர”, அவனும் அவளை இடையோடு சேர்த்து அணைத்தவாறே சொன்னான்.

“ஹையோ ஜீவா..., நீங்க கவலைப்படுற மாதிரி எதுவும் இல்லை...”, மேலே சொல்ல அவள் நாணம் தடுத்தது.

அவளிடமிருந்து முகத்தை விலக்கியவன், அவளையே ஆழமாகப் பார்த்தான். “ப்ளீஸ் திவி..., எதுவா இருந்தாலும் நேரடியா சொல்லிடு”, அவள் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று அவனை அமைதிப் படுத்தியது.

தன் இடையில் இருந்த அவன் வலக்கரத்தை எடுத்து, அவள் வயிற்றில் வைத்துக் கொண்டு, அவனை அர்த்தமுடன் பார்த்தாள். அவள் செய்கையின் அர்த்தம் முதலில் அவனுக்குப் புரியவே இல்லை. குழம்பியவன், அர்த்தம் புரிந்த பொழுது, அவளது தோள் தொட்டு, வேகமாக விலக்கி நிறுத்தினான்.

“தி..தி..திவி நீ..., நான்...., நிஜம்மாவா....?”, கேட்டவன், நொடியில் அவளைத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான். அவள் முகமெங்கும் முத்தமழை பொழிந்தான். அவள் வயிற்றில் தன் முத்திரையைப் பதித்து விலகினான்.

“திவி..., நம்மோட குழந்தை....., என் திவி மூலம் எனக்கு ஒரு குழந்தை..., நா...ன்...., ஆம்பள....”, மேலே சொல்லப்போன அவனை, தடுத்தாள்.

“ஜீவா..., இது நம்ம காதலோட, நேசத்தோட, பகிர்தலோட பரிசு..., இந்த நேரத்தில் எதுக்கு மனசைப் போட்டுக் குழப்பிக்கறீங்க”, அவனைக் கடிந்துகொண்டாள்.

“அப்படி இல்லை திவி...., இந்த உலகத்தில் இருக்க எந்த ஆம்பளையும் சரி...., தான் ஒரு ஆம்பளைன்னு நிரூபிக்க, ஒரு பொண்ணு வேணும். ஒரு பொண்ணால மட்டும்தான், ஒரு ஆம்பளையை கௌரவப்படுத்தவும், கர்வப்படுத்தவும் முடியும்.

“நீ எனக்கு இந்த ரெண்டையுமே தந்து இருக்க திவி. இந்த நிமிஷம்..., இந்த உலகத்துக்கே நான் கத்தி சொல்லணும்னு

நினைக்கிறேன்..., பாருங்கடா நானும் ஆம்பளைதான்னு. இது யாரால்..., உன்னால் தான் திவி..., ஐ லவ் யுடா...", அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

நான் ஆம்பளைன்னு நிரூபிச்சுட்டேன் பாத்தியா என்று கர்வப்படாமல், தலைக்கனம் கொள்ளாமல், அவன் ஆண்மையை அங்கீகரித்த தன் பெண்மையை மேன்மைபடுத்தும் ஜீவாவை, அவனுக்குக் குறையாத காதலுடன் அணைத்துக் கொண்டாள் திவ்யா.

"ஜீவா நீங்க கிடைக்க, நான் ஏதோ ஒரு ஜென்மத்தில் ரொம்பப் பெரியப் புண்ணியம் பண்ணி இருக்கணும்", அவள் சொல்ல, "நான் உன்னை அடைய ஏழு ஜென்மமா தவம் இருந்துருக்கணும் டா. அதான் நீ எனக்குக் கிடைச்சுருக்க", அவளிடமே அவளை விட்டுக் கொடுக்காமல் பேசினான்.

அதன் பிறகுதான் அவளது உடல்நிலை குறித்த கவலையே அவனுக்கு வந்தது. ஏற்கனவே கர்ப்பப்பையில் கட்டி. இதில் குழந்தையும் என்றால்..., அவனது பயத்தை திவ்யாவிடம் சொல்லி, உடனடியாகப் புனிதாவைப் பார்க்க அழைத்துச் சென்றான்.

புனிதாவோ, அதைப் பற்றி பெரிதாகக் கவலைப்படும்படி எதுவும் இல்லை என்றும், ஏற்கனவே சாப்பிட்ட மருந்தால், கட்டி வளர்வது நின்று விட்டது, எனவே குழந்தை பிறக்கும் பொழுது, பார்த்துக் கொள்ளலாம் எனச் சொல்லி, மருந்து மாத்திரைகள் கொடுத்து அனுப்பினாள்.

ஜீவா, திவ்யாவைத் தரையில் விடாமல் தாங்கினான். குழந்தைகளை அவள் தூக்கவே அனுமதிப்பது இல்லை. அவர்களை நெருங்கி விளையாடக் கூட விட மாட்டான். அவ்வளவு ஏன்..., தான் அவளை நெருங்கினால் குழந்தைக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று, அவளை நெருங்குவதையே தவிர்த்தான்.

இதையெல்லாம் பார்த்தவள், “ஜீவா ரொம்பப் பண்ணுறீங்க...”, அவனிடம் சிணுங்குவாள்.

இரவில் கூடப் படுக்கையில் அவளை நாடாமல், விலகியிருக்கும் அவன் கட்டுப்பாட்டைக் கண்டு மெய் சிலிர்த்தாள். “ஜீவா..., இப்படி..., கஷ்டமா இல்லையா...?”, ஒரு நாள் கேட்டுவிட்டாள்.

“என்னடா திவி..., குழந்தைக்கு ஏதாவது ஆயிடுமோன்னு பயம்மா இருக்குடா”, அவன் தயங்கித் தயங்கிச் சொல்ல, சிரித்துவிட்டாள்.

ஒருவன் என்னவென்றால், குழந்தை உருவானது தெரிந்தும் தன்னை வன்மையாகக் கையாள, இவனோ குழந்தைக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று விலகியிருப்பதை எண்ணி உருகிப் போனாள்.

“அப்படின்னா.....?”, அவள் கேள்வியாக இழுத்து நிறுத்த,

“திவி..., நீ நினைக்கிற மாதிரி எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. அப்படியே கஷ்டமா இருந்தால்..., உன்கிட்டதானேவரப்போறேன் ”, அவளது கையணைப்புக்குள் வைத்து அவன் சொல்ல, சொக்கித்தான் போவாள் திவ்யா.

முன்பு நரகத்தின் விளிம்புக்கே சென்று திரும்பிய இருவரும். இன்று சொர்க்கத்தின் மடியில் இருந்தார்கள். நாட்கள் வாரங்களைக் கடக்க, வாரங்கள் மாதங்களைக் கடந்தது. இவர்கள் வாழ்க்கை இப்படி மகிழ்ச்சிகரமாக இருப்பது கடவுளுக்கே பிடிக்கவில்லையோ என்னவோ?

இல்லையென்றால் இவர்களின் சோதனைக் காலமோ என்னவோ, இவர்களைத் தேடி வந்தது பிரச்சனை, பிரபு வடிவில். இன்னும் இரண்டு நாளில் திவ்யாவின் அக்காவைப் பார்க்கப் போவதாக இருந்தது.

கீதாவிற்குக் குழந்தை பிறந்து மூன்று மாதம் கடந்துவிட்டது. திவ்யாவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அவளைக் காணச் செல்வது தள்ளிக் கொண்டே சென்றுவிட்டது.

இந்த மூன்று மாதங்களில், திவ்யா மசக்கையால் வாந்தி எடுத்தால், பாத்ரூமில் அவளோடு, அவள் தலையைத் தாங்கியவாறு அவன் உடனிருப்பான். அவளால் சாப்பிட முடியாமல் துவளும் பொழுது, கெஞ்சி, கொஞ்சி, இரண்டு வாய் உணவாவது கொடுக்காமல் விட மாட்டான்.

முன்பு பத்து மாதமாக, தன் மகனோடு தான் பட்டத் துன்பத்தை நினைத்தவள், இப்பொழுது இருக்கும் நிலையைப் பார்த்து, ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

“என்னங்க....., உங்களோட இந்த கவனிப்புக்காகவே நான் பத்துக் குழந்தை பெத்துக்கணுங்க”, அவன் அன்பில் கரைந்து அவள் சொல்ல, முன்பு ஒருத்திக்கு அளித்த அன்பு, தனக்கு அவமானத்தை அளிக்க, இன்றைய திவியின் பேச்சு, ஜீவாவையும் சந்தோஷத்தின் உச்சியில் நிறுத்தியது.

நீண்ட கொடிய இரண்டு வருடங்கள் கடந்து, ஒரு பெரிய சந்தோஷ நிகழ்வுடன் அக்காவைக் காணச் செல்வதால், அக்காவுக்கு, குழந்தைக்கு என ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து வாங்கினாள்.

“திவிம்மா..., உனக்கு உடம்புக்கு ஏதாவது வந்துடப் போகுதுடா. இன்னைக்குப் போதும், நாளைக்கு வரலாம்....?”, கிட்டத்தட்ட இரண்டு மணிநேரமாகக் கெஞ்சிக் கொண்டிருந்தான் ஜீவா.

“எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா, பாக்கத்தான் நீங்க இருக்கீங்களே. பிறகு எனக்கு என்ன கவலை”, காதலாக அவனைப் பார்த்து அவள் சொல்லும் வார்த்தைகள், ஜீவாவை அப்படியே அவள் காதலில் கட்டிப் போடும்.

ஒரு வழியாக ஷாப்பிங் முடித்து, காருக்கு அவளை அழைத்து வந்தவன், பிரெஷ் ஜூஸ் இருந்த பாட்டிலை எடுத்து அவளுக்குக் குடிக்கக் கொடுத்தான். “தேங்க்யூடா ஜீவா.... என் செல்லம்....”, நன்றி சொல்லி வாங்கியவள், அவன் எதிர்பார்க்காத நேரம் அவனை அருகில் இழுத்து, இதழோடு, இதழ் பதித்து விடுவித்தாள்.

“திவி..., வர வர மரியாதை ரொம்பத் தேயிது, உத வாங்கப்போற”, பொய்யாகக் கோபம் கொண்டு மிரட்டினான். அவன் கொடுத்த ஜூசை ஒரே மூச்சில் குடித்தவள்,

“நீங்கதானே நேத்து ரொம்பக் கவலைப் பட்டீங்க. பசங்களை மட்டும் ரொம்பக் கொஞ்சுறேன், உங்களைக் கொஞ்சுறதே இல்லன்னு. அவங்களை டா போட்டு தானே கொஞ்சுவேன்”, அப்பாவியாக அவள் முகத்தை வைத்துகொண்டு சொல்ல, சிரித்துவிட்டான் ஜீவா.

இப்பொழுதெல்லாம், திவ்யாவும் அவனுக்கு இன்னொரு குழந்தையாகித்தான் போனாள். திருமணத்துக்கு முன்பு அவளிடம் இருந்த துடுக்குத்தனமும், விளையாட்டு குணமும், இப்பொழுது தலை தூக்கியிருந்தது.

அதிலும், ஜீவாவைக் கிண்டல் செய்து விளையாடுவது என்றால் அவளுக்கு அவ்வளவு பிடிக்கும். அவள் அப்படி விளையாடுவதும், சீண்டுவதும், ஜீவாவுக்கு அதைவிட அதிகமாகப் பிடிக்கும். அவள் மூக்கைச் செல்லமாகத் திருகியவன், “வாயாடி....”, அவளைக் கொஞ்சியவாறே காரைக் கிளப்பினான்.

அவன் தோளில் வாகாகச் சாய்ந்துகொண்டு, அவன் இடக் கைக்குள் கைகளை கோர்த்து, கண்மூடி அமர்ந்துகொண்டாள். ஜீவாவும் அவள் பக்கம் கொஞ்சம் நகர்ந்து அமர்ந்தவன், அவள் உச்சியில் இதழ் பதித்து, சாலையில் கவனமானான்.

“ஜீவா.....”, திடீரென திவ்யா கத்த, காரை சடன் பிரேக் போட்டு நிறுத்தினான் ஜீவா.

“என்ன திவி....? என்ன ஆச்சு...?”, படபடப்பாக அவன் கேட்க, “காரை ஓரமா நிறுத்துங்க”, அவள் என்னவோ அதிகபடியான ஆர்வமாகச் சொல்ல, மறு பேச்சில்லாமல் காரை ஓரம் கட்டினான்.

வேகமாக அவன் வலக்கரத்தை எடுத்து, அவள் வயிற்றில் வைக்க, புரியாமல் அவள் முகத்தைப் பார்த்தவன், திவ்யாவின் வயிற்றில் இருந்த குழந்தை, தன் காலால் உதைத்து, தன் இருப்பை அவனுக்கு உணர்த்த, இருவருமே ஒரே நேரம் சிலிர்த்தார்கள்.

“திவி..., குழந்தை உதைக்கிறாடா....., இ...ப்...படி...த்தான் இருக்குமா...? உன..க்குத் தெரியுமாடா...?”, ஆச்சரியமும், ஆனந்தமும் போட்டி போட்டது அவன் குரலில்.

“எனக்கும் தெரியாது ஜீவா..., இந்த உணர்வை நானும் இப்போதான் உணருகிறேன்...., கண்ணன் என் வயிற்றில் இருந்தப்போ, எதையுமே யோசிக்க எனக்கு நேரம் இருந்ததில்லை. இப்போ...., ஜீவா..., இந்த வாழ்க்கையை, இந்த உணர்வை..., எல்லாமே நான் புதுசா உணருறேன் ஜீவா.

“எல்லாம் உங்களால். நீங்க எனக்குக் கிடைத்த பிறகுதான் வாழ்க்கையின் அழகையே நான் அனுபவிக்கிறேன். என்னைப் புதுசா பிறக்க வச்சு இருக்கீங்க ஜீவா. வாழ்க்கையின் அழகான பக்கங்கள் உங்க கிட்டதான் எனக்குத் தெரியுது ஜீவா.

“ஒவ்வொரு நிமிஷத்தையும், ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு தருணத்தையும், ஒவ்வொரு நிகழ்வையும், உங்களால் மட்டும்தான் ரசிக்கிறேன் ஜீவா. நீங்க எனக்குக் கிடைத்தது நான் செஞ்ச வரம் தான்...”, வாழ்க்கையின் நிறைவு, அன்பின் நிறைவு அவளிடம்.

“எனக்குள் இருக்கும் அன்பையும், அரவணைப்பையும், பாசத்தையும் வெளிக்கொண்டு வருவது நீதான் டா. நீ கிடைத்த பிறகுதான், வாழ்க்கை என்கிறது , இப்படிப் பூந்தோட்டமா இருக்கும்னு, எனக்கு உணர வச்சதும் நீதாண்டா. நீ கிடைத்ததும் நான் செஞ்சத் தவத்தால் தாண்டா”, தானும் அவளுக்குச் சளைத்தவன் இல்லை என, அன்பைப் பொழிந்தான்.

அதன் பிறகு சின்னச் சண்டையும், செல்லக் கோபமும், நிறையப் பேச்சும் என, வீடுவரை திவ்யாவின் அனைத்து முகங்களையும், அனுபவித்து ரசித்தவாறே வீடுவந்து சேர்ந்தார்கள். அங்கே வாசலுக்கே வந்து முத்து அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

இவர்கள் வீட்டுக்குள் செல்லும் முன்பே வெளியே வந்த தங்கம், “ஜீவா உன்னைப் பாக்க ஒருத்தர் வந்திருக்கார். என்கிட்டே எதுவுமே சொல்லலை. ஆனால் உன்னைத்தான் பார்ப்பேன்னு உக்காந்து இருக்கார்.

“விஷயம் பெருசு மாதிரி இருக்கு, எதுக்கும் பாத்துப் பேசு”, அவனை எச்சரித்தபிறகே உள்ளே அனுப்பினார்.

ஜீவா திவ்யாவைப் பார்த்தவன், அவள் கைகளைப் பற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தான். அங்கே வாட்டசாட்டமாக ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான். அவனை ஜீவாவுக்கு அடையாளம் தெரியவில்லை. அவனை இதற்குமுன் பார்த்த ஞாபகம் கூட அவனுக்கு இல்லை.

“சாரி..., நீங்க யாருன்னு எனக்குத் தெரியலையே...”, கேட்டவாறு அவன் எதிரில் அமர்ந்தான்.

திவ்யா, வந்தவனுக்கு ஏதாவது கொடுத்தார்களா என அறிய கிச்சன் சென்றாள். ஜீவா கேட்டப் பிறகும், பதில் சொல்லாமல் அமைதியாகவே அமர்ந்திருந்தான் புதியவன்.

“நான் கேட்டதுக்கு நீங்க பதிலே சொல்லலையே....”, ஜீவா மறுபடியும் கேட்டான்.

“சார் நா...ன் பிரபு....”, மிகுந்த தயக்கத்துக்கு நடுவில் மெதுவாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

இதைக் கேட்டு ஜீவா எப்படி உணர்ந்தானோ என்னவோ, கிச்சனில், திவ்யாவின் கையில் வைத்திருந்த கண்ணாடி டம்ளர் கைதவறி விழுந்து, சிலீர்....., என்ற ஒலி மட்டுமே அடுத்த சில நிமிடங்கள் கேட்டது.

திவ்யாவால் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. ‘வந்திருப்பவன் ப்ரியாவின் காதலன், அவன் எதற்கு இப்பொழுது வந்திருக்கிறான்? என் ஜீவாவை என்னிடமிருந்து பிரித்து அழைத்துச் சென்று விடுவானோ?

ஏற்கனவே ஜீவா, அந்தப் ப்ரியாவை உயிராய் நேசித்தவன். இப்பொழுது அவளை மறுபடியும் பார்த்தால், அவள்மேல் இருக்கும் நேசம் புதுப்பிக்கப் பட்டுவிடுமோ? அப்படியானால் என் நிலை...’, இதை யோசிக்கக் கூட முடியவில்லை அவளால்.

‘என்னால், என் ஜீவா இல்லாமல் ஒரு நொடி கூட இருக்க முடியாது. என் ஜீவாவை அந்தப் ப்ரியாவிடம் என்னால் இழக்க முடியாது. ஜீவா, என் ஜீவா...., எதற்காகவும், யாருக்காகவும் என் கணவனை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்’, கலங்கியக் குட்டையாகக் குழம்பித் தவித்தது அவள் மனம்.

‘இல்லை, இல்லை..., என் ஜீவா என்னை விட்டுப் போக மாட்டார். அவரால் என்னை விட்டுப் போக முடியாது. அவர் என்னை உயிராக நேசிக்கிறார். இப்பொழுது எல்லாமே அவருக்கு நான்தான்....’, ஒரு மனம் அவனுக்காக வாதிட்டது.

ஆனாலும் அடி மனதில் எழுந்த பயம் அடங்கவே இல்லை.

கிச்சனில், டம்ளர் உடைந்து நொறுங்கி, அது எழுப்பிய சத்தத்திலேயே ஜீவா, திவ்யாவின் மனநிலையைப் புரிந்தவன், “நான் அடுத்து ஒரு வார்த்தைப் பேச முன்னாடி,

எழுந்து வெளியே போய்டுங்க”, எரிமலையை அடக்கியக் குரலில் சொன்னான் ஜீவா.

வந்தவனோ, இதையெல்லாம் எதிர்பார்த்துதான் வந்தேன் என்பதுபோல், அங்கிருந்து அசையாமல் இருந்தான். “நான் சொன்னது காதில் விழுந்துதா...? இல்லையா...? வீணா என்னோட செக்யூரிட்டிக்கு வேலை வைக்காதீங்க. நீங்களா எந்திரிச்சுப் போய்ட்டா அது உங்களுக்கு மரியாதை, நானா ஏதாவது செய்ய முன்னாடி போய்டு....”, வீடே அதிரும் அளவு கர்ஜித்தான்.

திவ்யாவும் தங்கமும் வேகமாக அவன் அருகில் வந்தார்கள். ஜீவாவின் தோளை அழுத்திய திவ்யாவின் கரங்கள் நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தான் ஜீவா. “உனக்கு என்மேல் சந்தேகமா...?”, ஜீவாவின் பார்வை அவளிடம் கேள்வி கேட்க, திவ்யாவிற்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

“தம்பி, எதுவா இருந்தாலும் ஒரு ரெண்டு நாள் கழிச்சு வாங்க. இப்போ கிளம்புங்க”, தங்கம் பிரபுவிடம் சொன்னார்.

“அம்மா, நீங்களாவது நான் சொல்ல வருவது என்னன்னு ஒரே ஒரு நிமிஷம் கேளுங்க”, கிட்டத்தட்டக் கெஞ்சினான் பிரபு.

“அம்மா, அவன் எதையும் சொல்ல வேண்டாம்னு சொல்லுங்க. எனக்கு எதுவும் தெரிஞ்சுக்க வேண்டாம். என்னை விட்டுப் போனவள் செத்துட்டான்னு, நான் முடிவு செஞ்சு ரொம்ப நாள் ஆச்சு”, ஜீவா இடை புகுந்தான்.

“அவ செத்திருந்தால் நான் உங்களைத் தேடி வந்திருக்க மாட்டேன் சார். சாகாம செத்துட்டு இருக்கா. அவ என்னோட இல்லை. இதோ இங்கதான் இருக்கா. நீங்க ரொம்பப் பெரிய மனசு செஞ்சு, ஒரே ஒரு முறை அவளை வந்துப் பாக்கணும்.

“அவ உயிர் போவதும், இருக்குறதும் இப்போ உங்க கையில் தான் இருக்கு. நான் இன்னும் ஒரு வாரம் சென்னையில் இருப்பேன். அதுக்குள்ளே நீங்க வந்தீங்கன்னா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்”, சொல்லிவிட்டு விசிட்டிங் கார்டை அங்கிருந்த டீபாயில் வைத்துவிட்டுச் சென்றான்.

அந்த நேரம் அங்கே கணேஷும், ஹேமாவும் வரவே விஷயம் அறிந்த கணேஷ் கொந்தளித்தான். “எந்த முகத்தை வச்சுட்டுடா இங்கே வந்த....”, கேட்டவன், பிரபுவைப் போட்டுப் புரட்டி எடுத்தான்.

பிரபுவோ, அவன் கொடுத்த அடிகளைத் தடுக்கக் கூட இல்லாமல், வாங்கிக் கொண்டான். இறுதியாக, ஹேமாவும் தங்கமும் சேர்ந்து, கணேஷிடம் இருந்து பிரபுவைக் காப்பாற்றினார்கள்.

பிரபு அங்கிருந்து செல்லும் முன்னர், “உங்ககிட்டே மன்னிப்பு கேட்கும் தகுதியாவது எனக்கு இருக்கான்னு தெரியலை. ஆனால் ஒரு நடு ராத்திரி, உன்னை நம்பி எல்லாத்தையும் உதறிட்டு வந்துட்டேன்னு சொன்ன ஒரு பொண்ணோட நம்பிக்கையைக் காப்பாற்ற, சூழ்நிலைக் கைதியான எனக்கு, உங்ககிட்டே மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேற என்ன செய்ய முடியும்னு தெரியலை.

“என்மேல் இருந்த காதலுக்காக, தன்னோட வாழ்க்கையவே அழிச்சுட்டு, நான்தான் எல்லாம் என்று, என்னைத் தேடி வந்த ஒரு பொண்ணோட நம்பிக்கையைக் காப்பாற்ற, உங்ககிட்டே ‘கெட்டவன்’ என்ற பெயர் வாங்குவது எனக்குக் கஷ்டமா இல்லை.

“அப்படி அவளோட நம்பிக்கையைக் கொன்னுதான் நான் நல்லவன் என்பதை இந்த உலகத்துக்கு நிரூபிக்கணும்னா, நான் கெட்டவனாவே இருந்துட்டுப் போறேன். ஒரு காலத்தில் கோழையாக இருந்து அவளோட காதலையும், வாழ்க்கையையும் குழிதோண்டிப் புதைத்தவன்தான் நான்.

“ஏற்கனவே செய்த தப்பை மறுபடியும் செய்ய நான் தயாரா இல்லை.

“கடைசியா ஒண்ணே ஒண்ணு சொல்லிக்கறேன்...., ஒரு உயிரைக் காப்பாற்ற நான் உங்க முன்னாடி வந்து நிக்கிறேன். அந்த உயிரைக் காப்பாற்ற, நான் எந்த அவமானத்தையும் சந்திக்கத் தயாரா இருக்கேன். உங்க காலில் விழுவது உட்பட”, அவன் சொல்லவே, அங்கிருந்த அனைவரின் மனமும் கனத்தது.

கணேஷ் கூட, தான் அவசரப்பட்டுவிட்டோமோ என்று எண்ணினான். ஆனால் யாருமே, அவன் வைத்துவிட்டுச் சென்ற விசிட்டிங் கார்டை எடுக்கவில்லை. தங்கம்தான் அதை எடுத்து டிவி ஸ்டாண்டில் வைத்தார்.

திவ்யாவிடம் இருந்த கலகலப்பு, முற்றிலும் தொலைந்து போனது. எப்பொழுதும் எதையாவது யோசித்துக் கொண்டே இருந்தாள். ஜீவாவிடம் எந்த மாற்றமும் இல்லை. இறுதியில் திவ்யா இப்படி இருப்பது பிடிக்காமல், அன்றே அவளை அழைத்துக் கொண்டு, கீதாவைக் காணச் சென்றான்.

வீட்டுக்குச் சென்றவுடன் கீதாவைப் பார்த்த ஜீவா, “என்ன அத்தை, நல்லா இருக்கீங்களா...?”, கீதாவிடம் கேட்க, அனைவருமே திகைத்தார்கள்.

“என்ன ஜீவா...? இவ என் அக்கா...”, அவன் காதுக்குள் சொல்ல,

“நீதானே சொன்ன, கீதா உன் அக்கா இல்லை, அம்மான்னு, அதான் நான் அவங்களை அத்தைன்னு சொன்னேன். இதில் என்ன இருக்கு?”, அவன் எதிர் கேள்வி கேட்டப் பிறகே அனைவரும் இயல்பானார்கள்.

“ஓ..., அப்படியா மருமகனே..., உள்ளே வாங்க. என் மகளுக்கு ஏத்த மாப்பிள்ளைதான் நீங்க... இருந்தாலும் என்னை இவ்வளவு வயசானவளா மாத்தி இருக்க

வேண்டாம். அதுதான் கொஞ்சம் வருத்தமா இருக்கு”, கீதாவும் அதை இயல்பாக எடுத்துக் கொள்ள, அந்த இடமே கலகலப்பானது.

“இந்தப் பொண்ணுங்க கிட்டே வயசாயிடுச்சுன்னு சொன்னா ஒத்துக்கவே மாட்டாங்க ஜீவா”, கமலேஷ் அவன் பங்குக்குச் சொல்ல, “எத்தனைப் பொண்ணுங்க கிட்டே, ஐயா சொல்லி இருக்கீங்களாம்....”, கீதா கலாய்க்க, “நான் சரண்டர்....”, கமலேஷ் கை உயர்த்த, அந்த இடமே கலகலப்பானது.

அந்தக் கலகலப்பான சூழல், திவ்யாவின் மன சஞ்சலங்களைக் கொஞ்சம் ஒதுக்கி வைக்க உதவியது.

அவர்களுக்காக வாங்கி வந்தவற்றை, கண்ணனும், அஞ்சலியுமே அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

அஞ்சலிக்கும், கண்ணனுக்கும் கீதாவின் மகளைப் பார்த்து சந்தோஷம் தாங்கவில்லை. அதிலும் அஞ்சலி, இப்பொழுதே தூக்க வேண்டும் என்று ஒரே அடம். அவளை அமர வைத்து, குழந்தையை மடியில் படுக்க வைத்தப் பிறகே அடங்கினாள்.

கண்ணன் கமலேஷின் அருகில் செல்லத் தயங்கவே, “கண்ணா..., அப்பா சொன்னா கேட்பாய் தானே, அது உன்னோட பெரியப்பா..., போ..., போய் நல்லா இருக்கீங்களான்னு கேளு”, மடியிலிருந்து இறக்கி விடவே, தயங்கினாலும், ஜீவா சொன்னதைச் செய்தான்.

ஜீவா, கண்ணனின் இந்தப் புரிதலே, அங்கிருந்தவர்களின் மனதை நிறைத்தது. கமலேஷும், கீதாவும் ஓராயிரம் முறை ஜீவாவுக்கு நன்றி சொன்னார்கள். ஜீவா அதையெல்லாம் மறந்துவிடுமாறு அவர்களிடம் சொன்னான்.

அங்கிருந்த மூன்று நாட்களும், திவ்யா சந்தோஷமாக இருந்தாலும், அவள் மனதை எதையோ அரிப்பது ஜீவாவுக்குத் தெரிந்தே இருந்தது. அது இன்னதென்று

தெரிந்த பிறகும், அதைக் களைய முடியாதத் தன் நிலையை வெறுத்தான்.

நான்காம் நாள் சென்னைக்குத் திரும்பியவுடன், திவ்யா செய்த முதல் வேலை, அந்த விசிட்டிங் கார்டை தேடி எடுத்துப் பார்த்ததுதான். அதைப் பார்த்தவள் திகைத்தாள்.....

தணிவு - 29

தாகம் கொண்டு தனித்திருக்கும் போதும்,

தாகம் தணித்து ஜீவித்திருக்கும் போதும்,

நீ மட்டுமே என் உறவாய் உயிராய்.....

திவ்யா, தன் கையில் இருந்த விசிட்டிங் கார்டை நம்ப முடியாமல் பார்த்தாள். அவள் முகம் முழுக்க முத்து முத்தாய் வியர்வைகள். அவள் நின்ற கோலத்தைப் பார்த்த ஜீவா, வேகமாக அவள் அருகில் வந்தான்.

அவள் கையில் இருந்த அந்த அட்டையைப் பிடுங்கி எறிந்தான். “இப்போ எதுக்குத் தேவையில்லாமல் அதை எடுத்துப் பாத்துட்டு இருக்க. அதுக்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது சரியா?”, அவளிடம் எரிந்து விழுந்தான்.

திவ்யா, கீழே கிடந்த அந்தக் கார்டை மறுபடியும் எடுத்துவந்து அவன் முகத்துக்கு நேராகப் பிடித்தாள். “இத முதல்ல பாருங்க...”, பார்க்க மறுத்த அவனைக் கட்டாயப்படுத்திப் பார்க்க வைத்தாள்.

அதில் பார்வையை ஓட்டியவனின் பாவனையில் எந்த மாற்றமும் இல்லை. “இதுக்கென்ன...?”, கோபம் குறையாமலேயே கேட்டான்.

“இதுக்கென்னன்னு கேக்குறீங்க..., இது மனநல மருத்துவமனையின் கார்டுங்க. அப்படின்னா, அவ அங்கேதான் இருக்குறாளா? நீங்க முதல்ல அந்தப் பிரபுவுக்கு ஃபோன் செய்து உடனே இங்கே வரச் சொல்லுங்க”, ஒரு முடிவுடன் பேசினாள்.

“அதுக்கு அவசியமே கிடையாது. செத்துப்போன அவளை, இப்போ இங்கே போய் புதுசா பாக்கச் சொல்லுறியா?”, கண்களின் சிவப்பு அவன் மனநிலையை அவளுக்கு உணர்த்தியது. ஆனால் அவனது கோபத்தைப் பார்த்தால், நல்ல முடிவை எட்ட முடியாதே.

திவ்யாவோடுப் போராடி சலித்துவிட்டான் ஜீவா. திவ்யா அவளது முடிவில் உறுதியாக இருந்தாள். வேறு வழியில்லாமல், கணேஷே பிரபுவிற்கு ஃபோன் செய்து, மறுநாள், அவனோடு ஜீவாவும் வருவான் என்று சொல்லவே, ஜீவாவோ..., திவ்யாவும் சேர்ந்து வருவாள் என்று சொன்னான்.

எதற்கு என்று கேட்ட திவ்யாவிடம், அவள் வரவில்லை என்றால், தான் ஒரு இன்ச் கூட இங்கிருந்து நகர மாட்டேன் என்று சொல்லிவிடவே, வேறு வழியில்லாமல், திவ்யாவும் உடன் செல்ல ஒத்துக் கொண்டாள்.

பிரபுவே அவர்களுக்கும் சேர்த்து டிக்கெட் எடுப்பதாகச் சொல்லிவிட்டான். குழந்தைகளை ஹேமாவிடம் விட்டுப் போவதாக முடிவெடுத்தார்கள். மறுநாள் காலையில் டெல்லிக்கு விமானம். இரவில் திவ்யாவிற்கு ஏனோ உறங்க முடியவில்லை.

நேரம் பதினொன்றைக் கடந்த பிறகும்..., உறங்காமல் புரண்டு படுக்கும் அவளை, வேதனையாகப் பார்த்திருந்தான் ஜீவா. திவ்யாவின் மனதோ, கலங்கித் தவித்துக் கொண்டிருந்தது. பழைய குழப்பங்கள் அவளை ஆட்டுவித்தன.

அவனுக்கு அவளது மனநிலை புரிந்தது. எங்கே அந்தப் ப்ரியாவைப் பார்த்தவுடன் மனம் மாறி அவளிடம் சென்று விடுவேனோ என்று அவள் அஞ்சுவது புரிந்தது.

இதற்கு, தான் இப்பொழுது என்ன சமாதானம் செய்தாலும் அவளால் ஏற்க முடியாது என்பது அவனுக்குப் புரிய, ஐந்து மாதங்களுக்குப் பிறகு அவளை அணுகினான். அவளை நெருங்கிப் படுத்தவனது கரங்கள், திவ்யாவின் மேனியில் இடம் பெயர்ந்தன.

கணவனின் கரங்கள் தன்னை அணைத்து, உரிமையுடன் தழுவவே, வேகமாக அவன் பக்கம் திரும்பி அவனைப் பார்த்தாள். “இப்போ எனக்கு நீ வேணும்....”, சொன்னவன்,

அவளை அருகிழுத்து, அவள் இதழ்களைக் கவ்விக் கொண்டான்.

அவன் கரங்கள் அவள் தேகம் முழுதும் பயணிக்க, அவனுடனே புதைந்து, கலந்து, கரைந்துவிடுவபள்போல், அவனோடு ஒண்டிக் கொண்டாள். எங்கே விலகினால், சென்றுவிடுவானோ என்று பயந்தவள் போன்று, அவனை விலகவே விடவில்லை.

அவன் அவளோடு கலந்த பிறகு, அவள் கண்களில் இருந்த சஞ்சலம், கொஞ்சம் விடை பெற்றிருந்தது. “திவி..., ஐ லவ் யு...., நான் உனக்கு மட்டும்தான் சொந்தம். உன்னை விட்டுக்கொடுக்கவே மாட்டேன்..., எதற்காகவும், யாருக்காகவும்”, அழுத்தமாகச் சொல்லி, அவளை அணைத்துக் கொண்டான். அவளுக்கும் அவனது அணைப்பு தேவையாக இருக்க, அவனது நெஞ்சுக்குள் புதைந்துகொண்டாள்.

ஜீவாவினுடனான இந்தக் கூடல், திவ்யாவை மிகுந்த அமைதிப்படுத்தியது என்று சொன்னால் அது மிகையில்லை. எவ்வளவு குழப்பங்கள் அவள் மனதில் இருந்தாலும், தன் தேவைக்காக, அவன் தன்னை மட்டுமே நாடுவது, அவளுக்கு சொல்லொணா ஆறுதலை அளித்தது.

இது உடலுக்கான தேவை மட்டுமல்ல, இது அவர்களுக்கான தனி உலகம், இந்தப் புரிதலையும், கூடலையும், ஆறுதலையும் வேறு யாராலும் அவர்களுக்குக் கொடுக்க முடியாது. உனக்கு மட்டுமே, நான். எனக்கு மட்டுமே நீ, என்ற அர்ப்பணிப்பு அது. இதை திவ்யாவும் அந்த நொடி உணர்ந்து கொண்டாள்.

சரியான நேரத்தில் அந்த ஆறுதலை, ஜீவா அவளுக்குக் கொடுத்தான். அவர்களின் நேசம் நிலைத்தது அங்கே.

மறுநாள் பிரபுவோடு சேர்ந்து டெல்லி சென்று, அந்த மருத்துவமனை வளாகத்துக்குள் செல்லும்வரை கொஞ்சம்

தைரியமாக இருந்தவள், மருத்துவமனைக்குள் அடியெடுத்து வைக்கையில் கால்கள் துவண்டது.

எங்கே கணவனை அவளிடம் இழந்து விடுவோமோ என அஞ்சினாள். அவளது நடுக்கம் உணர்ந்தவன், “இப்போகூட ஒண்ணும் இல்லை, இப்படியே திரும்பிடலாம்...”, அவளிடம் சொல்ல, “இல்ல இல்ல...., எனக்கு ஒண்ணும் இல்லை. நாம போகலாம்”, எங்கே திரும்பிச் சென்றுவிடுவானோ என்று வேகமாகச் சொன்னாள்.

பிரபு, அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்றான். அவர்களது அறிமுகப்படலம் முடிந்த பிறகு, அவர் பேசினார்.

“மிஸ்டர் ஜீவா, ப்ரியா பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க?”, பீடிகையாகத் துவங்கினார்.

“இப்போதைக்கு அவங்களைப் பற்றி நினைக்க எனக்கு எந்தத் தேவையும் இல்லை, அவசியமும் இல்லை. இங்கே நான் வந்தது, என்னோட மனைவியின் கட்டாயத்துக்காகத்தானே தவிர, வேறு எதற்காகவும் இல்லை”, விட்டேற்றியாகவே சொன்னான்.

டாக்டர் சாலமன் அவனைக் கனிவாகப் பார்த்தார். ப்ரியாவின் வாய்மொழியாக அவர் அறிந்த விஷயங்களை வைத்து, ஜீவாவின் மனநிலை, இப்பொழுது எப்படி இருக்கும் என்பதை அவரால் அறிய முடியாதா என்ன?

“ஜீவா..... உங்களோட இடத்தில் யாராக இருந்தாலும் இப்படித்தான் பேசுவாங்க. என்னால் அதை புரிஞ்சுக்க முடியுது. ப்ரியா செய்தது மிகப் பெரிய தப்புதான். ஆனால் ஒரு மனநிலை சரியில்லாத பொண்ணால் வேறு எப்படித்தான் உங்களிடம் நடந்திருக்க முடியும்....?”, கேள்வியாக நிறுத்தி அவனைப் பார்த்தார்.

“ஓஹோ.....”, அவன் பதிலில் நம்பாதத் தன்மை.

“உங்களால் நம்ப முடியலை இல்ல. நம்ப முடியாதுதான்...., ஏன்னா, அவங்க யாரையுமே தன்கிட்டே நெருங்க விட்டதே கிடையாதே...., பிறகு எப்படி மற்றவர்களுக்குத் தெரியும்? ப்ரியாவுக்கு இந்த மன அழுத்தம், அவங்க பேரண்ட்ஸ் இறந்தப்போ துவங்கி இருக்கு.

“அந்த அறியாத வயதில் பெற்றவர்களை இழந்தது அவங்களுக்கு மிகப்பெரிய இழப்பு. பெண் துணை இல்லாமல், தன் மனதில் இருப்பதைப் பேச, பகிர முடியாமல் அவங்க தனக்குள்ளேயே முடங்கி இருக்காங்க.

“ஸ்கூல்ல கூட அவங்களுக்குத் தோழிகள் யாரும் இல்லை. வீட்டில் இருந்த அண்ணனும் கடமையைச் செய்யணும்னு நினைச்சு இருக்காரே தவிர, தங்கைக்குத் தான் ஒரு பாசமான அம்மாவா, அரவணைப்பான அப்பாவா மாறலை.

“அஃப்கோர்ஸ்...., அவருக்கு அது தெரியலை என்பதுதான் சரியா இருக்கும். கல்லூரிக்குப் போன கொஞ்ச நாளிலேயே பிரபு அவங்களுக்கு அறிமுகமாகி இருக்கிறார். இனிமேல் அவன்தான் தனக்கு எல்லாம்னு முடிவு செஞ்சு இருக்காங்க.

“அது முதிர்ச்சியான காதல் இல்லை என்பதை அவங்க உணரவே இல்லை. தன்னோட வாழ்க்கையே அதுதான்னு அவங்க நினைச்சு இருக்காங்க. அவங்க அண்ணா செய்யும் எந்தச் செயலிலும் அவங்க அன்பை உணரலை, மாறா, ஏதோ ஒரு விலகலையே உணர்ந்து இருக்காங்க.

“ஆனால் பிரபுவை, தன்னோட வாழ்க்கையா அவங்க நினைச்சுட்டு இருந்தப்போதான்...., நீங்க அதுக்கு குறுக்கே வந்தீங்க. தன்னோட காதல் முறிந்ததை அவங்களால் ஏத்துக்கவே முடியலை. சில வேளை, அந்த நேரம் அவங்க தன்னோட எதிர்ப்பை வன்மையா வெளிப்படுத்தியிருந்தால், அவங்களோட மன அழுத்தம் வெளியேறி இருக்கும்.

ஆனால் விதி...., அவங்க அந்த ஏமாற்றத்தையும், வலியையும் மனதுக்குள் புதைச்சுட்டாங்க. இது எல்லாம் சேர்த்து அவங்களை மனசளவுல அழுத்திடுச்சு. அதாவது நான் எப்போ சொல்லுறேன்னா...., உங்களோடான அவங்களோட திருமணத்தின் போதே..., அவங்க ரொம்ப மன அழுத்தத்துக்கு ஆளாகி இருக்காங்க.

“அதை நீங்களோ, அவங்களைச் சுத்தி இருந்தவங்களோ உணரவே இல்லை. முதல் காரணம், அவங்க காதலன், அவங்களை விட்டுப் போனது, அதையே அவங்களால் தாங்கிக்க முடியலை. உடனே உங்களோட திருமணம்....

“அப்போ அவங்க பார்வையில், நீங்கதான் அவங்களோட காதல் சிதையக் காரணம் என்ற பொய்யான பிம்பத்தை அவங்க மனசில் பதிய வச்சு இருக்கு. அதைவிட, அவங்க காதலை வெளியே சொல்ல முடியாத அந்த அழுத்தம்,

“மனசுவிட்டு யார்கிட்டேயும் அவங்க பேசாததால், அவங்களோட மன உணர்வுகளை, கோபத்தை, ஏமாற்றத்தை, அவங்களால் தாங்கிக்கவே முடியலை. அந்த எல்லாம் சேர்ந்ததும், அவங்களோட மனநிலை பிசகத் துவங்கி இருக்கு.

“இத்தோட சேர்த்த உங்களோட கல்யாணம், முதலிரவில் கூட, உங்களைப் பழி வாங்கணும்னு அவங்க செஞ்ச முயற்சி, அவங்களைத்தான் அழுத்தமா காயப்படுத்திடுச்சு. நாம ஏதோ பெரியத் தப்பு பண்ணிட்டோம்...., அப்படின்னு உணர முடிஞ்ச அவங்களால், அது என்னன்னு தெரியலை.

“அந்த நேரம் நீங்க கிட்டே இருக்கவே, எல்லாத்துக்கும் நீங்கதான் காரணம் என்ற முடிவுக்கு அவங்க மனசு வந்துடுச்சு. அதோட விளைவுதான், அவங்க உங்ககிட்டே பேசிய பேச்சு, நடந்துகிட்ட முறை எல்லாம்.

“அவங்க மனநிலையை, நீங்க புரிஞ்சுக்க ஒரு சந்தர்ப்பமும் கிடைச்சுது, அதுதான்...., அவங்க, தான் கர்ப்பமானதையே ஐஞ்சு மாசம் உணராமல் இருந்தது...., ஒரு பொண்ணால்,

அவளோட மாதாந்திர பீரியட் ஒரு மாசம் வரலைன்னாலே, அவளால் புரிஞ்சுக்க முடியும்.

“அப்படியிருக்கும்போது, அவங்க ஐந்து மாசம் அதை கவனிக்காமல் இருந்து இருக்காங்க. இதுவே பெரிய அறிகுறிதான். ஆனால் அவங்களோட நெருங்கிப் பழக யாருமே இல்லை என்பதால், அவங்களோட மாற்றம் யாருக்குமே தெரியலை.

“அவங்க தங்களோட தடுமாற்றம், பயம், கோபம், எல்லாத்தையும் உங்க மேல காட்டி இருக்காங்க. சில நேரங்களில், தான் ஒரு பெண் என்பதையும் மீறி அவங்க நடந்துகிட்டதுக்கு, அவங்க நிலையான மனநிலையில் இல்லாமல் இருந்ததுதான் காரணம்.

“இதோட உச்சகட்டம் தான், அவங்க குழந்தை பிறந்தப்போ ,குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க மறுத்தது. இந்தச் செய்கை உங்களை ரொம்பக் காயப்படுத்தும்னு நினைச்சவங்க, அது தன்னையே திரும்பத் தாக்கும் என்பதை தெரிஞ்சுக்காமலே போய்ட்டாங்க.

“அந்தக் குழந்தையைத் தூக்கணும், பால் கொடுக்கணும்னு அவங்களுக்கும் ஆசைதான். ஆனால் எங்கே, அதை நீங்க உங்களுக்கு சாதகமா எடுத்துப்பீங்களோ என்ற பயம், அவங்களை அதையும் செய்ய விடாமல் செஞ்சு இருக்கு.

“வீட்டுக்குப் போன பிறகு, அவங்க அறைக்குள்ளேயே முடங்கினாலும், நீங்க அவங்களோட குழந்தையோட சந்தோசமா இருக்குறதைத் தாங்க முடியாமல், உங்களை அவங்களோடவே இருக்க வச்சு, டார்ச்சர் செஞ்சு இருக்காங்க.

“இதையெல்லாம்விட அவங்களை ரொம்ப பாதிச்சது...., குழந்தை தொட்டிலில் இருந்து விழுந்ததுதான். அப்போ அவங்க, குழந்தையைத் தூக்க ஓடிப் போயிருக்காங்க. அதைச் செய்ய முடியாமல் தடுத்தது, உங்களோட வருகைதான்.

“நீங்க வாறீங்கன்னு தெரிஞ்சவுடன், நீங்க துடிக்கணும்னே, அவங்க அறைக்குள் புகுந்து பேசாமல் இருந்துட்டாங்க. எங்கே தன்னோட வீம்பால், பிடிவாதத்தால், குழந்தைக்கு ஏதாவது ஆயிடுமோன்னு ரொம்ப பயந்து இருக்காங்க.

“அத்தோட, அன்னைக்கு நீங்க அவங்ககிட்டே சண்டை போடவே, மனதளவில் அவங்க ரொம்பக் கலங்கிட்டாங்க. அதுக்குப் பிறகு அவங்களால், உங்க முகத்தையும் பாத்துட்டு, குழந்தையையும் தள்ளி வச்சுட்டு, அவங்க மனசோடவே அவங்களால் போராட முடியலை.

“அதுக்குப் பிறகு பிரபுவிடம் பேசியது, எல்லாம் சேர்ந்து, உங்களை நிரந்தரமா பிரியச் சொல்லி அவங்க மனசே அவங்களை விரட்ட, ஏதோ ஒரு சினிமாவைப் பார்த்த ஞாபகத்தில், அதில் நடந்த மாதிரி, பத்திரம், லெட்டர், தாலி எல்லாம் வச்சுட்டு, நேரா பிரபுவைத் தேடிப் போய்ட்டாங்க.

“பிரபுவுக்கும் வேற வழி இல்லாமல், அவரோட வீட்டில் அடைக்கலம் கொடுத்தார். இங்கே வந்தும், அவங்க நிம்மதியா இல்லை. எப்போதும் ஏதோ யோசனை. அவங்க பேசுற ஒரே வார்த்தை, “நான் தப்பு பண்ணிட்டேனா...? நான் தப்பு பண்ணிட்டேன்...”, இந்த ரெண்டே வாக்கியம் தான்.

“என்னவோ பித்து பிடிச்ச மாதிரி ஆயிட்டாங்க. இது எல்லாத்திலும், அவங்களால் உங்களைப் பற்றி, தன்னோட கணவனாக ஏத்துக்கவே முடியலை. ஆனால் குழந்தை....., குழந்தையைப் பிரிஞ்சது அவங்களை ஒரு விதத்தில் பாதிச்சுடுச்சு.

“அவங்க நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டு, பிரபு அவங்களை இங்கே கூட்டி வந்தார். அவங்ககிட்டே பேசிப் பார்த்ததில் கிடைத்த விஷயங்கள்தான் இதெல்லாம். சிலகட்ட கவுன்சிலிங் கொடுத்ததில், தான் உங்ககிட்டே நடந்துகிட்ட முறை ரொம்பத் தப்புன்னு அவங்களுக்குத் தெரிய வந்தது.

“நாங்களும், எவ்வளவோ அவங்களோட குற்ற உணர்ச்சியில் இருந்து வெளியே கொண்டுவரப் போராடினோம். அவங்களும் வெளியே வந்தாங்க. அதுக்குப் பிறகு இப்போ வேற மாதிரி பிரச்சனை, தனக்குத் தானே ஏதாவது தண்டனை கொடுத்துக்குறது.

“சின்னச் சின்னதா கொடுத்துகிட்டவங்க, லாஸ்ட் வீக் தற்கொலை செஞ்சுக்கிற அளவுக்குப் போய்ட்டாங்க. உங்ககிட்டே மன்னிப்புக் கேட்கணும்னு அவங்களுக்கு ஆசை. ஆனால் அதைச் செய்ய முடியாமல் அவங்க செய்த செய்கைகள் அவங்களைத் தடுக்குது.

“இப்போ அவங்களுக்கு, அவங்க பொண்ணைப் பாக்கணும்னு ஆசை. அதே மாதிரி, உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டாங்கன்னா...., அவங்க மனசு அமைதியடையலாம். அவங்களுக்கு இப்போதான் இருபத்திநாலு வயசு ஆகுது.

“இது சாகுற வயசு கிடையாது. அவங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை இருக்கு. அவங்க மனசில் உங்களுக்குன்னு, கணவனா, ஒரு சின்ன இடம் கூட இல்லை. ஆனால் தன்னோட பொண்ணு வேணும்னு நினைக்கிறாங்க.

“பிரபுவும் அவங்களை ஏத்துக்கத் தயாரா இருக்கார். அதே மாதிரி அவங்க மனசில், பிரபுவுக்கு மட்டும்தான் இடம் இருக்கு. சோ...., உங்ககிட்டே இதையெல்லாம் சொல்லி புரிய வைக்கத்தான் உங்களை வரச் சொன்னேன்”, நீளமாகச் சொல்லி முடித்தார்.

அவர் சொல்லி முடிக்கவே, அங்கே ஒரு அசாத்திய அமைதி. “அப்போ என்னோட பொண்ணை என்கிட்டே இருந்து பிரிக்கத்தான் இந்தச் சதியா?”, கண்களை உறுத்துக் கேட்டான்.

“ஜீவா.... நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க. அவங்க, பொண்ணு வேணும்னு நினைக்கிறதே அவங்களோட குற்ற உணர்ச்சியால்தான். அதாவது, அவங்களோட

பிடிவாதத்தால் உருவானக் குழந்தையை, உங்க தலையில் சுமத்திட்டதா நினைக்கிறாங்க.

“அது அப்படி இல்லை. அவளுக்கு நல்ல அம்மா இருக்காங்கன்னு நீங்க புரிய வச்சுட்டீங்கன்னா போதும். அதே மாதிரி, அவங்க இந்தத் தற்கொலை எண்ணத்தில் இருந்து வெளிவருவதும், உங்க கையில்தான் இருக்கு.

“அவங்க இப்போ பூரணமா குணம் அடஞ்சுட்டாங்க. அவங்களை ஜஸ்ட், உங்களுக்குத் தெரிஞ்சவங்க என்ற முறையில் பாருங்க. ஒரு உதவி அடிப்படையில் மட்டுமே இதை உங்ககிட்டே எதிர் பாக்குறேன்.

ப்ரியாவைப் பார்க்க உங்களுக்குச் சம்மதம் தானே”, ஜீவாவிடம் கேட்க, அவன் அமைதியாகவே இருந்தான். திவ்யா சம்மதம் சொல்ல, அவர்களை அழைத்துக் கொண்டு, ப்ரியாவிடம் சென்றார்.

திவ்யாவிற்கு, இவ்வளவு நேரம் மருத்துவர் பேசியதே கலக்கமாக இருக்க, ப்ரியாவைக் காண, உள்ளம் கிடந்தது அடித்துக் கொண்டது. ஜீவாவோ எதையும் வெளிக்காட்டாமல் இறுகியே இருந்தான்.

“ப்ரியா....”, மருத்துவர் அழைக்க, அந்த மரத்தடியில் பச்சை வண்ணச் சீருடையில் இருந்த அந்த உருவம் திரும்பியது.

பார்த்த திவ்யாவும், ஜீவாவும் அதிர்ந்தார்கள். மொட்டைத் தலையுடன், கருவளையம் விழுந்த கண்களுடன், மெலிந்த தேகத்துடன், ஜீவனற்ற பார்வையுடன் இருந்தாள் ப்ரியா. ஜீவா அவளைப் பார்த்து திகைத்தது ஒரு நொடிதான். அடுத்த நொடி, தன்னை இரும்பாக்கிக் கொண்டான்.

மருத்துவரைப் பார்க்க, “அவங்க தங்களையே காயப்படுத்திக்கன்னு, முடிக்கு நெருப்பு வச்சுக்கிட்டாங்க. எப்படியோ பாத்து அதை அணைச்சுட்டோம். அதான் இப்போ, மொட்டைத் தலையோட இருக்காங்க”, அவர்களுக்கு அவசரமாக விளக்கினார்.

“சொல்லுங்க டாக்டர்....”, ப்ரியா கேட்க, அவள் பேச்சு நிதானமாகவே இருந்தது.

“உன்னைப் பார்க்க யார் வந்திருக்காங்கன்னு பாரு...”, அவர் சொல்ல, அவள் பார்வை அருகில் இருந்தவர்களிடம் தாவியது.

பிரபுவைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தவள், திவ்யாவைப் புதிதாகப் பார்த்தாள். ஜீவாவைப் பார்த்தவளின் பார்வையில் அப்பட்டமான அதிர்ச்சியும், நம்பாத பாவனையும்.

அடுத்த நொடி, ஜீவாவின் காலடியில் வந்து விழுந்தாள். விழுந்தவள், அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, கதறினாள். “என்னை மன்னிச்சுடுங்க....., நான் செய்தது எவ்வளவு பெரிய தப்புன்னு எனக்கு இப்போதான் புரியுது.

“ஆனால் இப்போ உணர்ந்து என்ன செய்ய...? என்னோட கோழைத் தனத்தால்..... அதை மறைக்க, உங்களைப் பாடாப் படுத்திட்டேன். என்னோட காதலுக்காக, நான் உங்களைப் பாடாப் படுத்தியது நியாயம்ன்னா, உங்க காதலுக்காக நீங்க என்னைத் திருமணம் செஞ்சது எப்படித் தப்பாகும்?

“இதெல்லாம் எப்போ புரியணுமோ, அப்போ புரியவே இல்லை. உங்களோட தன்மானத்தை சோதிக்கிற மாதிரி, நான் ரொம்பக் கேவலமா நடந்துட்டேன். என்னை மன்னிச்சுடுங்க....”, கண்ணீரால் அவன் பாதங்களைக் கழுவினாள்.

ஜீவா அவளை விலக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. ஜீவா திவ்யாவைப் பார்க்க, திவ்யா, ப்ரியாவை அவன் காலடியில் இருந்து தூக்கினாள்.

அவளைப் பார்த்த ப்ரியா, “நீங்கதான் இவரோட மனைவியா? என்னை அவர்ட்ட சொல்லி மன்னிக்கச் சொல்லிடுங்க. அப்போ ரொம்பவே புத்திக் கெட்டுப்போய்

நடந்துட்டேன். பெத்தக் குழந்தைக்குத் தாய்ப்பால் கூடக் கொடுக்காத பாவி நான்.

“என் பொண்ணு எப்படி இருக்கா? உங்ககிட்டே ஒட்டிக்கிட்டாளா? அவளை நல்லாப் பாத்துக்கோங்க...., இப்படி ஒரு ராட்சசிதான் அவளைப் பெத்ததுன்னு எந்தக் காலத்திலும் சொல்லிடாதீங்க”, திவ்யாவின் காலிலும் விழப் போனாள்.

“அவளைப் பற்றி நீங்க கவலைப் பட வேண்டாம். அவ திவியோட பொண்ணு. அவளுக்கு உயிர்ப்பால் கொடுத்து காப்பத்துனதும் அவதான். என் வாழ்க்கையில்,சில வருஷத்துக்கு முன்னாடி நடந்த எதையுமே நான் நினைக்கிறதே கிடையாது.

“அதை நீங்களும் நினைக்க வேண்டாம். உங்களை மன்னிக்க முடியுமான்னு தெரியலை, ஆனால் மறந்துட்டேன். இப்படி ஒரு பெண் என்னோட வாழ்க்கையில் இருந்தாள் என்பதை மறக்க வைத்ததே என் திவிதான்.

“இப்போ அவதான் என்னோட வாழ்க்கை, என்னோட எதிர்காலம், எல்லாம். திவியை நான் என் உயிரா நேசிக்கிறேன். எங்களுக்குன்னு புது சொந்தம் வேற வரப் போகுது. அதனால் அவளோட பொண்ணைப் பற்றி, அவகிட்டே பேசுவதை, முதல்ல நிறுத்துங்க.

“எனக்கு அது சுத்தமாப் புடிக்கலை....., என்னைப் பாக்கணும்னு நினைக்கிறது, இதுவே கடைசியா இருக்கட்டும். உங்களுக்காக ஒருத்தர் காத்துட்டு இருக்கார். நீங்க உண்மையிலேயே கொஞ்சமாவது மாறிட்டீங்கன்னா...., பிரபுவைக் கல்யாணம் செஞ்சுக்கோங்க.

“இந்தத் தற்கொலை எண்ணத்தை எல்லாம் தூரத் தூக்கிப் போடுங்க..., உங்க வாழ்க்கையை நீங்க வாழுங்க, என்னையும் என் மனைவியோட நிம்மதியா வாழ விடுங்க. என் வாழ்நாளில், இனிமேல் நான் உங்களை எந்தக்

காரணத்துக்காகவும் சந்திக்கவே வேண்டாம்னு நினைக்கிறேன்”, இறுக்கமாகவே சொல்லி முடித்தான்.

ப்ரியாவின் கண்களில், கண்ணீர் நிற்காமல் வழிந்தது. “என்னை மன்னிக்கவே மாட்டீங்களா...?”, கண்ணீர்க் குரலில் கேட்டாள்.

“உங்களை மன்னிக்க நான் யாருங்க....? உங்களுக்கு நான் யாருமே கிடையாது. பிறகு எதுக்கு மன்னிப்பு...”, அவன் நிலையில் மாற்றமே இருக்கவில்லை.

திவ்யா, அவன் இப்படிப் பேசுவதை, பார்வையால் தடுக்க முயல, அவன் அதைக் கண்டுகொள்ளவே இல்லை. அங்கே அசாத்திய அமைதி குடி கொண்டிருந்தது.

ப்ரியா அதே அமைதியுடன் கண்ணீர் வடித்தாள். அவளுக்குத் தெரியும், இந்தக் குற்றவுணர்வும், தவிப்பும், அவளை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வரும் என்று. தன் கேவலை அடக்கியவள், “குழந்தையை ஒரே ஒருமுறை நான் பாக்கணுமே....”, ஏக்கமாகக் கேட்டாள்.

“ப்ளீஸ் ப்ரியா...., அவ என்னோட பொண்ணு, அவ இன்னொரு பொண்ணை அம்மாவா நினைக்கிறதை, ஏன் அப்படி நினைத்துப் பாக்குறதைக் கூட, என்னால் தாங்கிக்கவே முடியாது...நீங்க கூடிய சீக்கிரம் பிரபுவைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு , உங்களுக்காக ஒரு குழந்தையைப் பெத்துக்கோங்க”, திவ்யா வேகமாக பதில் கொடுத்தாள்.

“என்னை மன்னிச்சுடுங்க. ஏதோ ஒரு வேகத்தில் கேட்டுட்டேன். எனக்கு, நீங்க இப்படிச் சொன்னதே போதுங்க. உங்க பொண்ணுன்னு சொன்னீங்களே...., அவளுக்குத் தாய்ப்பால் கொடுத்த நீங்கதான், அவளோட உண்மையான அம்மா. ஒரு குழந்தையை உருவாக்கிய எவனும் அப்பாவும் ஆக முடியாது, சுமந்த எவளும் அம்மாவும் ஆக முடியாது.

“கிருஷ்ணனை தேவகிதான் சுமந்தாலும், யசோதாவைத் தானே அவனோட அம்மாவா நாம கொண்டாடுறோம். எனக்குப் புரியுதுங்க. எனக்காக இந்த அளவு நீங்க இறங்கி வந்ததே எனக்குப் போதும். இப்போ நான் நார்மலாதான் இருக்கேன்.

“டாக்டரே, என்னை எப்பவோ வீட்டுக்குப் போகச் சொல்லிட்டார், நான்தான் பிடிவாதமா இங்கேயே இருக்குறேன். இப்போ கொஞ்சம் தெளிவாயிட்டேன்...., ஆனாலும் நான் செய்தக் கொடுமைகளும், பேச்சும், இந்தக் கட்டை வேகும் வரை என்னைத் தொடரும்... நீங்க போயிட்டு வாங்க...”, அவர்களைக் கை கூப்பி அனுப்பினாள்.

தாங்கள் எதற்காக வந்தோம், என்ன செய்தோம், எதுவும் புரியவில்லை, திவ்யாவிற்கு. ஆனால் வரும் முன்னர், இருந்த பயம், நெஞ்சைவிட்டு அகன்றிருந்தது. அதிலும், ஜீவாவின் நறுக்கு தெறித்தாற்போல் இருந்த பேச்சு, அவள் எதிர் பார்க்கவே இல்லை.

எது எப்படியோ, வித்தார்த்தைப் போல், ப்ரியாவும் தங்கள் வாழ்க்கையில் இனி குறுக்கே வரமாட்டாள் என்பதில் பெருத்த நிம்மதி. விமானத்தில் அமைதியாகவே வந்த ஜீவாவின் மனநிலையை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கிளம்பும் முன்னர் பிரபு, அவனுக்குக் கனடாவில் வேலை கிடைத்திருப்பதாகவும், அங்கேயே ப்ரியாவையும் அழைத்துக் கொண்டு போகப் போவதாகவும் சொன்னான்.

அவர்களது திருமணத்துக்கு தங்களது வாழ்த்துக்களைச் சொல்லிவிட்டு வந்தார்கள் இருவரும்.

தணிவு - 30

அன்பே, நீயின்றி நானில்லை

உனக்குள்ளே நான்.....

எனக்குள்ளே நீ.....

பிரிவு என்னும் சொல்லைக்

கூட, பிரிய நினைக்கிறேன் நான்.....

தங்கள் வீட்டிற்கு வந்து, தங்களது அன்றாட வாழ்க்கைக்குள் புகுந்த பிறகும், திவ்யாவால், ஜீவா, ப்ரியாவைப் பற்றி என்ன நினைத்தான், என்ன நினைக்கிறான், எப்படி உணர்கிறான் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

தன் ஜீவா அவளை ஒரு காலத்தில் உயிருக்குயிராக நேசித்தான், அவளோடு வாழப் போராடினான்...., அது முடியாமல் தோல்வியுற்றான் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்த அவளால், அவளது கதையைக் கேட்ட பிறகு, அவன் என்ன நினைக்கிறான் என்பதை அறிந்தே ஆகவேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் அதற்கான சந்தர்ப்பம் அமையாமலே போயிற்று. ஜீவாவின் நடத்தையிலோ, பேச்சிலோ, பார்வையிலோ எந்தவிதமான மாற்றமும் இருக்கவில்லை. திவ்யாவுக்குத்தான் இருப்பே கொள்ளவில்லை.

திவ்யா டெல்லி போய் வந்த பிறகு சரியாக இல்லை என்பதை உணர்ந்த ஜீவா, அன்று குழந்தைகளையும், அவளையும் அழைத்துக் கொண்டு பீச்சுக்குச் சென்றான். குழந்தைகளோடு கொஞ்ச நேரம் அலையில் விளையாடியவன், டிரைவரின் பொறுப்பில் அவர்களை விட்டுவிட்டு, திவ்யாவின் அருகில் வந்து அமர்ந்தான்.

அலைகளையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கையை எடுத்து தன் கைகளுக்குள் பொதிந்துகொண்டன்.

“திவி...”, மென்மையாக அழைக்க, அலைகளில் இருந்து பார்வையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். காற்றுக்குப் பறந்த தன் தலைமுடியை, ஒதுக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள் திவ்யா.

அவளையே இமைக்காமல் பார்த்தான். முன்பு, ஒட்டிய தேகமும், ஒளியிழந்த கண்களும், ஜீவனற்ற பார்வையுமாக இருந்தவள், இன்று ஒளி வீசும் கண்களும், காதலும், கனிவும் ததும்பும் பார்வையும், தாய்மையின் பூரிப்புடன் இருந்த அவளைப் பார்க்க, அவனுக்குள் நேசம் பெருக்கெடுத்தது.

அதை அவன் கண்களும் பிரதிபலிக்க, “ஜீவா...., என்ன...? இப்போதான் புதுசா பாக்குற மாதிரி பாக்குறீங்க. என்னம்மா...?”, கேட்டவாறு, அவன் கைகளைப் பிடித்து இழுத்து, தனக்கு நெருக்கமாக அமர வைத்து, அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

“திவிம்மா..., நான் ஒண்ணு கேட்டால் உண்மையைச் சொல்லுவியா...?”, அவன் குரல் சீரியசாக இருந்தது.

“உங்க கிட்டே நான் உண்மையை மட்டும்தான் சொல்லுவேன்”, அவன் எதையோ கேட்க வருவது புரிந்து, தானும் அவனுக்கு இணையாகவே சொன்னாள்.

“நீ சந்தோசமா இருக்கியா..? நான் உன்னை சந்தோசமா வச்சு இருக்கேனா?”, இப்பொழுது எதற்கு இந்தக் கேள்வி என்பதுபோல் அவனைப் பார்த்தவள்,

“உங்க கிட்டே வந்த பிறகுதான் சந்தோஷம் இப்படி இருக்கும்னே எனக்குத் தெரியும் ஜீவா”, உண்மையான நேசம் தெரித்தது அவள் வார்த்தைகளில்.

“ஆனா இப்போ கொஞ்ச நாளா எதையோ மனசுக்குள் போட்டுக்குழம்புறியே, என்ன அது...? என்கிட்டே கேக்கவும் தயங்குற மாதிரி இருக்கு...., என்னடா...? என்கிட்டே கேக்க

உனக்கு என்னத் தயக்கம்”, அவள் கண்களைப் பார்த்து நேராகக் கேட்டான்.

திவ்யாவிடம் சட்டெனத் தடுமாற்றம், ப்ரியாவைப் பற்றி இனிமேல் பேசவே கூடாது, அவள் பெயரையேச் சொல்லக் கூடாது என்று, தானே சொன்ன பிறகு, அதைத் தானே மீற அவளுக்குத் தயக்கமாக இருந்தது.

திவ்யாவின் அமைதியே அவனுக்கு வருத்தத்தைக் கொடுக்க, “எதுவா இருந்தாலும் சொல்லுடா. நீ சின்னதா வருத்தப்படுவதைப் பாக்குற தெம்பு கூட, எனக்குச் சுத்தமா இல்லை. நீ வருத்தப்படுறதைப் பார்த்தால், அதைவிடப் பல மடங்கு எனக்குக் கஷ்டமா இருக்குடா”, உண்மையானத் தவிப்பு அவனிடம்.

அவன் இவ்வாறு சொல்லவே, இதற்குமேலும் மறைக்க அவள் விரும்பவில்லை. “இல்லங்க...., நாம டில்லி போயிட்டு வந்ததைப் பற்றி நீங்க எதுவுமே சொல்லலையே....”, அவளால் உடைத்துக் கேட்க முடியவில்லை.

“பிரபுவுக்கு ஹெல்ப் பண்ணப் போனோம். அவனோட காதலியைச் சந்தித்தோம், பேசினோம், வந்துட்டோம். இதில் நான் சொல்ல என்ன இருக்கு...?”, அவன் மனதில் ப்ரியா என்றவளின் நினைப்பு, கொஞ்சம் கூட இல்லை என்பதை இதற்குமேல் தெளிவாகச் சொல்ல முடியாது என்பதுபோல் இருந்தது அவன் பேச்சு.

இதுவரை திவ்யாவின் மனதில் ஒரு ஓரமாக லேசாக உறுத்திக் கொண்டிருந்த சஞ்சலம் கூட அந்த நொடி விலகியது.

“சொல்லுடா..., இதில் நான் சொல்ல என்ன இருக்கு...?”, அவள் மனதில் இருப்பது அனைத்தும் வெளிவர வேண்டும் என்று எண்ணினான்.

“இல்ல..., டாக்டர் அவ மனநிலை சரியில்லாத காரணத்தால் தான் அப்படியெல்லாம் நடந்துக்கிட்டான்னு சொன்னார்.

அப்போ அவ நார்மலா இருந்திருந்தால்....", பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

"திவிம்மா..., அவர் அதை மட்டும் சொல்லலை, அவளோட மனசில், அவளோட புருசனுக்கு ஒரு சதவீதம் கூட இடம் இல்லன்னும் சேர்த்துச் சொன்னார். அவ மனசில் பிரபு மட்டும்தான் இருக்குறதாகவும் சொன்னார்.

"அப்படியிருக்கும் பொழுது, அவ மனநிலை சரியா இருந்திருந்தால்..., என்னோட ஒரு நாள் கூட வாழ்ந்திருக்க மாட்டா. என்கிட்டே கல்யாணம் ஆன உடனேயே பேசி இருப்பா. நானும் அடுத்தவன் காதலியோட வாழ்ந்திருக்கவே மாட்டேன்.

"இப்படி வேண்ணா நடந்திருக்குமே தவிர, அவ மனசு மாறி என்கூட வாழ்ந்திருப்பா...., அப்படியே நாங்க ஆதர்ச தம்பதியா வாழ்ந்திருப்போம்னு நீ கற்பனையே செய்யாதே. என்னைப் பொறுத்த வரைக்கும், என்னைக்கு அவ, அந்தப் பிரபுவோட இருந்ததா நினைச்சு....", அவன் வாயை வேகமாக மூடினாள்.

"இல்லதிவி, இந்தப் பேச்சு இனிமேல் நமக்குள் வரவே கூடாது. பேசி முடிச்சுடலாம்...., அந்த நிமிஷமே என் மனசில் இருந்த அவ செத்துட்டா. எப்போ என்னை விட்டுப் போனாளோ, அது வெளி உலகத்துக்குதானே தவிர எனக்கு இல்லை.

"என்னைக்கு அஞ்சலி உன்னை அம்மான்னு அழைத்துப் பழகினாளோ, அன்னைக்கே நீதான் என் மனசில் இருக்க. உன் கழுத்தில் தாலி கட்டிய பிறகு நீதான் என் உயிர். மனசளவில் கூட உனக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன்.

"நான் என்னோட அன்பை உனக்கு இதுக்குமேல எப்படிச் சொல்லிப் புரிய வைக்கன்னு தெரியலடா. டில்லி வந்ததே உனக்காக மட்டும் தான். அங்கே போன பிறகு, அவ என்னோட வாரேன்னு சொல்லியிருந்தால் கூட, அவளை நான் ஏற்றிருக்க மாட்டேன்.

“உன்னைவிட என்னை வேற யாருடா நல்லா பாத்துப்பா..., உன்னை எதுக்காகவும், யாருக்காகவும் இழக்க நான் தயாரா இல்லை. நீ எனக்கு வேணுண்டா...., நீ மட்டும் போதும். இப்போ சொல்லு..., இன்னும் உனக்கு மனசுக்குள்ளே ஏதாவது பயம் இருக்கா”, தன் விளக்கம் சொல்லி முடித்தவனின் குரல் வேதனையில் துவண்டிருந்தது.

“ஜீவா....”, அது பொதுவிடம் என்பதையும் மறந்து, அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

“ஐ’ம் சாரி ஜீவா...., நீங்க என்மேல் வச்ச நேசத்தையும், நம்பிக்கையையும் நான் உங்கமேல வைக்கலன்னு நினைக்கும்போது, வெக்கமா இருக்குங்க”, அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

“இது கூட உன்னோட அதிகபடியான அன்பால் தாண்டா...., எனக்குப் புரியுது...., நீ அழாத”, என்ன மாதிரியான நேசம் இது...? ஒருவனால் இப்படித் தன்னை ஆழமாக நேசிக்க முடியுமா...? இவன் அன்புக்குப் பாத்திரமாக இருக்கும் தான், எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

“லவ் யு ஜீவா...., லவ் யு....சோ மச்...., உங்களுக்கு என் மேல் கோபமே வரலையா ஜீவா...?”, அவனிடம் நெகிழ்வாகக் கேட்டாள்.

“உன்கிட்டே கோச்சுட்டு நான் யார்கிட்டேடா போவேன்....?”, அவளிடம் அவன் திருப்பிக் கேட்க, அவன் நேசத்தில் உருகிக் கரைந்தாள்.

“ஜீவா, நாம வீட்டுக்குப் போகலாம்....”, அவனை அவசரப்படுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

“ஹேய் திவி..., எதுக்கு இப்போ இவ்வளவு அவசரமா வீட்டுக்கு அழைச்சுட்டு வந்த..? பசங்க எல்லாம் இன்னும் கொஞ்ச நேரம் விளையாண்டு இருப்பாங்கல்ல”, அவன் குழப்பமாகக் கேட்க, அவனை மேலும் கேள்விகள் கேட்க

விடாமல், அவனை இறுகத் தழுவி, அவன் முகம் முழுவதும் முத்தமழை பொழிந்தாள்.

“என்னடா திடீர்ன்னு....”, அவள் முத்தத்தில் திக்குமுக்காடிப் போனான். அவனை மேலும் கேள்விகள் கேட்க விடாமல் அவன் இதழோடு இதழ் பதித்தாள்.

“அஞ்சு, அப்பாவும் பேட் பாய் ஆயிட்டாங்க இல்ல....”, கண்ணனின் குரலில் அவசரமாகப் பிரிந்தார்கள் இருவரும்.

“ஆமா கண்ணா...”, அஞ்சலியும் கண்ணனுக்கு ஒத்து ஊதினாள்.

“ஹேய், என் புருஷன் எனக்கு முத்தம் கொடுக்குறார், உங்களுக்கு என்ன...?ஓடுங்க...”, குழந்தைகளை போலியாக விரட்டியவாறு, ஜீவாவின் தோளில் சாய்ந்துகொண்டாள்.

“அப்பா நானு....”, கண்ணன் ஓடிவந்து அவர்கள் இடைப்புக, அவனையும் தூக்கிக் கொண்டான். அஞ்சலியும் வர, அவளையும் தங்களோடு இணைத்துக் கொண்டான்.

நாட்கள் அழகாக நகர, திவ்யாவின் பிரசவ நாளும் நெருங்கியது. அவளுக்கு ஏற்கனவே வயிற்றில் கட்டி இருந்ததால், அறுவை சிகிச்சை மூலமாகக் குழந்தையை வெளியே எடுத்துவிடலாம் என புனிதா சொல்லிவிடவே, புனிதா குறித்துக் கொடுத்த பத்து நாட்களுக்கு முன்பே, ஜீவா அலுவலகம் போகாமல் வீடு தங்கினான்.

திவ்யா எவ்வளவோ சொல்லியும் அலுவலகம் செல்ல முடியாது என மறுத்துவிட்டான். அவனை இதற்குமேல் வற்புறுத்த மனமில்லாமல் விட்டுவிட்டாள்.

ஹாஸ்பிட்டலுக்குச் செல்ல வேண்டிய அன்று காலை முதலே, திவ்யாவை விட ஜீவாதான் அதிகப் பதட்டமாக இருந்தான்.

“என்னங்க, என்னமோ நான் போருக்குப் போற மாதிரி முகத்தை இப்படிக் கலவரமா வச்சுட்டு இருக்கீங்க. குழந்தை பெத்துக்கத்தானே போறேன்... எதுக்கு இவ்வளவு பதட்டம்”, அவனை அமைதிபடுத்த முயன்றாள்.

“திவி..., இன்னைக்கு வேண்டாம்..., நாளைக்குப் போகலாமா...?”, குழந்தையின் செய்கை அவனிடம்.

“நாளைக்கு என்னை, சிரிச்ச முகமா ஹாஸ்பிடல் கூட்டிப் போவேன்னு சொல்லுங்க. நாம நாளைக்குப் போகலாம்”, மெல்லிதாகச் சிரித்தவாறு சொன்னாள்.

“ப்ளீஸ் திவி....”, அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டு அவன் கெஞ்ச, அந்த நேரம், தங்கம் அவர்களை அழைக்கும் குரல் கேட்டது.

“அம்மா வந்துட்டாங்க, நீங்க அவங்ககிட்டே சொல்லுங்க”, அவள் சிரிப்பு விரிந்தது.

“என்பேச்சை நீங்க யாருமே கேக்க மாட்டீங்க. சரி வா போகலாம்”, செல்லும் முன்னர், பூஜையறையில் சென்று நின்ற அவனை, நேசமாகப் பார்த்தவாறு நின்றிருந்தாள் திவ்யா.

அதன் பிறகு மருத்துவமனைக்குச் சென்று, அவளோடு ஆப்பரேஷன் தியேட்டருக்குள் செல்வதற்கு அவன் மிகவும் ஆர்வமாக இருந்ததால் ,

புனிதா அவனையும் அறைக்குள் அனுமதித்தாள். ஜீவாவின் அன்பிலும், நேசத்திலும் திவ்யா கரைந்துகொண்டிருந்தாள். தன்னோடு வந்த

அவன் கரங்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அனஸ்த்தீசியா கொடுத்த பொழுது கூட அவன் கரங்களை விடவில்லை. திவ்யாவிற்கு, முதலில் பெண் குழந்தையைப் பிரித்து எடுத்தார்கள். ஜீவாவையே , தொப்புள்கொடியைக்

கட் செய்யச் சொன்னாள் புனிதா .பிறந்த தன் மகளை ஒரு முறை உச்சி முகர்ந்தவன், அவளைத் தங்கத்திடம் கொடுக்கச் சொல்லிவிட்டு, திவ்யாவின் அருகிலேயே நின்றுகொண்டான்.

புனிதாவை எந்த விதத்திலும் தொல்லை செய்யவில்லை. அடுத்த அறுவை சிகிச்சை, திவ்யாவின் கர்ப்பப்பையில் இருந்த கட்டியை அகற்ற நடைபெற்றது. ஒருமணி நேரம் நடந்த அறுவை சிகிச்சையின் முடிவில், புனிதா அவளது கட்டைவிரலை நிமிர்த்திக் காட்டும்வரை, அவன் மனதுக்குள் தவித்த தவிப்பு, அவனும் அந்த இறைவனும் மட்டுமே அறிவார்கள்.

குழந்தை பிறந்ததை அறிந்த ஹேமா குழந்தைகளோடு அங்கே வந்தாள். திவ்யாவின் குழந்தை இன்க்குபேட்டரில் வைக்கப் பட்டது. திவ்யா கண்விழிக்க ஆன அரை நாள் முழுவதும் ஜீவா தண்ணீர் கூட அருந்தாமல் விரதம் இருந்தான்.

புனிதா, தங்கம், ஹேமா என யார் சொல்லியும் அவன் கேட்கவில்லை. திவ்யா கண்விழிக்கும் பொழுது நள்ளிரவு இரண்டு மணி. அந்த நேரமும் அவள் அருகிலேயே அமர்ந்து அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் கருவிழிகளின் அசைவை வைத்தே அவள் விழிப்பதை உணர்ந்தவன், “திவிம்மா....”, என்று அழைக்க, சோபையாக கண் விழித்தாள் திவ்யா.

“ஜீவா...”, குரல் உலர அவள் அழைக்க, அவனது இதழ்கள் அவள் நெற்றியில் பதிந்தது.

“ரொம்ப வலிக்காடா...”, அவளது வலியை அவன் குரல் உணர்த்த, இல்லை என்பதுபோல் தலை அசைத்தாள்.

“என்ன ஜீவா..., தூங்கலையா? என் கிட்டேயேவா இருக்கீங்க..? சாப்ட்டீங்களா...? குழந்தை...?”, அவனைப் பற்றி விசாரித்த பிறகே குழந்தையைக் கேட்டாள்.

அது ஐசியு ஆகையால் அங்கே ஒருவர் மட்டுமே இருக்க அனுமதி இருந்தது. ஜீவாவை அப்புறப்படுத்த யாரும் முயலவில்லை. குழந்தைகளும் ஹேமாவுடனே வீட்டுக்குச் சென்றுவிடவே, தங்கத்தையும் அவளோடு அனுப்பிவிட்டான் ஜீவா.

“குழந்தை யாரை மாதிரி இருக்கா ஜீவா...? எனக்குக் குழந்தையைப் பாக்கணும்”, அவள் குரலில் எதிர்பார்ப்பு.

“எனக்குச் சொல்லத் தெரியலடா..., நான் பாப்பாவைப் பொறந்த உடனே பார்த்தேன், பிறகு அவளை இன்க்குபேட்டார்ல வைக்க எடுத்துட்டுப் போய்ட்டாங்க. இப்போ போய் குழந்தையை வாங்கிட்டு வந்துடுறேன்”, அவள் பதிலை எதிர்பார்க்காமல் வெளியே சென்றவன், நொடியில் குழந்தையோடு வந்தான்.

திவ்யாவால் எழுந்து அமர முடியாதாகையால் அவள் அருகில் குழந்தையைப் படுக்க வைத்தான்.

குழந்தையைப் பார்த்தவளின் பார்வை வியப்பில் விரிந்தது. “ஜீவா...., குழந்தை அப்படியே, உங்களை அச்சில் வார்த்த மாதிரி இருக்காங்க”, சொன்னவள் குழந்தையை உச்சி முகர்ந்தாள்.

“ஏன் திவி..., எனக்கு இப்படி ஒரு பரிசு கொடுக்கணும்னு தான், நீ முன்னாடி ஆப்பரேஷனுக்கு ஒத்துக்க மாட்டேன்னு சொன்னியா? இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்திருக்கணுமா?”, அவள் தலையைக் கோதியவாறே கேட்டான்.

“இதைக் கண்டுபிடிக்க உங்களுக்கு இவ்வளவு நாள் ஆச்சா? நம்ம நேசத்தோட அடையாளம், நம்ம கையில் தவழணும்னு தோணிச்சு. அன்னைக்குப் புனிதா கர்ப்பப்பையை எடுக்கணும்னு சொன்னப்போ, என் மனசில் பளிச்சுன்னு ஞாபகம் வந்த விஷயம் ஒண்ணுதான்.

“என் ஜீவாவை நான் வயிற்றில் சுமக்காமல் கர்ப்பப்பையை இழப்பதான்னுதான்.....”, அவனை அருகில் இழுத்து, அவன் தலையை தன் தலையில் முட்டினாள்.

அந்த நேரம் குழந்தை அழுது தன் இருப்பை அவர்களுக்குத் தெரிவிக்க, திவ்யாவின் பார்வை ஜீவாவைத் தயக்கமாய் ஏறிட்டது. அதைப் புரிந்தவன், “நான் புனிதாவைக் கூட்டி வாறேன்....”, இங்கிதமாக அங்கிருந்து வெளியேறினான்.

முழுதாகப் பதினைந்து நாள் திவ்யா மருத்துவமனையில் இருந்தாள். கர்ப்பப்பையில் இருந்த கட்டியும் சேர்த்து அகற்றியதாலேயே அவ்வளவு நாள் மருத்துவமனையில் தங்கும்படி ஆனது. அதே நேரம் அவளது கர்ப்பப்பைக்கு எந்தச் சேதாரமும் நிகழாமல் காப்பாற்றவும் பட்டது.

தங்கமும் ஜீவாவும் அவளைக் கவனமுடன் பார்த்துக் கொண்டார்கள். இரவில் விழித்திருந்து ஜீவா குழந்தையைப் பார்த்துக் கொண்டு, திவ்யாவிற்கு முழு ஓய்வு கொடுத்தான்.

குழந்தைக்குப் பசியாற்ற மட்டுமே அவளிடம் கொடுப்பான். ஏற்கனவே அஞ்சலியை அவன்தான் பார்த்ததால், அவனுக்கு அது சுலபமாகவே இருந்தது.

கண்ணனும் அஞ்சலியும் தங்களது குட்டித் தங்கையைப் பார்த்து ஒரே கொண்டாட்டம் தான்.

“பாட்டி நீங்க ஹேமா அத்தைட்ட குட்டிப் பாப்பா கேட்டீங்க..., ஆனா எங்க அம்மாவுக்கு பாப்பா பொறந்துச்சே எப்படி....?”, அஞ்சலி அவளது துடுக்குத்தனத்தைக் காட்ட, பெரியவர்கள் வழக்கம்போல், அவளுக்கு பதில் சொல்லும் முன்னர் திண்டாடினார்கள்.

ஆனால் ஹேமாவோ, "ஹேய் அஞ்சு, என்னையவா கிண்டல் பண்ணுற, பார்.... இன்னும் பத்தே மாசத்தில் நானும் உங்க அம்மாவுக்குப் போட்டியா பாப்பா பெக்கல, என் பேரையே மாத்திக்கறேன். எங்கே அந்த கணேஷ்.....,

கணேஷ்..., இப்போவே வாங்க வீட்டுக்குப் போகலாம், எவ்வளவு வேலை இருக்கு", அவனை இழுத்துக் கொண்டு செல்ல, அங்கிருந்த அனைவரும் வெடித்து சிரித்தார்கள்.

ஆனால் கணேஷோ...., ஹேமா சொன்னதை, வேத வாக்காகச் செயல்படுத்தும் முனைப்பில் இருந்தான்.

மறுநாள், திவ்யா வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லிவிட்டாள் புனிதா. வீட்டுக்குச் சென்ற அவளுக்கு ஒரு அதிர்ச்சி அங்கே காத்துக் கொண்டிருந்தது.

தணிவு - 31

நேசத்தை எனக்குள்ளே

சுமந்து, நான் தனித்திருந்தேன்

நீ வந்தாய் என் துணையாக

நான் இருந்தேன் உனக்காக

நாமே நமக்குத் துணையாக.....

வீட்டிற்கு வந்த திவ்யாவை, ஹேமா ஆரத்தி கரைத்து வரவேற்க, தனது மூன்று குழந்தைகள் சூழ, ஜீவாவோடு வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தாள் திவ்யா.

வீட்டுக்குள் நுழைந்தவள், ஹாலில் அமர்ந்திருந்த தன் தாயையும், தந்தையையும் கண்டவள் விசையை அழுத்தியதுபோல் ஒரு நொடி அசையாமல் நின்றாள். சட்டென அவள் பார்வை ஜீவாவை ஏறிட, அவன் சளைக்காமல் அவளைப் பார்த்தான்.

அவர்களை வா என்றுகூடச் சொல்லாமல், மாடியேறி வேகமாகத் தங்கள் அறைக்குச் சென்றுவிட்டாள். திவ்யாவிடமிருந்து யாருமே இப்படி ஒரு செயலை எதிர் பார்க்கவில்லை.

ஜீவா சங்கடமாக அவர்களைப் பார்த்துவிட்டு, “நீங்க இருங்க நான் இப்போ வந்துடுறேன்...”, சொல்லிவிட்டு திவ்யாவைக் காணச் சென்றான்.

“திவ்யாவோ முகம் இறுகக் கட்டிலில் அமர்ந்து குழந்தைக்குப் பசியாற்றிக் கொண்டிருந்தாள். குழந்தை உறங்கத் துவங்கவே, அவளைத் தொட்டிலில் விட்டாள். அதுவரை அமைதியாக இருந்தவன், பேசத் துவங்கினான்.

“உன்கிட்டே இருந்து இப்படி ஒரு செய்கையை எதிர் பார்க்கலை திவி. விரோதியா இருந்தால் கூட, வீடுதேடி வந்தவங்களை வான்னு சொல்லாமல் இருக்கக் கூடாது...”, அவளைக் கடிந்துகொண்டான்.

“நானும், நீங்க இப்படிச் செய்வீங்கன்னு எதிர்பாக்கலை ஜீவா. ஏன் இப்படி செஞ்சீங்க...”, வேதனையாகக் கேட்டாள்.

“நான் இதில் எதுவுமே செய்யலை திவி. அவங்களாகத்தான் உன்னைப் பார்க்கக் கிளம்பி வந்து இருக்காங்க. உனக்குப் பிடிக்காத எதையும் நான் செய்யவும் மாட்டேன்”, அவன் குரலில் உண்மை இருந்தது.

“எதுக்கு வந்து இருக்காங்களாம்? யாரைப் பாக்க வந்து இருக்காங்களாம்? முதல்ல அவங்களைப் போகச் சொல்லுங்க. எனக்கு அவங்களைப் பாக்க விருப்பம் இல்லை”, குரல் இறுகச் சொன்னாள்.

“திவி, அவங்க உன்னோட அம்மா.....”.

“எனக்கு அம்மா கீதாதான். கீழே இருப்பது என் அம்மா கிடையாது”, வெடித்தாள் அவனிடம்.

“ஏதோ தெரியாமல் தவறு செஞ்சுட்டாங்க....”,

“தெரியாமல் இல்ல ஜீவா...., எல்லாத் தப்பையும் தெரிஞ்சே செஞ்சாங்க..., வேண்டாம், என்னைப் பேச வைக்காதீங்க. அவங்களைப் பாத்தாலே...., எனக்கு என்னமோ துரோகியைப் பாக்குற மாதிரி இருக்கு.

“விரோதியை மன்னிக்கலாம், ஆனால் துரோகியை மன்னிக்கக் கூடாது ஜீவா. இப்போ அவங்க, நம்மப் பொண்ணைப் பார்த்தால்...., அவளையும் ஏதாவது சாபம் விட்டுடுவாங்க. அஞ்சலி எங்கே..., முதல்ல அவளை அழைச்சுட்டு வாங்க....”, ஜீவா சொல்ல வருவதைக் கேட்கவே அவள் தயாராக இல்லை.

“நீ சொல்லுறது எல்லாம் சரிதான் திவி. ஆனால் என் திவியோட அம்மாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை, நான் கொடுத்துதானே ஆகணும்”, தன் நிலையை விளக்கியவன் தொடர்ந்தான்.

“நான் சொல்வதைக் கொஞ்சமாவது கேளேன் திவி. ஏற்கனவே உங்க அப்பா அவங்களுக்குக் கொடுக்கும் தண்டனை போதாதா? இதில் நீ வேற அவங்களுக்கு தண்டனைக் கொடுக்கணுமா?”, வேகமாகக் கேட்டான்.

அவன் பேச்சுக்கெல்லாம் இளகும் மனநிலையில் அவள் இருக்கவில்லை. ஆனாலும் அவன் விடாமல் பேசினான். “திவி, நீ உங்க வீட்டை விட்டு என்னைக்கு வெளியேறினாயோ அன்றைக்கே உங்க அப்பாவும் உங்க அம்மாவைக் கொடுமை படுத்தத் துவங்கிட்டார்.

“உன் மருமகன் ஆம்பளை என்பதால் தானே அவனுக்கு சப்போர்ட் செஞ்ச, நானும் ஆம்பளைதான்னு சொல்லி, அவங்களை அடிச்சுத் துன்பப் படுத்தி இருக்கார். அத்தோடு விடாமல், உங்க அம்மாகிட்டே பேசுறது கிடையாது, அவங்க கையால் இன்னைக்கு வரைக்கும் அவர் சாப்பிடலை.

“இந்த வயதான காலத்தில் அவங்க அனுபவிக்க வேண்டிய துன்பங்களா இதெல்லாம்? நீயே சொல்லு...., நீ பேசிட்டு வந்த பேச்சிலேயே அவங்க பாதி செத்துட்டாங்க. இப்போ உங்க அப்பாவும் இப்படி.... உங்க அக்காவும் அவங்களைப் பாக்கக் கூட அனுமதிக்கலையாம்.

“நீயே யோசித்து பார்...., இந்தக் கஷ்டம் எல்லாம் அவங்களுக்கு இப்போ வேணுமா? நீ மனசு வைத்தால் அவங்க மனக் கஷ்டம் கொஞ்சம் குறையும். உன்கிட்டே மன்னிப்புக் கேக்கணும்னு துடிக்கிறாங்க. இதெல்லாம் கேள்விப்பட்டும் நான் பேசாமல் தான் இருந்தேன்.

“ஆனால் இப்போ, அவங்களே மனசு கேக்காமல் உன்னைப் பாக்க வந்து இருக்காங்க. வீடு தேடி வந்தவங்களை, எப்படிப் போக சொல்லுவது. நீ பேசலன்னா கூடப் பரவாயில்லை.

“தயவுசெய்து அவங்களைத் திட்டிடாதே. ஏற்கனவே மனசொடஞ்சு இருக்காங்க...”, உருக்கமாகச் சொல்லி அவளைக் கரைக்க முயன்றான்.

திவ்யாவிற்கும் வருத்தம்தான், ஆனால் அதற்காக, தாயிடம் பேசும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

“சாரிங்க..., என்னால் அவங்க கிட்டே பேச முடியாது. ஏன்னா நான் பட்ட எல்லாக் கஷ்டத்துக்கும் மூலக் காரணம் அவங்கதான். அதை, இந்த ஜென்மம் முழுக்க என்னால் மறக்க முடியாதுங்க. ப்ளீஸ் என்னை விட்டுடுங்களேன்.

“அவங்க இருக்குற வரைக்கும் நான் கீழே கூட இறங்கி வர மாட்டேன். என்னால் அவங்க முகத்தைப் பார்க்கக் கூட முடியாதுங்க. என்னைப் புரிஞ்சுக்கோங்களேன்...”, அவனிடம் கெஞ்சினாள்.

“சரி திவி..., உன்னைக் கஷ்டப் படுத்தும் எந்த விஷயத்தையும் நான் செய்யவே மாட்டேன். அவங்க வந்ததுக்காக ஒரு ரெண்டு நாள் இங்கே தங்கிட்டு போகட்டும்”, அவளைச் சமாதானம் செய்ய வந்தவன், அது முடியாமல் சோர்ந்து படியிறங்கினான்.

வசுந்தராவோ மழையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் வரண்ட பூமியாக, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முன்பு தயக்கமாக வந்தவன், “அத்த நீங்க ரெஸ்ட் எடுங்க..., திவி இப்போ வந்துடுவா”, தன் மனைவியை விட்டுக்கொடுக்க அவன் தயாராக இல்லை.

அதே நேரம், வசுந்தராவிடம் அவர் மனம் புண்படும்படி பேசவும் அவனால் முடியவில்லை.

அவன் சொன்ன உடனேயே, வருத்தமாகப் புன்னகைத்தவர், “பரவால்ல தம்பி, நான் செஞ்சப் பாவத்துக்கு எனக்கு இந்த தண்டனை தேவைதான். அவளோட முகத்தையாவது பாக்க முடிஞ்சுதே..., எனக்கு அதுவே போதும். நான் ஊருக்குக் கிளம்புறேன்”, சொல்லிவிட்டு, தளர்ந்த நடையுடன் வெளியேற முயன்றார்.

“இவ்வளவு தூரம் வந்துட்டு உடனே போகணும்னு சொல்லுறீங்களே. ஒரு ரெண்டுநாள் இருந்துட்டுப் போங்க”,

திவியின் பேச்சு, அவனை அழுத்திப் பேசவும் அனுமதிக்கவில்லை.

“இல்ல தம்பி வேண்டாம். நாங்க இங்கே இருந்தால் தேவையில்லாமல் அவ மனசுதான் கஷ்டப் படும். ஏற்கனவே அவளுக்கு நான் நிறையக் கஷ்டத்தைக் கொடுத்துட்டேன். அதுவே போதும், இப்போதான் அவ கொஞ்சம் நிம்மதியா இருக்கா. அந்த நிம்மதி என்னால் கெட வேண்டாம்”, புடவைத் தலைப்பை வாயில் வைத்தவாறு அழுதார்.

“அப்பா இது யாருப்பா....?”, அஞ்சலி ஜீவாவின் அருகில் வந்து கேட்டாள். கண்ணனோ தங்கத்திடம் இருந்தான்.

“பாட்டிடா....”, மகளிடம் சொன்னான்.

“இவ்வளவு நாள் எங்கே இருந்தாங்க...? இதுக்கு முன்னாடி நான் பாத்ததே இல்லையே...”, இதற்கு என்ன பதில் சொல்வது என அவன் யோசிக்க,

“தம்பி இது உங்க பொண்ணா....?”, வசுந்தரா அழுகையினூடே கேட்க, “ஆமா...”, அவன் பதில் சொன்னான்.

“இந்தப் பாட்டி இவ்வளவு நாள் உங்க முகத்தில் எல்லாம் முழிக்க முடியாமல், முழிக்க தைரியம் இல்லாமல் ஊரிலேயே இருந்துட்டேம்மா. இந்தப் பாட்டிக்கிட்டே வாறியா...?”, வசுந்தராவின் பேச்சில் குற்றவுணர்ச்சி.

அஞ்சலி தந்தையின் முகத்தைப் பார்க்க, ‘போ’ என்பதுபோல் செய்கை செய்தான். அவள் வசுந்தராவிடம் செல்லப் போகையில், “அஞ்சலி....”, என்ற திவ்யாவின் குரல் கேட்க, “இதோ வாறேம்மா.....”, குரல் கொடுத்துவிட்டு மாடிக்கு ஓடியே போனாள்.

‘இந்த திவி ஏன் இப்படிச் செய்யிறா...?’, அவனால் மனதுக்குள் மட்டுமே நினைக்க முடிந்தது. வசுந்தரா

கசங்கிய மனதுடனும், அழும் விழியுடனும் அவனைப் பார்த்தார்.

“பரவாயில்லை தம்பி, எனக்கு இதைவிடப் பெரிய தண்டனையே வேணும். இதெல்லாம் சின்னது. நீங்க போங்க”, சொல்லிவிட்டு, தள்ளாடும் நடையுடன், தனக்கு ஒதுக்கிய அறைக்குச் சென்றார்.

அதன் பிறகு வந்த நாட்களில் கூட, குழந்தைகளை வசுந்தராவிடம் விடவில்லை திவ்யா. கண்ணன், ஏற்கனவே புது மனிதர்களிடம் ஒதுங்கியே இருப்பதால், அவனைக் கண்காணிக்கும்படி எதுவும் இருக்கவில்லை.

ஆனால் அஞ்சலியை நொடிக்கொருதரம் தன்னுடன் இருத்திக் கொண்டாள். “ஏம்மா..., புதுப் பாட்டியை உங்களுக்குப் பிடிக்கலையா...?”, அஞ்சலி நேரடியாகவே திவ்யாவிடம் கேட்டுவிட, ஜீவா திவ்யாவை முறைத்துப் பார்த்தான்.

“அஞ்சும்மா நீ கீழே போய் விளையாடு....”, அவளை அனுப்பியவன், “நீ செய்யிறது எனக்குச் சுத்தமா பிடிக்கலை திவி. நீதான் உங்க அம்மாகிட்டே பேசலை, குழந்தைகளை ஏன் தடுக்குற? அவங்க பழகிட்டு போகட்டுமே. அவங்க மனதில் ஏன் பிரிவினையை விதைக்கிற?

“ஒவ்வொரு முறை நீ அஞ்சலியைத் தடுக்குறதும், உங்க அம்மா கிட்டே இருக்கும்போதே, தங்கம் அம்மாவை, அம்மான்னு கூப்பிட்டு குழந்தையை அவங்க கிட்டே கொடுக்குறதும், இதெல்லாம் ரொம்ப அநியாயம் திவி. என் திவிக்கு இப்படியெல்லாம் நடக்கத் தெரியுமான்னு எனக்கே அதிர்ச்சியா இருக்கு”, ஆற்றாமையாகக் கேட்டான்.

“ஜீவா, நானும் அவங்ககிட்டே என்னோட கோபத்தைக் காட்டக் கூடாதுன்னுதான் நினைக்கிறேன். ஆனால் என்னால் முடியவே இல்லை. அவங்களைப் பாக்கும்போதே...., எனக்குப் பழைய ஞாபகம்தான் வந்து என்னைத் தாக்குது.

“நானும் மனுஷிதான் ஜீவா. எனக்கும் கோபம், வெறுப்பு, பயம், எல்லா உணர்ச்சியும் வரும். எனக்கும் அடிச்சா வலிக்கும். நீங்களே என்னைப் புரிஞ்சுக்கலன்னா நான் என்ன செய்யட்டும்”, அவன் தோள் சாய்ந்து அழுதாள்.

தன் தோள்சாய்ந்து அழும் மனைவிக்காகப் பார்க்கவா...? வயதான காலத்தில் மன்னிப்பை வேண்டி நிற்கும் அந்தத் தாய்க்காகப் பார்க்கவா என்று அவனுக்குப் புரியவே இல்லை.

“உன்னால் அவங்க கிட்டே பேச முடியலன்னா விடு, குழந்தைகளை அவங்களோட பழக விடேன். அவங்களுக்கு அந்த சந்தோசமாவது கிடைக்கட்டும். எனக்காக...., ப்ளீஸ்....”, ஆதரவாக அவளை அணைத்துக் கொண்டான்.

அடுத்து வந்த நாட்களில் அவள், குழந்தைகள் வசுந்தராவிடம் செல்வதைத் தடுக்கவில்லை. அஞ்சலியைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு சுற்றினார் வசுந்தரா. அவளுக்குக் கதைகள் சொல்வது, இரவில் தன்னோடு படுக்க வைத்துக் கொள்வது என, தன் மகள்களுக்குச் செய்யாத அனைத்தையும், அஞ்சலிக்கு செய்தார்.

தன் பாவத்தை இப்படிக் கழுவ முயன்றாரோ என்னவோ..., அஞ்சலியைத் தன் கண்களுக்குள் வைத்துப் பார்த்தார். திவ்யாவே வியக்கும் வண்ணம் இருந்தது அவரது செய்கை. ஆனாலும் தாயிடம் பேசும் எண்ணம் மட்டும் எழவில்லை.

வசுந்தராவால் ஏற்பட்டக் காயம் திவ்யாவை அவ்வளவு பாதித்திருந்தது. ஐந்து நாளிலோ, பத்து நாளிலோ ஆறிவிடும் காயமில்லை அது. திவ்யாவின் வாழ்வில் நடந்த அனைத்து துன்பங்களையும், வசுந்தரா நினைத்திருந்தால் ஒரே நாளில் களைந்திருக்க முடியும்.

ஆனால் அவரது ஆண் குழந்தை மோகம், கண்மூடித்தனமாக அவரைச் செயல்பட வைத்தது. ஆண்பிள்ளை என்றால் அப்படித்தான் இருப்பான், பெண்

என்பவள் அவனை அனுசரித்துப் போகவேண்டும் என்ற அவரது மனநிலை, தன் கணவன் தன்னிடம், ஆண் என்ற அடக்குமுறையை காட்டத் துவங்கியதும், தவறென்று அவருக்குப் புரிந்தது.

தன் கணவன் தன்னிடம் பேசாமல் இருக்கும் இந்த நாட்களையே சகிக்க முடியாத அவருக்கு, அதன் பிறகுதான் தன் மகள் எவ்வளவு மன வேதனை அடைத்திருப்பாள் என்பதே புரிய வந்தது.

கண்கெட்டப் பிறகு சூரிய நமஸ்க்காரம் செய்து என்ன பயன். ஒரு உயிரை எடுத்த பிறகு, செத்தப் பிணத்திடம் மன்னிப்பு வேண்டுவது எவ்வாறு பலன்தராதோ அதேபோல், திவ்யாவின் மனதைக் கொன்ற பிறகு, அவளிடம் மன்னிப்பை வேண்டுவது சரி வருமா?

தாய் என்பவள் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு உதாரணமாகிப் போனார் வசுந்தரா. பதினைந்து நாட்கள் தங்கியிருந்தும் கூட, மகளிடம் மன்னிப்பு வேண்டும் தைரியம் கூட எழவில்லை அவருக்கு.

கிளம்பும் அன்று காலையில், மிகுந்த தயக்கத்துக்கிடையில், மாடியேறினார். இத்தனை நாட்களில் அந்த மாடிப் படியை மிதிக்கும் அருகதை கூடத் தனக்கு இல்லை என்றே கருதினார். ஆனால் இன்று மகளிடம் பேசவில்லை என்றால், இனிமேல் என்று பேசுவோம் என்பது அவருக்குத் தெரியவில்லை.

திவ்யாவின் அறைக்கு முன்னால் நின்று, கதவைத் தட்ட, ஜீவா வந்து கதவைத் திறந்தான். திவ்யா, அறைக்குள் குழந்தைக்கு உடை மாற்றிக் கொண்டிருந்தாள்.

வசுந்தரா பேச வந்திருப்பதை உணர்ந்தவன், அங்கிருந்து செல்லப் போனான். “ஜீவா...”, திவ்யாவின் அழைப்பு அவனைத் தேக்கியது.

வசுந்தராவைப் பார்க்க, “நீங்க இருங்க தம்பி..., நான் பெருசா எதையும் பேச வரலை. இப்போ போய்டுவேன்”, சொன்னவர் மகளை நெருங்கினார்.

“திவ்யா...., நான் செஞ்சதுக்கு எல்லாம் மன்னிப்புன்னு ஒரு வார்த்தையில் தப்பிச்சுட முடியாது. ஆனாலும் அதைத் தவிர வேற என்ன சொல்லன்னு எனக்குத் தெரியலை. என்னை மன்னிச்சுடும்மா. உன் காலில்....”,

“போதும்...., எல்லாம் போதும்...., நீங்க செஞ்சதெல்லாம் போதும். என் காலில் விழுந்து, பெற்றத் தாயைக் காலில் விழ வைத்தப் பாவத்தை, சுமக்க வச்சுடாதீங்க”, அவர்களைக் கை நீட்டித் தடுத்தவள்,

“உங்களைப் பாத்தாலே...., எனக்குப் பழசுதாம்மா ஞாபகம் வருது. எப்படிம்மா என்னால் அவ்வளவு சீக்கிரம் எல்லாத்தையும் மறக்க முடியும்?”, தாயிடம் கேள்வி கேட்டவள்,

“என்னால் மாற முடியும்னு தோணலம்மா. ஆனாலும்.....”,இதுவரை ஆத்திரமாகப் பேசியவளுக்கு, தாயின் செய்கையை ஜீரணிக்க முடியாமல், அவள் மேனி நடுங்கியது.

ஆயிரம்தான் இருந்தாலும் அவர் தன்னைப் பெற்றத் தாய். அவர்மேல் அவளுக்கு எவ்வளவோ மனவருத்தம் இருந்தாலும், பெற்றத் தாய், காலில் விழுவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கட்டிலில் இருந்து எழுந்துவந்து தாயை நெருங்கியவள், “நீ ஏம்மா நல்ல அம்மாவா இல்லாமல் போன..., இப்போ என்னால் உங்களை மன்னிக்கவும் முடியலை, ஏத்துக்கவும் முடியலம்மா”, குரல் நடுங்க, கண்களில் கண்ணீர் வழிந்தது.

“சில வேளை..., நீங்க இப்போ மாறுன மாதிரி நானும் ஒரு நாள் மாறுவேனோ என்னமோ? அதுக்கு எனக்குக் கொஞ்சம் டைம் வேணும். அதுவரைக்கும் என்னைத்

தொந்தரவு பண்ணாதீங்க", தாய்க்குத் தன் முகத்தைக் காட்டாமல் திரும்பிக் கொண்டாள்.

இதற்குமேல் பேச எதுவும் இல்லை என்பதுபோல் இருந்தது அவள் பேச்சு. வசுந்தராவும் மேலே பேசாமல் அங்கிருந்து கிளம்பினார். திவ்யா தன் தந்தையிடமும் பேசினாள். மணியின் பதில் வழக்கம்போல் மௌனம் மட்டுமே.

நாட்கள் அழகாக நகர, இதனிடையே பிரபுவும், ப்ரியாவும் அவர்கள் கனடாவுக்குச் செல்ல, சென்னை விமான நிலையத்தில் இருப்பதாகவும், ஒரு முறை பார்க்க விரும்புவதாகச் சொல்லவே, திவ்யாவிற்கு இப்பொழுதுதான் குழந்தை பிறந்திருப்பதாகவும், அதனால் தங்களால் அலைய முடியாது என்று சொல்லி வைத்துவிட்டான் ஜீவா.

பிரபு ப்ரியாவைப் பார்க்க, "இல்ல பிரபு, நான் அவருக்குச் செய்த எல்லாத்துக்கும், அவங்க செய்த உதவியே பெருசு. இப்போ மறுபடியும் அவங்களைப் பாக்கணும்னு நான் எதிர் பார்க்குறது அதிகம் தான்.

"என்னோட இந்தக் குற்ற உணர்ச்சி மட்டும் என்னை விட்டுப் போகவே போகாது பிரபு", சொன்னவாறு தன் தோள் சாய்ந்து அழும் மனைவியை, ஆதரவாக அணைத்துக் கொண்டான். நடந்து முடிந்த அனைத்திற்கும் விதையாக தங்கள் காதலே இருந்ததாலும், தனது கோளைத்தனமும் அதற்குக் காரணம் என்பதாலும், அவளது துன்பத்தை அவளோடு சேர்ந்து சுமக்கத் தயாராகவே இருந்தான் பிரபு.

இவர்களின் வாழ்வும் ஒரு நாள் மலர்ந்து மணம் வீசும். அந்த நாளும் அதிக தூரத்தில் இல்லை.

அன்று ஜீவா - திவ்யாவின் செல்வ மகளுக்குப் பெயர் சூட்டும் விழா. விழாவிற்கு, கீதா, கமலேஷ், காவியா, வசுந்தரா, மணி என அனைவருமே வந்திருந்தார்கள்.

தங்கம், ஹேமா, கணேஷ் என அனைவரும், வந்திருந்தவர்களை வரவேற்று, உபசரித்தார்கள். குழந்தைக்குப் பெயர் சூட்டும் வேளையும் வந்தது. தங்களது செல்வ மகளுக்கு, நந்தனா என பெயர் சூட்டினார்கள்.

தங்கள் வாழ்க்கையை நந்தவனமாக மாற்றியவளை, அவர்கள் நேசத்தின், காதலின் அடையாளமாகவே அவளைக் கருதினர். திவ்யாவின் விருப்பப்படி, அவளது பிடிவாதத்தாலேயே குழந்தைக்கு நந்தனா என்று பெயர் சூட்டினார்கள்.

திவ்யா தன் தாயிடம் முகம் திருப்பாமல், 'வாங்க' என்ற ஒற்றைச் சொல்லோடு முடித்துக் கொண்டாலும், அதுவே வசுந்தராவிற்குப் போதுமானதாக இருந்தது.

கீதாவும் தன் தாயிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. தன் இரண்டு மகள்களுமே தன்னிடம் பேசாததில் மிகுந்த வருத்தம் கொண்டார் வசுந்தரா. கமலேஷும், ஜீவாவும் எவ்வளவு முயன்றும், கீதாவையும், திவ்யாவையும் ஒரு சதவீதம் கூட, அவர்கள் பிடிவாதத்தில் இருந்து இறக்க முடியவில்லை.

வசுந்தராவிடம், பிறந்தக் குழந்தைகளைக் கூட கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. திவ்யாவைத் தங்கம் வந்து கடிந்துக்கொண்டார். அவரிடமும், "என்னால் பேச முடியலையே..., நான் என்ன செய்யட்டும்மா...", வேதனையாகக் கேட்ட திவ்யாவின் கேள்வியில், தங்கமும் அமைதியாகிவிட்டார்.

மதியம் அனைவரும் சேர்ந்து உணவருந்தும் வேளையில், ஹேமா சாப்பிட்ட வேகத்தில், அனைத்தையும் வாந்தி எடுத்தாள்.

பெரியவர்கள் என்னவென்று கேட்கும் முன்னர், "ஹேமா அத்தைக்கும் வயித்துக்குள்ளே பாப்பா இருக்கு...., மாமா சீக்கிரம் போங்க, பாப்பாக்கு முத்தா குடுங்க. எங்க அப்பா, அம்மாவுக்குத் தொப்பைல முத்தா கொடுப்பாங்க. சீக்கிரம்

போங்க...", அஞ்சலி சொல்ல, அங்கிருந்த அனைவருமே சிரித்துவிட்டார்கள்.

ஹேமாவிடம் கேட்க, அவளும் நாள் தள்ளியிருப்பதாகச் சொல்லவே, அங்கே கொண்டாட்டம் இரட்டிப்பு மகிழ்ச்சியாக மாறியது. சொந்தங்கள் அனைவரும் கிளம்பிவிட்டார்கள். ஹேமா, கணேஷ், தங்கம், காவியா அனைவரும் சென்ற பிறகு, வசுந்தராவும் கிளம்பத் தயார் ஆனார்.

கிச்சனில் கீதாவும், திவ்யாவும் நிற்பதைப் பார்த்த வசுந்தரா, தாங்க முடியாத மன வேதனையில் அவர்களிடம் சென்றார்.

"கீதா....", தாயின் அழைப்பில் இரு பெண்களுமே திரும்பித் தாயைப் பார்த்தார்கள்.

"நீங்க ரெண்டுபேரும் இந்த அம்மாவை மன்னிக்கவே மாட்டீங்களா....? ஏதோ அப்போ புத்தி கெட்டுபோய்...., ஆம்பளைப் பிள்ளை மோகத்தில் இப்படியெல்லாம் நடந்துட்டேன்.

"ஆம்பளன்னா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பாங்கன்னு, தவறான முடிவிலேயே இருந்துட்டேன். என் புத்தியை எதால் அடிக்கன்னே தெரியலை. நீங்கல்லாம் கிட்டே இருந்தப்போ உங்களோட அருமை எனக்குத் தெரியவே இல்லை.

"நீங்கல்லாம் என்னை விட்டுப் பிரிஞ்சப்போ, என் நினைப்பெல்லாம் உங்களைச் சுத்தித்தான் இருக்கு. உங்க நினைப்பிலேயே அனாதையாக் கிடக்கேன். நான் செத்தாலும், என் நினைப்பெல்லாம் உங்களையே சுத்திவரும்.

"கையில் இருந்த சொர்கத்தை நழுவ விட்டுட்டு, அதைப் பார்த்து இப்போ ஏங்கிட்டு இருக்கேன். எனக்குத் தேவைதான், இது மட்டும் பத்தாது இன்னும் வேணும்,

வேணும்.....”, நிலையில்லாமல் புலம்பியவரைப் பார்த்து இருவருமே திகைத்தார்கள்.

அதிலும் தாயின் தோற்றம், ஏற்கனவே இருவரின் மனதிலும் பாரத்தை ஏற்றி இருந்தது. எப்பொழுதுமே ஒருவித நிமிர்வுடனும், ஆளுமையுடனும் நடமாடும் தாய், களை இழந்து, குழி விழுந்த கண்களுடனும், ஒடுங்கிய உடலுடனும் பார்க்க அவர்களால் முடியவில்லை.

அப்படியிருக்கையில் தாயின் பேச்சு அவர்களை உருக்கியது, இறுதியாக, “நீங்க மன்னிக்கலைன்னாலும் பரவாயில்லை. நான் செத்துட்டேன்னு உங்களுக்குத் தெரிந்தால், எனக்காக ஒரே ஒரு சொட்டு கண்ணீர் விடுங்க.

“அப்போதான் என்னோட ஆத்மா சாந்தி அடையும். அதையாவது எனக்காகச் செய்வீங்க தானே? இதைக் கேட்கும் அருகதையும் எனக்கு இல்லைதான்”, குலுங்கியழும் தாயை, ஓடிச் சென்று கட்டிக் கொண்டார்கள் இருவரும்.

“ஏம்மா இப்படியெல்லாம் பேசுறீங்க. எங்களுக்கும் உங்கமேல கோபம் தான், இல்லைன்னு சொல்லலை, அதுக்காக சாவு அது இதுன்னு...., விடுங்கம்மா எல்லாம் மறந்துடலாம்....”, கீதாவும், திவ்யாவும் மாறி மாறிப் பேச, அங்கே அவர்களுக்குள் இருந்த தடைகள் அகன்று, தாயும் மகள்களும் பேசினார்கள்.

கீதா, திவ்யா இருவருக்குமே தாயின்மேல் கோபம் இருந்ததுதான். அதிலும் திவ்யாவிற்குக் கட்டுக்கடங்காத கோபம் இருந்தது, வருத்தமும் இருந்தது. ஆனாலும் ஒரு தவறு செய்துவிட்டு, மன்னிப்பை வேண்டி நிற்கும் தாயை, அப்படியே விட மனமில்லை.

கதறியழும் தாயைக் கண்டும் கல்நெஞ்சமாக இருக்க, திவ்யா ஒன்றும் வித்தார்த் இல்லையே. அவளால் தாயுடன் கொஞ்சிக் குலவ முடியவில்லை என்றாலும், தாயிடம் முகம்

கொடுத்துப் பேசும் அளவுக்காவது அவளால் நடந்துகொள்ள முடியும்.

இனிமேல் வசுந்தராவும் மகள்களைச் சரியான விதமாகவே நடத்துவார், நடந்து கொள்வார். ஒரு சுமுகமான உறவு நாளடைவில் அவர்களுக்கிடையில் மலரும்.

இதைக் கண்ட கமலேஷ், ஜீவா, மணி அனைவரின் கண்கள் கூட சந்தோசத்திலும், நிறைவிலும் கொஞ்சம் கலங்கி இருந்தது. கீதாவும், வசுந்தராவும் மேலும் ஒரு வாரம் இருந்துவிட்டே செல்லவேண்டும் என்று ஜீவா சொல்லிவிட, அவர்களும் சம்மதித்தார்கள்.

கோழி மிதித்து குஞ்சு முடமாகுமா? அதேபோல் தாய் எவ்வளவுதான் தங்களைக் காயப்படுத்தியிருந்தாலும், கீதாவும், திவ்யாவும் அதை மறக்கத் தயாராக இருந்தார்கள். ஏனெனில் அவர்களும் தாய் தானே.....

அன்று இரவு, தங்கள் அறையில் குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்த ஜீவாவின் அருகில், நந்தனாவோடு வந்து அமர்ந்தாள். குழந்தைக்குப் பசியாற்றி அவளைத் தூங்க வைக்கும் முன்பே, கண்ணனும் - அஞ்சலியும் தூங்கிவிட்டார்கள்.

அவர்களை, அவர்களது அறையில் விட்டு வந்தான் ஜீவா. திவ்யாவும் நந்தனாவைத் தொட்டிலில் விட்டு வந்தாள். சில மாதங்களுக்குப் பிறகு மனைவியின் வருகையை ஆவலாகப் பாத்திருந்தான் ஜீவா.

அவன் பார்வையை உணர்ந்த திவ்யாவிடம், ஆனந்தக் குறுகுறுப்பு. “என்ன புதுசா பாக்குற மாதிரிப் பாக்குறீங்க....?”, அவன் பார்வையின் பொருள் புரிந்தும், அவனை வம்புக்கு இழுத்தாள்.

“இன்னைக்குப் புதுசாத்தான் தெரியிற....”, அவளை இழுத்து தன் கை வளைவுக்குள் கொண்டு வந்தான்.

அவனுக்கு இசைந்தவாறே, “அப்படியா...”, கேட்டுவிட்டு களுக்கென சிரித்தாள்.

“ஹேய்... கிட்டத்தட்ட ஒரு வருஷமாச்சு, கொஞ்சம் கருணை காட்டக் கூடாதா...?”, அவன் இதழ்கள் அவள் காதில் உரசியவாறு ரகசியம் பேசின.

அவன் செய்கையில் அவளது ரோமங்கள் அனைத்தும் சிலிர்த்துக் கொள்ள, “நான்தான் உங்களைத் தள்ளி இருக்கச் சொன்னேனா..? உங்களுக்கு தைரியம் இல்லன்னு சொல்லுங்க...”, அவள் குரல் குழைந்து வெளிவந்தது.

குழந்தை உருவானது தெரிந்ததுமுதல், அவளை நெருங்காததையும், குழந்தை பிறந்த பிறகு அவள் உடல்நிலைக் கருதி, ஐந்து மாதமாக அவன் விலகியிருந்ததையுமே அவள் சொன்னாள்.

“எனக்கு தைரியம் இல்லையா....?இன்னைக்குக் காட்டுறேன் என் தைரியத்தை....”, இதற்கு பதில் சொல்ல, திவ்யாவின் இதழ்கள் அவள் வசம் இருக்கவில்லை.

கணவனுக்குரிய அவன் தேவைகள் துவங்க, அவனோடு தன்னை இணைத்துக் கொண்டாள் திவ்யா.

ஒரு காலத்தில் தங்களைச் சுற்றி மனிதர்கள் இருந்தாலும், அன்புக்கும், பாசத்துக்கும், நேசத்துக்கும், காதலுக்கும் ஏங்கியிருந்த இரு உள்ளங்களும், இன்று தங்களுக்குள் இருந்த நேசத்தைப் பகிர்ந்து, அன்புக்கான தங்கள் தாகத்தை, கொடுத்து, பகிர்ந்து தணித்துக் கொண்டார்கள்.

இனி இவர்கள் வாழ்வில் அன்பிற்காக இவர்கள் தாகித்திருக்க வேண்டாம். அது அவர்களுக்காக அவர்களுக்குள்ளே ஊற்றாக பெருகிக் கொண்டிருந்தது.

தாகம் தணிந்தது.

நன்றி

உங்கள் தோழி,

Infaa @ Infanta.